மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிக் கேட்பது சரியல்ல. கோவில் அதிகாரிகள் தவறு செய்ததாக ஊகித்துக் கொண்டு பேசுவது தவறு. இப்படி கோவிலுக்கு எதிராகப் பிரசாரம் செய்வது சரியல்ல. நம்முடைய வாதம், இன்னும் ஏராளமான நெல் வந்து இருக்க வேண்டும். ஒழுங்காக லெவி அவர்கள் அளிக்கவில்லை என்பதாகும். அங்கே அரசாங்கத்தின் சார்பாக எக்ஸிக்யூடிவ் ஆபீசர் இருக்கிறார். அவரைக் கட்டுப்படுத்துகிற அளவுக்கு அந்த மாவட்டத்திலேயே டிபுடி கமிஷனர் இருக்கிறார். அவருடைய அனுமதியைப் பெற்று இதைச் செய்து இருக்க வேண்டும். கோவில் நிர்வாகிகளாவது உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி இருக்க வேண்டும். கோவில் டிரஸ்டிகளைக் கைது செய்ய வேண்டுமென்று சொல்வது பத்தாம் பசலிக் கொள்கை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சர்க்கார் இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் ஒரு குவிண்டால் நெல்லுக்கு 105 ரூபாய் கொள்முதல் விலை கொடுக்கிறார்கள். ஆனால் விற்பனை செய்கிறபோது ஒரு குவிண்டால் ரூ. 136-க்கு விற்கிறார்கள். 105-க்கு வாங்கி 136-க்கு விற்பது கிட்டத்தட்ட 30 சதவீதம் லாபம் வைத்து விற்பது முறையா ? ஏன் இந்த லாபத்தைக் குறைத்து குறைந்த விலைக்கு அரிசி வினியோகம் செய்ய முடியாதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே இந்த மன்றத்தில் விரிவாக பதில் சொல்லப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஆராய்ந்து சில கருத்துக்களைத் தருவார்களானால் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறேன். விற்கிற விலையையும் வாங்கிய விலையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு லாபம் இவ்வளவு சதவிகிதம் என்று சொல்வது சரியல்ல. வாங்கிய இடத்திலிருந்து விற்கிற இடம் வரை பல விதமான இழப்பு வருகிறது. ஷார்ட்டேஜ், சிருங்கேஜ், வேஸ்டேஜ் வருகிறது. உதாரணத்திற்கு ஒரு வாதத்தை எடுத்துக் கூறினேன். ரூபாய் 42 ஒரு குவின்டாலுக்கு நாம் கொடுத்த நேரத்தில் கிலோ 80 பைசாவுக்கு விற்கப்பட்டது. இன்று ரூ. 89 முதல் ரூ. 100 வரை கொடுக்கிறோம். இரண்டையும் ஒரே விலையில் விற்கிறோம். இரண்டு மடங்கு விலை கூடியிருக்க வேண்டும். அன்று இருந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இன்று இரண்டு மடங்கு விலைக்கு விற்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, அதற்குப் பின்னாலே இந்த 4, 5 ஆண்டுகளில் ஒவ்வொரு மட்டத்திலும் விலையேறி இருக்கிறது. உதாரணத்திற்கு, டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ், பெட்ரோல்





போன்றவை விலையேறியிருக்கின்றன. நம்முடைய சிப்பந்திகளின் சம்பள விகிதம் அன்று இருந்ததை விட இன்று எப்படி ஏறி இருக்கிறது என்பதும் தெரியும். அதைப்போல் நம்முடைய நிர்வாகச் செலவும் ஏறியிருக்கிறது. லாபம் வருகிறது என்று அடிக்கடி சொல்லிய காரணத்தால், அதையும் ஆராய்ந்து பார்க்க ஒரு காஸ்ட் அகௌன்டென்ட் போட்டு இருக்கிறோம். அவர் பரிசீலித்து வருகிறார். அப்படித் தவறு இருக்குமானால் திருத்திக்கொள்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in spite of the fact that there were serious discussions about the Nachiarkoil Temple and the levy procurement and in spite of the fact that the matter was referred to the Collector, why the serious action of closure of the Temple and the Orphanage on New Year's Day took place and who was responsible for it and why serious action could not be taken against the official who has wounded the feelings of the millions of people in Tamil Nadu?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, கோவில் நிர்வாகிகளைப் பொறுத்தவரையில், அவ்வளவு அவசரப்பட்டு இருக்க வேண்டியது இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. நேற்று காலையில் நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது. கோவில் நிர்வாகிகளைப் பொறுத்த வரையில் ஏன் அந்த நிலையை எடுத்துக் கொண்டார்கள் என்று புரியவில்லை. அந்த கிராமத்திலே உள்ள சில பேர் நெல் கொடுத்து பூஜை நடத்த வாய்ப்பு வசதி செய்ய முன்வந்து இருக்கிறார்கள். அதையும் அங்கேயுள்ள டி. எஸ். ஓ.—ஒரு சாதாரண அலுவலர்—தடுப்பது நியாயம்தானா என்று கேட்டார்கள். எனக்குத் தெரிந்த வரையில், நிர்வாகிகளுக்கும் அங்கே கீழேயுள்ள அதிகாரிகளுக்கும் தகராறு இருப்பது போல் எனக்குப் புரிகிறது. ஆகவே, தான் அத்தகைய தவறு செய்து இருந்தால் நடவடிக்கை எடுப்பது நியாயம் என்று கருதுகிறேன். இதற்கிடையில், கோவில் அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சென்று பார்த்து இருக்கலாம். டி. ஆர். ஓ. அவர்கள் உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று இருக்கிறார்கள். அவர்கள் இதற்கிடையில் இப்படிச் செய்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு விலையேற்றத்தைத் தடுக்க தக்க நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த மாதம் 1-ம் தேதி முதல் சென்னை போன்ற இடங்களில் காபி 40 பைசா என்று விலையேற்றப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட விலையைக் கட்டுப்படுத்த நம்முடைய அரசாங்கம் யாருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்து இருக்கிறது ? இப்படிப்பட்ட விலையேற்றத்தைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : எந்தவிதமான அதிகாரமும் நமக்குக் கிடையாது. ஆகவே, எந்த அதிகாரிக்கும் நாம் எந்த உத்தரவும் போட முடியாது. அதைத்தான் ஏற்கனவே விளக்கினேன். உற்பத்தி ஸ்தானத்திலிருந்து விற்கிற விலையை நிர்ணயிக்க ஒரு சீரான பொருளாதாரக் கொள்கை உருவாக்கப்பட்டால் ஒழிய இந்த விலையேற்றத்தைத் தடுக்க முடியாது. இன்று சில பொருள்களின் விலையில் ஏற்றம் ஏற்பட்டு இருக்கிறது. சில நேரங்களில் விலை குறைகிறது. விவசாயிகளைப் பாதிக்கும் அளவுக்கும் விலை குறைகிறது.

<u>திரு. என். கே. பழனிசாமி</u> : அந்தக் கோவிலைச் சேர்ந்த நிலங்களில் 30 சதவிகிதம் பினாமி நிலங்களாக வைத்து குத்தகை விட்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் லெவி கொடுக்கவில்லை. அதை அறிந்து இப்படிச் செய்யப் போனதால் இந்த தகராறு ஏற்பட்டு இருக்கிறது. இப்படி சர்க்காருடைய நிலை இருந்தால் அது பத்தாம்பசலித் தனம் இல்லையா? கோவிலை நிர்வாகத்தினர் இப்படிச் செய்வது பத்தாம்பசலித் தனம் இல்லையா?

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u>: இங்கே கோவில் அதிகாரிகளைக் கைது செய்ய வேண்டும் என்று சொன்னதுதான் பத்தாம் பசலிக் கொள்கை.

*Fair Price Shops.*

*667 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the number of fair price shops opened during 1974 in this State?

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u>: 1974-ம் ஆண்டில் 3539 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டன. அவற்றில் 2498 கூட்டுறவுகளாலும் 230 தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனாலும் நடத்தப்படுகின்றன.

<u>திரு. என். கே. பழனிசாமி</u>: 1974-ல் திறக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த ஃபேர்-பிரைஸ் ஷாப் போதுமான அளவுக்கு அரிசி கையிருப்பைக் கொண்டிருக்கிறதா? எவ்வளவு கையிருப்பு இருக்கிறது? மத்திய சர்க்கார் ஏற்றுமதி செய்ய அனுமதி எவ்வளவுக்குக் கொடுத்து இருக்கிறது? மத்திய பூலில் இருந்து எவ்வளவு கொடுத்து இருக்கிறார்கள்? இது எவ்வளவு நாட்களுக்குப் போதுமானதாக இருக்கும்.



<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : தலைவரவர்களே, 31—12—1974 வரையில் 8,976 கடைகள் திறக்கப்பட்டு இருக்கின்றன. அரிசியைப் பொறுத்தவரையில் 7,500 டன் அவர்கள் தந்து இருக்கிறார்கள். இன்னும் வெளிநாட்டு இறக்குமதி பற்றி தெளிவான பதில் வரவில்லை.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u> : தலைவரவர்களே, இந்த ஃபேர் பிரைஸ் ஷாப் திறப்பது சம்பந்தமாக பொதுவாக ஒரு சில கூட்டுறவுச் சங்கங்களுக்கே அதிகமான வாய்ப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இப்படி மொனாபலியாக அவர்களுக்குக் கொடுக்காமல், வேறு கூட்டுறவு சங்கங்களுக்கும் அதைப் பகிர்ந்து கொடுக்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா? உதாரணமாக, என்னுடைய மாவட்டத்தில் ஒரு சில சொசைடிகள் மொனாபலிஸ்டிக்காக செயல் பட்டுக் கொண்டு இருக்கின்றன. அதை மாற்ற இந்த நிலைமையைத் தவிர்க்க அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : அது பற்றிய விவரம் தரப்படுமானால் பரிசீலிக்கலாம். எனக்குத் தெரிந்த வரையில் ஒவ்வொரு கிராமத்தில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் முதலிடம் தரப் படவேண்டும். சில இடங்களில் கூட்டுறவு ஸ்டோர்ஸ் இருக்கிறது. அவர்களுக்கு அங்கே முதலிடம் தரவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் டிஸ்டிரிக்ட் சப்ளை அண்டு மார்க்கெட்டிங் சொசைடி இருக்கிறது. அவர்கள் தங்களிடம் விற்பனைக்குத் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்கும், அவர்களுடைய கிளைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் கொள்கையை நாம் வைத்துக் கொண்டு இருக்கிறோம். அதற்கு மாறாக எங்காவது செய்ய வேண்டியிருந்தால், திருத்திக் கொள்ளலாம். அதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கலாம்.

<u>திரு. என். மருதாசலம்</u> : தலைவரவர்களே, நியாய விலையில் பொருள்களைத் தருவதற்காக கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதலிடம் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், நியாயவிலைக் கடையை, அரசாங்க அனுமதி பெற்று, தாழ்த்தப் பட்டவர்கள் சிலர் நடத்துகிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : தலைவரவர்களே, அவர்கள் சொன்னது போல், தாழ்த்தப்பட்டவர்கள் கூட்டுறவு சங்கம் நடத்தவில்லை. அவர்கள் தனியாக வாங்கி, கோவையில் நடத்துகிறார்கள். அவர்கள் கூட்டுறவு சங்கமாக அமைத்து செயல்படுவார்களானால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று அமைப்பார்களானால், அதற்கு முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு முயலும் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களிடமே சொல்லியிருக்கிறேன்.

(முற்பகல் 9-30)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த அத்தியாவசியப் பண்டங்களை விநியோகம் செய்ய கிராமப் புறங்களிலே உள்ள கிரடிட் சொஸைடிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது பல இடங்களில். ஆனால் அவர்களுக்கு உள்ள இதர அலுவல்கள் காரணமாக அலாட் செய்யப்படுகிற பண்டங்களை காலத்தோடு விநியோகம் செய்வதற்கு முடியவில்லை. தாமதம் எற்படுகிறது. இப்படிபட்ட சங்கடங்களைத் தவிர்ப்பதற்கு நிரந்தரமான அத்தியாவசியப் பண்டங்களின் விநியோக முறை அமைப்பு ஒன்று ஏதாவது ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கையை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா ? அப்படி ஏற்றுக் கொண்டிருந்தால் அந்த அமைப்பு சம்பந்தமாக இதுவரையில் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் துறையிலே மாநில அளவிலே ஸ்டேட் மார்க்கெட்டிங் பெடரேஷன், மாவட்ட அளவிலே டிஸ்ட்ரிக்ட் மார்க்கெடிங் சொஸைடி இவர்கள்தான் செய்து கொண்டு வந்தார்கள். இப்போது நமக்குள்ள பிரச்னையெல்லாம் தொடர்ந்து எல்லாக் கிராமங்களுக்கும் விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற முறையிலே தான் சிக்கல் ஏற்படுகிறது. அந்த வகையிலே தான் கூட்டுறவு நாணய சங்கங்களைப் பயன்படுத்தி வருகிறோம். நம்முடைய மாநிலத்திலே சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் சென்னை நகரத்திலே பல இடங்களிலே ஆரம்பிக்க முயற்சி செய்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலேயும் விநியோகம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நகராட்சிகளிலே உள்ள எல்லா வார்டுகளிலும் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு இடத்திலாவது நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? .

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு சங்கங்களை ஆங்காங்கு பயன்படுத்தலாம். அரிசி, சர்க்கரைக்கு மட்டும் ஒரு கடை என்று வைத்தால் அந்தக் கடையை நடத்த முடியாது. அதுதான் உண்மை. எதிர்காலத்திலே மாவட்ட விற்பனைச் சங்கங்கள் மூலம் எல்லாக் கிராமங்களுக்கும் விற்பனை செய்கின்ற முயற்சி எடுக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : எட்டாயிரத்து சில்லரை நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மாநிலத்திலே உள்ள நகரங்கள், நகர பஞ்சாயத்துக்கள் போன்ற இடங்களில் மட்டுந்தான் இந்தக் கடைகள் இருக்கின்றனவா ? அல்லது சாதாரணப் பஞ்சாயத்துக்களிலேயும் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். அது மாத்திரமல்ல, நியாய விலைக் கடைகள் ஆரம்பிக்க வேண்டுமென்றால் சூழ்நிலைகள் எப்படி எப்படி இருந்தால் எங்கு எங்கு ஆரம்பிக்கலாம் என்ற வழிமுறைக் கொள்கை ஏதாவது இருக்கிறதா ?





மாண்புமிகு திரு. செ. மாதவன் : கிராமங்களிலே சிலவற்றில்தான் இருக்கிறது. பெரிய நகரங்களிலேயும் இருக்கிறது. போதுமான அளவிற்கு இல்லை என்பதுதான் இப்போது குறை. கூட்டுறவு அமைப்பு மூலமாகக் கொண்டு வர முடியும் ; ஆங்காங்குள்ள கூட்டுறவாளர்கள் அதற்கு முயற்சியெடுத்தால் மாநில அரசு கூட்டுறவு விற்பனை நிலையங்களை ஆரம்பிக்க முயற்சி செய்யும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : உணவு தானியங்கள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவு சங்கங்களுக்கு குறைந்த செலவுதான் ஆகிறது. ஆனால் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு அரசாங்க ஊழியர்கள் அதிலே செய்வதால் அவர்களுக்கு ஊதியம் போன்றவை கொடுக்கப்படும் காரணத்தால் அதிகச் செலவு, நிர்வாகச் செலவு ஆகிறது, ஆகவே அனைத்தும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் செய்வதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுதான் சரியான கொள்கையாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். மாவட்ட அளவிலே உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எல்லா கிராமங்களிலேயும் இவற்றை உருவாக்கக் கூடிய முயற்சிகளை எடுக்க வேண்டும். அதற்காக அரசாங்கம் என்ன என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே எல்லா கிராமங்களிலும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சர்க்கரை, மற்ற உணவுப் பண்டங்கள் எல்லாம் விநியோகம் செய்யப்படுகின்றன, நகராட்சி, பேரூராட்சி இவைகளில் மட்டும்தான் அரிசி போன்றவை தரப்படுகின்றன. ஊராட்சிகளுக்கு அது தரப்படுவதில்லை. கிராமப் பகுதிகளிலே உள்ள மக்கள் ரொம்ப வருத்தப் படுகிறார்கள், ஆகவே, அதையும் எல்லாக் கிராமங்களுக்கும் வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லாக் கிராமங்களுக்கும் அரிசி வழங்கப் படவேண்டுமானால் எல்லா விவசாயிகளும் உற்பத்தி செய்கிற நெல்லை கொள்முதல் விலைக்கு அரசாங்கம் வாங்க நேரிடும்.

THIRU K. M. SUBRAMANIAM : I am surprised at the question of Mr. James that the fair price shops in the City doing excellent business should be closed. Will the Hon. Minister give us an assurance that they will not be closed because of representation made by some Hon. Members here?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் தவறாக நடக்கிறது என்று சொன்னதாக நான் புரிந்து கொள்ளவில்லை. கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் உருவானால் நிர்வாகச் செலவு குறையும் என்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள்.

*Representation from Process Servers' Association.*

*668Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the State Conference of the Tamil Nadu Civil Court Process Servers' Association held at Chingleput on 12th May 1974 has presented a memorandum to the Government ;

(*b*) if so the details thereof ; and

(*c*) the action taken thereon by the Government ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ), (இ),&(உ) : சில கோரிக்கைகளுடன் ஒரு கோரிக்கை மனு பெறப்பட்டுள்ளது. அரசு அதனை உயர் நீதி மன்றத்துடன் கலந்து ஆலோசித்து பரிசீலனை செய்து வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : அந்தக் கோரிக்கைகளின் விவரங்கள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : பெரும்பாலும் அவர்களுடைய புரமோஷன், சம்பளம் கூட்டுவது, செலக்ஷன் கிரேட் போஸ்டை உருவாக்குவது என்ற சில பிரச்னைகளைக் கூறியிருக்கிறார்கள். பணச்செலவு உள்ள பிரச்னைகளை கவனித்துத்தான் முடிவு செய்ய முடியும். மற்ற பிரச்னைகளாக இருந்தால் உடனடியாகக் கவனிக்கலாம்.

*Coir Co-operative Society.*

*669Q.—THIRU N. K. PALANISAMY and THIRU P. SOUNDARAPANDIAN } Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—



(*a*) whether it is a fact that the Government have proposed to set up a Coir Co-operative Society in the State; and

(*b*) if so the detailes thereof?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இயந்திரமயமாக்கப்பட்ட தென்னை நார்த் தொழிலை வளர்ச்சி அடையச் செய்வதற்கான அடங்கல் திட்டத்தின் கீழ் இயந்திரம் பயன்படுத்தப்படும் தென்னை நார்த் தொழிற் பிரிவுகளை ஏற்படுத்த வாய்ப்புகளை உடைய தொழில் முனைவோர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. அந்தத் தொழில் முனைவோர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு மத்திய கயிறு தொழில் கூட்டுறவு சங்கம் ஒன்று அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த சங்கம் விரைவில் பதிவு செய்யப்படும். இந்த சங்கத்தில் பங்கு மூலதனத்தில் அரசு ரூ. 10,000 வரைக்கும் பங்கு ஏற்கும். சங்கத்தைச் செயலாற்ற அலுவலர் ஒருவரை அரசு தன் செலவில் நியமனம் செய்து உதவும்.

திரு என். கே. பழனிசாமி : சார், இப்போது கேரளத்திலிருந்து இந்த நார் கொண்டு வருவது தடை செய்யப்பட்டிருக்கிறது. இந்த சர்க்கார் அந்த சர்க்காரோடு தொடர்பு கொண்டு இந்த சொஸைடியின் மூலமாக அதிகமான நார் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேரள சர்க்காரிடமிருந்து வருவதிலே தடையிருப்பதாக நம்முடைய அரசு அந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. கேரள அரசுக்குத் தெரியப் படுத்தினோம். அவர்கள் இந்த கஷ்டம் இடைக்காலத்திற்கு இருக்கும் என்று தெரிவித்தார்கள். மத்திய அரசாங்கத்திற்கும் இதுபோன்று கேரளத்திலிருந்து வருவதற்குத் தடை இருக்கக் கூடாது என்று தெரிவித்திருக்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த காய்ர் இண்டஸ்ட்ரி கேரளத்தில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அதுபோல் நம்முடைய மாநிலத்திலே பெரிய அளவில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா ? அதோடு அந்தத் தொழிற்சாலையை அமைக்கப் பொருத்தமான இடம் கன்னியாகுமரி மாவட்டந்தான், ஆகவே அந்தத் தொழிற்சாலையை அங்கே அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தத் தொழிலை நடத்த முன்வருகிறவர்களுக்கு அரசு எல்லாவிதமான உதவிகளையும் செய்யும். இப்போது இது போன்ற ஒரு சிறு

[1975 ஏப்ரல் 15

தொழில் நிறுவனம் தஞ்சாவூரிலே அமைக்க முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டமும் கயிறு திரிக்கின்ற தொழிலை நடத்துவதற்கு அரசாங்கத்தின் சார்பில் எல்லா உதவிகளும் செய்யப்படும்.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ஏற்கனவே ஈத்தாமொழியில் காயர் பயிற்சி பள்ளி இருந்தது. அது மூடப்பட்டிருக்கிறது. அதிலே படித்தவர்களுக்கு வேலையில்லாத நிலைமை இருக்கிறது. புதிதாகத் தொடங்கப்படுகிற சொஸைடியிலே அதிலே பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : கயிறு உற்பத்தி செய்கின்றவர்கள் ஆரம்பிக்கின்ற கூட்டுறவு தொழிற்சாலை இது. அரசாங்கத்தினுடைய உதவி ஒரு அதிகாரியைப் போட்டிருப்பதுதான். வேறு ஒன்றும் இல்லை. அவர்களிடத்திலேதான் வேலை வாய்ப்புக் கொடுக்கிற திட்டம் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே இதுபோன்ற தொழில்கள் ஆரம்பிக்க முன்வருவார்களானால் அரசாங்கம் நிச்சயமாக உதவிசெய்யும்.

திரு கே. ஆர். கிருஷ்ணன் : இப்போது தென்னை மட்டைகளை பெரும்பாலும் அடுப்பு எரிக்கப் பயன்படுத்துகிறார்களே, அதை அரசாங்கம் தடைசெய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தென்னை நாரைக் கொண்டு கயிறு உற்பத்தி செய்கிறார்கள், போதுமான நாரை வாங்கச் செய்கிற முயற்சிதான் அரசினுடைய முயற்சி.

திரு ஏ. ஆர். மாரிமுத்து : இந்த உரி மட்டைகளைப் பயன்படுத்தித் தயாரிக்கின்ற முறையில் நம்முடைய மாநிலத்திலே எத்தனைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கத் திட்டம் இருக்கிறது ? எத்தனைத் தொழிற்சாலைகள் இதுவரையில் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன ? எத்தனை பேர்களுக்கு அங்கே வேலை வாய்ப்புக் கிடைத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : 15 பேர்கள் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். 9.56 லட்சம் ரூபாய் இதற்காக அனுமதிக்கப் பட்டிருக்கிறது, இன்னும் 10 பேர்கள் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள், எந்த அளவிற்கு இதற்காக முன்வருகிறார்களோ அந்த அளவிற்கு அரசு உதவி செய்ய முன்வரும்.



1975 ஏப்ரல் 15]

திரு வை. பாலசுந்தரம் : செங்கை மாவட்டத்திலே இடைகைநாடு ஏராளமான தென்னைகள் லட்சக் கணக்கான தென்னைகள் இருக்கின்ற தோப்பு ஆகும். கள்ளுக் கடையை இப்போது எடுத்துவிட்ட காரணத்தினால் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்ற தொழிற்சாலை அமைக்க இடைகைநாடு சிறந்த இடமாகும், முன்னாள் தொழில் அமைச்சர் மாதவன் அவர்கள் கூட அங்கே அமைக்க உறுதிமொழி தந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த இடைகைநாட்டில் கயிறுத்தொழிற்சாலை கூட்டுறவுத் துறையில் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே அரசு உதவி செய்யத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அதற்குத் தலைமை தாங்கி அதுபோன்ற கூட்டுறவு சொசைட்டிகளை அமைத்து அரசாங்கத்தின் உதவியைக் கோருவார்களேயானால் டைரக்டர் ஆஃப் இண்டஸ்ட்ரீஸ் மூலம் எல்லா உதவிகளும் செய்யப்படும்.

திரு ஆ. கு. சுப்பையா : உதவித் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நிறைய தென்னை மரங்கள் இருக்கின்றன. அதனுடைய மட்டைகளை எரிப்பதற்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த தென்னை மட்டைகளிலேயிருந்து நார் எடுத்து தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ? அப்படி ஆரம்பிக்க வேண்டுமானால் என்னென்ன உதவிகளை அரசாங்கம் செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கெனவே சொன்னதைப் போல 15 சிறிய சிறிய தொழிற்சாலைகளுக்குக் கிட்டத்தட்ட 10 லட்சம் ரூபாய் உதவி செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் 10 பேருடைய விண்ணப்பங்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன. 7 இலட்சம் ரூபாய் அளவில் உதவி கேட்டிருக்கிறார்கள். தஞ்சாவூரில் செண்ட்ரல் சொசைட்டி ஆரம்பிக்க அரசாங்க உதவி கேட்டு அரசாங்கம் 10,000 ரூபாய் அதற்காக உதவி செய்திருக்கிறது.

திரு எம். சுரேந்திரன் : சார். கயிறு இண்டஸ்ட்ரீஸ் கேரளாவிலே சிறப்பாக இருப்பதற்குக் காரணம் அங்கே தேங்காய் மட்டை அதிகம் கிடைப்பதோடு பேக் வாட்டர் சௌகரியமும் இருக்கிறது. அந்த பேக் வாட்டர் சௌகரியம் இருப்பதால் அங்கே கயிறு தொழில் சிறப்பாக் இருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழ்நாட்டிலும் புதிதாக இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிக்கும் பொழுது எந்தெந்தப் பகுதிகள் அதற்குச் சிறப்பாக இருக்கிறது, வசதியாக இருக்கிறது என்று ஆராய்ச்சி செய்து, அதற்கு ஒரு ரிபோர்ட்

சமர்ப்பித்து அந்தந்தப் பகுதிகளில் ஆங்காங்கு உள்ளவர்களை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளைக் காண்பது சிறப்பாக இருக்குமே. அதுவல்லாமல் இம்மாதிரி காரியங்களை, இதுபோன்ற சிறு இண்டஸ்ட்ரீஸ்களுக்கு யார் யார் விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்கு செய்வது என்ற முறையில் செய்தால் பிற்காலத்தில் சங்கடங்கள் ஏற்படுமே, அதைக் கவனித்து கயிறு திரிக்காமல் கயிறு இண்டஸ்ட்ரீஸ் ஏற்பட ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இதற்காக எக்ஸ்பர்ட் கமிட்டி போட்டு வழங்க வேண்டுமென்ற அவசியமில்லை. இப்பொழுதே சேலம் மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் தொழிற்சாலைகளுக்கான வாய்ப்புகள் இருக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டத்திலும் இருக்கிறது. ஏற்கெனவே உதவி செய்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் சேலம் மாவட்டத்திலே சில இண்டஸ்ட்ரீஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளை ஆரம்பித்து அரசாங்கத்தின் உதவியைக் கேட்டால் நிச்சயமாக உதவும். அரசாங்கத்தின் நோக்கம் இந்தத் தொழில் க்ஷீணதசை அடையக்கூடாது என்றுதான் கருதுகிறது. இப்பொழுதுள்ள திட்டத்தின்படி ஆங்காங்கு இருப்பவர்கள் முயற்சித்து கூட்டுறவு மூலம் அரசாங்க உதவியை வேண்டினால் அரசாங்கம் உதவும். ஏற்கெனவே 10 இலட்சம் ரூபாய் வரை உதவி செய்திருக்கிறது. இன்னும் 7 இலட்சம் ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இன்றும் தீவிரமாகக் காரியங்களைச் செய்து வருகிறது.

*Leather Finishing Centres.*

*670 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government propose to set up leather finishing centres in the State ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) மாநிலத்தில் செப்பமிடப்பெற்ற தோல் பதனிடு பணிநிலையங்களை அரசுத்துறைப் பிரிவுகளாக அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை. ஆயினும், அம்மாதிரியான நிலையங்களை தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் மூலமாகவும், கூட்டுறவுத் துறையிலும் அமைக்கும் செயற்குறிப்புகள் உள்ளன.





திரு. என். கே. பழனிசாமி : சார், நம் மாநிலத்திலேயிருந்துதான் இந்தியாவிலே அதிகமாகத் தோல் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகிறது. அங்கே பதனிட்டு நம் நாட்டிற்குத் திருப்பிக் கொண்டு வருகிறார்கள். இந்த நிலைமை போக வேண்டுமானால் நாமே மாடர்ன் மெதட்-லே இங்கிருந்து வெளிநாட்டிற்கு அனுப்பும் தோல்களை இங்கேயே பதனிட்டுச் செய்வதற்குச் சர்க்கார் விரிவான திட்டத்திற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே சர்விஸ் சென்டர்களை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. அந்த சர்வீஸ் சென்டர்களை பல்லாவரம், இராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி, திண்டுக்கல், பேரணாம்பட்டு, ஈரோடு போன்ற இடங்களில் அமைக்கலாம் என்ற பரிசீலனை இருக்கிறது. இப்படிப்பட்ட சர்வீஸ் சென்டர்களை அமைப்பதன் மூலம் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு உதவி செய்ய முடியும் என்று அரசு கருதுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்தத் தோல்பொருள் வேலை நிறைவு நிலையங்களை இன்னும் நம் மாநிலத்தில் ஆரம்பிக்காத நிலையிலே மத்திய அரசு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தோல் பொருள்களை முடிந்த நிலையிலே, அதாவது ஃபினிஷ்ட் அளவிலே இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டை நிர்ணயித்திருப்பதன் மூலம் இந்தத் தோல் தொழிலில் சிக்கலான நிலைமை ஏற்பட்டிருக்கிறதே, அதைப்போக்க தனியார்கள் தொடங்கவிருக்கும் இந்த வேலைநிறைவு நிலையங்களுக்கு அரசு மிகுந்த உதவி செய்வதோடு இதற்கு முன்னுரிமை தந்து நம் மாநிலத்திலே அதிகமான தோல்பொருள் வேலைநிறைவு நிலையங்களை உடனடியாக உண்டாக்குவதற்கான வழிவகைகளைக் காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய மாநிலத்திலே 'லெதர் டெவலெப்மெண்ட் கார்ப்பரேஷன்' அமைக்க குறிப்பு இருக்கிறது. அந்த கார்ப்பரேஷன் மூலம் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலே வாய்ப்பு உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பட்டு உற்பத்திப் பயிற்சிப் பள்ளி.

*671 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூரில் பட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கான பயிற்சிப் பள்ளி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அப்பள்ளியில் இதுவரை எத்தனை மாணவர்கள் பயிற்சி பெற்றார்கள் ?

(உ) அதில் எத்தனை பேர் தேர்ச்சி பெற்றார்கள் ?

(எ) தேர்ச்சி பெற்ற மாணவர்களுள் எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். தர்மபுரி மாவட்டம் ஒசூரில் பட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கான பயிற்சிப் பள்ளி 1973ஆம் ஆண்டு துவங்கியது. பட்டதாரிகளுக்கும் பட்டதாரி அல்லாதவர்களுக்கும் பட்டுத் தொழில் சம்பந்தமாக பயிற்சி அளிக்கப்பட்டதும் அந்தப் பள்ளி 1974 ஆம் ஆண்டு முடிவில் மூடப்பட்டு விட்டது.

(இ) 25 பட்டதாரிகள் ; 50 பட்டதாரி அல்லாதவர்கள்.

(உ) நான்கு பட்டதாரிகள் பயிற்சியின் நடுவே நின்று விட்டார்கள். மீதம் உள்ள 71 பேர்களும் தேர்ச்சி பெற்றார்கள்.

(எ) 15 பட்டதாரி அல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும் உத்திரவு இடப்பட்டுள்ளது.

*Cocoon market in Coimbatore.*

*672 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to open a cocoon market near Palladam area in the State ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நடப்பு ஆண்டில் கோயம்பத்தூர் ஜில்லாவில் பட்டுப்புழு விற்பனை வசதி செய்து கொடுக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொழில் வணிகத் துறை இயக்குநர் இதை கோவை மாவட்டத்தில் அமைக்க ஏற்பாடு செய்து வருகிறார்.

திரு. என். கே. பழனிசாமி : சார், சாதாரணமாக அதிகப் பலன் தருகின்ற, 30, 40 மடங்கு விளைச்சல் உண்டாகின்ற அம்மாதிரி இருக்கும் புழுக்களைக் கொடுக்கும் முறையில் பல்லடம் ஏரியாவில் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, பல்லடம் ஏரியாவில் பைலட் சென்டர் இருக்கிறது. இந்தக் கேள்வி, கக்கூன் மார்க்கெட் ஏற்பாடு செய்வதைப் பற்றிக் கேட்கப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்தில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது, தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுக்க இருக்கிறார்கள்.

*Incentives for raising third crop.*

*673 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any incentive was given to the ryots in Thanjavur district during 1975 for the raising of third paddy crop ; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை@ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், மூன்றாம்போக விளைச்சலுக்கு எல்லா உதவிகளும் செய்யப்பட்டிருக்கிறது, நெல் உற்பத்தி செய்ய. ஆனால் இந்த நெல்லை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக பூராவும் நிலக்கடலை போட்டிருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் செலவு செய்வது வீண்தானே ? அவர்களுக்குக் கொடுத்த சலுகைகள் வாபஸ் வாங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஏற்கெனவே நான் விடையில் சொல்லியபடி மூன்றாவது போகத்திற்கு நெல்லுக்கு மட்டும் இந்த உதவி அளிக்கப்படுகிறது. நெல்லைத் தவிர வேறு பயிர்களுக்கு சலுகைகளைக் காட்டியிருந்தால் அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வருமானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு, வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த உதவித் தொகை வழங்குவதில் காலதாமதம் காட்டப்படுகிறது என்று விவசாயிகள் மத்தியில் சொல்லப்படுகிறது. இதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்..

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, விடையில் உதவித் தொகையைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த பட்ஜெட் உரையிலேயே மூன்றாவது போகத்திற்கு லெவியிலிருந்து விதிவிலக்கு வரும் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது மேற்கொண்டு சில வசதிகள்

@ 109-110ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நடப்பு ஆண்டிலேயே அம் மாதிரி மூன்றாவது போகம் எந்தெந்த மாவட்டங்களிலே வருவதாக இருக்கிறது, அப்படி ஏதாவது மனு கொடுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது தஞ்சை மாவட்டத்திலே மட்டும் அல்லாமல் எந்த மாவட்டத்திலேயும் இந்த மூன்றாவது போகம் பயிரிடப்படுமானால் அதற்கு இந்தச் சலுகை உண்டு என்று சொல்லி இருக்கிறோம். வேறு எந்தெந்த இடத்தில் என்ற புள்ளி விவரம் இப்பொழுது என் கையில் இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மூன்றாவது போகம் நெல்லைச் சாகுபடி செய்ய இயலாது. அப்படிச் சாகுபடி செய்தால் வயலில் கருகிவிடுகிறது. ஆகவே, புஞ்சை தானியங்கள் பயிரிடுவதற்கும் இந்தச் சலுகைகள் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, தற்பொழுது அரசால் அறிவிக்கப்பட்ட இந்தச் சலுகைகள் எல்லாம் நெல்லை மூன்றாவது போகமாகச் சாகுபடி செய்வதற்கு. மூன்றாவது போகம் தஞ்சை மாவட்டத்திலே விளைவிக்க முடியாது என்று சொல்லப்படுவதை ஒரு போதும் நான் ஒப்புக்கொண்டதில்லை. எங்கே கிணறுகள், குழாய்க் கிணறுகள் இருந்து நாற்றங்கால் சீக்கிரம் போட முடியும் என்ற நிலைமை இருக்கிறதோ அங்கே உருவாக்க முடியும் என்பது என் கருத்து. தஞ்சை மாவட்டத்திலே சில இடங்களிலேகூட விளைவித்திருக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே. தஞ்சை மாவட்டத்தில் மூன்றாம் போகம் நெல் சாகுபடி செய்வதற்காக அரசு ஊக்க உதவித் தொகையை அளிப்பது வரவேற்கத்தக்கது. இருந்தாலும் தஞ்சை மாவட்டத்தில் குத்தகைக்கு பயிரிடக்கூடியவர்கள் பெரும்பான்மையோர் தருமபுரம், திருவாடுதுறை ஆதீனங்களுக்கு கீழேதான் பயிர் செய்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு வடி முனைக்குழாய்க் கிணறுகளை அமைத்துத் தந்து, அவர்கள் நெல்லினை உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா ? அதற்காக ஏதாவது புதிய திட்டத்தினை உருவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவசாயிகளுக்கு வடி முனைக் குழாய்க் கிணறுகளை அமைப்பது பற்றிய செயல் முறையினைப் பற்றி கேட்பதென்றால் கூட்டுறவுத் துறையில் கேட்க வேண்டும்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : மூன்றாவது போகமாகப் பயிர் செய்யக் கூடிய எச்.பி. 5 என்ற கம்புப் பயிர் நாட்டிலே விளைவித்து அது விளையாமல் பொய்ப்பித்துப் போய் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதிலே என்ன நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது ?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வினா நெல்லுக்கு அளிக்கப்படுகின்ற சலுகை பற்றியது. நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் என்ற வகையில் அங்கே சென்றும் அந்த சலுகை பாயக்கூடும். எனினும் எச்.பி. 3 கம்பைப் பற்றி கேட்கிறார்கள் ; அதைப் பற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தமிழ்நாடு அரசு நெல்லை மூன்றாம் போகம் சாகுபடி செய்வதற்கு ஊக்கம் அளிப்பது போல் புஞ்சை உணவு தானியங்களான கேழ்வரகு, சோளம் போன்றவற்றைப் பயிரிடுவதற்கு ஊக்கம் அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதை அரசு ஆராய்ந்து ஆவன செய்யும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

## *Fertiliser Fund.*

*674 *Q.*—THIRU N. K. PALANISAMY : THIRU KA. VEZHAVENDAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to create a Fertiliser Fund out of the income accruing from the sale of fertilisers ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பேரவைமுன் விவர அறிக்கையொன்று @வைக்கப்பட்டுள்ளது.

## *Allotment of Fertilisers.*

*675 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the quantity of fertilisers proposed to be allotted to Tamil Nadu during 1974–75?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பேரவைமுன் விவர அறிக்கையொன்று £ வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்த உர நிதி இதுவரை எவ்வளவு சேர்ந்திருக்கிறது ? சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு விவசாயம் செய்யும் இடங்களிலே இருந்து கரும்பு வருவதற்கு சர்க்கரை ஆலை

---

@ 110-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.
£ 111-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 ஏப்ரல் 15

சஸ் மூலம் இணைப்புச் சாலைகள் பல கிராமங்களுக்குப் போடப்பட்டிருக்கின்றன. ஆனல் பல கிராமங்கள் இப்படி இணைப்புச் சாலைகள் இல்லாத கிராமங்களாக காட்சிக் அளிக்கின்றன. ஆகவே இந்த உர நிதியின் மூலமாக வரும் நிதியைக் கொண்டு, பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்து இணைப்புச் சாலைகள் இல்லாத இடங்களிலே இணைப்புச் சாலைகள் அமைக்க வழி வகை செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆத்திதனர் : உர நிதி எவ்வளவு சேர்ந்திருக்கிறது என்பது பற்றிய விவரம் என் கையில் இல்லை. எந்த ஆலை இருக்கும் பகுதியிலே ரோடுகள் போடப்படவில்லை என்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவார்களேயானல், அது ஆராயப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : இப்பொழுது வறட்சி காரணமாக அதிகமான தேவை இல்லை. ஆகவே, சர்க்கார் இன்னும் இருக்கக்கூடிய பெர்ட்டிலைசர் பூராவையும் டிஸ்ட்ரிப்யூட் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனல் அது பூராவும் கள்ள மார்க்கெட்டுக்குத்தான் போகிறது. வியாபாரிகள் வாங்கிப் பதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி வறட்சியாக இருக்கும் பொழுது, வெள்ளாமை இல்லாமல் இருக்கும்பொழுது சர்க்கார் தேக்கி வைத்து மழை பெய்யும் காலங்களிலே அதை விநியோகம் செய்யக் கூடாதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : பெர்ட்டிலைசரை விநியோகம் இரண்டு வகையில் செய்கிறோம். அரசாங்கமே உற்பத்தி செய்வது ; பிறகு தனியார் துறையில் உற்பத்தி செய்வது. தனியார் துறையில் உற்பத்தி செய்வது எல்லாம் பொதுவாக பெரும்பகுதி தனியார் துறையிலுள்ள வியாபாரிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. ஒரு வேளை அதிலே பிளாக் மார்க்கெட் இருக்குமோ என்பது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஆனல், அரசாங்கத்தின் மூலமாக உற்பத்தி செய்யக் கூடிய உரம் விநியோகிக்கிற முறை எப்படியென்றால் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகத்தான் அதை விநியோகிக்கிறோம். அப்படி எந்த கூட்டுறவுச் சங்கத்திலேயாவது தவறு நடந்தால் உடனே அதன் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, தற்பொழுது கிராம கூட்டுறவுச் சங்கங்களிலேதான் உரம் விநியோகம் செய்கிறார்கள். ஆனல் கூட்டுறவு சங்கங்களிலே இருக்கும் செக்ரட்டரியே எல்லா காரியங்களையும் செய்கிறார்கள். எனவே, அவர்கள் உர விநியோகம் செய்யும்பொழுது குறிப்பிட்ட நேரங்களிலே விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதில்லை. ஆகவே அரசாங்க செலவிலே ஒரு கிளார்க்கை போட்டு அதை நிர்வகிக்க ஏற்பாடு ஏதாவது செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1975 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அநேக கிராமங்களிலே இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களிலே கிளார்க்குகள் இருக்கிறார்கள். எந்த கிராம கூட்டுறவு சங்கத்திலேயாவது உரம் தட்டுப்பாடு இருப்பதாகத் தெரிந்தால் உடனடியாக அந்த சங்கத்திற்கு உரம் தரப்படுகிறது. அதற்காக வாரா வாரம் புள்ளி விவரங்களை சேகரித்து வருகிறோம். ஆங்காங்கே இருக்கும் ரீஜினல் ஆபீசர், கலெக்டர் போன்றவர்கள் அவற்றை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். தட்டுப்பாடு ஏற்படுகின்ற இடங்களிலே தாமதம் இல்லாமல் உரம் அனுப்பப்படுகிறது.

திரு. பெ. சீனிவாசன் : இந்த உரத்தின் விலை விவசாயிகள் இப்பொழுது வாங்கி உபயோகிக்க முடியாத அளவிற்கு அதிகமாக இருக்கிறது. இருந்தாலும் வேறு வழியின்றி வாங்கிப் போடுகிறார்கள். அப்படி போடும்பொழுது பூச்சியினால் விவசாயம் கெட்டு, விளைச்சல் வராமல் இருக்கின்ற குறிப்பிட்ட உரம் போட்ட நிலத்திற்கு நஷ்ட ஈடு தர அந்த பண்டிலே இருந்து அரசாங்கம் ஒதுக்கீடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தற்பொழுது அந்த நிதி இன்னின்ன காரியங்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்று இங்கே தாக்கல் செய்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பயிர் விளையாமல் போகுமானல் அதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்பது இந்த அறிக்கையில் இல்லை.

திரு. பெ. சீனிவாசன்: விவர அறிக்கையில் இல்லாததால்தான் நான் கேட்கிறேன்; அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ஏற்கெனவே உத்தரவு போட்டிருப்பதைத்தான் இதிலே குறிப்பிட்டிருக்கிறோம்.

## அம்பாசமுத்திரம் ஒன்றியத்தில் உர விநியோக அட்டைகள் வழங்கல்.

*676 விஞ—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள ஊராட்சிகளுக்கு 1384-ம் பசலிக்கு இரசாயன உர விநியோக அட்டைகள் வழங்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு உரங்கள் வழங்கப்பட்டுள்ளன ?

(உ) அதன் மூலம் எத்தனை ஏக்கர் நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம். வழங்கப்பட்டுள்ளன.

(இ) 9,732 இரசாயன உர அட்டைகள் விநியோகிக்கப்பட்டு, 8798 நபர்களுக்கு உரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தாமதமாக பயிர் செய்துள்ள மீதமுள்ள நபர்களுக்கு உரங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

(உ) 10,192 ஏக்கர்கள்.

திரு. ச. சங்குமுத்துத் தேவர் : இந்த மாதிரி கார்டு வழங்கப்படுவதில் ஊராட்சி வாரியாக கணக்கிருக்கிறதா ?

அத்துடன் இந்த கார்டுகள் வழங்கப்படுவதில் சில கிராமங்கள் இனும் கிராமமாக இருப்பதால் பயிர் எடுப்பு கணக்குப்படி உரக் கார்டுகள் வழங்கப்படுகின்றன. செவ்வந்திபுரம் போன்ற கிராமங் களிலே சரியாக கார்டுகள் வழங்கப்படாமல் இருந்து, பிறகு அது அரசின் கவனத்திற்குத் கொண்டு வரப்பட்டு உரம் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செவ்வந்திபுரம் போன்ற சில கிராமங்களிலே உர அட்டைகள் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். இது கவனிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

## புதிய முட்டைகோஸ் ரகம்.

*677 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் '' செப்டம்பர் '' என்ற புதிய முட்டைகோஸ் ரகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ''செப்டம்பர்'' என்ற புதிய முட்டைகோஸ் பயிரிடும் விவசாயிகளுக்கு ஏதாவது ஊக்க ஊதியத் தொகை அளிக்க திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த ''செப்டம்பர்'' முட்டைகோஸ் என்பதற்கான விதையை மேற்கு ஜெர்மனியிலிருந்து வரவழைத்து நீலகிரியிலே இருக்கும் ''இந்தோ-ஜெர்மன் ப்ராஜக்ட்டிலே'' ஊக்குவிக்கப்பட்டது. 1971-ல் நீலகிரியில்



இது பரிட்சிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 500 ஏக்கராவிற்கு வேண்டிய விதைகளை வரவழைத்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இது இந்தோ-ஜெர்மன் ப்ராஜக்ட்டின்கீழ் உள்ள இடங்களுக்கு கொடுக்கப்படுகிறது. மேற்கொண்டு இந்த விதைகளை நீலகிரி மாவட்டத்திலே பெருக்கமுடியுமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

திரு. கு. அ. பொம்மன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது, மேற்கு ஜெர்மனியிலிருந்து இந்த விதைகள் வரவழைத்துத் தரப்படுவதாகச் சொல்லுகிறார்கள். இந்த விதை நகர மக்களுக்குத்தான் பயன்படுகிறதேயொழிய கிராம மக்களுக்குப் பயன்படவில்லை என்பதை நீலகிரி மாவட்டத்திலே இருக்கும் மக்கள் உணருகிறார்கள். காரணம், இந்த புதிய விதை ஒரு கிலோ விலை ரூ. 400 என்று சொல்லுகிறார்கள். எனவே, கிராம மக்களுக்கு இந்தவிலையைக் குறைத்துக் கொடுத்து, அவர்களும் இதனால் பயனடையக் கூடிய வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இப்போது தேவையான அளவிற்கு இந்த விதைகளைக் கொடுக்க முடியாமல் இருக்கிறோம்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, இந்த கேபேஜ் சாப்பிடுவதால் அறிவு மந்தமாகிவிடுவதாகச் சொல்கிறார்கள். மெடிக்கல் காலேஜில் டல்-ஹெடட் ஆக உள்ள மாணவர்களை கேபேஜ் தலையன் என்று சொல்லுவார்கள். அது கேபேஜ் சாப்பிட்டதால் வந்ததா என்று ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது இதைச் சாப்பிட்டால் அறிவு விருத்தியாகும் என்று சொல்வார்களா? மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்வர்கள் ஏதோ சொல்வார்கள் போலிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படி மாணவர்களைப் பார்த்து சொல்வார்களானால் மாணவர்களின் கோபத்திற்கு ஆளாவார்கள். கோவை செழியன் அவர்கள் அந்தக் கருத்தை இங்கே சொல்வதன்மூலம் மாணவர்களின் கோபத்திற்கு ஆளாகவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கோவை செழியன் சாப்பிட்டிருப்பார் போலிருக்கிறது. ஆகையால்தான் இப்படி சொல்கிறார்.

திரு. கோவை செழியன் : ஆகையால்தான் உங்களைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வேடிக்கையாக மாணவர்களை அப்படிச் சொல்லியிருக்கலாம். உண்மையில் சொல்லியிருக்க முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த "செப்டம்பர்" ரகம் ஆண்டுக்கு எத்தனை தடவை வருகிறது ? எந்தத் திங்களில் ஆரம்பிக்கப்பட்டு எப்போது முடிகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, இந்த "செப்டம்பர்" 110 நாள் பயிர். பொதுவாக ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பயிரிடப்படுகிறது. நீலகிரி மலையில் இப்போது பயிராகிறது என்று கருதப்படுகிறது. இந்தப் புதிய முட்டைகோஸ் வேறெங்கும் பயிராகுமா என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

குழந்தைகள் நல்வாழ்வு இல்லம், தஞ்சாவூர்.

* 352 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரிலுள்ள குழந்தைகள் நல்வாழ்வு இல்லத்திற்கு நவீன கட்டடம் கட்ட அரசு நிதி உதவி ஏதேனும் அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், விபரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை : (அ) தஞ்சையில் சமூக நலத்துறையின் மூலம் குழந்தைகள் நல்வாழ்வு இல்லம் ஏதும் நடக்கவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*School for Deaf and Dumb*

*353 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the number of Schools for Deaf and Dumb getting assistance from the Government in Kanyakumari district?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை : ஒன்று.



திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, ஒன்று இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னுர்கள். அப்பள்ளிக்கு அரசாங்கத்திடமிருந்து மானியம் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை : தலைவரவர்களே, தற்போது அரசாங்கத்தின் மூலம்தான் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 23,000 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, தற்போது மானியத்திற்காக செலவழிக்கப்படும் தொகை எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை : தலைவரவர்களே, அதுபற்றி விளக்கமான, விரிவான குறிப்பு இல்லை என்றுலும் அங்கே பயிலுகிற மாணவர்கள் 147 பேர் இருக்கிறுர்கள். பொதுவாக பள்ளி ஆசிரியர்களுக்கு மாத ஊதியமும், கடைநிலை ஊழியருக்கு மாத ஊதியமும், மாணவர்களுக்கு மாதம் 30 ரூபாயும் ஆக இப்படி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் மொத்த மானியம் 23,600 ரூபாய்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கேள்வி எண்கள் 678, 679, 680 ஒத்திவைக்கப்படுகின்றன.

வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) மாண்புமிகு பேரவைத் தலைவரின் 60-வது பிறந்தநாளையொட்டிய பாராட்டுரைகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நம்முடைய பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் இன்றைய தினம் 60-வது வயதை அடையும் நாளாகும். இந்த நன்னுளில் அவருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நன்னுளையொட்டி அவர்கள் நமக்கெல்லாம் திருக்குறள் தெளிவுரை என்னும் புத்தகத்தைக் கொடுத்திருக்கிறுர்கள். அதை அனைவரும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, பொதுவாக சட்டசபை நடக்கும்போது அவர்கள் இங்கே வந்திருந்து 60 வயதாகிறது என்று சொன்னால் நாம் அவருக்கு ஏதாவது சொல்ல முடியும். இருந்தபோதிலும் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இங்கே வராதது குறை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, மாண்பு மிகு பேரவைத் தலைவரவர்களுக்கு 60-வது பிறந்த தின விழாவிலே நாம் எல்லோரும் மட்டற்ற மகிழ்ச்சி உடையவர்களாக இருக் கிறோம். அன்னார் அவர்கள் நீண்ட ஆயுளும் நல்ல கருத்து நிரம்பிய ஒரு சபாநாயகராக இருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பாக அன்னா ருக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, நமது மாண்புமிகு அவைத் தலைவர் புலவர் அவர்களுடைய 60-வது ஆண்டு நிறைவு தினமாகிய இன்று அவர்கள் எல்லா நலன்களையும் பெற்று வாழ்வதற்கு எங்கள் கட்சி சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களுக்கு 60-வது ஆண்டு நிறைவு பெற்றிருக்கிறது என்பதை அறிந்து நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். எங்கள் கட்சி சார்பாக அவர்களுக்கு நல்வாழ்த்துக்களை இந்த நேரத்தில் கூறுவதோடு, புலவர் கோவிந்தன் அவர்கள் நல்ல தமிழ்ப்பற்று உடையவராகவும், தமிழ்ப் பெருந்தகையாகவும் திகழ்கிறார்கள். அப்பேர்ப்பட்ட பெருந்தகை இன்னும் பல்லாண்டு காலம் நல்ல சேவை செய்து வாழவேண்டுமென்றுவேண்டி அமர்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, நமது மதிப் பிற்குரிய பேரவைத் தலைவர் புலவர் அவர்களுடைய 60-வது பிறந்த நாளில் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அன்னாருக்கு எங்களுடைய உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நம் முடைய சட்டப் பேரவையின் தலைவர் மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் 60வது வயதை எட்டியிருக்கின்ற இந்த நன்னாளில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழ்த்துக்களை மனப்பூர்வமாகத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக் கிறேன். தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டிற்குத் தந்த சுயமரியாதை இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு நாட்டிலேயிருக்கிற சுய மரியாதை எண்ணங்களை நாட்டு மக்கள மத்தியிலே பாராட்டுகிற வகையில் ஈடுபடுத்திக் கொண்டு நீண்ட காலமாக செய்யாறு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த



[திரு. க. உரோ. எட்மண்ட்]

தொகுதி மக்களுக்கும், இந்தச் சட்டமன்றத்தின் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டதன் மூலம் தமிழக மக்களுக்கும் தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டு சீரிய பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் நீண்ட காலம் வாழவேண்டுமென்று வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, பேரவைத் தலைவரவர்களுக்கு 60 வயது ஆகிறது என்று இங்கே சொன் னார்கள். அவர்களுக்கு எங்கள் கட்சி சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் பேரவைத் தலைவர் திரு. புலவர் அவர்களுக்கு நானும் எங்கள் கட்சியின் சார்பில் வாழ்த்துக்கள் கூறுகின்ற முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு மாமன்றத்தின் தலைவர் எத்துணை பொறுப்புணர்ச்சி யோடு நடந்து கொள்ள வேண்டுமோ அத்துணை பொறுப் புணர்ச்சியோடு தம் பொறுப்புக்களை, தாம் பெற்ற அனு பவங்களை முறையாகப் பயன்படுத்தி, தாம் கற்றுத் தெளிந்த பல நூல்களின் தெளிவில்—தகுந்த வயதோடு—நிறைந்த மதிப்போடு—மிகச் சிறப்பாக ஆற்றி வருகிறார்கள். இந்த மாமன்றத்திற்கு 3 முறை தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும் இருக் கிறார். இது அவர்களது தொகுதி மக்கள் அவரிடத்து வைத் திருக்கிற பெரு மதிப்பைக் காட்டுகிறது. அவர்களுடைய வாழ்வே வரலாற்றைக் கொண்டதாக அமைந்தது. உண்மையில் பெருமைக்குரியவர்—பாராட்டுக்குரியவர்—இன்றைக்கு அவருக்கு 60 ஆண்டுகள் ஓடியிருக்கின்றன என்றால் இதில் ஏறத் தாழ 30 ஆண்டுகள் பொதுவாழ்விலேயே ஈடுபட்டு மக்களுக்குத் தம்முடைய உழைப்பை எல்லாம் அர்ப்பணித்துக் கொண்டிருக் கிறார். அப்படிப்பட்ட தலைவர் இன்றைக்கு ஜனநாயக மரபு களை ஒட்டி, சட்டவிதிகளை ஒட்டி இந்த மன்றத்தை நடத்திச் செல்கிறார். ஆளுங்கட்சியினர்களும் சரி, எதிர்க்கட்சியினர் களும் சரி நியாயந் தவறி நடக்காத அளவுக்கு தலைவர் என்ற முறையில் நடுநிலைத் தராசுபோல இருந்து தம்முடைய தீர்ப்புகளை வழங்கி வருகிறார்கள். அவர்கள் மேலும் பல்லாண்டு—பல்லாண்டு நூறாண்டு வாழ்ந்து பொதுமக்களுக்குப் பணிபுரிய வேண்டுமென்று என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, அவர்களுக்கு ஆண்டவனும் அருளவேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1975 ஏப்ரல் 15

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இனிய இயல்பும், எளிய வாழ்வும், எழிலார்ந்த தமிழும் கொண்டு தமிழ்ச் சமுதாயப் பெருங்குடி மக்களுடைய உள்ளத்திலெல்லாம் நல்லிடத்தைப் பெற்றிருக்கிற சட்டப் பேரவையின் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் 60 ஆம் ஆண்டினை இன்றையதினம் தொடங்கியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவதோடு அவர் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென்று தமிழ் மக்கள் சார்பாகவும், இந்த அவையின் சார்பாகவும் அவை முன்னவரின் சார்பாகவும் என்னுடைய வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது சட்டப் பேரவைத் தலைவர் தம்முடைய 60-வது ஆண்டினைத் துவங்கியிருப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். சட்டப் பேரவைத் தலைவர் இங்குள்ள உறுப்பினர்களுக்கு எல்லாம் ஒரு அருமையான புத்தகத்தைத் தந்திருக்கிறார்கள். நான் அதற்காக இந்தச் சபை உறுப்பினர்கள் அனைவரின் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஒரு மகிழ்ச்சியான செய்தி.

மேலவைத் தலைவர் அவர்களுக்கு சில நாட்களுக்கு முன்பு தான் 70 ஆம் ஆண்டு தொடங்கியதற்காக பாராட்டு விழா நடைபெற்றது. இரண்டு மூன்று நாட்களில் நமது பேரவைத் தலைவருக்கு 60 ஆம் ஆண்டு தொடக்கப் பாராட்டு நடைபெறுகிறது. இதற்காக மெத்த மகிழ்ச்சி—மேலவைத் தலைவரை விட பத்து வயது இளைய நமது பேரவைத் தலைவர் நமது பாராட்டுதலைப் பெறுவதோடு அவை உறுப்பினர்களுக்கு நல்லதொரு புத்தகத்தை அளித்ததற்காக என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சென்னை மத்திய நூலக கட்டடத்தருகில் வெடிகுண்டு கண்டு பிடிக்கப்பட்டதும் அதனால் ஏற்பட்ட பீதியும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்ததாக திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு ஜேம்ஸ் அவர்களும்

'Serious situation arising out of the discovery of a military live bomb near the Central Library building, Madras which if exploded could blow up 100 sq. ft. area and there is fear of likely bomb incidents near tall buildings in the City'

என்ற பொருள்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு முக்கியமானது என்பதை விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 15]

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் நோக்கம் என்னவென்றால் சாதாரணமாக 'பாம்களை' அங்கே இங்கே வைப்பது இப்போது வழக்கமாகிக் கொண்டிருக்கிறது. சமஷ்டிபூரில் நடந்திருக்கிறது. இப்போது சென்னை நகரில் ஒரு கட்டிடத்திற்கு அருகாமையில் வைக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு முக்கியமான விஷயம்—சென்னை நகரத்தில் ஒரு பாம் வைத்த நேரத்தில்தான் விசாகப்பட்டிணத்தில் ஒரு பாம் எக்ஸ்ப்ளோட் ஆகியிருக்கிறது, இந்த வெடிகுண்டைப் பற்றி ஒரு படம் போட்டிருக்கிறார்கள். அந்தப் படத்தில் நீளமாக 'நோஸ்' இருக்கக் கூடிய வெடிகுண்டாக இது இருக்கிறது. இந்த வெடிகுண்டு வெடித்திருந்தால் அந்தக் கட்டிடத்தையே தகர்த்திருக்கும் என்று சொல்கிறார்கள். இது போன்ற 'பாம்' எங்கிருந்து வருகிறது. அகஸ்மாத்தாக எக்ஸ் சர்விஸ்மென் போட்டதா? அல்லது இதற்குப் பின்னால் ஏதாவதொரு சதிக் கூட்டம் செயல்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

இது போலீசாரால் மட்டும் நடவடிக்கை எடுக்கக் கூடிய பிரச்சினை அல்ல. இது பற்றி அரசு நல்லமுறையில் ஆராய்ந்து மற்ற இடங்களில் நடந்திருப்பதற்கும், சென்னையில் நடக்க இருந்ததற்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அரசின் சார்பில் இதுபற்றி எவ்வித கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. பக்கத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு அந்த 'பாமை' எடுத்துச் சென்றார்கள் என்பது மட்டும்தான் தெரிவிக்கப்பட்டது.

அதிருஷ்டவசமாக—நல்லவசமாக—அந்த வெடிகுண்டு வெடிக்கவில்லை. வெடித்திருந்தால் மிகுந்த சேதம் ஏற்பட்டிருக்கும். ஆகவே இப்படிப் பட்ட சம்பவங்கள் நாடு பூராவும் நடக்கிறபோது—இது தமிழ்நாட்டிலும் பரவவிடாது தடுக்க நல்ல பல யோசனைகளைக் கொடுக்க முடியும் என்ற காரணத்தினால் இந்தச் சபை இந்தத் தீர்மானத்தை விவாதிக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவர் அவர்களே, சென்னை மத்திய நூலகக் கட்டிடத்திற்கு அருகாமையில், அதுவும் பிரிட்டிஷ் கவுன்சில் கட்டிடத்திற்கு அருகாமையில் இந்த பாம்பு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) பாம்பு இல்லை—பாம். (சிரிப்பு) இந்த பாம் வெடிக்காத காரணத்தினால் இன்றைக்கு நாம் சிரித்துக் கொண்டிருக்கிறோம். அது வெடித்திருந்தால் பல உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும். பல் லட்சக்கணக்கான ரூபாய்க்குச் சேதம் ஏற்பட்டிருக்கும்.

என்னைப் பொறுத்தவரையில், இந்த பாம் எப்படி அங்கே வந்தது? யார் அதனைக் கொண்டுவந்து வைத்தார்கள்? இதை எல்லாம் நிச்சயமாக விசாரித்தறியக் கடமைப் பட்டிருக்

[திரு. ஜே. ஜேம்ஸ்]

கிறோம் எனக் கூற விரும்புகிறேன். இது உண்மையிலே நாச சக்திகளுடைய செயல் என்றால் இந்தச் சக்தியை ஆரம்பத்திலேயே அகற்றியாகவேண்டும். இப்படிப்பட்ட செயல்கள் வட மாநிலங்களில் நடைபெறுகின்றன என்றாலும் நமது மாநிலத்தில் நடைபெறுதிருக்க அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டாகவேண்டும். இது மிகவும் முக்கியம் வாய்ந்த பிரச்சினை—இதற்கு அரசாங்கம் விளக்கம் தருகிற முறையில் விவாதத்திற்கு இது தேவையில்லை என்று கூறினாலும் கூட இதற்கான விளக்கத்தை இந்த நாடு முழுவதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 12—4—1975 சனிக்கிழமை மாலை 4-30 மணியளவில் சென்னை, அண்ணா சாலையில் உள்ள—மத்திய நூலகக் கட்டிடத்தில் காவலாளியாகப் பணி புரிகிற சாந்தராஜ் என்பவர், கட்டிடத்தைச் சுற்றி வருகிறபோது, கட்டிடத்தின் மதிற் சுவருக்கு அருகிலுள்ள ஒரு புதரில் வெடிகுண்டு போன்ற பொருள் ஒன்றை கண்டார். உடனே அதைப் பார்த்ததும்—மத்திய நூலக கட்டிடத்தின் சார்ஜெண்ட் ராஜு நாயுடுவுக்கு மாலை 4-45-க்குத் தகவல் கொடுத்தார். இத்தகவலை உடனடியாக ஆயிரம் விளக்கு காவல் நிலையத்திற்குத் தெரிவித்தார். காவல் நிலைய ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து—அப்பொருள் அருகில் யாரும் போகாதபடி பாதுகாப்புகளைச் செய்தார்கள்.

மேலும் சார்ஜென்டிடமிருந்து ஒரு புகாரைப் பெற்று—ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தில்—இந்திய வெடி மருந்துச் சட்டம், 3-வது பிரிவின் கீழ் 397/75-ம் எண்ணில் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

போலீஸ் அதிகாரிகள் அந்தக் கட்டிடத்திற்குச் சென்று வெடி குண்டுப் பொருளைப் பார்வையிட்டு விசாரணை செய்தனர்.

இப்பொருள் அடிப்பாகம் உருளைவடிவத்திலும், மேல் பகுதி கூர் உள்ள வடிவத்திலும் அமைந்துள்ளது. எடை 6 கிலோகிராம் என்று சொல்லப்படுகிறது. இதில் சில அடையாளங்களும் காணப்படுகின்றன.

இது கண்டுபிடிக்கப்பட்ட இடம் மத்திய நூலகக் கட்டிடம்—இது ஐந்தடுக்கு மாடிக் கட்டிடம்—இதன் 4-வது மாடிக் கட்டிடத்தில்தான் பிரிட்டிஷ் துணை ஹைகமிஷன் அலுவலகம் உள்ளது. மத்திய நூலக ஆணைக்குழு அலுவலகங்கள் இங்கு பிற கட்டிடங்களில் செயல்படுகின்றன. இக் கட்டிடத்தின் மேற்குப் பகுதியில் மதிற் சுவருக்குள் பிரிட்டிஷ் கவுன்சில் நூலகம் நடைபெறுகிறது.



[டாக்டர். மு. கருணாநிதி]

அவ்வை சண்முகம் கலையரங்கம் மதிற்சுவருக்குள் அமைந் துள்ளது. அருகில் நூலக கட்டிடத்தின் சார்ஜென்டின் வீடு உள் ளது. இக் கட்டிடத்தில் தெற்குப் பகுதியிலுள்ள புதரில்தான் மேற்படி வெடிகுண்டு போன்ற பொருள் காணப்பட்டது.

இதுபற்றித் தகவல் தெரிவித்து, உடனடியாக ஆவடியிலுள்ள மத்திய வெடி பொருள் நிபுணர் மேஜர் சூரியநாராயணனும், குற்றஞ் சார்ந்த அறிவியல் ஆய்வகத்தைச் சார்ந்த திரு. சுவாமி நாதனும் 12—4—1975 அன்று இரவே இப்பொருளைப் பார்வை யிட்டனர். சுற்றிலும் மணல் மூட்டைகளை அடுக்கி தடுக்க ஏற் பாடு செய்தனர். மேஜர் சூரிய நாராயணன் மேற்கொண்டு 13—4—1975 அன்று இது பற்றி ஆய்வு செய்துவிட்டு பின்வருமா மாறு கருத்தைத் தெரிவித்தார் :—

'இது வெடிக்கக் கூடியதல்ல. அபாயமற்ற கனப் பொருள். உந்து விசை ஏதுமில்லை. ஒரு பீரங்கியில் வைத்துத்தான் வெடிக்க வேண்டும்' என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பொருளை நமது காவல் துறையினர் எடுத்து வைத்தி ருக்கிறார்கள். மத்திய வெடிபொருள் துறையிடம் கொடுத்து மேலும் விசாரணை செய்ய வேண்டியுள்ளது. விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நூலக காம்பவுண்டுக் குள்ளும் கட்டிடத்திற்குள்ளும், தகுந்த பாதுகாப்பு கொடுக்கப் பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்து, இந்த விளக்கத்திற்கு மேல் அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க எதுவும் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதல்வர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையில் இதுபற்றி விவா திக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

## 4. நடைமுறைக் கேள்வி.

மாண்புமிகு முன்னாள் உணவு அமைச்சர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டினை விசாரிக்க அமைத்திருக்கும் விசாரணைக் குழுவைப் பகிஷ்கரிக்கப்பதாக சில கட்சிகள் கூறியிருப்பதால், அக்குழு விசாரணையை நடத்துமா என்பது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இரண்டு தினங்களுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு முன்னாள் உணவு அமைச்சர் அவர்கள் மீது கூறப்பட்ட ஊழல்களைப் பற்றி விசாரிக்க விசாரணைக் கமிஷன் நியமிப்பதாக இங்கே கூறினார்கள். அதையொட்டி ஒரு சில அரசியல் கட்சிகள் இந்த விசாரணைக் கமிஷனைப்பகிஷ்கரிப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

[திரு. ஜே. ஜேம்ஸ்]

ஆக, நாட்டு மக்களிடத்தில் இந்த விசாரணைக் கமிஷன் நடைபெறுமா அல்லது நிறுத்தி விடுவார்களா என்ற ஐயப்பாடு இருக்கிறது. அதற்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தருவது நலமாக இருக்குமென்று நாட்டு மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. உ. ரொ. எட்மண்ட்: பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஜேம்ஸ் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் மீது ஏற்படுத்தப்பட்டிருக்கும் விசாரணைக் கமிஷனை ஒரு சில அரசியல் கட்சிகள் பகிஷ்கரிப்பதாக இங்கே கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை இரண்டு நாட்களுக்கு முன்னால் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி அளிக்கின்ற நேரத்தில் எங்கள் கட்சித் தலைவர் 'அது எங்கள் கட்சியின் முடிவு' என்று பத்திரிகை நிருபர்களிடத்தில் சொல்லியிருக்கிறார். அதனால் பொதுமக்கள் எந்தவிதமாகவும் பாதிக்கப்படமாட்டார்கள். விசாரணைக் கமிஷன் நடக்கும்போது ஜேம்ஸ் அவர்க்ள் அவர்களுக்குத் தெரிந்த உண்மைகளை விசாரணைக் குழுவிடம் சொல்லலாம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை அதிலே கலந்து கொள்வதில்லை என்று முடிவு செய்திருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: விசாரணைக் கமிஷன் போடுவதாக அறிவிக்கப்பட்டு இப்போது கெஜட்டில் கவர்னர் உத்தரவாகி வந்திருக்கிறது. நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புவது—விசாரணைக் கமிஷன் எந்த இடத்தில் நடைபெறப் போகிறது? அதற்கு ஆபீஸ், ஸ்டாஃப் எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? மற்ற விசாரணைக் கமிஷன்கள் நடைபெறுவது மாதிரி பகிரங்கமாக நடைபெறுமா? விசாரணைக் கமிஷன் பற்றிய சுற்றறிக்கை அனுப்பப்படுமா? எந்த ஊரில் நடைபெறும்? தஞ்சையில் நடைபெறுமா அல்லது சென்னையில் நடைபெறுமா? இந்த விவரங்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு அங்கத்தினர் எட்மண்ட் அவர்கள் ஏதோ அவர்கள் சார்பில் இதிலே பங்கு கொள்ளவில்லை என்பதை அறிவித்ததை யொட்டி நாட்டு மக்களிடம் அதிருப்தி இருப்பதாக நான் கருத்தைக் கூறினேன் என்ற வகையிலே சொன்னார்கள். அவ்வாறு நான் கூறவில்லை. ஏற்கெனவே, முதலமைச்சர் அறிவித்த விசாரணை நடைபெறுமா அல்லது இவர்கள் இப்படிக் கூறிவிட்ட காரணத்தால் நின்று விடுமா என்ற ஐயப்பாடு இருப்பதாகத்தான் கூறினேன்.

மாண்புமிகு தங்கமணி அவர்கள் கூறியது போல் இந்த விசாரணை எங்கே நடைபெறும், இதிலே பங்கு கொள்பவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் என்னென்ன வசதிகள் செய்து கொடுப்பார்கள் என்ற விளக்கங்கள் எல்லாம் தரப்பட வேண்டும்.



[திரு. ஜே. ஜேம்ஸ்]

அதற்காகத்தான் இந்தப்பிரச்சினையை நான் இங்கே கிளப்பினேனே தவிர, மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் கட்சி, விசாரணையைப் பகிஷ்கரிக்கிறது என்ற காரணத்தால் விசாரணை நடத்தினால் விவரங்களைக் கூற வேறு அரசியல் கட்சிகள் இல்லையென்ற நிலை இல்லை. ஆகவே, திரு. எட்மண்ட் அவர்கள் நான் கூறுவதைக் கூறியதாகப் பொருள் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த நீதி விசாரணை நடைபெறும் என்ற அறிவிப்பே, இந்த அவையில் ஒரு சட்டப் பேரவை உறுப்பினர் நண்பர் ஆல்டி அருணா அவர்கள், தான் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும், தான் இன்னின்ன தவறுகள் என்று சுட்டிக் காட்டுகிறேன் என்று குறிப்பிட்ட தன் பேரிலும் அறிவிக்கப்பட்ட ஒன்றாகும். இப்போது அவர்கள் 'நாங்கள் அந்த விசாரணையில் கலந்துகொள்ளப் போவதில்லை' என்று அறிவித்திருப்பதைப் பத்திரிகைகளில் பார்த்தோம். அதைக் குறிப்பிட்டுத்தான் நண்பர் ஜேம்ஸ் அவர்கள் அந்த விசாரணை நடைபெறுமா என்று கேட்டார்கள்.

ஜேம்ஸ் அவர்களுக்கு ஏற்பட்ட ஐயப்பாட்டுக்குக் காரணம், விசாரணை வேண்டுமென்று சொன்னவர்கள் அதிலே கலந்து கொள்ளவில்லை என்று அறிவித்து விட்டார்களே, பிறகு விசாரணை நடைபெறுமா என்ற இயல்பான ஐயப்பாடு ஜேம்ஸ் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு நான் சொல்ல வேண்டிய பதிலை நண்பர் எட்மண்ட் அவர்களே பதிலாகச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். நாங்கள் செல்லவில்லை என்றாலும், விசாரணை நடைபெறும், மற்றக் கட்சிக்காரர்கள் கலந்து கொள்ளலாம் என்று மற்றக் கட்சிக்காரர்களுக்கு நண்பர் எட்மண்ட் அவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதுவரையில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்படியும், நீதி விசாரணை அறிவிக்கப்பட்டு விட்ட காரணத்தால் ஏற்கனவே பொறுப்பேற்றுக்கொண்டு விசாரணை வேண்டுமென்று வலியுறுத்தியவர்கள், குறிப்பிட்ட குற்றச்சாட்டு உண்டு என்று சுட்டிக்காட்டி விசாரணை வேண்டுமென்று வலியுறுத்தியவர்கள் இப்போது பின்வாங்கி விட்டாலும் அறிவிக்கப்பட்ட விசாரணை நிச்சயம் நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அது எங்கே நடைபெறும், எப்படியெல்லாம் நடைபெறும் என்பதையெல்லாம் பற்றி மாண்புமிகு கே.டி.கே. அவர்கள் கேட்டார்கள். அதற்கென நியமிக்கப்பட்ட நீதிபதி அதற்கான அறிவிப்புகளை முறையாகத் தருவார்கள் என்று நம்புகிறேன். முறையாக அறிவிக்கப்பட்டு நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, விசாரணை வேண்டுமென்று கேட்டார்களே, இப்போது பின்வாங்கிக்கொண் டார்களே என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேச்சினிடையே வார்த்தையைப் போட்டு பொதுமக்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் எல்லாம் கோழைகள், எங்களிடம் ஆதாரம் இல்லையென்று பின் வாங்கிவிட்டதாக ஒரு கருத்து பரவுகின்ற நிலைமையை உருவாக்கி யிருக்கிறார்கள்.

ஆனால், எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் தெளிவாகக் கேட் டிருக்கிறோம். அருணா அவர்கள் இரண்டு கோரிக்கைகளை இந்த மன்றத்தில் வைத்தார்கள். ஒன்று, விசாரணை ஏற்படுத்த வேண்டும். இன்னொன்று, விசாரணையை ஏற்படுத்தும்போது வெளி மாநில நீதிபதி அல்லது சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாங்கள் கேட்டதாலே விசாரணைக் கமிஷன் நியமித்ததாகச் சொல்லுவதை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. இரண்டு கோரிக்கைகளையும் முதல மைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒன்றை மட்டும்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது கோரிக்கை முக்கிய மான ஒன்றாகும். அதையும் ஏற்றுக்கொள்வார்களானால் அந்த விசாரணையில் நாங்கள் எல்லாம் கலந்து கொள்ள முடியும்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்த விசாரணையில் கலந்து கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உளமாற விரும்பினால், இந்த விசாரணையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கலந்துகொண்டால் நிச்சயமாக நம்முடைய அமைச்சரவை மீது சட்டப்படி குற்றச்சாட்டை நிரூபிக்க நாங்கள் உதவியாக இருப்போம் என்று முதல்வர் அவர்கள் கருதினால், அந்த இரண்டாவது கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களானால் நிச்சயமாக விசாரணைக் கமிஷன் விசாரணை செய்யும்போது நாங்கள் கலந்து கொள்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்போது இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லாத வார்த்தை களை நான் சொன்னதாகக் கற்பனை செய்துகொண்டு, ஏதோ கோழைகள் என்றெல்லாம் என்னென்னவோ சொன்னதாகச் சொன்னார்கள். அந்த வார்த்தைகள் இப்போது பயன்படுத்திய தல்ல. நான் சொன்னது 'பின் வாங்கி விட்டார்கள்' என்பது தான். எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி அப்படித்தான் வந் திருக்கிறது. கலந்து கொள்ள மாட்டோம் என்றால் என்ன அர்த்தம்?



திரு. பெ. சீனிவாசன் : முதலமைச்சர் அவர்களுக்கு ஒரே ஒரு டிக்ஷனரிதானா? கலந்து கொள்ள மாட்டோம் என்றால் பின் வாங்கி விட்டோம் என்று அர்த்தமா?

(திரு. கோவை செழியன், திரு. பெ. சீனிவாசன் ஆகியோர் எழுந்து நின்றுகொண்டு குறுக்கிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கொஞ்சம் மரபுகளைக் காப்பாற்றலாம்; மரியாதைகளைக் காப்பாற்றலாம். நீங்கள் பேசுங்கள், நான் உட்கார்ந்து விடுகிறேன்.

தலைவர் அவர்களே, இதில் சுப்ரீம் கோர்ட் நீதிபதி, வேறு மாநில நீதிபதி என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கு ஏற்கனவே பல விளக்கங்களை இந்த அவையிலே சொல்லியாகிவிட்டது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் போடப்பட்ட நீதி விசாரணை யில் அந்தந்த மாநில நீதிபதிகளையேதான் போட்டிருக்கிறார்கள். கேரளத்தில் நீதி விசாரணையின்போது கூட அந்த மாநில ஓய்வு பெற்ற நீதிபதி அல்லது இப்போது பணியாற்றுகின்ற அந்த மாநில நீதிபதியைத்தான் போட்டிருக்கிறார்கள் என்ற விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த வகையில்தான் நம் மாநில நீதிபதியைக் கொண்டு இங்கே விசாரணை நடைபெறும் என்பதை நான் மீண்டும் கூறிக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. பெ. சீனிவாசன் : முதல் அமைச்சர் அவர்கள் நாங்கள் கலந்து கொள்ளவில்லை என்பதற்கு அதற்குள்ள அர்த்தம் நாங்கள் பின்வாங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி அவர்களுக்கு என்று தனி அகராதி இருக்கிறதோ என்னவோ அப்படிச் சொல்கி றார்கள். அதைப்பற்றி கவலையில்லை. நாங்கள் அந்த விசாரணை யில் ஏன் கலந்து கொள்ளவில்லை என்பதற்கான காரணங்களையும், இந்த மாநிலத்தில் உள்ள நீதிபதியை நாங்கள் ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்கான காரணங்களையும், இதைப் பற்றி விவாதிப்பதற்கு நீங்கள் அனுமதிக்கத் தயாராயிருந்தால் நாங்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை என்பதற்கான காரணங்களை தெளிவாக நாட்டு மக்கள் ஒப்புக்கொள்ளக் கூடிய அளவில் நாங்கள் சொல்லமுடியும்.

* * *

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :

* * *

எனவே ஒன்று அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அது சபைக் குறிப்பில் ஏறுவது சரியல்ல.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. பெ. சீனிவாசன் : விசாரணை வேண்டும் என்று கேட்ட ஒரு எதிர்க்கட்சி விசாரணையில் கலந்து கொள்ளமுடியாது என்று சொன்னால் அதில் என்ன களங்கம் வந்துவிடுகிறது என்று தெரியவில்லை. எந்த ஒரு பிரச்னையையும் பேரவையில் கொண்டு வந்து கிளப்ப உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகாயத்திலிருந்து பூமி வரை உள்ள, அவற்றிற்கு இடையில் உள்ள எந்தப் பிரச்னை பற்றியும் பேச எங்களுக்கு உரிமை உண்டு. நீதிபதிகள் பற்றி இங்கு விவாதம் செய்யக்கூடாது. அதற்கு தாங்கள் அனுமதி வழங்க மாட்டீர்கள். இதைப்பற்றி விவாதித்தால்தான் நாங்கள் கலந்து கொள்ள முடியாததற்கான காரணங்களைச் சொல்லமுடியும். ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் பின்வாங்கி விட்டார்கள் என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

திரு. கோவை செழியன் : நான் நீதிபதி பற்றிப் பேசிய சில குறிப்புகளைச் சபைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட்டீர்கள். ஏன் நம் மாநிலத்திலிருக்கிற நீதிபதிகளை பகிஷ்கரிக்கிறோம் என்பதற்கான காரணங்களை விளக்கமாகப் பல முறை இந்த மன்றத்தில் சொல்லியாகிவிட்டது. அதைப்பற்றி இனிமேல் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * * * கலந்துகொள்ள முடியாது என்று சொல்லலாம்.

* * *

எனவே அந்தக் கருத்துக்களை நான் சபைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

(கூச்சல்-குழப்பம்.)

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கோவை செழியன் சொன்னதை நான் கண்டித்ததில் இருந்து இப்போது நடப்பது வரையில் எல்லாவற்றையும் சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

திரு. க. சுப்பு : நீக்கியது பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்து போட்டு நீதி விசாரணைக் கமிஷனை நாங்கள் வரவேற்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு விரோதமாக இவர்கள் சொல்வது இருக்கிறது என்று நான் கூறினேன். அதை நீக்குவதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். அதைப்பற்றித் தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே நீக்கிவிட்டேன். வேண்டுமானால் திரும்ப ரெயிஸ் செய்யுங்கள், ரீகன்சிடர் செய்யவேண்டுமென்று.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



திரு. க. சுப்பு : அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள ஐந்து பேர்களும் ஐந்துவிதமாகப் பேசட்டும், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள விசாரணைக் கமிஷனை வரவேற்று ஆதரித்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரால் அங்கு இயங்குகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்து போட்டு அறிக்கை விடுத்திருக்கிறார்கள். அதே கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கே இந்த மன்றத்தில் கையைக் காட்டி காலைக் காட்டிச் சொல்கிறார்கள். இதில் எது சரி ?

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, the point of order raised by the hon. Member, Thiru Suppu is—I do not know—not actually a point of order for the following reasons. As far as our party is concerned, Members of Parliament had given a statement.

இந்த நீதி விசாரணையை நாங்கள் வரவேற்கிறோம் என்றால் அது முழு வெற்றி அல்ல, முதல் வெற்றி என்று தெளிவாகப் போட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை முழுமையையும் சுப்பு சொல்லியிருந்தால் இந்தக் குழப்பம் வந்திருக்காது.

அதில் இன்னொரு பகுதியில் சொல்லியிருக்கிறார்கள். இந்த அமைச்சரவையிலிருந்து ப.உ. ச. ராஜினாமா செய்யவேண்டும் என்றும் இதன் முழுப் பொறுப்பையும் முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். முழு வெற்றியல்ல, முதல் வெற்றி, இந்த அமைச்சரவையிலிருந்து ப.உ.ச ராஜினாமா செய்யவேண்டும், முழுப் பொறுப்பையும் முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். 25-வது எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்டின் அடிப்படையில் விசாரணை நடக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆலடி அருணா அவர்கள் கிளப்பியிருக்கலாம். ஆனால் முழுக்க முழுக்க அந்தக் கமிட்டி ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறபடி உள்ள குற்றச்சாட்டுகள் அத்தனையும் பற்றி, அவைகள் மேல் விசாரணை நடைபெற வேண்டும் என்றும் வெளி மாநிலத்திலிருந்து அல்லது சுப்ரீம் கோர்ட் நீதிபதியை நியமிக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை வரவேற்கிறோம். முதல் வெற்றி என்ற அளவுக்கு நேற்று வரையில் வேண்டவே வேண்டாம் என்று சொல்லி வந்த முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் பணிந்து ஓரளவுக்கு ஒப்புக்கொண்டார் என்று சொன்னோமே தவிர வேறு ஒன்றும் இல்லை, இது முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே இதிலே எந்தவிதமான குழப்பமும் கிடையாது. நம்முடைய மார்க்கம் மிகத் தெளிவாக இருக்கிறது.

We are very clear in our perspectives and our role.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நேற்று வரை முடியவே முடியாது என்ற முதலமைச்சர் ஒப்புக் கொண்டார் என்று மிகப் பிரமாதமான வெற்றியாக, மொரார்ஜி தேசாய்க்குக் கிடைத்த வெற்றிபோல் இங்கே அவர் குறிப்பிடுவது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. அப்படி அல்ல. நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திரும்பத் திரும்ப நானும், கேட்டேன், சட்ட அமைச்சரும் கேட்டு இருக்கிறார்கள் குறிப்பிட்டுச் சொல்லுங்கள், இதிலே ப.உ.ச.-வுக்கு சம்பந்தம் இருக்கிறது, அவர் தவறு செய்து இருக்கிறார் என்று குறிப்பிட்டுச் சொல்வீர்களானால், நீதி விசாரணை வைக்கத் தயார் என்று சொன்னோம். பொதுவாகத்தான் பேசப்பட்டது.

அன்றைய தினம் ஆலடி அருணா அவர்கள் நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். நீதி விசாரணை வையுங்கள் என்று சொன்னார்கள். நீங்கள் ப்ரொசீடிங்க்ஸை படித்துப் பார்த்தால் தெரியும். நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். நீதி விசாரணை வையுங்கள் என்று சொன்னார்கள். அப்போது நான் திரும்பக் கேட்டேன். 'நீங்கள் இந்தக் குற்றச்சாட்டில் ப.உ.ச.-வுக்கு சம்பந்தம் இருக்கிறது, அந்தத் தவறுக்கு அவர் உடந்தையாக இருந்தார் என்று கூறுகிறீர்களா' என்று கேட்டபோது, 'ஆமாம் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்' என்று சொன்னார்கள்.

அப்படிக் குறிப்பிட்டு ஒப்புக்கொண்ட பிறகு, பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான், நீதி விசாரணை வைக்கப்படும் என்று சொன்னேன். பிறகுதான், அடுத்த மாநில நீதிபதி, சுப்ரீம் கோர்ட் நீதிபதி என்று பேசப்பட்டதே அல்லாமல் வேறு அல்ல.

இதுபோல் வேறு மாநிலங்களில் கேரளத்தில் வைத்திருக்கிறார்கள். மேற்கு வங்கத்தில் வைத்திருக்கிறார்கள். அதற்காக அங்கேயுள்ள முதலமைச்சர்கள் ராஜினாமா செய்து விடவில்லை. மத்திய அமைச்சரவையில் கூட நீதி விசாரணை வைக்கப்பட்டது. அதற்காக பாரதத்தின் பிரதமர் ராஜினாமா செய்து விடவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அந்தப் பைலில் முதலமைச்சர் கையெழுத்துப் போட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லா மாநிலங்களிலும்......

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் முடித்து விடுகிறேன், அந்தப் பைலில் நீங்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறீர்கள் ப. உ. ச. கையெழுத்துப் போட்டிருக்கிறார். ஆதித்தனார் போட்டிருக்கிறார். ஆகவே, முதலமைச்சரவர்கள் ப. உ. ச. அவர்களைக் காட்டிக் கொடுத்து தப்பித்துக் கொள்ள முடியாது என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். எங்கள் தலைவர் சொல்லியிருக்கிறார்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சட்டசபையில் வைத்து விவாதிப்பது என்றால் விவாதித்து முடித்துவிடலாம். எல்லா மாநிலங்களிலும், எல்லா அமைச்சர்கள் பைலிலும்—சில நேரங்களில்—முதலமைச்சர் கையெழுத்துப் போடுவது உண்டு. அதை மறந்து விடக்கூடாது. டாக்டர் ஹாண்டே எங்கள் தலைவர் சொன்னார், எங்கள் தலைவர் சொன்னார் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார். உங்கள் தலைவர் என்ன சொன்னார்? "நாம் ஏன் விசாரணையில் கலந்து கொள்ள வேண்டும்? விசாரணை கேட்டதே கூடத் தவறு" என்று உங்கள் தலைவர் சொன்னதாகக்கூடக் கேள்விப்படுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அப்படிச் சொல்லவில்லை. அது முதலமைச்சரின் கற்பனை.

திரு. பெ. சீனிவாசன் : சார், இந்தப் பேரவையில் பல நாட்களாக நான் கவனித்துக்கொண்டு இருக்கிறேன். முதலமைச்சருக்கு ஒரு வழக்கம் இருக்கிறது. எப்போதும் ஏதாவது குத்தலாகப் பேசுவது. முதலமைச்சர் குத்தலாகப் பேசியதற்கு குத்தலாக பதில் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறார்களா? இங்கேயிருக்கும் முதலமைச்சர் ஸ்தானத்தைப் பயன்படுத்தி பேசுவதற்கு வாய்ப்பை எடுத்துக்கொண்டு, கடைசியில் பிரமாதமாக கண்டுபிடித்து விட்டதைப் போல் குத்தலாகப் பேசிவிடுகிறார். அப்படி அவர் பேசிவிட்டால் பதில் கொடுக்க எங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். நான் கேட்கிறேன், முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார், 4½ கோடி மக்களின் தலைவராக இருப்பவர், கேள்விப்படுகிறேன், என்று புறம்போக்கு பேச்சு பேசுவது நியாயமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்க... ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் உங்கள் தலைவர் கொடுத்த மனுவில், கேள்விப்படுகிறேன், என்றுதான் சொல்லியிருக்கிறா. அதுவும் புறம்போக்கு பேச்சுதான்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் டிபுடி ஸ்பீக்கர் சார், இந்த விசாரணைக் கமிஷன் போட்டது சம்பந்தமாக எங்கள் கட்சிக்கு ஒரு நிலை உண்டு. விசாரணைக் கமிஷன் வேண்டுமென்று 1972-லிருந்து நாங்கள் மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டு வருகிறோம். மத்திய சர்க்கார் என்ன காரணத்தாலோ தெரியவில்லை, விசாரணைக் கமிஷன் போடவில்லை.

இங்கே குறிப்பிட்ட விஷயத்தில் திரு. ஆலடி அருணா அவர்கள் ஒப்புக் கொண்டார்கள், ஆகவே, போட்டோம் என்று உத்தரவில் இல்லை. உத்தரவில் என்ன இருக்கிறது என்றால், ஒரு குறிப்பிட்ட அமைச்சர் தவறு செய்து இருக்கிறார், தவறு நடந்து இருக்கிறது அதை விசாரிக்க வேண்டுமென்ற அம்சம்தான் வந்து

இருக்கிறது. அந்த விசாரணை வருகிறபோது, அந்தக் குறிப்பிட்ட அமைச்சர் கண்டிப்பாக விசாரிக்கப்படுவார். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், எதிர்க் கட்சிகள் பூராவும், பல முறைகளில் சில குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டோம். அந்த விசாரணை வேண்டுமென்று கேட்டதில் முதல் வெற்றி கிடைத்து இருக்கிறது.

அப்படி விசாரணை நடந்துகொண்டிருக்கிறபோது, சம்பந்தப்பட்ட அமைச்சர் ராஜினமா செய்து இருந்தால் நன்ருக இருக்கும். இந்த அரசாங்கத்தின் கூட்டுப் பொறுப்பு என்ன என்பதும் விசாரணையில் தெளிவு படும். இந்த விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்று ஏதோ சாதாரணமாக ஆலடி அருணா கேட்டார். ஒப்புக்கொண்டார்கள் என்று சொல்வது சரியல்ல. நாங்களும் கேட்டோம் என்று சொன்னல், அது உங்களுக்கும் தெரியும்.

ஒரு புகார் சொல்கிறபோது, நேரடியாக நாம் அதைச் சொல்வது இல்லை. பொதுவாக, ''இடீஸ் அலீஜ்ட்'', ''இடீஸ் ஸ்டேடட்'' என்று தான் சொல்வது வழக்கம். இவர்தான் செய்தார், இப்படித்தான் நடந்தது என்று சொல்வது வேண்டுமானல், மேடைப் பேச்சுக்கு நன்ருக இருக்கும். ஆனல் எழுத்து மூலமாகச் சொல்கிறபோது, ரெப்ரசன்டேஷன் கொடுக்கிறபோது, அதற்கு உரிய முறை இருக்கிறது. அந்த முறையில் கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கிறபோது, ஒவ்வொன்றுக்கும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு கொடுக்கிறோம் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். எங்களுடைய கட்சிச் செயலாளர் அதில் கையெழுத்துப் போட்டு இருக்கிருர், நானும் கையெழுத்துப் போட்டு இருக்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட விஷயம் குறித்து விசாரணை வைக்க வேண்டுமென்று கேட்டோம். அது வைத்து விட்ட நிலையில் முதல் வெற்றி என்று சொன்னேம். இந்த விசாரணைக் கமிஷனைப் பொறுத்த வரையில் அது தொடர்ந்து நடக்கும் என்று உத்தரவாதம் கொடுத்தது நல்ல செய்திதான். விசாரணைக் கமிஷன் என்று வருகிறபோது, அதிலே சம்பந்தப்பட்டு இருக்கிற அமைச்சர் விசாரணைக். கமிஷன் முன் வரவேண்டும்.

கேரளத்தைப் பற்றிச் சொன்னர்கள், கேரளத்தில், டி. வி. தாமஸ், கோவிந்தன் நாயர் ஆகியோர் மீது விசாரணை வைத்தபோது, ஓய்வு பெற்ற உத்திரப் பிரதேச ஜட்ஜைப் போட்டார்கள். அந்த மாதிரி அனுபவம் அங்கே இருக்கிறது. இப்போது ஏதோ அந்த மாநிலத்தில் இருப்பவரைப் போட்டு இருக்கிருர்கள். அதற்கு ஏதோ காரணம் இருக்கிறது.

எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் இதை எப்படி அணுகிப் பார்க்கிறோம் என்ருல், இதில் முக்கியமாக இருக்கும் ஒரு அமைச்சர் இருப்பதால் அவர் கண்டிப்பாக விசாரிக்கப்பட



வேண்டும். அப்படி அவர் விசாரிக்கப்படுகிறபோது, அவர் என்ன சொல்கிருர் என்று பார்ப்போம். நாங்கள் அதில் தலையிடப் போகிறோம். எங்களுடைய ரிப்போர்ட்டும் இருக்கிறது. அவர் அதற்கு என்ன பதில் சொல்கிருர் என்று பார்ப்போம்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னர்கள், கேள்விப்படுகிறோம், கேள்விப்படுகிறோம் என்று பேசி நாங்கள் தப்பிக்க விரும்புகிறோம் என்று சொன்னர்கள். நாங்கள் தப்பிக்க விரும்பவில்லை. இந்த மாதம் 27-ம் தேதி மதுரையில் நானும் காளிமுத்துவும் பேச இருக்கிறோம். இதுவரையில் ஆயிரம் மேடைகளில் பேசியிருக்கிறோம்.

தமிழ்நாட்டின் அமைச்சர் ஒருவருக்கும், 'தமிழ் முரசு' பத்திரிகைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று பேசியிருக்கிறோம். வேண்டுமானல் விசாரணை நடத்துங்கள். நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறோம், நாங்கள் விசாரணையைச் சந்திக்கத் தயார். எங்கள் மேல் நடவடிக்கை எடுக்கத் தைரியம் இருக்கிறதா?

திரு. முனு ஆதி: எல்லாவற்றிற்கும் மற்ற மாநிலங்களை உதாரணம் காட்டுகிறீர்கள். இங்கே அமைக்கப்பட்டிருக்கும் விசாரணைக் கமிஷனுக்கு நியாயம் இருந்தால், நேர்மை இருந்தால், தைரியம் இருந்தால், சுப்ரீம் கோர்ட் நீதிபதியை அல்லது வேறு மாநில நீதிபதியை நியமனம் செய்யுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: அது மாதிரி அந்நிய செலாவணி விவகாரத்தில் நீங்கள் நடந்து கொள்ளுங்கள்.

(அ.தி.மு.க. உறுப்பினர்கள் பலர் எழுந்து நின்றனர்)

திரு. கா. காளிமுத்து: அந்நியச் செலாவணி விவகாரத்தில் தவறு இருந்தால், வழக்குப் போடட்டும்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பெ. சௌந்தரபாண்டியன் கவன ஈர்ப்புத் தீர்மானம்—41-வது விதியின்கீழ் முன்மொழிவார்கள்.

திரு. கோவை செழியன்: முதலமைச்சர் பேசியதற்குப் பதில் சொல்லவேண்டாமா? முதலமைச்சர் அவர்கள் அந்நியச் செலாவணி விவகாரம் என்ன என்பதை விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. பெ. சீனிவாசன் : அது என்ன ஆப்பிரகாம் லிங்கன் கதையா ?

(திரு. நா. வீராசாமி எழுந்தார்)

திரு. கோவை செழியன் : தங்கள் அனுமதியோடு நான் பேசுகிறேன். பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்நிய செலாவணி விவகாரம் பற்றிச் சொன்னார்கள். அதை ஏதோ கையில் துருப்பு சீட்டு வைத்திருப்பது போல் போட்டுக் கொண்டே இருக்கிறார். அது என்ன விவகாரம்? யாரோ சில பேர் ரிப்போர்ட் கொடுத்தார்கள். அந்த ரிப்போர்ட்டின் அடிப்படையில் விசாரணை நடக்கிறது விசாரணை இன்னும் முடியவில்லை. அது முடிந்து ஏதாவது அவருக்குத் தண்டனை கிடைத்ததா? நம்முடைய உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் கூட முன்பு தண்டனை கட்டினார்கள். அவரும், அவர் மனைவியும் ரூ. 10,000 கட்டினார்கள். அவர் அப்பீல் செய்தார். ஆனால் அந்த அப்பீலில் அவர் மீது தவறு இல்லை என்று வந்து விட்டது. மறுபடியும் அரசாங்கம் மேலே போகப்போகிறது.

அந்த விசாரணை நடைபெறுகின்றபொழுது, ''விசாரணை' என்று வருகிற காரணத்தினாலேயே எம். ஜி. ஆர். அவர்கள் குற்றம் செய்து விட்டார் என்று சொல்லுவது மிக, மிகத் தவறாகும். முதலமைச்சர் இப்படி சீப்பாக, சாதாரணமாகச் சொல்லக் கூடாது. பொறுப்போடு பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(கூச்சல்·குழப்பம்)

திரு. இராம அரங்கண்ணல்: என் மீது அந்நியச் செலாவணி மோசடி என்று அபாண்டமான முறையிலே ஒரு குற்றச்சாட்டு வந்தது. அதிலே எனக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. அதை எதிர்த்து நான் டிரிப்யூனலுக்கு—அரசாங்கமே நியமிக்கின்ற டிரிப்யூனலுக்கு—அப்பீல் செய்திருந்தேன். அந்த டிரிப்யூனல் நானும் எனது மனைவியும் நிரபராதி என்று தீர்ப்பளித்திருக்கிறது. மாண்புமிகு கோவை செழியன் அவர்கள் அரசாங்கமே அப்பீலில் போய் இருப்பதாக சொல்லுகிறார்கள். ஒருவேளை மத்திய அரசை அப்படிச் சொல்லித் தூண்டிவிடுகிறார்களோ என்னவோ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொறுப்புள்ள முதலமைச்சர் இப்படிப் பேசுவதா என்று சீனிவாசன் கேட்கிறார், கோவை செழியன் என்னைப் பார்த்துச், கேட்கிறார். சங்கடம் இல்லாமல் குற்றச் சாட்டுகளை சொன்னேன். உங்கள் தலைவரே, வந்து பதில் சொல்லட்டுமே ஏன் நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள்?



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் பேரவை விதி 41-ன் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மூவ் பண்ணத் தயாராக இல்லாததால் ''தமிழ்நாடு, 1972 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1972) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு'' என்ற சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கோருவார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு, 1972ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/72) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்............

திரு. க. உரொ. எட்மண்ட் : பாயின்ட் ஆப் ஆர்டர்' சௌந்தரபாண்டியனை கூப்பிட்டீர்கள் . ஆனால், கோவை செழியனை ஏன் கூப்பிடவில்லை.........

(பல உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் எழுந்து நின்று பேசினர்)

MR. DEPUTY SPEAKER : If the concerned member is not co-operating with the Chair what can I do except to pass on to the next subject? That is done under my inherent power.

(கூச்சல், குழப்பம்)

MR. DEPUTY SPEAKER: All hon. Members who are standing may please resume their seats. If it is not possible, all members who are standing may withdraw.

(கூச்சல், குழப்பம்)

MR. DEPUTY SPEAKER : If hon. Members are going to obstruct the proceedings, I have no other alternative except to remove you from this House. The Chair is on its legs. But Hon. Members are standing.

(கூச்சல்)

THIRU G. R. EDMUND : The Deputy Speaker has no right to act contrary to the Agenda.

MR. DEPUTY SPEAKER : You cannot question the right of the Deputy Speaker. Please sit down.

Mr. DEPUTY SPEAKER : I have passed on to the next subject. I have called upon the Hon. Minister for Industries. If hon. Members are not willing to co-operatethat is not proper.

திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது கூட காலம் கெட்டுவிடவில்லை. நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன், எங்களுடைய கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் கோவை செழியனும், சௌந்தரபாண்டியனும் கொடுத்திருக்கின்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டதற்குப் பிறகு மற்றவற்றை எடுத்துக் கொள்ளலாம். சபைக்கு இடையூறு பண்ண வேண்டும் என்று நாங்கள் நினைக்கவில்லை. சட்ட மன்ற நடவடிக்கைகள் அஜெண்டாவில் இருப்பது போல் நடத்தப்பட வேண்டும் என்றுதான் சொல்லுகிறோம். சௌந்தர பாண்டியனைக் கூப்பிட்டீர்கள் அவர் பேசவில்லை என்று வைத்துக் கொண்டாலும், கோவை செழியனைக் கூப்பிட்டீர்களா ?

THIRU K. T. K. TANGAMANI : Normally Mr. Deputy Speaker, Sir, in these things Rule 41 and Rule 42 notices get preference.

MR. DEPUTY SPEAKER : I have given prefernce to Rule 41 notice. But if the Member who has given notice of that motion is not willing to co-operate, how am I to proceed?

THIRU G. R. EDMUND : Why have you not called Mr. Kovai Chezhian who has also given a call-attention notice?

MR. DEPUTY SPEAKER : I have called Thiru P. Soundarapandian. But he has not come forward.

(கூச்சல், குழப்பம்)

MR. DEPUTY SPEAKER : Hon. Members should not lose tempers. எல்லோரும் உட்காருங்கள், எல்லோரையும் சேர்த்து தான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ரூல் 41 அறிவிக்கையை பேரவைத் துணைத் தலைவர் திரு. சௌந்தரபாண்டியனைப் படிக்கச் சொல்லி அழைத்தபோது அவர் படிக்க முடியாத அளவிற்கு அவரது கட்சித் தோழர்கள் 5, 6 பேர் பேசிக்கொண்டிருந்தனர். இப்படி எல்லோரும் ஒரே சமயத்தில் பேசிய காரணத்தினால்தான் ரூல் 41-ன் கீழான கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவரமுடியவில்லை. அதனால்தான் அடுத்த நிகழ்ச்சிக்குப் போக வேண்டியிருந்தது. எனவே, மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ரூல் 41-ன் கீழ் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களை அவருடைய கவன ஈர்ப்பு தீர்மானத்தை இப்பொழுது மூவ் பண்ணச் சொல்லலாம்.



## 5. கவன ஈர்ப்பு.

### (அ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலத்திலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் காலரா நோய் பரவியுள்ளது குறித்து

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம், சேந்தமங்கலத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காலரா நோய் பரவியுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தண்ட கவுண்டனூர், அக்கியம்பட்டி ஆகிய இரு கிராமங்களில் கடுமையான குடல் அழற்சி நோய் (Acute Gastro Enteritis) ஏற்பட்டுள்ளது என்ற தகவல் அறிந்த வுடன், நோய் பரவாமலிருக்க சுகாதாரப் பணியாளர்களால் தேவையான தடுப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள பட்டன.

தண்ட கவுண்டனூர் கிராமத்தில், 20—1—1975-ம் நாள் ஒருவருக்குக் கடுமையான குடல் அழற்சி நோய் காணப்பட்டு, பேலுகுறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை அளிக்கப் பட்டார். அக்கியம்பட்டி கிராமத்தில், 12—3—1975 ஆம் நாள் ஒருவருக்குக் கடுமையான குடல் அழற்சி நோய் கண்டது. அந்நபர் சேந்தமங்கலம் அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார்.

சுகாதாரப் பணியாளர்கள் அவ்விரு கிராம மக்களுக்கும் காலராத் தடுப்பு ஊசிகள் போட்டனர் ; மற்றும் கிணறுகளில் மருந்துகள் கலக்கப்பட்டன. நோய் கண்ட நபர்களின் வீடுகளிலும் கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டன. அதன் பிறகு அவ்விரு கிராமங்களிலும் யாருக்கும் இந்நோய் பரவவில்லை.

(முற்பகல் 11-00)

### (ஆ) சென்னை பெரிய மருத்துவமனையில் இருதய நோயாளிகள் வார்டில் உள்ள கருவிகள் பழுதடைந்திருப்பதும் நோயாளிகள் பாதிப்பும்

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, சென்னை பெரிய மருத்துவமனையில் உள்ள இருதய நோயாளிகள் வார்டில் (கார்டியுலாஜி டிபார்ட்மென்ட்) உள்ள இயந்திரங்கள் ஆறும் பழுதடைந்து இருப்பதால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கருவிகள் என்று அறிக்கையில் குறிப்பிட்டது மானீட்டர் என்ற கருவியாகும் என்று நம்பப்படுகிறது. சென்னை பெரிய மருத்துவமனையிலுள்ள இருதய நோயாளிகளின் வார்டில் (கார்டியாலஜி டிபார்ட்மெண்ட்) ஆறு மானீட்டர்கள் இருக்கின்றன. அவைகளில் மூன்று மானீட்டர்கள் நன்கு வேலை செய்கின்றன. மீதமுள்ள மூன்றும் சில சிறிய டெக்னிகல் கோளாறுகளின் காரணமாக இயங்கவில்லை. ஒன்றில் வரைபடம் (கிராஃப்) சரியாகக் காட்டுவதில்லை. மீதி இரண்டிலும் சில சிறிய இயந்திரக் கோளாறுகள் இருக்கின்றன. எலக்ட்ரோ மெடிகல் செல்லைக் கேட்டதில் அவர்கள் பழுதுபார்க்க இயலாமையைத் தெரிவித்துள்ளார்கள். மேற்படி கருவிகளைச் செய்த கம்பெனியைத் பழுதுபார்க்கும்படி கோரப்பட்டது. அதற்கான ஒப்புதல் புள்ளிப் பட்டியலும் கிடைக்கப் பெற்றன. சப்ளை செய்த கம்பெனியை மேற்படி கருவிகளைப் பழுது பார்க்கும்படி கோரப் பட்டிருக்கிறது. ஆறு கருவிகளில் மூன்று பழுதடைந்திருக்கிற போதிலும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் கார்டியாலஜி டிபார்ட்மெண்டில் எவ்வித இடையூறும் இல்லை.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, கார்டியாலஜி டிபார்ட்மெண்டில் 1972-ல் ஒரு அப்பெரட்டஸ் வாங்கப்பட்டது. அதன் விலை ஒரு லட்சம் ரூபாயாகும். அதன் பெயர் அஸ்ட்ரல். அந்த நிறுவனம் தொடங்கி 6 மாத காலம்தான் அது வேலை செய்தது. இன்று வரையிலும் அந்த ஒரு லட்ச ரூபாய் மெஷின் வேலை செய்யவில்லை. இரண்டாவது, கார்டியாலஜி மானீட்டர்களில் 4 மெஷின்கள் வேலை செய்யவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் கேம்பிரிட்ஜ் என்ற மெஷின் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் சிறந்தது டோஷ்னிவால் என்ற மெஷின் தான். டோஷ்னிவால் மிஷின் 30,000 ரூபாய்க்குக் கிடைத்தும் கூட டாக்டர் ஏ. எல். அண்ணாமலை அவர்கள் அதிக விலை கொடுத்து கேம்பிரிட்ஜ் மிஷினை வாங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதையெல்லாம் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தக் கூடாது. மெஷின் வாங்குவதற்குக் கமிட்டி இருக்கிறது. அப்போது சூப்பரின்டென்டெண்ட் வேறு யாரோ இருந்தார்கள். டீன் வேறு யாரோ இருந்தார்கள். ஆகவே, இதையெல்லாம் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தக் கூடாது. மெஷின்களை இயங்க வைக்க இங்கேயிருக்கிற நிபுணர்களுக்குத் திறமையில்லை. அவர்கள் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வேண்டுமென்கிறார்கள். அதற்கு அரசாங்கத்திடம் தொகை வாங்க நேரமாகிறது. ஆகவே காலதாமதம் ஆகிறது.

திரு. கோவை செழியன் : இயந்திரம் வேலை செய்யாததால் நோயாளிகள் கஷ்டப் படுகிறார்கள். அதைத்தான் சொன்னேனே தவிர நான் அமைச்சர்களைக் குறைவாகச் சொல்லவில்லை. இதுவே கொட்டேஷன் வாங்கவில்லை.



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏதோ ஒரு பொருளுக்கு கொட்டேஷன் இல்லை என்று குறிப்பிடுகிறார்கள். இயந்திரங்களில் ஒரே டைப் இருக்க முடியாது. அதில் 3 ரீடிங் 4 ரீடிங் என்று இருக்கிறது. இப்போதுகூட எக்சிபிஷனில் பார்த்தேன் 7 வகையான கருவிகள் இருக்கின்றன. ஆகவே, அதில் ஏதேனும் தவறுகள் இருந்தால் விசாரிக்கலாம். நல்ல முறையில் வாங்குவதுகூட பழுது ஆகிவிடுகிறது.

## (6) அரசினர் சட்டமுன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/72) கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்தவாறு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/72) கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்'' என்று முன் மொழிகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, இந்த மசோதா சொசைட்டிகளெல்லாம் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும் என்பது. கோவாப்பரேடிவ் சொசைட்டி என்று சொன்னால் அதில் ஒவ்வொரு மெம்பருக்கும் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. இங்கே கட்டாயமாக சில சொசைட்டிகளில் எஜுகேஷன், சையன்ஸ், ரிலிஜன், சாரிட்டி, இந்த மாதிரி இருக்கக் கூடிய சொசைட்டிகள் கட்டாயமாகச் செய்யப்படும். அவர்கள் இவைகள் அபிவிருத்தி செய்யக் கூடிய வகையில் இருப்பதுதான் நோக்கமாக இருந்தால் ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். அல்லது அந்த வருமானத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால் அல்லது ஒரு சந்தர்ப்பமாகப் பணம் வரக்கூடியதாக இருந்தால் அதைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்ற முறையில் இருக்கிறது. 'இங்கே பக்கம் 58-ல் கிளாஸ் 3-ல் கமிட்டியில் விவாதிக்கும் போது, ரிலிஜன், சாரிட்டி, சோஷல் ரிபாஃம், ரெக்ரியேஷன் எக்ஸ்க்ளுடிங் ஸ்போர்ட்ஸ் அண்டு இன்டோர் கேம்ஸ்' என்று செலக்ட் கமிட்டியில் போட்டிருக்கிறது. ஆனால் இங்கே அந்தமாதிரி திருத்தம் கொண்டுவரவில்லை. ஆகவே, இது

* 18—12—1974ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. என். கே. பழனிசாமி] [1975 ஏப்ரல் 15

எந்த அடிப்படையில்—ஒரு சொசைட்டியில் 4 கலைஞர்கள் சேர்ந்திருந்தால் மட்டும் கலை எப்படி அபிவிருத்தி ஆகும்? அதே மாதிரி லிட்டரேச்சரை எடுத்துக் கொண்டாலும் சரி இது அபிவிருத்தி என்று சொல்லக் கூடிய காலத்தில்

(திரு. கு. காமாட்சி தலைமை.)

அதற்கு ஒரு இன்சென்டிவ் இல்லாமல் இருக்கிறது. இப்போது ஹைதராபாத் சாகித்திய அகாடமி இருக்கிறது. அதில் முதல் பரிசு பெற்றவர்களுக்கு லட்சம் ரூபாய் வரையிலும் கொடுக்கிறார்கள். ஆகவே இங்கேயும் இன்சென்டிவ் கொடுத்து மேலும் அபிவிருத்தி. செய்யக் கூடிய வகையில் அந்தந்த சொசைட்டிக்குத் தகுந்தவாறு பிரைஸ் அல்லது அவார்டு மாதிரி இருந்தால்தான் அது அபிவிருத்தியாகும்.

ஆகவே இந்த முறையில் எந்தெந்த சொசைடியில் எவ்வளவு பணமிருக்கிறதோ அதற்கு வருஷம் ஒன்றுக்கு இவ்வளவு பிரைஸ் என்று ஃபிக்ஸ் பண்ணுவதன் மூலம்தான் அபிவிருத்தி செய்யமுடியும். வருமானம் இல்லாமல் அபிவிருத்தி செய்ய முடியாது.

இன்னும் பல சொசைட்டிகளில் பெயரை வைத்துக் கொண்டு அங்கே கேம்ப்ளிங் நடக்கிறது. ஆகவே, கோவாப்ப ரேடிவ் சொசைட்டி என்றால் வருமானம் இருக்க வேண்டும். நான் என்ன சொல்கிறேன் என்றால் 1,500 ரூபாய் வருமானம் இருந்தால் கம்பல்சரியாக ரிஜிஸ்டிரேஷன் பண்ண வேண்டும். இன்னும் சர்க்காருக்கும் ஜனங்களுக்கும் தொடர்பில்லாமல் இருக்கிறது.

அதுமட்டுமல்ல. 20 மெம்பர்கள் இருந்தால் சொசைட்டி என்று இருக்கிறது. 18 மெம்பர்கள் என்று அவர்கள் இருப்பார்கள். அல்லது 19 மெம்பராகக் காண்பிப்பார்கள். ஆகவே, அம்மாதிரியான முறையிலே, 10 மெம்பர் ஒரு சொசைட்டியிலே இருந்தாலே, அவர்களைப் பதிவு செய்யவேண்டுமென்று இருக்கவேண்டும்.

இன்னும் பல சொஸைட்டிகள், கோவாப்பரேடிவ் என்ற பெயரிலும், லான்ட் டெவலப்மென்ட் என்ற பெயரிலும், ரிசர்வ் பாங்க் என்ற பெயரிலும், யூனியன், ஸ்டேட் என்று இந்த மாதிரிப் பெயர்கள் வைத்துக் கொண்டு, பல புதிதாக பதிவு செய்யக் கூடிய சொஸைட்டிகளுக்கு அவர்களுடைய பெயர்கள் இருக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறது. ஆனால், அதே சமயத்திலே, ஏற்கெனவே இந்த மாதிரிப் பெயரிலே இருக்கக் கூடியவைகளைப் பொறுத்து சர்க்கார் என்ன சொல்லப் போகிறது? பழைய காலத்திலே இருந்து இருக்கக் கூடியவர்கள், இந்த மாதிரிப் பெயரிலே இருக்கலாம்; ஆனால், புதிதாகப்



1975 ஏப்ரல் 15] [திரு. என். கே. பழனிசாமி]

பதிவு செய்யக் கூடிய சொஸைட்டியை கோவாப்பரேட்டிவ் என்ற பெயரிலும், ரிசர்வ் பாங்க் என்ற பெயரிலும் இருக்கக் கூடாதென்று இருப்பது கன்ஃப்யூஷனாக இருக்கிறது. ஆகவே, அந்த முறையிலே, இந்த மாதிரி பெயர் பழைய சொஸைட்டியாக இருந்தாலும், புதிய சொஸைட்டியாக இருந்தாலும், இருக்கக் கூடாது என்ற முறையிலேதான் இதைத் திருத்த வேண்டும்.

இப்பொழுது, சொஸைட்டியை ரிஜிஸ்தர் பண்ணக் கூடிய சமயத்தில், அதனுடைய பெயர், விலாசம் போன்றவைகள் அதிலே இருக்க வேண்டும். அது சரியாக இருந்தால் பதிவு செய்யப்பட வேண்டுமென்று இருக்கிறது. அதுமட்டும் போதாது. அவர்களுடைய சிக்னேச்சர் வேண்டும். ஏனென்றால், ஒருவரே பல பெயர்களைப் போட்டு, விலாசம் போட்டு, ரிஜிஸ்திராருக்கு அனுப்பச் சொல்லலாம். ஆகவே, அந்த மாதிரி இல்லாமல் அவர்களுடைய சிக்னேச்சர்ஸ் அதிலே இருக்கவேண்டுமென்று இருக்கவேண்டும்.

அடுத்து, இந்த மாதிரி ரிஜிஸ்தர் பண்ணவேண்டுமென்றால் ஒரு அப்ளிகேஷன் போட்டால் 60 நாட்களுக்குள் அந்த சொஸைட்டி பதிவு செய்யப்பட்டிருக்கிறதா அல்லது பதிவு செய்யப்பட வில்லையா, பதிவு செய்யப்படவில்லையென்றால், அதற்கு என்ன காரணம் என்பதைத் தெரியப்படுத்தவேண்டும். இல்லா விட்டால், ரிஜிஸ்திரார் பார்த்து, கெப்ட் இன் அபெயன்ஸ் என்று வைத்துவிடலாம். ஆகவே, ரிஜிஸ்தர் செய்யப்பட்டால், ரிஜிஸ்தர் செய்யப்படுகிறதென்றும் ரிஜிஸ்தர் செய்யப்படவில்லை யென்றால், ரிஜிஸ்தர் செய்யப்படவில்லையென்றும், அதற்குக் காரணம் என்னவென்பதையும் தெரிவித்து, 60 நாட்களுக்குள் அனுப்பக் கூடிய முறையிலே இருக்கவேணடும்.

வருஷம் ஒரு தரம் ஜெனரல் பாடி கூட்ட வேண்டு மென்றிருக்கிறது. அடுத்து, கவர்ன் பண்ணுவதற்கு 3 பேருக்கு மேல் போடக் கூடாது என்று இருக்கிறது. அப்படியானால், வருஷத்திற்கு ஒரு தடவைதான் ஜெனரல் பாடி மீட்டிங். வருஷம் பூராவும் நடக்கக் கூடிய விஷயங்களை 3 பேர்தான் கவனிக்க வேண்டும். அந்த 3 பேர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் ஒரு தரம் மட்டும் கூட்டம் இருப்பதாலே, அந்த மெம்பர்களுக்கும் சொஸைட்டிக்கும் சம்பந்தமே இல்லை. ஆகவே, மெம்பர்கள் சம்பந்தப்படுகிற முறையிலே இருக்க வேண்டும்.

அது மட்டுமல்ல. சில பேர் சொஸைட்டி சரியாக நடக்க வில்லையென்று, ஜெனரல் பாடி மீட்டிங்கைக் கூட்ட வேண்டு மென்று புகார்களை ரிஜிஸ்திராரிடம் கொடுத்தால், குறிப்பிட்ட நாட்களுக்குள் கூட்ட வேண்டும், இல்லாவிட்டால் யார் புகார்

செய்தார்களோ அவர்களே கூட்டலாம் என்றிருக்கிறது. சட்டத்திலே சரியாகத்தானிருக்கிறது. ஆனால் நடைமுறையில் எந்த மாதிரி இருக்கிறது? மினிட் புக் எங்கே இருக்கிறது? யாராவது ஒரு ஆஃபிஸரை அனுப்புகிறார்களே, அந்த ஆஃபீஸர் ஒரு குறிப்பிட்ட தினத்தில் அந்தக் கூட்டத்தைக் கூட்டி, நடத்தக்கூடிய முறையிலே இருக்கவேண்டும்.

அது மட்டுமல்ல, இன்னொன்று. செலக்ட் கமிட்டி விவாதத்தின்பொழுது வந்தது. யாராவது ஒரு மெம்பர் இறந்து விட்டால், அவர்களுக்கு டிவிடெண்ட் கொடுக்கக்கூடிய முறையிலே திருத்தவேண்டுமென்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே பில்லிலே கொடுக்கக் கூடாது என்றிருக்கிறது. ஆகவே, இது ஏன் என்பதைக் கனம் அமைச்சர்கள் பதில் சொல்கிற சமயத்திலே சொல்லவேண்டுமென்று கேட்டு, இந்த மசோதாவைச் சரியான முறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் நீண்ட காலத்திற்குப் பிறகு, ஏறத்தாழ 3 ஆண்டுகாலத்திற்குப் பிறகு, 1972-ம் ஆண்டிலே உருவாக்கப்பட்ட இந்த மசோதா, 3 ஆண்டு காலத்திற்குப் பிறகு பொறுக்குக் குழுவுக்கு விடப்பட்டு மிகக் கால தாமதமாக இந்த அவையினுடைய பரிசீலனைக்கு மீண்டும் வந்திருக்கிறது.

இந்த மசோதவைப் பொறுத்தவரையிலே, பொறுக்குக் குழுவாலே, திருத்தப்பட்ட மசோதாவைப் பொறுத்த வரையிலே என்னுடைய சில கருத்துக்களை நான் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

இந்த மசோதவைப் பொறுத்து, ஏற்கெனவே மத்திய அரசாங்கத்திலே உருவாகிக் கொண்டிருக்கிற ஒரு மசோதாவுக்கும் இதற்கும் தொடர்பு இருக்கிறதா இல்லையா என்கிற ஆராய்ச்சியிலே நாம் ஈடுபடுவோமேயானால், இதிலே பல விஷயங்கள் நமக்கு வெளியே வரும். அதை எதற்குச் சொல்கிறேனென்றால், மத்திய அரசாங்கத்திலே ஒரு சட்டத்தைத் தீட்டிவிட்டால், அதற்கு மாறாக, மாகாண அரசாங்கச் சட்டம் இருக்கக் கூடாது (Ultra Vires of the Central Act) அதை எதிர்த்துச் சொல்ல வழி இருக்கக் கூடாது.

ஆனால், இந்தத் திருத்த மசோதாவைப் பொறுத்த வரையிலும் மிகத் தெளிவாக பொறுக்குக் குழுவிலே அங்கே இருக்கிற உறுப்பினர்கள் அவர்கள் கேட்டார்கள். இந்த அறிக்கையிலே 43-வது பக்கத்திலே மிகத் தெளிவாக அது குறிப்பிடப்பட்டிருக்கிறது.



A member suggested that the consideration of the Bill be postponed to a later date inasmuch as the report of the Central Government on the provisions of the Companies Act desired by him at the last meeting is yet to be supplied to members.

என்று மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டும்கூட, அந்த மசோதாவினுடைய குறிப்புகள் நம்முடைய பொறுக்குக் குழுவு உறுப்பினர்களுக்குத் தரப்படவில்லை. அதை மதிப்பிற்குரிய அனந்தநாயகி அவர்கள் கூட ஒத்துக் கொள்வார் என்றே கருதுகிறேன். ஒரு மசோதா ஆராயப்படும் நேரத்திலே, அதிலே சில ஷரத்துக்கள் மத்திய சட்டத்திற்கு விரோதமாக இருக்கக்கூடிய நிலைமையை உருவாக்கக் கூடாது. எந்த மசோதாவாக இருந்தாலும், அது மத்திய அரசாங்க மசோதாவோடு—சட்டத்தோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அதை ஒட்டியிருக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்த மசோதாவில் பல குறைபாடுகளை நான் காண்கிறேன். உதாரணத்திற்காக, இங்கே எந்த எந்த விஷயங்களுக்கு இந்த மசோதா கொண்டு வரலாம், எந்தெந்த பொருள்கள்பற்றி இந்த மசோதாவில் கொண்டு வரலாம் என்று செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டிலே 11-வது பக்கத்திலே போடப்பட்டிருக்கிறது.

......Promotion of education, literature, science, religion, charity, social reform, art, crafts, cottage industries, atheletic, sports including indoor games, என்றெல்லாம் போடப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே போட்டும் கூட

it is not a comprehensive legislation

சரியான வகையிலே பல்வேறு விஷயங்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எப்படிப் போட முடியவில்லையென்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு, ஒரு மசோதா பொறுக்குக் குழுவுக்கு வந்த பிறகு இங்கே வருகிறது என்றால், அதில் இப்படி இருக்கிறது என்றால் அதற்காகப் பொறுக்குக்குழு உறுப்பினர்களை நான் குற்றம் சொல்லவில்லை. காரணம் அவர்கள் முயற்சித்தார்கள். எவ்வளவு தகவல்கள் சேகரிக்க வேண்டுமோ அவ்வளவு சேகரிக்க முயற்சித்தார்கள். அவர்களுக்குத் தரப்படவில்லை.

உதாரணமாக, ஒரு குறைபாட்டை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பள்ளிப்பட்டியில் நகரமக்கள் குடிநீர் வழங்கு சொஸைடி என்று ஒரு சொஸைடி 1969-ம் ஆண்டிலேயே ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு குழாய் இணைப்புக் கொடுக்க இரண்டாயிரம் ரூபாய் கேட்கிறார்கள்.

[டாக்டர். எச். வி. ஹாண்டே] [1975 ஏப்ரல் 15

இதனால் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு எப்படி முறையாக இணைப்புக் கிடைக்கும்? இதை அதிகாரபூர்வமாக அரசாங்கத்தின் மேற்பார்வையிலேயே அவர்கள் செய்கிறார்கள். அங்கே ஒரு பயங்கரமான நிலைமை இருக்கிறது. தன்னிச்சையாக நடந்து கொள்ளக் கூடிய ஒரு நிலைமை அங்கேயிருக்கிறது. அது போன்ற சொஸைடிகளையும் கூட கட்டுப்படுத்தக்கூடிய அளவில் இது ஒரு காம்பிரிஹென்சிவ் பில்லாக வந்திருக்கிறதா என்றால் இல்லை. பள்ளிப்பட்டி சொஸைடியிலே பல தவறுகள் நடந்து வருகின்றன. அதைப் பற்றி இங்கே பேசுவது பொருத்தமாக இருக்காது. ஆனால் அதுபோன்ற சொஸைடிகளையும் கூடக் கட்டுப்படுத்தக்கூடிய அளவிலே காம்ப்ரிஹென்சிவ் பில்லாக இது வரவில்லை. அதைச் செய்ய அரசாங்கம் தவறியிருக்கிறது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு குற்றச்சாட்டு. கோவாப்ரேடிவ் சொஸைடி ஆக்ட் என்று நம் மாநில சட்டம் அரசாங்க ஸ்டாச்சூட் புக்கில் இருக்கிறது. அந்த சட்டத்திற்கும் இந்த மசோதாவிற்குமே பல முரண்பாடுகள் இருக்கின்றன. இதற்கு அரசாங்கத் தரப்பில் வாதாடக்கூடிய நேரத்திலேயே அதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். செலக்ட் கமிட்டியில் நல்லதொரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். 'இந்த மசோதா மாநிலம் முழுவதும் ஒரே நேரத்தில் வரவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதற்கு அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட மறுப்பு—கோவாப்ரேடிவ் சொஸைடி ஆக்டில் ஜூன்-ஜூலை மாதத்தில் தேர்தல் வருகிறது. இதன்படி மார்ச் மாதத்தில் வரும். இப்படி இதற்கும்—அதற்கும் முரண்பாடு வரக் கூடிய நிலையை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திரு. மாதவன் அவர்கள் இதற்குத் தலைவராக இருந்தார். அவருக்கு இந்த நுணுக்கம் எல்லாம் தெரிந்திருக்கும். ஏற்கெனவே ஒரு சட்டம் இருக்கிறது என்றால் அதற்கு விரோதமாக இன்னொரு சட்டத்தைப் போட முடியாது. நம் மாநிலத்திலேயே ஏற்கனவே இருக்கக் கூடிய ஒரு சட்டத்திற்கு கவுண்டராக—விரோதமாக இந்தச் சட்டம் அமைகிறது. இதன் காரணமாக நிர்மாணச் சட்டப்படி அந்தச் சட்டத்தை ரிப்பீல் செய்ய வேண்டும். இதன் காரணமாக அந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தாக வேண்டிய நிலைமை இருக்கிறது.

பொறுக்குக் குழுவில் சொல்லப்பட்ட யோசனைகளைக் கூட இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். 58ஆம் பக்கத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.



1975 ஏப்ரல் 15] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

After some discussion, the Committee decided to amend the sub-clause as follows :—

"(1) Subject to the provisions of sub-section (2) any society which has for its object the promotion of education, literature, science, religion, charity, social reform, art, crafts, cottage industries, ............

என்று போட்டு அண்டர் லைன் போட்டிருக்கிறார்கள்—மிகத் தெளிவாக........recreation excluding sports and indoor games....

என்று போட்டிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் இன்னொரு உறுப்பினர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். ப்ளேயிங் கார்ட்ஸ்—ரம்மி அல்லது ப்ரிட்ஜ் இன்டோர் கேம்ஸ் ஆகத்தான் வரும். சூதாட்டமாக கருத முடியாது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அவர் சொல்கிறார்—

"He also referred to a decision of the Supreme Court where 'rummy' or 'bridge' was held to be not a game of chance but skill. He, therefore suggested that 'sports and indoor games' be specifically excluded from 'recreation' so as to make the meaning quite clear in case the word 'recreation' should be retained."

என்று வாதாடி அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு—இது ஒரு மாற்றி அமைக்கப்பட்ட ஷரத்தாகும். பொறுக்குக் குழுவில் ஒப்புக் கொண்ட ஷரத்தாகும். ஆனால் நிலைமை என்ன?

Finally as it is presented before the Assembly

11-வது பக்கத்தில் கீழ்கண்டவாறு மசோதாவில் போடப்பட்டிருக்கிறது—

"........atheletics, sports (including indoor games), recreation, public health............"

The cavalier manner in which the opinion of the members of the Select Committee have been treated by the Government.

அரசாங்கம் எந்த அளவிற்கு அலட்சியப்படுத்தியிருக்கிறதென்பதைத் திட்டவட்டமாக இந்த உதாரணத்தின் மூலம் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இன்வெஸ்ட்மென்ட் ஆப் ஃபண்ட்ஸ்—என்கிற
க்ளாஸ் 24-ஐ எடுத்துக் கொண்டால் இப்படித்தான் இன்
வெஸ்ட் செய்ய வேண்டும் என்று போடப்பட்டிருக்கிறது.
அதாவது

"24 Investment of funds—A registered society may, to such extent and under such conditions as may be permitted by its by-laws from time to time, invest or deposit any portion of its funds not immediately required,—

(1) ..........

(2) ............

(3) in the Post-Office Savings Bank Account; or

(4) in a special account opened by the registered society for the purpose in a—

(a) corresponding new bank as defined in the Banking Companies (Acquisition and Transfer of Undertakings) Act, 1970 (Central Act 5 of 1970); or...........

என்று 66-வது பக்கத்தில்—பொறுக்குக் குழுவினர் என்ன
யோசனை இதுபற்றிச் சொன்னார்கள் என்று இருக்கிறது.

"This clause deals with investment of funds of society. We want full discretion in the matter of investment of funds,"

அந்த அடிப்படையில் இந்த மசோதாவின் கீழ் வரக்கூடிய
சொஸைடிகளுக்குத் தங்களிடம் உள்ள பணத்தை எந்த முறையில்
இன்வெஸ்ட் செய்யவேண்டும் என்பதற்கு ஃபுல் டிஸ்க்ரீஷன்
கொடுக்கவில்லை. தங்களுக்கு லாபம் வரக்கூடிய அளவில்
பயன் தரக்கூடிய அளவில் அவர்கள் இன்வெஸ்ட் செய்து கொள்
வதற்கு இந்த மசோதாவில் வாய்ப்புத் தரவில்லை என்பதுதான்
என்னுடைய குற்றச்சாட்டு.

66-வது பக்கத்தில் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை எடுத்துப்
படிக்கிறேன்.

"The places that are mentioned in the Bill where deposits could be made give very low rate of interest. We must have the discretion to invest the funds in Nationalised Banks, in Debentures and in Preference Shares......"

என்பதற்க ப்ரிபரன்ஸ் ஷேர் வாங்க வாய்ப்புத் தரவேண்டும்
என்று சொல்லியிருக்கிறார்கள். நியாயமான வகையில் 16 சத
விகிதம் 14, 13 சதவிகிதம் வட்டி வரக்கூடிய நிலைமையில்
இன்வெஸ்ட் பண்ண வாய்ப்பு தரவில்லை.





சாதாரணமாக, செலக்ட் கமிட்டிக்குப் போய் வந்த
மசோதாவில் பேசுவது கிடையாது. அதுவும் இது
மூன்றாண்டுகளாக தாமதப்பட்டு வந்திருக்கிற ஒன்று. அப்படி
வருகிற நேரத்தில் கூட செலக்ட் கமிட்டி உறுப்பினர்கள் மன
வேதனை அடையக்கூடிய வகையில் இதைக் கொண்டு வந்திருப்
பதற்கு அரசாங்கம்தான் பொறுப்பு. அதன் காரணமாகத்தான்
திரு. பழனிசாமி போன்றவர்கள் சில திருத்தங்களைக் கொடுக்க
வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சாதாரணமாக செலக்ட்
கமிட்டியில் இருந்துவருகிற மசோதாக்களுக்குத் திருத்தம் கொடுப்
பதில்லை.

ஆனால், இந்த மசோதாவைப் பொறுத்த வரையில்—
சென்ட்ரல் ஆக்டுக்கு முரண்பட்டதாக இல்லாமல் இருக்கிறதா
என்பதைப் பார்க்க உறுப்பினர்களுக்கு சென்டிரல் ஆக்ட் சம்
பந்தமான விவரங்கள் தரப்படவில்லை. இது ஒரு காம்ப்ரெ
ஹென்சிவ் ஆக்டாகவும் அமையவில்லை. நமது மாநில கோவாப்
ரேடிவ் சொஸைடிஸ் ஆக்டுக்கு முரண்பாடானதாகவும் இருக்
கிறது. இன்வெஸ்ட்மென்ட் ஆப் ஃபண்ட்ஸ் சம்பந்தமாக
சொஸைடிகளுக்கு டிஸ்க்ரிஷன் கொடுக்கப்படவில்லை. இப்போது
அவர்கள் என்ன செய்வார்களோ தெரியாது. Already it is too late.
ஏற்கனவே 3 ஆண்டுகள் ஆகிவிட்டபடியால் திரும்ப செலக்ட்
கமிட்டிக்கு அனுப்புவது சரியாக இருக்காது. ஆகவே,
அமைச்சர் அவர்கள் சட்ட அமைச்சரோடு கலந்து, அதிகாரி
களுடன் கலந்து—சூவோ மோட்டோவாக—சில நல்ல பல
திருத்தங்களை நாங்கள் எடுத்துக் கூறியுள்ள அடிப்படையில்—
இப்போதே அரசாங்கத்தின் சார்பில் கொண்டுவந்தால் இந்த
மசோதா ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு மசோதாவாக இருக்கும்
என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, இந்த
மசோதாவில் பொறுக்குக் கமிட்டியில் நான் அங்கத்தினராக
இருந்தேன். அந்தக் கமிட்டியின் பல கூட்டங்கள் வேறு வேலை
களோடு மோத ஆரம்பித்த காரணத்தினாலே நான் பல கூட்டங்
களிலே கலந்துகொள்ள முடியவில்லை. என் மனத்திலே தோன்று
கிற சில கருத்துக்களை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்
கொண்டுவருகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள்
சொன்னதுமாதிரி இதிலே சில முரண்பாடுகள் இருப்பதைப்
பார்க்கிறோம். கிளாஸ் 3-இல் எந்த எந்த சொஸைட்டிகளை ரிஜிஸ்
டர் செய்ய வேண்டுமென்று ஒரளவிற்கு தெரிவித்திருக்கிறார்கள்.

Societies which have as their object the promotion of religion, charity, social reform, art, crafts, cottage industries, athletics, sports including indoor games, recreation, public health, social services, cultural activities

என்று எல்லாவற்றையும் போட்டிருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்திலே சில சொஸைடிகளுக்கு கம்பல்சரி ரிஜிஸ்டிரேஷன் வேண்டாம், ஆப்ஷனல் ரிஜிஸ்டிரேஷன் இருக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் அங்கே போய் ....

Any society which has for its object (*a*) promotion of religion, athelelics or sports (including indoor games), or (*b*) any other object mention- of in or prescribed under Section 3 and to which society the provisions Section 4 are not applicable. என்று போட்டிருக்கிறார்கள். கம்பல்சரி ரிஜிஸ்டிரேஷன் என்று கிளாஸ் 4-இல் சொல்லியிருக்கிறார்கள். 20 அங்கத்தினர்களுக்கு மேலாக அல்லது ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் வருமானத்திற்கு மேலே இருந்தால் செய்யலாம் என்று போட்டிருக்கிறார்கள். 3-வது கிளாசில் எல்லா சொஸைடிகளும் ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். நான்காவது கிளாசில் கம்பல்சரி ரிஜிஸ்ட்ரேஷன் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள், பிறகு ஆப்ஷனல் ரிஜிஸ்ட்ரேஷன் என்று சொல்லி அதிலே 'இன்டோர் கேம்ஸ்' என்பதையும் சேர்த்திருக்கிறார்கள். 4-வது கிளாசிலே வரும்போது அதே சொஸைடி 20 அங்கத்தினர்களுக்கு மேலே இருந்தால் அல்லது 10 ஆயிரம் ரூபாய்க்கு மேலே ஆண்டு வருமானம் இருந்தால் கட்டாயம் ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டு பிறகு ஆப்ஷனல் என்று சொல்வதிலேயும் சேர்த்துவிட்டால் ஏதோ வலது கரத்தினாலே கொடுத்ததை இடது கரத்தாலே எடுத்துக் கொள்வதைப்போல் இருக்கிறது. இதைப்பற்றி அரசு திட்டவட்டமான முடிவு எடுக்கவேண்டும்.

எதற்காக இவ்வளவு பெரிய ஆக்டை கொண்டுவந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஒருவேளை எந்த சொஸைடியாக இருந்தாலும் ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்று சொல்லி லைசென்ஸ் பீஸ் 50 ரூபாய் வீதம் வாங்கவேண்டுமென்று நினைத்துச் செய்திருக்கிறார்களா அல்லது ஆகாத மன்றங்களையெல்லாம் உள்ளே புகுந்து கலைக்கவேண்டுமென்ற முறையிலே நினைக்கிறார்களா என்பது தெரியவில்லை. அரசினுடைய கருத்தைப் பொறுத்து விளைவு இருக்கிறது. இதிலே ரிஜிஸ்திரார் ஆப் சொஸைடிஸ் அவராகவே மன்றங்களையும் சொஸைடிகளையும் கலைக்கக்கூடிய வாய்ப்புக கொடுத்திருக்கிறீர்கள், *suo motu* or on application என்ற முறையில்.



இந்தச் சங்கங்கள் எல்லாம் பொது நன்மைக்காக இருக்கின்றன. இருபது பேர்களுக்கு மேலே போனால், வருமானம் 10 ஆயிரத்திற்கு மேலே போனால் ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, தவறு நடந்தால் அங்கேயுள்ளவர்கள் ரிஜிஸ்ட்ரருக்கு தகராறு இருக்கிறது வந்து பாருங்கள் என்று சொன்னால் அதிலே அர்த்தம் இருக்கிறது. அப்படியில்லாமல் அவராகவே எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று சொன்னால் பின்னாலே அரசியல் காரணம் இருக்கிறதோ என்று நினைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமை என்ன? இதே நிலைமை தான். வேண்டுமென்றால் வாழவிடுவார்கள், இல்லாவிட்டால் என்ன என்ன தொல்லைகளைக் கொடுக்க வேண்டுமோ அவற்றைக் கொடுத்துக் கலைத்துவிடுவார்கள். ஏதோ அவர்கள் அரசாங்கத்தினுடைய சம்பந்தம் இல்லாமல் வாலண்ட்ரியாகச் சமுதாயத்திற்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற முறையிலே உள்ளவர்களைப் பயமுறுத்தக்கூடிய முறையிலே ரிஜிஸ்ட்ரருக்கு அந்த அதிகாரத்தை ஏன் கொடுக்க வேண்டும்? அவருக்கு ஸுவோ மோட்டோவாக எதற்காக அதிகாரம் கொடுக்கவேண்டும்? அங்கேயுள்ள அங்கத்தினர்கள் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் செய்யலாம். அப்படியில்லாமல் அந்த அதிகாரிக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்து பின்னாலே அரசாங்கம் சூத்திரதாரியாக இருந்து கொண்டு இப்படிச் செய்வது சரி தானா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். கம்பல்சரி ரிஜிஸ்ட்ரேஷனுக்கு 50 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 50 ரூபாயும் கட்டி ரிஜிஸ்டர் செய்துவிட்டு அப்படி ரிஜிஸ்டர் செய்துகொள்வதிலே தாமதம் ஏற்பட்டால் ஒரு நாளைக்கு 5 ரூபாய் கட்டவேண்டுமென்று சொல்வது ஏதோ ஈட்டிக்காரர் வட்டி வாங்குவதைப்போல் இருக்கிறது. ஒரு சட்டத்தின்படி ரிஜிஸ்தர் செய்யவேண்டுமென்று சொன்னால் நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே அதைச் செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு எக்கச்சக்கமான சங்கங்கள் ரிஜிஸ்டர் ஆகிக் கொண்டிருக்கின்றன. அவர் அந்த ரிஜிஸ்ட்ரார் என்ன செய்வார்?

Registrar of Births and Deaths, Registrar of Marriages, Registrar of Societies, Registrar of Chit Funds.

என்று இத்தனையையும் ஒரு ரிஜிஸ்திரார்தான் செய்துகொண்டிருக்கிறார். அவருக்கு வேண்டிய வசதிகளையும் போதுமான ஸ்டாஃபையும் கொடுக்கவேண்டும். அந்த ரிஜிஸ்ட்ரார் ஆபீஸுக்கு உள்ளே போனாலே தெரியும், அங்கே வேலை செய்கிற ஆட்களையெல்லாம் பார்த்தால் கூனிக் குறுகிப்போய் இருப்பார்கள். இப்படியிருந்தால் ஒரு சொஸைடியை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று சொன்னால் எவ்வளவு நாள் ஆகும்? எவ்வளவு காலதாமதம்

ஆகும் என்பதைப் பார்க்க வேண்டும். செல்வாக்கு உள்ளவர்கள் வேண்டுமானால் அங்கே போய் உட்கார்ந்துகொண்டு செய்து கொண்டு வரலாம், உடனடியாக. அந்த ரிஜிஸ்திரார் எதைக் கவனிப்பார்? சாவைப் பார்ப்பாரா? கல்யாணத்தைப் பார்ப்பாரா? கடனைப் பார்ப்பாரா? சீட்டை பார்ப்பாரா? என்று எங்களுக்குப் புரியவில்லை.

ஆகவே, இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிற நீங்கள் ரிஜிஸ்திரார்களைப் போதுமான அளவிற்குப் போடவேண்டும். அங்கே அந்த ஆபீஸுக்குள்ளே போய்ப் பார்த்தால் நாற்காலிக்கு 3 கால், பெஞ்சுக்கு 3 கால் என்றுதான் இருக்கும். அந்த ரிஜிஸ்ட்ராரே 3 கால் நாற்காலியிலேதான் உட்கார்ந்திருக்க வேண்டும். தந்திரமாக அவர் உட்காராவிட்டால் கீழே விழுந்துவிட வேண்டும். அந்த நிலைமை இருக்கிறது.

I think his office is not maintained all right.

அந்த ஆபீசிலே வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும். அங்கே போகிறவர்கள் வெளியிலேதான் நின்றுகொண்டிருக்க வேண்டும். உட்காருவதற்கு வசதி கிடையாது. முக்கால்வாசிப் பேர் நின்று கொண்டிருக்கவேண்டும். அந்த ஆபீஸ் இருக்கிற கட்டடமோ எப்போது தலையிலே விழுமோ என்ற நிலையிலேதான் இருக்கிறது. ஆகவே ஸ்டாஃப் அதிகமாகப் போடவேண்டும். தனி ரிஜிஸ்திரார் போடவேண்டும். வசதிகளை அதிகப்படுத்த வேண்டும். ஏதோ அவசரம் அவசரமாக ஒரு சொஸைடி அமெண்ட்மெண்ட்டைப் போட்டு அனுப்பினால் ரிஜிஸ்திரார் அதற்கு சர்டிபிகேட் கொடுத்தால்தான் அது அமலுக்கு வரும். ஆகவே அவர் அதைக் கொடுப்பதிலே தாமதம் செய்தால் சொஸைடியினுடைய காரியங்கள் என்னவாகும்? ஆகவே, இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

சங்கங்கள் கலைக்கப்பட்டுவிட்டால், அந்தப் பணத்தை வேறு எந்தச் சங்கத்திற்காவது கொடுக்கவேண்டும். எந்தச் சங்கத்திற்குக் கொடுக்கவேண்டுமென்பதை நிர்வாகிகள்தான் தீர்மானிக்கவேண்டும். அதிலேயும் போய் அரசாங்கம் தலையிடக்கூடாது. சரியாக நடக்கவில்லையென்று கலைந்து விட்டால் அந்த சொஸைடியில் உள்ள மிச்சமுள்ள பணத்தை எந்த சொஸைடிக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களோ அவர்கள் அந்த மாதிரிச் செய்யலாம் என்று அந்த அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்கவில்லை. ஒரு எஜுகேஷனல் சொஸைடி சரியாக நடக்கவில்லையென்றால் அந்த சொஸைடியில் உள்ள பணத்தை அதைச் சேர்ந்தவர்களே எந்த இன்னொரு எஜுகேஷனல் சொஸைடிக்குக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ அதற்குக் கொடுத்துவிடலாம். அதற்கு வழியிருக்கவேண்டும். அதிலேயும் அரசாங்கம் போய் உட்கார்ந்துகொண்டு நான் சொல்வதை நீ செய் என்று சொல்வது சரியல்ல. இந்தக் குறைகளையெல்லாம் நீக்கவேண்டும்



அரசாங்கம் பல திட்டங்களை வைத்திருக்கிறது. காதி அண்ட் வில்லேஜ் இண்டஸ்ட்ரிஸ் இன்னும் பல சமுதாயத் தொண்டுகள் செய்யக்கூடியவை இருக்கின்றன. அங்கே போய் ரிஜிஸ்டர் செய்திருக்கிறோம் பணம் தாருங்கள் என்று கேட்டால் கூட நீங்கள் கோவாப்ரேடிவ் ஆக மாறினால்தான் கொடுக்கப்படும், இல்லாவிட்டால் இல்லை என்று சொல்கிறார்கள். அது சரியல்ல. அப்படியென்றால் இந்த ரிஜிஸ்ட்ரேஷன் மாத்திரம் எதற்காக? இங்கேயும் ரிஜிஸ்டர் செய்கிறோம், அங்கேயும் ரிஜிஸ்டர் செய்கிறோம், இங்கேயும் அக்கவுண்ட்ஸ் புக் எல்லாம் இன்ஸ்பெக்ஷன் செய்யப்படுகிறது, அங்கேயும் செய்யப்படுகிறது. தவறு நடந்தால் இதையும் கலைக்க அதிகாரம் இருக்கிறது, அதையும் கலைக்க அதிகாரம் இருக்கிறது. அப்படி இருக்கிறபோது இங்கே ரிஜிஸ்டர் செய்தபிறகும் கூட நீ கோவாப்ரேடிவ் சொஸைடியாக ரிஜிஸ்டர் செய்துவிட்டு வந்தால்தான் தருவேன் என்று சொல்வது சரியல்ல. காதி அண்ட் வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் மூலமாக 10 பெண்கள் சேர்ந்து ஆரம்பித்து ரிஜிஸ்டர் செய்துவிட்டுப் போனால் அவர்களும் கோவாப்ரேடிவ் ஆக மாறினால்தான் கடன் தரப்படும் என்று சொன்னால், பிறகு அதிலேயும் அரசாங்கத்தின் தலையீடு வரும், ரிஜிஸ்திரார் அரசாங்கம் சொல்கிறபடிதான் நடப்பார். பிறகு எப்படி நடக்கும்? மானமுள்ளவர்கள் அதை நடத்தமுடியாது என்ற அளவிற்கு வரும். ஏன் இந்த அரசாங்கம் கூட்டுறவு சொஸைடியைத்தான் மதிக்கிறதா, இந்த சொஸைடியை மதிக்க வில்லையா? மதிக்கவில்லையென்றால் எதற்காக ரிஜிஸ்ட்ரேஷன்? ஆகவே, இந்த முறையில்லாது ரிஜிஸ்டர் செய்துவிட்டாலே போதும் அவர்களுக்கு கடன் வசதிகளையும் தரவேண்டும் என்று சொல்லவேண்டுமென்று தெரிவித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இன்றைக்கு நமக்கு முன்னுள்ள இந்த மசோதா பொறுக்குக் குழுவிலிருந்து வந்திருக்கிறது. ஏற்கெனவே பேசிய உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதுபோல் 1972 ஆம் ஆண்டு பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்ட இந்த மசோதாவானது இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகி வந்திருக்கிறது என்ற விவரத்தைச் சொன்னார்கள். அப்போது பொறுக்குக் குழுவிற்கு அனுப்புகிற போது இந்த மசோதாவின் நோக்கத்தைப் பற்றி நமக்குத் தெரிவிக்கப்பட்டது.

The Societies Registration Act, 1860 (Central Act XXI of 1860) was passed at a time when the law relating to societies was in its infancy in India. The actual working of the Act for over a century has brought to light many defects as for instance, there is no provision in the Act permitting change of name of a society, the alteration of by-laws, the keeping of a registered office, the maintenance of a register of members

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 15

and committee members, the holding of annual general meetings, the winding up of the societies under the orders of the Registrar, etc. The result is that such difficulty has been felt by the public and by the administrative officers alike. The provisions, therefore require to be amplified so as to meet the present day requirements The question of amending the Act has been under consideration of Government for a very long time and it has now been decided to repeal the Societies Registration Act, 1860 and any corresponding law in force in the transferred territory and to replace them by a more comprehensive legislation which would apply throughout the State.

இந்த நோக்கத்தோடுதான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டது. ஏதோ இந்த மசோதா கொண்டுவரப்பட்டு 1972, 73, 74 ஆக கிட்டத்தட்ட மூன்ருண்டுக் காலமாகப் பொறுக்குக் கமிட்டியில் இருந்ததைப் பார்த்தால் 1860 ஆம் வருஷத்திலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்திற்கு மற்ற மாநிலங்களிலே எந்தவிதமான சட்டமும் கொண்டுவரப்படாதது மாதிரியும்

As if it was pioneering effort of our own State

என்ற ஒரு கருத்துத்தான் தென்படும். ஆனல் உண்மையில் அப்படி அல்ல. கிட்டத்தட்ட நம்முடைய தமிழ் நாட்டைத் தவிர மற்ற எல்லா மாநிலங்களும் இம்மாதிரி சட்டங்களை நிறைவேற்றியிருக்கிருர்கள். அப்படி நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல் அங்கே அது நல்ல முறையிலே செயல்பட்டுக்கொண்டும் வருகிறது. அந்த மாதிரியான சில சட்டங்களைக்கூட அப்படியே நாம் காபி செய்திருந்தால் கூடப் போதும். 1959-ம் வருஷம்

Madhya Pradesh Societies Registration Act of 1959 was passed.

ஆகவே, 1959 ஆம் வருஷத்திலே மத்தியப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் ஒரு சிறந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள். அந்தச் சட்டத்திலுள்ள ஒரு அம்சத்தை ரொம்பக் கஷ்டப்பட்டு எதையெதையெல்லாம் சேர்க்க வேண்டுமென்று சிரமப்பட்டார்களே, அதற்கு இங்கே அந்த ஆக்ட் செக்ஷன் 31 என்ன சொல்கிறது என்ருல் . . . . . .

The following societies may be registered under the Act, charitable societies, the military orphan funds or societies established for the promotion of science, literature, or the fine arts, for instruction, the diffusion of useful knowledge, the diffusion of political education, the foundation or maintenance of libraries or reading rooms for general use among the members or open to the public or public museums and galleries of painting and other works of art, collections of natural history mechanical and philosophical inventions, instruments or designs.



1975 ஏப்ரல் 15] [திரு. கே டி. கே. தங்கமணி]

நான் இதை ஏன் வாசிக்கிறேன் என்ருல் அதில் கருத்தோட்டம் நல்ல முறையில் இருப்பதைப் பார்க்கலாம். நம்மைப் பொறுத்த வரையில் பழைய பந்தாவிலேயே இன்னின்ன விஷயம் என்று சொல்லி ஒரு விஷயத்தைச் சேர்த்திருக்கிருேம். அந்த விவரத்திற்குப் பிறகு வருகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் பொதுவாக, நம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்கள் செய்தது மாதிரி, இப்பொழுது நான் மத்தியப் பிரதேசத்தில் செய்ததைப்பற்றிச் சொன்னேன். 1961 ஆம் வருஷம் மேற்கு வங்கத்திலும் இம்மாதிரி நிறைவேற்றப்பட்டு அதுவும் கிட்டத்தட்ட இதே முறையில்தான் இருக்கிறது. அம்மாதிரி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, பெருமளவிற்குப் பொறுக்குக் கமிட்டிக்குக் கூடப் போயிருக்க வேண்டிய அவசியமில்லை. பொறுக்குக் கமிட்டியின் விவாதத்தைப் பார்த்தால் அது இல்லாத விஷயத்தை வைத்துக்கொண்டு ஏதோ தகராறு செய்தது மாதிரி தெரிகிறதே தவிர மிக முக்கியமான மசோதா, இந்த மசோதாவின் நிலைபற்றி மற்ற மாநிலங்களின் கருத்தோட்டங்கள், மத்திய அரசாங்கத்தின் கருத்தோட்டங்கள், அல்லது இதில் பாதிக்கப்படும் ஸ்தாபனங்களின் கருத்தோட்டங்கள் தெரிய வேண்டுமென்பதை விட இது எப்படியாவது நீடித்தால் பரவாயில்லை என்றுதான் தெரிகிறது. ஏனென்ருல், 1973 ஆம் வருஷம் முதன் முதலாக மே மாதத்தில் கூட்டம் நடக்கிறது. பிறகு கூடும் கூட்டங்களில் கூட ஏதோ சிறுகச் சிறுகச் சில விஷயங்களை வைத்துக்கொண்டு மே மாதம், மே மாதம் நடக்கும் கூட்டமாக ஆகிவிட்டதே தவிர இந்த மசோதாவின் முக்கியத்துவம் தெரியவில்லை.

ஏற்கெனவே இந்த மன்றத்தில் பலமுறை சொல்லியிருக்கிறேன். உங்கள் மூலமாக இன்ெருரு தடவையும் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏதாவது ஒரு மசோதா சபைமுன் சமர்ப்பிக்கப்பட்டு அந்த மசோதா பொறுக்குக் கமிட்டி அல்லது

Select Committee of this House or Joint Select Committee of both Houses

என்று இருக்குமேயானலும்கூட இன்றைக்கு இந்த மசோதா சமர்ப்பிக்கப்படுகிறது. இந்த மசோதாவை நாம் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புகிருேம். அப்படி அனுப்பினல் அடுத்த சட்டமன்றக் கூட்டத்தினுடைய முதல் நாள் இது சமர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது கடைசி நாள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற முறையிலே ஒரு டைரக்ஷன் இருந்தால்தான் பொறுக்குக் கமிட்டியில் உள்ளவர்கள் செயல்பட ஆரம்பிப்பார்கள். அதன் முக்கியத்துவத்தைத் தெரிந்து செய்யப் பார்ப்பார்கள். அப்படியில்லாமல் இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டுவிட்டோம் என்ருல்—ஓரளவிற்கு இது பரவாயில்லை. இந்தச் சட்ட மன்றத்திலேயாவது அதாவது ஃபிப்த் அசெம்பிளிக்காவது வந்ததே என்று பாராட்ட வேண்டும். சிக்ஸ்த் அசெம்பிளிக்குப் போய்விடாமல் இப்பொழுதாவது வந்ததே என்று நினைக்கத் தோன்றுகிறது. இந்த மசோதாவின் நோக்கம் நல்ல நோக்கம்தான்.

It is only meant to regulate where there were some lapses.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1976 ஏப்ரல் 15

அதுதான் இருக்கிறது. இதுவரையில் பல காரியங்கள் நடந்து வந்திருக்கின்றன. அவைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கொண்டு வந்திருப்பதாகத்தான் தெரிகிறது. ஆனால் இதில் ஒரு ஐயப்பாட்டை இது சம்பந்தப்பட்டவர்கள் எழுப்பினார்கள். அது என்னவென்றால், இந்தமாதிரி தலையீடு அரசாங்கத்திலிருந்து வரும் என்றால் இந்த அரசாங்கம் அவர்களைத் தொந்தரவு பண்ணும் முறையில் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. சொஸைட்டி ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்-படி பல சொஸைட்டிகளை ரிஜிஸ்தர் செய்திருக்கிறார்கள். அவைகளின் முக்கியமான கடமை வருஷத்திற்கு ஒரு முறை, யார் யார் மேனேஜிங் கமிட்டியாக இருக்கிறார்கள் என்ற அளவிற்குச் சொன்னால் போதும். எத்தனை பேர் உறுப்பினர்கள் என்ற லிஸ்ட் கொடுத்தால் போதும் என்று இருந்தது. ஆனால் இப்பொழுது இதிலே ஒரு ' கம்பெனிஸ் ஆக்ட்'-படி என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அந்த மாதிரி காரியங்களைச் செய்ய வேண்டுமென்று வந்திருக்கிறது. இன்றைக்கு நான் சொல்கிறேன், குறித்துக் கொள்ளலாம். இந்த சொஸைட்டி ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்-க்குப் பிறகு ஏற்படும் ரெஜிஸ்திரார் தன்னுடைய கடமையைச் செய்ய முடியாது.

It is humanly impossible.

சில கருத்தோட்டங்களை வைத்துக்கொண்டால்தான் காரியங்களைச் செய்ய முடியும் என்ற அளவிற்குச் செயல்பட்டு இருப்பது சரியல்ல. ஒருவிதமான ஹேரஸ்மெண்ட் வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடும். எங்கேயாவது ஒரு சொஸைட்டி பிடிக்கவில்லை என்றால், அதைத் தொந்தரவு பண்ணுவது, அதன் மூலம் அங்கு பணியாற்றுபவர்களுக்கு இடைஞ்சல் செய்யும் ஆபத்து இருக்கிறது என்பதை முதன்முதலிலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இரண்டாவது முக்கியமான விஷயம், ஒருவர் சாட்சி சொன்னதைக்கூடப் பார்த்தேன். இதற்கு முன்பிருந்த சொஸைட்டிகளை எல்லாம் சாரிடபிள் இன்ஸ்ட்டிடியூஷன்ஸ் என்று கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் சாரிடபிள் இன்ஸ்ட்டிடியூஷன்ஸ் என்று சொன்னாலும்கூட,

Charitable Institutions will also include religion, religious bodies

என்ற முறையிலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ரிலிஜியனை நாம் சேர்க்கிறோம் என்று சொல்லிவிட்டு கடைசியிலே ரிலிஜியஸ் பாடிக்கு அப்ளை ஆகாது என்ற வகையில் எக்செம்ஷன் இருக்கிறது. இதைப் புதிதாகச் சேர்த்தோம் என்று சொல்லிவிட்டு பிறகு எக்செம்பஷன் கொடுக்கிறோம் என்றால், பலவிதமான ரிலிஜியஸ் பாடிகள் வருகின்றன. நல்ல முறையில் நடக்கும் ரிலிஜியஸ் பாடிகளைப்பற்றிச் சொல்லவில்லை.

ஆனால், புதிது புதிதாகத் தோன்றி சிறுசிறு குழுக்களாக அமைத்து அந்தந்த ஏரியாவில் இருப்பதை இப்பொழுது நாம் பார்க்கிறோம். இதே சென்னை நகரத்திலே எத்தனை ரிலிஜியஸ்



1975 ஏப்ரல் 15]
[திரு. கே. டி. கே. தங்கமணி]

பாடிகள் உதயமாகி இருக்கின்றன? திடீரென்று ஒருவர் தோன்றுகிறார். அவருடைய சென்ற கால சரித்திரத்தைப் பார்த்தால் மோசமானவராக இருந்திருப்பார். ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தைப் பற்றி மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆனந்த மார்க்கம் என்ற பெயர் அதிகமாக அடிபடுகிறது. அந்த ஆனந்த மார்க்கத்திற்குத் தலைவராக இருக்கும் ஆனந்த மூர்த்தி என்பவருடைய சரித்திரத்தைப் பார்த்தால் அவர் இரயில்வே தொழிலாளியாக இருந்திருக்கிறார். அவர் மோசடி செய்தார் என்று பழி வாங்கப்பட்டு 6 மாதம் ஜெயிலிலே இருந்திருக்கிறார். ஜெயிலிலேயிருந்து வெளியே வந்தவுடன் மூர்த்தியாகி ஆனந்த மார்க்க ஸ்தாபனத்தை அமைத்து, கடைசியிலே கள்ளக் கடத்தலில் ஈடுபட்டார் என்று சொல்லப்படுகிறது. இந்தமாதிரி பலவிதமான ஸ்தாபனங்கள் உருவாகும். அந்த ஸ்தாபனங்களுக்கெல்லாம் இன்றைக்கு நம்முடைய சட்டப்படியே விதிவிலக்கு அளிக்கும் அம்சம் வந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் இப்படித் திடீர் திடீரென்று தோன்றி ஜனங்களை ஏமாற்றி பலரிடத்திலிருந்தும் வசூல் செய்து மோசடி செய்யும் நிலைமை ஏற்படும்.

நான் கடவுளிடத்திலிருந்து நேரடியாக வந்திருக்கிறேன் என்று சமீபத்தில் பாலயோகி என்று ஒருவர் வந்திருக்கிறார். அவர் கடவுளின் புத்திரன் என்று சொல்லி, கடவுளின் புத்திரனாக இருந்து திடீரென்று பாலயோகியாகி, பால யோகிகள் விவாகம் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். பிறகு அவர் விவாகம் செய்து கொண்டார். அமெரிக்காவில் காதல் ஏற்பட்டு திருமணம் செய்து கொண்டார். அவரைப் பாலயோகி என்று நினைத்தவர்கள் கோபப்பட்டு, இனிமேல் பாலயோகி இல்லை என்று ஒரு அம்மையார் மூலம் சொல்லி நீக்கிவிட்டார்கள். இப்பொழுது இன்னொருவர் பாலயோகியாக ஆகியிருக்கிறார்கள்.

எதற்காக இந்த உதாரணங்களைச் சொல்கிறேன் என்றால், இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் மக்களுக்குக் கஷ்டம் ஏற்படும் நேரத்தில், வறட்சியால் இன்னும் சிரமம் ஏற்படும் நேரத்தில், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் காலத்தில்

in this country it is an escape.

இந்த மாதிரி எஸ்கேப் செய்யும் பல ஸ்தாபனங்கள் உருவாகும். இப்போதே உருவாகிக் கொண்டிருக்கின்றன. சென்னையில் மட்டும் இன்றைக்குப் பரிசீலனை செய்து பார்த்தால் எவ்வளவு ஸ்தாபனங்கள் இந்த மாதிரி இருக்கும் என்ற அளவுக்குப் பெயர்களே தெரியாத ஸ்தாபனங்கள் திடீர் திடீரென்று ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த மாதிரி ஸ்தாபனங்களைக் கட்டுப்படுத்துவதில் சில சமயங்களில்—

they indulge in unsocial activities.

பலவிதமான தப்பான காரியங்களை இதைத் திரை மறைவாக வைத்துக்கொண்டு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஸ்தாபனங்களை எல்லாம் இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டுவர [illegible]

வேண்டுமென்ற நன்னோக்கத்தோடு முதலில் மசோதா கொண்டு வரப்பட்டு இப்போது விதிவிலக்கு என்ற அடிப்படையில் விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த விதிவிலக்கைக் கண்டிப் பாக ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில குறிப்பிட்ட ஸ்தாபனங்கள், நல்ல முறையில் செயல் படக்கூடிய ஸ்தாபனங்கள் இருக்குமானால் அவை, ஏதாவது ஒரு சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லி அவர்களே பதிவு செய்து கொள்கிறார்கள். கம்பெனிஸ் ஆக்டில் பதிவு செய்யலாம். ஏற்கெனவே இருக்கக்கூடிய சொஸைடிஸ் ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டிலும் பதிவு செய்து கொள்ளலாம்.

சில நாடுகளில் மலேயா போன்ற இடங்களில் பதிவு செய்யாத எந்த ஸ்தாபனமும் இருக்கக்கூடாது. பதிவு செய்யாமல் இருந் தால் அது ஸ்தாபனமாகக் கருதப்படக்கூடாது என்ற அந்த அளவுக்கு நாம் போகவில்லை என்றாலும், எந்தவித மோசடியும் இருக்கக்கூடாது என்பதற்காகப் பதிவு செய்ய வேண்டுமென்று சட்டத்தில் போட்ட பிறகு விதிவிலக்கு என்ற முறை கூடாது. ஸ்டிரிக்டாக அப்சர்வ் செய்யவேண்டும். இதிலே—

how they arrived at the figure of 20, I do not know.

இப்படி 20 என்றெல்லாம் இல்லாமல் இருக்க வேண்டும். டிரேட் யூனியன் என்ற முறையில் பதிவு செய்ய வேண்டுமென்றால் 7 பேராவது இருந்து பதிவு செய்ய வேண்டும்; பப்ளிக் ரிஜிஸ்டர்டு கம்பெனி என்றால் 5 பேராவது இருக்க வேண்டும். பிரைவேட் ரிஜிஸ்டர்டு கம்பெனி என்றால் 2 பேராவது இருக்க வேண்டும். இப்படி 7, 5, 2 தான் இருக்கிறது. இப்போது புதிதாக 20 என்பதைச் சேர்த்திருக்கிறார்கள். 20 என்பது 30 ஆக இருக்கக் கூடாதா? 10ஆக இருக்கக் கூடாதா? 10 என்ற முறையில் இருப்பது நல்லது என்று சொல்லி நாங்கள் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் பொறுக்குக் கமிட்டி யில் போட்டிருக்கும் பல திருத்தங்கள் நடைமுறைக்கு ஒவ்வாத திருத்தங்களாக இருக்கின்றன. நான் கேள்விப்பட்டேன்— பொறுக்குக் கமிட்டியின் மினிட்சைப் பார்க்கும் காலத்தில் கம்பெனி லா சம்பந்தமாக அமல்படுத்தப்பட்ட சில விஷயங்கள் வேண்டுமென்று ரிப்போர்ட் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த ரிப்போர்ட் அவர்களுக்கு வந்ததாகத் தெரியவில்லை. இந்த செலக்ட் கமிட்டி அறிக்கையைப் படிக்கின்றபோது அது புரியாத புதிராக இருக்கிறது. ஏற்கெனவே, இந்த மசோதா கொண்டு வரப்பட்டபோது இருந்ததே ஓரளவு பரவாயில்லை என்று தோன்று கிறது. பொறுக்குக் கமிட்டிக்குக் போன பிறகு இதனுடைய ஸ்கோப்பைப் புரிந்து கொள்ளாமல்—

it has become completely a different piece of legislation.





அந்த அளவுக்குக் கொண்டு வந்தாயிற்று. மற்ற மாநிலங்களில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் நோக்கத்தை வைத்து கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய முறையில் இல்லை. நான் சொன்ன இந்த மூன்று முக்கிய மான அம்சங்களைக் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். திருத்தங்கள் கொடுக்கப்படாமல் இருக்கக்கூடிய கிளாஸ் சம்பந்தமாகவும் விவாதிக்க இடம் கொடுக்கவேண்டும். குறிப்பிட்ட கிளாசில் திருத்தம் இல்லை, ஆகவே, ஓட்டுக்கு விடுகிறேன் என்ற முறை இங்கு வந்திருக்கிறது. மசோதாவுக்கு ரொம்ப மதிப்பும், அக்கறையும் கொடுக்க வேண்டுமென்ற முறையில் ஒவ்வொரு கிளாஸ் வருகிறபோதும் அந்தக் கிளாசின் பேரில் அமைச்சர்கள் என்ன சொல்கிறார்கள், உறுப்பினர்கள் என்ன கருத்தைச் சொல்லுகிறார்கள் என்று அறியும் அளவுக்கு இந்த மாதிரி மசோதா ஒரு நாள் பூராவும் விவாதிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான மசோதா. ஆகவே, திருத்தங்கள் கொடுக்கவில்லை என்றாலும் அந்த கிளாசின் பேரிலும் கருத்தைச் சொல்ல சந்தர்ப்பம் கொடுத்தால் உறுப்பினர்கள் தங்கள் அனுபவங்களைச் சொல்ல முடியும். பலர் பல சொஸைடிகளில் இருக்கிறார்கள். அகவே, அந்த வாய்ப்பினைத் தரவேண்டுமென்று கூறி இந்த மசோதாவின் பேரிலே முதன் முதலாக இந்தக் கருத்துக்களைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த முக்கியமான மசோதாவில் பொறுக்குக் கமிட்டி உறுப்பினர் என்ற முறையில் நான் ஓரிரு விளக்கங்களைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பல்வேறு கருத்துக்களை இந்த மசோதாவைப் பொறுத்த அளவிலே எடுத்துக் கூறினார்கள். இந்த மசோதாவானது எப்படி சொஸைடிகளைச் சீர்திருத்தி அதன் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் நினைத்து அதற்காக ஒரு மசோதா வைக் கொண்டுவந்து பொறுக்குக் குழுவுக்கு விட்டார்கள். பொறுக்குக் குழுவில் பல்வேறு கருத்துக்கள் பேசப்பட்டு போதிய சான்றுகள், தெளிவுகள் சேகரிக்கப்பட்டு அது இன்றைக்குச்சட்ட மாகும் தருவாயில் இருக்கிறது. இந்தச் சட்டம் தேவையா, தேவையில்லையா என்பதில் சட்டம் தேவை என்பதை உணர்ந்து தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

1860-லே உருவாக்கப்பட்ட சட்டத்திலே இருந்த ஒரு சில கோளாறுகளையும், அதன் பேரில் உயர்நீதி மன்றத்தில் ஏற்பட்ட தீர்ப்புகளின் அடிப்படையில் இந்தச் சட்டமானது மாற்றியமைக் கப்பட வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில்தான் இந்த

மசோதாவானது இன்று உருவாகி இருக்கிறது. இதிலே பல்வேறு கருத்துக்கள் எல்லாம் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. எல்லா சொஸைடிகளையும் ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று கட்டாயப் படுத்தவில்லை என்பது நாம் எல்லோரும் இந்தச் சட்டத்தைப் படிக்கின்றபோது நமக்கே புலனாகிறது. உதாரணமாக, 5-வது ஷரத்தைப் பார்த்தால் Optional Registration என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. எல்லா சொஸைடிகளும் கட்டாயமாக ரிஜிஸ்டர் செய்யப்படத்தான் வேண்டுமென்று நிர்ப்பந்திக்க இயலாது. அதன் காரணமாகத்தான் விதிவிலக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. உதாரணமாக—

Any society which has for its object (*a*) the promotion of religion, athletics or sports (including indoor games), or

(*b*) any other object mentioned in or prescribed under section 3 and to which society the provisions of section 4 are not applicable may, at its option be registered under this Act

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஒரு சில மதச் சார்புடைய அல்லது வேறுவிதமான 'ஸ்போர்ட்ஸ் அதாரிடீஸ்', 'இன்டோர் கேம்ஸ்' நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஸ்போர்ட்ஸ் என்று சொல்லுகிற நேரத்தில், விளையாட்டு என்று சொல்லுகிற நேரத்தில் ரம்மி, பிரிட்ஜ் போன்ற ஆட்டங்கள் எல்லாம் 'கேம் ஆப் ஸ்கில்' என்று சுப்ரீம் கோர்ட் கொடுத்திருக்கும். தீர்ப்பின் அடிப்படையில் அதைப்பற்றியெல்லாம் விவாதித்துத்தான் கடைசி முடிவுக்கு வந்திருக்கிறது. இன்றைக்கு குறிப்பாக பல்வேறு போகஸ் சொஸைடிகள் இயங்கிக் கொண்டிருப்பது தொடர்ந்து இயங்கக்கூடாது. அந்த மாதிரி சொஸைடிகளைக் கண்காணிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு பல்வேறு ஷரத்துக்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

மதச் சார்புடைய ஒரு சில சொஸைடிகளை அப்படிக் கட்டாயப் படுத்தவில்லை என்று சொன்னால் பல்வேறு கருத்துக்களுக்கு இடம் ஏற்பட்டு விடும் என்ற கருத்தோட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அதற்குச் சான்றாக ஆனந்த மார்க்கிகளையும், பால யோகிகளையும் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த மாதிரி ஐயப்பாடு தேவையில்லை என்றுதான் நான் கருதுகிறேன். மத உணர்வின் அடிப்படையில் ஒருவேளை ஒரு சிலருடைய கொள்கைகளை ஆதரிக்கக் கூடும். இன்று பகுத்தறிவில் நம்பிக்கையுடைய பல்வேறு உணர்வுகள் இருக்கின்ற நிலையில் அந்த மாதிரிக் காரியங்களில் ஈடுபட்டு தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. மத உணர்வில் இருப்பவர்கள் கூட அவர்கள் தப்பான காரியங்களில் ஈடுபடுவார்களானால் அதை ஆதரிக்க மாட்டார்கள். உண்மை நிச்சயமாக



வெளிவரும். யார் உண்மையான மதவாதிகள் இல்லையோ அவர்கள் சமுதாயத்தை பல்லாண்டு காலம் ஏமாற்ற முடியாது என்ற நிலைமை உருவாகும் என்பதை அதற்கு என்னுடைய கருத்தாகக் கூற விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய நல்ல சொஸைட்டிகள் இன்று பல்வேறு இடங்களில் செம்மையாகவும் சீராகவும் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் கண்காணிப்பதற்கும் பராமரிப்பதற்கும் போதிய வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. முன்பு ரூ. 2,500 வருவாய் அல்லது செலவு உள்ள சொஸைட்டிகள் எல்லாம் ரெஜிஸ்டர் செய்யப்பட வேண்டும் என்று இருந்தது இப்போது ரூ. 10,000 என்று பொறுக்குக் குழுவால் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏனெனில் சின்னஞ்சிறு சொஸைட்டிகளுக்குக் கஷ்டம் இருக்கும். அவர்களுக்கு இந்தக் கணக்குகளை வைத்துக் கொள்வதில் சங்கடங்கள் ஏற்படும் என்ற காரணத்தால் அம்மாதிரியான மாற்றங்களை எல்லாம் இந்தக் குழு எடுத்துக் கூறியிருக்கிறது.

செக்ஷன் 4-க்கும் 5-க்கும் இடையே முரண்பாடு இருக்கிறது என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அவர்களும் பொறுக்குக் குழு உறுப்பினர்-ஆக இருந்தார்கள். அந்த விவாதத்தில் ஒருசில கூட்டங்களில் அவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதில் முரண்பாடு ஒன்றும் இல்லை. அதில் ஒரு சில விதிவிலக்குகள் என்ற அடிப்படையில் ஆப்ஷனல் ரெஜிஸ்ட்ரேஷன் செக்ஷன் 5-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது, கம்பல்சரி ரெஜிஸ்ட்ரேஷன் செக்ஷன் 4-ல் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதில் எந்த விதமான முரண்பாடும் இருப்பதாக நான் கருதவில்லை.

வேறு சில கருத்துக்களும் கூறப்பட்டன. இது பொதுவாக அரசியல் காரணத்திற்காக ஒரு சில சொஸைட்டிகளை கஷ்டப் படுத்த முடியும் என்ற ஒரு கருத்தும் சொல்லப்பட்டது. நல்ல நோக்கோடு நல்ல எண்ணத்தோடு இந்தச் சட்டத்தை அமல் படுத்தினால் அதில் கஷ்டங்கள் ஏற்பட்டால் அல்லது நீதிமன்றத் தில் ஏதாவது தீர்ப்பு ஏற்பட்டால் அதன் அடிப்படையில் இந்தச் சட்டத்தைத் திருத்திக் கொள்ள வாய்ப்பிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1860-ம் ஆண்டில் உருவாக்கப்பெற்ற அந்தச் சட்டம் ஒரு நிறைவான சட்டம் அல்ல. பல சங்கடங்கள் இருக்கின்றன் என்று பல்வேறு தீர்ப்புகள் அடிப்படையில் கூறினார்கள். அந்த அடிப்படையில்தான் இன்று சட்டம் மாற்றியமைக்கப்பட்டிருக் கிறது. குறிப்பாக, கம்பனிச் சட்டத்திற்கு ஒத்தவாறுதான் பல் வேறு ஷரத்துக்கள் இதில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த சொஸைட்டிகளுக்கு எல்லாம் ஒரு கார்ப்பரேட் வடிவம்

கொடுக்கப்படவில்லையென்ற வேறுபாடு எல்லாம் இருக்கிறது. ஆகவே, பொதுவாக வரவேற்கக் கூடிய பல்வேறு அம்சங்கள் இந்தப் புதிய சட்டத்தில் இருக்கின்றன. ஏதாவது கஷ்டங்கள் அல்லது சங்கடங்கள் இருந்தால் அவற்றைத் தீர்த்துக்கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது.

இந்த நேரத்தில் நான் இதில் ஒரு செக்ஷன்பற்றி என்னுடைய கருத்தைத் கூறவேண்டுமென்று விரும்புகிறேன். அதாவது செக்ஷன் 57. குறிப்பாக டிரான்ஸ்ஃபர்ட் டெரிட்டரீஸைப் பொறுத்தவரையில் ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். தங்கள் அனுமதியின் பேரில் நான் அதைப் படிக்கிறேன்.

In sub-clause (3), "Any law corresponding to this Act in force in the transferred territory immediately before the date of the commencement of this Act including the Travancore-Cochin Literary, Scientific and Charitable Societies Registration Act 1955 (Travancore-Cochin Act XII of 1955) (hereafter in this section referred to as the corresponding law) shall stand repealed on the date of such commencement"

என்று சொல்லியிருக்கிறது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் முன்பு உருவாக்கப்பட்ட சங்கங்களுக்கெல்லாம் தகுந்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்பிருந்த சட்டத்தில் இந்த சொஸைட்டிகளைச் சரியான முறையில் பராமரிப்பதற்குப் போதிய அவகாசம், அதிகாரம் இல்லாததால் பல கஷ்டங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உதாரணமாக, எங்கள் பகுதியில் லட்சுமிபுரம் கல்லூரி இந்தச் சட்டத்தின் அடிப்படையில் ரெஜிஸ்டர் செய்த ஒரு சங்கமாக இருந்துகொண்டிருக்கிறது. அங்கு ஒரு சங்கமே கிடையாது. ஒரு சில தனிப்பட்ட நபர்கள் கையில் சிக்குண்டு அந்த சொஸைட்டி இன்று படுகிற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. அந்தக் கல்லூரியை ஒரு பர்ஸ்ட் க்ரேட் கல்லூரியாக பதினைந்து ஆண்டுகளாக நடத்திக் கொண்டு வந்தார்கள். அது ஒரு சிலர் கைகளில் சிக்கிய காரணத்தால் வசூல் என்ற பெயரால், டொனேஷன் என்ற பெயரால் பணத்தைக் கையில் வைத்துக்கொண்டு அவர்களுக்கு யார் வேண்டுமோ அவர்களுக்கு ஷேர் அனுமதிக்கிறது என்ற ஒரு நியதியை வைத்துக்கொண்டு அந்த நிர்வாகக் குழு பல தவறான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரி மூடப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்ட நேரத்தில் நாங்கள் எல்லாம் இந்தச் சட்ட மன்றத்தின் முன்பு அந்த நிர்வாகத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எடுத்துக் கூறினோம். அங்கிருக்கிற அந்தச் நிர்வாகம் மிகச்சீர்கேடான முறையில் மிகவும் வேதனைக்குரிய விதத்தில் இன்றும் போய்க்கொண்டிருக்கிறது.

அதில் உள்ள பெரும்பாலோர் அந்தக் கல்லூரியை அரசாங்கத்திற்கு விட்டுக் கொடுப்பதில் ஆட்சேபனை இல்லை என்று கையெழுத்து போட்டு விட்டார்கள். இப்போது அரசாங்கம் அதன் அடிப்படையால் ஒரு ஆணை பிறப்பித்தது. இடைக்காலத்தில்





ஒரு கேர் டேக்கர் போட்டுவிட்டு அந்த நிர்வாகத்தை அரசாங்கமே நடத்திக் கொள்வது என்ற உத்தரவை அரசாங்கம் பிறப்பித்தது. ஆனால் ஒரு சிலர் அதில் கையெழுத்து போட்டுவிட்டு இன்று உயர்நீதிமன்றத்தில் ரிட் என்ற அடிப்படையில் மனு தாக்கல் செய்து இந்த அரசாங்கத்தையும் அங்குள்ள பொது மக்களையும் ஏன் மாணவர்களின் வாழ்க்கையையும் இருள் அடிக்கும் முறையில், அவர்களின் வாழ்க்கையை சூறையாடுகிற நிலையில் நடந்து கொண்டிருக்கிறது. இந்த மாதிரி சட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்கெல்லாம் அனுமதி வழங்கப் பெற்ற காலத்தில் அவர்களைச்சரியான முறையில் கண்காணிக்க போதிய அதிகாரம் இல்லாத காரணத்தால் அந்தச் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்கள். I would even say it is a fraud on the statute.

அந்த அளவில் அந்தச் சங்கம் நடந்துகொண்டிருக்கிறது. அது பற்றி இன்று உயர்நீதி மன்றத்தில் வழக்கு இருப்பதால் நான் அதன் விவரங்களுக்குள் புக விரும்பவில்லை. ஆனால் இந்த மாதிரியான நிர்வாகங்கள் சீர்கேடான முறையில் இருக்கிற நேரத்தில் அரசாங்கத்திற்கு அதைச் சட்ட பூர்வமாகக் கண்காணிப்பதற்குப் போதிய அவகாசம், அதிகாரம் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னைக் கேட்டால் கொடுத்திருக்கிற அதிகாரம் இந்த மாதிரி தவறான பாதையில் செல்கிறவர்களைச் சரியான முறையில் கண்காணிப்பதற்குப் போதுமான முறையில் இருக்கிறதா என்றால் அந்த அளவிற்கு இல்லை. எதற்கெடுத்தாலும் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று ரிட் போட்டு விட்டு இடைக்கால ஸ்டே வாங்கிவிட்டு பொதுமக்களை ஏமாற்றிவிட்டு நடக்கக்கூடிய முறையில் பல்வேறு சொஸைட்டிகள் இயங்கி வருகின்றன.

அதே மாதிரி ஒரு சொஸைட்டிதான் முன்பு நான் எடுத்துக் காட்டிய சொஸைட்டி. இம்மாதிரி நிலை நீடித்துக்கொண்டே போனால் அரசாங்கம் இவற்றை ஏற்று நடத்த பல சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்று அரசாங்கத் தரப்பிலிருந்து கூறுகிறார்கள். பழைய சட்டத்தின்படி 25-வது செக்ஷன் கீழ் அரசாங்கத்திற்கு அந்த நிர்வாகத்தை ஏற்று நடத்த அவகாசமும் போதிய உரிமையும் இருக்கிறது. அதையும் இந்த அரசாங்கம் இந்தச் சட்டத்தை பாஸாக்குகிற நேரத்தில் உபயோகப்படுத்த வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

யாராக இருந்தாலும் சரி, எவ்வளவு செல்வாக்கு படைத்தவர்களானாலும் சரி தங்கள் கையில் பணம் இருக்கிறது என்ற காரணத்தால் இந்த மாதிரி கல்வி நிறுவனங்களை நடத்துகிறவர்கள் தங்கள் காழ்ப்புணர்ச்சி காரணமாக சமுதாயத்தில் உள்ள மாணவர்களைப் பழி வாங்கியிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் எல்லாம் கண்காணிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே அரசாங்கம் சற்றும் சுணக்கம் இல்லாமல் அவர்கள் மீது நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒருவேளை இந்தச் சட்டத்தை ரிப்பீல் செய்கிற நேரத்தில் முன்பு எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் பாதுகாக்கப்படும் என்ற ஒரு ஷரத்து அமைந்திருக்கிற காரணத்தால்தான் இதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த மாதிரி தவறான பாதையில் செல்கிற ஸ்தாபனங்களை நிச்சயமாக மூடுவதற்கும் அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கும் போதிய வழிவகைகள் செய்யப்பட வேண்டும். கம்பல்ஸரி வைண்டிங் அப் இருக்கிறது. எந்த பர்பஸ்ஸுக்காக இது உருவாக்கப் பெற்றிருக்கிறதோ அந்த நோக்கம் நிறைவேறக்கூடிய தன்மையில் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

பொதுவாக, நீண்ட நாட்கள் பொறுக்கு குழு அமைந்து விட்டது. ஆதலால், சரியான முறையில் இதை எல்லோரும் பார்க்கவில்லை என்ற ஒரு கருத்து தொனிக்கக்கூடிய அளவில் ஒரு சிலர் இங்கே கூறினார்கள். இதில் வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மேலவையில் உறுப்பினராக இருக்கிற, சிறந்த வழக்கறிஞராக இருக்கிற திரு. வசந்தபாய் போன்றவர்கள் கருத்துக்களை எல்லாம் இதில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கூறப்பட்ட பல்வேறு கருத்துக்களை எல்லாம் பரிசீலித்து இன்று இது சட்ட வடிவத்தில் வருவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள். இதில் ஏதாவது கோளாறுகள், குறைபாடுகள் இருந்தால் அதைப்பற்றி யாராவது கூற முன்வருவார்களேயானால் அவற்றைத் திருத்தலாம். பொதுவாக இந்தச் சட்டத்தை இப்போது இந்த வடிவத்தில் ஏற்றுக்கொண்டு இதைச் சட்டமாக்குவதுதான் பொருத்தமாக இருக்கும்.

போகஸ் சொஸைட்டீஸ் எல்லாம் ஒன் மான் தீர்ப்பு அல்லது வேறுவிதமான தீர்ப்புக்களுக்கு ஆளாகாமல், காளான்கள் போன்று முளைக்காமல் தடுப்பதற்கும் அதைக் கண்காணிப்பதற்கும் நல்ல வாய்ப்பு வசதி இருக்கும் என்ற காரணத்தால் இந்தச் சட்டம் தேவை என்று கூறி என் வார்த்தைகளை இத்துடன் முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே சங்கங்கள் அமைக்கும்போது அவை ஒரு சட்டப் பாதுகாப்பு வரைமுறைக்குள்ளே வரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டு வரப்பட்டது. இதில் ஆய்வுக்குழு பல்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கிறது. தொடர்ந்து பலமுறை ஆய்வுக் குழு கூடி விவாதித்தது.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் அரசாங்கம் ஏதோ தனிப்பட்ட கருத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் ஒருக்காலும் கிடையாது. எல்லா உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் ஏற்றும் பல்வேறு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆக, இந்த மசோதாவை நீண்ட நாட்களாக ஆழ்ந்து பரிசீலித்ததற்குப் பின்னால் இங்கு இவ்வளவு வேகமாக இதில் தவறு இருக்கிறது என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னவுடன் எனக்கு ரொம்ப



ஆச்சரியமாக இருந்தது. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இன்னும் புதிய கருத்துக்கள் சொல்லப்பட்டாலும் அவை பற்றியும் பரிசீலனை செய்து முடிவு செய்கிறோம். நாம் இப்போது இந்தக் கொள்கையை வகுத்திருக்கிறோம்; இது ஒரு புதிய முடிவு. அதனால் நடைமுறையில் சில குறைபாடுகள் வரக்கூடும். அப்படி குறைபாடுகள் வந்தால் அவற்றை மாற்றிக் கொள்ளவோ, திருத்தம் கொண்டுவரவோ அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மசோதாவைப் பொறுத்த வரையில், கருத்து வேறுபாட்டுக்கே இடம் இல்லாமல் நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறோம். அவர்கள் சொன்ன சில கருத்துக்களுக்கு அவர்களே இந்த மசோதாவை திரும்பப் படித்தால் விடை தெரிந்துவிடும். அதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் தனியாகச் சட்டம் இருக்கிறது. அப்படி கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமல்ல; வேறு எந்தச் சட்டத்தின் கீழே வேறு எந்த சங்கம் வந்தாலும் இந்தச் சட்டம் அதற்குப் பயன்படாது என்று சொல்லியிருக்கிறோம். அதைப்பார்த்தால் ஆட்சேபனை போய்விடும் என்று கருதுகிறேன்.

"Nothing contained in this Act shall be deemed to require the registration under this Act of any society formed, established, registered or incorporated under any other law"

என்று இருப்பதால் இது வராது என்று நினைக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: செலெக்ட் கமிட்டி உறுப்பினர்கள், மதிப்பிற்குரிய அம்மையார் அவர்கள் கோவாப்பரேடிவ் சொசைட்டியைப் பொறுத்த வரையில் ஜூலை-ஜூன் ஆண்டு என்ற ஒரு முறை வருகிறது. மாநிலம் முழுவதற்கும் ஒரே ஒரு முறைதான் இருக்க வேண்டும். வருடம் என்று சொல்லும் போது ஏப்ரல்-மார்ச் அல்லது மே-ஏப்ரல் என்று ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். ஆனால் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியைப் பொறுத்த வரையில் முரண்பாடு இருக்கிறது. இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். அதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். 'ரெக்கிரியேஷன் கிளப்பை' பொறுத்த வரை, ஒரிஜினல் மசோதாவைப் பார்த்தால் தெரியும். அவர்கள் அதை சேர்க்கக் கூடாது என்று சொன்னார்கள். அதில் பல கருத்துக்கள் வந்தன. அதனால் கிளாஸ் 5 என்று புதிதாகப் போட்டு, அதையும் சேர்த்திருக்கிறோம். அதை சேர்த்து, ஆப்ஷன் என்று போட்டுவிட்டோம். அதனால் அதில் ஆட்சேபனை இருக்க முடியாது.

எல்லா சங்கங்களையும் விரும்பினால் கொண்டு வரலாம். நான்காவது பிரிவில் சில சங்கங்கள் மட்டும் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆனால் ரிலிஜியஸ் ஸ்தாபனங்களுக்கு ஆப்ஷன் என்று சொல்லியிருக்கிறோம். விவாதம் முடிந்து, கடைசியில் இந்தக் கருத்து வந்ததால் ஆப்ஷன் என்று போட்டிருக்கிறோம்.

கம்பெனிகளைப் பொறுத்த வரையில் கம்பெனிச் சட்டம் தனியாக இருக்கிறது. அதனால் நாம் அதில் தலையிட வேண்டாமென்று முடிவு செய்திருக்கிறோம். இப்போது, இருக்கிற நிலைமை 1860-ம் ஆண்டு சட்டப்படி இதிலே பதிவு செய்து கொள்ள வாய்ப்பு இருந்தது. ஆகவே, அதை மாற்றி புதிதாக மாநில அளவில் ஒரு சட்டம் கொண்டுவரக்கூடிய முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இதில் புதிய கொள்கை அல்லது அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்துவது என்று சொல்வது சரியல்ல. இப்படி ரொம்ப கற்பனைச் செய்யக் கூடாது; ஏதோ ஓரளவுக்கு கற்பனை செய்துக் கொள்ளலாம். ஆனால் இந்த அளவுக்குக் கூடாது. எந்த அதிகாரத்தைக் கொடுத்தாலும் தவறு நடக்கலாம்; நடக்காது என்று நான் சொல்லவில்லை. அதைச் சுட்டிக் காட்டினால் திருத்திக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் ஒரு நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட மசோதா என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத நிறுவனங்களைப் பொறுத்தவரை, பல்வேறு கருத்துக்கள் இருக்கலாம். இங்கே பல கருத்துக்கள் விவாதிக்கப் பட்டன. மத நிறுவனங்களுக்கு ஆப்ஷன் கொடுத்துவிட்டால் ஆட்சேபனை இல்லாமல் போய்விடும். இல்லாவிட்டால் மத நிறுவனங்களில் அரசாங்கம் தலையிடுகிறது என்ற குற்றச்சாட்டு வரும்; அது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று கூட சொல்வார்கள். ஆகவே, மத நிறுவனங்களுக்கு ஆப்ஷன் கொடுத்துவிட்டோம். பொதுவாக நன்றாக நடைபெறுகிற மத நிறுவனங்கள் நிச்சயம் இதைப் பயன்படுத்திக் கொள்ளும். அவர்களே அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற பயம் எல்லாம் அரசாங்கத் தலையீட்டினால், மத நிறுவனங்களுக்கு தீமை ஏற்படுமோ என்பதில்தான். அந்த பயம் ஏற்படாமல் இருக்க, ஆப்ஷன் கொடுத்தோம். அவர்களே இதை உணர்வார்கள் என்று அரசாங்கம் நம்புகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய முன்வந்தால், அவர்களுக்கு சில உரிமைகள் இருக்கின்றன. 'சூட்' போட, நீதிமன்றங்களுக்குச் செல்ல இடம் இருக்கிறது. ஆகவே, அவர்களே விரும்பி வரவேண்டுமென்ற எண்ணத்தில். அரசாங்கத்தின் தலையீடு வேண்டாம் என்ற முறையில் இந்த ஏற்பாட்டைச் செய்தோம். ஆகவே, இதில் விவாதத்திற்குரிய பிரச்சனை எதுவும் இல்லை.



நிர்வாகத்தில் சிக்கல் வரலாம். புதிதாக இந்தச் சட்டத்தைக் கையாளும்போது நாடு முழுவதும் உள்ள அத்தனை சங்கங்களும் உடனடியாக இந்தச் சட்டத்தின் கீழ் வரும்போது பல நிர்வாகச் சங்கடங்கள் இருக்கும். அதிகமான அளவில் நிர்வாக இயந்திரத்தை முடுக்கிவிட வேண்டிவரும். எத்தனை சங்கங்கள் இந்தச் சட்டத்தின் கீழ் வருகின்றனவோ அதற் கேற்ற வகையில் நிர்வாகத்தை மாற்றியமைக்க அரசு உறுதி தர தயாராக இருக்கிறது. இதில் பெரிய விவாதத்திற்குரிய பிரச்சனை ஒன்றும் இல்லை. அரசாங்கம் இந்தச் சட்டத்தை எந்தவிதமான துஷ்பிரயோகத்திற்காகவும் கொண்டுவரவில்லை. நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டது இச்சட்டம். எல்லா மக்களும் விரும்பிய ஒரு மசோதா என்ற முறையில் இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRUMATHY T. N. ANANTHANAYAKI : It has been stated that the Registrar *suo motu* can enquire into the whole thing and wind up the society. That may lead to abuse of power by the Registrar. 'On application' என்று வைத்திருக்கிறோம் 'on application' மாத்திரம் வைத்துக்கொள்ளுங்கள், 'சுவோ மோட்டு' தேவையில்லை.

One more clarification. 'optional registration' வைத்திருக்கிறோம். Religious institutions need not register themselves. Clause 4 deals with compulsory registration of certain societies.

19 மெம்பர்கள் இருந்தால் கம்பல்சரி இல்லை. 20 மெம்பர்கள் இருந்தால் கம்பல்சரி ரெஜிஸ்டிரேஷன் என்று இருக்கிறது. 10,000 ரூபாய் வருமானம் என்றாலும் கட்டாயம் பண்ண வேண்டுமென்று போட்டிருக்கிறோம். 20 மெம்பர்கள் இருந்தால் கட்டாயம் என்று இருக்கும்போது 10,000 ரூபாய் வருமானம் என்பதும் தேவையா? இதை கிளாரிஃபை செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கிளாஸ் 4 என்பது 'சப்ஜெக்ட் டு தி ப்ரொவிஷன்ஸ் ஆஃப் சப்-கிளாஸ்ஸஸ் 3 அண்ட் 4' என்று இருக்கிறது. ஆகவே, கம்பல்ஷன் வரவில்லை.

'சுவோ மோட்டு' வேண்டுமா வேண்டாமா என்று நீண்டநேரம் விவாதிக்கப் பட்டிருக்கிறது. 20 அங்கத்தினர்களும் சேர்ந்து ஒரு தவறை செய்துவிட்டு, அதை வெளியே தெரியாமல் செய்துவிடலாம். ஆகவே, தவறு நடக்கிறது என்று தெரிந்தால் நடவடிக்கை எடுக்க அரசாங்க அதிகாரிகளுக்கு அதிகாரம் இருக்கவேண்டும். அங்கத்தினர்கள் தவறு நடக்கிறது என்று மனு போட்டால் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு உண்டு. எல்லோரும் சேர்ந்து தவறு செய்யும்போது அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. நடவடிக்கை எடுக்க அதிகாரம் வேண்டும்.

பொன்னப்ப நாடார் அவர்கள் கூட சில தவறுகளை எடுத்துச் சொன்னார்கள். அங்கத்தினர்கள் தவறை வெளியே சொல்லாவிட்டாலும், பொதுமக்களே சில தவறுகளை சுட்டிக்

காட்டும்போதும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க அதிகாரம் வேண்டும். அதிகாரம் இல்லாவிட்டால் கூட துஷ்பிரயோகம் நடக்கும். ஆகவே, அப்படி நடக்கும்போது அதிகாரிகளே முன்வந்து நடவடிக்கை எடுக்கும் வகையில் அதிகாரம் தர வேண்டியிருப்பதால் இது தேவைப்படுகிறது.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. கு. காமாட்சி) : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/72) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டது.

CLAUSE 3.

MR. CHAIRMAN (THIRU K. KAMATCHI) : The question is :

"That clause 3 do stand part of the Bill ".

THIRU N. K. PALANISAMY : Sir, I move :

1. "In clause 3, in sub-clause (1) *delete* the words "cottage industries" occurring in line 4.

2. In sub-clause (2), *for* the words "seven persons" occurring in line 5, substitute the wor ls "ten persons".

The amendment was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் இருக்கிறது. அதன் கீழே,

In sub-clause (2) it has been stated that "notwithstanding anything contained in sub-section (1), no association which has for its object the improvement of the economic condition of workmen....shall be registered under this Act."

காட்டேஜ் இண்டஸ்ட்ரியை அபிவிருத்தி செய்வது என்றால் 'ஓர்க்மான் கண்டிஷனை இம்புருவ்' செய்யாமல் எப்படி முடியும்? அதேமாதிரி கிராப்ட்ஸ் இருக்கிறது. அதை எப்படி இம்புருவ் செய்வது? பிரச்சார முறையிலேயா அல்லது வேறு எந்த முறையில்? ஒன்றும் தெளிவாகச் சொல்லப் படவில்லை. 'லேகாக' இருக்கிறது. இன்னின்ன முறையில் அபிவிருத்தி என்று சொல்லியிருந்தால் சரியாக இருக்கும். அதைக் கொஞ்சம் விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு சங்கத்திற்கும் என்னென்ன குறிக்கோள் இருக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. அவர்கள் என்னென்ன குறிக்கோள் வேண்டுமென்றாலும் வைத்துக் கொள்ளலாம். அதைக் கட்டுப்படுத்துவது இந்த சட்டத்தினுடைய நோக்கம் அல்ல. அவர்கள் சில குறிக்கோள்களுடன் சங்கம் வைக்கும்போது, அது இந்தச் சட்டத்தின் கீழ் வரும். அதில் தவறில்லை.

திரு. என். கே. பழனிசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டது.

*Clause* 4.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): பேரவை முன்னுள்ள கேள்வி:

பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும்.

THIRU K. T. K. TANGAMANI : Sir, I move the following amendment :—

"In clause 4, delete sub-clause (3) and renumber sub-clause (4) as sub-clause (3)."

The amendment was duly seconded.

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment :—

In sub-clause (*a*) for the words "twenty members", substitute the words "ten members".

In sub-clause (*b*) for the words "ten thousand rupees", substitute the words "one thousand and five hundred rupees".

The amendment was duly seconded.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இந்த மசோதாவின் பேரிலே விவாதம் நடைபெறுகிறபோது, நான் இந்தப் பிரச்னை பற்றி சற்று விரிவாக எடுத்துச் சொன்னேன். ஏற்கனவே மசோதா இங்கே சமர்ப்பிக்கப்பட்டபோது, இந்த 4-வது பிரிவு இல்லவே இல்லை. இந்த 4-வது பிரிவு புதிதாக சேர்க்கப்பட்டு இருக்கிறது. சாதாரணமாக இந்த 4-வது பிரிவு இல்லாமல் இருந்தால் கூட வேறு குறைபாடுகள் இருந்து இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். நான் இந்த ஒரு திருத்தத்தைக் கொடுத்ததற்கான நோக்கம், பொதுவாக இந்த 4-வது பிரிவு தேவையில்லை என்ற முறையில் திருத்தம்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 15

கொடுத்து இருக்க வேண்டும். அப்படிக் கொடுத்து இருந்தால், இந்த திருத்தத்தை இங்கே ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள், நீங்கள் நிராகரித்து இருப்பீர்கள் என்ற காரணத்தால்தான் If amendment for deletion of whole clause is given, it is not admitted here அந்த ஒரு காரணத்தினுலேதான் இந்த சப்-கிளாஸ் போட்டு, அந்த கிளாசின் பிரிவு அம்சத்தைத் திருத்தவேண்டும் என்று சொன்னேன். நான் ஏற்கனவே குறிப்பிட்டு இருக்கிறேன்.

*Societies which may be registered.*—(1) Subject to the provisions of sub-section (2) any society which has for its object the promotion of education, literature, science, religion, charity, social reform, art, crafts, cottage industries, athletics, sports including indoor games, recreation, public health, social service, cultural activities the diffusion of useful knowledge or such other useful object with respect to which the State Legislature has power to make laws for the State, which may be prescribed, may be registered under this Act.

அப்படி, 3-வது பிரிவை நாம் ஏற்கனவே உருவாக்கி இருக்கிறோம். அந்த 3-வது பிரிவு பொறுக்குக் குழுவிற்கு போவதற்கு முன்பாகவே,

Science, Religion, Charity, Social reform, arts, Crafts, Cottage Industries, Athletics they were all included

அப்படி இன்குளூடு செய்துவிட்டு, பின்னுலே இந்த மாதிரி கம்பல்சரி ரிஜிஸ்டிரேஷன் சிலருக்கு இருக்கவேண்டும் என்று சொல்வது மாதிரியாகச் சொல்லிவிட்டு, அப்படி கம்பல்சரி ரிஜிஸ்டிரேஷன் இருக்க வேண்டுமென்று சொன்னுல் 20 பேருக்கு மேல் இருக்கவேண்டும், கம்பல்சரி ரிஜிஸ்டிரேஷன் இருக்க வேண்டுமென்ருல், whose annual gross income or expenditure in any financial year after the date of commencement of this Act is not less than ten thousand rupees.

மதப்பிரச்சாரம் செய்வதற்கு இன்று எவ்வளவோ அமைப்புகள் இருக்கின்றன. இன்று நிரந்தரமாக இருக்குப சில மதங்கள் இருக்கின்றன இன்று மதத்தின் பேரால் சில ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவைகள் ஜனங்களை ஏமாற்றி வருகின்றன. அது குறித்து நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். ஒவ்வொரு நகரத்திலும் இப்படி இருக்கிறது. அப்படி ஏற்பட்டு இருக்கும் ஸ்தாபனங்கள் குறித்து

Nothing in this section shall apply to any society which has for its object the promotion of religion

என்று சொல்லி விடுவார்கள். அப்படி ப்ரமோஷன் ஆப் ரிலிஜன் என்று சொல்லிக் கொண்டு, அவர்கள் எதையும் செய்யலாம் என்ற நிலை ஏற்படுகிற காரணத்தால், ஏற்கனவே



1975 ஏப்ரல் 15] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நம்முடைய மசோதா வந்தபோது, பதிவு செய்ய வேண்டியதில், ப்ரமோஷன் ஆப் ரிலிஜனும் இருக்க வேண்டுமென்று சொல்லி விட்டு, பிறகு வேறு சில பிரிவுகளைச் சேர்த்து விட்டு, கடைசியில் இந்த மாதிரி அது இருக்கவே வேண்டியது இல்லை என்று சொல்வது

Nothing in this section shall apply to any society which has for its object the promotion of religion.

பிறகு கடைசியில் இந்த மாதிரி சேர்த்துக்கொள்வது, என்பது.

It is defeating the very purpose of this legislation என்று நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்று மதத்தின் பெயரால் புதிய புதிய ஸ்தாபனங்கள் தோன்றுகின்றன. சில ஸ்தாபனங்களின் பெயரைக் கூடச் சொல்ல முடியும். அமைச்சர் அவர்கள் கொஞ்சம் விசாரித்துப் பார்த்தால் தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் இந்த மாதிரி ஸ்தாபனங்கள் உருவெடுத்து, ஜனங்களை ஏமாற்றிக் கொண்டு இருக்கின்றன என்பது தெரியும். இந்த ஏமாற்றுதலைத் தடுக்கவேண்டுமென்ற அடிப்படையில், அவற்றையும் பதிவு செய்ய வேண்டுமென்று இந்த மசோதாவில் கொண்டு வந்து விட்டு, பிறகு இதிலே விதிவிலக்கு தருவது சரியல்ல என்று தெரிவித்து, என்னுடைய திருத்தம் ரொம்ப முக்கியமான திருத்தம். இந்த மசோதாவின் நோக்கம் தடைபடுவதை தடுக்கும் திருத்தம். இந்த மசோதாவின் நோக்கத்தை நிறைவேற்ற உதவிகரமாக இருக்கும் திருத்தம் என்று தெரிவித்து, என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, என்னுடைய திருத்தம் 7 பேர் என்பதை 10 பேர் என்றும், 10,000 ரூபாய் என்று இருப்பதை 1,500 ரூபாய் என்றும் மாற்றவேண்டும் என்பதாகும். 7 பேர் என்று இருக்கிறபோது, 4 பேர் மெஜாரிட்டி ஆகிறது. இந்த 4 பேர் எதை வேண்டுமானாலும் செய்யலாம். தி ஆப்ஜெக்ட் ஆப் தி சொஸைடி எதுவாக இருந்தாலும் கட்டாயமாக அதை பதிவு செய்ய வேண்டுமென்று இருக்கிறது, ஆகவே, அந்த சொஸைடி சரியான முறையில் நடத்துவதற்கும், நிர்வாகத்திற்கும் சரியாக இருக்கும் வகையில், மெஜாரிட்டி 5 பேராக இருக்கவேண்டும், ஆகவே, 10 பேர் என்று இருந்தால் இது சரியாக வரும்.

முதலில் 2,500 ரூபாய் வரையில் வருமானம் வரும் சொஸைடிகள் அல்லது செலவு செய்யும் சொஸைடிகள் ரிஜிஸ்டிரேஷன் செய்யலாம் என்று இருந்தது. இப்போது 10,000 ரூபாய் என்று மாற்றியிருக்கிறார்கள். அது சரியல்ல, ஏனென்றால் இப்போது ஏராளமான சொஸைடிகள் இருக்கின்றன. 20 பேர் சேர்ந்தால் சொஸைடி ரிஜிஸ்டிரேஷன் செய்யவேண்டும். 18 பேர் கூட இருக்கலாம். அந்த சொஸைடி

[திரு. என். கே. பழனிசாமி] [1975 ஏப்ரல் 15

அப்போது ரிஜிஸ்டிரேஷன் ஆகாது. ஆகவே, 10 பேர் இருக்க வேண்டும், 7 பேருக்கு மேல் வைத்தால் நல்லது. வருமானம் ரூபாய் 1,500-க்கு மேற்பட்டு இருப்பவை ரிஜிஸ்டிரேஷன் செய்ய வேண்டும் என்று கொண்டு வரவேண்டும். சர்க்காருக்கு இதிலே நஷ்டம் ஒன்றும் இல்லை. சொசைடிகளிடமிருந்து வசூல் செய்து செலவை சரிக்கட்டி விடலாம். இதை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லி, என் திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, திரு. தங்கமணி அவர்கள் கொடுத்து இருக்கும் தீர்மானத்தை நான் கடுமையாக எதிர்க்கிறேன். ஏனென்றால், அதில் என்ன சொல்லியிருக்கிறது என்றால் சப்-கிளாஸ் 3-ல்

Nothing in this section shall apply to any society which has for its object the promotion of religion, athletics or sports including indoor games

ஏதோ வெறும் மத நிறுவனங்களுக்கு மாத்திரம் எக்சம்ஷன் செய்தது மாதிரி சொல்லியிருக்கிறார்கள். பல நிறுவனங்களுக்கு நாம் கொடுத்து இருக்கிறோம். மதத்தின் பெயரால் ஜனங்களைக் கெடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஜனங்களைக் கெடுக்க வேண்டுமென்றால் எப்படி வேண்டுமானாலும் கெடுக்கலாம். அரசியலின் பெயரால் கெடுக்கலாம். மற்ற நிறுவனங்களின் மூலமாகவும் கெடுக்கலாம். அந்த நிறுவனங்களில் யார் யார் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து இருக்கிறது. மத அடிப்படையில் ஆரம்பிக்கும் சங்கங்கள் எல்லாம் மக்களைக் கெடுக்கிற மாதிரி தங்கமணி அவர்கள் பேசுவது ரொம்ப வருந்தத்தக்கதாக இருக்கிறது. மதத்தின் பேரால் ஆரம்பிக்கப்படுகிற சங்கமாக இருந்தாலும், அதிலேயும் நான்கு பேர் இருந்து நடவடிக்கைகளை கவனித்துக்கொண்டு தான் இருப்பார்கள். மதத்தின் பேரால் ஆரம்பிப்பதற்கு மட்டுமல்லாமல்

Nothing in this section shall apply to any society which has for its object the promotion of religion, athletics or sports (including indoor games).

மற்றவற்றிற்கும் என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-30)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு கே. டி. கே. தங்கமணி : கொஞ்சம் கரெக்ட் செய்ய வேண்டுமென்று சொல்கிறேன். நம்முடைய உறுப்பினர் படிக்கக் கூடியது ஒரிஜினல் பில் என்று நினைக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்கள் தான் பழைய செலக்ட் கமிட்டி பில்லை கொண்டு வந்து வைத்து பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்.



1975 ஏப்ரல் 15]

MR. DEPUTY SPEAKER : In the Gazette of 23rd December, this has been published. The Bill as amended by the Select Committee only we are considering now.

THIRU A. SUBRAMANIAM : இப்பொழுதுதான் பில்லை நான் வாங்கிக்கொண்டு வருகிறேன். அதிலே வந்து பக்கம் 12 லே. . . .

THIRU K. T. K. TANGAMANI : Regarding this particular matter, blanket exemption is given—' any society which has for its object the promotin of education, literature, etc. Then later on, optional registration is given—any society which has for its object the promotion of religion. athletics, etc............' In clause 5 Optional Registration is given. But in clause 4 (3) it is said 'nothing in this section shall apply to any society which has for its object the promotion of religion'.

THIRUMATHI T. N ANANDANAYAKI : I am only talking about clause 4, sub-clause (3)........... Nothing in this section shall apply to any society which has for its object the promotion of religion (Interruption) In clause 5......................

THIRU K. T. K. TANGAMANI : Sir, I seek your protection. The Bill given to us is wrong. There was a Select Committee report given to us and the full report is here. The Bill as amended is a new Bill with some additions, etc. So, we are not discussing the Bill as given by the Select Committee. I would like to know which is the correct Bill.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இரண்டு உறுப்பினர்களும் ஒரே பில்லைத் தான் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரே பிரச்சினையைத் தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசி முடிக்கட்டும், நான் பதில் சொல்லுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஊருக்குப் போவதற்கு முன்னால் நான் இதை பில் செக்ஷனில் தான் வாங்கிக் கொண்டு போனேன். அதிலே ஏதாவது தப்பு இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. வெறும் ''ரெலிஜனுக'' இருந்தாலும் கூட நான் சப்போர்ட்டு பண்ணுகிறேன். மதத்தின் அடிப்படையிலே அதை ஏமாற்ற வேண்டும் என்பதில்லை. ஸ்போர்ட்ஸ், கேம்ஸ் அடிப்படையிலும் ஏமாற்றலாம். மதத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கின்ற சங்கங்களுக்கு அது கொடுக்கப்பட்டது என்றால், மத அடிப்படையிலே இருக்கும் சங்கங்களிலே அரசாங்கத்தின் தலையீடு இருக்கக்கூடாது என்ற நல்ல எண்ணத்தினால் தான் கொடுத்திருக்கிறார்கள். ரிஜிஸ்டர் ஆகிவிட்டால், ரிஜிஸ்டிரார் கட்டாயமாகத் தலையிடலாம். ஆட்சியிலே இருப்பவர்களுக்கு மதத்திலே நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். நாளைக்கு ஆட்சிக்கு தங்கமணி அவர்களே வருகிறார் என்றால்,

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 ஏப்ரல் 15

ஒரு சொசைட்டி கூட இருக்கக் கூடாது என்று சொல்லி, நோட்டீஸ் கொடுத்து கலை என்று சொன்னால் கஷ்டமாகிவிடும். அந்த வகையிலே அவர்கள் ஆட்சிக்கு வந்து அவ்வளவு சுலபமாக இந்த காலத்திலே செய்து விடுவார்கள் என்று நான் நினைக்க வில்லை.

இன்றைக்கு இருக்கும் நிலைமையிலே மத அடிப்படையிலே இருக்கும் சங்கங்களிலே எல்லாம் கட்டாயமாக ரிஜிஸ்டர் பண்ண வேண்டும். மதச் சங்கங்களை குறிக்கோளாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று கூறுவது தவறு. எந்த மதமாக இருந்தாலும் சரி, அது கிறிஸ்தவ மதத்திலே ஆரம்பிப்பவர்களானாலும், இஸ்லாமிய மதத்திலே ஆரம்பிப்பவர்களானாலும் சாதாரண மாக என்ன நினைக்கிறோம் என்றால் மத அடிப்படையில் ஆரம் பிக்கின்ற சங்கங்களிலே இந்த லௌகீகத்தின் கரங்கள் படக் கூடாது. அரசாங்கத்தின் கரங்கள் அங்கே போய் அவஸ்தை கொடுக்கக் கூடாது என்று தான் சொல்லுகிறோம். அந்தச் சங்கங் களிலே இருக்கின்ற உறுப்பினர்களே கவனித்துக் கொள்கிறார்கள் அப்படி இல்லை என்றால் பொது மக்கள் கவனித்துக் கொள் கிறார்கள். யாருமே தங்கள் மதத்திற்கு இழுக்கு ஏற்படுவதை பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவே, அரசு இந்த திருத்தத்தை ஏற்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> மத நிறுவனங்களைப் பற்றி திரு. கே. டி. கே. தங்மணி அவர்கள் எழுப்பினார்கள், அதற்கு பதில் சொல்லிவிட்டேன்.

அம்மையார் அவர்கள் சில கருத்துக்களை சொன்னார்கள். இது ஆய்வுக் குழுவிலே பரிசீலித்து எல்லோரும் ஏற்றுக்கொண்ட கருத்து என்ற அடிப்படையில் தான் இந்த மத நிறுவனங்களைப் பொறுத்தவரையில் நாம் கட்டாயப்படுத்த வேண்டாமென்று சொல்லியிருக்கிறோம். அதிலே ஒரு பிரிண்டிங் மிஸ்டேக் பற்றி கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். பின்னாலே "கரெக்ஷனல் ஸ்டேட்மெண்ட்" கொடுத்திருக்கிறார்கள். ரெலி ஜனோடு ஸ்போர்ட்ஸ், கேம்ஸ் போன்றவற்றிற்கும் எக்சம்ஷன் கொடுத்திருக்கிறார்கள். இது இருக்கின்ற காரணத்தினால் தான் 5 ஆவது பிரிவை கொண்டு வந்து அதற்கு ஒரு "ஆப்ஷன்" கொண்டு வந்திருக்கிறோம். அதிலே எந்தவிதமான தவறும் கிடையாது. 20 பேர் இருந்தால் தான் கட்டாயம் என்று போட்டிருக்கிறோம். 7 பேர் இருந்தாலே ஒரு சொசைட்டியை ரிஜிஸ்டர் பண்ணிவிட முடியும். இப்படிச் செய்ததன் மூலம் மதச் சங்கங்கள் பல நன்மைகளைப் பெறக்கூடும் என்று சொல்லிக் கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 15]

திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. என். கே. பழனிச்சாமி ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

<u>பிரிவு 5.</u>

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன் னுள்ள கேள்வி: "பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பதியாக ஆக்கப்பட வேண்டும்."

<u>திரு. கே. டி. கே. தங்கமணி :</u> பிரிவு 5-ல் மறுபடியும் விவரம் சொல்ல வேண்டியிருக்கிறது. நான்காவது கிளாசில் பொது விவரங்கள் கொடுத்த பிறகு இந்த 5-வது பிரிவு என்பது அவசியம் இல்லை. அது இருப்பதனாலே புதிதாக எந்தப் பலனும் ஏற்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> ஏற்கனவே நான் பதில் சொல்லியிருக்கிறேன். நாம் இதற்கு விதிவிலக்குக் கொடுத்து விட்டாலும், மத நிறுவனங்களில் அரசாங்கத்தின் தலையீடு இருக்கக்கூடாது என்று கருதியதனாலும், அவர்களுக்கு சில சலுகைகள் இந்தச் சட்டத்தின் கீழே கிடைக்கும். அதாவது, நீதி மன்றத்திற்குச் செல்வது போன்றவை. அவர்களாக முன்வந்தால் பதிவு செய்ய, வேண்டுமென்றுதான் விதிவிலக்கு கொண்டுவந்திருக்கிறோம்.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டது.

பிரிவு 6 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

<u>பிரிவு 7.</u>

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி; "பிரிவு 7 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU N. K. PALANISAMI : Sir, I move :—

In Sub-clause (2), for the words 'seven members', substitute the words 'ten members'. The amendment was duly seconded. ஏழு மெம்பர்கள் இருக்கிறார்கள். அதிலே ஒரு மெம்பர் அட்டெஸ்ட் பண்ண வேண்டுமென்று இருப்பது சரியா என்பது தான் இன்றைய நிலைமை. அவர்கள் மெம்பராக இருந்துகொண்டு அவர்களிலே ஒரு மெம்பர் அட்டெஸ்ட் செய்வது என்பது சரியில்லை. அதை எடுத்துவிடவேண்டும்.

[1975 ஏப்ரல் 15

திரு. கே. டி. கே. தங்கமணி : எந்தக் குறிப்பிட்ட ஸ்தாபனத்தையும் பதிவு செய்ய வேண்டுமென்றால் இந்தியன் ட்ரேட் யூனியன் ஆக்ட் இருக்கிறது. அதிலே ஏழு பேர் மனுச் செய்தால் பதிவு பண்ணலாமென்று இருக்கிறது. ஏழுபேர் உண்மையில் தொழிலாளர்கள்தானா, அந்தத் தொழிலில் வேலை செய்கிறவர்களா என்றுதான் பார்க்க வேண்டுமே தவிர அந்த ஏழு தொழிலாளர்களின் கையெழுத்துக்கு அங்கீகாரம் பண்ணுவது, பிரிட்டிஷார் காலத்தில் இருந்த ஒரு போக்கு. தங்களுடைய கையெழுத்துக்கே அட்டெஸ்ட்டேஷன் வாங்க வேண்டுமானால் அந்த ஸ்தாபனத்தையே அவமானப் படுத்துவது போல் இருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திரு. என். கே. பழனிசாமி சொன்னார் என்பதற்காக அதையே திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் ஆதரித்துப் பேசுகிறார். ஏழு பேர் இந்தச் சட்டத்தின்படி கையெழுத்துப் போட்டு அதிலே சேரவேண்டும் என்று இருக்கிறது. இந்த ஏழு கையெழுத்துக்களுக்கும் அட்டெஸ்டேஷன் வேண்டுமென்பது ஒரு சாதாரண முறைதான். இதில் எந்தவிதமான தவறோ அல்லது உறுப்பினர்களை இழுக்குப்படுத்தும் நிலைமையோ ஒன்றுமில்லை. அது ஒரு முறைக்காகப் போடப் பட்டதுதான்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 7 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 8 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## பிரிவு 9.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 9 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

திரு என். கே. பழனிசாமி : ரிஜிஸ்டர் பண்ணக் கூடிய சொசைட்டிகள் பூராவும், in sub-clause (2), it is said—

Except with the previous sanction in writing of the Government, no society shall be registered by a name which contains any of the following. words, namely, 'Co-operative', or 'Land Development', etc., etc. இந்தமாதிரி பெயரில் புதிதாக பதிவு செய்யக் கூடிய சொசைட்டிகள் பெயர் இருக்கக்கூடாது என்று இருக்கிறது. ஆனால்



1975 ஏப்ரல் 15] [திரு. என். கே. பழனிசாமி]

ஏற்கனவே அந்த பெயரில் இயங்கும் சொசைட்டிகளைப் பற்றிய நிலை என்ன? முன்பு அப்படி இருக்கலாம் என்று சொல்லி விட்டு இப்போது மாத்திரம் இருக்கக் கூடாது என்று சொன்னால் பெரிய கன்ஃபியூஷன் ஏற்படும். எல்லாவற்றுக்கும் பொதுவாக பெயர் இருக்கக் கூடாது என்பதுதான் பிரச்சனை. ஆகவே அந்த அளவில் மாற்றி அமைக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கன்ஃபியூஷனைத் தடுக்க வேண்டுமென்று தான் இந்தப் பிரிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருப்பதைப் போய் நாம் மாற்றக்கூடாது. புதிதாக வருகிறபோது இப்படிச் செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத் தோடு தான் போடப்பட்டது.

பிரிவு 9 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## *Clause* 10.

MR. DEPUTY SPEAKER : The question is:

"That clause 10 do stand part of the Bill".

THIRU N. K. PALANISAMY : Sir, I move :

"In clause 10, *for* sub-clause (1) *substitute* the following :

" The Registrar on being satisfied that a society has complied with the provisions of the Act and the rules made thereunder as to registration and on being satisfied that a new society will work successfully, shall issue certificate of registration or rejection within a period of sixty days with the reasons therefor."

The amendment was duly seconded.

இதிலே பெயர், விலாசம் மட்டும் இருந்தால் போதாது. அந்த சொசைட்டி ரிஜிஸ்டர் செய்தால் சரியான முறையில் ஃபங்ஷன் பண்ணும் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு உண்டாக்கக்கூடிய முறையில் எதையும் பார்க்க வேண்டும். ஆகவே, சட்டப்படி அப்ளிகேஷன் இருக்கிறதா என்பதோடு அல்லாமல் இதை ரிஜிஸ்டர் செய்தால் சரியான முறையில் நடக்குமா என்பதைப் பார்க்க வேண்டும்.

இன்னொன்று 60 நாட்களுக்குள் ஒரு அப்ளிகேஷனைக் கொடுக்க வேண்டும் என்றிருக்கிறது. ஆகவே, 60 நாட்களுக் குள்ளாக சொசைட்டி ரிஜிஸ்டர் செய்யப்படுமா என்பதைச் சொல்ல வேண்டும். அப்படிச் செய்யப்படாவிட்டால் 60 நாட் களுக்குள் வரக்கூடாது என்ற அந்த காரணத்திற்காக சொசைட்டி யை ரிஜிஸ்டர் செய்ய முடியாது என்பதையும் தெளிவாக்க வேண் டும் என்பதுதான் திருத்தம். ஆகவே, இதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். காரணம் இன்றிருக்கிற ஸ்டாஃப் வேலை செய்வதை பார்க்கும் போது அப்ளிகேஷன் போட்ட நீண்ட நாட்களுக்குப் பிறகும் சர்ட்டிபிகேட் வருமா என்பது சந்தேகமாக இருக்கிறது. குறிப்பிட்ட காலத்தில் சர்ட்டிபிகேட் வருமா என்பதைப் பார்க்க வேண்டும்.

No application shall be delayed more than such and such a period. If there is delay, there must be a provision relating to that.

இதைச் செய்வதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். இல்லை என்றால் அவர்கள் விருப்பு, வெறுப்பிற்கேற்ப கிடப்பிலே போட்டு வைப்பார்களானால் நிலைமை என்னவாகும்? ஆகவே, இதுபற்றி சட்டத்தில் தெளிவாக்க வேண்டும். இல்லையென்றால் ரூல்சில் தெளிவாக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாக, இதுபோன்றவைகளை விதிகளில் கொண்டு வரவேண்டும். சட்டத்தில் போடக்கூடாது என்பதுதான் நம் முடிவு. காரணம் இப்போது 30 நாள் என்று போடுகிறோம். அனுபவத்தில்தான் இது முடிவு செய்யப்படும். பழனிசாமி அவர்கள் பதிவு செய்வதற்கு முன்னாலேயே அதன் நோக்கம் நிறைவேற வேண்டுமென்று சொல்கிறார்கள். அது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே அப்படி பதிவு செய்யப்பட்டால் ஒழுங்காக நடைபெறுமா என்பதை பின்னால் உள்ள பிரிவுகள் முடிவு செய்யும்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 10 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 11.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி, "பிரிவு 11 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU K. T. K. TANGAMANI : It has been very clearly stated in the Statement of Objects and Reasons that there is no provision in the Act permitting change of name of a society

இந்த அடிப்படையில் இந்த கிளாஸ் தந்திருப்பது நன்றாக இருக்கிறது. இருந்தாலும் It is not very happily worded என்பதற்கு வெஸ்ட் பெங்காலில் இருக்கிற அமைப்பை வாசிக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.



*Clause* 11 : "*State Government may direct change of name*—(1) If a society is registered under a name or alters its name to another name which, in the opinion of the State Government ,is identical with, or too nearly resembles, the name of any other society or body corporate which having been previously registered or incorporated under this Act or any other law for the time being in force, or being deemed to have been registered under this Act, continues to exist the State Government may by order made in this behalf direct such society to change its name and alter its memorandum within three months from the date of the order or such longer period as the State Government may think fit to allow.

(2) No change of name shall affec t the rights and liabilities of society or any legal proceedings by or against the society.

(3) In case of non-compliance with an order under sub-section (1), every officer in default shall be punishable........ etc., etc".

This is more comprehensive. In the West Bengal Act the rights and liabilities are protected.

இதிலே பெயரை மாற்றுவதற்கு அமைப்பை ஏற்படுத்தி இருக்கிறார்களே தவிர தெளிவாக இல்லை. வெஸ்ட் பெங்கால் அமைப்பில் தெளிவாக இருக்கிறது. ஆகவே, பல விஷயங்களை இதில் மாற்றம் செய்திருக்க வேண்டும். இருந்தாலும், It is an innocuous provision பின்னால் திருத்த வேண்டிய அவசியம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காலத்தைப் பற்றி ஏற்கனவே சொன்னோம். காலத்தை சட்டத்திலே போடக் கூடாது என்று நாம் முடிவு எடுத்திருக்கிறோம். விதிகளில் போட்டுக்கொள்ளலாம். ஆகவே, இந்தத் திருத்தம் தேவையில்லை.

பிரிவு 11 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 12, 13 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

*Clause* 14.

MR. DEPUTY SPEAKER : The question is "That Clause 14 do stand part of the Bill".

THIRU N. K. PALANISAMY : Sir, I move :

"In clause 14, in sub-clause (1) *after* the words, 'a register containing', *insert* the words 'full signatures'".

The amendment was duly seconded.

__திரு என். கே. பழனிசாமி :__ சார் இதிலே

"Every registered society shall maintain a register containing the names, addresses and occupations of its members"

என்று அவ்வளவுதானிருக்கிறது. ஒரு சிக்னெச்சர் இருக்கும் என்று சொன்னால், நாளைக்கு லீகலாக அக்ஷன் எடுக்க சிக்னெச்சர் டாக்குமென்டரி எவிடன்ஸாக இருக்கும். ஆகவேதான், அதைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

__மாண்புமிகு திரு. செ. மாதவன்:__ அதையெல்லாம் சட்டத்திலே போடவேண்டிய அவசியமில்லை. அங்கத்தினர்களாகச் சேரும்போது, அவர்களுடைய ரூல்ஸில்-பை-லாஸில், அங்கமாக கொண்டு வரலாம்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 14 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

*Clause* 15.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That Clause 15 do stand part of the Bill".

THIRU N. K. PALANISAMY : Sir, I move :

1. "In clause 15, in sub-clause (1) *for* the words 'three members' *substitute* the words 'five members'. "

2. "*For* sub-clause (2) of the said clause, *substitute* the following: 'A copy of Register shall be filed within fifteen days.' "

The amendment was duly seconded.

__திரு. என். கே. பழனிசாமி :__ இப்பொழுது இதிலே 3 பேர்கள் இருந்தால் நிர்வாகம் நடத்தலாம் என்றிருக்கிறது. குறைந்த பட்சம் 3 பேர்கள் இருந்து அந்த சொசைட்டியின் நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், ஜெனரல்பாடி மீட்டிங் வருஷத்திற்கு ஒரு தடவை நடக்கிறது. இந்த 3 பேர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் யாரும் கேட்க முடியாது. ஒரு வருஷத்திற்கு ஒரு தடவை ஜெனரல்பாடி கூடும்போது, மெம்பர்களுக்கும் சொஸைட்டிக்கும் சம்பந்தமே இருக்காது. ஆகவே, நிர்வாகம் என்ன நடத்துகிறதோ, அதை வருஷத்திற்கு ஒரு தடவை கூடும்போது அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமையிருக்கிறது. ஆகவே, 5 பேர்களாக இருந்தால் தவறாக நடக்கக்கூடிய முறையைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

அது மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட மெம்பர்கள் அந்த கமிட்டியினுடைய கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று சொன்னால், நிச்சயம் காலம் வைக்கப்பட வேண்டும். இதிலே ஒன்றும் போடவில்லை. முதலிலே 21 நாள் போடப்பட்டிருந்தது, ஏனோ



அந்த கிளாஸையே எடுத்துவிட்டார்கள். குறைந்தபட்சம் 15 நாள் என்று போட்டு, 15 நாளைக்குள் கூட்டவேண்டுமென்ற பிரிவை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

__மாண்புமிகு திரு. செ. மாதவன் :__ தலைவரவர்களே, அது தான், காலத்தைப் பற்றி நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அதைத்தான் as may be prescribed என்று போட்டிருக்கிறோம். முதல் பிரிவைப் பொறுத்த அளவுக்கு 5 பேர் போட்டாலும் தவறு செய்யலாம், 3 பேர் போட்டாலும் தவறு செய்யலாம். இதிலெல்லாம் அதிகம் தலையிடக் கூடாது என்பதுதான் கொள்கை. ஒரு முறையை வகுத்துவிட்டால் சொஸைட்டியினுடைய நிர்வாகத்திலே அதற்கு மேல் தலையிடுவது சரியல்ல.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 15 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 16 முதல் 25 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

*Clause* 26.

MR. DEPUTY SPEAKER : The question is —

"That clause 26 do stand part of the Bill."

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment :—

In clause 26, *after* sub-clause (3), *add* the following proviso :—

"If no such General Meeting is convened, the Registrar may convene an extrordinary General Meeting."

The amendment was duly seconded.

__திரு. என். கே. பழனிசாமி :__ சார், இப்பொழுது இந்த மசோதாவிலே சொல்லப்பட்டிருக்கக் கூடியது, சில பேர்கள் இந்த சொஸைட்டி கூட்டத்தை மறுபடியும் கூட்ட வேண்டுமென்று சொன்னால் அவர்களே கூட்டலாம் என்பது ஆகும். அவர்கள் ஒரு சமயம் கூட்டக் கூடிய நிலைமை ஏற்பட்டால்; அந்த மினிட் புக்ஸெல்லாம் அங்கே இருக்காது. ஆகவே, ரிஜிஸ்திராரோ அல்லது ரிஜிஸ்திரார் அனுப்பக் கூடிய ஆளோ அந்தக் கூட்டத்தைக் கூட்டக் கூடிய நிலைமை இருந்தால், இந்த மாதிரி மினிட்ஸ் புக்ஸை எடுத்துக் கொள்ளக் கூடிய நிலைமை இருக்காது. ஆகவே, 4, 5 பேர் சேர்ந்து ஜெனரல் பாடி மீட்டிங் கூட்ட வேண்டுமென்று சொன்னால், ரிஜிஸ்திராரோ, அவர் நியமித்த அதிகாரியோ கூட்ட வேண்டுமென்ற நிலைமையிருந்தால்தான் முடியும்.

பல சொஸைட்டிகளிலே என்ன நடக்கிறது? ஒரு ஜெனரல் பாடி கூட்டம் நடப்பது பிடிக்கவில்லையென்றால், மினிட் புக்கை எடுத்துக் கொள்ளக் கூடிய நிலைமையிருக்கிறது. ஆகவே, அந்த மாதிரி இருக்கக் கூடாது என்று சொன்னால், ரிஜிஸ்திராரோ, அல்லது அவரால் அனுப்பப்பட்டிருக்கிற அதிகாரியோ, கூட்டத்தைக் கூட்டினால்தான் இந்தச் சிக்கலைத் தீர்க்கக் கூடிய நிலைமையிருக்கும். ஆகவே, அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒவ்வொரு சொஸைட்டியிலும் நாம் ஜெனரல் பாடி மீட்டிங்கைக் கூட்ட ஆரம்பித்தால், அது நடக்கும் என்று நான் நம்பவில்லை. சட்டப்படி தவறு செய்தால் அதை நீக்க அதிகாரம் இருக்கிறது. இப்படி ஒரு சட்டம் போட்டுவிட்டால், அவர்களே நீதிமன்றம் சென்று பரிகாரம் காண வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இது தேவையில்லையென்று கருதுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 26 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 27 முதல் 58 வரை பேரவையின் முடிவிற்கு விடபட்டு, நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

*Enacting Formula.*

MR. DEPUTY SPEAKER: The question is "That the enacting formula do stand part of the Bill".

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, I move—

"That in the enacting formula, *for* the words 'Twen ty-fifth' *substitute* the words 'Twenty-sixth'".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

முகப்புரை திருத்தப்பட்டபடி பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

*Short Title.*

MR. DEPUTY SPEAKER: The question is —

"That the short title do stand part of the Bill."

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, I move—

That in the short title, *for* the figures '1974', *substitute* the figures '1975'.





திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

குறுந்தலைப்பு திருத்தப்பட்டபடி பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இன்றைக்கு இந்த மசோதாவின் பெயரிலே பல திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் கடைசியிலே நீங்களே தெரிவித்திருந்தீர்கள், பிரிவு 27-லிருந்து எந்த விதமான திருத்தங்களும் கொடுக்கப்படவில்லை என்று. அதாவது, Chapters IV, V, VI and VII இவைகளையெல்லாம் நாம், சாதாரணமாகப் படித்துப் பார்த்தால், ஒரு சொஸைட்டிக்காகப் போடப்பட்ட பகுதிகளா அல்லது ஏதோ கம்பெனிஸ் ஆக்டின் கீழ் வருகிறவைகளா என்றுதான் அச்சப்பட வேண்டியிருக்கிறது. நானும் மற்ற சட்டங்களையெல்லாம் பார்த்தேன். இந்த மாதிரி ஏதோ எல்லா விஷயங்களுக்கும் ரிஜிஸ்திராரிடத்திலே போவது என்றால் எப்படி? இந்த ஹெட்டிங்கைப் பார்த்தாலே 'inspection, enquiry, cancellation, winding-up' ஒரு பெரிய கம்பெனி நடந்து, அதை 'ஒய்ன்ட் அப்' பண்ணுகிற மாதிரியாக இருக்கிறது.

"I think they are more or less obsessed with the idea that it has got something to do with the Companies Act."

இது, சாதாரணமாக சட்டத்திலே, உள்ளே கட்டுப்படுத்துவதற்காக சில ஸ்தாபனங்கள் உருவானால், அந்த ஸ்தாபனங்கள் அரசாங்கத்தின் பார்வையிலே வரவேண்டும், அல்லது சட்டத்திற்குக் கட்டுப்பட்டு வரவேண்டுமென்றுதானேயொழிய இதிலே பல விஷயங்கள் I have to say that it is very redundant. ஆகவே, அமுலுக்குக் கொண்டு வருகின்ற நேரத்திலே அரசாங்கத்திற்குபல சிக்கல்கள் வரும் என்ற காரணத்தாலே, இதையெல்லாம் பரிசிலனை செய்து மற்ற மாநிலங்களின் சட்டங்களையெல்லாம் பார்த்து, இதை விரைவாகக் கொண்டுவரவேண்டும்.

பின்னாலே, 4, 5, 6, 7 சாப்டர்களை எந்த அளவு சுருக்க முடியுமோ அந்த அளவு சுருக்க வேண்டுமென்றும் வேறு ஏதாவது தேவைகள் இருக்குமானால், விதிகளிலே கொண்டுவரலாம். அமைச்சரவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள், விதிமுறை

களிலே கொண்டு வருவோம் என்று. பல விவரங்கள் சட்டத்திலே வந்திருக்கின்றன. இதை அமுல் படுத்துவோமானால், நடைமுறையில் பல சிக்கல்கள் ஏற்படும் என்று எச்சரிக்கை செய்ய ஆசைப்படுகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> தலைவரவர்களே, நிர்வாகத்திலே ஏற்படுகிற பல சிக்கல்களை கவனத்திலே கொண்டு தேவைப்படும்போது, மாறுதல் செய்ய அரசு தயாராக இருக்கிறது என்று நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே கூறியிருக்கிறேன். அந்த உறுதியை மீண்டும் கூற ஆசைப்படுகிறேன்.

ஆனால், கே.டி.கே. தங்கமணி அவர்கள் சொன்னது ஏற்றுக்கொள்ளக்கூடாத ஒன்றாகும். எந்த நோக்கத்திற்காக கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்களோ அந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கம்பெனிஸ் ஆக்டிலே சில அமைப்புகள் வருகின்றன, சொஸைட்டீஸ் ஆக்டிலே சில அமைப்புகள் வருகின்றன. இந்த இரண்டிலும் வராத அமைப்புகள் நாட்டிலே இருக்கின்றன. அந்த அமைப்புகளுக்கு 1960-ம் ஆண்டு சட்டமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது பரிகாரமாகத் தெரியவில்லையென்றுதான் நீண்ட நாட்களாக ஆலோசித்து கொண்டு வரப்பட்டிருப்பது இச்சட்டம். அவர்கள் சொன்ன நோக்கத்திற்காகத்தான் இது வந்திருக்கிறது. இது போன்ற அமைப்புகளைக் கட்டுப்படுத்தக் கூடிய அத்தனை பிரிவுகளும் உள்ள ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்றுதான் ஏராளமான பிரிவுகளைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த நோக்கத்திற்காக, இது பொருத்தம் என்றுதான் கருதுகிறேன்.

புதிதாக, இந்தப் பிரிவுகளைக்கொண்டு கம்பெனிகளைக் கட்டுப்படுத்தும்போது, சொஸைட்டிகளைக் கட்டுப்படுத்தும் போது நிர்வாகப் பிரச்னைகள் ஏற்படும் என்று சொன்னார்கள். அது உண்மைதான். அப்பொழுதைக்கப்பொழுது அதுபற்றி நாம் முடிவெடுக்கலாம்.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> தலைவரவர்களே, '' தமிழ்நாடு 1972-ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச்சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண் 53/72) திருத்தப்பட்டபடிசட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்'' என்று கேட்டுக் கொள்கிறேன்.

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.**



(ஆ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு பந்தய (திருத்தச்) சட்ட முன்வடிவு*
(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8;75).

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே,

'' தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பந்தய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 8/1975) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'' என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1930 ஆம் ஆண்டு பந்தயச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1930) தற்போதைய விதித்துறைகள் செயல்படுவதில், குறிப்பாக பருத்தி விலைகள் குறித்த பந்தயச் சூதாட்டம் மற்றும் அதே வகைப்பட்ட சூதாட்டங்களையொட்டி, அவை செயல்படுவதில் காணப்படும் குறைபாட்டினைத் திருத்தி, அச்சட்டத்தின் விதித்துறைகளைக் கடுமையாக்கும் பொருட்டு தக்க திருத்தங்களைத் தெரிவிக்கும் நோக்குடன், அச்சட்டத்தின் அப்போதைய விதித்துறைகளைப் பரிசீலனை செய்வதற்கென, 1960 ஆம் ஆண்டில் அரசு ஒரு குழுவை நியமித்தது. பருத்தி விலைகள் முதலியவை குறித்த பந்தயச் சூதாட்டத்தின் கேடுகளை ஒடுக்கும் பொருட்டு, கடுமையான நடவடிக்கைகளுக்கு வகை செய்வதற்கு சட்டத்தைத் திருத்துவதற்கு குழு பல கருத்துரைகளைக் கூறியுள்ளது. குழுவின் கருத்துரைகள் அரசால் பரிசீலனை செய்யப்பட்டன. இச்செயல் நோக்கத்துக்காகத் தமிழ்நாடு 1930 ஆம் ஆண்டு பந்தயச் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 3/1930) திருத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை (மத்தியச் சட்டம் 2/1974) செயலுக்கு வந்ததையொட்டி சட்டத்தில் சில திருத்தங்கள் செய்ய இவ்வாய்ப்பு பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் வரும் குற்றங்கள் அனைத்தையும் ஓர்ந்தறியும் குற்றங்களாகச் செய்யவும் இவ்வாய்ப்பு பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு 1930 ஆம் ஆண்டு பந்தயச் சட்டத்தின் புதிய பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. சட்டத்தை மீறி சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்து, சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளவர்களுக்குப் பாதுகாப்பளிக்க புதிய 13-A பிரிவு வகை செய்கிறது.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை இதனை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

---

* 17—3—1975-ம் தேதிய தமிழ்நாடு திறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[1975 ஏப்ரல் 15]

(பிற்பகல் 1·00)

THIRU N. K. PALANISAMY : Sir, I move—

"That the concurrence of the Tamil Nadu Legislative Council be obtained, for setting up a Joint Select Committee of both the Houses consisting of........Members of the Tamil Nadu Legislative Assembly and........Members of the Tamil Nadu Legislative Council, to consider the Tamil Nadu Gaming (Amendment) Bill, 1975 (L. A. Bill No. 8 of 1975) and that the following members of the Tamil Nadu Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee (names of members to be given later)."

The amendment was duly seconded.

THIRU K. M. SUBRAMANIAM : Sir..........

MR. DEPUTY SPEAKER : This Bill does not relate to horse racing. The Hon. Member Thiru K. M. Subramaniam may confine his speech to cotton betting.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Deputy Speaker Sir, the previous 1930 Act has given a liberal interpretation. It includes racing, betting on racing in places other than race club, etc. Today I have given an amendment because of the fact that gaming has increased terribly. There are new gambling dens, clubs and I am very happy that Government has thought it fit to bring an Act, 40 to 45 years afterwards. The previous Act is the Act of 1930. I may even support the amendment moved by the Hon. Member Thiru N. K. Palanisamy to refer the Bill to a Select Committee because there are many points which have to be discussed calmly and then incorporated in the Bill. This is not a small thing at all.

People are running clubs and benami clubs, etc. where a single man is able to earn more than 1,000 rupees per day. Perhaps the Hon. Ministers may not be aware of it. Such things should be prevented. Horse racing is abolished. Good. But what about the betting going on in other places, in clubs, in private places and houses. By that Government is losing several lakhs of rupees.

Just opposite the office of Burma Shell, a curious sort of betting is going on. Number of cars are passing that way. If the total of the number of the cars passing is odd, one rupee is lost. If it is even, five rupees is the gain. Betting is going on like that. Curious ways indeed! What I have said is if one rupee is the bet amount. If it is five rupees, the man who has predicted the even number, gets Rs. 25. It is one to five. That is how it goes on. That shows the mentality of the people. By this legislation, this sort of thing will be put an end to. I welcome it.



1975 ஏப்ரல் 15] [திரு. கே. எம். சுப்பிரமணியம்]

This legislation is necessary since several thousands of families are being ruined by this sort of gaming. I also support the amendment moved by Thiru N. K. Palaniswami that the Bill be referred to a Select Committee. It should not be rushed through. There are several points to be discussed calmly and incorporated in the Bill. Illegal betting has to be put an end to. On that score, I welcome this Bill. Nobody should escape the law.

But since there are many points to be discussed, I support the amendment that it should be referred to a Select Committee: Thank you.

திரு. ஏ. சுப்பிரமணியம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவானது, ஏற்கெனவே இருக்கிற சட்டத்தை இன்னும் கடுமையானதாக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நம் நாட்டிலே சாதாரணமாகச் சொல்கிறார்கள்; அது உண்மை. சட்டங்களுக்குப் பஞ்சம் இல்லை அமுல் படுத்துவதில்தான் பஞ்சம். ஆனால் இந்தச் சட்டம் தொடர்ந்து மீறப்பட்டு வருகிறது.

திரு. கே.எம்.எஸ். அவர்கள் பலவற்றைச் சொன்னார்கள். பலவற்றை நாம் பார்க்கிறோம். சூதாட்டம் நடத்தக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தை யார் அமுல் படுத்துகிறார்களோ அவர்களே சூதாட்டங்களில் ஈடுபடுகிறார்கள். பெரிய இடங்களில் உட்கார்ந்திருப்பவர்கள் சூதாட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

நான் கேள்விப்படுகிறேன். எங்களுடைய மாவட்டத்தில் இருக்கிற சில வசதி படைத்தவர்கள், சில இடங்களில் அதிகாரத்தில் இருப்பவர்களுடன் சூதாட்டம் நடத்தி ஆயிரக்கணக்கில் இழக்கிறார்கள். வேண்டுமென்றே இப்படி ஆயிரக்கணக்கில் பணத்தை விடுவதை ஒரு கலையாக குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். அப்படி விடுவதிலும் அவர்களுக்கு லாபம் இருக்கிறது. அதிகாரிகளைக் காக்காய் பிடிப்பதற்கு இது ஒரு முறை. சூதாட்ட முறையில் அதிகாரிகளிடம் ஏராளமான பணத்தை விட்டுவிடுவது என்றிருக்கிறது. இது ஒரு போட்டி.

இன்னும் சில சமூக விரோதமானச் செயல்கள் எல்லாம் கூட நடைபெறுகின்றன. அதைச் சொல்வதற்கே வாய் கூசுகிறது. பாரிசில் நடைபெறுகிற மாதிரி இங்கும் சில இடங்களில் நடைபெறுகிறது. சட்டம் இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் இத்தகைய கெட்ட நடவடிக்கைகளும் நடக்கத்தான்செய்கின்றன. குறிப்பாக பெரிய இடங்களில் இருப்பவர்கள் இத்தகைய காரியங்களில் ஈடுபடுகிறார்கள்.

இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு தண்டனை அளிக்க சட்டத்தில் இடமிருக்கிறது. நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஈடுபடுகின்ற நபர்கள் மட்டுமல்ல ஏதாவது ஒரு இடத்தில் முறைகேடு நடக்குமானால் ஒரு முறை, இரண்டு முறை தவறு கண்டுபிடிக்கப்பட்டால் அந்த இளப்லப

மூடிவிட வேண்டும். இரண்டாவதாக, அதிகாரிகள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு கடுமையான தண்டனை அளிக்க வேண்டும். வேலியே பயிரை மேய்ந்தால் எப்படி இருக்கும்? அதேமாதிரி இருக்கக் கூடிய அதிகாரிகள் தேவையில்லை. அதிகாரத்தில் இருக்கிற சில அதிகாரிகள் இத்தகைய சூதாட்டங்களில் ஈடுபடுகிறார்கள். அவர்களை அடுத்த அதிகாரிகள் பார்த்தாலும் ஒன்றும் சொல்வதில்லை. ஆக, அதிகாரிகள் இம்மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுத்து, அவர்களுடைய உத்தியோகம் போய்விடும் என்று செய்யாவிட்டால் அவர்களைத் திருத்த முடியாது. சமுதாயத்தையும் திருத்த முடியாது.

சில தீயச் செயல்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகின்றன. அவைகளை எல்லாம் முறைப்படுத்தி, தடுக்க வேண்டுமென்றால் சட்டம் போட்டால் போதாது; பெயரளவில் கடுமை இருந்தால் போதாது; நடைமுறையில் கடுமை இருக்க வேண்டும். அதிகாரிகள் தவறு செய்தால் அவர்களுக்கு மன்னிப்பு இருக்கக்கூடாது. பெரும் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் இத்தகைய தவறு செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்தத் திருத்தத்தில் பயனுண்டு.

திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் நகரிலே நடைபெறுகின்ற, பருத்தி விலையை அடிப்படையாகக் கொண்ட சூதாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் எங்களுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களை நான் தெரிவிக்க வேண்டும்.

இன்றைக்கு எந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டுவந்தாலும் நாங்கள் ஒரு கோணத்தில் இருந்து அதைப் பார்க்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். நாங்கள் ஊழல், ஊழல் என்று சொல்கிற நேரத்தில் அதைத் தனி நபர் தாக்கல் என்று கருதி—ஏணிக்குக் கோணி என்று பதில் அளிப்பதைவிட—அதில் உள்ள நிலை என்ன, அதை எப்படி அகற்றுவது என்பதை அமைச்சர்கள் ஆழ்ந்து பரிசீலித்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும் கிரிமினல் சட்டங்களைக் கொண்டு வருகிற நேரத்தில்தான் அது எந்த அடிப்படையில் செயல்படக் கூடும் என்பதை நாம் பரிசீலித்தாக வேண்டும்.

இன்றைக்குச் சூதாட்டத்தை ஒழிப்பதற்காக என்று கொண்டு வரப்பட்டுள்ள மசோதா இந்த மாமன்றத்தின் முன்னால் இருக்கிறது. சூதாட்டத்தில் ஈடுபடுகிறவர்கள் இதனால் பாதிக்கப்படுவதைவிட அதிகமாக வேறுபல காரணங்களுக்காக—வேறுபல நிரபராதிகள் பாதிக்கப்படக் கூடிய நிலைமை இந்த மசோதாவில் இருக்கிறது. ஒழுக்கத்தை சமுதாயத்தில் உருவாக்குவதற்காகத்தான்—நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இந்த மசோதா இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.



1211, 31 F125



31F175.7132

வேறு சில சட்டங்களும் இருக்கின்றன. மதுவிலக்குச் சட்டம் இருக்கிறது. விபசார ஒழிப்புச் சட்டம் இருக்கிறது. சமுதாயத்தின் ஒழுக்கத்தைச் சட்டத்தின் மூலமாக நிலைநாட்டிவிட முடியுமா என்பது ஒரு பிரச்சினை, என்றாலும் சமுதாயத்தின் சீர்கேடுகளை ஒழிக்க வேண்டுமென்பு[illegible] இத்தகைய சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். அமுல் ந[illegible]க் கொண்டிருக்கிறோம்.

இந்தச் சட்டங்களைக் [illegible]காண்டுவந்து நாம் [illegible]றவேற்றிய பிறகு இதை அமல்படுத்து[illegible] நேரத்தில் தவறு ஏற்ப[illegible]க்கூடாது. மிக எச்சரிக்கையாக இ[illegible] வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது.

61712

ஆனால், இன்றைக்கு ந[illegible]டில் சட்டங்[illegible] எ[illegible] முறையில் அமல்படுத்தப்பட்டு வருகின்[illegible] நாட்டிலே [illegible]ாராயத்தை விற்பனை செய்யக் கூடாது என்[illegible]ல்கிறோம். [illegible]ராய விற்பனை நடக்கிறது. அதற்கு போலீசா[illegible] து[illegible] [illegible]கள். விபசார ஒழிப்புச் சட்டம் இருக்கிறது. வி[illegible] நடைபெறுகிறது. அதற்கு அதிகாரிகளே துணை இருக்கிறார்கள்,

சூதாட்ட தடைச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்கும் அதிகாரிகள் அங்கங்கே பாதுகாப்பாகத்தான் இருக்கப் போகிறார்கள். நாம் சட்டங்களைக் கொண்டு வந்துவிட்டால் போதாது. அவற்றைக் கவனமாக அமல்படுத்துவதில் போதிய கவனம் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

இந்த அடிப்படையில் பார்க்கிறபோதுதான் நான் அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். இந்தச் சட்டத்தின் கீழ் எந்தக் காரணத்தைக் கொண் டும் நிரபராதிகள் தண்டிக்கப்படக்கூடாது. பொதுவாக தவறு செய்தவர்கள் தப்பிவிடலாம். ஆனால் நிரபராதி தண்டிக்கப் படக்கூடாது என்பது நியதி. இந்த அடிப்படையில் பார்க்கிற போது இந்த மசோதாவின் செக்ஷன் 3-இல் ஒரு திருத்தம் கொண்டுவந்திருக்கிறோம். அதிலே news papers containing publica- tion of such prizes, are found in any house.....

என்று இருக்கிறது 'எனி ஹவுஸ், என்று சொல்லும்போது எங்கே வேண்டுமானாலும் போலீஸ்காரர்கள் சென்று அங்கே சூதாடினோர் கள் என்பதாக வேண்டாதவர்கள் மீது பொய் வழக்குகளைப் போடுவதற்கு இடமளித்து விடுகிறது. ஆகவே; இந்த டெபன ஷன்—பொய் வழக்குகளைப் போட முடியாத அளவுக்கு any common gaming house என்று இருப்பது நல்லது. இதை இப்படி மாற்றி அமைத்தால் நன்றாக இருக்கும். இந்த செக்ஷன் 4-இல் 'இன் எனி ஹவுஸ்' என்றால்—சூதாட்டங்கள் நடைபெறுகிற

வீடுகள் தனி-வீடுகள் தனி—ஆகவே பொய் வழக்குகள் வராதிருக்க 'இன் எனி ஹவுஸ்' என்று இல்லாது—காட்டன் பெட்டிங் நடைபெறுவது-காமன் ஹவுசில்தான்—'இன் எனி காமன் gaming ஹவுஸ் என்றுவது அமைப்பதுதான் பொய் வழக்குகள் வராமல் இருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

The newspapers containing publications of such prize are found in any house.

என்று இருப்பதனால் ஒரு வீட்டில் ஒரு செய்திப் பத்திரிகை—குறிப்பாக தினத்தந்தி கிடந்தால் கூட அதை வைத்து அங்குள்ளவரைக் கைது செய்யலாம் என்கிற நிலைமை இருக்கிறது. இதுபோல பொய்வழக்குகள் போடுவதற்கு இடமளிக்காத வகையில் இந்தப் பிரிவு திருத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து 13-எ பகுதியில் Indemnification of witness என்பதாக கிரிமினல் சட்டங்களில் அப்ரூவர் என்று வரக்கூடிய பகுதியை இந்தப் பிரிவில் அமைக்கிறார்கள். அந்தச் சட்டங்களின் கீழ் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்னால் கொண்டுபோய் நிறுத்தி, இவர் தமது வாக்குமூலங்களைத் தந்த பிறகு, அதை அவர் ஏற்றுக்கொண்டார் என்றால்தான் அவரை அப்ரூவராகப் போடமுடியும். ஆனால் இங்கே அதுபோல இன்றி ஒரு போலீஸ் அதிகாரியே ஒரு சாட்சியை அப்ரூவராக்கி மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வகை இருக்கிறது. இதெல்லாம் பொய் வழக்குகள் போடுவதற்குத்தான் மிகவும் உதவியாக இருக்கும். ஆகவேதான் பொய் வழக்குகள் போட முடியாத அளவில் இந்த மசோதாவில் திருத்தங்கள் செய்து இதை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய விரோதமான செயல்களை எல்லாம் தவிர்க்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில்தான் இது போன்ற சட்டங்கள் போடப்படுகின்றன. இந்தச் சட்டங்களின் மூலம் சமுதாயத்தை திருத்த முடிகிறதா, உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடிகிறதா என்றால் இல்லை. ஆனால் நாளடைவில் அதிகாரிகளுடைய விருப்பு வெறுப்புக்கு ஏற்றாற்போல பயன்படுத்திக் கொள்கிற கருவிகளாகத்தான் இந்தச் சட்டங்கள் ஆகிவிடுகின்றன. ஏமாந்தவர்கள்—நிரபராதிகள் தான் இந்தச் சட்டங்களின் மூலம் அதிகம் குற்றஞ்சாட்டப்படுகிற நிலை ஏற்படுகிறது. இந்தச் சட்டங்கள் குற்றங்களைக் களைவதற்கு உதவியாக இருக்கின்றனவா என்பதே கேள்விக்குறியாகி விட்டது.

சமுதாயத்தில் ஒழுக்கங்களை சட்டத்தின் மூலமாக ஒருக்காலும் ஏற்படுத்த முடியாது. அவரவர்களுடைய முயற்சியினால்தான்—நல்ல நீதி போதனைகளால்தான்—சமுதாயத்தில் நல்ல ஆரோக்கியமான மாற்றங்களைக் கொண்டுவர முடியுமே தவிர சட்டங்



களின் மூலம் கொண்டுவர முடியும் என்று நினைப்பது சரியல்ல. என்றாலும் நாம் சட்டங்களைப் போடாமல் இருக்க முடியாது. காரணம், அங்கங்கே பகிரங்கமாக செய்யப்படுகிற குற்றங்கள் சமுதாயத்தில் பரவலாகச் செய்கின்ற நிலை வளராது தடுக்க வேண்டியிருக்கிறது.

கள்ளுக்கடையைத் திறந்தார்கள். எத்தனையோ நாளாக மக்கள் மறந்துவிட்ட ஒன்றை நினைவுபடுத்துவது போன்று ஏன் இப்போது போய்த் திறக்கிறீர்கள் என்று சொன்னோம். அன்றைக்கு ஒரு வாதத்தைச் சொன்னார்கள். சுற்றி நெருப்பு எரிகிறபோது கற்பூரக் கட்டியாக எப்படி இருக்க முடியும் என்றார்கள். இன்றைக்கு கற்பூரம் கல்லாகி விட்டது. மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவந்து விட்டோம் என்கிறார்கள். அந்த ஒரு வருடத்தில் என்ன செய்தார்கள்? பாலாற்றங்கரையில் சாராயத் தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். இன்றைக்கு இந்தச் சாராயத் தொழிற்சாலைகளில் என்ன செய்கிறார்கள்.

இண்டஸ்ட்ரியல் ஆல்க ஹால் என்று தயாரித்து இங்கே கொண்டு வந்து அதைப்பலர் குடித்துச் செத்துக்கொண்டிருக்கிறார்கள்.

Mr. DEPUTY SPEAKER : That is not relevent to the discussion now. The hon. Member can speak on 'cotton'.

Thirumathi T. N. ANANDANAYAKI : I will connect that point with this Bill now. பாலாற்றங்கரையில் சாராயத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி இண்டஸ்ட்ரியல் ஆல்கஹால் என்று தயாரித்து—இதுபோல கள்ள சாராய விற்பனைக்குத் தான் வழிகோலியிருக்கிறார்கள். மதுவிலக்குச் சட்டத்தை சரியாக அமல்படுத்துகிறார்களா என்றால் இல்லை.

அதேமாதிரி 'கேமிங் ஆக்ட்' என்று ஒன்று போடப்பட்டிருக்கிறது. சாதாரணமாக இன்றைக்கு இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஒரு நான்கைந்து ஆண்டுகளில் சென்னையில் ரெக்ரியேஷன் க்ளப் என்பதாக எவ்வளவு க்ளப்புகள் வந்திருக்கின்றன என்று கணக்கெடுத்துப் பார்த்தால் தெரியும். உங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதன்காரணமாக இந்தச் சட்டத்தையாவது ஒழுங்காகச் செயல்படுத்த முடிந்திருக்கிறதா என்றால் இல்லை.

அதுவும் இப்போது கொண்டுவந்திருக்கிற சட்டம் காக்னிசபிள் அபென்ஸ் என்ற முறையில் வந்திருக்கிறது.

cognisable offences are not bailable also ; they are non-bailable

இதுபோன்ற சட்டங்களைக் கொண்டு உங்களுக்கு வேண்டாதவர்களைக் கடுமையாக இந்தச் சட்டத்தின் மூலம் தண்டிக்கத்தான் வழியேற்படும். காரணம், இந்தக் குற்றங்களை நீங்களே செய்து

[1975 ஏப்ரல் 15

கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கட்சியில் இருக்கிற செல்வாக்குப் படைத்தவர்களே ரெக்ரியேஷன் க்ளப் போன்றவற்றை நடத்துகிறார்கள். ஆகவேதான் இதுபோன்ற சட்டங்களை நீங்கள் கொண்டுவருகிறபோது யாரை ஏமாற்றக் கொண்டுவருகிறீர்கள் என்பதுதான் புரியவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்த மசோதா அவசியமா என்பது முதல் பிரச்சினை. 1948-ம் ஆண்டு கேமிங் ஆக்ட்க்கு ஒரு திருத்தம் 1949-ல் வந்திருக்கிறது. 1956-ல் திருத்தம் வந்திருக்கிறது பருத்தி சூதாட்டத்தைத் தடுக்கக் கொண்டு வரப்பட்டது. இன்றையதினம் இப்போது இருக்கக்கூடிய சட்டத்தின்படி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அதோடு கடுமையான தண்டனை விதிக்க வழிசெய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மசோதாவில் உள்ள நிலைமை என்ன? மினிமம் ப்ரிஸ்க்ரைப் பண்ணியிருக்கிறார்கள். முதல் முறையாகக் குற்றம் செய்பவருக்கு 3 மாதம் சிறை, 500 ரூபாய் அபராதம் என்றும், இரண்டாம் முறையாகச் செய்பவருக்கு 6 மாதம் சிறை, 750 ரூபாய் அபராதம் என்றும், மூன்றாம் முறையாக அல்லது அதற்குமேல் செய்பவருக்கு ஆயிரம் ரூபாய் அபராதம், 1 வருஷம் சிறை என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள். ஒரு வருஷம் ஜெயில் என்ற பனிஷ்மெண்டை வைத்துவிட்டால் பரவாயில்லை. காரணம் எந்தச் சட்டமும் இம்ப்ளிமெண்ட் ஆகப்போவதில்லை. எத்தனை சட்டம் இருக்கிறது, எந்தச் சட்டம் இம்ப்ளிமெண்ட் ஆகிறது. அந்தக் குறிப்பிட்ட நம்பர் நமக்கு வந்தாலும் வரலாம் அல்லது இன்னொருவருக்கு வந்தாலும் வரலாம். ஒரு சான்ஸ்தான். அதேமாதிரி குதிரைப் பந்தயமும் அதே கதிதான், அன்றைக்கே சொன்னோம்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குதிரைப் பந்தயம் வேண்டாம். இந்த ஆக்டைப்பற்றிப் பேசுங்கள்.

திரு. என். கே. பழனிசாமி : அதுவும் கேமிங்தான். பம்பாயிலே நடக்கிறது. பெங்களூரிலே நடக்கிறது; பெங்களூரிலே நடப்பதற்கு மஞ்சுளா ஏஜன்ஸிஸ், டர்ப் ஏஜன்ஸிஸ் என்று இருக்கிறது. வேண்டுமானால் ஆளைவிட்டுப் பாருங்கள் அங்கே என்ன நடக்கிறது என்று.

அதேபோல பம்பாயிலே மட்கா என்று உண்டு, ஓப்பனிங்கிலே ஒரு நம்பர், க்ளோஸிங்கிலே ஒரு நம்பர் என்று அவர்களே பேசி வைத்துக்கொள்வது என்ற மாதிரி நடக்கிறது. இப்படி நடப்பது மட்டுமல்ல, சீட்டு ஆட்டத்திலே அம்மாவாசையும் ஆடுகிறான். சாதாரணமானவர்களும் ஆடுகிறார்கள். ஆகவே, ரௌடியும் சாதாரணமானவர்களும் ஒன்றாகப் போகிறது. கல்யாண வீட்டிலே ரம்மி ஆடுகிறார்கள். 10, 15 ரூபாய் என்று வேண்டாதவர்களாக இருந்தால் பைன் போடுகிறார்கள், ஒரு போலீஸ்காரருக்குப் பிடிக்கவில்லையென்றால் அவர்களை உள்ளே தள்ளமுடியும். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ரௌடியும் சாதாரணமாகப் பொழுது போக்குக்காக ஆடுகிறவர்களும் இரண்டையும் சேர்த்து ஒன்றாக வைத்திருப்பது சரியல்ல.



1975 ஏப்ரல் 15] [திரு. என். கே. பழனிசாமி]

இந்தமுறையிலே ஜட்ஜ் அல்லது மாஜிஸ்டிரேட்டுக்கு டிஸ்கிரிஷன் கொடுக்கப்படவில்லை. எப்படித் தண்டிப்பது என்பதை அவருக்கு விட்டுவிட வேண்டும். எந்த அளவிற்குக் கடுமையான குற்றமாக இருக்கிறது என்று பார்த்து அவர் சொல்ல வேண்டும். அப்படியில்லாமல் மாஜிஸ்திரேட் 3 மாதம் போடவேண்டும், 3-வது தரம் குற்றம் செய்தால் ஒரு வருஷம் போட வேண்டுமென்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். கையை எடுத்துவிடுகிறான், காலை எடுத்துவிடுகிறான் அவனுக்கு எல்லாம் 50 ரூபாய்தான் பைன், அதைவிட இது பெரிய குற்றமா? ஆகவே மாஜிஸ்திரேட் இவ்வளவு செய்ய வேண்டுமென்று சொல்வது சரியல்ல. இதை யோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தச் பந்தய சட்டம் சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதா வரவேற்கக்கூடிய மசோதா ஆகும். பருத்திச் சூதாட்டத்திலே எக்கச்சக்கமான பேர்கள் பங்குகொண்டு பல பேர்கள் ஏழைகளாகி இருக்கிறார்கள். இதற்குக் காரணம் ஏழ்மை, பேராசை, அதிகமாகச் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டு இம்மாதிரிச் சூதாட்டத்திலே மனிதனுடைய சக்தியைச் செலுத்தி வாழ்க்கையையே வீணாக்கக்கூடிய இந்த முறையை ஒழித்தாக வேண்டும். சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும். பொழுதுபோக்குக்காக ஆடுகிறவர்கள் என்றெல்லாம் சொல்வது சோம்பேறித்தனத்தை வளர்க்கக்கூடியது. வயிறுபுடைக்கச் சாப்பிட்டுவிட்டு வேலையில்லாமல் சோம்பேறித்தனமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறவர்கள் செய்வது. கேட்டால் வேடிக்கைக்காக தமாஷாக ஆடுகிறோம் என்று சொல்வார்கள். இதை அனுமதிக்கக்கூடாது. 2, 3 ரூபாய் கூலிவேலை செய்து சம்பாதிக்கிறவர்கள்கூட விளையாடிவிட்டு இருக்கிற காசையும் பறிகொடுத்துவிட்டு தலையிலே கையை வைத்துக் கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்கிறது.

திருவிழாக் காலங்களிலே வை ராஜா வை, வை ராஜா வை என்று சொல்லி காய்களை உருட்டிவிட்டு கவிழ்க்கக் கூடிய முறை, தாய விளையாட்டு எல்லாம் இருக்கின்றன. இவையெல்லாம் மேலேயிருந்து கீழேவரை மனிதனை சோம்பேறியாக்கக்கூடிய நிலைமையில் உள்ளது. இதைக் குறைக்க சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும்.

உறுப்பினர் அனந்தநாயகி அம்மையார் பேசும்போது கூட உபதேசம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள், உபதேசம் செய்து திருத்தக்கூடிய காரியமல்ல இது. இந்தமாதிரிதான் எவ்வளவோ கள்ளைக் குடிக்காதே, கள்ளைக் குடிக்காதே என்று சொல்லிப் பார்த்தோம். என்னதான் உபதேசம் செய்தும் கடைசியில் குடிக்காதே என்று சொல்லப் போய் குடித்து ருசி பாத்துவிட்டு அதிகமாகக் குடித்துக் கெட்டுப்போகக் கூடிய நிலைமைதான் வந்திருக்கிறது.

ஆகவே, இம்மாதிரி ஈடுபடக்கூடியவர்கள் எல்லாம் சமூக விரோதிகள், பேராசை பிடித்தவர்கள் என்ற முறையிலே அவர்களைத் தண்டிக்கக் கூடிய முறையிலே சட்டம் கொண்டு வருவது மிக மிக அவசியம் ஆகும். அந்த முறையிலே நம்முடைய அரசு எடுத்துக் காட்டாக இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பது வரவேற்கத்தக்கது என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாக இந்தச் சட்டத்தை வரவேற்றாலும் இந்த நாட்டிலே, சமுதாயத்திலே பல தவறுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கூட தங்கள் பேச்சில் முதல் பகுதியிலே அழகாகச் சொன்னார்கள், ஆனால் அதன் பின்பகுதியிலே மாற்றிவிட்டார்கள். முதல் பகுதியிலே அவர்கள் சொன்னதைப் போல், சமுதாயத்திலே எல்லாவற்றையும் சட்டத்தால் திருத்திவிட முடியும் என்று சொல்ல முடியாது என்ற கருத்தைச் சொன்னார்கள். அது வரவேற்கத் தகுந்த கருத்து. சமுதாயத்திலே ஒரு மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்று தான் எல்லோரும் முயற்சி செய்ய வேண்டும். அந்த முறையிலே சட்டங்களைக் கொண்டு வருகிறோம். ஆனால் அவர்களே, ஆனால் அதற்காக சட்டத்தை நிறைவேற்றாமல் இருக்க முடியாது என்றும் சொன்னார்கள். அந்த வகையிலே சட்டத்தைக் கொண்டு வருகிறோம். நிறைவேற்றுகிறோம். தவறு செய்கிறவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறோம். நிர்வாகத்திலே சட்டத்தை அமல் நடத்தும்போது தவறுகள் ஏற்படுவதாகச் சொன்னார்கள். நிர்வாகத்திலே தவறு இருந்தால் சரியென்று நாங்கள் வாதிடப் போவதில்லை, தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

கள்ளுக்கடை மூடப்பட்டது, திறக்கப்பட்டது பற்றியெல்லாம் சொன்னார்கள். இன்டஸ்ட்ரியல் ஆல்கஹால் பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு இப்போது தான் வாய்ப்பு ஏற்பட்டது என்பதல்ல, நாங்கள் வந்த பிறகு தான் வந்தது என்பதல்ல, முன்னாலேயே இருந்தது. அப்போதும் அதற்கு வாய்ப்பு இருந்தது. இப்போதும் வாய்ப்பு இருக்கலாம். ஆகவே, அதையெல்லாம் கண்காணித்து நடவடிக்கை எடுக்கலாம். நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : I shall now put the amendment to the note of the House. The question is—

"That the concurrence of the Tamil Nadu Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses, consisting of........Members of the Tamil Nadu Legislative Assembly





and........Members of the Tamil Nadu Legislative Council, to consider the Tamil Nadu Gaming (Amendment) Bill. 1975 (I. A. Bill No. 8 of 1975) and that the following Members of the Tamil Nadu Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee (names of Members to be given later)".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பந்தய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move—

"In clause 3, in sub-clause (2) of the proposed new section 4-A, after the word 'person', insert the words, 'persons or licensed clubs".

The amendment was duly seconded.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, as I have already mentioned, the word 'person' should be altered. There are many clubs also: under the excuse they are Recreation Clubs, they are functioning. I am sure the Hon. Minister will accept my amendment.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற பிரிவே போதுமானது என்று கருதுகிறேன்.

The amendment of Thiru K. M. Subramaniam was put and lost.

பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 4 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பந்தய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/75) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, 1975 ஆம் ஆண்டு இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/75).

THIRU K. T. K. TANGAMANI:

Sir, this will take atleast an hour and we want to refer to the parent Bill also. We can take it up tomorrow.

திரு. எ. ஆர். மாரிமுத்து: நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிர்க் கட்சிகளின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க நாளைக்கு இதை எடுத்துக் கொள்ளலாம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.



## 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

174. Notification issued in G.O. Ms. No. 289, Revenue, dated the 23rd January 1974 in regard to cancellation of Revenue Department Notification II-1 No. 2698 of 1966, published at page 1033 of Part II—Section IX of the *Tamil Nadu Government Gazette*, dated the 29th June 1966. [*Laid on the table of the House under section* 116(3) *of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Tamil Nadu Act* 22 *of* 1959).]

175. Notification issued in G. O. Ms. No. 1636, Revenue, dated the 15th April 1974, in regard to cancellation of the Revenue Department Notification II-1 Nos. 3522 of 1961 and 3306 of 1964 published at pages 1199 and 1373 of Part II-Section I of the *Tamil Nadu Government Gazette*, dated 31st July 1961 and 29th July 1964 respectively. [*Laid on the table of the House under section* 116(3) *of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Tamil Nadu Act* 22 *of* 1959).]

### *B. Reports, Notifications and Other Papers.*

NIL.

## இணைப்பு I.

(23-ம் பக்கத்தில் 673 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

(அ) ஆம்.

(இ) வட கிழக்குப் பருவமழை தவறியதால் தஞ்சையிலும் இதர மாவட்டங்களிலும் ஏற்பட்ட உணவு உற்பத்திக் குறைவைத் தவிர்க்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள சிறப்புத் திட்டத்தில் பங்குபெறும் விவசாயிகளுக்கு கீழே விவரிக்கப்படும் ஊக்கச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன:—

(1) இரவுக்காலங்களில் வழக்கமாக வேளாண்மைக்கு வழங்கப்படும் மின்சாரத்துடன், பகலிலும் ஆறுமணி நேரத்திற்குக் குறைவில்லாமல் மின்சாரம் வழங்குதல்;

(2) கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் வழங்குதல்;

(3) காலாகாலத்தில் போதுமான இரசாயன உரங்களை வழங்குதல்;

(4) பயிரைத் தாக்கும் பூச்சிகளைக் கொல்லவும் நோய்களைக் கட்டுப்படுத்தவும், காலாகாலத்தில் விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு இரசாயன மருந்துகள் வழங்குதல்;

(5) கோடை காலத்தில் நெல் சாகுபடியை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு நெல் கொள்முதலிலிருந்து விதிவிலக்கு அளித்தல்.

(a) Yes

(b) The following are the details of the incentives extended to farmers participating in the special programme to off-set the fall in food production in Thanjavur District as well as other districts of Tamil Nadu due to the failure of North East Monsoon :—

(1) Assured supply of electricity for not less than six hours during the day times, besides the normal supplies available during the night;

(2) Assured credit facilities through Co-operatives;

(3) Adequate and timely supply of fertilizers;

(4) Timely supply of plant protection chemicals to control pests and diseases; and

(5) Exemption from levy system for those who raise summer paddy crop.

## இணைப்பு II.

*(25-ம் பக்கத்தில் 674 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)*

(a) Yes. The Government have already passed order to create a fertiliser fund out of any income accruing from the sale of fertilisers.

(b) According to the G. O. the funds and the interest thereon will be utilised for the following purposes :—

(i) Production of enriched organic manures and pesticides, which are now in short supply for distribution to farmers;

(ii) Development of Mechanical compost in Urban areas for the use of Cultivators;

(iii) Production of fertilisers in Mini-Fertiliser Plants, not requiring Naphtha as feed stock, to make good the short fall in the supply of the fertilisers sorely needed by the farmers; and

(iv) Increasing agricultural productivity in general of the Farms in the State.



## இணைப்பு III.

*(25-ம் பக்கத்தில் 675 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)*

The following are the particulars of chemical fertilisers required, allotted and actually received during the year 1974-75 :—

| | *Kharif* 1974. (*February to July*) | | *Rabi* 1974-75. (*August to January*) | |
|---|---|---|---|---|
| | *Pool.* | *Non-Pool.* | *Pool.* | *Non-Pool.* |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ALL IN METRIC TONNES.) | | | |
| I. Nitrogen— | | | | |
| Requirement .. .. | 39,491 | 77,335 | 13,648 | 96,237 |
| Allotment .. .. | 39,088 | .. | 43,280 | .. |
| Actual receipt .. | 36,516 | 47,275 | 42,566 | 35,740 |
| II. Phosphate Indigenous Manufacturers— | | | | |
| Requirement .. .. | 40,000 | 42,000 | .. | .. |
| Receipt .. .. .. | 24,984 | 19,062 | .. | .. |
| III. Potassium— | | | | |
| Requirement .. .. | 40,000 | 38,268 | .. | .. |
| Receipt .. .. .. | 32,082 | 20,610 | .. | .. |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## புதன்கிழமை, 1975 ஏப்ரல் 16.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

### *Rice from Central Government*

*681 Q.—Thiru N. K. PALANISAMY: Thiru V. BALASUNDARAM and Thiru P. SOUNDARAPANDIAN: Will the Honourable the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of Tamil Nadu have made a request to the Government of India recently for rice loan;

(*b*) if so, the details thereof;

(*c*) whether the request has been complied with; and

(*d*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) முதல் (எ) வரை. 29—7—1974 அன்று ஆவடியில் இந்திய உணவுக் கழகத்தின் வசமிருந்த 9,000 டன் அரிசியைக் கடனாக தந்துதவுமாறு மத்திய அரசைக் கேட்டோம். இக் கோரிக்கை மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுக்க மறுத்ததன் காரணமாக நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய உணவுப் பிரச்சினையை அரசு எவ்வாறு தீர்க்கப் போகிறது? அரசு அறிவித்த புதிய கொள்கை எப்பொழுதிலிருந்து அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது இடைக்காலமாகக் கேட்ட உதவி. இங்கே இருந்த அரிசியைப்பற்றி. இப்பொழுது நிரந்தரமாக நாம் ஐந்து லட்சம் டன் அரிசி கேட்டிருக்கிறோம். 7,500 டன் தந்திருக்கிறார்கள். மேலும் தருவது பற்றி இன்னும் இறுதியான ஒரு பதில் வரவில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, நமக்கு ஏற்பட்டிருக்கின்ற பற்றாக்குறையை நிவர்த்தி செய்கின்ற வகையில் மேல் நாடுகளிலிருந்து அரிசி தருவிக்க நம்முடைய அரசு முயற்சி எடுத்துக்கொண்டு, மத்திய அரசும் அதற்கு இணங்கிவந்து முயற்சி செய்வதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா? அப்படியாயின், எப்பொழுது அது கிடைக்கும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய உணவு அமைச்சருடைய கடிதத்தில் இதில் பல சிரமங்கள் இருந்தாலும், எந்த அளவிற்கு இறக்குமதி செய்து கொடுக்க முடியும் என்பதைப் பரிசீலிப்பதாக எழுதியிருந்தார்கள். அதற்குமேல் தகவல் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த வறட்சி நிலைமை ஏற்படுவதற்கு முன்னதாக நாம் 'சென்ட்ரல் பூல்'-க்கு அரிசி அதிகமாகக் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் நமக்கு இப்பொழுது அரிசி கொடுப்பதற்கு மறுப்பு தெரிவித்திருக்கிறார்கள் என்ற ஒரு கருத்து நிலவுகிறதே, அது உண்மையா? அப்படியிருந்தால் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட கருத்து இதுவரை யாரும் சொன்னதாகத் தெரியவில்லை. அங்கேயிருந்து வருகிற அமைச்சர்களெல்லாம், நேற்று கூட, நாடாளுமன்றத்திலே தமிழகத்தினுடைய உணவு நிலைமை மோசமாக இருக்கிறது. ஆகவே, எந்த அளவு உதவி செய்ய முடியுமோ அந்த அளவு உதவி செய்கின்றோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

கோதுமையைப் பொறுத்தவரை, அதிக அளவு தருகின்ற வாய்ப்புக்கூறு இருக்கிறது. அரிசியைப் பொறுத்த வரையில், கஷ்டம் இருக்கிறது என்று தொடர்ந்து அவர்கள் கூறி வருகிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், நாம் மற்ற மாநிலங்களுக்கு ஏராளமாக உதவி செய்திருக்கிறோம். அதைப்போல, மத்திய 'பூல்'க்கும் ஏராளமாகக் கொடுத்திருக்கிறோம். கொடுக்கவில்லை என்பதல்ல. இன்னும் அதிகமாக 'ப்ரொக்யூர்' செய்யவேண்டும் என்பது பொதுவாக எல்லா மாநிலங்களுக்கும் மத்திய அரசு கூறி வருவதாகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இப்பொழுது 7,500 டன் அரிசி மத்திய அரசு கொடுத்திருக்கிறதே, அது எந்த மாநிலத்திலிருந்து வந்தது? வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டுமென்பது ஒருபுறமிருக்க, பக்கத்திலிருக்கும் ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 'சென்ட்ரல் பூல்'லிருந்து 'புட் கார்ப்பரேஷன்' மூலமாக நமக்கு வருகிறது. எந்த மாநில அரிசி என்ற தகவல் இல்லை. "எங்களிடம் சர்ப்ளஸ்



இருக்கிறது; அதை நேரடியாக உங்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்" என்று ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'சென்ட்ரல் பூல்' மூலமாக அல்லாமல் மாநில அரசுக்கு இன்னொரு மாநில அரசு கொடுக்கக் கூடாது என்பதுதான் மத்திய அரசின் கருத்தாகத் தெரிகிறது.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நம்மிடத்தில் உபரியாக இருந்தபோது நாம் சில மாநிலங்களுக்கு நேரடியாகத் தந்திருக்கிறோம். அதே அடிப்படையில் உபரி மாநிலங்களிலிருந்து கடன் அடிப்படையில் வாங்க ஏதாவது வழிவகை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆந்திராவும், கர்நாடக மாநிலமும் ஓரளவு உதவி செய்தன. பஞ்சாப் மாநிலத்தைப் பொறுத்தவரையில், அதனுடைய முதலமைச்சர் நமக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். தங்களுடைய தேவையைக்கூட குறைத்துக் கொண்டு தமிழகத்திற்குத் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதற்கும் மத்திய அரசின் அனுமதி தேவைப்படுகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே சில மாநிலங்கள் இப்படி உதவி செய்ய முன்வருவதாகச் சொன்ன பிறகும் மத்திய அரசு ஏன் இதிலே கால தாமதம் செய்கிறது? ஆந்திர அரசாங்கம் ஏற்கெனவே நமக்கு இருக்கும் பற்றாக்குறையைப் போக்க அரிசி கொடுக்க ஒத்துக் கொண்டது. ஆந்திர அரசிடமிருந்து உடனடியாக நமக்கு அரிசி கிடைக்க மத்திய அரசை வலியுறுத்தி தேவையான அரிசியைப் பெறமுடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசைப் பொறுத்வரையில் எல்லா மாநிலங்களினுடைய மிகுதி அரிசியும் (ஸர்ப்ளஸ் ரைஸ்) தங்களுடைய 'சென்ட்ரல் பூல்'க்குத்தான் வரவேண்டும் என்று அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். அதிலிருந்து எந்த எந்த மாநிலங்களுக்கு அரிசி தேவை என்று அவர்கள் கருதுகிறார்களோ அவர்களுக்கு அவர்கள் ஒதுக்க வேண்டும் என்றுதான் அவர்கள் விரும்புவதாகத் தெரிகிறது. தமிழகத்திலேயுள்ள இன்றைய நிலையை உத்தேசித்து, பஞ்சாப், ஆந்திரா போன்ற சர்ப்ளஸ் மாநிலங்களில் நாம் சென்று வாங்குவதற்கு அனுமதி தரவேண்டும் என்று நாம் வற்புறுத்தி வருகிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு 'சென்ட்ரல் பூல்'க்கு நிரம்பக் கொடுத்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சென்ட்ரல் பூலுக்கு ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு தரவேண்டும் என்று மத்திய அரசு ஏதாவது நிர்ணயம் செய்கிறதா? நிர்ணயம் செய்த அளவுக்கு கடந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு மாநில அரசையும் மத்திய அரசு அழைத்து பேச்சுவார்த்தை நடத்துகிறது. அதிலே ஓரளவுக்கு ஒவ்வொரு மாநிலமும் கொடுக்க வேண்டும் என்று முடிவு எடுக்கிறார்கள். அவர்கள் எப்போதுமே அதிகமாகத்தான் கேட்பார்கள். எல்லா மாநிலங்களையும்போல நம்மால் முடிந்தவரை கொள்முதல் செய்து கொடுக்கிறோம்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, கடனாகத் தரப்பட்ட அரிசி திருப்பித் தரப்படுகிறபோது அரிசியாகக் கொடுக்க வேண்டுமா? அல்லது பணமாகக் கொடுக்க வேண்டுமா? அதற்கு ஏதாவது விதித்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் 9,000 டன் கொடுக்காத காரணத்தால் இந்தப் பிரச்சினை எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : இம்மாதிரி மத்திய அரசை நம்பியிருப்பதைவிட மாநில அரசே ஒரு புதிய கொள்கையை—தன்னிறைவுக் கொள்கையை—ஏற்படுத்துவதாகச் சொன்னார்கள். அதை எப்படி ஏற்படுத்தப் போகிறார்கள்? எப்பொழுது அது அமல் செய்யப்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத் துணைக்கேள்வி, மூலக் கேள்வியிலிருந்து எழாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நாம் மிகவும் நெருக்கடியாக இருந்த சமயத்தில் கடனாகக் கேட்டோம்; ஆனால், மத்திய அரசு மறுத்துவிட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மறுத்ததற்கு ஏதாவது காரணம் கூறியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் ஏற்கெனவே விளக்கம் சொன்னேன். அவர்களுடைய வாதமெல்லாம்—எல்லா மாநிலங்களுக்கும் தேவையான அரிசியை அவர்கள் கையில் ஒப்படைக்க வேண்டும். அவர்கள் அதிலிருந்து மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது, நம்மைவிட சில மாநிலங்களுக்கு அதிகத் தேவை இருக்கிறது என்று அவர்கள் சொல்லி வருகிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாநிலத்திலும் லெவி—கொள்முதல் செய்கிறார்கள். அந்த அடிப்படையில் மத்திய அரசு கூட ஒரு கொள்கை வகுத்து, மாநிலங்களுக்கு எந்த அளவிற்குத் தேவையோ அந்த அளவுக்கு விநியோகிக்கும் பொறுப்பு இருக்கிறது. ஒரு மாநிலம் ப்ரொக்யூர் செய்த அரிசியை நாம் நேரடியாக வாங்குவதென்றால், அது கொள்கைக்கு முரணாகப் போகுமே; அதனால் சிக்கல் ஏற்படுமே. அது சம்பந்தமாக தமிழக அரசு என்ன கருதுகிறது?



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரிசி கடனாகக் கொடுக்கும்படி கேட்டது குறித்து துணைக் கேள்வி கேளுங்கள். கொள்கை பற்றியெல்லாம் கேள்வி நேரத்தில் கேட்கக் கூடாது. 'பாலிசி' பற்றியெல்லாம் இதில் கேட்க வேண்டாம்.

திரு. கே. என். குமாரசாமி : இப்படி நாம் எந்த அடிப்படையில் நேரடியாக மாநிலங்களிலே ப்ரொக்யூர் பண்ணுவது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பஞ்சாப் முதலமைச்சரே அவர்கள் தங்களுடைய தேவையைக் குறைத்துக் கொண்டு தமிழகத்திற்குத் தருவதாகச் சொல்கிறார்கள். திரு. குமாரசாமி அவர்கள் பேசுவதைப் பார்த்தால், அவரையும் பார்த்து, நீங்கள் கொடுக்காதீர்கள் தமிழ்நாட்டுக்கு என்று சொல்வதுபோல் கேள்வி இருக்கிறது. இப்படிக் கேட்கக் கூடாது. மத்திய சர்க்கார் சொல்வது அதுவல்ல. எங்கள் கையில் வைத்துக்கொண்டு நாங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அது வேறு பிரச்சினை. மற்ற மாநிலங்கள் கொடுப்பதே கூடாது. மற்ற மாநில அரசுகள் தரவே கூடாது என்று மத்திய அரசுக்கு திரு குமாரசாமி சொல்லக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என் கே. பழனிசாமி : சமீபத்தில் மத்திய நிதி அமைச்சரவர்கள், தமிழ்நாட்டுக்குத் தேவையான உணவு பூராவும் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவர் அப்படிச் சொன்னதற்குப் பிறகு, நாம் அவரை நேரடியாக அணுகி, இம்மாதிரி நீங்கள் சொன்னீர்களே, அரிசி கொடுக்க ஏற்பாடு செய்வீர்களா என்று கேட்டிருக்கிறோமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பத்திரிகையில் அப்படி வந்ததை வைத்து அவர்கள் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். மத்திய அரசு உணவு அமைச்சர் எழுதியது வேறு மாதிரியாக இருக்கிறது. வெளிநாட்டிலிருந்துஅரிசி வரவழைக்கப் பணம் கொடுக்கக்கூடிய பொறுப்பிலுள்ள நிதி அமைச்சர் இங்கே வரும் போது கொஞ்சம் ஆதரவாகப் பேசியதாகத் தெரிந்தது. ஆனால், மத்திய அரசு, எந்த நாட்டிலிருந்து எவ்வளவு அரிசி வாங்குவது என்பது குறித்து இறுதியாக முடிவு எடுத்ததாக இதுவரை தகவல் இல்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்திலேயிருந்து மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கும்பொழுது ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குக் கொடுக்கலாம் என்ற முறை இருந்ததா? அப்படி இருந்திருக்குமானால் தமிழ்நாட்டிற்கு மற்ற மாநிலங்கள் கொடுக்க, மாநிலத்திற்கு மாநிலம் தொடர்பு படுத்திக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய கூடாதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் கொள்கையை நம்முடைய மாநில அரசு பூரணமாக ஆதரிக்கிறது. சென்ட்ரல் பூல் என்றாலும் அந்தந்த மாநிலங்களுக்குச் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. மாநிலத்திற்கு மாநிலம் கொடுத்து உதவுகின்ற ஒரு கொள்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டால் ஏராளமான அரிசியை வாங்க வாய்ப்பிருக்கிறது சில மாநிலங்களில்என்பதுதான் உண்மை.

திரு. எம். சுரேந்திரன் : சார், நம்முடைய அரிசித் தேவை இப்பொழுதிருக்கின்ற நியாய விலைக்கடைகளை வைத்து கணக்கிடப் படுகிறதா? இன்னும் நியாயவிலைக் கடைகளை அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் கணக்கிடப்படுகிறதா? அதற்குத் தேவையான அரிசி எவ்வளவு கிடைக்கிறது, எவ்வளவு தேவைப் படுகிறது என்று மத்திய அரசை நினைவுபடுத்தி சொல்லப்பட் டிருக்கிறதா? அந்த வகையிலே வருஷாவருஷம் முறையாக அரிசி கிடைக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்திய அரசிடம் தமிழ் நாடு அரசு கேட்டதா என்பது பற்றிய கேள்வி இது. இதில் ரேஷன், கொடுப்பது, போதிய ஸ்டாக் என்பதெல்லாம் எப்படி வரும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தப் பற்றுக்குறை யைக் கணக்கிட்டு நமக்கு இவ்வளவு தேவை என்று மத்திய அரசி னிடத்திலே ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். இப்பொழுது 55,000 டன் மாதத்திற்கு நம் அரசு தமிழகம் முழுவதும் வழங்கு கிறது. கொள்முதல் போக எவ்வளவு தேவை என்று சொல்லி யிருக்கிறோம். குறைந்தபட்சம் 5 இலட்சம் டன் அரிசி வந்தால் பற்றுக்குறை மாதங்களில் கொடுக்க ஏதுவாக இருக்கும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, நமக்குள்ள பற்றுக்குறையை நிவர்த்திக்கும் விதத்தில் கேர் நிறுவனம் அரிசியும் கோதுமையும் கொடுக்க முன்வருவதாகத் தெரிகிறது. இதற்குக் கூட மத்திய அரசாங்கத்தினுடைய அங்கீகாரம் தேவையா? மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் இருந்தால்தான் கேர் நிறுவ னத்திடமிருந்து நாம் பெற முடியுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கோதுமை தருவதாக முன் வந்திருக்கிறார்கள். அதுவும் மத்திய அரசாங்கத்தின் அனுமதி யோடு, அவர்களுடன் நம்முடைய அரசு அலுவலர்கள் பேசி இப்பொழுது நம் மாநிலத்திற்குத் தருவதாக முடிவெடுத்திருக் கிறார்கள்.



## விவசாய மறுநிதிக்கழகத்திடமிருந்து நிதி உதவி

*682 வினா.— திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில், விவசாய மறுநிதிக்கழகத்தின் (அக்ரி கல்சர் மறுநிதிக் கார்ப்பரேஷன்) மூலம் அரசுக்கு எவ்வளவு தொகை கிடைத்தது?

(இ) அந்தத் தொகை எந்தெந்தத் திட்டங்களுக்காகச் செலவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) பம்பாய் விவசாய மறுநிதிக்கழகம் தமிழக அரசுக்கு நேரடியான பண உதவி ஏதும் அளிப்பதில்லை.

(இ) கேள்வி எழவில்லை.

## *World Bank loan for Development of Agriculture*

*683 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Honourable the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether this Government approached the Centre during 1974 to obtain loan from the World Bank for the development of agriculture; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், 1974-ஆம் வருஷத்தில் தஞ்சாவூர் டெல்டா பிரதேசத்தில் அபிவிருத்தி செய்ய 30 கோடி ரூபாய் கொடுக்க ஏற்கெனவே பேச்சு வார்த்தை நடத்தி ஒத்துக் கொண்டிருந்தார்களே. ஆனால் அது எவ்வாறு தடைப்பட்டது? அதற்கு என்ன காரணம் என்று அமைச்சரவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, தற்பொழுது கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்களில் கடன் கொடுக்கிறார்கள். மத்திய வங்கியிலிருந்து தருகிறார்கள். மத்திய வங்கி உலக வங்கியிடமிருந்து வாங்குவதாகச் சொல்கிறார்கள். தற்பொழுது

இந்தக் கடனை ஒத்தி வைக்க வேண்டுமென்று உத்தரவிட்டும்கூட இதுவரையில் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. இன்னும் ஜப்தி செய்கிறார்கள். விவசாயிகளைக் கொடுமைப் படுத்துகிறார்கள். அந்தக் கடனை இந்த ஆண்டு ஒத்தி வைக்க உலக வங்கியிடம் நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கடனை வசூலிப்பதற்கும் உலக வங்கிக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. எங்கெங்கே வறட்சிப் பகுதியாக இருக்கிறதோ அங்கே கடனை வசூலிக்கக் கூடாது என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அப்படி எங்கேயாவது வறட்சிப் பகுதிகளில் வசூலிக்கிறார்கள் என்று அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. என். கே. பழனிசாமி : சார், மத்திய அரசு உலக வங்கியிடமிருந்து கடன் வாங்குகிறது. அது எவ்வாறு மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது? நம் மாநிலத்திற்குப் பங்கு வருகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் ஐடா மூலம் உலக, இண்டர்நேஷனல் பேங்கிலிருந்து கூட்டுறவுத் துறை மூலம் கடன் கொடுக்கப்படுவது என்பது. மற்றபடி உலக வங்கி என்னென்ன உதவி செய்கிறது என்ற விவரம் இல்லை.

## *Power Generation Corporation*

*684 Q.—THIRU N. DENNIS AND THIRU K. A. WAHAB: Will the Honourable the Minister for Industries and Electricity be pleased to state whether there are proposals under the consideration of the Government to set up a Power Generation Corporation?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டம் தற்போதைக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, எலக்ட்ரிசிட்டி பற்றாக்குறையாக இருக்கும் காரணத்தால் உற்பத்தியைப் பெருக்க இது வழி வகுக்கும் அல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்படுகையில் இக்கழகம் அமைக்கப்பட்டாலுங்கூட, தற்போதுள்ள நடைமுறைகள், விதிகளின்கீழ் கழகம் நிறுவன நிதியைப் பெறத் தகுதியுடையதாக இருக்காது எனக் குறிப்பிடப்பட்டது. எனவே, இது பரிசீலிக்கப்பட்டு தற்பொழுது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.



திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, சில நாட்களுக்கு முன்பு அமைச்சரவர்கள் இங்கே பேசும்பொழுது நம்முடைய மின்சார நிலவரம் இரண்டு வாரங்களில் சீராகும் என்று சொன்னார்கள். பிறகு கோவையிலே, 10 நாட்களில் சீராகும் என்று சொன்னார்கள். இப்பொழுதுள்ள லேட்டஸ்ட் நிலைமை என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஸீரோ அவர் இல்லை. மின்சாரம் என்ற உடனேயே மின்சாரம் சம்பந்தப்பட்ட எல்லாக் கேள்விகளையும் கேட்பது என்றால் எப்படி?

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, ஜெனரேஷனைப் பொறுத்தவரையில் அமைச்சரவர்கள் வெளியிலே சொன்னதைப் போல ஒரு வாரத்திற்குள் சீராகும் நிலைமை இருக்கிறதா? நிலைமை நல்லபடியாக இருந்தால் மகிழ்ச்சியாக இருக்குமே என்பதற்காகக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மின்சாரப் பற்றாக்குறை நிலைமையைக் குறித்து நேற்று பரிசீலிக்கப்பட்டது. அப்படிப் பரிசீலித்தபொழுது நம்முடைய எண்ணூரைப் பொறுத்த வரையில் நாம் எதிர்பார்த்த அளவிற்கு மின்சார உற்பத்தி நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. ஆனால், நெய்வேலியைப் பொறுத்த வரையில் எதிர்பார்த்த அளவில் கிடைக்கவில்லை. 21-ஆம் தேதிவரையில் கெடு இருக்கிறது. அதற்குள் நெய்வேலியில் சீர்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான நிலைமைகளைப் பற்றி அன்றாடம் நெய்வேலி சம்பந்தப்பட்டவர்களிடமும் எண்ணூரில் உள்ள நிலைமைகளைப் பற்றியும் பரிசீலிக்கிறோம். இந்த நிலைமைகள் சீர்பட்டவுடன் மின்வெட்டைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சீனிவாசன் : சார், இப்பொழுது உள்ள மின்சார வாரியத்தை மின்சார விநியோகத்திற்காக மாற்றிவிட்டு, மின்சார உற்பத்திக்குத் தனியாக வாரியம் ஏற்பட்டால் வேலைகள் கொஞ்சம் சீக்கிரமாக நடக்கும், டெக்னிகல் நாலெட்ஜோடு நடக்கும். அப்படி ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த நோக்கத்தோடுதான் ஜெனரேஷன் கார்ப்பரேஷன் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. இந்த ஜெனரேஷன் கார்ப்பரேஷன் அமைப்பதாலே நிதி உதவிகளைப் பெறலாம் என்ற நோக்கம் இருந்தது. ஆனால் இதைப் பரிசீலித்துப் பார்த்தபொழுது இப்பொழுதுள்ள நடைமுறைகள், விதிகளின் கீழ் கழகம நிறுவன நிதியைப் பெறத் தகுதியுடையதாக இருக்காது என்று குறிப்பிடப்பட்டது. இந்த நிறுவனத்தைப் பதிவு செய்வதற்காக சுமார் 3½ லட்சம் ரூபாய் செலவாகக்கூடும் என்றும் மதிப்பிடப்பட்டது.

கம்பெனி பதிவாளர்களுடன் கலந்து பேசிய பின்னர் இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்காக 15 இலட்சம் ரூபாய் செலவாகும் என்ற குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு தற்பொழுது ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நிறைய பம்பு செட்டுகள் கொடுத்ததால் டிஸ்ட்ரிபியூஷன் சைட்டிலே கான்சன்ட்ரேட் செய்திருக்கிறோம். ஆனால் ஜெனரேஷன் சைட்லே இந்த கார்ப்பரேஷன் இல்லை என்று சொல்கிறார்கள். இந்த கார்ப்பரேஷன் இல்லையென்றாலும், நல்ல திறமையானவர்களை, அப்பாதுரை போன்றவர்களை, ஓய்வு பெற்ற இன்ஜினியர்களைக் கொண்ட குழு போட்டு ஜெனரேஷனை அதிகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மின்சார வாரியத்தில் இப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல ஒரு ஆலோசகர், அட்வைசர் நியமிக்கலாம் என்ற கருத்து அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. திரு. அப்பாதுரை அவர்களை ஆலோசகராக நியமித்திருக்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மின் விசை உற்பத்திக் கழகம் என்று அமைத்தாலும் நிதி உதவி பெறுவதற்கான வழி இல்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். நிதி உதவி பெற வழியில்லை என்பதற்கான காரணம், ஏற்கெனவே மின்சாரக் கழகத்தை நடத்துவதில் மோசமாக இருக்கிறது என்பதா அல்லது வேறு ஏதாவது காரணமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இப்பொழுது இருக்கிற மின்சார வாரியத்தைப் பொறுத்தது அல்ல இது. ஏற்படுத்தப்பட்ட ஜெனரேஷன் கார்ப்பரேஷனுக்கு நிதி கிடைக்க வாய்ப்பு இருக்கிறதா என்று பார்க்கும்பொழுது இருக்கின்ற விதிமுறைகளின்படி இப்பொழுது மின்சார உற்பத்திக் கழகத்திற்கு நிதி கிடைக்க வாய்ப்பு இல்லை என்ற காரணத்தால் தான் இது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன்: மின் விசை உற்பத்திக் கழகம் என்பது இந்த மாநிலத்திலே மட்டும் அமைக்கும் யோசனை இருந்ததா? அகில இந்திய ரீதியில் இப்படி ஒரு உற்பத்திக் கழகம் அமைப்பது நல்லது என்ற கருத்து வெளியிடப்பட்டிருந்ததா? அந்தக் கருத்து பற்றி அரசு ஆலோசனை செய்ததா? கடன் கிடைக்கும் என்ற ஒரே காரணத்திற்காக இது போன்ற கழகம் அமைக்கப்பட்டிருக்கின்றதா அல்லது உற்பத்தியைப் பெருக்க இது அமைக்கப்பட்டிருக்கிறதா?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போது இந்த மன்றத்தின் முன்னால் இருக்கும் பிரச்சினை நம்முடைய மாநிலத்தில் மின்சார உற்பத்திக் கழகத்தை அமைக்கும் செயற் குறிப்பு பற்றியதாகும். மின்சாரம் உற்பத்தி செய்ய நிதி தேவை. அந்த நிதியை நிதி நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டும். அதைப் பெறமுடியாது என்னும்போது கார்ப்பரேஷனை ஏற்படுத்துவதில் பயன் இல்லை என்று கருதி அந்த யோசனை ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது. கர்நாடகத்தில் இதுபோன்ற மின் உற்பத்திக் கழகம் செயல்பட்டு வருகிறது என்று குறிப்பு இருக்கிறது.

திரு. செ. அரங்கநாயகம்: கோவையில் இருக்கும் தனியார் துறை நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் தனியார் துறையில் தெர்மல் ஸ்டேஷன் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றி இப்போது என்னிடம் குறிப்பு இல்லை. யோசனை வந்தால் அரசுக்குத் தெரியப்படுத்தலாம்.

*Ambathur Industrial Estate*

*685 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Honourable the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) the number of Industrial Units that have been started in the Industrial Colony at Ambathur Township during 1973; and

(*b*) the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) பொறியியல், தானியங்கி வண்டி உதிரி பாகங்கள் முதலியவைகளைத் தயாரிக்கும் 51 தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திரு. என். கே. பழனிசாமி: எவ்வளவு செலவில் இது கட்டப்பட்டிருக்கிறது? எலக்ட்ரானிக் கருவிகள் செய்யக்கூடிய மெஷின்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வாடகைக்கு இடம் கொடுப்பதிலே—

subsidised rent at 13 paise per square foot is charged as against the economic rent of 19 paise per square foot. In respect of technocraft schemes, rent is charged at the rate of 10 paise per square foot.

இதிலே நான் இப்போது சொன்னது இண்டஸ்ட்ரியல் யூனிட்ஸ் பற்றியது.
automobile spare parts, manufacture of plastics, light engineering machines, agricultural implements
என்ற இந்த வகையான தொழில்களை நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த மாதிரி இண்டஸ்ட்ரியல் யூனிட்சை சிறு தொழில்களைத் தொடங்க ஏற்பாடு செய்கிறோம். அதே நேரத்தில் அண்மையிலே நான்கு மாத மின்சார டெபாசிட் வேண்டுமென்று கேட்ட காரணத்தால் பல சிறு தொழில் நிறுவனங்கள் டெபாசிட்டைக் கட்ட முடியாமல் திண்டாடுவதாகப் புகார் வந்திருக்கிறது. அப்படியானால் அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது அவர்களுடைய சிரமத்தைத் தணிக்க ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டெபாசிட் தொகை கட்டுவதில் உள்ள சிரமங்களைப் பற்றி இந்த மன்றத்திலும் மேல் சபையிலும் சொன்னார்கள். சிறு தொழில் அதிபர்களும் என்னைச் சந்தித்துச் சொன்னார்கள். அந்தத் தொகையை இன்ஸ்டால்மென்ட் பேமென்டாகக் கட்டலாம் என்று மின் வாரியத்தின் மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

*Industrial Complex at Manamadurai*

*686 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Honourable the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration to locate an industrial complex near Manamadurai in Ramanathapuram district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரை அருகில் தொழில் தொகுதி ஒன்றை உருவாக்க உத்தேசித்துள்ளது. இத்தொழில் தொகுதிக்குத் தேவையான பட்டா நிலங்களை ஆர்ஜிதப்படுத்தவும் புறம்போக்கு நிலங்களை மாற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. க. சோனையா : மானாமதுரை அருகில் இந்தத் தொழிற் தொகுதி எவ்வளவு ரூபாயில் அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் வைத்திருக்கிறது ? அந்த வேலை இன்னும் தொடங்கப்படவில்லை எப்போது அதைத் தொடங்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 111 ஏக்கர் தனியார் நிலங்கள், அரசுக்குச் சொந்தமான 732 ஏக்கர் நிலங்களை செய்களத்தூர், சிறுபள்ளம், கே.ஆர். பள்ளம் கிராமங்களில் எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ரெவின்யூ அதிகாரி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்சாக வைகை ஆற்றுப் படுகையில் இருந்து குடி தண்ணீர் எடுக்கும் நடவடிக்கையும் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. பெ. சீனிவாசன் : இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூர் வட்டாரத்தில் குளோரைடு பாக்டரி கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டு பங்குதாரர்கள் எல்லாம் சேர்த்த பிறகு அதை அரசாங்கம் தனியார் துறைக்குக் கொடுத்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதை மறுபடியும் கூட்டுறவுத் துறையில்—மானாமதுரையில் ஆற்றுப்படுகை இருக்கும் காரணத்தால் தண்ணீர் வசதி இருக்குமென்ற அடிப்படையில் மானாமதுரையில் மீண்டும் இந்தத் தொழில்களோடு இதையும் சேர்த்துத் தொடங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொட்டாஷியம் குளோரைடு என்ற தொழிற்சாலை தனி நபர்களும் அரசாங்கமும் சேர்ந்து கூட்டுத்துறையில் மேலூர் வட்டத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது. அலுமினியம் ப்ளோரைடு தொழிற்சாலை மதுரைக்குப் பக்கத்தில் கூட்டுத் துறையில் தொடங்கப்பட்டிருக்கிறது.

உரோமப் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம்

*687 வினா— திரு. நா. கிருட்டிணன் : மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விண்ணமங்கலம், "டேன்ஸி" உரோமப் பதனிடும் தொழிற்சாலைக்கு இயந்திரங்கள் தேவை என்ற கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை

(இ) எழவில்லை.

திரு. கே. எ. வகாப் : விண்ணமங்கலம் தோல் பதனிடும் தொழில் நல்ல முறையில் நடந்து வருகிறது. இன்னும் அது நல்ல முறையில் நடக்க வேண்டுமென்றால் ஆலோசனை சொல்ல நல்ல ஆட்களாக, தோல் தொழிலின் நுணுக்கங்களைத் தெரிந்தவர்களாகக் கொண்ட ஒரு குழுவை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆலோசனைக் குழு தேவை என்று நான் கருதவில்லை. தோல் தொழில் நடத்துபவர்களுக்கு இப்போது கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அது போக்கப்பட வேண்டும். இப்போது விண்ணமங்கலம் தொழிற்துறைக்கு இயந்திர சாதனங்கள் தேவை. அந்த இயந்திரம்—பெய்லிங் பிரஸ் வேண்டுமென்று கேட்டு டெண்டர் கோரப்பட்டபோது யாரும் அதை சப்ளை செய்ய முன்வரவில்லை. இது சாத்தியமா என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: விண்ணமங்கலத்தில் அரசுத் துறையில் இந்தத் தொழிற்சாலை நடந்து கொண்டிருக்கிறது. இதே மாதிரி மதுரை மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் இத் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆலோசிசிக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விண்ணமங்கலம் வட ஆற்காடு மாவட்டத்தில்தான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் கருத்து பரிசீலிக்கப்படும்.

## *Road Grants to Panchayat Unions*

*688 Q.—THIRU N. DENNIS : Will the Honourable the Minister for Local Administration be pleased to state whether there is any proposal under the consideration of the Government to revise the base year of 1967 for determining the length of the Panchayat Union roads for the allotment of Local Roads Grant?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 1—4—1973-ல் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் ஒன்றிய சாலைகளின் நீளத்தையும், 1971-ம் ஆண்டு மக்கள் தொகை கணிப்பின் அடிப்படையிலும் 1974-75-க்கு தலசாலை மானியம் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். டென்னிஸ்: கேள்வி கேட்கப்பட்ட போது, பல்லாண்டுகளாக, 1967-க்கு முன் பஞ்சாயத்து யூனியன் சாலைகள் இருந்த நீளத்தின் அடிப்படையில் லோகல் ரோட்ஸ் கிராண்ட்ஸ் கொடுக்கப்பட்டது. பஞ்சாயத்து யூனியன் சாலைகளைப் பராமரிக்க கஷ்டங்கள் இருந்தன. இப்போது பல ஊராட்சிச் சாலைகளைப் பஞ்சாயத்து யூனியன் சாலைகளாக தரம் பிரித்திருக்கிறார்கள். ஊராட்சி நிதி பற்றுக்குறை இருக்கும் காரணத்தால் ஆண்டுக்கு ஆண்டு பஞ்சாயத்து யூனியன் சாலைகளுக்கு நீளத்தின் அடிப்படையில் லோகல் ரோட்ஸ் கிராண்ட்ஸ் உடனுக்குடன் கொடுக்க அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 1973-ம் ஆண்டுவரையில் 1961-ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி ஆள் ஒருவருக்கு 18 பைசாவும், சாதாரண ரோடு பராமரிக்கப்பட்ட விகிதாச்சாரத்தில் மைலுக்கு 600 ரூபாய் என்றும் இருந்தது. இப்போது அது 856 ரூபாயாகவும், கடற்கரை அல்லது கழிமுகப் பகுதிச் சாலைக்கு மைலுக்கு 800 ரூபாயாக இருந்தது இப்போது 1,144 ரூபாய் ஆகவும், மலைச்சாலைக்கு மைலுக்கு 1,500 ரூபாயாக இருந்தது இப்போது 2,144 ரூபாயாகவும் மாற்றப்பட்டிருக்கிறது. 1961-சென்ஸஸ்—மக்கள் தொகைக் கணக்கின்படி என்பதை 1971 மக்கள் தொகை என்ற கணக்கின் அடிப்படையில் மாற்றி அதிலும் அதிகமாக ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1974-75-ம் ஆண்டில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அதிக அளவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆறுமுகம்: மக்கள் தொகை அடிப்படையில் இந்தத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. மக்கள் தொகை அடிப்படை ஒரு கிராமத்தில் 1,500 பேர் இருக்கவேண்டுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதைக் குறைத்து ஆயிரம் பேர் என்று ஆக்கலாம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா ? ஒரு மைலுக்கு மேல் இருக்கும் பாதைகளை யூனியன் நிர்வாகம் பராமரிக்க முடியவில்லை. ஆகவே, ஒரு மைலுக்கு அதிகமாக இருக்கும் சாலைகளை ஹைவேஸ் எடுத்துக் கொள்ள அரசு வழி செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இது புதிய ரோடு போடுவது பற்றியல்ல. ரோடுகள் பராமரிப்பது பற்றியது. ஆயிரம் பேர் என்ற கணக்குகள் எல்லாம் இதிலே கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிராமச் சாலைகளை மனத்தில் வைத்து உறுப்பினர் கேள்வி கேட்டிருக்கிறார்.

(முற்பகல் 9·30)

திரு. த. சோணையா: பஞ்சாயத்துக்களின் நிதிநிலைமை சரியாக இல்லாத காரணத்தால் பஞ்சாயத்து ரோடுகளை பஞ்சாயத்துக்களே நிர்வகிக்க முடியாமல் ஆண்டு ஒன்றுக்கு 4, 5, 10 என்ற அளவில் பல ரோடுகளை பஞ்சாயத்து ஒன்றியங்களே பராமரிக்க வேண்டும் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படுகிற தொகை போதுமானதாக இல்லை. ஆகவே, அந்தத் தொகையை இரட்டித்துக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** முன்பிருந்ததை விட, இப்போது ஒரு கோடி ரூபாய்க்கு மேல் அதிகமாகக் கொடுத்திருக்கிறது என்று சொன்னேன். ஊராட்சிகளிலும் பணம் இல்லை. இப்போது மாநில சர்க்கார் இதற்கு அதிகமான அளவில் செலவு செய்ய பணமும் இல்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஸ்தல சாலைகளுக்கான மானியங்கள் 1961-க்குப் பிறகு 1971-ல் தான் ஜனத்தொகை அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு ஸ்தல சாலைகளுக்கு மானியங்கள் வழங்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** உறுப்பினர் அவர்கள் சொல்வது புதிய யோசனை. அதைப் பற்றி பிறகு பரிசீலிக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** இப்போது சாலை பராமரிப்பு வேலைகள் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஹைவேஸ் என்ற மூன்று அமைப்புகளினால் நடைபெறுகிறது. இதில் ஊராட்சிகளிடமிருந்து ஒன்றியங்கள் பாதைகளை எடுத்துக் கொள்ள ஆண்டு ஒன்றுக்கு மிகக் குறைந்த அளவில்தான் எடுத்துக் கொள்கிறார்கள். இதனால் பல சாலைகளின் பணிகள் எடுக்கப்பட்ட பின்னால் அவற்றைப் பராமரிக்க முடியாது அந்தப் பாதைகள் சீர்கெட்டுப் போகின்றன. ஆகவே, ஊராட்சிகளால் பராமரிக்கமுடியாத சாலைகளை ஒன்றியங்களோ அல்லது ஹைவேஸோ எடுத்துக் கொள்வது என்ற நடைமுறை கடைப்பிடிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அந்தந்த ஆண்டுக்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்படுகிறதோ அந்த அளவிற்கு ஹைவேஸ், மற்ற ஊராட்சி சாலைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். அதேபோல் ஒரு ஆண்டு அதிகமாக எடுக்கமுடியாத அளவிற்கு நிதிநிலை இருந்தால் குறைவாக எடுத்துக் கொள்கிறார்கள், நிதிநிலைமை அதிகமாக இருந்தால் அதிகமான அளவிற்கு ரோடுகள் எடுக்கப்படும்.

**திரு. என். டென்னிஸ் :** அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது பஞ்சாயத்து யூனியன் சாலைகள் மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டு சாதாரண இடங்கள், கடற்கரை, மலைப்பிரதேசங்கள் என்று பிரிக்கப்பட்டு வித்தியாசமான தொகை வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். எனது கேள்வி, பஞ்சாயத்து யூனியன் சாலைகளுக்கு 1—4—1967-க்கு முன்பு நீளத்தின் அடிப்படையில் சாலை மானியம் வழங்கப்பட்டது.



ஆண்டுதோறும் பஞ்சாயத்து யூனியன் சாலைகளை நீளத்தைக் கொண்டு தரம் பிரித்து அதன் அடிப்படையில் இந்த மானியம் வழங்கப்படுமா ? அதில் காலதாமதம் ஏற்படாமல் இருப்பதற்கான வழிவகைகளை அரசாங்கம் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** 1—4—1973-ல் இருந்த சாலைகளின் நீளத்தைக் கொண்டு பராமரிப்பதற்கான செலவு 1974-75லிருந்து கொடுத்து வரப்படுகிறது.

**திரு. கே. எ. வகாப் :** சில நேரங்களில் இந்த ஒன்றிய ரோடுகளிலும் ஊராட்சி ரோடுகளிலும் பஸ்கள் செல்கிற நேரத்தில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே அந்தச் சாலைகளை பெருவழித்துறையே எடுத்துக் கொள்வதற்கு— எதைச் சொன்னாலும் பொருளாதாரச் சிக்கல் இருக்கிறது இப்போது என்று சொல்வார்கள்—முதல் இடம் கொடுத்து அவற்றைப் பெருவழித்துறை ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** முக்கியமான சாலைகளுக்கு முதல் இடம் கொடுக்கப்பட்டு வேலைகள் நடக்கின்றன. பஸ்கள் செல்கிற இடங்கள் அதிகமாகக் கவனிக்கப்படுகின்றன.

**திரு. பெ. சீனிவாசன் :** திரு. டென்னிஸ் அவர்கள் கேட்ட கேள்விக்கு சரியாக எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. நானும் ஒரு பஞ்சாயத்து யூனியன் சேர்மன். அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது வேறு எங்கேயோ இழுத்துக் கொண்டு போகிறார்கள். உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியே வேறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் ஒன்றும் வேறு எங்கேயோ இழுத்துக் கொண்டு போகவில்லை. கேள்வி கேட்பவர்தான் இழுத்துக் கொண்டு போகிறார்.

### *Link roads to burial grounds*

*689 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to link burial grounds in the State with the village roads; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) & (ஆ) 9,950 அரிசன குடியிருப்புகள் பயனடையும் வகையில் சுடுகாடு, இடுகாடுகளுக்கு 5,790 கி. மீ. நீள பாதைகள் அமைக்கும் திட்டம் ஒன்றை ரூ. 115 இலட்சங்கள் மதிப்பீட்டில் அரசு வகுத்திருக்கிறது. இத் திட்டம் படிப்படியாக செயல்படுத்தப் படும்.

திரு. என். கே. பழனிசாமி : இதை எவ்வளவு வருடக் காலத்தில் முடிக்க சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்தத் திட்டத்திற்கு மொத்தம் 115 லட்சம் ரூபாய் போட்டு முதலில் 30 லட்சம் ரூபாய் இதற்காக மானியம் ஒதுக்கி இந்த நிதி ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எஸ். வடிவேல் : இந்த இடுகாடு, சுடுகாடு பிரச்னை சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகள் ஆன பிற்பாடும் ஒவ்வொரு ஜாதிக்கும் தனியாக இடுகாடு/சுடுகாடு என்றிருக்கிறது. ஹரிஜனங்களைப் பொறுத்தவரையில் பிணங்களை இடுகாடு/ சுடுகாட்டிற்குத் தூக்கிப் போவதற்கு பாதை இல்லாமல் வயலில் இறங்கி கதிரை மிதித்துக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் பல வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே முதல் பிரச்னையாக எடுத்துக் கொண்டு ஹரிஜன மக்களுக்கு இடுகாடு, சுடுகாடுகளுக்கு பிணங்களைக் கொண்டு போக நல்ல வழிகள் அமைத்துத் தர அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலிலேயே பதில் சொன்னேன். மொத்தத்தில் 12,425 கிலோ மீட்டர் பொதுவாக எல்லா ஜாதிக்காரர்களுக்கும் சேர்ந்து சுடுகாடுகளின் நீளமிருக்கிறது. ஹரிஜனங்களைப் பொறுத்து 9,950 கிலோ மீட்டர் நீளம் இருக்கிறது. இதை அமைச்சரவை கவனத்தில் எடுத்துக் கொண்டு இதற்காக மட்டும் 115 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து முதல் ஆண்டு 30 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கீடு செய்து அதன் வேலை ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : எங்கு பார்த்தாலும் வழக்குகள் இருக்கின்றன. பிணங்களைத் தூக்கிக்கொண்டு போகும்போது வயலை மிதித்துக் கொண்டு போனார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே இதற்கு முன் உரிமை கொடுத்து வேலைகளைச் செய்தால், உடனடியாக அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் இப்படிப்பட்ட வழக்குகள் ஏற்படாமல் இருக்கும். அப்போது போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக வேண்டிய நிலை ஏற்படாது. ஆகவே இந்த வேலைகளைத் துரிதப்படுத்த அரசாங்கம் முன்வருமா ?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் திரு. வடிவேல் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற இந்த மிகப் பெரிய கோரிக்கையை இந்த அரசு கடந்த ஆண்டு யோசித்து முன் உரிமை கொடுத்து ஹரிஜனங்களுடைய பிரச்னையை, இடுகாடுகளுக்கு சவங்களைத் தூக்கிச் செல்கிற அந்தச் சாலைகளை அமைக்கிற பிரச்னையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தொடர்புடைய அதிகாரிகளிடம் நாங்கள் அடிக்கடி கலந்து ஆலோசித்து அவர்களை வலியுறுத்தி வருகிறோம். அந்த வேலைகள் வேகமாக நடைபெறும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : இன்னும் சில ஊர்களில் ஹரிஜனங்களுக்குத் தனிச் சுடுகாடு, மற்ற ஜாதிக்காரர்களுக்கு தனிச் சுடுகாடு என்று சொல்லப்படுகிற நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வியைப் போட வேண்டியது வேறு இடம்.

திரு. வை. பாலசுந்தரம் : சிலயிடங்களில் சுடுகாடு ஒன்றே என்று சொல்லப்படுகிறது. எனவே இந்த விஷயத்தில் அரசு தீவிரம் காட்டுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஜாதிக் கொடுமைகள் ஒழிய வேண்டும் என்று அனைவரும் பேசி வருகிற இந்த நாளில் நண்பர் பாலசுந்தரம் அவர்கள் சொன்னது போன்ற கொடுமைகள் இன்றைக்கும் நாட்டில் பல்வேறு கிராமங்களில் இருக்கின்றன. அதைத் தடுப்பதற்கு நாம் முனைகிற நேரத்தில் சட்டக் குறுக்கீடுகள் எல்லாம் வந்துவிடுகின்றன. அதன் காரணமாகப் பல பிரச்சினைகள், தொல்லைகள் எழுகின்றன. இதற்கெல்லாம் பல்வேறு மதங்கள் புதுமை விரும்பி இன்று நடைபோடுகிற நேரத்தில் நம் நாட்டில் இந்து மதமும் அதை வளர்க்க வேண்டுமென்று விரும்புகிற பெரியவர்களும் இன்றைக்கு ஒன்றாகக் கூடி இந்தக் கொடுமைகளுக்கு ஒரு முடிவு காண முன்வருவார்களேயானால் ஆங்காங்கு அமளி, கலகம், கலவரம் இவைகள் இல்லாமல் இந்தப் பிரச்னைக்கு நல்லதொரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க முடியும்.

திரு. ஆ. கு. சுப்பையா: இடுகாடுகளுக்கு இணைப்புச் சாலைகள் போடுவதற்கு முன்உரிமை அளித்திருப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாராட்டுகிறேன். அதே சமயத்தில் இந்த இடுகாடுகளுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிறபோது தாமதம் ஏற்படுகிறது, ஆட்சேபனைகள் செய்கிறார்கள். அதைச் சுலபப்படுத்த அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்கான இடங்கள் முதலில் எடுத்துக்கொள்ள, அந்த இடங்களை வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

[1975 ஏப்ரல் 16

திரு. பெ. சீனிவாசன்: பொதுவாக சுடுகாடுகளுக்குப் பாதை போடுகிற பொறுப்பு பஞ்சாயத்து போர்டைச் சார்ந்தது என்று தான் சட்டம் இருக்கிறது. ஹரிஜனங்களுக்கான சுடுகாடுகளுக்கும் அப்படியே இருக்கிறது. அதைத் தளர்த்தியிருப்பது குறித்து மகிழ்ச்சி. வருமானம் இல்லாத பஞ்சாயத்துக்கள் சுடுகாடுகளுக்குப் போக ரோடுகள் போடும்போது அதற்காகும் செலவில் பாதிப் பணத்தை அரசாங்கம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 10 சதவிகிதம் தகுதியுள்ள பஞ்சாயத்துக்கள் கொடுத்தால் போதும் என்றிருக்கிறது. பஞ்சாயத்துக்களால் முடியவில்லை என்றால் அதன் முழுத் தொகையையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும்.

திரு. எம். சுரேந்திரன் : ஹரிஜனங்களுக்கு இடுகாடுகளுக்கு பாதை அமைக்கிற நேரத்தில், இந்தச் சர்க்கார் முன்வந்து அதில் அக்கறை காட்டுகிற நேரத்தில் சட்ட இடர்ப்பாடுகள் மற்றவை எல்லாம் ஏற்படுகின்றன என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அம்மாதிரியான சட்டச் சிக்கல்கள் இருந்தால் எங்கெங்கு அம்மாதிரிப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து, முன்னுரிமை அளித்து அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமே தவிர மற்ற மதத்தினர், மற்றவர்களுக்கு நல்ல மனதை உண்டாக்கி இந்தக் காரியம் நடைபெறுவது என்பது இப்போது நடக்காத காரியம் என்ற கருத்தை அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பாதைகள் போடுவதிலே ஏற்படுகின்ற பிரச்சினையை நான் குறிப்பிடவில்லை. ஜாதி வாரியாக இடுகாடு வைக்கப்பட்டிருக்கிறதே அதைத்தான் இங்கே குறிப்பிட்டேன். அந்த நேரத்தில் தான் ஜாதி வாரியாக இருக்கின்ற இடுகாடுகளில் ஜாதி விட்டு ஜாதி மாறி அதாவது பிராமணர்களுக்காக ஒரு இடுகாடு, வேறு ஜாதியினருக்காக ஒரு இடுகாடு, ஹரிஜனங்களுக்காக ஒரு இடுகாடு என்றிருக்கிறதே—ஒரு சவத்தைக் கொண்டு போய் இன்னொரு இடுகாட்டிலே வைக்கும்பொழுது பிரச்சினைகள் எழுகின்றன. அப்படிப்பட்ட பிரச்சினைகளைச் சமாளிக்க சட்டம் ஏற்படவிருக்கிறது.

திரு. அ. ஆறுமுகம் : இன்றைக்கு கிராமப் பகுதிகளிலே பல்வேறு கிராமங்களில் ஏற்கெனவே பணக்காரர்கள் புஞ்சை நிலங்களிலே இடுகாடுகள் கொண்டுவந்து விட்டனர். 1967-க்குப் பிறகு அப்படிப்பட்ட நிலச் சுவான்தார்கள் மற்றவர்கள் தங்கள் இடுகாட்டிற்குப் போகக் கூடாது என்ற நிலைமை பரவலாக இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு எந்தெந்த காரணத்திற்கு யார், யார் இடுகாடுகள் பயன்படுத்தினார்களோ அவைகள் அத்தனையையும் சட்டப்படி இடுகாடாக எடுத்துக் கொள்ள அரசாங்கம் முன் வருமா ?



1975 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எங்கெங்கே தடை இருக்கிறதோ அதை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கிறது.

### சுவேதா நதியின் குறுக்கே பாலங்கள்

*690 வினு.—திரு. மூ. மாரிமுத்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், சுவர்பனை, வத்துவாடி, 74 கிருஷ்ணபுரம் ஆகிய இடங்களில் சுவேதா நதியின் குறுக்கே பாலங்கள் கட்டும் செயற் குறிப்புகள் அரசு பரிசீலனையிலுள்ளனவா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

### உப்பாற்றின் குறுக்கே பாலம்

*691 வினு.—திரு. நா. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், தாராபுரம் வட்டம், நவநாரி கிராமத்தில் உப்பாற்றின் மேல் ஒரு மேம்பாலம் கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் குறிப்பிடுகிறதான பால வேலையை இதர சாலைகள் என்ற திட்டத்தின்கீழ் எடுத்துச் செயல்படுத்த ஒரு செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருந்தது. ஆனால், இத்திட்டத்தின்கீழ் தற்போது போதிய நிதி வசதி புதிய வேலைகளை எடுத்துச் செய்ய ஒதுக்கப்படவில்லை என்ற காரணத்தால் அப் பால வேலை மேற்கூறிய திட்டத்தின் கீழ் கணிசமான நிதிவ்சதி ஒதுக்கப்படும் வருமான காலம் வரும் வரை பொறுத்திருக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

திரு. அ. ஆறுமுகம் : தற்சமயம் அந்தப் பாலம் கட்டும் திட்டம் எடுக்கப்படா விட்டாலும் எப்பொழுது அது எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பணம் அதிகமாக இதற்கு ஒதுக்கீடு செய்யும்பொழுது அதற்கான வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

### *Kuil Thottam Slum Area*

***692 Q.—Thiru N. K. Palanisamy : Will the Honourable the Minister for Labour be pleased to state the expenditure incurred by the Slum Clearance Board for rehabilitating the hut dwellers of Kuil Thottam Slum on Santhome High Road in the Foreshore area?**

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1974 டிசம்பர் முடிய ரூபாய் 9.21 லட்சம் செலவு செய்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்ற நிலையில் இன்னும் பல பேர் பக்கத்திலே குடிசை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு போதுமான இட வசதி இல்லையா? அதை எவ்வாறு மறுபடியும் அவர்களுக்குக் கொடுக்க விருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அந்தப் பகுதியிலே இருந்தவர்களை வெளியேற்றி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. பூச்சு வேலை நடக்கவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## தாம்பரத்தில் வீட்டுவசதி வாரிய மனைகள் ஒதுக்கீடு.

*693 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கடந்த ஆண்டில் தாம்பரத்தில், வீட்டு மனைகள் ஒதுக்கப்படுவதற்கான விண்ணப்பங் கள் கோரியதா?

(இ) ஆம் எனில், எத்தனை விண்ணப்பங்கள் பெறப்பட்டன?

(உ) எத்தனை பேர்களுக்கு மனைகள் ஒதுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.

## கோயம்புத்தூரில் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள்.

*694 வினா.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் டவுன், லிங்கையன் தோட்டம் T.S.No. 1194/1, 1195/1-களில் அமைந்துள்ள நிலம், கோவை வீட்டு வசதி வாரியத்தின் கோவை கிளை 1967-ம் வருடத்தில் எடுத்துக் கொண்டுள்ளதா?

(இ) ஆம் எனில், நிலச் சொந்தக்காரர் நிலக்கிரயம் கொடுக்கப்பட்டுவிட்டதா?





The HON. THIRU K. RAJARAM: (*a*) Yes.

(*b*) A sum of Rs. 5,24,431.76 was covered by the award No. 1 of 1967, dated 19th July 1967 of the R.D.O. Out of this amount, a sum of Rs. 4,13,016.95 was disbursed direct to the land owners and through the Court. Since some of the land owners preferred claims for high compensation under section 18 of the Land Acquisition Act, a sum of Rs. 1,10,323·54 was deposited into the Court and a sum of Rs. 1,091.27 as Revenue Deposit.

திரு. செ. அரங்கநாயகம் : கோவை மேற்கு தொகுதியிலே இது போன்று பொன்னைய ராஜபுரம் என்ற பகுதி இருக்கிறது. அங்கே குடிசைகள் இருக்கின்றன. ஆனால், அந்த இடத்தின் சொந்தக்காரர் அவர்களை எல்லாம் வெளியேற்றி இருப்பதால் அதையும் ஹவுசிங் போர்டு எடுத்துக் கொள்ளுமா? அல்லது நகரத்திலே இருக்கின்ற இது போன்ற பகுதிகளை எல்லாம் நகர சொத்துக்கள் உச்ச வரம்பு மசோதாவின்படி தற்பொழுதிருக்கும் அதிகாரத்தை வைத்துக்கொண்டே சர்க்கார் எடுத்துக்கொள்ள முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :- பொன்னைய ராஜபுரத் தைப்பற்றி தனிக் கேள்வி போடவும்.

## *Houses for Freedom Fighters*

*695 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Honourable the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct houses for aged and infirm Freedom Fighters in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) மதுரை நகரில் வாழும் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் சங்க உறுப் பினர்களுக்கு சிறப்பு மலிவு வீட்டு வசதி திட்டத்தின் கீழ் நகர்ப்புற மேம்பாட்டுக் கழக. நிதி உதவியுடன் 170 வீடுகளை கட்டும் செயற்குறிப்பு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பரி சீலனையில் இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : இது ஜில்லா வாரியாக கொடுக்கப்படுமா? இதற்காக எவ்வளவு பணம் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்த வீடுகள் கட்டுவதற்காக ஹட்கோ என்ற நிறுவனத்திடமிருந்து பணம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த நிறுவனத்திலே தற்பொழுது பணம் இல்லை. ஆகவே, படிப்படியாக அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வசதி இருக்கிறது. தற்பொழுது சொல்லிய திட்டத்தை முடித்துத் தர பணம் வேண்டும் என்று மாநிலத்திலே இருக்கிற வீட்டு வசதி வாரியம் ஈடுபட்டிருக்கிறது.

திரு. கு. அ. பொம்மன்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலிலே ஹட்கோவிலிருந்து பணம் இல்லை என்ற விஷயத்தைச் சொன்னார்கள். மலைப்பிரதேசத்திலே இருக்கின்ற மாவட்டங்களிலாவது முன்னுரிமை கொடுத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மலைப்பிரதேசங்களிலே இருப்பவர்களுக்கு சிரமங்கள் அதிகம் என்பது நன்றாகத் தெரியும். இருந்தாலும் நம் நிலைமை பணப் பற்றாக்குறைதான். எனவேதான், எல்லாப் பகுதிகளுக்கும் இந்த வசதிகளை விஸ்தரிக்க சிரமம் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தத் தியாகிகளுக்கு இது வரையில் எந்த மாவட்டத்திலே வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன? அடுத்தாற்போல் எந்த மாவட்டத்திலாவது அவர்களுக்கு வீடுகள் கட்ட செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தியாகிகள் இப்பொழுது தான் வீடுகள் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். வீடுகள் கட்டுவது பற்றிய வேலை தொடங்கவில்லை. இனி எவ்வளவு பேர் அப்படி கேட்க இருக்கிறார்கள் என்று அறிந்த பிறகுதான் அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள முடியும்.

திரு. வி. பழனிவேலு: தலைவரவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு எப்படி வீடுகள் வழங்கப்படவிருக்கின்றனவோ, அதே போல் இந்தி எதிர்ப்பு போராட்டத்திலே ஈடுபட்ட அந்தத் தியாகிகளுக்கும் வீடுகள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: எல்லோருக்கும் வீடு கட்டித்தர அரசு தயாராக இருக்கிறது. அரசாங்கம் இனமாக வீடு கட்டித் தருவதில்லை. துட்டு கொடுத்தால் தான் வீடு என்ற நிலைமைதான் இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தமிழகத்திலே இப்படி சக்தியற்ற, திறனற்ற அரசியல் தியாகிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய சென்சஸ் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி ஏதாவது



கணக்கு இருந்தால்தான் அப்படி ஒரு திட்டம் போடமுடியும். அப்படி எடுக்கவில்லை என்றால் அதை எடுத்து, அவர்களுக்கு "ஃபேஸ்டு புரகிராம்" அடிப்படையில் வீட்டு வசதி கிடைக்க அரசு வழி வகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதிலேயும் முழுக்க, முழுக்க அவர்களையே பணம் போட்டுக் கொள்ளச் சொல்லாமல் இருக்க வேண்டும். அவர்கள் வாழ முடியாத நிலைமையில் இருப்பதால் தான் அவர்களுக்கு அரசாங்கம் பென்ஷன் கொடுக்கிறது. ஆகவே, அவர்களுக்கு ஓரளவிற்காவது மானியம் வழங்கி வீடுகளைக் கட்டிக் கொடுக்கவும், அவர்களுடைய கணக்கை எடுத்து "ஃபேஸ்டு புரகிராம்" அடிப்படையிலே வீடுகளை அவர்களுக்குக் கட்டிக் கொடுக்க அரசுமுன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வீட்டு வசதி வாரியத்திற்கு கணக்கு எடுக்கின்ற வேலை அநேகமாக இல்லை. யார் விண்ணப்பம் கொடுத்தாலும் அவர்களுக்கு வீடு கட்டித் தரும் வேலையைத்தான் மேற்கொண்டிருக்கிறோம். இதை அரசே தன்னிச்சையாகச் செய்யும் வேலையாக உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்கள். தியாகிகளுக்குத்தான் பென்ஷன் தருகிறோம். மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்களாக இருந்தால் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள 10 சதவிகித பணத்தை முன்னால் செலுத்தினால் 13,000 ரூபாய் மதிப்புள்ள வீட்டினைக் கட்டித் தருகிறோம். இந்தத் திட்டம் வீட்டு வசதி வாரியத்தினால் அளிக்கப்பட்டு, அது நாடெங்கும் நடைபெற்று வருகிறது. அதிலே இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே பங்கேற்ற தியாகிகளானாலும் அல்லது காங்கிரஸ் தியாகிகளானாலும் வீடு கட்டிக் கொள்ள முன் வருவார்களேயானால் அவர்களுக்கு அப்படி கட்டித்தர அரசு தயாராக இருக்கிறது.

## சிவகங்கையிலுள்ள மீன் வளத்துறை அலுவலகம்

*696 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிவகங்கையிலுள்ள மீன் வளத்துறை உதவி டைரக்டர் அலுவலகத்தை இராமநாதபுரத்திற்கு மாற்றிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: ஆம்.

## மீன் பதப்படுத்தும் நிலையங்கள்

*697 வினா.—திரு. த. சோணையா: மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய தொழில் கழகத்தின் சார்பில் சென்னை, தூத்துக்குடி, மண்டபம் ஆகிய இடங்களில் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோணையா : தூத்துக்குடி, மண்டபம் போன்ற இடங்களிலே அதிகமான மீனைப் பிடித்து வருகிறார்கள். அப்படி மீன் பிடித்து வரும் இடங்களிலே மீனைப் பதப்படுத்துவதற்குப் போதுமான வசதி வாய்ப்புகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். அங்கே இருக்கின்ற நிலையங்கள் போதுமானதாக இல்லை என்று கூறுகிறார்கள். அதை இன்னும் விரிவுபடுத்தி மீனைப் பதப்படுத்திக் கொள்ளவேண்டிய இன்னொரு திட்டத்தைக் கொண்டுவர அரசு தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : உறுப்பினர் கூறிய யோசனையை ஏற்கெனவே இந்தத் துறை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. இது பற்றி சரியான ஆய்வு செய்து, பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## பர்கூரில் கால்நடைப் பண்ணை.

*698 வினா.—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பவானி வட்டம், பர்கூர் மலைப்பகுதியில் புகழ் பெற்ற பர்கூர் காளை மாட்டினங்களைப் பேணிக்காப்பதற்கென தனியாக அரசு பண்ணை அமைத்து கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

## மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் வனவிலங்குகள்

*699 வினா.—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



வனவிலங்கு பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் திருநெல்வேலி மேற்குத் தொடர்ச்சி மலைக்காடுகளில் பாதுகாக்கப்படும் வன விலங்குகள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : திருநெல்வேலி மாவட்ட மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த காடுகளில் புலி, சிறுத்தைப்புலி, யானைகள், கடமான், புள்ளிமான், நீலகிரி தார் எனப்படும் காட்டெருமை, குரங்குகள் முதலான வன விலங்குகள் காணப்படுகின்றன. இந்தப் பகுதி '' வேட்டையாடுவதற்குரியதல்ல '' எனத் தடை விதிக்கப்பட்டுள்ளபடியால், இவ்விலங்குகள் அனைத்தும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, இந்த மாதிரி வன விலங்குகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இப்போது அது எந்த அளவிற்கு அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாமா? வனவிலங்குகளை வேட்டையாடிய குற்றம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : அந்தப் பகுதி வேட்டை ஆடுவதற்கான இடமில்லை என்று தடை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: வனவிலங்குகள் மறைமுகமாக வேட்டை ஆடப்பட்டிருக்கின்றனவா என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு ஓ.பி. இராமன் :அது பற்றிய தகவல் இல்லை.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, பொதுவாக தமிழ் நாட்டிலுள்ள இந்தக் காடுகளில் புலிகள் அடித்து மாடுகள் இறந்து போகின்றன என்றும், பாலிடால் வைத்து கொல்லப்படுகின்றன என்றும் சொல்லப்படுகிறது. இதில் எது உண்மை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : தலைவரவர்களே, புலி அடித்து மாடுகள் இறந்ததும் உண்மை, பாலிடால் வைத்து இறந்ததும் உண்மை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில் வன விலங்கு சரணாலயம் அமைப்பதற்கான குறிப்பு ஏதேனும் இருக்கிறதா ? அப்படியானால் குற்றாலம் பகுதியில் நிறுவுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இப்போதே திருநெல்வேலி மாவட்டத்தில் முண்டந்துறை பகுதி சரணாலயமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

Thiru. K. M. SUBRAMANIAM: Sir, was there an epidemic disease the forest area and wild animals died of it.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதைப் பற்றிய விபரம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இப்போது இந்தியாவில் சிங்கம், புலி போன்ற மிருகங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகத் தெரிகிறது. இப்போது மேற்குத் தொடர்ச்சி மலையில் எவ்வளவு புலிகள் இருக்கின்றன? இவைகளின் எண்ணிக்கை வருஷா வருஷம் கணக்கு எடுக்கப் பட்டு வருகிறதா? இவைகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறதா என்பதை அரசு பரிசீலனை செய்கிறதா என்பது பற்றிய விபரத்தைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதற்கான கணக்கு எடுக்கப்பட்ட எண்ணிக்கை கிடையாது. நானே சில சமயத்தில் பார்த்திருக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, வன விலங்குகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது தேவையான ஒன்று என்று இந்த அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. அந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்கு யார் பொறுப்பாக இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாநில, மாவட்ட அளவில் தனி அதிகாரி இருந்து பராமரிப்பு செய்து வருகிறார்கள்.

## தேக்கு உற்பத்தி

*700 வினு.—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தேக்கு உற்பத்தியைப் பெருக்கும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து தேக்கு மரங்களை வளர்க்கும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1975 ஜனவரி மாதம் முடிய இதுவரை தேக்கு மரம் 9330.70 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.15 லட்சம் செலவில் சுமார் 2500 ஹெக்டேரில் தேக்கு மரங்கள் பயிரிடத் திட்டம் உள்ளது.



திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்த தேக்கு மரங்களில் வைரம் பாய்ந்த மரங்கள்தான் சிறந்தவை என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவைகளில் வைரம் பாய்வதற்கு முன்னுலேயே தேக்கு மரங்களை வெட்டி விற்றுவிடுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, 100 ஆண்டு, 200 ஆண்டு என்று கணக்கு வைத்து வெட்டும் முறை கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: எல்லா மரங்களிலும் வைரம் பாய்வதில்லை. ஒரு வயது அடிப்படையில்தான் தேக்கு மரங்கள் வெட்டப்படுகின்றன. இத்தனை ஆண்டு கழித்து வெட்டுவது என்று அந்த வயதின் அடிப்படையில்தான் தேக்கு மரங்கள் வெட்டப்படுகின்றன.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஆற்றங் கரைகளிலும், குளத்தங்கரைகளிலும் தண்ணீர் எப்போதும் இருக்கிறது. அந்த மாதிரி பகுதிகளில் தேக்கு மரம் பயிர் செய்து உற்பத்தி செய்யலாம். ஆகவே இதில் அரசு விசேஷ கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இப்போது தஞ்சை மாவட்டத்தில் ஆற்றங்கரைகளில் தேக்கு மரங்கள் வளர்க்கப் பட்டு வருகின்றன. எஞ்சிய பகுதிகளில் வளர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. அ. பொம்மன்: தலைவரவர்களே, இந்த மாநிலத்தில் எந்த மாவட்டத்தில் தேக்கு மரம் உற்பத்தி பண்ணுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது? எந்தெந்த மாவட்டத்தில் எவ்வளவு பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: நான் ஏற்கனவே சொன்னேன். 1975 ஜனவரி மாதம் முடிய 9,330.70 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 15 லட்சம் செலவில் 2,500 ஹெக்டேரில் பயிரிடப்படும். வரப்போகிற காலத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் 140 ஹெக்டேர், சேலம் மாவட்டத்தில் 180 ஹெக்டேர் என்று இப்படி பயிரிடத் திட்டமுள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நமது மாநிலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு தேக்குமரம் தேவைப்படுகிறது? அப்படித் தேவையாகும் மரங்கள் பூராவும் நமது மாநிலத்தில் கிடைக்கிறதா? கன்யாகுமரி மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான நிலம் இன்னொருவரிடத்தில் இருக்கிறது. அந்த நிலத்தைத் திரும்பப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மொத்தமாக ஒரு ஆண்டுக்கு எவ்வளவு தேவை என்பதுமுங் கணக்கு இல்லை, ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் எவ்வளவு தேவை என்பதுதான் கணக்கில் எடுக்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, நமது வன இலாகா மரம் நடுகிறதோடு விட்டுவிட்டு நட்ட மரங்களுக்கு சரியான பராமரிப்பு இல்லாமல் விட்டுவிடுகிறார்கள். இப்படி செய்வதால் மரங்கள் வளராமல் பாழாகிவிடுகின்றன. ஆகவே இதை மாற்றி நல்ல பராமரிப்புடன் மரங்களை வளர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன பட்டியலில் வட ஆற்காடு மாவட்டம் இல்லை. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலையிலும், பாலாற்றுப் பகுதியிலும் தேக்கு மரங்கள் வளர்ப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அங்கே வளர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வட ஆற்காடு மாவட்டத்தில் ஏற்கெனவே 410 ஹெக்டேர் நிலத்தில் வளர்க்கப்பட்டு வருகிறது. இன்னும் புதிதாக வளர்ப்பதற்கு வாய்ப்பு இருந்தால் அதுபற்றி கவனிக்கப்படும்.

திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிற போது எங்கள் மாவட்டத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. தஞ்சை மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை ஊக்குவிக்க முயற்சி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தஞ்சை மாவட்டத்தில் எத்தனை ஹெக்டேர் என்பது குறிப்பில் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, தேக்கு மரங்களில் வித்தியாசம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இண்டியன் டீக் என்றும், பர்மா டீக் என்றும் சொல்கிறார்கள். இண்டியன் டீக்குக்கு அவ்வளவு மதிப்பு இல்லை என்று சொல்லப்படுகிறது. பர்மா டீக்குக்குத்தான் அதிக மதிப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே பர்மா டீக்கை வளர்ப்பதற்கு அது ஒரு சிறப்பு திட்டமாக அமுல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பர்மாவிலிருந்து வருவதால் அது பர்மா தேக்கு என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதில் ஒன்றும் வித்தியாசம் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, நான் கேட்ட கேள்விக்கு அமைச்சரவர்களிடமிருந்து பதில் இல்லை. மவுனம் சம்மதத்திற்கு அறிகுறி என்பதைப்போல் சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தால் மரங்கள் பாழாகிவிடுகின்றன என்பதை அமைச்சரவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கேள்வியில் சாரம் இல்லை எனறும் பொருள் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10.00)

## (2) அரசினர் தீர்மானம்.

### விதி 41(3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "சட்டப் பேரவை 41-வது விதி, பிரிவு (3)-படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

திரு. பெ. சீனிவாசன் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்னை..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு முக்கியமனா பிரச்னை என்றால், இந்த அவையில் நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றி இருந்தால், அந்தத் தெரிவிக்க பல வாய்ப்புகள் இருக்கின்றன, அந்த முறையில் அதைக்கொண்டு வாருங்கள்.

## (3) நடைமுறைக் கேள்விகள்.

### (அ) முன்னாள் பேரவைத்தலைவர், துணைத்தலைவர் ஆகியோரின் நடவடிக்கைகள் குறித்து, விமர்சனம் செய்யலாமா என்பது குறித்து

திரு. பெ. சீனிவாசன்: ஆன் எ வேலிட் பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இன்று நான் எழுப்ப விரும்பும் பாயிண்ட் ஆப் ஆர்டர், சட்டமன்ற விதிமுறைப்படி, நம்முடைய சம்பிரதாயங்களின்படி, சட்டப்பேரவைத் தலைவர் அல்லது துணைத் தலைவரைப் பற்றி அவர் பேரில் பதவி நீக்கத் தீர்மானம் வந்தாலொழிய அவரைப் பற்றியோ அல்லது அவருடைய நடவடிக்கையைப் பற்றியோ விமர்சனம் செய்யக் கூடாது என்ற முறையைப் பின்பற்றி வருகிறோம் இந்த முறை இப்போது பதவியில் இருக்கும் பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்கு மட்டுமா, அல்லது முன்னாலே பதவியில் இருந்தவர்களுக்கும் பொருந்துமா ?

இதற்கு முன்னாலே பதவியில் இருந்த தலைவர், துணைத் தலைவர், அவர்களுடைய பொறுப்புகள் பற்றியோ, நடவடிக்கைகள் பற்றியோ, அல்லது அவருடைய அலுவலக நிகழ்ச்சிகள் பற்றியோ, இங்கே இந்தப் பேரவையில் ஒரு குற்றச்சாட்டாகவோ அல்லது வேறு வகையிலோ இந்தப் பேரவையில் விவாதிக்கலாமா, அல்லது விவாதத்திற்கு ஆதாரமாக எடுத்து வைக்கலாமா என்ற ஒழுங்குப் பிரச்னையை இங்கே எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர், துணைத் தலைவர் பற்றி—இப்போது பதவியில் இருப்பவர்களை—பாராட்டுவதோ அல்லது அவர்களை விவாதத்திற்குத் துணையாக மேற்கோள் காட்டுவதோ கூடாது என்று விதி. இதற்கு முன்பு அவையில் தலைமை வகித்தவர்களைப் பற்றி கூறலாமா என்றால், அவர்கள் செய்த நற்காரியங்களை முன் உதாரணம் காட்டுவதில் எந்தவிதமான தவறும் இல்லை. அவர்களைப் பற்றி குற்றம் சொல்வது என்ற நிலைமை வருமானால், இந்த மன்றத்தில் இல்லாதவர்களைப் பற்றி—யாரைப்பற்றியும்—இங்கே பேசக் கூடாது, குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்று பொதுவான விதி இருக்கிறது. அந்த விதியின்கீழ் அவர்களைப் பற்றிப் பேசக் கூடாது.

திரு. பெ. சீனிவாசன் : பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் தயவுசெய்து எனக்கு தெளிவான பதிலைத் தர வேண்டும். நீங்கள் சொன்ன விளக்கம் எனக்கு தெளிவை



ஏற்படுத்தவில்லை: நான் மன்றத்தில் இல்லாத உறுப்பினர்களைப் பற்றி மட்டும் கேட்கவில்லை. இப்போது பேரவைத் தலைவராக இருப்பவர்களைப் பற்றி பேசுவது கூடாது. அப்படிப் பட்ட பிரிவிலேஜ் அவர்களுக்கு இருக்கிறது. பேரவைத் தலைவர் பதவி நீக்கத் தீர்மானம் வருகிறபோதுதான் அவரைப் பற்றிப் பேசமுடியும். 42-வது விதியின்கீழ் கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் வரவில்லையென்றால் கூட, நீங்கள் அறையில் வந்து கேளுங்கள், அவையில் கேட்கக்கூடாது என்று சொல்கிறீர்கள். அந்த வகையில் பேரவைத் தலைவருக்கு மரியாதை செலுத்தி வருகிறோம். இங்கே தலைமை வகித்தவர்களைப் பாராட்டிச் சொல்வது வேறு. நான் கேட்க விரும்புவது, அவர்கள் பதவி வகித்த காலத்தில் செய்ததை, அவர்களுடைய நடவடிக்கைகளை விமர்சனம் செய்வது நல்லதா ? நாம் அவர்களைப் பாராட்டுகிற நேரத்தில் கூட, அவர்களைப் பற்றி ரெபரன்ஸ் கூடாது என்ற சம்பிரதாயத்தை வைத்துக் கொண்டு இருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டுவிட்டு, அது பற்றியெல்லாம் பேச வழியில்லை.

திரு. பெ. சீனிவாசன் : நான் இப்போது பேரவையில் உறுப்பினராக இருக்கிறேன். பேரவையின் தலைவர் பொறுப்பை, துணைத்தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருந்து இருக்கிறேன். இதனால் என்னுடைய அரசியல் வாழ்க்கை எவ்வளவோ பாதிக்கப்படுகிறது. பேரவையின் கௌரவம் பாதிக்கப்படுகிறது. நாளையதினம், இன்றையதினம் பேரவைத் தலைவராக இருந்தவரைப் பற்றி, அவருடைய அலுவலகத்தைப் பற்றி, அவர்கள் பணியாற்றியதைப் பற்றி விமர்சனம் செய்வது பொருத்தமா ? அது நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறுவதும் பொருத்தமாக இருக்குமா ?

திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் எழுப்பி இருப்பது உண்மையிலேயே மிக முக்கியமான பிரச்னை என்று கருதுகிறேன். காரணம், இப்போது பதவியில் இருக்கிற பேரவைத் தலைவர், துணைத் தலைவரைப் பற்றி 'டெராகேடரியாக' தவறான முறையில் எந்தவிதமான குற்றமும் சொல்லக் கூடாது. இது சாதாரணமாக இருக்கிறது. இதற்கு முன்னாலே தலைவர், துணைத் தலைவராக இருந்தவர்களைப் பற்றி, அவர்கள் பதவியை விட்டு விலகியதற்குப் பிறகு, அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றி, அவர்களுடைய கான்டக்டைப் பற்றி விமர்சனம் செய்வது முறையா ?

அவர் பதவியில் இருந்த நேரத்தில்—தலைவர் அல்லது துணைத் தலைவராக இருந்த நேரத்தில்—

அவர்கள் செய்த காரியங்கள், அவர்களுக்குக் கொடுத்த உரிமைகளின் அடிப்படையில் செய்யப்பட்டவை. திரு. சீனிவாசன் அவர்கள் எழுப்பிய பிரச்னை குறித்து—தாங்கள் இன்றே தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கூட சொல்லமாட்டேன்—ஏனென்றால், இது வருங் காலத்திற்கு 'கைடன்ஸாக' இருக்கும்—ஆகவே, இது குறித்து தாங்கள் நல்ல முறையில் ஆலோசித்துத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் பதவியை விட்டு விலகிப் போனபின், எது வேண்டுமானாலும் பேசலாம் என்று வந்தாலும் கூட, அதிலே சிக்கல் இருக்கிறது. ஆகவே, இது குறித்து நன்றாக ஆராய்ந்து ஒரு முடிவைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

திரு. பெ. சீனிவாசன் : ஏற்கனவே இருக்கிற நம்முடைய விதிமுறைப்படி—எனக்கு ஒரு வேளை தெரியாமல் இருக்கலாம். நீங்கள் விளக்கம் அளித்தால் நன்றாக இருக்கும்—இன்று பேரவைத்தலைவராக இருக்கிற, துணைத் தலைவராக இருக்கிற யாரையும் கட்டுப்படுத்துகிற அதிகாரம் பேரவைக்கு இருக்கிறதா ? அவர்களுடைய நிர்வாகச் செலவுகள், பயணப் படி போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பேரவை முன்னவருக்கு இருக்கிறதா, நிதி அமைச்சருக்கு இருக்கிறதா, முதலமைச்சருக்கு இருக்கிறதா, அல்லது அவைகள் எந்த முறையில் வகுக்கப்படுகின்றன. அல்லது அவ்வப்போது முதலமைச்சர் நிதியிலிருந்து தரப்படுகிறதா ? அல்லது வேறு வகை வகையில் தருகிறார்களா ? அது அதிகமாக செலவழிக்கப்பட்டு இருந்தால், அதைத் திரும்பப் பெறுவதற்கு அல்லது கட்டாயப் படுத்தி வசூலிப்பதற்கு முதலமைச்சருக்கு உரிமை இருக்கிறதா ? அல்லது பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறதா ? அல்லது வருகிற முதலமைச்சருக்கு உரிமை இருக்கிறதா ? இந்த முறைகள் நமக்குத் தெரிந்தாக வேண்டும். என்னை மிகப் பெரிய சிக்கலில் முதலமைச்சர் அவர்கள் நிறுத்தி இருக்கிறார்கள். நாளைய தினம் ஏதாவது எனக்கு நோட்டீஸ் அனுப்பி வசூல் என்று வந்தால், நான் நிச்சயமாக நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியிருக்கும். அப்போது தங்களுடைய தீர்ப்பு உதவிகரமாக இருக்கும், பேரவையின் கௌரவத்தையும் காப்பாற்றுவதற்கு வசதியாக இருக்கும், இந்த நாட்டின் மரியாதையையும் காப்பதற்கு உதவிகரமாக இருக்கும். ஆகவே, தாங்கள் இது விஷயத்தில் மிகத் தெளிவாக ஒரு தீர்ப்பைத் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : திரு. சீனிவாசன் எழுப்பியிருக்கும் பிரச்னையில் அடிப்படையான முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை இருக்கிறது என்று கருதுகிறேன். நம்முடைய சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய அனு





பவத்தில் எப்படி இருக்கிறது என்றால், முதலில் தலைவர் இருக்கிறார், அதற்குப் பிறகு உதவித் தலைவர் இருந்து இருக்கிறார். நம்முடைய விதிமுறைகளில் கூட சட்டமன்றத்தின் தலைவர் அல்லது உதவித் தலைவர் என்னென்ன பணியாற்ற வேண்டும் என்பதைப் பற்றி நாம் விளக்கமாகச் சொல்லியிருக்கிறோம். அதிலே இல்லாத சில விஷயங்களில் கூட அவருக்கு இந்தச் சபையை நல்ல வகையில் நடத்துவதற்கு உரிமைகளைக் கொடுத்து இருக்கிறோம்.

என்னுடைய கோரிக்கை என்னவென்றால், இந்த 'லெஜிஸ்லேசர் டிமாண்டில்' பேசுகிற போது ஒரு விஷயத்தை நான் சொன்னேன். பொதுவாக சபாநாயகர் அவர்கள் அல்லது துணைச் சபாநாயகர் அவர்கள் இந்த அவை உறுப்பினர்களின் நடவடிக்கைகளை கவனிக்கவேண்டும். அவர்களுக்கு அந்தக் கடமை இருக்கிறது. அதற்கு செலவு செய்யும் அதிகாரம் அவர்களுக்கு இருக்கவேணடும். அந்த அடிப்படையில் இங்கே செயல்கள் அமல் நடத்தப்பட்டு இருக்குமானால், கண்டிப்பான முறையில் உங்களுடைய டைரக்ஷனில் எல்லா விஷயங்களும் நடந்து இருக்கும்.

ஆனால் இன்று நிலைமை எப்படியிருக்கிறது என்றால், 'எக்சிகியூடிவ்'தான் 'லெஜிஸ்லேசரை' அதிகமாக கன்டிரோல் செய்யும் நிலை இருக்கிறது.

It is more or less a fight between the executive and the legislature.

ஆகவே, இப்படிப்பட்ட பிரச்னை எழுந்து இருக்கிறபோது, அன்று ஸ்பீக்கர், டெபுடி ஸ்பீக்கர் என்று இருந்தவர்கள் கொடுத்த தீர்ப்புகள் அல்லது அவர்களுடைய பணியாற்றிய முறைகள் இவற்றை எல்லாம் பொதுவாக விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. தனிப்பட்ட முறையில் வேறு விஷயங்கள் சொல்வதைப் பற்றி அல்ல. ஆகவே, இது சம்பந்தமாகவும் தாங்கள் நன்றாக யோசிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, 'லெஜிஸ்லேச்சருக்கு' எந்தவிதமான அதிகாரம் இருக்கவேண்டும். எந்த அளவுக்கு அதை ஸ்பீக்கர் அவர்கள் கன்ட்ரோல் செய்யவேண்டும் என்பதைப் பற்றி கூட ஒரு குழு அமைத்து, அதன் பேரில் அவர்கள் என்னென்ன சிபார்சுகள் கொடுக்கிறார்கள் என்று வந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் ஏற்கனவே சில நடைமுறைகள் வகுத்து இருக்கின்றார்கள். மற்ற சட்டமன்றங்களிலும் இது மாதிரி பிரச்னை வந்த போது ஏதாவது குழு அமைத்து, செயல்பட்டு இருக்கிறார்களா என்றும் பரிசீலிக்கவேண்டும். அப்படிச் செய்வது எங்களுக்கு உதவிகரமாக இருக்கும், இனி வருங்காலத்திற்கும் அது ஒரு கைடன்ஸ்

ஸாக இருக்கும் என்ற முறையில், தங்களுடைய முடிவு ஒரு ரிமார்க்ஸாக இல்லாமல், ஒரு டைரக்ஷன் ஆக கொடுப்பீர்களானால், அது உதவிகரமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, நம்முடைய அரசியல் சட்டத்தின் ஆர்டிகிள் 187-ல் கிளியராக இருக்கிறது. சட்டப்பேரவையின் நிர்வாகம் தனியாக இருக்கவேண்டும். அது மட்டுமல்லாமல், பேரவைத் தலைவரையோ அல்லது துணைத் தலைவரையோ அழைக்கவோ அல்லது வரவழைக்கவோ உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் அதிகாரம் கிடையாது, தலைமை நீதிபதிக்கும் கிடையாது. அவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு சுதந்திரமான நிலையை அளித்து இருக்கிறார்கள். இந்தப் பேரவையைப் பொறுத்தவரையில் அவர்தான் சுப்ரீம். அவரை யாரும் கட்டுப்படுத்த முடியாது. இந்த மாநில நீதிமன்றத்திற்கு மட்டுமல்ல, டெல்லி பாராளுமன்றத்தில் இருக்கும் பேரவைத் தலைவருக்கும் அவரை அழைத்துக் கேட்க அதிகாரம் கிடையாது. உங்களுடைய நடவடிக்கைகளைக் குறை சொல்ல பாராளுமன்றத்தின் தலைவருக்கும் அதிகாரம் கிடையாது. சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிக்குக் கூட அதிகாரம் கிடையாது என்ற அளவுக்கு மிகச் சுதந்திரமாக இருக்கிற அளவுக்கு ஒரு சாவரின் பவர் என்ற அடிப்படையில் மிக அருமையாக அதிகாரம் இங்கே வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே, நான் மாட்டிக் கொண்டிருக்கிற சிக்கல், இந்தச் சிக்கலில் நம்முடைய முதலமைச்சருக்கு சாதகமாக இருக்கிற விவகாரம்

Financial control of the Assembly rests with the Government.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு.

திரு. பெ. சீனிவாசன் : அதனால்தான் இது வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வது தங்கமணி அவர்கள் சொன்னதை ஒட்டி எழுந்தது. அது தனிப்பட்ட கருத்து.

திரு. பெ. சீனிவாசன் : அதனால்தான் இது வந்தது என்று சொல்கிறேன்.

I am not misusing my right. Financial control...

சட்டப் பேரவையினுடைய பண விவகாரங்கள், நடவடிக்கைகள்; அதனுடைய வரவு-செலவுகள் அரசாங்கத்தின் கையிலேயிருக்கிற காரணத்தால் அல்லது பேரவையினுடைய முன்னவர் அல்லது முதல்வர் அல்லது நிதியமைச்சருடைய கையிலேயிருக்கிற காரணத்தால் என்மீது இவ்வளவு பெரிய அவதூறு வீசப்பட்டது. அதைப்பற்றி தாங்கள் ஒரு நல்ல முடிவு சொல்ல வேண்டும்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் ஏதோ அவதூறு வீசியதாகச் சொன்னார். அது அவதூறு அல்ல, உண்மை நிலையை எடுத்துச் சொன்னேன்.

நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துக் காட்டியதைத் தாங்கள் ஆராய்ந்து, இந்த அவைக்கு முடிவுகளை வெளியிடுவது மிக சிலாக்கியமாக இருக்கும். அப்படி ஆராய்கிற நேரத்தில், ஒரு நேரத்தில், பேரவைத் தலைவர், அல்லது துணைத் தலைவர் இருந்து தீர்ப்புகளை வழங்கிவிட்டு, பிறகு கொள்கையின் காரணமாக வேறு கட்சிக்குச் செல்கிற காரணத்தால், முன்னால் அந்தப் பொறுப்பு நிறைவேற்றப்பட காரணம் நான் அல்ல, சில பேர் என்னைத் தூண்டிவிட்டார்கள், ஆகவே, நான் செய்தேன் என்றெல்லாம் கூறுவதும் நியாயமா என்பதைத் தாங்கள் ஆராய்ந்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் தெரிவித்த அருமையான ஆலோசனைக்கு தாங்கள் ஒரு நல்ல பதிலைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : பத்திரிகையில் வந்ததைப் பாருங்கள். அன்றைக்கு முதலமைச்சர் சொன்னதை நான் (குறுக்கீடு) அவர் எந்த அதிகாரத்தில் அதைச் சொன்னார்.

He almost irritated me

என் மேல் ரிமூவல் மோஷன் ஒரு முறைக்கு இரண்டு முறை வந்தது. இரண்டாவது முறை ஆளுங்கட்சியால் கொண்டு வரப்பட்டது. அது மெஜாரிட்டி கட்சியால் நிறைவேற்றப்பட்டது. இப்பொழுது எழும்பியுள்ள விவகாரத்தை முதலமைச்சரோ மற்றவர்களோ பேசியிருக்கலாம். அன்றைக்கு அவர்கள் பேசவில்லை. ஆனால் இப்பொழுது, இதற்கு முன்னாலே நான் பொறுப்பிலே இருந்ததைப் பற்றி, அப்பொழுது நான் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி, இவ்வாறு சொல்வது, சட்டப்படி சரியா? நியாயப்படி சரியா? மனிதாபிமானப்படி சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது ஒன்றை எழுப்பி இருக்கிறீர்கள். அதைத் தீர ஆராய்ந்து, பிறகு தீர்ப்பளிக்கிறேன்.

**(ஆ) பேரவைத் தலைவர் அனுமதியில்லாமல் உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டே பேசுவதை பத்திரிகையில் வெளியிடலாமா என்பது குறித்து.**

திரு. நா. வீராசாமி : இது வேறு பாயிண்ட் ஆப் ஆர்டர். பொதுவாக, இந்த மன்றத்தில் நடைபெறுகிற நிகழ்ச்சிகள் அத்தனையும் குறிப்புக்களிலே ஏறுகின்றன. அவைகளைத்தான்

[திரு. நா. வீராசாமி] [1975 ஏப்ரல் 16

பத்திரிகைகளிலே வெளியிட வேண்டுமென்று நீங்கள் தீர்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் உட்கார்ந்து கொண்டு பேசியவை சில பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. அப்படி, சட்ட மன்றத்திலே அவைத் தலைவருடைய அனுமதி பெருமல் ஒரு உறுப்பினர் ஒரிடத்திலேயிருந்து பேசுவதெல்லாம் பத்திரிகையிலே வர ஆரம்பித்தால், அதற்குப் பின்னாலே இந்த மன்றத்தைப் பற்றி, உறுப்பினர்களைப் பற்றி அத்தனை பேர்களையும் பற்றித் தவறான தகவல் வரக்கூடும். (திரு. பெ. சீனிவாசன் குறுக்கீடு.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர் பாய்ண்ட் ஆப் ஆர்டர் முடியட்டும். பிறகு விளக்கம் சொல்லுங்கள்.

<u>திரு. நா. வீராசாமி :</u> இப்படி பத்திரிகையிலே வருவதாலே இந்த மன்றத்தைப் பற்றியும் தவறாக, மிகக் கேவலமாக மக்கள் நினைக்கக் கூடிய நிலைமை உருவாகும். அப்படி நிலைமைகள் உருவாவது முறைதானா? பத்திரிகையிலே அப்படிப்பட்ட செய்திகள் வருவது நியாயம்தானா? இதற்குத் தலைவரவர்கள் என்ன பாதுகாப்புக் கொடுக்கப் போகிறார்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.

<u>திரு. பெ. சீனிவாசன் :</u> ஒரு பத்திரிகையிலே வந்ததை நான் கூடப் பார்த்தேன். நான் எழுந்துதான் சொன்னேன், உட்கார்ந்துக் கொண்டு சொல்லவில்லை........

<u>திரு. நா. வீராசாமி :</u> அது சபைக் குறிப்பிலே ஏறவில்லை.

<u>திரு. பெ. சீனிவாசன் :</u> சபைக்குறிப்பிலே ஏறவில்லையென்பது எப்படி எங்களுக்குத் தெரியும்? இங்கு என்ன, ஸ்கிரீனிலே வருகிறதா, இவையெல்லாம் ஏறியுள்ளது, இவையெல்லாம் ஏறவில்லையென்று. (மணியடிக்கப்பட்டது.) என்னைப் பற்றி இப்படி சில வேளை வீராசாமி எழுப்புகிறார். முந்தையநாள் தமிழ்நாட்டிலே மாதவனுக்குச் சொந்தமான ஒரு பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறதென்று............

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்பொழுது, பொதுவாக, நம்முடைய மன்றத்திலே சில காலமாக உறுப்பினர்கள் உட்கார்ந்த இடத்திலே இருந்து, சில சொற்களைச் சொல்கிறார்கள். அது மன்றத்திலே சொல்லக் கூடாத சொற்கள். அப்படிப்பட்ட சொற்களையெல்லாம் சில பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுப்பதை நான் கூடப் பார்க்கிறேன். பார்லிமெண்ட்க்கு ஒரு 'காலம்' செய்தி கொடுக்கப்படுகிற நிலைமை கூட வருகிறது. நான் பத்திரிகைகளைப் பணிவோடு கேட்டுக்



1975 ஏப்ரல் 16] [பேரவைத் தலைவர்]

கொள்கிறேன், மன்றத்தினுடைய மரபுகளை, பெருமைகளைக் காப்பாற்றுகிற அளவுக்குச் செய்திகளை வெளியிடுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> ஆன் எ பாய்ண்ட் ஆஃப் ஆர்டர், சார்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நேற்று இரண்டு பில்கள்தான் பாஸ் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு, நேற்றைய இரண்டு பில்களே இருக்கின்றன. இந்த பாயிண்ட் ஆஃப் ஆர்டரை எல்லாம் இழுத்துக் கொண்டு போய், 11 மணிக்கு 12 மணிக்குப் 'பில்'லை எடுத்து, உறுப்பினர்கள் பேசமுடியாமல், பில்லை அவசரஅவசரமாக பாஸ் பண்ண வேண்டிய நிலைமை வருகிறது. நான் காலையிலே, கேள்வி நேரத்தை விட்டுவிட்டு, பில்லை எடுத்துக் கொள்ளலாம் என்று கூட நினைத்தேன். அப்படியிருக்கும்போது தேவையில்லாமல், பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பி நேரத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார் :</u> தலைவரவர்களே, பாய்ண்ட் ஆஃப் ஆர்டருக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். அப்படியில்லையென்று சொன்னால், தாங்கள் அனுமதிக்காமலிருக்கலாம். மற்ற எல்லோருக்கும் பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப அனுமதி கொடுக்கிறீர்கள். நாங்கள் பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பக் கூடாதா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. பொன்னப்ப நாடார் எழுப்பியது பற்றி, பாய்ண்ட் ஆஃப் ஆர்டர் மறுக்கப்படவில்லை. எவ்வளவு கேட்டாலும் நான் வாய்ப்பு கொடுக்கிறேன். இது எங்கெங்கோ போகிறதே என்றுதான் மறுக்கிறேன்.

<u>(இ) பஞ்சாப் மாநில முதல்வர், தமிழக முதல்வர் வட எல்லையை வந்து பார்க்க அழைப்பு விடுத்திருப்பது குறித்து.</u>

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவரவர்களே, சில நாட்களுக்கு முன்பு மொரார்ஜி தேசாய் அவர்கள்——(குறுக்கீடு) இது ரொம்ப முக்கியமான விஷயம். கொஞ்சம் சொல்வதைக் கேளுங்கள்—— இரண்டு பிரச்னைகளுக்காக உண்ணாவிரதம் இருந்தார்கள். ஒன்று விட்டுவிடுவோம். இன்னொன்று, இந்த குஜராத்——அதை நாட்டிலே இருக்கிற அவசரச் சட்டத்தை உடனே ரத்து செய்ய வேண்டுமென்ற ஒரு முக்கியமான கோரிக்கையைக்கூட வைத்து உண்ணாவிரதம் இருந்தார்கள். ஒரு விதத்திலே சமரசம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அவசரச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் பிரதம அமைச்சரவர்களும், எதிர்க்கட்சிகளும் கலந்து ஆலோசித்து அதற்கு ஒரு முடிவு செய்யலாம் என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 ஏப்ரல் 16

இதற்கிடையிலே, பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த முதலமைச்சர், நமது மாநிலத்தைச் சேர்ந்த முதலமைச்சர் வட எல்லையை வந்துப் பார்க்கவேண்டும், இந்த அவசரச் சட்டம் நீடிக்க வேண்டுமா, வேண்டாமா என்பதனை அதற்குப் பிறகு முடிவு செய்யலாம் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்களை அழைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கும் அந்த மாநில முதலமைச்சருக்கும் நெருங்கிய உறவு இருக்கலாம். அதனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவசரச் சட்டம் தேவையா, இல்லையா என்கிற பெரிய பிரச்னையைத் தீர்க்க வழி வகுக்கும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்ற விவரத்தைத் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

திரு. பெ. சீனிவாசன்: இந்த முதலமைச்சரைப் பற்றி அந்த முதலமைச்சர் சொன்ன சொற்கள் கூடச் சரியாக இல்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அதற்கும் சரியான பதிலைத் தந்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் எப்போதுமே இங்கு சரியான பதிலைத்தான் தந்து வருகிறேன். நண்பர் ஜேம்ஸ் அவர்கள் பஞ்சாப் மாநில முதலமைச்சர்தான் எனக்கு நெருங்கிய நண்பர் என்று சொன்னார். எல்லா மாநில முதலமைச்சர்களுமே எனக்கு நெருங்கிய நண்பர்கள்தான். இவர் மாத்திரம் நண்பர் என்று கருதத் தேவையில்லை. பஞ்சாப் மாநில முதலமைச்சரவர்கள் என்னை அழைத்திருப்பதாக வந்த செய்தியைப் பத்திரிகையில்தான் பார்த்தேன். அவரிடமிருந்து அப்படி எனக்குக் கடிதம் வருமானால் நான் அங்கு சென்று, பார்த்து, ''அவசர நிலைமை'' நீடிக்கலாமா, வேண்டாமா என்ற கருத்தைச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். அந்த அளவுக்கு என்னைப் பெருமைப்படுத்தி, அவர்கள் அழைப்பு விடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லையோரப் பகுதிகள் பாதுகாக்கப் படவேண்டுமென்பதற்காக அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட வேண்டுமென்பது உண்மையாக இருக்குமானால், அவசர நிலைமை எந்தெந்த பகுதிகளுக்குத் தேவையோ, அந்தப் பகுதிகளுக்கு மாத்திரம் அவசரகாலச் சட்டத்தை வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்வது பற்றி சிந்திக்கலாம். அதற்காக, இந்தியா முழுமைக்கும் அவசரகாலச் சட்டம் தேவையில்லையென்பதுதான் நம்முடைய கருத்தாகும்.



## 4. கவன ஈர்ப்பு.

(அ) பட்டுக்கோட்டை தாலூக்காவில் சில கிராம விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் ஆழக்குழாய்க் கிணறுகள் போட கடன் கிடைக்காததால் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சங்கட நிலை குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பேரவை விதி 41-ன் கீழ், ''பட்டுக்கோட்டை தாலூகா, மதுக்கூர் வட்டாரம், பட்டுக்கோட்டை வட்டாரம் இவைகளைச் சேர்ந்த கிராமங்களில் நிலநீர் அதிகம் இல்லை என்ற காரணத்தால் ஆழக்குழாய்க் கிணறுகள் போட நிலவளவங்கியின் மூலமாகவோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் மூலமோ கடன் கிடைக்காததனால் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடமான நிலை பற்றிய ''அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை வளர்ச்சி வட்டாரத்தில் 66 கிராமங்கள் உள்ளன. இவற்றில் 58,989 ஏக்கர் பயிரிடும் நிலங்கள் உள்ளன. மதுக்கூர் வளர்ச்சி வட்டாரத்தில் 47 கிராமங்கள் உள்ளன. இதில் 39,632 ஏக்கர்கள்பயிரிடும் நிலங்கள்உள்ளன. இப்பகுதி ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்டத்தில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அத் திட்டத்தில் சேகரித்த புள்ளிவிவரப்படி இப்பகுதியில் உள்ள ஊற்றுநீர் வளம் நன்கு தெரியவருகிறது. நீரூற்றிலிருந்து குறைந்த அளவு நீரே வெளிவருவதனால், இப்பகுதியில் குழாய்க் கிணறுகளை அமைப்பதைக் காட்டிலும் கிணறுகள் தோண்டி அவற்றில் குழாய்க் கிணறுகள் அமைப்பது பெரிதும் ஏற்றதாயிருக்கும். ஆகவே, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அறிக்கையில், குழாய்க் கிணறுகளுக்குப் பதிலாக கிணறுகள் தோண்டி அவற்றில் துளைக் கிணறுகளை மட்டுமே அமைக்கலாம் எனப் பரிவுரை செய்யப்பட்டது. இந்த அறிக்கையின் அடிப்படையில், அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவன ஒப்பந்தத்தில் பட்டுக்கோட்டை வட்டம் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும், அத்திட்டத்தின்கீழ் நடுத்தரக் குழாய்க் கிணறு திட்டத்தை இப்பகுதியில் செயல்படுத்துவதற்குப் பரிவுரை செய்யப்படவில்லை.

தோண்டப்பட்ட கிணறுகளில் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு விசைத் துளை இயந்திரங்களும் கையால் இயக்கப்படும் துளையிடும் இயந்திரங்களும் பயன்படுத்தப்படலாம். விசைத் துளையிடும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமானால் முதலில் துளை போடவேண்டும். துளையைப் போட்டவுடன் கிணறு வெட்டப்பட வேண்டும். ஆனால் திறந்த கிணறுகளின் உள்ளே துளை போட, கையால் இயக்கப்படும் துளைக் கருவி மட்டுமே பயன்படுத்தப்படலாம். ஏனெனில் சுழல் துளையிடும் கருவிகளை இந்த கிணறுகளுக்குள் இறக்கமுடியாது.

தோண்டப்பட்ட கிணறுகளில் குழாய்க் கிணறுகள் 75-ஐ அமைப்பதற்கு பட்டுக்கோட்டை வளர்ச்சி வட்டார அளவிலான நிலவள வங்கிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இத்தகைய முதலீட்டிற்குக் கடன் விண்ணப்பங்களைப் பெறுவதில் வங்கி ஈடுபட்டுள்ளது. கீழ்க்காணும் கிராமங்களில், அதாவது சாந்தாங்காடு, பாலமுதி, ஏனாதி, சூரப்பள்ளம், கொண்டி குளம் ஆகியவற்றில் மட்டுமே அத்தகைய கிணறுகளை அமைக்க வேண்டுகோள் உள்ளது. 1974–75-ல், பட்டுக்கோட்டை வளர்ச்சி வட்டாரத்தில் ரூ. 93,000 செலவில் 50 திறந்த கிணறுகள் வெட்டவும், ரூ. 72,000 செலவில் விசையேற்றங்களுடன் கூடிய 12 கிணறுகள் வெட்டவும், ரூ. 2,30,000 செலவில் 50 டீசல் கருவிகள் வாங்கவும் கடன் வழங்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்க, ரூ. 41,000 செலவில் 14 கிணறுகள் வெட்டவும், ரூ. 36,000 செலவில் விசையேற்றங்களுடன் கூடிய 9 கிணறுகளை வெட்டவும், ரூ. 77,000 செலவில் 19 டீசல் கருவிகளை வாங்கவும் கடன் வழங்கப்பட்டது. எஞ்சிய பணித்திட்டம் 31—3—1975-க்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மதுக்கூர் வளர்ச்சி வட்டாரத்தைப் பொறுத்தவரை, 3,523 தோண்டப்பட்ட கிணறுகளில் குழாய்க் கிணறுகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 178 மட்டுமே இது வரை அமைக்கப்பட்டுள்ளன. 1974–75-ல் ரூ. 35,000 செலவில் 10 திறந்த கிணறுகளை வெட்டவும், ரூ. 1,00,000 செலவிலான விசையேற்றங்களுடன் கூடிய 14 கிணறுகளை வெட்டவும், ரூ. 1,25,000 செலவில் 25 டீசல் கருவிகளை வாங்கவும் கடன் வழங்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்க, அந்த வளர்ச்சி வட்டாரத்தில் ரூ. 8,000 செலவில் மூன்று கிணறுகளை வெட்டவும், ரூ. 68,000 செலவில் விசையேற்றங்களுடன் கூடிய 9 கிணறுகளை வெட்டவும், ரூ. 70,000 செலவில் 15 டீசல் கருவிகளை வாங்கவும் கடன் வழங்கப்பட்டது.

திட்டத்தின் எஞ்சிய பகுதி 31–3–1975-க்கு முன்னர் எய்தப்படும் என்று நம்பப்படுகிறது. பொதுவாக மதுக்கூர் வளர்ச்சி வட்டாரத்தில் திறந்த கிணறுகளை வெட்ட அதிக வேண்டுகோள்கள் இல்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த மதுக்கூர், பட்டுக்கோட்டை வட்டாரப் பகுதிகளில் 30 அடிக்கு தண்ணீர் கிடைப்பது கிடையாது. 250 அடிக்குக் கீழே ஊற்று அதாவது விவசாயத்திற்குப் போதிய நீர் இருப்பதாக அனுபவபூர்வமாகத் தெரிகிறது. கிணறு வெட்டி 'போர்' போடுவதால் போதிய தண்ணீர் கிடைப்பது கிடையாது. இதனால் கிணறு வெட்டுவதற்கு ஆகும் செலவு வேறு, அதற்குப் பிறகு போர் போடுவதற்கு



ஆகும் செலவு வேறு. இப்படி இரண்டு விதமான செலவுக்கு விவசாயிகள் ஆளாகியும் கூட தண்ணீர் கிடைக்காத நிலைமைதான் இருக்கிறது. ஆகவே டக்-கம்-போர் வெல் ஸ்கீமை விட்டு ஆழமாக போர் போடுவதற்கு அனுமதி கொடுத்து கடன் வழங்கப்படுமானால் கோடைப் பயிர், குறுவைப்பயிருக்கு முன்னாலேயேகூட சாகுபடி செய்யக்கூடிய வசதி இருக்கும். ஆகவே இப்போது இருக்கும் தடையை அரசாங்கம் எடுத்துவிட்டு ஆழக் குழாய்களைப் போடுவதற்கு ஏன் உத்திரவிடக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிபுணர்கள் கூடாது என்று சொல்கிறார்கள். இருந்தாலும் மாரிமுத்து அவர்கள் மீண்டும் சொல்வதால் கிரவுண்ட் வாட்டர் செல்லுக்கு ஆலோசனைக்கு அதை அனுப்பலாம்.

## (ஆ) தமிழ் நாடு நீதிமன்றக் கட்டண வில்லை மற்றும் உரிமை இயல் வழக்கு மதிப்புச் சட்டத்தின் ஒன்றும் அட்டவணையை சென்னை உயர் நீதிமன்றம் நீக்கி தீர்ப்பளித்ததும் அதன் விளைவுகளும் குறித்து

THIRU C. ARANGANAYAKAM : Sir, I call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely,—

"That the Madras High Court struck down Article 1 of Schedule I of the Tamil Nadu Court-Fees and Suits Valuation Act, thereby reducing the income by way of court-fees and rendering a specific area of operation under the said Act unruled by any law and regulation and causing the Government to refund a huge amount since the said order will take effect even before 1967 and consequent loss to the Government."

THE HON. THIRU S. MADHAVAN: Sir, Article 1 of Schedule I to the Tamil Nadu Court–Fees and Suits Valuation Act, 1955 provides for the levy of 7½ per cent *ad-valorem* court fee on plaint, written statement, etc., presented to any court. The validity of this provision was attacked as being *ultra vires* of the Constitution in W.P. No. 1743 of 1954, etc. The High Court, Madras struck down the levy of *ad-valorem* court fees in the Original Jurisdiction of the High Court under Rule I of Order II of the Madras High Court Fees Rules, 1956 as statutorily provided for under Article 1 of Schedule I of the Tamil Nadu Court–Fees and Suits Valuation Act, 1955 as invalid and unconstitutional.

On appeal, the Supreme Court set aside the judgment of the High Court but remanded the cases to the High Court with the direction that the High Court should give an opportunity to the Writ petitioners to file an affidavit or affidavits in reply to the affidavit dated 11th October 1966.

When the State appeal against the judgment of the High Court, dated 31st March 1967 was pending before the Supreme Court, the High Court framed for the levy of *ad-valorem* court fee, a new Rule 1-A of Order II of the High Court Fees Rules on the basis of the clarification given by the Supreme Court. This new rule was inserted and given effect to in September 1968.

In its judgment, dated 3rd March 1975 the High Court has now struck down article I of Schedule I to the Tamil Nadu Court fees and Suits Valuation Act, 1955 as invalid and has also ordered that the levy of *ad-valorem* court fee under the new rule of the High Court will continue. The High Court is of the opinion that the impost inherently bears within it more the concept of tax than fee and that the levy imposing as it does, on a particular section of litigants, a grossly disproportionate part of the burden, is unreasonable and arbitrary. While striking down Article 1 of Schedule I to the Court Fees Act, 1955 as invalid the High Court has allowed the writ petitions and applications with cost.

As the order of the High Court had created a vacuum in law in respect of levy of *ad-valorem* court fee in the lower Courts the Government moved the High Court and obtained the stay of orders of the High Court in respect of the levy of *ad-valorem* court fee in courts other than the High Court.

திரு. செ. அரங்கநாயகம் : இந்த ஷெட்யூல் 1, ஆர்டிகிள் 1-ஐ ஸ்ட்ரக்டவுன் செய்து வந்த உயர்நீதி மன்ற தீர்ப்புக்கான அந்த வழக்கு 20 ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகிறது. இந்தத் தீர்ப்புக்கூட மற்ற வழக்குகளின் தீர்ப்புகளைப் பொறுத்து எந்த நிலையை ஏற்படுத்தும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே உணர்ந்து அரசாங்கம் புதிய சட்டத்தை உருவாக்க விரைவாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

## (இ) அம்பத்தூர் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவன நிர்வாகிகளின் போக்கினால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டு இருக்கும் அல்லல் குறித்து

THIRU A. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, on behalf of the hon. Member, Thirumathi T. N. Anandanayaki, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance namely, the hardships caused to the labourers of Southern Structural of India at Ambathur by the unhelpful attitude of the management in solving their problems.



மாண்புமிகு திரு. க. இராசாராம் : சென்னை பட்டாபிராமிலுள்ள சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் என்னும் தொழிற்சாலையில் சுமார் 1,200 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இத்தொழிற்சாலையில் இரயில் பெட்டிகள் (Railway wagons) மற்றும் கிரேன்கள் முதலியவை தயாரிக்கப்படுகின்றன. இத்தொழிற்சாலை நிதி நிலைமையின் காரணமாக 1969 முதல் 1971 வரை மூடப்பட்டது. பிறகு மேற்படி தொழிற்சாலையின் நிர்வாகத்தை மட்டும் தமிழ்நாடு அரசு 8—1—1971 முதல் ஏற்று நடத்தி வருகிறது.

இத்தொழிற்சாலையில் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் யுனைடெட் யூனியன் என்னும் தொழிற்சங்கம் இயங்கி வருகிறது. தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்துக்கும் உள்ள ஒப்பந்தம் 31—12—74 தேதியுடன் முடிவடைந்ததால், தொழிற்சங்கம் ஊதிய உயர்வு, பஞ்சப்படி முதலிய கோரிக்கைகளை நிர்வாகத்தின் முன் வைத்தது. இருதரப்பாரும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். ஆனால், இரு தரப்பினருக்கும் உடன்பாடு ஏற்படவில்லை. தொழிற்சங்கத் தலைவர் என்னை சந்தித்து இப்பிரச்சினையைப்பற்றி முறையீடு செய்தார். மீண்டும் தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்பு சமரசப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, தொழில் தகராறு சட்டம் 12 (3) பிரிவின் கீழ் இரு தரப்பினருக்கும் இடையில் 3-4-1975 அன்று ஒரு உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) 1975 ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு,1975 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

6. அறிவிப்புகள்.

தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 10-30)

(இ) 1975 ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/75)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, "1975 ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என முன்மொழிகிறேன்.

* 5-3-1975-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



துறைமுகக் கட்டணங்கள், தொகைகள், ஏனைய கட்டணங்கள் ஆகியவை 1908 ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 15/1908) கீழ் விதித்து வசூலிக்கப்படுகின்றன. துறைமுகம் ஒன்றின் வருவாய்—செலவினங்களைக் காட்டும் துறைமுக நிதிக் கணக்கு எனப்படும் தனிப்பட்ட கணக்கு ஒன்றை வைத்து வர வேண்டும் என மேற்படி சட்டத்தின் 36-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் உள்ள சிறு துறைமுகங்கள் அனைத்தையும் பொறுத்தவரையில், அத்துறைமுகங்களிலிருந்து கிடைக்கும் கட்டணங்கள், தொகைகள், ஏனைய கட்டணங்கள் ஆகியவை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 266-வது பிரிவின் செயல் நோக்கங்களுக்காக மாநில வருவாயாகும் என்றும் இத்துறைமுகங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் மாநிலத் தொகு நிதியைச் சார்ந்ததாகும் என்றும் இத்தகைய துறைமுகங்களிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து செய்யப்படும் செலவு மாநிலச் சட்டமன்றப் பேரவையின் அனுமதிக்குட்பட்டதாகும் என்றும் கருதப்படுகிறது.

எனவே, மேற்சொன்ன செயற்குறிப்புக்கு செயல்வடிவம் கொடுக்க 1908-ம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் சட்டத்தினைத் திருத்தவும், அதன் காரணமாக 1938-ம் ஆண்டு தமிழ்நாடு சிறு துறைமுகங்கள் நிதிச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 19/1938) ரத்து செய்யவும் அரசு முடிவு செய்துள்ளது.

மேற்சொன்ன நோக்கத்தை எய்த இச்சட்ட முன்வடிவு விழைகிறது.

இப்பிரேரணையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இந்த மசோதாவின் பேரிலே அரசு தரப்பிலே கொடுத்திருக்கும் விளக்கங்கள் போதியதாக இல்லை என்று நான் கருதுகிறேன். 1908 ஆம் ஆண்டு, மத்தியச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரும், திருத்தக் கூடிய சட்டமாகும். இதற்கு முன்னால் தமிழ்நாடு மைனர் போர்ட்ஸ் ஃபண்ட் என்ற சட்டம் இருந்ததை இந்தச் சட்டத்தின் மூலம் ரத்து செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த மைனர் போர்ட்ஸ் ஃபண்ட் ஆக்டிலே சொல்லியிருப்பது, இந்த நிதியைப் பயன்படுத்துவதில் எப்படிப் பயன்படுத்தி ரெவின்யூவில் சேர்த்துக் கொள்ள, மாநில அரசின் நிதியில் சேர்த்துக் கொள்ள அந்தந்த ஆண்டிலே சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டு வந்து அதன் மூலம் செய்ய வேண்டுமென்று மைனர் போர்ட்ஸ் ஆக்டிலே சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், இதுவரையிலே இந்த ஃபண்ட் எப்படி அதிலே சேர்க்கப் பட்டது, என்ன செய்யப்பட்டது என்ற விவரம் நமக்குத் தெரிய வில்லை.

இப்பொழுது கொண்டுவந்திருக்கும் இந்த மசோதா, கன்சாலி டேட்டட் ஃபண்டிலே இந்தப் பணத்தைச் சேர்க்க விதி கொண்டு வந்திருக்கிறோம். ஸ்டேட் கன்சாலிடேட்டட் ஃபண்டில் இந்தத் தொகை சேர்க்கப்படாமல் இருந்திருக்கிறது என்று நாம் பொருள் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஏன் இப்படி தவறு நேர்ந்தது, இப்பொழுது மாற்றுவதற்கான நிலை என்ன என்று தெளிவாக இல்லை.

ஆனால் இதுவரையில் இந்த நிதி மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்திருந்ததா, மாநில அரசாங்கத்தைச் சேர்ந்திருந்து வந்ததா என்ற விவரம் சொல்லப்படவில்லை. அப்படி மத்திய அரசாங் கத்தை இந்த நிதி சேர்ந்து வந்திருந்தால் இப்பொழுது மாநில அரசின் நிதியாக மாற்றுவதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி, கன்சண்ட் பெற்றுக் கொள்ளப்பட்டதா ?

அரசியல் சட்டத்தைப் பார்த்தால் இந்த மைனர் போர்ட்ஸ் என்பது கன்கரண்ட் லிஸ்டிலே இருக்கிறது. எனவே, இது அவர் களின் நிதியாக இருந்து வந்ததா என்ற விவரமும் வரையறுத்துச் சொல்லப்படவில்லை. மாநில அரசின் நிதியாகக் கொண்டு வந் திருந்தால் இதுவரையிலேயும் நம்முடைய கன்சாலிடேட்டட் ஃபண்டில் இது எப்படிச் சேர்க்கப்பட்டது தீர்மானம் இல்லாமல் என்ற விவரங்களையெல்லாம் அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தச் சட்டத்திலே ஒரு சில கருத்துக்கள் கூறுவதற்கு முற்படுகிறேன். இதில் மத்திய சட்டத்திற்கும், மாநில சட்டத்திற்கும் ஏதாவது முரண்பாடு இருக்கிறதா ? அப்படியிருந்தால் அதற்கு என்ன செய்ய வேண்டுமென்ற ஐயப்பாடு எழும் அளவில் இங்கே கருத்து தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக கன்கரண்ட் லிஸ்டிலே

Entry 31. Ports other then those declared by ro under law made by Parliament or existing law to be majar Ports.

என்றுதான் இந்த என்ட்ரி 31, நமது அரசியலமைப்புச் சட்டத் திலே இருக்கிறது. 1939-ல் இருக்கிற சட்டத்திற்குத் திருத்த மாகக் கொடுப்பதற்கான காரணங்களெல்லாம் இதிலே கூறப் பட்டிருக்கின்றன. என்ன காரணத்தை இதற்கு முக்கியமாகக் கூறுகிறார்கள் என்றால் அதிலே ஃபைனான்ஷியல் மெமோ ரண்டத்தில் ஒரு பகுதியைக் கூறியிருக்கிறார்கள்.



Clause 4 of the Bill provides for the merger of the Port Fund with the Consolidated Fund of the State. Hence all expenditure towards the administration and development of Minor Ports in the State will have to be met from the Consolidated Fund of the State.

என்று அதிலே குறிப்புத் தந்திருக்கிறார்கள்.

பொதுவாக, நமது மைனர் போர்ட்களைப் பொறுத்தவரையில் அவற்றைப் பராமரிப்பது இன்றைக்குச் சரியான முறையில் இயங்க வில்லை என்ற கருத்து மக்கள் மனதிலே இருந்துகொண்டே இருக் கிறது. அதிலேயும் குறிப்பாக இந்த மைனர் போர்ட்களை யெல்லாம் அதிகமாகப் பராமரிக்க வேண்டுமானால் மாநில அரசுக்கு தனி நிதி தேவை என்ற கருத்தும் இருக்கிறது.

இது சட்டத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறதா அல்லது மத்திய அரசினிடமிருந்து இந்த மசோதாவிற்கு முன் அனுமதி பெறப்பட்டிருக்கிறதா என்ற விவரத்திற்குள் போக நான் விரும்ப வில்லை. ஒருவேளை ஆர்டிகிள் 254 (2)-ன் கீழ் இந்தச் சட்டம் வேண்டுமானால்,

it can be reserved for the consideraion of the President.

என்று ஆர்டிகிள் 254 (2)-லே ஒரு பிரிவு இருக்கிறது. அந்த அடிப்படையிலே மத்தியச் சட்டத்திற்கும் மாநிலச் சட்டத் திற்கும் முரண்பாடு இருக்கிறது என்றால் அவர்களுக்கு ஆய்ந்து ஒரு முடிவு கூற எல்லா வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆனால், கன்சாலி டேட்டட் ஃபண்டிலே சேர்ப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தையும் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக் கிறேன். ஆர்டிகிள் 266-இன்படி இந்த மாற்றம் ஏற்படப் போகிறது என்று எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

மேற்குக் கடலோரப் பகுதியிலே எங்களுக்குக் கொளச்சல் போர்ட் இருக்கிறது. நீண்ட நெடுங்காலமாக அது பராமரிக்கப் படாமல் அப்படியே இருக்கிறது. அதிலே வருவாய் போதிய அளவிலே இருக்கிறது. அது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த போர்ட்டாகவும் இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கிற நல்ல போர்ட்டாகவும் இருக்கிறது. கொளச்சல் யுத்தம் என்ற யுத்தத்தில் டச்சுக்காரர்களை திருவிதாங்கூர் மன்னர் தோற்கடித்த துறைமுகமாக இருக்கிறது. அதிலே பீயர் கட்டினால் துறைமுகமாக ஆவதற்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன என்று ஓஷியோனோகிராஃபிக் சர்வேயினர் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை வலியுறுத்து வதற்கு இந்தச் சட்டத்திலே இருக்கிற ஷரத்து அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருக்காது என்ற ஆலோசனை யையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

இந்தமாதிரி சிறு போர்ட்டுகளை விருத்தி செய்ய, கடலூரிலே எப்படி விருத்தி செய்கிறார்களோ அதுமாதிரி வேறு சின்னச்சின்ன துறைமுகங்கள் பலயிடங்களில் இருக்கின்றன; அவைகளையும் விருத்தி செய்ய போதிய ஏற்பாட்டை இந்தப் பணத்தின் அடிப்படையில் செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதுவரையிலே அந்தப் பணம் போர்ட் ஃபண்ட் என்று தனியாக வைக்கப்பட்டு வந்தது. மாநில கன்சாலிடேட்டட் ஃபண்டிலே சேர்க்கப்படாமலே இருந்தது. இப்பொழுது சேர்க்க வேண்டுமென்பதுதான் இப்பொழுது வந்திருக்கிற மசோதாவின் நோக்கம். மத்திய அரசாங்கத்தின் கன்கரண்ட் லிஸ்டிலே இருப்பதால் அனுமதி பெற்றாகி விட்டதா என்று கேட்டார்கள். குடியரசுத் தலைவரவர்கள் அனுமதி கொடுத்து விட்டார்கள். ஆகவே, மத்திய அரசு எந்தவிதமான ஆட்சேபணையையும் தெரிவிக்கவில்லை. கேரளா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களையும் கலந்தோம். இதுபோல் தனியாகத் தேவையில்லை, கன்சாலி டேட்டட் ஃபண்டிலே சேர்த்துவிடலாம் என்ற கருத்தைச் சொன்னார்கள். இதுவரையில் கன்சாலிடேட்டட் ஃபண்டிலே சேர்க்காத காரணத்தால் இதற்கு மானியம் கோர வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது. இனிமேல் மானியம் கோர வேண்டிய அவசியம் வரும். அதனால் சிறுசிறு துறைமுகங்களைப் பற்றி மானியம் கோரும் நேரத்தில் மன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைக் கூறுவதற்கு வசதியாக இருக்கும். இந்த மசோதா மத்திய அரசாங்கத்திற்கோ, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கோ முரணானது அல்ல, இது தேவையான ஒன்று, இதை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "1975 ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## 6. அறிவிப்புக்கள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு. பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/74) -ஐ ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஈ) தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/74).

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 48/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என நான் முன்மொழிகிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவை முன்மொழிகையில், கடந்த மூன்றாண்டுகளுக்கு மேல் இந்த அரசு தொழுநோயால் அல்லலுறும் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பற்றி இப்பேரவை நன்கு அறியும் என்பதை நான் எடுத்துக் கூற விழைகிறேன். 1971-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவன்று திரட்டிய

---

* 14-12-1974-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

நிதிகளிலிருந்து இத்தகைய 10 மறுவாழ்வு இல்லங்களை நிறுவு வதற்காக ஏறத்தாழ 1 கோடி ரூபாய் அளவுக்கு நாம் செல வழித்துள்ளோம். இந்த பத்து மறுவாழ்வு இல்லங்களாவன :—

செங்கற்பட்டு மாவட்டத்தில் பரனூர்;
தென்னார்க்காடு மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை;
தருமபுரி மாவட்டத்தில் பர்கூர்;
புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை;
வட ஆர்க்காடு மாவட்டத்தில் மல்லவாடி;
தஞ்சை மாவட்டத்தில் மனையேறிப்பட்டி;
மதுரை மாவட்டத்தில் புதுப்பட்டி;
கோவை மாவட்டத்தில் விண்ணப்பள்ளி;
சேலம் மாவட்டத்தில் தேவியாகுறிச்சி;
தருமபுரி மாவட்டத்தில் செல்லியம்பட்டி
என்பன.

இன்று இவ்வில்லங்கள் அனைத்திலும் சேர்ந்து ஆடவரும் பெண் டிருமாக ஏறத்தாழ மொத்தம் 3,400 பேர் உள்ளனர். இந்த மறுவாழ்வு இல்லங்களில் மருத்துவப் பணியாளர்கள், ஏனைய நிர்வாகப்பணியாளர்கள் ஆகியோர் போதிய எண்ணிக்கையில் உள்ளனர். இந்த இல்லங்களில் உறைவோர்களுக்கு மருத்துவ சிகிச்சையும் அறுவை சிகிச்சையும் முழு அளவில் கொடுக்கப் படுவதோடு கூட, இவர்களுக்கு உணவு, உடை ஆகியவையும் கொடுத்து வருகிறோம்.

இந்த இல்லங்களுக்காக ஆண்டுதோறும் ஆகும் தொடர்ச் செலவு ரூ. 40 இலட்சத்துக்கு மேல் சற்றுக் கூடுதலாக உள்ளது. இந்த இல்லங்களில் உறைவோர் அனைவரும் பெரும்பாலும் தாங்களாகவே இவற்றில் வந்து சேர்ந்துள்ளனர்.

ஆனால் பிச்சை எடுப்பதையே பெரிதும் விரும்பும் அவாகளில் சிலர் இந்த இல்லங்களை விட்டு வெளியேறியுள்ளனர். இந்தப் பிச்சைக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களுக்குத் தண்டனை அளிக்க இதுவரையில் நாங்கள் நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை.

ஆனால், தாங்களாகவே இந்த இல்லங்களில் வந்து சேராத மிகச் சிறுபான்மையினரின் மீது பிச்சை எடுத்தலைத் தடுக்கும் பழைய சட்டம் அளித்துள்ள அதிகாரங்களோடு இப்புதிய திருத்தச் சட்ட முன்வடிவு நமக்கு அளிக்கக்கூடிய அதிகாரங் களையும் நாம் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

இப்போது நான் முன்மொழிகின்ற திருத்தச் சட்ட
வடிவில் மிக முக்கிய விதித்துறை என்னவென்றால், முன்
நோயால் அல்லலுறும் பிச்சைக்காரர்களை தொழு
இந்த இல்லங்களில் நிறுத்தி வைத்துக் காலவரம்பின்றி
அதிகாரங்களை மேற்கொள்ளும் விதித்துறைதான்.



குற்றவியல் நீதிபதி ஒருவரால் தண்டனை அளிக்கப்பட்ட பின்னரே இவ்வாறு கால வரம்பின்றி அவர் நிறுத்தி வைத்துக் கொள்ளப்படுவார்.

இவ்வாறு காலவரம்பின்றி நிறுத்தி வைத்துக்கொள்ளப் படுபவர்கள் மிகச் சிலராகவே இருப்பினும், அரசு அத்தகைய அதிகாரங்களை மேற்கொள்ளுவதனால் ஒரு பக்கம் சமுதாயத் திற்கும் மறுபக்கம் இத்தொழுநோயாளிகளுக்குமே தனது கடமையை நிறைவேற்றும் பொறுப்பினை ஏற்க வேண்டியுள்ளது. அவ்வாறு காலவரம்பின்றி நிறுத்தி வைத்துக் கொள்ளப்படும் ஒருவர் பூரண குணம் அடைந்தவுடனும், மற்றும் அத்தகைய பிச்சைக்காரருக்கு இடவசதி அளித்தல், உணவு அளித்தல், அவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்தல் ஆகியவற்றை பொது மக்களில் ஒருவரோ அல்லது அப்பிச்சைக்காரரின் ஓர் உறவினரோ தாமே ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தாலும், அப்பிச்சைக் காரர் நிச்சயமாக இந்த இல்லத்திலிருந்து விடுவிக்கப்படுவார் என்கிற அளவில் இத்திருத்தச்சட்டவரைவில் இயற்றப்பட்டுள்ள விதித்துறைப்பற்றி இம்மாமன்றத்தின் நாட்டத்தைக் குறிப்பாக ஈர்க்க விழைகிறேன்.

எனவே, தாங்களாகவே இந்த இல்லங்களில் சேர முன்வராத தொழுநோய்ப் பிச்சைக்காரர்களின் மீது சற்றுக் கண்டிப்பாகவே நடவடிக்கை எடுத்துக் கொள்ள நாம் கருதி னாலும், அதே சமயத்தில் அவர்கள் மீது பரிவு காட்டவும் நாம் தயங்கவில்லை என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

ஆகவே, தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் முழுமையாக மறுவாழ்வு பெறுகிறவரையில் அவர்களை இச்சிறப்பு இல்லங் களில் காலவரம்பின்றி நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு 1945 ஆம் ஆண்டு தமிழ் நாடு பிச்சை எடுத்தல் தடுப்புச் சட் டத்தைத் திருத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

மற்றும், தொழுநோயால் பீடிக்கப்பட்டுள்ள சிறுவர் களைப் பொறுத்தவரையில் கூட, அச்சட்டத்தில் இதைப் போன்ற ஒரு விதித்துறையை இயற்றவும் கருதப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல்வடிவம் அளிப்பதே இச்சட்ட முன்வடிவின் நோக்கமாகும். இப்பிரேரணையை இம் மாமன்றம் ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment—

"That the concurrence of the Tamil Nadu Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses, consisting of........Members of the Tamil Nadu Legislative Assembly

and.......Members of the Tamil Nadu Legislative Council, to consider the Tamil Nadu Prevention of Begging (Amendment) Bill 1974 (L.A. Bill No. 48 of 1974) and that the following members of the Tamil Nadu Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee (Names of members to be given later)".

The amendment was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். ஆனாலும் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கு 1945-லேயே சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது எந்தமுறையில் செயல்படுத்தப்படுகிறது என்பதற்கு ஒரு நோட்ஸ் வைத்திருந்தால் நன்றாக இருக்கும். அதுபோல வைக்கப்படவில்லை.

இந்த மசோதாவின்படி 18 வயதிற்குட்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை மாஜிஸ்ட்ரேட் அனுமதி வாங்கி, உள்ளே வைத்து அவர்களை சொஸ்தம் பண்ணி அனுப்ப வகை செய்கிறது. அப்படியென்றால் இந்தத் தொழுநோய் பிச்சைக்காரர்கள் இல்லங்களில் யாரும் இருப்பதில்லை என்று ஆகிறது. பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் என்று 10 இடங்களில் வைத்திருக்கிறார்கள். அங்குள்ளவர்கள் எல்லா நாட்களிலும் அங்கே இருக்கிறார்களா என்றால் இல்லை. அமைச்சர்கள் அல்லது முக்கியமானவர்கள் வருகிறபோது மட்டும் அங்குள்ள போலீஸ்காரர்கள் சுற்றுவட்டாரத்திலுள்ளவர்களை எல்லாம் அங்கே கொண்டுவந்து வைத்து அதிகமான பேர்கள் இருப்பதாகக் காட்டுகிறார்கள். வேறு ஒன்றும் இல்லை.

இன்றைக்கு ஆர்மீனியன் ஸ்ட்ரீட்டிற்கு மட்டும் வியாழக்கிழமை சென்று பார்த்தால் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் ஆயிரம் பேர்களைப் பார்க்கலாம். இது சமுதாயப் பிரச்சினையாக இருக்கிறதே தவிர சட்டத்தின் மூலம் தீர்க்கக் கூடிய பிரச்சினையாக அமையவில்லை.

நேற்று ஊட்டியில் கூட செமினார் நடந்தது. நூற்றுக்கு பத்து பேர்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. பத்து இடங்களில் மட்டும் இல்லங்கள் திறந்தால் போதாது. சமுதாயத்திலுள்ள இந்த 10 சதவிகிதப் பேர்களைப் பிடித்து சொஸ்தம் செய்ய கன்ஸாலிடேட்டட் பண்டில் இருந்தாவது நிதி ஒதுக்கி ஒட்டுமொத்தமான நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டும்.

இன்னொன்று, சொஸ்தம் செய்து வெளியில் அனுப்புவதாகத்தான் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. வெளியில் அனுப்பிவிட்டால் மறுபடியும் பிச்சை எடுக்கத்தான் போவார்கள். அவர்களுடைய ரீஹாபிலிடேஷனுக்கு வழி செய்யவேண்டும்.



1945-ல் பிச்சைக்காரர்களைத் தடுக்க சட்டம் கொண்டு வந்தோமே தவிர நாளுக்கு நாள் பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டுதான் போகிறது. நவீன முறையில் பிச்சையெடுக்கிற தன்மை வளர்ந்திருக்கிறது. 5 பைசா போட்டால் கூட—என்னய்யா நீ ஒரு பிச்சைக்காரன் மாதிரி போடுகிறாயே என்று போடுகிறவர்களையே கேட்கிற தன்மை வளர்ந்திருக்கிறது. வெளிநாட்டில் இருந்து யாராவது வந்துவிட்டால் அவரைச் சுற்றிக்கொண்டு பத்து பேர்கள் பிச்சை கேட்பதைப்பார்க்கிறோம். பஸ் ஸ்டாண்டு—கோவில்கள் எங்கு பார்த்தாலும் இதே நிலை தான். வெளிநாட்டவர்கள் இதைப் படம் பிடித்து எடுத்துக் கொண்டுபோய் இந்தியாவில் பிச்சைக்காரர்கள் அதிகம் என்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் அதிகம். அமெரிக்காவிலும் பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அவர்கள் ஆர்பனேஜ் என்று வைத்திருக்கிறார்கள். பிச்சைக்காரர்கள் இல்லாத நாடு சோஷலிஸ நாடுகள்தான்.

சோஷலிச நாடுகளில் ஜனங்கள் பிச்சை எடுப்பதே இல்லை ஒவ்வொருவருக்கும் வேலைவாய்ப்பு, சம அந்தஸ்து, உணவுப் பொருள் கிடைக்கும் காரணத்தால் அங்கு பிச்சைக்காரர்கள் இல்லை. சில பேர் இதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று அங்கு சென்று துருவித் துருவிப் பார்த்தும் கூட ஒருவரைக் கூடக் கண்டு பிடிக்க முடியவில்லை.

இங்கே பம்பாயில் ஒரு பிச்சைக்காரனுக்கு ஒரு நாளைக்கு 6 ரூபாயிலிருந்து 36 ரூபாய் வரை கிடைக்கிறது. சென்னையில் 5 ரூபாயிலிருந்து 25 ரூபாய் வரை கிடைக்கிறது. ஒரு 'பாஸ்' (Boss) இருப்பான். ஐந்தாறு பிள்ளைகளை காலையில் வேறு வேறு இடங்களில் உட்கார வைத்து விடுவான். மாலையில் வந்து அந்தத் தொகையை எடுத்துக் கொள்ளுவான். அந்தப் பிள்ளைகளுக்குச் சாப்பாடு மட்டும் போடுவான். இதனால்தான் பல இடங்களில் பையன்கள் காணாமல் போகிறார்கள். சர்க்கார் இந்த 'பாஸை' கண்டுபிடித்து கடுமையாகத் தண்டிக்க வேண்டும். இந்தத் தொழில் அதிகமாகப் பரவி வருவதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். தொழுநோயைப் போக்கவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அது அனுமதிக்கப்படவில்லை, அவர்கள் ஏதாவது கருத்து சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது என்னுடைய திருத்தத்தைப் பொறுத்தவரையில் இந்த மசோதாவை ஒட்டுமொத்தமாக, காம்ப்ரஹென்சிவ் பில்லாகக் கொண்டு வர வேண்டுமென்ற அடிப்படையில் கொடுத்திருக்கிறேன். ஒரிஜினல் ஆக்ட் 1945—அதற்குப் பிறகு இன்னொரு மசோதா நான் மேல் சபையில் இருந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் ஜோதி அம்மையார் அவர்கள் அன்று அமைச்சராக இருந்தபோது கொண்டு வந்தார்கள். அது சரியான வகையில் கொண்டு வரப்பட்டது. இப்போது இன்னொரு திருத்தம் வந்திருக்கிறது. தொழுநோயால் பாதிக்கப்பட்ட பிச்சைக்காரர்களை இந்த மசோதாவின் கீழ் கொண்டு வந்து நன்மை செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இதில் இரண்டு லக்கூனு இருக்கின்றன. லெப்ரசி என்பதை பொறுத்தவரை ஒட்டு மொத்தமாக தொழுநோயைக் கட்டுப் படுத்த அரசாங்கம் என்ன செய்கிறது என்று பார்க்க வேண்டும். அதை அணுக வேண்டிய முறை—நோய் என்ற முறையில்....

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதற்கு முன்னால் பேசிய திரு. பழனிசாமி அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் ஒரு அடிப்படையான கருத்தை இந்த மசோதாவின்மீது கொண்டு வந்து பேசுகிறார்கள். தொழுநோயாளிகளை என்ன செய்வது, தொழு நோயை என்ன செய்வது என்ற அந்த அடிப்படையில் இந்த பில் இங்கு வரவில்லை. அந்த அடிப்படையில் செய்யப்பட வேண்டிய காரியங்கள் மருத்துவத்துறை மூலம் பரவலாக எஸ். இ. டி. யூனிட் மூலம் எந்த அளவுக்கு அதிகமான அளவுக்கு சிகிச்சை அளிக்கப்படவேண்டுமோ அது வழங்கப்பட்டு வருகிறது.

தொழுநோயாளிகள் பிச்சைக்காரர்களாக இருந்து சமுதாயத்தில் தங்களுடைய நோயைப் பரப்பிவிடக் கூடிய தொழுநோயாளிகளை முதலில் சமுதாய நன்மைக்காக அவர்களைத் தடுப்பது, சமுதாயத்தில் அவர்கள் கலந்து பழகுவதைத் தடுப்பது—அவர்கள் கூட்டம் இருக்கும் இடத்தில்தான் அதிகமாகப் பழகுகிறார்கள்—அவர்களை ஓர் இடத்தில் வைப்பது என்றால், அப்படி அவர்களை ஓரிடத்தில் கொண்டு போய் வைத்தவுடன் அவர்கள் திரும்பப் போய்விடுகிறார்கள். தொழுநோயாளியாக இருந்து பிச்சையெடுக்கும் தொழிலை நடத்தி அதன் மூலம் மற்றவர்களுக்கு இந்த நோய் பரவுவதைத் தடுக்கும் வகையில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, அனைவருக்கும் உள்ள தொழுநோயைப் போக்கக்கூடிய அளவில் கொண்டுவரப்படவில்லை. அதற்கு மருத்துவத்துறை மூலமாக சிகிச்சை அளிக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே, இரண்டையும் பிரித்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



டாக்டர் எச். வி. ஹாண்டே : பிரிக்க முடியாது என்பது தான் என்னுடைய வாதம். தொழுநோயால் அவதிப்படுகிறவர்களுக்காகத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அடிப்படைத் தேவை, அடிப்படை குவாலிபிகேஷன்—

The qualification to enable the begger to come under this Act.

இந்த மசோதா எல்லைக்குள் வரவேண்டியிருக்கிறது.

He must be suffering from leprosy,

தொழுநோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தால் இந்த எல்லைக்குள் வரமுடியும். தொழுநோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அடிப்படையாகக் கவனிக்க வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு அறிக்கையைப் பார்த்தேன். மாகாண சர்க்காரின் சார்பாக ஒரு அதிகாரி—டாக்டர் நாராயணன் என்று கருதுகிறேன்—ஊட்டியில் அறிக்கை கொடுத்ததாகப்பார்த்தேன். அகில இந்தியாவில் மாக்சிமம் லெப்ரசி பேஷன்ட்ஸ் தமிழகத்தில் என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனுடைய அம்சமாக......

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : டாக்டராக இருக்கிற காரணத்தால் இந்தப் பிரச்சினை மற்றவர்களைவிட மிக நன்றாக அவர்களுக்குப் புரியும் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் 4 கோடி 15 இலட்சம் மக்களில் 7 லட்சம் பேர்தான் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள். அதுவும் டிஃபரன்ட் ஸ்டேஜஸ்—ஆரம்ப நிலை, முதிர்ந்த நிலை, பிறருக்குத் தொத்தக்கூடிய நிலை, பிறருக்குத் தொத்த முடியாத நிலை, அவர் களுக்கு சிகிச்சை முறையாக வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 6 லட்சம் நோயாளிகள் ' ஆல்ரெடி கவர்டு', அவர்கள் கிராமங் களில் எல்லாம் பரவலாக இருக்கிறார்கள். சொந்தத் தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். விவசாயத்தில் ஈடுபட்டிருக் கிறார்கள். கைத்தறி நெசவாளர்களாக இருக்கிறார்கள. வேறு தொழில்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவ்வளவு பேரையும் சானடோரியத்தில் வைத்து சிகிச்சை அளிப்பது என்பது இயலாது.

தடுப்பு மருந்து பாராமெடிகல் ஒர்க்கர்ஸ் மூலமாக எஸ்.இ.டி. யூனிட் மூலமாக தமிழ்நாட்டில் முனைந்து அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் யாருக்காவது சர்ஜிகல் ட்ரீட்மென்ட் வேண்டுமென்றால் அவர்களை ஹாஸ்பிடலில் வைத்து சிகிச்சை அளிக்கிறார்கள். அரசாங்க மருத்துவ மனையில் சர்ஜிகல் ட்ரீட்மென்ட், பிளாஸ்டிக் சர்ஜரி போன்றவற்றை ஊக்கத்தோடு செய்து அதைக் குறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

பிச்சைக்காரர்களாக உள்ள தொழுநோயாளிகள் பத்தாயிரம் பேர் இருக்கும். தொழுநோயாளி என்ற ஒரு பிரச்சினை மட்டும் இல்லை. தொழுநோயாளி, பிச்சைக்காரர் என்ற இரண்டு பிரச்சினைகள். தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைக் கட்டுப்படுத்த இப்போது வழி இல்லை. அவர்களை விரும்பி வேண்டி, அழைத்துக் கொண்டு போனாலும் 'விருந்தாளியாக இருக்க முடியாது போடா' என்று போய்விடுகிறான். உள்ளே வைத்து அவர்களுக்கு சிகிச்சை கூட அளிக்க முடியும். இந்தப் பிச்சைக்காரர்களுக்கு வலி இல்லாத காரணத்தால்—There is no pain—மற்றவர்களுக்கு பார்க்கும்போது அருவருப்பு ஏற்படுகிறதே தவிர, நோயாளிக்குக் கஷ்டம் இல்லை. உறுத்துகிற கஷ்டம் இல்லை. ஆகவே, அவர்களை ஓரிடத்தில் வைத்திருப்பது அவர்களுடைய உணர்வுக்கு மாறாக இருக்கிறது. நினைத்த இடத்திற்குப் போக வேண்டுமென்று அவர்களுக்கு ஒரு அர்ஜ் இருக்கிறது—

The tendency and urge with the leprosy patients is more to be free and walk anywhere they like.

ஆகவே, இன்று அவர்களை ஓரிடத்தில் வைத்திருப்பதற்கு நமக்கு சட்டப்படி உரிமை இல்லை. அந்தப் பாதுகாப்பைத் தேடத்தான் இந்தச் சட்டமே தவிர, வேறல்ல. அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் முறையை ஏற்படுத்த இரண்டு டாக்டர்கள் இன்று தொழுநோய் நிலையத்திலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் எந்த அளவுக்கு தகுந்த சிகிச்சை வழங்க முடியும் என்பதற்கு இலாகா மூலமாக ஏற்பாடு செய்ய முடியும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: என்னுடைய பாயிண்டும் அதுதான்—Not very much different. அமைச்சர் சொல்லக் கூடியதைத்தான் சொல்லுகிறேன். நான் இன்னொரு கோணத்தில் பார்க்கிறேன். நான் பார்ப்பது, நான் கூறுவது—இதை two-pronged attack—இரண்டு திசையில் அணுக வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன். குறிப்பாக, தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஏழை எளியவர்கள் பிச்சைக்காரர்களாகத் தனியாக சமுதாயத்தில் இல்லை. அது இன்பெக்ஷியஸ் டிசீஸ் வேறு. தொழில் செய்யக்கூடிய லெப்ரசி பேஷன்டிடம் இருந்து ஒரு பிச்சைக்காரன் தொழுநோயை வாங்கிக் கொண்டிருக்க முடியும். இதிலே "two-pronged attack" மிக மிகத் தேவை. அப்படிப் பார்க்கும்போது மாநில சர்க்கார் தன்னுடைய கடமையை முழுமையாகச் செய்திருக்கிறதா என்று பார்த்தால் அப்படிப் பார்க்கிற நேரத்தில்தான் நம்முடைய மாநில சர்க்கார் சரியாக வேலை செய்யவில்லை என்பதற்கு ஆதாரமாகத்தான் மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம்—மாக்சிமம் இங்குதான் என்று கூறப்பட்டிருக்கும் அறிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டேன். இதைப் பற்றி நான் பல முறை கடந்த, எட்டு ஒன்பது ஆண்டு காலமாக அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்திலேயே எடுத்துக் கூறியிருக்கிறேன்.



(முற்பகல் 11-00.)

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் treating one leprosy patient is equal to treating ten ordinary patients. ஒரு லெப்ரசி நோயாளியைத் தடுத்துவிட்டால் பத்து பேர்களுக்கு அது பரவும் நிலை இருக்காது. அந்த அளவிற்கு இதில் அரசாங்கம் பணம் செலவு செய்தாலும் அதில் லாபம் இருக்கிறது. If we take the statistics ஒரு நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதன் காரணமாக பத்து பேர்களுக்கு அந்த வியாதி பரவுவதைத் தடுக்க முடியும். இந்த பெக்கேர்ஸ் பொறுத்தவரையில் 10,000 என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதில் எவ்வளவு பேர்கள் லெப்ரஸியினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஏதாவது புள்ளிவிவரம் இருக்கிறதா? அவர்களுக்காக எவ்வளவு இடங்களில் இல்லங்கள் வைக்கமுடியும் என்று ஏதாவது கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா? இந்தச் சட்டத்தைப் போட்ட பிறகு இந்த பத்தாயிரம் பேர்களுக்கு எவ்வளவு இடங்கள் இருக்கும் என்று கணக்கு எடுக்கப்பட்டு சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தவறான தகவலைத் தரக்கூடாது. இடம் நிறைய இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மறுவாழ்வு இல்லங்கள், தொழுநோய் பிச்சைக்காரர்களுக்காக மறுவாழ்வு இல்லங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. 500 பேர்கள் இருக்கலாம் என்ற அளவிற்கு இடவசதி செய்யப்பட்டிருக்கிறது. சில இடங்களில் 400 பேர்கள் இருக்கிறார்கள். சில இடங்களில் 300 பேர்கள் இருக்கிறார்கள். இந்த இடங்களையெல்லாம் நிரப்புவதற்காகத்தான் இந்தச் சட்டத்தில் திருத்தம் தேவைப்படுகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்த நோயாளிகளைப் பொறுத்தவரையில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கு இருக்கிறதா? இந்த பெக்கேர்ஸில் எவ்வளவு பேர்கள் தொழுநோயாளிகளாக இருக்கிறார்கள் என்று ஏதாவது தகவல் இருக்கிறதா? Do we haye statistics?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சாதாரணமாக முழுப் புள்ளிவிவரங்கள், அதுவும் பிச்சைக்காரர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அட்ரஸ் இல்லாத காரணத்தால் கிடைக்காது. ஏறத்தாழ 5,000 பேர்கள் இருக்கலாம் என்று சொல்கிறார்கள். அது 10,000 வரையில் இருக்கமுடியும். இதுபற்றி சரியான புள்ளி விவரம் எடுப்பது கஷ்டம். குறிப்பிட்ட முகவரியோடு பிச்சைக்காரர்கள் இல்லாததால் கிடைக்காது. 10,000 பேர்கள் வரையில் இருக்கலாம். ஐயாயிரம் பேர்களுக்கு இப்போது இடவசதி செய்து வைத்திருக்கிறோம். இந்த இடங்களில் அவர்கள் தங்க விரும்பவில்லை என்று தெரிகிறது. அவர்களை சட்டப்படி அங்கு

தங்கவைக்கும் நிலைமை ஏற்படவேண்டும். இந்தப் பிரச்சினை வேறு, தொழுநோயாளிகளின் பிரச்சினை வேறு. இந்தப் பிரச்சினை, தொழுநோயாளிகளாக பிச்சை எடுத்துக்கொண்டு சமுதாயத்தில் உழன்றுகொண்டு இருப்பதைத் தடுக்க என்ன செய்யலாம் என்பது தான். இந்த மசோதாவை அந்த நல்ல நோக்கத்தோடுதான் கொண்டு வந்திருக்கிறோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மசோதாவைப் பொறுத்த வரையில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. இதில் இன்டெபனிட்டாக வைக்கலாம் என்றிருக்கிறது. சரியானபடி புள்ளி விவரங்கள் எடுத்திருந்தால் இந்தக் குழப்பம் ஏற்பட்டிருக்காது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தொழுநோயாளிகள் எல்லாம் பிச்சைக்காரர்கள் அல்ல. ஆனால் பிச்சைக்காரர்களில் தொழுநோயாளிகள் இருக்கிறார்கள். இதை நாம் சரியாக, தெளிவாகப் புரிந்து கொண்டால் இதில் பிரச்சினையே வராது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பத்தாயிரம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது என்று. இது மிக மிக, முழுக்க முழுக்க சரியான கணக்கு என்று சொல்ல முடியாது. 10,000 இருக்கலாம் அல்லது 9,000 என்று கூட இருக்கலாம். இப்போது பத்தாயிரம் என்று, முதலில் எடுக்கப்பட்டது 6,000, 7,000 என்று கணக்கு எடுத்தோம். மறுபடியும் பத்தாயிரம் அளவில் இருக்கலாம் என்று சுமாராக மதிப்பிடப்பட்டிருக்கிறது. எல்லா இல்லங்களிலும் நாலாயிரத்திற்குக் குறையாமல், நாலாயிரத்திற்கு மேல் என்று என்னால் சொல்லமுடியாது, நாலாயிரத்திற்குக் குறைவாக இப்போது தொழுநோய் பிச்சைக்காரர்கள் இல்லங்களில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதை மீறியும் வெளியில் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தொழு நோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லங்கள் பத்து இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலும் 500 பேர்கள் தங்குவதற்கான வசதி செய்யப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் வர வர இன்னும் மேலும் இடங்கள் கட்டுவதற்கும் நமது அரசு ஏற்பாடுகளை நிச்சயமாகச் செய்யும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். அதை அரசாங்கம் பரிசீலிக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். சாதாரணமாக இந்த லெப்ரஸி பெக்கர்ஸை எடுத்துக் கொண்டால், முதலில் அவர்களுக்கு பிச்சைக்காரர்கள் என்று ஸ்டாம்ப் போட்டுவிடுகிறார்கள். இரண்டாவது, தொழு நோயாளி என்று ஸ்டாம்ப் போட்டுவிடுகிறார்கள். இதனால்தான் அவர்கள் மறுவாழ்வு இல்லங்களுக்குப் போக ரெஸிஸ்ட் செய்கிறார்கள், மறுக்கிறார்கள். நான் என் கருத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதைப் பரிசீலிக்க வேண்டும்.



இந்த மறுவாழ்வு இல்லங்களில், இந்த ரீஹாபிலிட்டேஷன் சென்டர்களில், தொழுநோயாளிகளை, பெக்கர்ஸ் அல்லாதவர்களையும் வைக்கலாம். என்னிடம் நூற்றுக்கணக்கான லெப்ரஸி நோயாளிகள் வருகிறார்கள் ரெக்கமென்டேஷனுக்காக. திருமணி சானட்டோரியத்தில் சேர ஒரு லெட்டர் கொடுங்கள் என்று வருகிறார்கள். கடிதம் கொடுத்தால் கூட அங்கு இடம் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். நான் சொல்வது டூ ப்ராங்க்ட் ஆக்ஷன் வேண்டும். இந்தப் பிரச்னையை ஒட்டுமொத்தமாக அணுகவேண்டும். அப்படி அணுகினால் நிச்சயமாகப் பலன் கிடைக்கும். இந்த சென்டர்களில் ஒரு பகுதியில் நான்-பெக்கர்ஸையும் சேர்க்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்வதைப் போன்று இரண்டு பிரச்னைகளையும் அணுக வேண்டியதுதான். ஆனால் இரண்டு பிரச்னைகளையும் ஒட்டுமொத்தமாக அணுகவேண்டுமென்று சொன்னால் அது இயலாத காரியம். இரண்டையும் தனித்தனியாக அணுகவேண்டும். தொழு நோயை அகற்றுவதற்காக எடுத்துக்கொள்ளப்படுகிற நடவடிக்கைகள், அரசாங்கச் சார்பில் நல்வாழ்வுத் துறை மூலம் எடுத்துக்கொள்ளப்படுகிற நடவடிக்கைகள் என்ற வகையில் வசதி படைத்த நோயாளிகளுக்கும் சிகிச்சை கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் எந்த வசதியும் இல்லாமல் தெரு ஓரத்தில் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கும் நோயாளிகளுக்கும் சிகிச்சை கொடுக்கப்பட வேண்டும். இரண்டு பிரச்சினைகளையும் அணுக வேண்டியதுதான். இவற்றைத் தனித்தனியாக அணுக வேண்டும். ஒட்டுமொத்தமாக இரண்டு பிரச்சினைகளையும் அணுகமுடியாது. மறுவாழ்வு இல்லங்களுக்கு வர மறுக்கிற வசதிபடைத்த தொழுநோயாளிகள் இருக்கிறார்கள். ஆகவே தனித்தனியாக அணுகவேண்டும். ஆனால் இரண்டு பிரச்சினைகளும் அணுகப்பட வேண்டிய பிரச்சினைகள்தான்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன். You can check up the details. பல தொழுநோயாளிகளை, வசதி படைத்தவர்களைக்கூட பெக்கர்ஸ் என்று வலுக்கட்டாயமாக அனுப்பிவிடுகிறார்கள் என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. நான் ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருப்பதால் பலர் என்னிடம் வருகிறார்கள். வந்து குறை சொல்கிறார்கள். அம்மையார் அவர்களுக்குக் கூட அந்தப் பிரச்னை வந்திருக்கும் என்று நினைக்கிறேன். 'என்னை அனாதை என்று பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். எனக்கு தாய் தந்தை இருக்கிறார்கள். எனக்கு வீடு இருக்கிறது. எனக்கு வாழ வசதி இருக்கிறது. அப்படியிருந்தும் என்னைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். என்று என்னிடம் வந்து சொல்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இங்கேதான் நான் அளித்த விடையை ஹாண்டே அளிக்கிறார். உண்மையில் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பவர்களை மறுவாழ்வு இல்லங்களுக்கு அனுப்

டினால் எனக்கு வசதி இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் வசதி உள்ளவர்களைக் கொண்டுபோய் வைக்க வேண்டும் என்று ஹாண்டே அவர்கள் சொல்கிறார்கள். இரண்டையும் ஒட்டு மொத்தமாக எப்படி அணுகமுடியும் ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : லெப்ரஸ் பெக்கேர்ஸ் ஒன்று. லெப்ரஸி இல்லாத பெக்கேர்ஸ், பெக்கேர்ஸ் அல்லாத தொழு நோயாளிகள். தொழுநோயாளிகளுக்குத் தனியாக சிகிச்சை அளிக்கலாம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தமிழ் நாட்டில் ஏறத்தாழ 20, 25 இடங்களில் மிஷனரீஸ் மூலம் நடைபெறுகிற மருத்துவ மனைகள் உள்ளன. ஒவ்வொரு இடத்திலும் 150, 200 பேர்கள் என்ற அளவில் புண்ணாகிவிட்ட தொழு நோயாளிகள் இடம் பெற்றிருக்கிறார்கள். மாதத்திற்கு இவ்வளவு பணம் என்று உதவித் தொகை அரசு வழங்குகிறது. அரசு மருத்துவ மனைகளிலும் தொழு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கலாம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. சில இடங்களில், வாய்ப்பு வசதிகள் இருக்கிற இடங்களில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. நாடு முழுவதும் எஸ்.இ.டி. யூனிட்ஸ் மூலம், பாரா மெடிக்கல் வொர்க்கேர்ஸ் மூலம் சிகிச்சை வழங்கப்படுகிறது. திருமணி சானிட்டோரியம் போன்ற இடங்களிலும் சிகிச்சை வழங்கப்பட்டு அங்கு தங்குகிறார்கள். அவர்களுக்குச் சில வசதிகள்—தோட்டம் போட்டுக்கொள்ள—செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது தொழு நோய் பிச்சைக்காரர்களைப்பற்றிய பிரச்சினை. யாராவது பிச்சை எடுக்கவில்லை என்று நிரூபித்தால் அவர்களை விட்டுவிட தடை இல்லை. தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பது என்றால் அவர்கள் சமுதாயத்தில் அந்த வியாதியைப் பரப்புகிறார்கள். ஆகவே பிச்சை எடுக்கிற தொழு நோய்க்காரர்களை இந்த நிலையங்களில் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட நோக்கம் இதனால் நல்ல முறையில் நிறைவேறும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். லெப்ரஸ் பெக்கேர்ஸைப் பொறுத்த வரையில் அவர்களை இல்லங்களுக்குக் கொண்டு போன பிறகு ஒரு வருடத்தில் சிகிச்சைக்குப் பிறகு நான்-இன்பெக்டிவ் ஸ்டேஜ்க்கு வந்துவிடுகிறார்கள். தொழு நோய் ஒரு கட்டத்தில் தான் இன்பெக்டிவ் ஆக இருக்கும். சிகிச்சைக்குப் பிறகு அது நான்-இன்பெக்டிவ் ஆக மாறிவிடும். அதற்குப் பிறகு அவர்களை என்ன செய்ய வேண்டும் என்று இந்தச் சட்டத்தில் சொல்லப்படவில்லை. நான்-இன்பெக்டிவ் பெக்கேர்ஸை, மறுவாழ்வு இல்லத்தில் சேர்க்கப்பட்டு ஒரு ஆண்டு சிகிச்சைக்குப் பிறகு நான்-இன்பெக்டிவ் ஆன பிறகு அவர்கள் சமுதாயத்தில் மறுபடியும் ஒரு உறுப்பினராக வருவதற்குச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் பற்றி இந்த மசோதாவில் குறிப்பிட்டிருக்க வேண்டும். ரீஹாபிலிடேட்டிவ் மெஷர்ஸ்



பற்றி இந்த மசோதாவில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டேன். அவர்களுக்கு என்னென்ன ட்ரெயினிங் கொடுக்கலாம், காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸில் என்னென்ன ட்ரெயினிங் கொடுக்கலாம், எப்படி அவர்களை மீண்டும் சமுதாயத்தில் மதிப்பிற்குரிய ஒரு உறுப்பினராக ஆக்கலாம் என்பதைப் பற்றியெல்லாம் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

கடைசியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நோயாளிகளை இவ்வளவு பேர் சேர்க்க வேண்டுமென்று ஒரு டார்கெட் வைத்து இருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனில், இவ்வளவு வரவேண்டுமென்று கணக்கு வைத்துக்கொண்டு, அந்த அளவுக்கு வரவில்லையென்றால், யார் யாரையோ பிடித்துக்கொண்டு போய் விடுகிறார்கள். டிசர்விங் கேசா என்று கூடப் பார்ப்பது இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட கணக்கு வைத்துச் செயல்படாமல், நியாயமான சீக்காளிகளாக இருப்பவர்களை மட்டும் எடுத்துக்கொண்டு போகவேண்டுமென்று கூறிக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலும் ஆட்சேபிக்க ஒன்றும் இல்லை. ஆதரிக்க வேண்டிய அம்சம் உள்ள ஒரு மசோதா. நாட்டிலே பிச்சை எடுப்பவர்கள், குறிப்பாகத் தமிழ் நாட்டில் அதிகரித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பது உண்மை. நாம் இதைக் கணக்கு எடுத்துப் பார்த்தால் தெரியும்.

பொதுவாக, இங்கே இருக்கும் இந்த மசோதா, தொழு நோய்ப் பிச்சைக்காரர்களைப் பொறுத்து இருந்தாலும் கூட, 1945-ம் ஆண்டிலேயே பிச்சை எடுப்பது குற்றம் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும் கூட, அந்தச் சட்டம் நாட்டிலே இது வரையில் அமல் நடத்தப்படவில்லை என்ற நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, எத்தனை சட்டம் போட்டாலும், அது அமலாக்காமல் இருந்தால் பிரயோசனம் இல்லை.

வேலைவேண்டும் என்று கேட்பவர்களுக்கு வேலை படித்துவிட்டு, கொடுக்க முடியாமல் இருக்கிற நிலையில், சமுதாயத்தில் நல்ல வகையில் வாழ உடல்நிலை உடையவர்கள் பிச்சை எடுப்பதைத் தொழிலாகக் கொண்டு இருக்கிறார்கள். நல்ல சக்தி உள்ளவர்கள் கூட பிச்சை எடுப்பதைத் தொழிலாகக் கொண்டு உள்ளதை நாம் தமிழ் நாட்டில் பார்க்கிறோம். அவர்களுக்கு அது சுலபமான தொழிலாக இருக்கிறது. கடுமையாக உழைத்து ஜீவனம் நடத்துகிறவர்களுக்குக் கிடைப்பதை விட அவர்களுக்கு ஊதியம் அதிகமாகக் கிடைக்கிறது. இதனால் பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 ஏப்ரல் 16

நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறது. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வது எல்லாம், உழைப்பதற்கு சக்தி வாய்ந்தவர்களை பிச்சை எடுப்பதிலிருந்து கண்டிப்பாகத் தடுத்தாகவேண்டும்.

நமக்கு பெரிய பிரச்னை வேலை கேட்பவர்களுக்கு வேலை கொடுக்கமுடியாமல் இருக்கிறபோது, சக்திவாய்ந்தவர்கள் இப்படி பிச்சை எடுப்பது மிகவும் கேவலமான ஒரு பிரசினையாக இருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. நான் என்ன கருதுகிறேன் என்றால், இந்த சக்தி வாய்ந்தவர்களை நாம் நல்ல வகையில் உபயோகப் படுத்திக் கொள்ளலாம்.

நாம் விவசாய கார்ப்பரேஷன் என்று ஒன்றை ஆரம்பித்து அதில் 11 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்ய இருக்கிறோம். அந்தக் கார்ப்பரேஷனில் ஒரு லட்சம் ஏக்கரை ஒதுக்கி அந்த இடத்தில் இவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தால் நன்றாக இருக்கும். தெருவில் நடமாடும் பிச்சைக்காரர்களை எல்லாம் பிடித்து, அவர்களுக்குக் கோர்ட்டில் கொண்டு போய்தண்டனை கொடுத்து அனுப்புவதைப் போல், அவர்களை இங்கே அனுப்பி வேலை செய்யச் செய்தால் நன்றாக இருக்கும். ஒருவன் உழைக்காமல் சாப்பிடுகிறான் என்றால், அவனுக்காக மற்றொருவன் உழைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இந்தச் சட்டத்திலே அது இல்லை என்றால், ஒரு திருத்தம் கொண்டு வந்து அந்த வகையில் அதைச் செய்ய வேண்டும், வருங்காலத்திலாவது என்று கேட்டுக் கொள்கிறேன்.

வலுவுள்ளவர்கள் வேலை செய்யாமல் பிச்சையெடுப்பதோடு மட்டுமல்லாமல் குழந்தைகளையும் பிச்சை எடுக்க விட்டு விடுகிறார்கள். பஸ் ஸ்டாண்டுகளில் இதை நாம் பார்க்கலாம். சிறு குழந்தைகளைத் தோளில் போட்டுக் கொண்டு பிச்சை எடுப்பதைப் பார்க்கிறபோது மிகவும் அவமானமாக இருக்கிறது. இந்த அவமானத்தைப் போக்கவேண்டும்.

இந்தத் தொழுநோய் பிச்சைகாரர்களுக்காக இப்போது 10 இல்லங்கள் கட்டபட்டு இருக்கின்றன. இந்த இல்லங்களில் எவ்வளவு பேர் வந்தாலும் அவர்களுக்கு எல்லாம் சிகிச்சை அளித்து மறுவாழ்வு அளிக்கவேண்டும். நிதி இல்லை என்ற காரணத்திற்காக எண்ணிக்கையை லிமிட் செய்யக் கூடாது. எவ்வளவு பேர் வந்தாலும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அதற்காக எவ்வளவு தொகை செலவானாலும் ஒதுக்கவேண்டும். இதுவரையில் 10 ரிஹாபிலிடேஷன் சென்டர்கள் வைத்து இருந்தாலும், இனி மேலும் கட்டவேண்டும். இவற்றிற்கு நாம் வசூல் செய்த பணத்திலிருந்து இது வரையில் செலவழித்து



1975 ஏப்ரல் 16] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இருந்தாலும், இனி வரும் ஆண்டுகளில் இதற்காக ரெவின்யூ பட்ஜெட்டிலிருந்து செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அப்படி செலவு செய்கிறபோது, செலவுக் கணக்கைப் பார்க்காமல் இதை ஒரு தொண்டாகக் கருதி செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் தற்செயலாக பரனூர் இல்லத்தைப் பார்க்கும் நிலை ஏற்பட்டது. அங்கே அவர்களுக்கு நல்ல விதத்தில் வேலைகள் கொடுத்து இருக்கிறார்கள். அவற்றைப் பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது. இம்மாதிரியாகத் தெருவில் நடமாடும் எல்லா பிச்சைக்காரர்களையும் செய்தால் நன்றாக இருக்கும். அவர்களுக்கு தையல் வேலை, நூல் நெய்யும் வேலை, இன்னும் மற்ற மற்ற வேலைகள் கொடுத்து இருக்கிறார்கள். அங்கே எல்லோருமே அந்த வேலை செய்யத் தெரிந்தவர்களாக இருக்க முடியாது. சிலர் விவசாயம் செய்வதற்கும் அனுபவம் பெற்றவர்களாக இருப்பார்கள். ஆகவே, அரசு அந்தப் பகுதியில் இருக்கும் நிலத்தை ஆர்ஜிதம் செய்து அந்த இல்லத்திற்கு அளித்து, அங்கே அவர்களுக்கு சாகுபடி செய்வதற்கு வசதி செய்து கொடுத்தால், அந்த இல்லத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களை அவர்கள் அங்கேயே உற்பத்தி செய்து கொள்வதற்கு வசதியாக இருக்கும். இதனால் நமக்குச் செலவும் குறையும். ரெவின்யூ செலவிலிருந்து ஒதுக்குகிற பணத்தைக் கொண்டு மேலும் நல்ல முறையில் நாம் அவர்களுக்குச் சேவை செய்யமுடியும். அந்த இல்லத்தில் இப்போது கொஞ்சம் விவசாயம் செய்கிறார்கள். ஆனால், அதிகமான வசதி இல்லை என்று சொன்னார்கள்.

அங்கே இப்போது இரண்டு எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் இருக்கிறார்கள். தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு கட்டு கட்டும் வேலைதான் அதிகம். ஆகவே, அந்த இடத்தில் 'கம்பௌண்டிங்' தெரிந்தவர்கள் இருந்தால் போதும், ஆகவே, அங்கே இரண்டு கம்பௌண்டர்களைப் போட்டு விட்டு, அந்த இல்லத்திற்கு டாக்டர்களை அருகில் இருக்கும் மருத்துவமனையில் இருந்து வந்து பார்த்துச் செல்வதற்கு வழிவகுக்கும் வகையில் செய்தால் நல்லது என்று நினைக்கிறேன். இதனால் இம்மாதிரி இரண்டு எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்குக் கொடுக்கும் செலவு குறையும். இப்படிப்பட்ட தேவையில்லாத செலவு தவிர்க்கப்படுமானால், இன்னும் நல்லமுறையில் நாம் அந்த இல்லத்தை செயல்படுத்த முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படியெல்லாம் வேலைகொடுக்கிறபோதே எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்று போராடுகிறார்கள். ஆகவே தான் இம்மாதிரியான இடங்களில் இரண்டு டாக்டர்களைப் போடவேண்டியிருக்கிறது. ஓரளவிற்கு நல்வாழ்வுத்துறையினருக்கு

இதனால் நெருக்கடி குறைப்பதற்கு வசதியாக இருக்கிறது. இப்படிப் போட வேண்டாம் என்று சொல்லி, நல்வாழ்வுத் துறையினருக்கு சங்கடத்தை ஏற்படுத்தக் கூடாது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நான் டாக்டர்களைப் போட வேண்டாம் என்று சொல்லவில்லை. பக்கத்தில் இருக்கும் கிராமத்தில் மருத்துவ மனைகளை ஆரம்பித்து அங்கே டாக்டர்களைப் போடுங்கள். அந்த வகையில் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. பி. வி. எம். அண்ணாமலை : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன பதிலோடு, என்னுடைய பதிலையும் இணைத்துக்கொள்வது உறுப்பினர்களுக்கு நல்ல விளக்கத்தைத் தரும் என்று கருதுகிறேன். மறுவாழ்வு இல்லங்களுக்கு பொறுப்பு ஏற்றுக் கொண்டு மருத்துவம் பார்த்து வந்தவர்கள் நோயாளிகளோடு அணுகி நடப்பது இல்லை என்ற புகார் இந்தத் துறைக்கு வந்ததற்குப் பிறகு தான் இது போன்று மருத்துவத் துறை அதிகாரிகளையே போட்டு, அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டபிறகு அவர்கள் நோயாளிகளோடு சரியாகப் பழகி இப்போது அவர்கள் நல்ல வகையில் பணியாற்றி வருகிறார்கள். அந்த வகையில் இந்த மாற்றம் செய்யப்பட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த மாதிரி செய்கிற போது தொழுநோய் பிச்சைக்காரர்கள் ஓடிவந்து விடுகிறார்கள். ஏன் என்றால் பிச்சை எடுப்பது அவர்களுக்குப் பழக்கமாகிவிட்டது. வீடு வீடாகச் சென்று, வீதி வீதியாகச் சுற்றி அவர்களுக்குப் பழக்கம் ஆகிவிட்டது. அவர்களை ஓர் இடத்தில் வைத்து வேலை செய்யச்சொன்னால் அவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, சட்டபூர்வமாக அவர்கள் அந்த இல்லத்தில் இருக்க வேண்டும் என்று கொண்டு வந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். ஆகவே, இந்த மசோதாவை வரவேற்கிறேன். இதற்கு எவ்வளவு செலவானாலும், எவ்வளவு தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் வந்தாலும், அவர்களை வெளி உலகில் நடமாட முடியாத அளவுக்குச் செய்கிற வகையில் அவர்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்று கேட்டு, நோய் இல்லாதவர்களும் பிச்சை எடுக்கிறார்கள். அதையும் தடுக்க வேண்டும். அந்த வகையில் நாட்டில் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க நாம் கடமைப்பட்டு இருக்கிறோம் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, இந்த மசோதாவைப் பற்றி என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தொழு நோய் பிச்சைக்காரர்களுக்கு என்று 10 இடங்களிலே நம்முடைய அரசாங்கம் இல்லங்கள் அமைத்



திருப்பதை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் அந்த இல்லங்களுக்கு தொழு நோய் இல்லங்கள் என்றோ, தொழு நோய் மறுவாழ்வு இல்லங்கள் என்றோ, பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் என்றோ பெயர் வைக்காமல் வேறு வகையில் மறு வாழ்வு இல்லங்கள் என்று மாற்றி அமைத்தால் நன்றாக இருக்கும். அப்படி மாற்றி அமைத்து விட்டதாகச் சொல்லுகிறார்கள், நன்றி.

இந்த மசோதாவில் ஒரு திருத்தம்

In 12–A, Power of Juvenile Court to order indefinite detention of juvenile lepers.

என்று உள்ளே போட்டிருக்கிறார்கள். அதிலே இன்னும் சில திருத்தங்களையும் செய்திருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

'பொதுவாக, இப்பொழுதிருக்கும் மறு வாழ்வு இல்லங்களிலே எல்லா வயதினரையும் ஒன்றாக வைப்பதால் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. பொதுவாக 18, 20 வயதுக்குட்பட்டவர்களுக்கு வாழ்க்கையில் வெறுப்பும், வேதனையும் வருவது இயற்கை என்று நான் கருதுகிறேன்.

இந்த நேரத்திலே இந்த இல்லங்களுக்குச் சென்று வேலை செய்யும் '' பாராமெடிகல் ஒர்க்கர்ஸ் '' போன்றவர்களை நாம் கட்டாயம் பாராட்ட வேண்டும். அவர்கள் மூலை முடுக்குகளிலே இருக்கின்ற கிராமங்களுக்குச் சென்று தங்களுடைய உயர் அதிகாரிகள் கட்டளைக்கிணங்க ஆங்காங்கே சோதனை செய்து '' பீரியாடிகல் ட்ரீட்மெண்ட் '' மாதிரி ஏதோ சில மாத்திரைகளைக் கொடுத்து வருகிறார்கள். இந்த இல்லங்களில் 18 வயதுக்குட்பட்டவர்களை வைப்பது என்றிருப்பதை 20 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று ஆக்கினாலும் கூட நன்றாக இருக்கும்.

பொதுவாக 20 வயதுக்குட்பட்டவர்கள் வசதி உள்ளவர்களாக இருந்தாலும் கூட அவர்களை எல்லாம் சேர்த்து அந்த இளைஞர்களுக்கு என்று ஒரு இல்லத்தை வைத்தால் நன்றாக இருக்கும். அந்த இளைஞர்களுக்கு தாங்கள் சமுதாயத்திலே புறக்கணிக்கப்படுகிறோம் என்ற உணர்வே இல்லாமல், அந்த ''இன்பீரியாரிட்டி காம்ப்பிளக்ஸ்'' இல்லாமல், வெறுப்பு மனப்பான்மை இல்லாமல் இருக்க அவர்களை நன்றாக வளர்த்து, நல்ல முறையில் அவர்கள் மருத்துவ வசதி பெறச் செய்ய வேண்டும். அது மாத்திரமில்லாமல் அவர்களுக்குப் பயன்படுகின்ற வகையில் அவர்களுக்கு நல்ல கல்வியை அளித்தால் அதன் மூலம் அவர்களுடைய வேதனை குறையும். அவர்களுக்குத் தொழிற்கல்வி அளிப்பதன் மூலம் எதிர்காலத்தில் வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்படும். தற்பொழுது நாம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பாரா மெடிகல் ஒர்க்கர்ஸ் போஸ்ட்டுகளுக்குக் கூட இந்த இல்லங்களிலே இருந்து வருகிற

எஸ்.எஸ்.எல்.சி.; மெட்ரிகுலேஷன் பாஸ் செய்து வருபவர்களையோ அல்லது இதற்கு என்று ஒரு பேசிக் குவாலிபிகேஷன் என்று வைத்து அதிலே பாஸ் செய்து வருபவர்களையோ அந்த வேலையிலே பயிற்சி அளித்தால், அவர்கள் நாளைக்கு பாரா மெடிகல் ஒர்க்கர்ஸாக வேலை செய்ய வரும்பொழுது இன்னும் கொஞ்சம் துடி துடிப்பாகவும், அருவருப்பும் இல்லாமலும் வேலை செய்வார்கள். ஆனால் இன்றைக்கு அப்படி வேலை செய்து கொண்டிருப்பவர்களை நான் குறை சொல்ல மாட்டேன். அவர்கள் நன்றாகவே வேலை செய்கிறார்கள். டாக்டர்கள் கூட நன்றாக வேலை செய்கிறார்கள். எனவே இந்த பாரா மெடிகல் ஸ்டாப்பிற்கு கொடுக்கிற ஸ்பெஷல் அலவன்சை கூட்டிக் கொடுப்பதோடு, சம்பளத்தையும் உயர்த்திக் கொடுக்கலாம். இன்னும் சொல்லப் போனால் அவர்களுக்கென்று ஒரு தனி ஸ்பெஷல் கிரேடு என்று வைத்துக் கூட கொடுத்தால் நன்றாக இருக்கும்.

இருபது வயதுக்குட்பட்டவர்களை "நோயாளி" என்ற உணர்வே இல்லாமல் அவர்களுக்கு என்று தனி விடுதிகளை அமைக்க வேண்டும் என்று நான் இந்த அரசாங்கத்தையும், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அப்படி அவர்களுக்கென்று தனி இல்லங்கள் அமைத்தால் நாளை அவர்கள் வளர்ந்து பெரியவர்களாக வரும் பொழுது வாழ்க்கையில் நலிவுற்றவர்கள் என்று மக்களால் அலட்சியமாக நோக்கப்படாமல் இருப்பார்கள்.

எனவே, இது டி. எல். கமிட்டிக்கு போகும் பொழுது ரூல் 10 (எ) -ஐ அனுப்புவது போல் 12(எ)-யையும் அனுப்பி, சில ரூல்ஸை மாற்றி வயது வராத நோயாளிகளுக்குக் கொடுக்கக் கூடிய ட்ரீட்மெண்ட் சலுகைகளை அதிகப் படுத்தவேண்டும்.

எனவே, பெற்ற தாய் தகப்பனே புறக்கணிக்கக் கூடிய நோய் இது என்பதால், அவர்களைப் பிள்ளைகளாக எடுத்துக் கொண்டு, வயது வந்தவர்களுக்குச் செலவழிக்கும் பணத்தை விட வயது வராதவர்களுக்கு கல்விக்காகவும், தொழிற் கல்விக்காகவும், மருத்துவத்திற்காகவும் ஏராளமாகச் செலவழிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்து அவர்கள் நல்ல முறையில் புனர் வாழ்வு பெற இந்த மசோதாவில் அதிகமான இடம் இல்லாவிட்டாலும், இது டி. எல். கமிட்டிக்குப் போகும் பொழுது சில ரூல்ஸை செய்து அதை எல்லாம் செய்யவேண்டுமென்று கேட்டு, பேச்சினை முடித்துக் கொள்ளுகிறேன்.

*திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவை ஆதரிக்கின்ற வகையிலே என்னுடைய கருத்துக்களைக் கூறுகின்றேன்.



தொழு நோய் பிச்சைக்காரர்களை கால வரம்பின்றி இந்த இல்லங்களிலே வைப்பதற்காக இந்த மசோதாவில் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்த பிச்சைக்காரர்கள் தொழு நோய் பிடித்தவர்களாக இருந்தாலும் சரி அல்லது நோயற்ற பிச்சைக்காரர்களாக இருந்தாலும் சரி இவர்கள் எல்லாம் பிச்சை எடுப்பதை ஒழிக்க வேண்டும் என்ற கருத்தில்தான் நம்முடைய சட்டம் இருக்கிறது.

ஆனால், சட்டம் இருந்தாலும் நடைமுறையில் அது முழுக்க முழுக்க பலன் அளிக்கிறதா என்றால், இல்லை என்று தான் சொல்லுவேன். எனக்கு ஞாபகம் இருக்கிறது, ஸ்கூல் ஆப் சோஷியல் ஒர்க் என்ற ஸ்தாபனத்திலே படித்த மாணவர்கள் ஒரு ஸ்டேடிஸ்டிக்ஸ் எடுத்தார்கள். அதிலே தொழு நோய் பிச்சைக்காரர்களும், மற்ற பிச்சைக்காரர்களும் எத்தனை பேர் என்று கணக்கு எடுத்தார்கள். குறிப்பாக அந்த ஸ்டேடிஸ்டிக்ஸ் முழுக்க முழுக்க சரியாக இல்லாவிட்டாலும் கூட ஓரளவிற்கு அதிலே நமக்கு குறிப்புகள் இருந்தன. அது என்னவாயிற்று என்று புரியவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் பதில் கூறும் பொழுது அதைப்பற்றிக் கூறவேண்டும்.

தொழு நோய் பிச்சைக்காரர்களை நாம் எடுத்துக் கொள்வோமானால் தொழு நோய் பரவுவதற்கு காரணமாக திருமண வீடுகளிலேயும், ஹோட்டல் புறங்களிலேயும், தெருக்களிலேயும் எச்சில் இலைகளை பொறுக்கித் தின்னும் சிறுவர்கள் கூடக்காரணமாக இருக்கிறார்கள் என்றுதான் தெரிகிறது. அவர்களை நாம் முதன் முதலாகக் கட்டுப்படுத்த வேண்டும்.

தொழுநோய் இருக்கிறதோ இல்லையோ அவர்களுக்கென்று ஒரு பாதுகாப்பு கொடுக்கும் அளவிலே அவர்களை எல்லாம் காவல்துறை அதிகாரிகள் கண்காணித்துப் பிடித்து அவர்களுக்கென்று ஒரு மறுவாழ்வைக் கொடுக்க முன்வரவேண்டும். அவர்கள் எல்லாம் "ஏபிள் பாடீடு" என்ற வகையில் வேலை செய்யக் கூடிய நிலைமையினை உருவாக்கிட வேண்டும். இப்படி வீதிகளிலே இருக்கிற எச்சில் இலைகளைப் பொறுக்கி அதன் மூலமாகக்கிடைக்கின்ற மிகுந்த எச்சில் உணவைச் சாப்பிடுவதன் மூலமாக சமுதாயத்திற்கு அவர்கள் ஒரு பெரும் கேடு விளைவிக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களுக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்திருந்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

In 10-A Power of Magistrate to order indefinite detention of lepers.

என்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கனவே பிரின்சிபல் ஆக்ட்டிலே 16 வயது என்று இருந்தது. அதிலே 18 வயதாக மாற்றியிருக்கிறார்கள். 16 வயதாகவே இருப்பதில்

என்ன தவறு என்று தெரியவில்லை. அது 16 வயதாக வைத்து விட்டால், அதாவது ஏற்கனவே பிரின்சிபல் ஆக்ட்டிலே இருப்பது போல் வைத்துவிட்டால், நன்றாக இருக்கும். மற்றொன்று என்னவென்றால்

In 12-A, Power of to Juvenile Court order indefinite detention of juvenile lepers.

சிறுவர்கள் இந்த தொழுநோயால் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு பிரின்சிபல் ஆக்ட்டிலே 16 என்று வைத்திருக்கிறார்கள். அதை இங்கு வயது 18 என்று உயர்த்தி இருக்கிறார்கள். இந்த மாற்றம் எதற்காக செய்யப்பட்டது, இந்த வயது வரம்பிலே நாம் பெரிதாக ஒன்றும் காணப்போவதில்லை. 18 வயதுக்குக் கீழ்ப் பட்டவர்களுக்கு இதிலே பாதுகாப்பு இல்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதை 16 வயது என்று வைத்தால் நன்றாக இருக்கும்.

அடுத்து, 10 ரிஹேபிலிட்டேஷன் இல்லங்கள் இருக்கின்றன என்றும், இதிலே 500 பேர்களுக்கு இடம் இருந்தாலும் தற்பொழுது 300 பேர் இருப்பதாக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். நாம் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகின்ற காரணத்தினால் இன்னும் ஒவ்வொரு இல்லத்திலேயும் இப்பொழுது கணக்குபடி 7,000-க்கு மேற்பட்ட தொழு நோய் பிச்சைக்காரர்கள் இருக்கலாம் என்று கூறினார்கள். அப்படி இருப்பதாக இருந்தால் அத்தனை பேரையும் நாம் இல்லங்களிலே பாதுகாத்து வைக்க இயலுமா என்ற கேள்விக் குறி எழுகின்றது. மற்றொன்று—இவர்களை அங்கே வைப்பதோடு அவர்களுக்கு சிகிச்சை அளிப்பது ஒரிஜினல் பிரின்சிபல் ஆக்ட்டிலே as the Magistrate deems fit என்று தான் இருக்கிறது. டாக்டர் அவர்களை பரிட்சை செய்து அவர்களை எங்கே வேண்டுமானாலும் வைக்கலாம் என்று இருக்கிறது. அவர்கள் சுகமாகிவிட்டால் அவர்களை வெளியே அனுப்பலாம் என்று இருக்கிறது. அதிலே பாண்ட்டு செக்யூரிட்டி கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இதை யார் கொடுப்பது ? அப்படிக் கொடுத்தால் மட்டும் அது பாதுகாப்பாக ஆகிவிடுமா ? இது எல்லாம் நடைமுறையிலே இயலவில்லை என்பதால் அதையும் மறுபரிசீலனை செய்து, இந்த பாண்ட்டு செக்யூரிட்டி இல்லாமல் இருந்தால் நலமாக இருக்கும். நோயாளிகள் குணம் அடைந்த பிறகு ஒரு ரீஹேபிலிட்டேஷன் ஹோமிற்கு—காட்பாடியில் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்ற Cheshire ஹோம் மாதிரி—இருக்கின்ற இடங்களுக்கு அனுப்பலாம். அப்படிப்பட்ட ஒரு இல்லத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு ஒரு புதிய வாழ்வு அளிக்கும் வகையில், அதிலே அவர்களைச் சேர்க்கலாம். அவர்களுடைய இன்பெக்ஷன் ஸ்டேஜ் போனதற்குப் பிறகு அவர்கள் பாய் முடையவும், பயிரிடவும் இயலும் என்று மருத்துவ நிபுணர்களே கூறியிருக்கிறார்கள்.



(முற்பகல் 11–30)

அவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஒரு இல்லத்தைத்தனிப்பட்ட முறையில் அமைத்தால் ரீஹேபிலிடேஷன் செய்வதற்கு வாய்ப்பிருக்கும். ஆகவே அவைகளை அரசு ஆலோசனை செய்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிச்சைக்காரர்கள் என்று சொன்னால் நாம் வட நாட்டுப் பக்கம் சென்றால் அங்கே பிச்சைக்காரர்கள் கிடையாது. அப்படி அங்கு இருப்பார்களேயானால் அவர்கள் தமிழ்நாட்டிலிருந்துதான் வந்திருக்கிறார்கள் என்ற ஒரு இழிவான அபிப்பிராயம் இருக்கிறது. அதற்கேற்ப என்னுடைய அனுபவத்திலும் நான் பார்த்திருக்கிறேன். தமிழ்நாட்டுச் சிறுவர்களெல்லாம் இங்கே இருந்து சென்று மற்ற மாநிலங்களில் பிச்சை எடுப்பதைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது.

இதையெல்லாம் தவிர்ப்பதற்கு இது ஒரு காம்ப்ரஹென்சிவ்பில்லாக இருந்தால் நன்றாக இருக்கும். ஆகவே இதை ஒரு காம்ப்பிரஹென்சிவ் பில்லாக அமைப்பதற்கு, பிச்சைக்காரர்களுக்கு என்ன செய்ய வேண்டும், எப்படி அவர்களுக்கு மறு வாழ்வு அளிக்க வேண்டும் என்பதையெல்லாம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இன்றைய தினம் சமுதாய நல அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள தொழு நோய் பிச்சைக்காரர்கள் கால வரையின்றி இல்லங்களில் தங்க வேண்டுமென்ற திருத்தத்தை ஆதரித்து என்னுடைய கருத்தைச் சொல்கிறேன்.

உலகத்தில் இன்றைய தினம் தொழு நோயே இல்லை என்று பல நாடுகள் சொல்லிவிட்ட பிறகும்கூட இந்தியாவில் அதிகமாக இருக்கிறது, தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கிறது அதிலும் குறிப்பாக வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் அதிகமாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் அதிகமாக இருப்பதற்கு என்ன காரணம், என்ன சூழ்நிலை, அதற்கான வைத்திய வசதிகள் கிடைக்காத காரணமா என்பதைக் கொஞ்சம் நுண்ணிய முறையில் ஆராய்ந்து பார்க்கவேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்.

இதை தமிழக அரசு நல்ல முறையில் எடுத்து நடத்தி வருகிறது என்பதைப் பொறுத்த வரையில் நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அண்ணல் காந்தியார் அவர்கள் யாரோ ஒரு தொழு நோய்க்காரருக்குத் தொண்டு செய்தார் என்பதற்காக அவருடைய பணியைத் தொடர்ந்து நடத்தும் வகையில் அம்மா என்று அழுகிற குழந்தைக்குத் தாயைப் போல் இருந்து அரவணைத்து தமிழக அரசு செயல்படுகிறது என்ற வகையில் காந்தீயத்தின் வழியில் நடைபோடுகிறது.

தொழு நோய் பிச்சைக்காரர்களைப் பாதுகாப்பதில் நம்முடைய முதல்வரும், நம்முடைய அரசும் அக்கறை காட்டுகிறது என்பதை மக்கள் சமுதாயம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் விடுதிகளில் தங்குவதில்லை, அவர்கள் சுதந்திரமாக வாழ நினைக்கிறார்கள், பல இடங்களில் பல சுவையான உணவுகளை வாங்கிச் சாப்பிட நினைக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

அது மட்டுமல்ல, அவர்கள் பிச்சை எடுப்பதால் அதில் வருவாய் அதிகமாக வருகிறது என்று சொல்லப்படுகிறது. இண்டஸ்ட்ரீஸ் என்பதும், விவசாயம் என்பதும் தொழிலாக இருப்பதைப் போல் பிச்சை எடுப்பதும் ஒரு தொழிலாக இருக்கிறது. பிச்சைக்காரர்களின் வருமானம் அதிகமாக இருக்கிறது என்றெல்லாம் புள்ளி விவரம் சொல்லப்படுகிறது. சில நேரத்தில் பிச்சைக்காரர்கள் காலமாகிவிட்ட பிறகு அவர்களுடைய கந்தல் துணிகளிலிருந்து பல்லாயிரக் கணக்கான ரூபாய் எடுப்பதாகச் சொல்வதெல்லாம் எதைக் காட்டுகிறது என்று சொன்னால் பிச்சை எடுப்பது ஒரு வளமான தொழிலாக இருந்து வருகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

எனக்கு முன்பு பேசிய அம்மையார் அவர்கள் சொன்னதைப் போல் சமுதாயத்தில் பிச்சைக்காரர்கள் இருப்பதற்கான அடிப்படைக் காரணத்தைக் களைவதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது. இதை இன்னும் அதிக அளவில் எடுத்து பிச்சைக்காரர்களை ஒழிக்கவேண்டுமென்று சட்டத்தைக் கொண்டு வருவதுகூட நன்றாக இருக்கும். அதற்கு அதிகச் செலவாகும் என்று அரசு எதிர்பார்த்தாலுங்கூட சமுதாயத்திலுள்ள பெரியவர்களின் ஆதரவைப் பெற்று பொருளாதார வசதியைப் பெருக்கிக் கொள்ள முடியும். அப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்வது நலமாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

விடுதிகளில் இருப்பவர்களில் சிலருக்குத்தான் தாங்கள் சுதந்திரமாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் வருகிறது. அங்கே பல விதமான கைத்தொழில்கள் கற்றுத் தரப்படுகின்றன. அதில் அவர்கள் நல்ல ஆர்வம் காட்டிச் செய்து வருகிறார்கள். அவர்கள் செய்கிற வேலைகளுக்குக் கூலி என்ற அடிப்ப



டையில் அவர்களுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்தால் அவர்களுக்குக் கொஞ்சம் வருவாய் கிடைக்கும் வாய்ப்பு இருக்கும். இன்றைய தினம் அங்கே பாய் நெசவு, தோட்ட வேலை போன்றவைகள் செய்யப்படுகின்றன. அதிலே கிடைக்கிற கூலியை அவர்களை அடையச் செய்து அதன் மூலம் அவர்களுக்குக் கொஞ்சம் பணம் வருகிறது என்ற ஆசை அவர்களுக்கு இருந்தால் அவர்கள் அங்கே இருப்பதற்கு உதவியாக இருக்கும் என்ற அடிப்படையில் சிந்தித்து அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக தமிழக அரசு இப்படிப்பட்ட நல்லதொரு திட்டத்தை, பாராட்டும்படியான திட்டத்தை அமுல்படுத்துகிற திட்டத்தைப் பார்க்கிறபோது அந்நிய செலவாணி கூட நமக்கு அதிகமாக வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களெல்லாம் இந்தியாவைப் பிச்சைக்காரர்கள் அதிகமாக இருக்கிற நாடு என்று எழுதுகிறார்கள். காரணம் அவர்கள் ஏர்-போர்ட்டில் வருகிறபோதும், கப்பல் வழியாக வருகிறபோதும் பிச்சைக்காரர்கள்தான் அவர்களுக்குக் காட்சி அளிக்கிறார்கள்.

ஆகவே இதையெல்லாம் பார்த்து பிச்சைக்காரர்கள் பிச்சை எடுக்கக்கூடாது என்ற திட்டம் நல்லது என்று கூறி மாண்புமிகு முதலமைச்சரவர்களின் திருத்தத்தை வரவேற்கிறேன். அடுத்து வட ஆற்காடு மாவட்டத்தில் தற்போது ஒரே ஒரு மறுவாழ்வு இல்லம்தான் இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கில் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். ஆகவே, பிச்சைக்காரர்களைக் குறைக்கும் வாய்ப்பு ஏற்படுவதற்கு வட ஆற்காடு மாவட்டத்தில் இன்னொரு பிச்சைக்காரர் விடுதியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, while welcoming this Bill, which is very necessary, I do not think any party will oppose it. I think it does not go far enough and that is the complaint. As already pointed out by the hon. Member, Dr. Hande, there are two issues. One is the general issue about leprosy and the second issue is the beggars who are affected by leprosy. Unfortunately, three days ago there was a press statement which said that in the whole of India the maximum leprosy is prevalent in Tamil Nadu and this is very shameful to us. In spite of the attainment of Independence 27 years ago—whatever party that ruled India—we still have the highest number of lepers in Tamil Nadu and this is very bad.

Coming to the present Bill, it proposes to detain lepers and keep them in Bagger Homes. Many suggestions have been made with regard to the utilisation of their services and I do not want to go into it. I

want to raise two or three points. One is, whether there cannot be any segregation of male and female lepers because putting them together in the same beggar home will bring in further production of lepers and that is one of the reasons for the increase of lepers in this country.

The second important point is, why not sterilise the old people beyond a certain age so that they would not produce lepers. I do not want you to sterilise 16 year old or 18 year old boys who can be cured but I do definitely feel that older people affected by leprosy who could not be cured should be sterilised so that there may not be further production of lepers.

Coming to the third point, the lepers who are not beggars should be segregated and that is very necessary. Many countries got rid of leprosy by segregation. Whether they are affluent or poor, those who are affected by leprosy should be segregated and they can look after themselves. I hope and trust that the Hon. Minister will consider these points.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்தச் சட்டத்திலே வரவேற்கக்கூடிய அம்சங்கள் இருப்பதால் இதை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, தொழு நோயால் பீடிக்கப்பட்டு, ஆதரவற்ற நிலையில் இருப்பவர்களை, அவர்களுடைய துயரைத் துடைப்பதற்காக இந்த வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இது 1945-லே ஏற்பட்ட சட்டத்திற்குத் திருத்தமாக வந்திருக்கிறது. இது இன்று ஆதரவற்று அலைந்து திரிகின்றவர்களை இந்த மறுவாழ்வு இல்லங்களில் வைத்துப் பராமரிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டமாக இருக்கிறது. அவர்களை வாழ வைக்க இந்தச் சட்டம் வழிவகைச் செய்கிறது. இதில் ஒருவேளை நிர்ப்பந்தம் இருக்கிறது என்று பலரும் நினைத்தாலும் இன்று சமுதாயத்தில் இருக்கிற தொழு நோய் வியாதி மற்றவர்களுக்குப் பரவாமல் இருப்பதற்குப் போதிய பாதுகாப்பு பொதுவாக இருக்க வேண்டுமென்று எல்லோரும் உணர்வார்கள்.

இந்தச் சட்டம் சென்ட்ரல் லெப்பர்ஸ் ஆக்ட், 1898-லே சொல்லியிருப்பதற்கு ஏற்றவகையில் அமைந்திருக்கிறது. ப்ராப்பர் லெப்பர் எப்படி இருக்க வேண்டுமென்று 1898 சட்டத்திலே டெபனிஷன் கொடுத்திருக்கிறார்கள்.

'Who publicly solicits alms or exposes or exhibits any sores or wounds, bodily ailment or deformity with the object of exciting charity or of obtaining alms or who is at large without any ostensible means of subsistence'



என்று சொல்லியிருக்கிறது. பொதுவாக, தனக்கு வருவாய் இல்லாமல் தன்னுடைய வாழ்வை நடத்த முடியவில்லை என்ற நிலையில் இருக்கிறவர்கள் பிச்சை எடுத்தலைத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதை யாரும் நல்ல தொழில் என்று சொல்லமாட்டார்கள். அதைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். சமுதாயத்திலே இருக்கிற ஒரு வியாதி என்ற அடிப்படையிலே இதை அப்புறப்படுத்த இந்தச் சட்டமானது உருவாகி இருக்கிறது. இதில் இப்போது என்னுடைய அனுபவத்தில் கண்டறிந்த ஒரு விஷயத்தைக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

இந்த தொழு நோய் பிச்சைக்காரர்களை போலீசார் கைது செய்து சாதாரண கைதிகளைப் போல் சப்-ஜெயிலில் அடைத்து விடுகிறார்கள். அப்படிச் செய்யாமல், அவர்களுக்கு என்று தனியாக ஏற்படுத்தப்பட்ட இல்லங்களில் வைக்க அவர்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நான் நாகர்கோவில் சப்-ஜெயிலில் ஒரு கைதியாக இருந்த போது அங்கு இந்த தொழு நோய் பிச்சைக்காரர்களை என்னுடைய அருகிலுள்ள இன்னொரு செல்லில் அடைத்து வைக்கும் நிலைமை ஏற்பட்டது. இதனால் இந்த வியாதி மற்றவர்களுக்குப் பரவக் கூடிய தன்மை இருக்கிறது.

ஆகையால் இந்தச் சட்டத்தை அமுல் செய்யும்போது, அவர்களை கிரிமினல் கைதிகளைப்போல் நடத்தாமல், அவர்களைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்யும்போது, அவர்களுக்காகத் தனியாக வைத்திருக்கிற இல்லங்களில் வைக்க வேண்டும். மற்ற கிரிமினல் குற்றங்கள் செய்தவர்களைப் போல் நடத்தக் கூடாது. அவர்களை மனிதாபிமானத்தோடு நடத்த வேண்டும். சமுதாயத்தில் அவர்களைக் கண்டால் எல்லோரும் வெறுக்கின்ற தன்மை இருப்பதால் அவர்கள் மனது புண்படக் கூடாது என்ற அடிப்படையில் அவர்களுக்கு அந்த இல்லங்களில் இடம் அளிக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, இப்போது பல்வேறு தொழு நோய் நிறுவனங்கள் வெவ்வேறு மாவட்டங்களில் அமைத்து அவர்களுக்கு நல்ல, நல்ல காரியங்களை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேலும் ஆக்கமும் ஊக்கமும் ஏற்படக்கூடிய வகையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இருக்க வேண்டும். இப்போது 10 இடங்களில் இந்த மறு வாழ்வு இல்லங்கள் இருக்கின்றன. பரனூர் பகுதியில் இருக்கிற இல்லத்தை நாங்கள் அப்படிப் போகும்போது பார்க்கிறோம். அங்கே இருக்கிற பலரும் உற்சாகமாக இருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். சமுதாயத்திலே அவர்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருந்தாலும், துன்பம் இருந்தாலும் அப்படி உற்சாகமாக இருப்பது என்றால்

அது நல்ல காரியம், நற்பணி என்றுதான் எல்லோரும் கருத வேண்டும். தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், வாழ்க்கையில் இருள் சூழ்ந்தது என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்கு ஆதரவு அளிப்பதாக இந்தச் சட்டம் இருக்கிறது. ஆகையால் இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன்.

இதிலே ஒரு 'காம்பிரிஹென்சிவ் லெஜிஸ்லேஷன்' வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சனைகள் எல்லாம் இருக்கின்றன. பொதுவாக இன்று லெப்பிரசியை கண்ட்ரோல் செய்ய வேண்டுமென்பதில் அரசாங்கம் முனைந்திருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டில்தான் அதிகமான லெப்பர்ஸ் இருக்கிறார்கள் என்ற விபரத்தை டி. எம். இ. அவர்கள் பத்திரிகையில் கொடுத்திருந்தார்கள். அதையெல்லாம் கருத்தில் கொண்டு, தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கூறி, இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பிறந்த நாளில் உருவாகின்ற பல புனிதமான திட்டங்களில் இந்தப் பிச்சைக்காரர்கள் மறு வாழ்வுத் திட்டமும் உருவாகி, இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டில்தான் பிச்சைக்காரர்களுக்கு அதுவும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு அளித்து அவர்களுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சி கொள்கின்ற வகையில் திட்டங்களை நிர்வகித்து வருகிறார்கள். ஏதோ ஒன்றுக்காக இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது என்று இல்லாமல் ஆண்டுக்காண்டு பல லட்சக் கணக்கான ரூபாயை இந்தத் திட்டங்களுக்குச் செலவழித்து, இன்றைய தினம் ஒவ்வொரு மாவட்டத்திலும் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வளிக்கின்ற வகையில், கல்லூரி மாணவர்களுக்கு விடுதிகள் கட்டித் தருவதைப்போன்று, அவர்களுக்கு வீடுகளைக் கட்டித்தந்து, இந்த பிச்சைக்காரர்களுக்கு அழகான கட்டடங்களை அமைத்து அவர்கள் நல்ல முறையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் சிறப்பை உருவாக்கியிருக்கிறோம்.

பிச்சைக்காரர்கள், அதுவும் தொழு நோய் பிச்சைக்காரர்கள் அந்த இல்லங்களில் இருக்கிறபோது, அவர்களுக்குத் தனியாக டாக்டர்கள் அமர்த்தப்படுகிறார்கள். அவர்களுக்கு சர்ஜரி முறையும் கையாளப்படுகிறது. டாக்டர்கள் உதவியால் அவர்களுடைய வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக்கொள்கிறார்கள். அதே நேரத்தில் அந்தப் பிச்சைக்காரர்களின் வாழ்க்கையில் தீண்டாதவர்களாக நாம் இருக்கிறோம்.



சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக அவர்கள் இருப்பதால் தங்களை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகின்ற நிலைமை இருப்பதால் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களிடத்தில் இருக்கின்ற அந்த அதிருப்தியை போக்குவதற்கு அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் முறையை நம்முடைய அரசு வகுக்க வேண்டும். அவர்களுக்கு இருக்கிற அந்த எண்ணத்தைப் போக்குவதற்கு, சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கு தொழுநோய்ப் பிச்சைக்காரர்களும் அதற்கு உடந்தையாக வேண்டும்.

சில தொழு நோய் பிச்சைக்காரர்கள் நல்ல அறிவாளிகளாக இருப்பார்கள். அவர்கள் பாடம் படிப்பதற்குத் தகுதி உள்ளவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்குப் பாடம் படிப்பதற்கு உறுதுணை செய்து, தக்க ஏற்பாடுகளை அரசு செய்யத் தயாராக இருந்தால் அந்தப் பிச்சைக்காரர்களும் பட்டதாரிகளாக வாய்ப்பு உள்ளவர்களாக இருப்பார்கள். அப்படிப் படித்துப் பட்டம் பெறுவதற்கு, அவர்கள் பாடம் படிப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி, அவர்கள் பள்ளிகளில் படிக்கும் சூழ்நிலைகளை உருவாக்குவதற்கும் அரசு ஏற்பாடுகள் செய்து, அதற்கு அரசு உறுதுணையாக இருந்து, அவர்களும் பி.ஏ., எம்.ஏ. பட்டம் பெறுவதற்கான சூழ்நிலையை உருவாக்க அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இன்றைக்கு தொழுநோய்ப் பிச்சைக்காரர்களாக இருக்கிறவர்களை உள்ளே வைத்து முழுஅளவு மருத்துவ சிகிச்சை அளித்து வெளியில் அனுப்புகிறபோது, அவர்கள் வெளியிலே சுயேச்சையாகத் தொழில்செய்கிற அளவுக்கு—அவர்களுககு கல்விப்பயிற்சி—தொழில் பயிற்சி அளிக்க நமது அரசு கூடவே வழிவகை செய்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்ட காரணத்தினால் இந்த இல்லங்களில் பொருந்தி இருக்காது ஓடிவிடுகிறார்கள் என்றார்கள். சமுதாயத்தில் இவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்கிற நிலை இருப்பதை ஒழித்தாலேயே அவர்களது மனநிலை ஆரோக்கியமுற்று வெளியில் ஓட மாட்டார்கள். அவர்களுக்கு நல்ல போதனை அவசியம்—அதற்கெல்லாம் இந்த மசோதா நல்ல வழிவகை செய்கிற காரணத்தினால் இதனை வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டமானது ஏதோ ஒரு பெரிய புரட்சியை உண்டுபண்ணுவதுபோல இதனை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்ற வகையில் திரு. என். கே. பழனிசாமி அவர்களும், டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களும் தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஏற்கனவே இருக்கிற சட்டத்தினால் உண்மையில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்க முடியும் என்றாலும்—குறிப்பிட்ட சட்டத்தை வைத்துத்தான் நீதிபதிகள் தங்களுடைய தீர்ப்பை வழங்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிற காரணத்தினால்—அவர்கள் பல சந்தர்ப்பங்களில் 3 ஆண்டுகள் வரை அவர்களுக்குத் தண்டனை விதிப்பதில்லை. முழு அளவில் சிகிச்சை பெறுவதற்குள் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுவிடுகிறார்கள். ஆகவே, அவர்கள் முழு அளவில் சிகிச்சை பெறுவதற்கான காலம் வரை அவர்களை வைத்திருக்க வேண்டும். அவர்களை சொஸ்தம் செய்தே அனுப்பவேண்டுமென்ற மனிதாபிமான உணர்வோடும், பிச்சை எடுக்கிற தன்மையை ஒழிக்கவேண்டுமென்ற சமுதாயக் கண்ணோட்டத்தோடும்தான் இன்றைக்கு இந்தத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

பொதுவாகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இது பற்றி அரிய யோசனைகளை நல்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய கருத்துக்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற வகையில் தான் இன்றைக்கு இதன் நடைமுறை இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுங் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. மாரிமுத்து அவர்கள்—தொழுநோய்ப் பிச்சைக்காரர் இல்லங்களில் மருத்துவ சிகிச்சை பெறுகிறவர்களுக்கு வேளாண்மைத்துறையில் பயிற்சி கொடுத்து அவர்களைக் கொண்டே காய்கறிகள் பயிரிடலாம் என்றார்கள். இது இப்போதே 6 இல்லங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அங்குள்ளவர்கள் விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள்—காய்கறிகள் பயிரிடுகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள்—ஆண்களையும், பெண்களையும் இந்த இல்லங்களில் ஒன்றாக வைப்பதனால் அவர்களுக்குள்ளே உறவு ஏற்பட்டு, கருத்தரித்து—பிறக்கிற குழந்தை தொழுநோய் உடையதாக ஆகிவிடுகிறது, அவர்களுக்குக் கருத்தடை செய்துவிட வேண்டும் என்றார்கள். ஆனால், மருத்துவத்துறை வல்லுநர்கள் எல்லாம் இந்த நோய்பற்றி விரிவான ஆராய்ச்சிகளைச் செய்து—ஒரு கால கட்டத்தில் மட்டும் தான் இது தொத்துகின்ற நோயாக இருக்கிறதே தவிர மற்றபடி தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு பிறக்கிற குழந்தை தொழுநோய் உடையதாகத்தான் பிறக்கும் என்பது இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். இதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர் மன நிறைவு பெறுவார்கள் என்று கருதுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I meant only in curable diseases.



மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : இந்த தொழுநோய்ப் பிச்சைக்காரர் இல்லங்களில் அறுவை சிகிச்சையை மேற்கொண்டால்—அதற்காகத்தான் இப்படிச் செய்கிறார்கள் என்ற தவறான கருத்து வந்துவிடும். அதுபோன்ற தவறான எண்ணம் வரக்கூடாது என்றுதான் இங்கே சிகிச்சை பெறுகிறவர்களுக்கு அதுபோல ஏற்படுத்தவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் நமது மாநிலத்திலுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை என்ன என்று ஆய்வு செய்யப்பட்டதா? அந்த ஆய்வின் மூலம் கிடைத்த புள்ளிவிவரங்கள் என்ன என்றார்கள். இதில் நாம் ஓர் உண்மையை ஏற்றுக் கொண்டாக வேண்டும். தொழுநோய்ப் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கையை துல்லியமாக ஆய்வு செய்வது சுலபமான செயல் அல்ல. இங்கே சென்னையில் ஆய்வு செய்கிற போது அவர்கள் வேறு ஊர்களுக்குப் போய் விடுகிறார்கள். திருவிழாக் காலங்களில் ஒவ்வோர் இடத்தில் மிக அதிகமாகக் காணப்படுகிறார்கள். அங்கே இருக்கிற கணக்கில் ஒருவகையில் கூடுதலாகச் சேருகிறது. ஆகவே, இன்றைக்கு ஆறாயிரத்தில் இருந்து ஏழாயிரம் வரை இருக்கிறார்கள் என்றால் இந்த எண்ணிக்கை ஆறாயிரத்திற்குக் குறைவாகவும் இருக்கலாம். ஆறாயிரத்தையும் தாண்டி பத்தாயிரம் வரையிலும் கூட இருக்கலாம். இந்த எண்ணிக்கையை அப்படியே எடுத்துக் கொள்வது முடியாத காரியமாக இருக்கிறது.

பொதுவாக, தெருவிலே நோயுடன் அலைந்து திரிகிறவர்களை இந்த இல்லங்களில் வைத்து—இவர்களுக்கு முழு மருத்துவ சிகிச்சை அளிப்பதோடு, மருத்துவ சிகிச்சை பெறுகிற காலத்திலேயே தொழில் பயிற்சியும் கொடுத்து—நோய் நீங்கி அவர்கள் வெளி வருகிறபோது சுயேச்சையாக—பிச்சை எடுத்துப் பிழைக்காமல் — தொழில் செய்து பிழைக்க வழி செய்யப்படுகிறது என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர்களும் இனிமையான விளக்கங்களுடன் கூறியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் தொழுநோய் இல்லங்களைப் பற்றி டாக்டர் ஹாண்டே சொன்னார்கள். அவர்கள் எப்போதுமே அவசரப்பட்டு—வேகமாக—விறுவிறுப்பாகப் பேசி பத்திரிகைகளுக்குச் செய்தி அளிப்பதிலேயே பழக்கப்பட்டவர்கள்—ஆகவே, இந்த தொழுநோய் பிச்சைக்காரர் இல்லங்களில் இந்த நோய் இல்லாதவர்களும் கொண்டுவந்து வைக்கப்படுகி

(நண்பகல் 12-00)

றார்கள் என்றார். ஒன்று காஞ்சீபுரத்தில் இருக்கிறது. மற்றொன்று மேல் பாக்கத்தில் இருக்கிறது. அவர்களைக்கூட, சோம்பேறியாக்கிவிடாமல் அவர்களுக்கும் தொழிற் பயிற்சி முறையாக அளிக்கப்பட்டு, ஒவ்வொரு வாரமும் ஒழுக்க நெறி

பற்றி எடுத்துக் கூறி, 'ஏற்பது இகழ்ச்சி, பிச்சை எடுப்பது இகழ்ச்சி' என்று ஔவைப் பிராட்டியார் கூறியிருக்கிறார், ஆகையினாலே நீ பிச்சை எடுக்காதே, ஏற்காதே, என்ற பொன்னான மொழிகளை எடுத்துக் கூறி, அதன் மூலமாக நெறிப் படுத்துகிற இல்லமாகப் பிச்சைக்காரர் இல்லம் இருக்கிறது என்று நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பரனூர் இல்லத்தைப் பார்வையிட்ட வெளிநாட்டவர்கள் அதுபற்றி எடுத்துக் கூறிய சிறப்புப் பாயிரத்தைச் சுருக்கமாகவே நான் கூற விரும்புகிறேன்.

12—2—1975 அன்று ஒரு முக்கிய பிரமுகர், அதாவது, ஹாலந்து நாட்டுக்காரர், அருள் திரு. ஜான் கர்ட்டே என்பவர் எழுதியிருக்கிறார் குறிப்பேட்டிலே : நாங்கள் மிகவும் நேர்த்தி யான செயல்களை இன்று பார்த்தோம். பெருமை அடை கிறோம் என்று குறிப்பிட்டார்கள்.

மத்தியப் பிரதேசத்திலே இருந்து வந்த ஜெயராம ஐயர் என்ற சட்டமன்ற உறுப்பினர் பரனூர் மறுவாழ்வு இல்லம் எங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டிருக்கிறது. இது போல் வேறு மாநிலத்திலே, நான் அறிந்தவரை இல்லையென்றே கூறுவேன். இதன் பெருமை தமிழகத்தைச் சிறப்பாக்கும் என்று கூறியுள்ளார். அத்துடன், சுகாதாரத் துறையினரையும், இதில் பணியாற்றுகிறவர்களையும், பரனூர் இல்லம் மற்ற மாநிலத்தவர்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் வழிகாட்டி யாக இருக்கும்—அதன் திறமை அந்த அளவு இருக்கிறது என்றும் கூறியுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (திரு. எஸ். வடிவேல் குறுக்கீடு) உறுப்பினர் வடிவேல் அவர்கள் எதைப் பாராட்டி இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். தொழுநோய்ப் பிச்சைக் காரர் இல்லங்களில் உறையும் தொழுநோய்க்காரர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகளை, அவர்களுக்கு அளிக்கின்ற உணவு முறைகளை, அவர்களுடைய பிற்கால வாழ்வுக்கு அளிக்கப் படுகிற தொழில் வாய்ப்புகளை, அங்கிருக்கிற அமைப்பு களைப் பாராட்டி, இரத்தினச் சுருக்கமாக, வள்ளுவரைப் போல், இரண்டொரு வரியிலே அழகாகக் கூறி, அதிகமான வற்றைச் சுருக்கமாகக் கூறுவதைப்போல், எடுத்தேன், படித்தேன், முடித்தேன் என்றால், அவ்வளவு அருமையான ஆற்றல்களைக் காண்கிற ஒருவன், கண்டேன், களிபேறுவகைக் கொண்டேன், அதைப் பாராட்டுகிறேன் என்ற வகையில் அறிஞர்கள் சுருக்க மான வார்த்தைகளிலே, நல்ல வாசகங்களிலே குறிப்பிட்டிருக் கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் வடிவேல் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





இந்த இல்லங்களில், உண்மையாகவே உறைபவர்கள் பிச்சைக்காரர்கள். அவர்களுக்குப் பிச்சைக்காரர்கள் என்கிற தாழ்வு மனப்பான்மை ஏற்படக் கூடாது. அவர்கள் நாம் சமுதாயத்தில் எங்கேயோ தாழ்வு நிலையில் இருக்கிறோம் என்ற தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகிவிடக் கூடாது என்பதற்காக உலவ நல்ல பூங்கா, மாலைப் பொழுதில், காலைப் பொழுதில் வெளிநாட்டுச் செய்திகளை, கேளிக்கைகளை, இசைகளை, நாட்டுச் செய்திகளையெல்லாம் கேட்பதற்கு—அனைத்துச் செய்தி களையும் கேட்டு நல்ல முறையிலே வெளி விவகாரங்களைத் தெரிந்துகொள்ள வானொலிப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

மற்றும் அறுசுவை உணவுகள் அளிக்கப்படுகின்றன. இந்த இல்லங்கள், அங்கங்கு, மாவட்டத்திற்கு ஒன்று என்று வைக்கப்பட்டிருப்பதால், உறுப்பினர்கள் முடிந்த அளவிற்குச் சென்று பார்க்கவேண்டும். சென்று பார்த்த பிறகுதான் அங்கே செய்யப்படுகிற நடைமுறைகள் உங்களுக்கு முறையாகத் தோற்றம் அளிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தத் திட்டமானது இந்த நாட் டிலிருக்கிற அத்தனை தொழுநோய்க்காரர்களும் சட்டத்தின் வாயிலிலேயிருந்து தப்பித்துக் கொண்டு சென்று, மீண்டும் சமுதாயத்திலே அந்த நோயைப் பரவிவிடுகின்றவர்களாக ஆகி விடாமலிருக்கவும், அது மட்டுமல்லாமல், நோய் நாடியிருக்கிற தன்மை, தொழு நோய்த் தன்மை வந்துவிட்டால், பிச்சை யெடுக்கிற நிலைமை மறுபடியும் வருமென்பதைத் தடுக்கவுமே இந்தத் திருத்தச் சட்டம் வகை செய்கிறது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

நாங்கள் பெறவிருக்கிற உண்மை, அல்லது பெறவிருக்கிற ஒரு திருத்தம் என்னவென்றால், நோய் எந்த அளவிற்கு இருக் கிறதோ அந்த அளவுக்கு அவர்கள் இருக்கவேண்டும். நோய் நீங்கிவிட்டது என்ற பிறகு அவர்களை வெளியே அனுப்பலாம். அதுவரை, அவர்கள் உள்ளேயிருந்து தங்கி, மருத்துவ சிகிச்சை பெற இந்தத் திருத்தச் சட்டமானது வழிவகை செய்கிறது. அதுமட்டுமல்லாமல், கைது செய்யப்பட்டு மறுவாழ்வு இல்லத்திற்கு அழைத்து வந்தபிறகு, அல்லது நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்களாக யாராவது இருந்தால், அவர்களுக்கு வேண்டிய வீட்டு வசதியை நான் செய்து கொடுக் கிறேன். அவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதியைச் செய்து கொடுக்கிறேன், அவர்களுக்கு வேண்டிய உணவு தருகிறேன், அவரை என்னுடன் அனுப்பிவிடுங்கள் என்று யாராவது ஜாமீன் கொடுப்பார்களானால், அவர்களுக்கும் இது வகை செய்கிறது. அந்த வகையிலும் செலக்ட் கமிட்டிக்குச் செல்ல வேண்டிய அளவுக்குத் தேவையில்லை—அப்படி நேரத்தை நீட்டிக் கொள்ள அவசியமில்லாத வகையில், இது நேரடியாக நிறைவேற்ற வேண்டிய சட்டமாக இருப்பதால், இதை அப்படியே நிறை வேற்ற வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு வசதியான திருத்தத்தை அநேகமாக எல்லாக் கட்சிகளின் சார்பிலும் ஆதரித்து, வரவேற்று, வரவேற்கும் நேரத்திலே சில அரிய யோசனைகளையும் இந்த இல்லங்கள் எப்படி நடைபெற வேண்டுமென்ற வகையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனைகளை அரசும் தொடர்புடைய துறையும் அதிகாரிகளும் ஆராய்ந்து பார்த்து ஏற்றவைகளைச் செய்வதற்கு இயலும் என்பதை நான் முதலில் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலே, தமிழ்நாட்டிலேதான் தொழுநோயாளிகள் அதிகம் இருக்கிறார்கள் என்கின்ற புள்ளி விவரம் அண்மையிலே வெளியிடப்பட்டது. இந்த அவையில் திரு. ஹாண்டே அவர்களாலும், திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களாலும், மற்றவர்களாலும் எடுத்துச் சொல்லப்பட்டது. அந்தப் புள்ளி விவரத்தில், தமிழ்நாட்டிலே 7.6 இலட்சம், ஆந்திராவிலே 6 இலட்சம், வங்காளத்திலே 6 இலட்சம், ஒரிசாவில் 4½ இலட்சம், மத்திய பிரதேசத்தில் 1½ இலட்சம், இதர பகுதிகளில் மொத்தம் 1 இலட்சம் என்று போடப்பட்டிருக்கிறது. இந்த மாநிலங்களைப் பற்றிய கணக்கு இது. மற்ற மாநிலங்களைப் பற்றி கணக்கிடப்பட்டிருக்கிறதா என்ற விவரம் நம்மிடத்திலே இல்லையென்றாலும் ஆந்திராவைவிட, வங்காளத்தைவிட, 1 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள், தொழுநோயாளிகளாகத் தமிழகத்திலே இருக்கிறார்கள் என்றாலும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இங்கே அளித்த விளக்கத்திற்கேற்ப இந்தத் தொழு நோயைக் குணப்படுத்துவதற்கும், வராமல் தடுப்பதற்கும் தொடக்க காலத்திலேயே அதைத் தடுத்து அது விரிவடையாமல், பரவாமல் இருப்பதற்கும் ஏற்ற முயற்சிகள் நல்வாழ்வுத் துறையின் வாயிலாக எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கிடையிலேதான் எந்த வசதியும் வாய்ப்பும் இல்லாமல் பிச்சை எடுப்பதைத் தங்களுக்கு உகந்த ஒரு தொழிலாகக் கொண்டு, தங்களுக்கு வந்துவிட்ட தொழுநோயையே இந்தப் பிச்சை எடுக்கும் தொழிலுக்கு மூலதனமாக வைத்துக் கொண்டு சிலர் நம்முடைய தமிழ்நாட்டுத் தெருக்களிலே அலைந்து திரிவதை முதல் கடமையாக நீக்கிட வேண்டுமென்ற முயற்சி 1971-ம் ஆண்டு இந்த அரசின் சார்பிலே மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள், 'ஏற்பது இகழ்ச்சி' ஆகவேதான் இந்தக் காரியத்தை இந்த அரசு செய்கிறது என்று. 'ஏற்பது இகழ்ச்சி'—பிச்சை எடுக்கிறவர்களுக்குக் கூட இகழ்ச்சி அல்ல. நம்முடைய நாட்டில், சமுதாயத்திலே இருக்கிற ஒரு பகுதியினர் ஏற்பது,



பிச்சை எடுப்பது இகழ்ச்சி. யாருக்கு என்றால், அதைப் பார்த்துக் கொண்டிருக்கிற நமக்கெல்லாம் இகழ்ச்சி என்கின்ற அந்த வகையிலேதான் நாம் இந்த முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினோம்.

நம்முடைய ஆளுங் காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே பேசிய நண்பர் மாரிமுத்து அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 1945-ம் ஆண்டிலே இருந்து இந்தச் சட்டம் இருக்கிறது என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டம் அமுலாக்கப்பட முடியாத நிலைமையையும், அது ஏற்பட்டதையும் குறிப்பிட்டார்கள். சட்டங்களை இயற்றி விடுவது சுலபம்தான். ஆனால், அந்தச் சட்டங்களை அமுலாக்குகிற நேரத்தில் அந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுபவர்கள்—பாதிக்கப்படுபவர்கள் என்று சொல்வது பயன் பெறுகிறவர்கள் என்ற பொருளிலும் கொள்ளலாம்—அவர்கள் இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுகிற நேரத்தில், அல்லது பயன்படுகிற நேரத்தில், அதற்கான மாற்றுத் திட்டங்கள் இல்லாத காரணத்தாலே அவை பயனற்றுப் போய் விடுகின்றன. அந்தச் சட்டங்கள் நடைமுறைக்கு வராமல் போய் விடுகின்றன.

தெருவிலே பிச்சை எடுப்பதைத் தடுப்பது, அவர்களைக் கைது செய்வது, குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துவது, சில மாதங்களுக்குத் தண்டனை அளிப்பது, மீண்டும் அவர்களை வெளியிலே விடுவது என்று இருந்தால், அது தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒரு சுற்று நிகழ்ச்சியாகவே இருந்து விடக்கூடும். ஆகவே, அந்தச் சட்டங்களை நடைமுறைப் படுத்துகிற நேரத்தில், இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுகிற பிச்சைக்காரர்களில் நாம் முதல் கட்டமாக எடுத்துக் கொண்டிருக்கிற தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மாற்றுத் திட்டமாக இல்லங்களை அமைப்பது, அதிலே அவர்களுக்குப் புதிய வாழ்வைத் தருவது, மறுவாழ்வு தருவது என்று செங்கல்பட்டிலே பரனூரிலும், தென்னாற்காடு மாவட்டத்திலே உளுந்தூர்பேட்டையிலும், தருமபுரி மாவட்டத்திலே பர்கூரிலும், புதுக்கோட்டையிலும், தஞ்சை மாவட்டத்திலே மனையேரிப் பட்டியிலும், மதுரை மாவட்டத்திலே புதுப்பட்டியிலும், வட ஆற்காடு மாவட்டத்திலே மல்லவாடியிலும் கோவையிலே விண்ணப்பள்ளியிலும், சேலம் மாவட்டத்திலே தேவியாகுறிச்சியிலும், தருமபுரி மாவட்டத்தில் செல்லியம்பட்டியிலும் இந்த மறுவாழ்வு இல்லங்களை நாம் அமைத்திருக்கிறோம்.

அங்கே ஆட்களே இல்லை என்றெல்லாம் கூட சில உறுப்பினர்கள் இங்கே பேசும் பொழுது குறிப்பிட்டார்கள். நான் மொத்தமாகச் சொல்லவேண்டுமானால் இந்த 10 இல்லங்களிலேயும் 3,406 தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள்.

மாவட்ட வாரியாகச் சொல்லவேண்டுமானால் பரனூரில் 385 பேரும், உளுந்தூர் பேட்டையில் 351 பேரும், பர்கூரில் 277 பேரும், புதுக்கோட்டையில் 416 பேரும், மலையோரிப்பட்டியில் 424 பேரும், புதுப்பட்டியில் 439 பேரும், மல்லவாடியில் 296 பேரும், விண்ணப்பள்ளியில் 246 பேரும், தேவியாகுறிச்சியில் 381 பேரும், சொல்லியம்பட்டியில் 191 பேரும் மொத்தம் 3,406 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தொழில்கள், விவசாய வேலைகள் இவைகள் எல்லாம் தரப்பட வேண்டுமென்று பொன்னப்ப நாடார் அவர்களும், ஜோதி அம்மையார் அவர்களும், மாரிமுத்து அவர்களும், மற்றவர்களும் இங்கே சுட்டிக் காட்டினார்கள்.

இதுவரையிலும், 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு, அவர்களுக்கு வழங்கப்பட்ட தொழில்களின் காரணமாக நடந்தேறிய பணிகளைப் பார்த்தால் அவர்களால், தொழுநோய்ப் பிச்சைக்காரர்களால் முடையப்பட்ட பாய்களின் எண்ணிக்கை 7,330. அவர்கள் தைத்த ஆடைகளின் எண்ணிக்கை 5,150. அங்கே அமைக்கப்பட்டுள்ள கோழி வளர்ப்புப் பிரிவுகளில் உற்பத்தியான முட்டைகள் 1,33,126. அவைகள் எல்லாம் அங்கே இருக்கிறவர்களுக்கு பெரும்பாலும் உணவுக்காக வழங்கப்படுகிறது. தயாரிக்கப்பட்ட பாத அணிகளின் எண்ணிக்கை 507 ஜோடிகள், காய்கறித் தோட்டங்களிலே விளைவிக்கப்பட்ட காய்கறிகள் 12,849 கிலோ கிராம்.

இதன்னியில் பல்வேறு திட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டு அதற்கான ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறது. மருத்துவத் துணைப் பணியில் 74 பேரும், வேளாண்மைத் தோட்டங்கள் போடுவதில் 230 பேரும், தையல் வேலையில் 30 பேரும், பாத அணி தயாரித்தலில் 47 பேரும், பாய் முடைதலில் 93 பேரும், கோழி வளர்த்தலில் 17 பேரும், தச்சு வேலையில் 12 பேரும், துணி நெய்தலில் 19 பேரும், சமையல் உதவியாளர்கள் என்ற முறையில் 108 பேர்களும், மொத்தம் 630 பேர்கள் வேலை வாய்ப்புப் பணிகளை அங்கே பெற்றிருக்கிறார்கள்.

அவர்களுக்காக தொழிற் கூடங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து இங்கே தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் பரனூரில், ஸ்விடிஷ் ரெட்கிராஸ் ரீஹேபிலிடேஷன் இண்டஸ்ட்ரீஸ் மூலம் அளிக்கப்பட்ட தொழிலுதவியை அண்மையில் பிரதமர் தமிழகத்திற்கு வந்த போது தொடங்கி வைக்கப்பட்டது என்பதையும், அங்கே 80 பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

இளம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைத் தனியாகக் கவனிக்க வேண்டுமென்று சீனிவாசன் சொன்னார். இன்றைய தினம் சீனிவாசன் அருமையான யோசனைகளை நிதானமாக வழங்கியிருக்கிறார். இளம் தொழுநோய் பிச்சைக்காரர்கள்



தனியாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும், அவர்களிடமிருந்து இந்த நோய் பரவிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் சீனிவாசன் சொன்னார். ஏற்கனவே எடுக்கப்படுகிற முயற்சிகளின் தொடர்பாக அதுவும் செய்யப்படும்.

ஆறு ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் பேர்கள் வரையில் தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இடங்களை விரிவுபடுத்த வேண்டுமென்று ஜோதி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். எல்லாப் பிச்சைக்காரர்களும் அகற்றப்பட வேண்டுமென்ற கருத்தும் அம்மையார் அவர்களால் வலியுறுத்தப்பட்டது. எல்லாப் பிச்சைக்காரர்களும் என்று கணக்கை எடுத்த போது 60 ஆயிரத்திற்குமேல் அவர்களின் எண்ணிக்கை இருக்கிறது. அந்தக் காரணத்தினாலே முதல் கட்டமாக 6 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் வரையில் உள்ள இந்தத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு அளித்துத் தீர வேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்தோம்.

இப்போது இந்த இல்லங்களிலே 4 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். மேலும் இப்போது கொண்டுவரப்படக்கூடிய திருத்தம் நிறைவேற்றப்பட்டு, செயல்முறைக்கு வருகிறபோது மீதம் இருக்கிற தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கும் இப்போது இருக்கிற இடங்களை விரிவுபடுத்த வசதிகள் இருக்கின்றன. தேவைப்படுமானால் புதிய கட்டடங்களைக் கட்டவும் ஆராயலாம். அந்தக் கருத்திலேதான் வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு இல்லம் போதாது, இன்னொரு இல்லம் வேண்டுமென்று முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த திரு. வகாப் அவர்களும் சொன்னார்கள். இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் காரியங்கள் செய்யப்படுகின்றன.

பரனூருக்குச் சென்று பார்த்து வந்தேன், நல்ல முறையிலே பணியாற்றுகிறது என்று இங்கே சொன்னார்கள். இதைப்போலவே ஒவ்வொரு இல்லமும் நல்ல முறையிலே பணியாற்றக் கூடிய முறையிலே, நாங்கள் வருகிறோம் என்று கூடச் சொல்லாமல் திடீர் திடீரென்று பிச்சைக்காரர்கள் இல்லங்களுக்குச் சென்று பார்வையிட்டு குறைகளை அறிந்து உடனுக்குடன் ஆவன செய்ய வேண்டுமென்று நான் ஆகட்டும், இந்தத் துறையைச் சேர்ந்த மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சராகட்டும், அதிகாரிகளாகட்டும் காரியங்களைச் செய்து வருகிறோம். அந்த வகையிலே பொது மக்களுடைய ஒத்துழைப்பு நிரம்பக் கிடைக்க வேண்டும். பொது மக்களுடைய பிரதிநிதிகளுடைய ஒத்துழைப்பும் நிரம்பக் கிடைக்க வேண்டுமென்று கூறி அமைகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தொழுநோயைப் பொறுத்த வரையில் இரண்டு விதம் இருக்கிறது. ஒன்று நெகட்டிவ், இன்னொன்று பாஸிடிவ். இந்த பாஸிடிவ் ஆக இருக்கிற நோய் சீக்கிரமாக மற்றவர்களுக்குப் பரவி விடுகிறது. ஆகவே விடுதிகளிலே அப்படிப்பட்டவர்களுக்கு முதலிடம் கொடுத்து மற்றவர்களுக்கு நோய் பரவிவிடாதபடி தடுக்கக்கூடிய முறையிலே அவர்களை அங்கே அழைத்துச் செல்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? இப்போது அவர்களுக்காகக் கட்டியிருக்கிற கட்டடங்கள் போதாது. ஆகவே, அதற்காக வாலண்டிரியாக சில ஆர்கனேசேஷன்ஸ் வந்து கட்டடங்களைக் கட்டித்தர முன் வந்தால் அரசு அதற்கு ஒத்தாசை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த அரசு ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம் ஆரம்பித்திருக்கிறது. அண்மையிலே அண்ணா நகரில் என்று நினைக்கிறேன், அந்தத் திட்டத்திலே தனியார் நிறுவனத்தினர் ஊனமுற்றோர் நல்வாழ்விற்காக இல்லம் அமைக்க இருக்கிறோம், அரசு உதவி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அரசு உதவி செய்வதாக வாக்களித்து இருக்கிறது. அம்மாதிரி தொழுநோய்ப் பிச்சைக்காரர் இல்லங்களுக்காக தனி நிறுவனங்கள் ஏற்பாடு செய்து, அவை ஒழுங்காக நடைபெறுமானால், செம்மையாக நடைபெறுமானால் அவர்களுக்கு அரசு உதவி அளிப்பதன் மூலம் தங்களுடைய சுமையைக் குறைத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தத்தை வலியுறுத்தவில்லையாதலால் அவருடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ் நாடு 1974ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 48/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்ற பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



## CLAUSE 1.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That Clause 1 do stand part of the Bill".

THE HON. THIRU C. V. M. ANNAMALAI : Sir, I move the following amendment :—

"In Clause 1, sub-clause (1) for the figures '1974', substitute the figures '1975'."

The amendment was put and carried.

Clause 1, as amended, was put and carried.

### *Enacting Formula.*

MR. DEPUTY SPEAKER : The question is —

"That the Enacting Formula do stand part of the Bill".

THE HON. THIRU C. V. M. ANNAMALAI : Sir, I move the following amendment :—

"In the enacting formula for the words 'twenty-fifth year' substitute the words 'Twenty-sixth year'."

The amendment was put and carried.

The Enacting Formula, as amended, was put and carried.

நெடுந்தலைப்பு, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு 1974ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/74) திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(உ) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/74).**

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவேட்டு (திருத்தல்) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 51/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'' என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவேட்டுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1969), இம்மாநிலத்தில் உள்ள வேளாண்மை நிலங்கள் குறித்து குத்தகை உரிமைகள் பதிவேட்டைத் தயாரித்து வைத்துவர வகை செய்கிறது. மேற்படி சட்டத்தின் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த (8) பகுதியில் கண்ட (a) உட்பகுதி, தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டம் (25/1955) பொருந்துகிற ஒரு நிலத்தைப் பொறுத்தவரையில், ''குத்தகைக்காரர்'' என்ற சொல்லுக்கு, 1955ஆம் ஆண்டு 2-வது பிரிவைச் சேர்ந்த (aa) பகுதியில் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ள பயிரிடு குத்தகைதாரர் ஒருவர் என்று பொருள் கூறுகிறது. ஆனால் தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு 25ஆம் சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயலில் இல்லை.

தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு 10-வது சட்டத்தில் குத்தகைக்காரர் என்ற சொல்லுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மேற்படி பொருள் விளக்கத்தை மேற்படி மாவட்டத்திற்குப் பொருந்துமாறு செய்ய தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு 10-வது சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (8) பகுதியில் கண்ட (a) உட்பகுதியில் குறிப்பிட்டுள்ள வகையான பயிரிடு குத்தகைக்காரர் மேற்படி மாவட்டத்தில் இருக்கமாட்டார்கள் என்பதாலும், அத்தகைய குத்தகைக்காரர்கள் குறித்த குத்தகை உரிமைகளை எழுதி வைக்க இயலாது.

*18—2—1974-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு 10-வது சட்டத்தின் 2(8) பிரிவில் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ளபடி மேற்படி மாவட்டத்தில் குத்தகைக்காரர் எவரும் இல்லை என்ற காரணத்தால், அச்சட்டத்தின் செல்திறனால்கூட 1974 ஆம் ஆண்டு 538-வது ரிட் மனுவில் ஆட்சேபிக்கப்பட்டது.

எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பயிரிடு குத்தகைக்காரர்கள் தங்களது குத்தகை உரிமைகள் குறித்து நிலையானதும் அதிகாரப் பூர்வமானதுமான பதிவேட்டைப் பெறும் நல்வாய்ப்பை இழக்கும் நிலையில் உள்ளனர். அத்தகைய பதிவேடுகள் இருந்தால், அவை நிலச் சொந்தக்காரர்கள் குத்தகைக்காரர்களுக்குப் பாதகம் விளைவிக்கும் வகையில், மனம் போன போக்கில் நடந்துகொள்வதிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் ; அத்துடன் உரிமையியல் வழக்குகளில் அந்தப் பதிவேடுகள் அவர்களுக்கு உறுதுணையாக விளங்கும். எனவே, தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு 25-வது சட்டத்தில் உள்ளதுபோலவே ''பயிரிடு குத்தகைக்காரர்'' என்ற சொற்களின் பொருள் விளக்கத்தை அமைத்துக் கொள்ளும் வகையில் தமிழ்நாடு 1969ஆம் ஆண்டு 10-வது சட்டத்தின் 2 (8) பிரிவைத் திருத்துவதெனவும், ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட சொற்களையும், நடவடிக்கைகளையும் செல்திறன் உடையனவாக ஆக்குவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனை இந்த மன்றம் ஏற்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, அவர்கள் கொடுத்திருப்பது தமிழிலே இல்லை. அன்பில் கூட தமிழில் கொடுக்கவில்லை என்றால் எப்படி? அப்படியென்றால் சட்டமன்றத்திற்கு ஆங்கிலம் படித்தவர்கள்தான் வர வேண்டும் என்ற அவல நிலை ஏற்பட்டுவிடும், இது விவசாயப் பிரச்சினை என்று சொல்லும் பொழுது நாமெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். நான் 30 வருஷமாக வேலை செய்கிறேன். இந்த விவசாயப் பிரச்சினையில் அன்பில் கூடத் தமிழில் கொடுக்கவில்லை என்றால் நாங்கள் புரிந்து கொள்வது கஷ்டமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் பேசியது, தமிழில்தான் பேசினார்கள்.

THIRU P. SEENIVASAN: It is a valid point, Sir.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கிற சட்டச் சிக்கல்களை அகற்றுவதற்காகக் கொண்டுவந்திருக்கும் இந்தத் திருத்தங்களை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தச் சட்டமானது ஆரம்பத்திலே இயங்கும் நேரத்திலே, டெனன்ட் என்றால், கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட்லே இருக்கிற அந்த டெனன்ட்களை உட்கொள்ளும் என்ற கருத்தைக் கூறியிருந்தார்கள். ஆனால் கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட், கன்னியாகுமரி ஜில்லாவிலே அமலில் இல்லாத காரணத்தால் அது சம்பந்தமாக உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து, இந்த மூலச் சட்டமே அந்தப் பகுதிக்கு ஏற்றதாக இல்லாததால் செல்லுபடியாகாது என்ற தீர்ப்பைக் கூறிவிடுவார்கள் என்ற ஐயப்பாட்டினால் இந்தத் திருத்தம் ஏற்பட்டிருக்கிறது.

பொதுவாக இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே பல்வேறு தீர்ப்புகளை எல்லாம் தாசில்தார், ஆர். டி. ஓ., கலெக்டர் போன்ற அதிகாரிகள் அவர்களுடைய அதிகார வரம்பிலே கொடுத்திருக்கிறார்கள். அதிலேயிருக்கின்ற சட்டச் சிக்கலை அகற்ற வேண்டுமென்றுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை நிறைவேற்றும் வகையில் அங்குள்ள சட்டங்கள் அத்தனையையும் தமிழ்நாட்டிலுள்ள சட்டத்தைப்போல ஒருமுகப்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆக்ட் 10, 1950ஐப் பற்றிக் கூறினார்கள். காலாகாலங்களிலேயும் அந்தச் சட்டம் நீடிக்கப்பட்டு வருகிறது. அதை மறுமுறையும் நீடிக்காமல் அங்குள்ள சட்டங்களை ஒருமைப்படுத்தும் வகையில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். இதேமாதிரி பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. 60 : 40 சட்டம் இந்தப் பகுதிக்கு விஸ்தரிக்கப்படவில்லை. டெனன்ட்ஸ்க்குப் பாதகமாக இருக்கும் சட்டமாகத்தான் அந்தப் பகுதியில் பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்த டெனன்ட்ஸ்க்கெல்லாம் அனுகூலமாக இருக்கும் சட்டங்களை நாம் அமலுக்குக் கொண்டு வர வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதுபோல, தீர்ப்புகள் வழங்கினாலும், போலீஸ் அதிகாரிகளானாலும் சரி அல்லது வேறு அதிகாரிகளானாலும் சரி இதற்கு போதிய பாதுகாப்பு இந்த டெனன்ட்ஸ்க்குக் கொடுக்கபடவில்லை என்ற புகார் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நானே இந்த மன்றத்திலே முன்பு கூறியிருக்கிறேன் தாசில்தார் அவர்கள் ஆர். டி. ஓ. அவர்கள், கலெக்டர்



அவர்கள் ஒரேமுகமாக தீர்ப்புக் கூறியபொழுதும் அந்தத்
தீர்ப்பை போலீஸ் அதிகாரிகள். ("they are sitting in
judgment over the decisions") என்ற
அடிப்படையிலே அதன்மீது புரொட்டக்ஷன் கொடுக்கத் தவறி
யிருக்கிறார்கள் என்பதையும் நான் கோடிட்டுக் காட்டக்
கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்தச் சட்டம்
கொண்டு வந்ததை நான் ஆதரித்து இந்த மாதிரி பல்வேறு
சட்டங்களைக் கொண்டு வர வேண்டியிருக்கிறது என்று கூற
விரும்புகிறேன்.

அதேமாதிரி சட்ட அமைச்சரவர்களுக்குக் கூட ஒரு வேண்டு
கோளை இந்த நேரத்தில் விடுக்கக் கடமைப்பட்டவனாக இருக்
கிறேன். கோர்ட் ஃபீஸ் ஆக்டிலே ஒரு சில மாற்றங்களை
ஏற்படுத்த வேண்டும். அங்கே நாங்கள் கோர்ட் ஃபீஸ் அதிக
மாகக் கொடுக்க வேண்டிய நிலைமையிருக்கிறது. ரயத்
துவாரி செட்டில்மெண்ட் முன்பு இல்லாத நிலைமையிலே ஒரு
சில திருத்தங்களை இந்த கோர்ட் ஃபீஸ் ஆக்டிலே கொண்டு
வந்தார்கள். அதை ரிபீல் செய்யவேண்டுமென்று சட்ட
அமைச்சரவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதை
உடனடியாக ரிபீல் செய்ய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ரயத்துவாரி செட்டில்
மெண்ட் ஏற்பட்டுவிட்டது. எனவே, அதற்கான சட்டத்தை
விரைவில் உருவாக்க சட்ட அமைச்சரவர்கள் வேண்டிய ஏற்
பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தச்
சட்டத்தை வரவேற்று என்னுடைய உரையை இத்துடன் முடித்
துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். வடிவேல்: பேரவைத் துணைத் தலைவரவர்களே. வரு
வாய்த் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற
குத்தகை பதிவுச் சட்டத்தை குமரி மாவட்டத்திற்கு விஸ்
தரிக்க வேண்டுமென்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதை
நான் முதலிலே வரவேற்கிறேன்.

நம் நாட்டில் உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட
குத்தகைதாரர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஏறத்தாழ 44 இலட்
சம் குத்தகைதாரர்கள் இருக்கும் இடத்தில், சென்ற ஆண்டு முத
லமைச்சரவர்களின் கணக்குபடி 6 இலட்சம் பேர்கள் தான்
பதிவாகியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஏறத்தாழ
38 இலட்சம் பேர்கள் இன்னும் குத்தகை பதிவுக்கு உட்படாமல்
வெளியேயிருக்கும் நிலைமைகள் இருக்கின்றன. இன்றைக்கு
கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் குத்தகை பதிவுச் சட்டம்
கொண்டு வர வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கொண்டு

வந்திருப்பதை நடைமுறைச் சாத்தியப்படுத்த வேண்டுமென்பது என் கருத்து. குறிப்பாக பதிவுகளில் பதிய வைக்க கிராம அதிகாரிகள், ரெவின்யூ சம்பந்தப்பட்ட இலாக்கா அனைத்துமே முழு முயற்சியிலே..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது கன்னியாகுமரி மாவட்டம் சம்பந்தப்பட்ட திருத்தம். நீங்கள் பேசுவதையெல்லாம் டிமாண்டிலே பேசும்பொழுது பேசிக் கொள்ளலாம். இதிலுள்ளதைப் பற்றி மட்டும் சுருக்கமாகக் கூறி விட்டுவிடுங்கள்.

திரு. எஸ். வடிவேல் : நடைமுறையிலே சாத்தியப்பட வேண்டுமானால் பதிவேட்டில் பதிய வேண்டும். 44 இலட்சம் பேர்களில் 6 இலட்சம் பேர்கள்தான் பதிவாகியிருக்கிறார்கள் எனவே, இது உண்மையிலேயே நிறைவேற்றப்பட வேண்டுமானால் பதிவேட்டிலே சாகுபடிதாரர்களைப் பதிய வைக்கும் நிலைக்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் பதிவேட்டில் அவர்கள் இடம் பெறுவார்கள். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு துரிதமாக முனைந்தால்தான் பதிவேட்டிலே இடம் பெறுவார்கள் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30).

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் 1955-ல் கொண்டு வரப்பட்டு பிறகு அவர்களை அந்த நிலத்திற்கு உடையவர்களாக ஆக்க குத்தகைதாரர்கள் பதிவுச் சட்டம் 1966-ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இது மிகப் பாராட்டுக்குரிய சட்டமாகும். அந்தச் சட்டப் பிரகாரம் குத்தகைதாரர்கள் பதிவு செய்யப்படாமல் பரவலாக மாநிலம் முழுவதும் விடப்பட்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டம் இதிலிருந்து விலக்கப்பட்டிருந்தது, இப்போது சேர்க்கப்படுகிறது. இதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். முதலில் குத்தகைதாரர்கள் சட்டபூர்வமாக குத்தகைதாரர்களாக ஆக்கப்பட்டு அந்த நிலை ஏற்பட்ட பிறகு மறுபடியும் நிலங்களை அவர்களுக்குச் சொந்தமாக்கும் சட்டத்தைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும். அந்த முறையில் பதிவுச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் பல குத்தகைதாரர்கள் வெளியூர்களில் இருக்கிறார்கள். வெளி மாநிலங்களில் இருக்கிறார்கள். அப்படி வெளியிலே இருப்பவர்கள் பேரில் குத்தகை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அதையெல்லாம் தீவிரமாகக் கவனித்து வெளியிலே இருப்பவர்கள் பதிவு செய்யப்



பட்டிருந்தால் அந்தப் பதிவை ரத்து செய்து ஆங்காங்கு இருக்கக்கூடிய உழவர்களுக்கு அந்த நிலத்தைக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்தை கனனியாகுமரிக்கும் விஸ்தரிக்கக்கூடிய திருத்த மாசோதவாக இருந்தாலும், இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள கஷ்டத்தை அரசின் கவனத்திற்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். டெனன்சி ரைட்சைப் பதிவு செய்கிறார்கள். இப்போது புதிய ஆபத்து ஒன்று வந்திருக்கிறது. மற்றொரு சட்டத்தை—யார் உழுது கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு நிலம் சொந்தமாக வேண்டுமென்ற சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். இதனால் இன்று இருக்கும் நிலச்சுவான்தார்கள் எல்லாம் விழித்துக் கொண்டு விட்டார்கள். அவர்கள் நிலத்தில் உள்ளே யாரையும் விடுவதில்லை. ஆகவே, இருக்கிறவனுக்கு பிழைப்புக்கு ஆபத்து வந்திருக்கிறது. உழுகின்றவனுக்கு நிலத்தின் ஒரு பகுதி சொந்தமாக வேண்டுமென்ற சட்டம் வருவதற்கு முன்னால் டெனன்சி ரைட்சை முடிவு செய்திருந்தால் நன்றாக இருக்கும். தமிழ்நாட்டிலேயே இது சரியாகச் செயல்படாத நிலையில் இதை கன்னியாகுமரி மாவட்டத்திற்கும்..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது ஒரு திருத்தச் சட்டப் லாயர் மெம்பர் இதைப் புரிந்துகொண்டு பேசுவது நன்றாக இருக்கும்:—

Because of the judgment of the High Court this amendment has become necessary

என்ற அளவுக்குத்தான் இது வந்திருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Implementation even in Tamil Nadu itself is not all right. If it is extended to Karyakumari district, there will be difficulty. That is why I say this.

திரு. ஜே. ஜேம்ஸ் : தமிழ்நாட்டிலேயே இது செயல்படவில்லை என்று சொல்கிறார்கள். அப்படியானால் கன்னியாகுமரி மாவட்டத்தை இன்னும் தமிழ்நாட்டில் சேர்த்துக் கொள்ளவில்லையா? எங்கேயோ இருப்பது மாதிரிப் பேசுகிறார்களே..................

திருமதி த. ந. அனந்தநாயகி ; தமிழ்நாட்டிலுள்ள மற்ற மாவட்டங்கள் (I stand corrected) அவர்கள் 'கழிந்த' வருஷத்திலேயே இருப்பதால் சேர்த்துக் கொள்ள முடியவில்லை. ஜேம்ஸ் அவர்கள் இன்னும் அவருடைய தமிழை மாற்றிக் கொள்ள மாட்டேன் என்கிறார். எப்படி அவரை நாங்கள் எங்களோடு சேர்த்துக் கொள்ள முடியும் ?

செங்கற்பட்டு மாவட்டம் பூவாத்தூரில் கல்டிவேடிங் டெனன்ட்சை வெளியேற்றக் கூடிய நிர்ப்பந்தமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நாங்களே சிறிய மிராசுதாரர்கள், 3, 4 ஏக்கர் வைத்திருக்கிறோம். இவர்களைப் பதிவு செய்துகொண்டால் இதிலே பாதியைக் கொடுக்க வேண்டும். அதை எப்படித் தாங்குவது என்று கூறுகிறார்கள். இந்த அரசு அவசரப்பட்டு ஏதோ ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து திணிக்க அதன்மூலம் வரும் சங்கடங்கள் என்ன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

விளம்பரத்திற்காக கிடு கிடுவென்று சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுகிறார்கள். இதனால் இருக்கிறவர்களின் பிழைப்பில் மண்ணைப் போடுகிறோம் என்று இவர்களுக்குப் புரியவில்லை. பல டெனன்டுகள் பதிவு செய்யப்படாமலே இருக்கிறார்கள். மிராசுதாரர்கள் விழித்துக் கொண்டார்கள். இதற்கு என்ன பரிகாரத்தை அரசு செய்யப் போகிறது ? கன்னியா குமரியில் இருப்பவர்கள் ஏற்கனவே விழித்துக் கொண்டிருப் பார்கள். அங்கே இந்த டெனன்டுகளைப் பதிவு செய்வார் களா என்பது கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது. ஆகவே, இந்த டெனன்ட்ஸ் எல்லாம் பதிவு செய்யக் கூடிய சூழ் நிலையை அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர் களே, பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இந்தச் சட்டத்தை நீடிக்கிற திருத்த மசோதாவை எல்லோரும் வர வேற்றிருக்கிறார்கள். வரவேற்றுப் பேசிய அதே நேரத்தில் பல்வேறு யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனை களை எல்லாம் பரிசீலனை செய்யலாம் என்று கூறி, இந்த திருத்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :—

"தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/74) ஆய் வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ''.



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

முகப்புரை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

'' முகப்புரை இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்படவேண்டும் ''.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர் களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்—

"In the enacting formula, *for* the 'words twenty-fifth year', *substitute* the words 'twenty-sixth year''.

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டது.

முகப்புரை, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :—

'' பிரிவு 1, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் படவேண்டும் ''.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர் களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன் :—

" In clause 1, in sub-clause (*1*) the figures '1974' *substitute* for the figures '1975'.

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, திருத்தப்பட்டபடி பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1974-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் " என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப் பட்டது.

(ஊ) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள், சிறு இனாம்கள் (ஒழித்தல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 61/1974).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இனாம்எஸ்டேட்டுகள், சிறு இனாம்கள் (ஒழித்தல்——ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 61/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும் "

என்று நான் முன்மொழிகிறேன்.

மேற்சொன்ன சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் ஒவ்வொன்றும் வழக்கு ஒன்றை அல்லது மேல் முறையீடு ஒன்றை விசாரணை செய்யும்போது, 1908-ஆம் ஆண்டு சிவில் நடைமுறை விதிக் கோவையின் கீழ் (மத்தியச் சட்டம் 5/1908) சிவில் நீதிமன்றம் ஒன்றில் நிலைப் பெற்றுள்ள அதே அதிகாரங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதற்கு தமிழ்நாடு 1963-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழித்தல்-ரயத்துவாரி யாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 8-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவும், தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1963) 7-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவும் வகை செய்கின்றன. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்கள் (ஒழித்தல்-ரயத்துவாரி

* 23-12 1974-ஆம் தேதி தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.







யாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 46-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழும் தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழித்தல்-ரயத்துவாரி யாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1963) 30-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழும் சிறப்பு மேல் முறையீட்டு நடுவர் மன்றத்திற்கு இதே போன்ற அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1908ஆம் ஆண்டு சிவில் நடைமுறை விதிக் கோவையின் (மத்தியச் சட்டம் 5/1908) 51(d) பிரிவும், 1-வது விதியின் 40-வது ஆணையும் சொத்து நிர்வாகி (Receiver) ஒருவரையும், மேற்சொன்ன விதிக்கோவையின் 26-வது ஆணை கமிஷனர் ஒருவரையும் நியமிப்பதற்கு வகைசெய்கின்றன. பல வழக்குகளில் நடுவர் மன்றங்கள் நிர்வாகிகளை நியமிப்பதால் நிலத்தைப் பயிரிடுபவர்களுக்கு நிலத்தில் சுவாதீனம் இல்லாமற் போகிறது என்று முறையீடு செய்யப்பட்டுள்ளது. உண்மையில் நிலத்தைப்பயிரிடுபவர்களுக்கு இதனால்இடையூறு ஏற்பட்டுள்ளது. எனவே, நடுவர் மன்றம் அல்லது பிற அதிகார மன்றத்தின் முன் ஒரு நிலம் குறித்து நடவடிக்கை எதுவும் முடிவு பெறாத நிலையில், அத்தகைய நடுவர் மன்றம் அல்லது பிற அதிகார மன்றம் சொத்து நிர்வாகியையோ அல்லது கமிஷனரையோ நியமிக்கக் கூடாது என்று அரசு முடிவு செய்துள்ளது. மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க இச்சட்ட வரைவு விழைகிறது.

சட்டம் இயற்றுவதற்கான விதிமுறை சிறுதலைப்பு, 2 (3), 3 (3), பகுதிகள் ஆகியவற்றிற்கு திருத்தங்கள் இச்சட்ட முன் வடிவை பகுதி பகுதியாகப் பரிசீலனை செய்யும்போது முன் மொழியப்படும்.

இச்சட்ட முன்வடிவினை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இனாம் ஒழிப்புச் சட்டத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களையும் சிரமங்களையும் போக்கி உண்மையில் உழைக்கிற சாகுபடிதாரர்களுக்கு உரிமை அளிக்கின்ற விதத்தில் இன்றைக்கு இந்த மசோதவை இந்த அவையில் கொண்டு வந்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

குறிப்பாக, இந்த இனாம் கிராமங்களில் வழக்குகள் நடக்கிறபோது ரிஸீவரை நியமிப்பதால் அல்லது நடுவர் மன்றம் வைப்பதால் காலதாமதம் நேரிடுகிறது. என் தொகுதியில், சீர்காழியில் மருவத்தூரில் ஆண்டாண்டு உழைத்து வந்த விவசாயிகள் ரிஸீவருக்கு கட்டுப்படாததால் அவர்களைக் கைது செய்து நெல் அளக்க வேண்டும் என்று கட்டளை இடப்பட்டது. நெல் அளக்காததால் அவர்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டு, இன்று விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இப்போது இந்த மசோதாவில் ரிஸீவர் நியமனம் செய்வதை ரத்து செய்யவேண்டும் என்று கொண்டு வந்திருப்பது ஏழை விவசாயிகள் வாழ வகை செய்யும். குறிப்பாக இன்று தர்மபுரம் ஆதீனத்தில் ஏறத்தாழ 1,500 விவசாயிகள் பத்தாண்டுகளாக வாய்தா பணம் கட்டச் சென்றாலும் அல்லது கிஸ்தி கட்டச் சென்றாலும் கட்டக் கூடாது என்று தடுத்து நிறுத்தி, நெல் வசூலிக்க வேண்டுமென்று ரிஸீவர் நியமிக்கப்பட்டு விவசாயிகள் கைது செய்யப்படும் நிலைமை எல்லாம் ஏற்பட்டது.

விவசாயப் பிரச்னையில் போலீஸார் தலையிடக்கூடாது என்றிருந்தாலும் பாதி பாதி நெல் அளவுங்கள் என்று போலீஸாரால் வற்புறுத்தப்பட்டது. சர்க்கார் இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்போவதாகக் கேள்விப் படுகிறோம், ஆகவே அதுவரையில் தலையிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டோம். அப்படியிருந்தும் கட்டாயமாக நெல் அளக்க வேண்டும் என்று போலீஸ் இலாகாவினர் சொல்கிறார்கள். இதனால் மருவத்தூர் கிராமத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில் வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்கி எந்தெந்த இலாகாக்கள் எப்படி எப்படி வழக்குகளை பைசல் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட காலதாமதம் இல்லாமல் பட்டா வழங்குவதற்கு துரிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். இதன் ஆப்ஜக்ட் நிறைவேற வேண்டுமென்றால்—இந்த பூமி சர்க்காருக்கு சொந்தம்.

Mr. Deputy Speaker: You have given an amendment also. நீங்கள் அமென்ட்மென்ட் மூவ் செய்கிறீர்களா ?



திரு. என். கே. பழனிசாமி : இல்லை. ரிஸீவர் என்ற முறையில் குத்தகைதாரர்களிடம் ரிக்கார்ட்ஸ் இல்லை என்பதால் பல பேர்கள் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். எனவே, இதைத் தடுக்கக்கூடிய முறையில் ரிஸீவர் கூடாது. கமிஷனர் கூடாது என்று திருத்தம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன்.

சிவில் ப்ரொஸிஜர் கோட் படி சிவில் கோர்ட்டுக்குப் போகலாம் என்றிருக்கிறது. சிவில் கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று இருந்தால்தான் இந்த மசோதாவின் நோக்கம் நிறைவேறும். இல்லாவிடில் இந்த மசோதாவினால் பயன் இல்லை. நிலச்சொந்தக்காரர்கள் சிவில் கோர்ட்டுக்குப் போக வழியிருக்கிறது. எனவே, சர்க்கார், சிவில் கோர்ட்டுக்குப் போக முடியாத அளவில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தால்தான் இந்த மசோதாவின் எண்ணம் நிறைவேறும்.

[மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை]

குத்தகை பாக்கிக்காக வெளியேற்றலாம் என்றிருக்கிறது. கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்டை அப்ளை செய்தால் போதும். குத்தகை பாக்கிக்காக யாரையும் வெளியேற்றக் கூடாது என்ற முறையிலும் இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, நான் இனாம் எஸ்டேட்டுகள்—சிறு இனாம்கள் (ஒழித்தல்–ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட கிராமங்களில் விவசாயிகளுக்கு உள்ள கஷ்டங்களைத் தெரிந்து ரிஸீவரைப் போடக்கூடாது, கமிஷனரை நியமனம் செய்யக் கூடாது என்று சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கதுதான். இருந்தாலும் இந்தச் சட்டத்தில் இன்னும் என்ன குறைபாடு இருக்கிறது என்பதை மேலும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். 12 ஆண்டுக் காலமாக இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் ட்ரிப்யூனல் மூலம் ரிஸீவர் போடக்கூடாது என்று சட்டம் கொண்டுவந்திருக்கிறோம். ஆனால் சிவில் ஸூட் மூலம் கமிஷனரை நியமனம் செய்யலாம் என்றிருக்கிறது. அதையும் இந்த நேரத்தில் பரிசீலனை செய்ய வேண்டும். சிவில் ஸூட் போட்டாலும் கமிஷனரைப் போடக்கூடாது. இதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தைப் புரிந்துகொண்டு உறுப்பினர்கள் வரவேற்பைத் தெரிவித்தார்கள். இதில் சில மாற்றங்கள் செய்யவேண்டும் என்ற கருத்தையும் சில உறுப்பினர்கள் தெரி

வித்திருக்கிறார்கள். உழவர்களுக்காக வேண்டி எந்தவிதமான திருத்தத்தையும் உரியநேரத்தில் தேவைப்படுகிறபோது கொண்டு வந்து அவை நிறைவேற்றப்படும் என்பதைக் கூறி இதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள்—சிறு இனாம்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.',

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' பிரிவு 2 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும் ''.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:—

"In sub-section (3) of the new section 72-A, proposed to be inserted by sub-clause (3) of clause 2, *for* the figures '1974' *substitute* the figures '1975'."

திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

...ாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: '' பிரிவு 3 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்.''

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:—

"In sub-section (3) of the new section 47-A, proposed to be inserted by sub-clause (3) of clause 3, *for* the figures '1974', *substitute* the figures '1975'."



திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு **விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.**

முகப்புரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' முகப்புரை, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்.''

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:—

'In the enacting formula, for the words 'Twenty-fifth Year', substitute the words 'Twenty-sixth Year.'

திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

முகப்புரை, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' பிரிவு 1 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்.''

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

"In clause 1, in sub-clause (1), for the figures '1974', substitute the figures '1975'.

திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

1975 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள்—சிறு இனும்கள் (ஒழித்தல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/74), திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் '' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவ, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஏ) தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு நில ஆக்கிரமுப்பு (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்ற பேரவை ச்ட்ட முன் வடிவு எண் 6/75)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்டமன்றப்பேரவைச் சட்டமுன்வடிவு* (சட்டமன்றப்பேரவைச் சட்ட முன்வடிவு எண் 6/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் '' என முன்மொழிகிறேன்.

அரசு நிலம் ஒன்றை உரிமையின்றி அனுபவித்து வருபவரை, வருவாய்த்துறை அதிகாரிகளும், '' அதிகாரம் பெற்ற அதிகாரி '' எனப்படும் மாநில அரசால் உரிமையளிக்கப்பட்ட அதிகாரியும், தமிழ்நாடு 1905 ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1905) 6-வது பிரிவிற்கிணங்க வெளியேற்ற லாம்.

பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை—கிராமப் பணிகள் துறை ஆகிய இத்துறைகளின் பொறுப்பிலுள்ள நிலங்களைப் பொறுத்த மட்டில், அவற்றில் ஏற்படும் நில ஆக்கிரமிப்புகளை வெளியேற்று வதற்கான நடவடிக்கைகளை எடுக்க மேற்கூறிய துறைகளின் உதவிப் பொறியாளர்களுக்கு மேற்சொன்ன விதித்துறையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதிகாரம் பெற்ற அதிகாரியின் எந்தவொரு முடிவு அல்லது ஆணைக்கு எதிராகவும் மேற்சொன்ன சட்டத்தின் 10-வது பிரிவிற்கிணங்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். அதிகாரம் பெற்ற அதிகாரி பிறப்பிக்கும் எந்த முடிவையும் அல்லது ஆணையையும் மாவட்டஆட்சித் தலைவரும், வருவாய்த்துறை வாரிய மும் மாற்றியமைக்கலாம். வருவாய்த்துறை வாரியம் செய்த முடிவு அல்லது ஆணையைத் திருத்தியமைக்கும் உரிமை மாநில அரசிடம் உள்ளது. அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் முடிவு களுக்கும், ஆணைகளுக்கும் எதிராகச் செய்யப்படும் மேல்முறை யீடுகள், மறு ஆய்வு மனுக்கள் ஆகியவற்றை விசாரணை செய்யும்

* 8-3-1975ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியி டப்பட்டுள்ளது.



1975 ஏப்ரல் 16] [திரு. அ. பெ தர்மலிங்கம்]

பணியை உதவி கலெக்டர் மீதோ, மாவட்ட ஆட்சித் தலைவரின் மீதோ, வருவாய் வாரியத்தின் மீதோ சுமத்துவது அவசியமானது அல்ல; விரும்பத்தக்கது மல்ல என்று கருதப்படுகிறது.

எனவே, அதிகாரம் பெற்ற அதிகாரிகள் எந்தத் துறைகளைச் சார்ந்துள்ளனரோ அந்தத் துறைகளிலுள்ள மேலதிகாரிகளுக்கு மேல் முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரங்களை வழங்கு வதும், அதுபோன்ற மேல் முறையீட்டு அதிகாரிகளின் முடிவுகளை யும் ஆணைகளையும் மறு ஆய்வு செய்வதற்கான அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்குவதும் அவசியமானதென்று கருதப்பட் டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான நிலத்தை ஒருவர் உரிமையின்றி அனுபவித்து வருவதாக அனைவருக்கும் தெரிந்திருந்தால், அந்த நபர் மீது இச்சட்டத்தின் 6-வது பிரிவிற்கிணங்க ஏன் நடவடிக்கை தொடரப்படக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டும்படிக்கான அறிவிப்பு ஒன்றை அவருக்குக் கொடுக்க, வருவாய்த்துறை அதிகாரி களோடு, பிரிவு அலுவலர் பதவித் தரத்திற்குக் குறையாதவரும் அதிகாரம் அளிக்கப் பெறாத அதிகாரியாகவுள்ள நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த ஓர் அதிகாரிக்கும் இச்சட்டத்தின் 7-வது பிரிவின் கீழ் அதிகாரம் அளிக்கப்படலாம். அவ்வாறு காரணம் கேட்கும் அறிவிப்பை அனுப்புவதற்கான அதிகாரத்தை ஏனைய துறைகளின் அதிகாரிகளுக்கும் வழங்க வேண்டும் என்பது அவசிய மெனக் கருதப்படுகிறது. அதற்கென அத்தகைய அதிகாரிகளைக் குறிப்பிடுவதற்கான அதிகாரத்தை மாநில அரசு பெற்றிருக்க வேண்டும்.

மேற்சொன்ன நோக்கங்களுக்காக, தமிழ்நாடு 1905 ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமெனக் கருதப்படுகிறது.

எனவே இப்பிரேரணையை ஏற்குமாறு இப்பேரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த நில ஆக்கிரமிப்பைத் தடைசெய்கிற வகையில் அவர்களை வெளியேற்ற வகைசெய்யும் வகையில் இந்த மசோதா கொண்டு வந்து இருக்கிறார்கள்.

நில ஆக்கிரமிப்பு பற்றிய நிலைமைகளைப் பார்க்கிறபோது, கிராமங்களைவிட நகரங்களில் தான் இது ஒரு பெரிய பிரச்னையாக உருவாகிக்கொண்டு இருக்கிறது. நிலத்தை ஆக்கிரமிப்பு செய்கிற நேரத்தில், ஆரம்பத்திலேயே அவர்களை அகற்றி விட்டால் அது பெரிய பிரச்னையாக வளருவதற்கு இடம் இல்லை. கொஞ்ச நாள் கழித்து, ஓராண்டு, ஈராண்டு, அவர்களை அந்த இடத்தில் இருந்து குடியேறி அவர்கள் வாழ்க்கை நடத்திக்கொண்டு இருக்கிறபோது, அவர்களை அந்த இடத்திலிருந்து அகற்றுகிற சூழ்நிலை வருகிற போதுதான் அது பெரிய பிரச்னையாக உருவாகிக்கொண்டு இருக்கிறது.

அப்படி அவர்களை வெளியேற்ற நடவடிக்கைகள் எடுக்கிற போது, அவர்கள் ஆர்.டி.ஓ., டி.ஆர்.ஓ.விடமிருந்து ஸ்டே வாங்கிக்கொண்டு அதில் மேலும் கொஞ்ச நாள் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். இப்போது அந்த வகையில் அப்பீல் செய்யும் முறை இருக்கிறது. அந்தந்த இலாகா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அதை மாற்றித்தருகிற காரணத்தால், அந்த மக்களுக்குக் கிடைக்கும் சில வாய்ப்பு வசதிகள், சலுகைகள், குறைந்து போகின்றன. இப்போது இருப்பதைப் போலவே, டி.ஆர்.ஓ.விற்கு அப்பீல் செய்யும் முறை இருக்குமானால், அவர்களுக்கு நீதி கிடைக்கும் என்பது மட்டுமல்ல, கொஞ்ச நாளைக்கு அவர்களுக்கு அந்த இடத்தில் வாழ்வதற்கு வாய்ப்பும் கிடைக்கும். இதை எடுத்து விட்டு குறிப்பிட்ட துறை அதிகாரிகளிடத்தில் தருவது என்றால், அவர்களிடத்தில் அப்பீல் செய்து கொள்வது என்பது ஒரு கண்துடைக்கும் வேலையாக இருக்குமே தவிர, எந்தவிதமான நன்மையும் கிடைக்காது.

கலெக்டரோ, டி.ஆர்.ஓ.வோ பலவிதமான வழக்குகளை விசாரிக்கிறார்கள். அவர்களுக்கு இந்த கேஸ்களை கவனிப்பதில் கஷ்டம் இருக்காது. அவர்களெல்லாம் ஒரு நீதிபதி ஸ்தானத்தில் இருந்து செயல்படுகிற காரணத்தால் நிச்சயமாக நல்ல வகையில் நியாயம் கிடைக்கும். ஆகவே, அந்த அப்பீல்களை விசாரிக்கும் உரிமை அவர்களுக்கே இருக்க வேண்டுமென்று கூறி, இப்போது கொண்டு வந்திருக்கிற மசோதா ஆக்கிரமிப்பாளர்களுக்கும் மிகுந்த கஷ்டத்தை ஏற்படுத்தும் என்பதால் இதை நான் எதிர்க்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கும் மசோதாவானது மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் இப்போது இருக்கும் வேலை பளுவைக் குறைப்பதற்கு அந்தந்த இலாகாவில் இருக்கிற மேல் அதிகாரிகளுக்கு ‘அப்பீல் மனு’ செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. இந்த அப்பீல் மனுவின் மீது குறைகளைக் கேட்பதற்கு அதிகாரம் மற்ற இலாகா அதிகாரிகளுக்கு இல்லாமல் அந்தந்த இலாகா அதிகாரிகளுக்கே வழங்கப்படுகிறது. அந்த



அதிகாரம் இது வரையில் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் இருந்தது. இப்போது மற்ற இலாகா அதிகாரிகளுக்குக் கொடுப்பதால், எந்த அளவுக்குப் பொது மக்களுக்கு பாதகம் ஏற்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

சாதாரணமாக வருவாய்த் துறையில் இருக்கும் அதிகாரிகள் தான் குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தான் மக்களோடு அதிகமாக நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். எல்லா அலுவலகங்களையும் எடுத்துக்கொண்டால் அவற்றையெல்லாம்விட மக்கள் தொடர்பு உள்ள அலுவலகம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் தான் என்பதை நாம் நிச்சயமாக மறந்துவிட இயலாது.

இந்தச் சூழ்நிலையில் ஏழை மக்கள் என்க்ரோச்மெண்ட் செய்கிற நேரத்தில், அவர்களை அகற்ற வேண்டுமென்று அரசாங்கம் நினைக்கிறநேரத்தில், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறபோது, அவர்களுக்கு சற்று தயவு காட்டும் நிலை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

சாதாரணமாக நில ஆக்கிரமிப்பு செய்பவர்கள் நிலம் அற்ற ஏழைகள் தான். அவர்கள் தான் அரசாங்கத்தின் நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்கிறார்கள். சிலர் அந்த இடத்தில் விவசாயம் செய்து இருக்கிறார்கள்; அல்லது குடியேறியிருக்கிறார்கள். அப்படியிருக்கிற நேரத்தில், அவர்களை அங்கேயிருந்து அகற்ற வேண்டுமானால் பி.டபிள்யூ.டி.யாக இருந்தால் அவர்களுக்கு ரோடு போட வேண்டுமென்ற நோக்கம் முக்கியமாக இருக்குமே தவிர, மற்றவைகளை அவர்கள் கவனிக்க மாட்டார்கள். அப்போது என்ன ஏற்படும் என்றால், அங்கேயிருப்பவர்களை அங்கேயிருந்து எப்படியும் அகற்ற வேண்டும் என்று பார்ப்பார்கள். வருவாய்த் துறையிடம் அந்த அதிகாரம் இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு மாற்று இடம் தருவார்கள். அல்லது வேறு வழிவகை செய்து கொடுப்பார்கள். அல்லது அவர்களுக்கு நேரம் சற்று கொடுத்து வேறு வழி செய்து கொள்ளச் செய்வார்கள். ஆனால் இந்தமாதிரி வசதிகள் எல்லாம் அந்தந்த இலாகா அதிகாரிகளிடத்தில் இந்த அதிகாரம் மாற்றப்படுவதால் அவர்களுக்குக் கிடைக்காது என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

வருவாய்த் துறையில் இருக்கும் புறம்போக்கு நிலங்கள்—எங்கள் மாவட்டத்தில் வன இலாகா பக்கத்தில் இருப்பதால் சில பிரச்னைகள் இருக்கின்றன. அந்த நிலங்கள் வருவாய்த் துறைக்குச் சம்பந்தமானது தான் என்று சொல்வதற்கு ரிகார்டுகள் எல்லாம் இருக்கின்றன. அதற்கு ரிகார்டு வருவாய்த் துறையிடம் இருந்தாலும் கூட, வன இலாகா அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

வன இலாகாவிற்குச் சொந்தம் என்றுதான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இதனால் வனத் துறைக்கும், வருவாய்த் துறைக்கும் இடையே பல்வேறு தகராறுகள் இருக்கின்றன. அது குறித்து வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன்.

வருவாய்த் துறைக்கு புறம்போக்கு நிலம் சொந்தமாக இருந்தால், நிச்சயமாக அது மற்ற இலாகாவிற்குச் சொந்தமாக இருக்க முடியாது. அது வருவாய்த் துறையிடம் வழங்கப் படுமானால், அங்கேயுள்ளவர்களுக்கு அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க வசதியாக இருக்கும். வருவாய்த்துறை புறம்போக்கு நிலமாக இருந்தால் அதை பட்டா செய்து கொடுக்கலாம் என்று அரசாங்கத்தின் கொள்கை இருக்கிறது. ஆகவே, இதில் மற்ற இலாகா குறுக்கிடக்கூடாது என்று தெரிவித்துக் கொண்டு, அவர்களுக்குப் பட்டா வழங்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக மனுகூட கொடுத்து இருக்கிறேன். ஆகவே, அவற்றை மனதில் கொண்டு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, நில ஆக்கிரமிப்பு தடை செய்யும் வகையில் இங்கே சட்டத் திருத்தம் கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்த நில ஆக்கிரமிப்பு தடைச் சட்டத்திலே பல நடைமுறை சிக்கல் இருப்பதை நாம் பார்க்கிறோம். பல இடங்களில் நிலம் இல்லாத ஏழை அரிஜனங்கள், முன்னாள் ராணுவ வீரர்கள் நிலத்தை ஆக்கிரமித்து இருக்கிறார்கள். காரணம், அவர்களுக்குப் பிறகு அந்த நிலம் ஒப்படை செய்யப்படும் என்ற காரணத்தால். எப்படியும் பட்டா கிடைத்து விடும் என்ற நம்பிக்கையில் அவர்கள் அப்படிச் செய்து இருக்கிறார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நம்முடைய கொள்கைப்படி, எக்ஸ்-சர்வீஸ்மென்னாக இருந்தால் அவர்களுக்கு 1½ ஏக்கர் நஞ்சையும், 3 ஏக்கர் புஞ்சையும் ஒப்படை செய்யலாம் என்று இருக்கிறது. அப்படி விதி இருக்கிற காரணத்தால், அந்த நிலங்களை அவர்களுக்கு ஒப்படை செய்வது தான் முறை.

அப்படிச் செய்யாமல் அவர்களை வெளியேற்றிவிட்டு, வேறு ஒருவருக்கு அதைக் கொடுப்பது என்றால் அதில் பலவிதமான சிக்கல் ஏற்படும். இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வருகிற போது, இதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்ற முறையில், அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கும் நாம் அவசியம் முன் வரவேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.



(பிற்பகல் 1-00)

ஏனென்றால், எங்களுக்குத் தெரியும் வக்கீல்களுக்கு எப்படி சிக்கலான என்குரோச்மென்ட் கேசு வரும் என்று. It will be assigned to somebody else என்பார்கள். இருக்கிறவர்களை வெளியேற்றி விட்டால் தானே இன்னொருவருக்கு ஒப்படைக்க முடியும். அப்படி வெளியேற்றப்பட்டவன் கோர்ட்டிற்கு வக்கீல்களை வைத்து அலைந்து திரிந்து செலவழிக்க வேண்டியிருக்கிறது. இம்மாதிரி சங்கடங்கள் எல்லாம் என்குரோச்மென்ட் ஆக்டிலே இருக்கிறது. இதை எல்லாம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அப்படி அவர் கவனித்து விட்டால் ஏழைகளைத் திண்டாட வைக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று நினைக்கிறேன்.

இன்றைக்குக் கொண்டு வந்திருக்கின்ற சட்டம் ஹைவேஸ், ரூரல் ரோட்ஸ் போன்ற இடங்களிலே டீக் கடை மற்ற கடைகளை போட்டுவிடுகிறவர்களை அப்புறப்படுத்துவதற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள். கொஞ்ச நாளைக்கு முன்னால் தாம்பரத்திலே ரோடே குறுகிவிடும் அளவிற்கு ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டு, அதை ரொம்ப நாளைக்கு வேடிக்கை பார்த்திருந்த பிறகு, கடப்பாரையை கொண்டு வந்து உடைத்தார்கள். எனவே அப்படி வேடிக்கை பார்க்க வேண்டாம். அவ்வப்பொழுது எங்கெங்கே என்குரோச்மென்டைப் பார்த்தாலும் அதை நீக்க வேண்டும்.

சாதாரணமாக ரெவின்யூ இலாக்காவிற்குத் தான் அப்புறப்படுத்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஹைவேஸ் என்றாலும், ரூரல் ஓர்க்ஸ் ரோடு என்றாலும் கலெக்டர் நோட்டீஸ் கொடுத்துதான் கடையை அப்புறப்படுத்த வேண்டும். போக்குவரத்துக்கு இடையூறு இருக்கக்கூடாது என்ற நல்ல எண்ணத்தினால்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள், அதை நான் வரவேற்கிறேன்.

ஆனால், கலெக்டர் அதிகாரத்தை வாங்கிக் கொள்வதிலே கஷ்டம் இருக்கிறது. இதை எப்படி நீங்கள் நிவாரணம் செய்ய வேண்டுமானால், ஜூனியர் என்ஜினியர், செக்ஷன் ஆபீசர் என்று போட்டிருக்கிறீர்கள். அவர் வெளியேற்றினால் " you must appeal to such and such authority within 30 days." என்று அந்த என்குரோச்மெண்ட் ஆர்டரிலேயே எழுத வேண்டும். அந்த ஆர்டரைப் பெறும் ஒருவர், குறிப்பிட்ட அதிகாரியைத் தேட முடிவதில்லை. ஹைவேஸ் என்றால்; ரூரல் ஓர்க்ஸ் என்றால் எந்த செக்ஷன் ஆபீசர் மீது அவன் கேசு போடுவது? அந்த அதிகாரிகளைக் காண சுற்றித் திரிந்துகொண்டிருக்கும் பொழுது அப்பீல் டைம் அவனுக்கு போய்விடும். அப்பீல் போட முடியாது. Foreign exchange, Collectors of Customs, Collectors of Excise

போன்றவர்களுக்கு அப்பீல் கொடுப்பது பற்றி "The appeal lies to such and such authority within 30 days from the date of the receipt of the Order'' என்று அந்த ஆர்டரிலேயே குறிப்பிடுகிறார்கள். தயவுசெய்து உங்கள் இலாக்காவிற்கு இதை நீங்கள் இன்ஸ்ட்டாக்ட் பண்ண வேண்டும்.

சட்டத் திருத்தம் கொண்டு வருவது பெரிதல்ல. எவிக்ஷன் ஆர்டர் போட்டால் அவர்கள் யாருக்கு அப்பீல் பண்ண வேண்டும் என்று அந்த ஆர்டரிலேயே போட வேண்டும். அப்பொழுதுதான் இந்தச் சட்டம் மக்களை பாதிக்காமல் இருக்கும். நீங்கள் செக்ஷன் ஆபீசரை போட்டால், அவன் பி. டபிள்யூ. டி. ஆபிஸ் எங்கே இருக்கிறது, நேஷனல் ஹைவேஸ் எங்கே இருக்கிறது என்று கண்டு பிடிப்பதற்கே நேரம் போதாது. எனவே, நீங்கள் இந்த அட்ரசில் அந்த ஆபிஸ் இருக்கிறது என்பதையும் அதிலே குறிப்பிட வேண்டும். அந்த ஆபீசருக்கு நீங்கள் அப்பீல் போட வேண்டும் என்று இத்தனையும் அந்த ஆர்டரிலே இருந்தால் தான் உண்மையிலேயே வெளியேற்றப்படக் கூடியவன் அநியாயமான ஆர்டரை எதிர்த்து போராட முடியும். இதை எல்லாம் நீங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டு, எனது வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் இது பல ஆண்டுகளாக பல்வேறு கருத்தரங்குகள் நடைபெற்ற இடங்களிலே எல்லாம் இம்மாதிரியான ஒரு மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கருத்து கூறப்பட்டு வந்திருக்கிறது. அந்தக் கருத்தை அடிப்படையாக வைத்து மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று தான் நான் கருதுகிறேன்.

இதிலே முன்னாலே பேசிய உறுப்பினர்கள் கூறியதைப் போல் பல்வேறு இடங்களிலே ரோடு, குளங்கள் போன்றவற்றை ஆக்கிரமித்து வரக் கூடிய நிலமற்ற விவசாயிகள் பல பேர் அதை ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள். அவர்களை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு ரெவின்யூ டிபார்ட்மென்டிற்குத் தான் அதிகாரம் இருந்தது. மற்ற டிபார்ட்மென்ட்டிலே இருப்பவர்களுக்கு அதிகாரம் இல்லை. எதற்கெடுத்தாலும் ரெவின்யூ ஆபீசரைப் பார்த்து தான் செய்ய வேண்டும் என்று இருந்ததால், அவர்கள் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாமல் இருந்தது.

அந்த நிலையைப் போக்கக் கருகிதான் இந்த மசோதாவைக் கொண்டுவந்தாலும் கூட, நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னவென்றால் ரோடு ஓரத்திலே குடியிருக்கிறார்கள் என்றால், இருப்பதற்கு வழி வகை இல்லாத நிலைமையில் தான் அவர்கள் இருக்கிறார்கள். ரோடை ஆக்கிரமித்து இருப்பதை



நியாயம் என்று நான் இங்கே சொல்லவரவில்லை. அவர்களுக்கு ஒரு வழி இல்லாத காரணத்தினால் அதிலே அவர்கள் குடி இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை நாம் அப்புறப் படுத்தும் பொழுது அவர்களுக்கு மாற்று வசதி செய்து கொடுத்து, அவர்களை அப்புறப்படுத்துவதற்கான முயற்சியில் நாம் ஈடுபட வேண்டும். நான் பல இடங்களிலே பார்க்கிறேன். இம்மாதிரி குடி இருந்தவர்களை நாம் அப்புறப்படுத்துவதன் மூலம் தெருவிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்களையும் நாம் பார்க்கிறோம். அவர்களுக்கு மாற்று இடங்களுக்கு வழி வகை செய்தாக வேண்டும்; அந்தப் பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது. அதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஹைவேஸ் ரோடு சம்பந்தப்பட்ட வரையில் என்ஜினியர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறோம். குளங்கள் போன்றவற்றிற்கு பி.டபிள்யூ.டி., பஞ்சாயத்து போன்றவற்றிற்கு ரெவின்யூ டிபார்ட்மென்டைத்தான் அணுக வேண்டியிருந்தது. டிவிஷனல் பஞ்சாயத்து ஆபீசர், அல்லது பஞ்சாயத்து எக்ஸ்டன்ஷன் ஆபீசர் போன்றவர்களுக்கு பஞ்சாயத்து ரோடுகளை ஆக்கிரமிப்பதை காலி பண்ண அதிகாரம் கொடுக்க வேண்டும். திரும்பவும் அவர்கள் ரெவின்யூ டிபார்ட்மென்டைப் போய் அணுக வேண்டியதில்லை என்ற நிலைமையில் அதையும் அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தத்திலே கொண்டு வரவேண்டும். அப்படிச் செய்தால் அந்தப் பிரச்சினையும் தீர்ந்துவிடும்.

அப்படிச் செய்யும் பொழுதும் கவர்ன்மென்ட்டுக்குத் தான் அப்பீல் செய்ய வேண்டும் என்ற கருத்து கூறப்பட்டிருக்கிறது. அப்படி அப்பீல் பண்ண காலதாமதம் ஆவதால் இம்மாதிரி வைத்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். சாதாரணமாக ஒரு விவசாயி தனக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டதாகக் கருதுவானானால் சென்னைக்கு வந்து தன்னுடைய அப்பீலை மறு விசாரணை செய்ய வேண்டும் என்று சொல்லுவது சாத்தியமில்லை. அவன் பணம் தயாரித்துகொண்டு வந்து அப்படிச் செய்வது முடியாத காரியமாகும். அவன் நியாயமற்ற நிலையில் இது செய்யப்பட்டது என்று கருதினால் அதற்கு விமோசனம் கிடையாது. ஆகவே, எந்த நிலையிலும் மாவட்ட அளவிலே ஒரு அப்பீல் வைப்பதுதான் சிறந்தது. இம்மாதிரி எடுத்தவுடனே கீழ் மட்ட அதிகாரி செய்த முடிவிற்கு கவர்ன்மென்ட்டுக்குத்தான் அப்பீல் பண்ண வேண்டுமென்றால், வசதி உள்ளவர்கள் தான் வர முடியும். அப்பீல் செய்யும் உரிமை கலெக்டர் மட்டத்திலே மாவட்ட அளவிலே செய்தால் தான் நன்றாக இருக்கும். அரசு இதையும் ஏற்றுக்கொண்டு, இந்த மசோதாவில் திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச்சினை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, இந்த மசோதாவில் புதிதாக ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்டிலே இருக்கிற என்ஜினியருக்கு ஒரு புதிய அதிகாரம் தந்திருக்கிறார்கள். இந்த அதிகாரத்தில் அவர்களுக்கு ஏற்ற லீகல் நாலட்ஜ் இருக்காது என்ற ஆட்சேபணையின் அடிப்படையில்தான் என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் இங்கே எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக எக்ஸிகுடிவ் என்ஜினியர், அஸிஸ்டண்ட் என்ஜினியர் போன்றவர்கள் இருந்தாலும், செக்ஷன் ஆபீசர் ஒரு நோட்டீஸ் சர்வ் பண்ணுகிறார் என்றால், அப்படிப்பட்ட பெரிய என்ஜினியர்களை சாதாரண மக்களால் பார்க்க முடியாது. அவர்களுடைய வேலை எக்ஸிகுடிவ் ஒர்க். அவர்கள் அலுவலகத்திற்கு வருவதற்கு என்று குறிப்பிட்ட நேரம் கிடையாது. அது மட்டுமில்லாமல் எந்த இடத்திலே வந்து அப்பீல் செய்வது என்று பொது மக்களுக்குப் புரியாது. கலெக்டர் தான் அப்பலேட் அத்தாரிட்டி என்று இருந்தால் தான் பொருத்தமாக இருக்கும். அத்தோடு ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்டிலே இருக்கும் அதிகாரிகளுக்குத் ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டிலே இருக்கும் அதிகாரிகளுக்கு தருவதுத் போன்ற ஜுடிஷியல் ட்ரயினிங் தருவது இல்லை. அவர்களுக்கு ஜுடிஷியல் நாலட்ஜ் வருவதற்கு வாய்ப்பு இல்லை. எனவே, இலாக்காவிற்கே லீகல் அட்வைசர் போட வேண்டியிருக்கும். யாராவது ஒருவர் கொஞ்சம் சாமர்த்தியம் உள்ளவர் சிவில் கோர்ட்டிற்கு போனாலும் போகலாம். எனவே, ஏற்கனவே உள்ள மாதிரி இந்த உரிமையை ரெவின்யூ இலாக்காவிற்கே விட்டுவிட வேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்து, பேச்சினை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். இந்தச் சட்டப்படி சர்க்கார் இடமாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்து இடமாக இருந்தாலும் சரி, முனிசிபாலிட்டி இடமாக இருந்தாலும் சரி அதிலே ஏதாவது தடங்கல் இருக்கிறது என்று சொன்னால் முதலிலே ''பி'' மெமோ போட வேண்டும். அதற்கு 3, 4 வருஷங்கள் ஆகும். ''பி'' மெமோ போட்டு பைன் கட்டி விடுவார்கள். பிறகு மறுபடியும் ''பி'' மெமோ போட வேண்டும். இப்படி 3, 4 தடவை போடும் பொழுது 5,6 வருடங்கள் ஆகிவிடுகின்றன.

ஆகவே, இந்த அவசியமான காரியத்திற்காக 6 வருஷம் வரையிலும் காத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த மசோதாவில் என்ஜினியர்களுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். உடனடியாக நிறைவேற்றுவதற்காக அதிகாரம் இந்த மசோதாவில் கொடுக்கப்



பட்டிருக்கிறது. அவர்கள் ஏதாவது தவறாக எவிக்ஷன் செய்தால் கலெக்டரிடம் அப்பீல் செய்யலாம் என்றுமிருக்கிறது. ஆகவே இதில் ஒன்றும் குறையில்லை. அப்படியே நிறைவேற்றிவிடலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

இந்த மசோதா கொண்டு வருவதற்குக் காரணம் திடீர் திடீர் என்று போக்குவரத்திற்கு இடையூறாக ரோடு ஓரங்களில் குடிசைகள் கட்டுவது தான் என்று நான் கருதுகிறேன். 1965-ல் நில ஆக்கிரமிப்புச் சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். அதற்கு திருத்தத்தை இன்று கொண்டு வந்திருக்கிறோம். அரசாங்க நிலம் என்று சொன்னால் தரிசாகக் கிடக்கும் நிலத்தை நிலம் இல்லாதவர்களும் ஆக்கிரமித்திருக்கிறார்கள், நிலம் இருக்கிற பெரியவர்களும் ஆக்கிரமித்திருக்கிறார்கள்.

ஆனால் எவிக்ஷன் செய்கிறபோது நிலமற்ற ஏழைகள் தான் மாட்டிக்கொள்கிறார்கள். பெரியவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். காலி செய்யச் சொல்லி நோட்டீஸ் வந்தவுடன் பெரும் பகுதிகளில் பாதிக்கப்படுபவர்கள் ஹரிஜனங்களாகத்தான் இருக்கும் என்று நான் அஞ்சுகிறேன். அதற்கு இடம் இல்லாமல் சட்டத்திற்கு உருவம் கொடுக்கிறபோது அப்பீல் ரைட் யாருக்கு உண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அம்மையார் சொன்னதைப் போல அப்பீல் பண்ணுவது செக்ஷன் ஆபீசர் எவிக்ஷன் நோட்டீஸ் கொடுத்தால் ஏ. ஈ.-க்கு அப்பீல் கொடுக்க வேண்டும். ஏ. ஈ. நிராகரித்தால் டி. ஈ.-க்கு கொடுக்க வேண்டும். அவர் நிராகரித்தால் கவர்ன்மெண்டுக்கு வரவேண்டுமென்று இப்படி விபரமாக இருக்க வேண்டும்.

தற்போது பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் பிரிண்ட் பண்ணியதை வைத்துக்கொண்டே நோட்டீஸ் கொடுக்கிறார்கள்.

இரண்டாவது, ஏழைகள் பாதிக்கப்படாத அளவிற்கு காலி செய்யப்பட்ட இடத்திற்குப் பதிலாக வெளியேற்றப்பட்டவர்களுக்கு வேறு ஒரு இடத்தை அரசாங்கம் ஏற்பாடு செய்து தரவேண்டும். அது ரெவின்யூ இலாகாவாக இருந்தாலும், ஹைவேஸ் இலாகாவாக இருந்தாலும் வேறு ஒரு இடத்தை ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று அரசாங்கத்திடம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, மாற்று இடத்தைத் தந்து விட்டு எவிக்ஷன் பண்ணுவதில் ஆட்சேபணையில்லை. அந்தமாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இரண்டே இரண்டு கருத்துக்களைக் கூற வேண்டுமென்று நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தில் பெருவழித்துறையில் இருக்கிற அதிகாரிகளும், பொதுப்பணித் துறையில் இருக்கிற அதிகாரிகளும் அதிகாரம் பெறுவதற்கு இந்தத் திருத்தம் வழி வகை செய்கிறது.

இப்போது ரெவின்யூ இலாகாவில் இருப்பவர்கள் தான் இந்தப் பணியைச் செய்கிறார்கள். ரோடு ஓரங்களில் ஏற்படுகிற ஆக்கிரமிப்புகள் அல்லது மற்ற ஆக்கிரமிப்புகள் இவைகளை அப்புறப்படுத்துவதற்கான வழிவகை செய்யவே இதைக் கொண்டு வந்ததாகக் கூறுகிறார்கள்.

ஆனால் அதை நடைமுறையில் அமுல்படுத்துவதில் சங்கடங்கள் இருக்கின்றன. செல்வச் சீமான்கள் நடைபாதையை அடைத்தால் அவர்கள் சட்டத்தின் சந்து பொந்துகளில் புகுந்து தப்பித்துக் கொள்ள முடிகிறது. ஆனால் ஏழை எளிய மக்கள் மாட்டிக்கொண்டு விடுகிறார்கள்.

அதுவும் குறிப்பாக எங்கள் பகுதியில் ஒரு சில இடங்களில் அந்தமாதிரி நிலை ஏற்பட்டுள்ளது. தடிக்காரன்கோணம் என்ற பகுதியில் 200-க்கு மேலான குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவைகளை 30, 40 வருஷ காலமாக அவர்கள் போட்டுக்கொண்டு, அங்கே வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். அந்தப் பகுதிக்கு அருகாமையில் இருக்கிற எஸ்டேட் உரிமையாளர்கள் எஸ்டேட்டில் களவு போகிறது, அதற்கு இந்த ஏழைகள்தான் காரணம் என்று சொல்லி, அதிகாரிகளைத் தூண்டிவிட்டு அவர்களைக் காலி பண்ணுவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். என்னைக் கேட்டால்—அந்த எஸ்டேட் ஓனர்கள் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள். அந்த நிலத்தில் ஏழைகளைக் குடி அமர்த்தலாம். அதற்கான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அருகாமையில் ஒரு எஸ்டேட் ஓனர் 90 ஏக்கருக்குப் பாத்தியதை இருந்த நேரத்தில் 900 ஏக்கர் என்று சொல்லி, வழக்கு ஏற்பட்டு இப்போது அது உச்ச நீதி மன்றத்தில் வழக்கில் இருந்து கொண்டிருக்கிறது. இதில் ஏழைகளுக்கு ஒரு நீதி, பணக்காரர்களுக்கு ஒரு நீதி என்ற நிலை இருக்கிறது. பள்ளக்குளம் எஸ்டேட் என்று சொல்கிற அந்த அதிபர் பல்வேறு எஸ்டேட்டிற்கு சொந்தக்காரராக இருக்கிறார் அந்தமாதிரி ஏற்படுகிற இந்த ஆக்கிரமிப்பை அகற்றுகிற நேரத்தில் வேறெந்த இடத்திலாவது அவர்கள் வாழ்வதற்கு மாற்று இடம் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று சுட்டிக் காட்டத்தான் இதை நான் சொன்னேன். இதிலும் குறிப்பாக பெரிய அதிகாரிகள் ஏதாவது தவறு செய்தால் அதை ரிவைஸ் செய்வதற்கான அதிகாரம் கவர்ன்மெண்டுக்கு இருக்கிறது என்பதையும் நாம் பரிசீலிக்க வேண்டும். ஆகவே ஏழைகளுக்குத் தொல்லையில்லாமல் இது அமுல்படுத்தப்பட வேண்டும். ஆனால் பணக்காரர்கள் யார் எதிர்த்தாலும் அதை அப்புறப்படுத்தி நாம் எல்லோரும் ஏழைகளுக்குப் பாடுபட வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டு, உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: சபாநாயகர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கிற ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதற்கான திருத்தச் சட்டத்தின் மீது என் கருத்தைச் சொல்கிறேன்.





இந்த வெளியேற்றுவதற்கான சட்டம் 1905-ல் இருந்து இருக்கிறது. இப்போது நாம் கொண்டு வந்திருக்கிற திருத்தம் ரெவினியூ இலாகா மாத்திரம் செய்தால் போதாது, வேறு சிலரும் அதிகாரம் பெறவேண்டும் என்ற முறையில் இங்கே கொண்டுவந்திருக்கிற காரணத்தால் இதில் பெருவாரியாக என்னுடைய பகுதி இருப்பதால் சுருக்கமாக உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று எண்ணுகிறேன்.

மேட்டூர் அணை கட்டுகிற காலத்தில் அங்கே இருந்த
நிலத்தை பொதுப்பணித்துறை நஷ்ட ஈடு கொடுத்து எடுத்துக்
கொண்டார்கள். அங்கே பொதுப்பணித்துறைக்கு சொந்தமான
நிலம் தான் இருக்கிறது. ரிசர்வாயருக்கு ஓரமாகவும் பொதுப்
பணித்துறைக்கு சொந்தமான நிலம் இருக்கிறது. அங்கே
உள்ள நிலத்தில் விவசாயம் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். வேறு
இடம் கிடைக்காதவர்கள் அங்கு தங்கள் வாழ்க்கையை
நடத்தி வருகிறார்கள். ஆகவே அம்மாதிரி இடங்களில் அப்புறப்
படுத்தும்போது ஆக்கிரமிப்பை இரண்டு விதமாகப் பிரித்துப்
பார்க்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். பழைய காலத்தில்
ஏராளமான நிலம் கிடந்தது. அங்கே தொழிற்சாலைகள்
இல்லாமல் இருந்தது. அப்போது காலியாக இருந்தது. ஆனால்
தொழிற்சாலைகள் வந்து, ஜனப் பெருக்கம் அதிகமான பின்னால்
ஆங்காங்கே காலியான இடத்தில் குடியிருப்பதற்கு வீடுகளை
ஏற்படுத்தித் தங்கி வருகிறார்கள். இப்படியிருக்கிற இடங்களில்
1954-ல் இருந்து ரெகுலரைஸ் செய்திருக்கிறார்கள். அங்கே
ஸ்பெஷல் ஆஃபீசர்கள் போடப்பட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிலத்திலிருந்து அப்புறப்
படுத்துவதா இல்லையா என்பது பிரச்னை இல்லை. அப்பீல்
பண்ணும் அதிகாரம் யாருக்கு என்பது தான் பிரச்னை. ஆகவே,
அதுபற்றி பேசுங்கள்.

திரு. எம். சுரேந்திரன்: எங்கு நமக்கு அவசியம் ஏற்படு
கிறதோ அதை மட்டும் எடுத்துக் கொண்டால் போதும்;
மற்றபடி தொல்லைகள் கொடுக்க வேண்டாம். அரசாங்கம்
இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதால் என்னென்ன நிலைமைகள்
ஏற்படும் என்பதை எடுத்துச் சொன்னால்தானே நல்லது. அப்
போதுதான் அதற்கான பரிகாரம் காணமுடியும். இல்லா
விட்டால் நானும் பேசினேன் இந்த மசோதாவில் என்றுதான்
இருக்கும். பிரயோஜனம் இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்புறப்படுத்த வேண்டு
மென்று இந்த மசோதாவில் ஒன்றும் சொல்லவில்லை; யாருக்கு
நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்றுதான் சொல்லப்பட்டிருக்
கிறது. அதுதான் இந்த சட்டம்.

திரு. எம். சுரேந்திரன்: இந்தத் திருத்தம் வந்ததால் நான்
சில கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏற்கனவே
கூட ஒரு சந்தர்ப்பத்தில் ரிசர்வாயர் பகுதியில் ஆக்கிரமித்துக்
கொண்டிருக்கிற வசதி படைத்தவர்களை வெளியேற்ற வேண்டு

மென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அது நடக்கவில்லை. காரணம் அங்கே ஏழை மக்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உரிமை கொடுக்க வேண்டுமென்றுதான் அப்படிச் சொன்னார்கள். அவர்களை அப்புறப்படுத்துவது என்பது அவ்வளவு சுலபமில்லை.

அப்புறப்படுத்தும் அதிகாரம் பொதுப்பணித் துறைக்கு இருந்தாலும், ஏழைகளுக்கு அந்த நிலத்தை ஒப்படைக்கும் நிலைமை இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கெடுதல் ஏற்படும். சட்டத்திற்கு விரோதமாக ஈடுபட வேண்டுமென்பது ஏழை மக்களின் நோக்கம் அல்ல. அதனால் அவர்கள் எந்த நிலையில் அந்த இடத்தில் குடியேறினார்கள் என்பதைப் பார்த்துச் செய்ய வேண்டும். சர்க்காருக்குத் தேவைப்பட்ட நிலங்களாகவோ அல்லது சர்க்கார் உபயோகத்திற்கு இடைஞ்சல் இருந்தாலோ அந்த நிலங்களை எடுத்துக் கொள்ளலாம். அப்படி எடுத்துக் கொள்ளும்போது ஆக்கிரமிப்பாளர்கள் ஒன்றுமே இல்லாத ஏழை மக்களாக இருந்தால் அவர்களுக்கு வேறு ஏதாவது மாற்று இடம் கொடுக்க வேண்டும். அவர்கள் எந்த வகையில் ஆக்கிரமிப்புச் செய்தார்கள் என்பதைப் பார்த்து, அதற்கு ஏற்ற பரிகாரம் தேடப்படவேண்டும்.

எங்கள் தலைவர் மாரிமுத்து அவர்கள் சொன்னதைப் போல நிலத்தைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் போது பல சங்கடங்கள் ஏற்படும். ஏழைகளால் நீதிமன்றத்திற்குப் போக முடியாது. அந்தச் சக்தி அவர்களுக்கு இல்லை. நீதி பெறுவதற்காக சட்டத்தை எடுத்து கையாள்கின்ற சக்தி படைத்தவர்கள்தான் நீதி மன்றத்திற்குச் செல்ல முடியும். அந்த சக்தி இல்லாதவர்களுக்கு இந்தச் சட்டத்தினால் எந்தவிதமான பயனும் இல்லை. இதையும் கருத்தில் கொண்டு, வேண்டியவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஆக்கிரமிப்புச் செய்தவர்களை அப்புறப்படுத்தும் அதிகாரம் நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் அந்தத் துறையின் அதிகாரிகளிடமும் மேலதிகாரிகளிடமும், அதைப் போலவே பொதுப்பணித் துறையைப் பொறுத்தவரையில் அதன் அதிகாரிகளிடமும் மேலதிகாரிகளிடமும் வழங்கப்பட வேண்டுமென்பது இந்தச் சட்டத் திருத்தத்தின் நோக்கமாகும். ஏற்கனவே அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஏதாவது பொதுப்பணித் துறை சம்பந்தப்பட்ட நிலமாக இருந்தால் அசிஸ்டண்ட் எஞ்சினீயரிடம் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. மேல் முறையீடு செய்வதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்தது. அவருக்கு மேல் போர்டு ஆஃப் ரெவின்யூ இருந்தது. அதற்குப் பதிலாக இந்தத் திருத்தத்தின் மூலம் பொதுப்பணித் துறையைச் சேர்ந்த மேலதிகாரிகளிடம் அதாவது டிவிஷனல் எஞ்சினீயர், சூப்பரிண்டிங் எஞ்சினீயர்களிடம் அதிகாரம் வழங்கப்படுகிறது. அதற்குமேல் போர்டு ஆப் ரெவின்யூக்குப் போகாமல் நேரடியாக அரசாங்



கத்திற்கு முறையீடு செய்ய வேண்டும். அதைப் போலவே பெருவழித் துறையிலும்செய்யப்படுகிறது. இப்படிச் செய்வதால் காலதாமதம் ஏற்படாமல் விரைவாகவும் உடனடியாகவும் தீர்வு காண வழி ஏற்படும். எப்போதுமே இறுதி முடிவு செய்வது அரசாங்கம்தான். அதைப் போலவே இப்போதும் இறுதி முடிவு எடுப்பது அரசாங்கம்தான்.

இடையில் இருக்கின்ற அதிகாரிகள் வழங்கும் தீர்ப்பில் திருப்தி இல்லை என்றால் அரசாங்கத்திற்கு அப்பீல் செய்யும் நிலைமை இருக்கிறது. ரிவியூ செய்யும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. இறுதி முடிவு அரசாங்கம்தான் செய்யும்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பல இடங்களைப் பற்றி சுரேந்திரன் அவர்களும், மற்றும் பல அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். ஆக்கிரமிப்பு எப்படி வந்தது என்று மேட்டூர் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேட்டூரில் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த போது, அங்குள்ள மக்கள் செய்த முறையீடுகளைக் கேட்டு, ரிசர்வ் ஃபாரஸ்ட் நிலங்களைப் பொறுத்தவரையில் அங்கு வாழ்கின்ற மக்களுக்கு உரிமை வழங்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். இருக்கின்ற நிலங்களை எல்லாம் மேலும் மேலும் ஆக்கிரமிப்பு செய்து கொண்டே போனால் அதற்கு ஒரு எல்லை இல்லாமல் போய்விடும். ஏற்கெனவே இருப்பவர்களை வெளியேற்றும்போது அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது நியாயமானதுதான். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறோம். ஆனால் அவர்கள் விரும்புகிற இடம்தான் வேண்டுமென்று கேட்கிறார்களே தவிர, அரசாங்கம் கொடுக்கிற இடங்களுக்குப் போக மறுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இப்போது வழிவகை செய்யப்படுகிறது.

ஏற்கெனவே பலர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னதைப்போல பெரிய செல்வச் சீமான்கள் கூட ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். பெருவழித் துறையைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆக்கிரமித்து, கட்டியிருந்த பெரிய மாடி வீடுகளை எல்லாம் கூட இடித்துத் தள்ளியிருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் ஈரோடு பகுதியில் பெரிய பெரிய மாடி வீடுகளை எல்லாம் இடித்துத் தள்ளி, ரோடுகளை அகலப்படுத்தி இருக்கிறார்கள். திருச்சியிலும் அப்படி பெரிய பெரிய மாடிவீடுகளை இடித்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் இன்றையதினம் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, மாநில சர்க்காரும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, பெரு வழிப்பாதைகளை அகலப்படுத்த இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே, பொதுப்பணித் துறை, பெருவழித்துறை நிலங்களைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்குமேல்

மேல்முறையீடு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் செய்ய வேண்டும் ; அதற்கு மேல் போர்டு ஆப் ரெவின்யூ இருந்தது. இறுதி முடிவு செய்வது அரசாங்கம் என்றிருந்தது. அதை எடுத்துவிட்டு, இப்போது சம்பந்தப்பட்ட துறை மேலதிகாரிகளிடம் மேல் முறையீடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; அதன் பிறகு இறுதி முடிவு செய்வது அரசாங்கம்தான். திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னதுபோல எந்தெந்த அதிகாரி களுக்கு அப்பீல் செய்ய வேண்டும் என்ற அதிகாரத்தைப்பற்றி 'ரூல்ஸ் ஃப்ரேம்' செய்யும்போது நிச்சயமாகத் தெரிவிப்போம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ரூல்ஸில் வேண்டாம் ; நீங்கள் கொடுக்கிற ஆர்டரிலேயே போடுங்கள்.

திரு. பெ. சீனிவாசன் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் எதிர்க்கட்சியினர் அறைக்குப் போய்விட்டு திரும்பும்போது யூனிபார்ம் இல்லாத ஒருவர் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவர் சி. ஐ. டி. என்று சொல்லிக் கொள்கிறார். அங்கு போகக்கூடாது, இங்கு போகக்கூடாது, என்று தடுக்கிறார். லாபியில் போவதற்கும் இடையூறாக இருக்கிறது. யூனிபார்மில் இருந்தால் எங்களுக்குத் தெரியும். அவர் மப்டியில் இருக்கிறார். சி. ஐ. டி. யாரும் இங்கே இருக்கக் கூடாது என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறீர்கள். இந்தக் குறிப்பிட்டவரும் அங்கே இருக்கக்கூடாது என்று தாங்கள் தெளிவாகச் சொல்லிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி விசாரித்து, ஆவன செய்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : சி.ஐ.டி-க்கு இங்கு இடமில்லை. அவர் சி.ஐ.டி. என்பதற்கான கார்டையும் காட்டுகிறார். ஆகவே உடனடியாக அவரை அங்கிருந்து போகச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி யாராவது சி.ஐ.டி. என்பது தெரிந்தால், அவர் சி.ஐ.டி.க்கு லாயக்கு இல்லாதவர்.

திரு. பெ. சீனிவாசன் : அவரே சி.ஐ.டி. என்று சொல் கிறார்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : தலைவரவர் களே, ஓரிரு சந்தேகங்களைக் கேட்கலாம் என்று நினைக்கிறேன். ஹைவேஸை பொறுத்தவரையில் எஞ்சினியர்கள் நிலத்திலிருந்து காலி செய்கிறார்கள். ரோடுகளில் இருக்கிற கட்டடங்களை இடிக்கிறார்கள். ஆனால் பி. டபிள்யூ.டி.யைப் பொறுத்த வரையில் குறிப்பாக ஏரிக் கரைகளில், நூற்றுக்கணக்கான ஏக்கர் 'டாங்க் பெட்' நிலத்தை ஆக்கிரமிப்பு செய்திருக் கிறார்கள். அதுவும் கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டத்திற்குப் பிறகு அதிகமான பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் தண்ணீர் வராமல் போய்விடுகிறது, என்னுடைய தொகுதியில் மட்டும் 10, 15 இடங்களில் இப்படி ஆக்கிர



மிப்பு செய்யப்பட்டு, அதனால் விவசாயம் கெட்டுவிட்டது. அதனால் இப்படிப்பட்ட ஏரிக்கரை ஆக்கிரமிப்பாளர்களை அப் புறப்படுத்த பி.டபிள்யூ.டி.யில் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போதே சட்டம் இருக்கிறது. ஏதாவது நடைமுறையில் சிக்கல் இருந்தால், அதைக்கூட தீர்ப்பதற்கு சமீபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. யாராவது ஆக்கிரமிப்புச் செய்தால், அந்தப் பகுதியில் இருக்கிற மக்களே முன்வந்து, யார் யார் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்யலாம். முடிந்தால் அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து அப்புறப்படுத்தும் ஏற்பாடு இருக்கிறது. எங்காவது அப்புறப்படுத்தாமல் இருந்தால் பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர்கள் அல்லது கண்காணிப்புப் பொறியாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலும் அவர்கள் மூலம் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 6/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(பிற்பகல் 1·30)

பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நில ஆக்கிர மிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/75) சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்" என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் ஒரு பில்லும், ஒரு ரெசல்யூஷனும் இருக்கின்றன. சிறிது நேரம் உட்கார்ந்து அவற்றையும் நிறைவேற்றிவிடலாம் என்று கருதுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : வேண்டாம். நாளைக்கே எடுத்துக் கொள்ளலாம். பத்திரிகையில் வருகிறபோது ஒரு நாளைக்கு அரை டஜன் மசோதாக்கள் நிறைவேற்றப்படு கின்றன என்று கருத்து தோன்ற இடமளிக்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

(7) பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

176. Notification issued in G.O. Ms. No. 1605, Agriculture, dated the 15th October 1974, in regard to regulation of trade over the purchase and sale of Corriander in South Arcot district. [*Laid on the table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]

177. Notification issued in G.O. Ms. No. 1511, Agriculture, dated the 26th September 1974, in regard to inclusion of tamarind and cane jaggery in all forms in addition to groundnut and gingelly in respect of market at Hosur in Dharmapuri district. [*Laid on the table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]

178. Notification issued in Memo. No. 24175/AM.I/74-5, Agriculture dated the 15th October 1974 in regard to an amendment to the Agriculture Department Notification II-1 No. 1326 of 1972, published at pages 365-367 of Part II--Section I of the *Tamil Nadu Government Gazette*, dated the 29th March 1972. [*Laid on the table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]

179. Notification issued in G.O. Ms. No. 154, Commercial Taxes and Religious Endowments, dated the 14th February 1975 in regard to amendment to the Tamil Nadu (Transferred Territory) Ryotwari Settlement Rules, 1965. [*Laid on the table of the House under section* 26(2) *of the Tamil Nadu* (*Transferred Territory*) *Ryotwari Settlement Act*, 1964 (*Tamil Nadu Act* 30 *of* 1964).]

180. Notification issued in G.O. Ms. No. 514, Co-operation dated the 24th September 1974, in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Apex Societies (Management and Conduct of Election) Rules, 1974. [*Laid on the table of the House under section* 119(4) *of the Tamil Nadu Co-operative Societies Act*, 1961 (*Tamil Nadu Act* 53 *of* 1961).]

***B. Reports, Notifications and Other Papers.***

**NIL.**

## தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

---

### வியாழக்கிழமை 1975 ஏப்ரல் 17.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) இரங்கல் தீர்மானம்.

இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1952-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டு வரை இந்தியக் குடியரசின் துணைத் தலைவராகவும் 1962-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராகவும் விளங்கிய தத்துவ மேதை டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் நேற்று இரவு 12-45 மணி அளவில் மறைந்த செய்தியை வருத்தத்துடன் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை முன் மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "இந்தியக்குடியரசின் முன்னாள் தலைவரும் இணையில்லாப் புகழ் பெற்ற தத்துவ ஞானியுமான டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் மறைந்தது குறித்து இம்மாமன்றம் தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் புகழார்ந்த நினைவுக்கு அஞ்சலி செலுத்தி அவர் குடும்பத்தாருக்கும் தனது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

இந்தியாவினுடைய முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களுடைய மறைவால் உலகமே ஒரு தத்துவப் பேறிஞரை இழந்திருக்கிறது. குறிப்பாக, இந்தியாவும் மிகவும் குறிப்பாகத் தமிழகமும்

---

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

1975 ஏப்ரல் 17] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பெருமையும் புகழையும் தேடித் தந்த ஒரு தத்துவப் பேரறிஞரை இழந்திருக்கிறது. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் இந்த நாட்டினுடைய தத்துவ இயல்களையும் சமயங்களையும் ஆராய்ச்சி செய்ததன் மூலமாக கீழை நாட்டு தத்துவ இயல்களை மேலை நாட்டுக்காரர்களுக்கு அறிமுகப் படுத்தியதின் மூலமாகப் பெருமையையும் புகழையும் பெற்றார்கள். இந்த நாட்டு தத்துவங்களையும் சமயங்களையும் ஆராய்ந்ததன் மூலமாக அவர் புகழ் பெற்றார். அவர் புகழ் பெற்றதன் காரணமாக இந்த நாடும் புகழ் பெற்று விளங்கியதோடு, சிறந்த அறிவுத் திறன் படைத்தவர் என்று உலகோரால் மிகச் சிறப்பாகப் பாராட்டப்பட்டவர் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

தத்துவ இயல் கருத்துகளையும் ஆராய்ந்து அறிந்து மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்ற உலகப் பேரறிஞர்களில் ஒரு சிலரில் டாக்டர் எஸ். இராதாகிருட்டிணன் அவர்கள் மிகச் சிறந்து விளங்கினார்கள் என்பது மட்டுமல்லாமல், உலகப் பேரறிஞர்கள் பலரால் பலவகையாகப் புகழப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

அவர், சாதாரணமாக, ஆசிரியர் நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்து உலகப் புகழைப் பெற்று, இந்தியாவிலே இருக்கிற ஒரு குடிமகன் பெறத்தக்க ஒரு உயர்ந்த பதவியாகிய, பொறுப்பாகிய குடியரசுத் தலைவர் பொறுப்பை ஏற்றுப் பெரும் புகழ் பெற்றவராவார்.

அதோடு மட்டுமல்லாமல், அவர் தமிழகத்துப் பகுதியிலே பிறந்து, வளர்ந்து, படித்து புகழையும் பெருமையையும் பெற்றுத் திகழ்ந்தார் என்பதை எண்ணும்போது நமக்கெல்லாம் தனிப் புகழும் பெருமையும் ஏற்படுகிறது.

அவர் திருத்தணியிலே பிறந்து, வேலூரிலே படித்து, சென்னை கிறித்துவக் கல்லூரியிலே பயின்று, மாநிலக் கல்லூரியிலே விரிவுரையாளராகப் பணியினைத் தொடங்கி, பிறகு துணைப் பேராசிரியராக ஆகி, பிறகு மைசூர் பல்கலைக் கழகத்திலும், கல்கத்தா பல்கலைக் கழகத்திலும் தத்துவ இயல் பேராசிரியாக மாறி, பிறகு ஆந்திரா பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தராகவும் காசிப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தராகவும் ஆனார்.

அது மட்டுமல்லாமல், 16 ஆண்டுகாலத்திற்கு ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்திலே சிறப்புச் சொற்பொழிவாற்றுகின்ற தத்துவ இயல் பேராசிரியராகவும் அவர் திகழ்ந்தார். அவர்கள் எழுத்து வன்மையிலும் சரி, சொல் வன்மையிலும் சரி, மிகச் சிறந்து விளங்கினார்கள்.



1975 ஏப்ரல் 17] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவருடைய தந்தையார் அவரை ஒரு புரோகிதராக மாற்ற வேண்டுமென்றுதான் எண்ணினார். ஆங்கிலக் கல்வியிலே அவரைப் புக வைக்கக் கூடாது என்று எண்ணினார். ஆனால், அன்றைய சூழ்நிலையில் டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்வியிலே நாட்டம் செலுத்தி மிகச் சிறந்தவர் ஆனார். அவருடைய தந்தையின் எண்ணம் நிறைவேற்றப்பட்டிருக்குமானால் அவர் யாருக்கும் தெரியாமல் புரோகிதராகத்தான் ஆகியிருப்பார். ஆனால், அவர் அந்த எண்ணத்தை மீறி படித்துப் படிப்படியாகப் புகழ்பெற்றதன் காரணமாக உலகத்தார் தெரிந்துகொள்கிற அளவிற்கு ஆளானார்.

அவர் எழுத்தை எடுத்துக் கொண்டால், நமது கருத்துக்களையும் கீழை நாட்டுத் தத்துவங்கள், சமயங்கள், மேலை நாட்டிற்கு மிகத் தெளிவாக புரியத்தக்க அளவுக்கு நூல்களை எழுதி, உலகத்திற்கு அறிமுகப்படுத்திய தன்மையில் டாக்டர் இராதாகிருஷ்ணன் மிகச்சிறந்து விளங்குகிறார்கள். உலகத்தினுடைய பல்வேறு பல்கலைக் கழகங்களில் எல்லாம் கீழை நாட்டுத் தத்துவங்களையும், சமயங்களையும் அறிந்து கொள்வதற்காகப் பல்வேறு பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பு, மேல் படிப்பு, ஆராய்ச்சித்துறைகள் ஆகியவற்றிலே டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் எழுதிய நூல்கள்தான் பாடங்களாகவும் ஆராய்ச்சிக்குரிய நூல்களாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன.

அவர்கள் உலகத்தினுடைய பல்வேறு பல்கலைக் கழகங்களால் மதிக்கப் பெற்றவர்கள். பல பல்கலைக் கழகங்களும் அவர்களை வரவேற்று, அவ்வப்போது அவரது சீரிய கருத்துக்களையெல்லாம் கேட்டு மகிழ்ந்திருக்கின்றன.

அமெரிக்காவிலே மட்டும் 14 பல்கலைக் கழகங்களால் அழைக்கப் பெற்று, அதோடு, ஐரோப்பா பல்கலைக் கழகம், இலண்டன் பல்கலைக் கழகம், ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் ஆகியவற்றிலே பலமுறை சொற்பொழிவாற்றிருக்கிறார்கள். பல பல்கலைக் கழகங்கள் அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்து அவரைப் பெருமைப் படுத்தியிருக்கின்றன.

அவர் சிறந்த எழுத்து வன்மை கொண்டவராகவும், எதையும் தெளிவாகவும் தெரிவிக்கின்ற ஆற்றல் பெற்றவராகவும் விளங்கியிருக்கிறார். கீழை நாட்டுத் தத்துவங்களையும் சமயங்களையும் இங்கே இருப்பவர்களே புரிந்துகொள்ள முடியாத அளவுக்குப் பலபேர் எவ்வளவு எழுதினாலும் அவ்வளவு எளிதில் புரிந்துகொள்ள முடியாத ஒரு துறை தத்துவத்துறை. அப்படிப்பட்ட நிலையில், நம்முடைய நாட்டவர்களே புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கும்போது, மேலை நாட்டைச் சேர்ந்தவர்கள் புரிந்துகொள்ளும்படி யாக்குவது மிகக் கஷ்டமாகும். அந்த அளவுக்குக் கஷ்டமான கீழை நாட்டுத் தத்துவங்களையும் சமயங்களையும் மேலைநாட்டவரும் புரிந்துகொள்கிற அளவுக்கு அவர் எழுதித் தந்திருக்கிற புத்தகங்கள் பலப்பலவாகும். அதிலே அவருடைய எழுத்து வன்மை மிகச் சிறப்பாகும் என்பதையும் நாம் காணலாம்.

ஆங்கிலத்திலே பலபேர் புகழத்தக்க அளவுக்கு மிகச் சிறப்பான முறையிலே, நல்ல கவர்ச்சிகரமான, திட்டவட்டமான, தெளிவான, சொற்களை அழுத்தந்திருத்தமாக எடுத்துத் தெரிவித்து பிறருடைய உள்ளத்தைக் கவரத்தக்க அளவுக்கு பேச்சாற்றல் மிக்கவராகவும் விளங்கினார்கள்.

இந்திய அரசால் மிகவும் மதிக்கப்பெற்று மாஸ்கோவிலே மூன்று ஆண்டுக் காலத்திற்கு மேலாக இந்தியாவினுடைய தூதுவராக விளங்கினார்கள். அவர் வாழ்ந்த காலத்திலே இரண்டு முறை ஸ்டாலினைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றார்கள் என்றும், பல்வேறு நாட்டவர்கள் எல்லாம் ஸ்டாலினைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெறாமல் இருந்தார்கள் என்றும், ஆனால், இவர் இரண்டு முறை ஸ்டாலினைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்று, அகில உலகத்தார் போற்றத்தக்க, புகழத்தக்க அளவுக்குப் பாராட்டப் பெற்றார்கள் என்றும் எடுத்துச் சொல்வார்கள்.

ஐக்கிய நாட்டு நிறுவனத்தில் ஒரு அங்கமான யுனெஸ்கோவுக்கு இந்திய நாட்டிலிருந்து சென்ற குழுக்களுக்குத் தலைமை தாங்கும் வாய்ப்பை அவர் பெற்றிருந்தார். இந்தியாவினுடைய குடியரசுத் துணைத் தலைவராகவும் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்ற வாய்ப்பைப் பெற்று, 1952 முதல் 1957 வரையும், 1957 முதல் 1962 வரையும் அப் பொறுப்பில் இருந்தார். அத்துடன், 1962 முதல் 1967 வரையிலும் குடியரசுத் தலைவர் பொறுப்பை ஏற்று, எல்லோராலும் மதிக்கத்தக்க அளவுக்கு மிகச் சிறப்பாக விளங்கினார்கள்.

அவர் பதவியைத் தொடங்கியது விரிவுரையாளராக—மாநிலக் கல்லூரியிலேதான் 5 ஆண்டுக் காலம் பணியாற்றினார்கள். பிறகு துணைப் பேராசிரியர், பேராசிரியர், துணை வேந்தர் என்று படிப்படியாக உயர்ந்து திகழ்ந்தார்.

ஒரு ஆசிரியர் நிலையிலேயிருந்து, இந்தியாவிலே இருக்கிற பெறற்கரிய பெரும் பொறுப்பைப் பெற்று பல்லோராலும் புகழ பெற்றதிலிருந்து, அவர் ஆசிரியர் உலகத்திற்கே சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்.

அவர் ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றார் என்று அவர் பிறந்த நாளை ஆசிரியர் நாளாகக் கொண்டாட வேண்டுமென்று முடிவு செய்து கடந்த 10 ஆண்டுக் காலமாக இந்தியா முழுவதும் அவர் பிறந்த செப்டம்பர் 5–ம் நாளை, ஆசிரியர் நாளாகக் கொண்டாடி, அந்த நாளிலே முடியாத, இயலாத ஆசிரியர்களுக்கெல்லாம் உதவி செய்ய வேண்டுமென்று இந்தியா முழுவதும் பெரும் நிதி திரட்டப்பட்டு, முடியாத, இயலாத ஆசிரியர்கள், வறுமையிலே வாடுகின்ற ஆசிரியர்கள்—ஆகியோருக்கெல்லாம் உதவி தருகின்ற இந்தத் திட்டம் நடைமுறையிலே இருந்து வருகிறது. நம்முடைய மாநிலத்திலும் இந்தத் திட்டம் மிகச் சிறப்பாக இருந்து வருகிறது. செப்டம்பர் 5–ம் நாளை ஆசிரியர் நாளாக பூரிப்போடும் பெருமையோடும் கொண்டாடி வருகிறோம். இப்படி பல்வேறு வகை





யிலே பெருமையையும் சிறப்பையும் புகழையும் ஈட்டுவதிலே மிகச் சிறப்பாக விளங்கினார்கள். அவரது எழுத்துக்களில் பல்வேறு தன்மைகளைப் பார்க்கலாம்.

இந்திய அரசு தனிக் கொடியை வைத்துக் கொள்ள வேண்டும்—தனிச் சின்னம் வைக்கவேண்டுமென்று சிந்தித்த காலத்தில் எப்படிப்பட்ட கொடியை அமைக்க வேண்டுமென்ற யோசனையை, எப்படிப்பட்ட சின்னத்தை வைத்துக்கொள்ளவேண்டுமென்று இந்திய அரசு திட்டமிட்ட காலத்தில், எண்ணிய காலத்தில், அசோகச் சக்கரத்தை கொடியிலே போடலாம் என்ற ஒரு கருத்தையும், அசோகத் தூணிலே இருக்கிற சிங்கச் சின்னத்தை அடையாளமாகக்கொள்ளலாம் என்றும், அதற்குப் பின்னாலேயிருக்கிற அறக்கருத்துக்களையெல்லாம் தெளிவாக எடுத்துக் கூறி, அவற்றைத் தேர்தெடுக்க உறுதுணையாக இருந்தவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் என்று சொல்வார்கள்.

ஆகவே, அசோகச் சக்கரத்தை கொடியில் போடுவதற்கும் அசோகத் தூணிலே இருக்கிற சிங்கத்தை இந்திய நாட்டின் அடையாளச் சின்னமாக ஆக்கவேண்டுமென்பதற்கும் அடிப்படைக் காரணங்களையெல்லாம் எடுத்துச்சொல்லி அசோகச் சக்கரத்தைப் பற்றியும், அந்தச் சின்னத்தைப் பற்றியும் H.G. வெல்ஸ் எடுத்துச் சொல்லிய கருத்துக்களையெல்லாம் அவர்கள் எடுத்துச் சொல்லி அதையெல்லாம் நிலை நாட்டிய பெருமை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களைத்தான் சாரும்.

எவ்வளவு கடுமையான சிக்கலான கருத்துக்களையும் நன்கு விளக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தார்கள். சாதாரணமாக ஒரு தத்துவத்தைச் சொல்வார்கள், விதியை மதி வெல்லுமா, மதியை விதி வெல்லுமா என்று. விதியை மதி வெல்ல முடியாது என்று வைதீகத்திலே ஒரு சாரார் சொல்வார்கள், விதியை மதி வெல்லலாம் என்று ஒரு சாரார் சொல்வார்கள்.

விதியை மதி வெல்லுமா, மதியை விதி வெல்லுமா என்பதை அவர்கள் விளக்கிச் சொல்கிறபோது சீட்டாட்டத்திலே பல பேர்களுக்குச் சீட்டு போடுவதுதான் விதி என்றும் வந்த சீட்டுகளை அவரவர்கள் கையிலே வைத்துக்கொண்டு ஆடுவதுதான் மதி என்றும் சொல்லியிருக்கிறார்கள். சீட்டுப் போடுகிறபோது அவரவர்கள் கையிலே வந்து சீட்டுகள் விழுவதுதான் விதி என்றும் அப்படி விழுந்த சீட்டுகளை அவரவர்கள் கையிலே வைத்துக்கொண்டு மதியைப் பயன்படுத்தி ஆடுவதுதான் மதி என்றும் இந்த எடுத்துக் காட்டின்மூலம் உவமையின் மூலம் அந்தத் தத்துவத்தை எடுத்துக் காட்டினார்கள்.

மிக மிகப் பெரிய தத்துவங்களுக்கு எல்லாம் எளிய விளக்கங்களை கொடுக்கின்ற பண்பையும் ஆற்றலையும் அவர்கள் பெற்றிருந்தார்கள். அப்படிப்பட்டவர் 87–வது வயதில் மறைவு எய்தியது நமக்கெல்லாம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 ஏப்ரல் 17

ஆழ்ந்த துக்கத்தையும் துயரத்தையும் அளிக்கிறது, அவர்களின் இழப்பு குறித்து இம்மாமன்றம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்ற முறையிலேயும் அவரை இழந்திருக்கின்ற அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்ற முறையிலேயும் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. வ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இந்தியாவின் தலை சிறந்த தத்துவமேதை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் மறைந்தது நமது நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே ஒரு பெரிய நஷ்டம் என்று கூறமுடியும்.

அவருடைய வரலாறு மிகச் சிறப்பான ஒன்று. அவர் ஆசிரியராகப் பணியாற்றினாலும் அரசியலிலே அதிகமாக ஈடுபட்டிருந்தாலும் கூட அவ்வப்போது நாட்டிலே இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் கருத்திலே கொண்டு தைரியமாக தன்னுடைய கருத்துக்களைத் தத்துவ ரீதியாக எடுத்துச் சொல்வதிலே அவர் தயக்கம் காட்டியது கிடையாது.

அது மட்டுமல்லாது உலகத்திலே உள்ள எல்லா நாடுகளுக்கும் சென்று தன்னுடைய அரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லி, குறிப்பாக கீழைநாடுகளுக்கும் மேலைநாடுகளுக்கும் தத்துவ ரீதியான ஒரு இணைப்பாக அவர் விளங்கினார்.

அப்படிப்பட்ட ஒரு தத்துவ மேதை இந்தியாவின் குடியரசுத் தலைவராக ஆனது அனைத்து உலகத்திலேயும் இருக்கின்ற தத்துவ மேதைகளையெல்லாம் பெருமைப் படுத்துகின்ற ஒன்று என்று பெட்ரண்ட் ரஸ்ஸல் அவர்கள் பெருமைப்படுத்திப் பாராட்டியிருக்கிறார்கள்.

அவர்கள் ஒரு கட்டத்திலே நாட்டிலே இருக்கிற பல்வேறு நிலைமைகளைப் பார்த்து பலாத்காரத்தின் மூலம் நாட்டிலே எதையும் செய்ய முடியும் என்ற எண்ணத்தைக் கைவிட வேண்டுமென்று சொல்லி அமைதியான முறையிலே எவ்வளவு பெரிய மாற்றத்தையும் செய்ய முடியும் என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார்கள்.

அது மட்டுமல்லாமல் அரசியல்வாதிகளாக இருக்கின்றவர்களின் தவறான செயல்களைப் பார்த்து மனம்புழுங்கி ஒரு சந்தர்ப்பத்திலே கூறியிருக்கிறார்கள், அரசியல்வாதிகள் தன் நலனைவிட்டு தேசத்தினுடைய எதிர்காலம் என்ன என்பது ப்ற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இம் மாதிரி தைரியமாக அவர்களால்தான் சொல்ல முடிந்தது, இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்துகொண்டே . . உ



1975 ஏப்ரல் 17] [திரு. வ. ஆர். மாரிமுத்து]

அந்த அளவிற்கு தன்னுடைய மேதாவிலாசத்தின் மூலம் இந்திய நாட்டினுடைய மரியாதையை உயர்த்திக் காட்டிய பெருமை அவர்களைச் சாரும். அவருக்கு மரியாதை தெரிவிக்கின்ற முறையில் எனது கட்சியின் சார்பில் அவர்களுடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, மாமேதை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் காலமானதையொட்டி நம்முடைய அவை முன்னவர் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வழிமொழிந்து ஒரு சில கருத்துக்களை இங்கே பேச இருக்கிறேன்.

நம்முடைய டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் மக்களாட்சி மலர்ந்த இந்தியத் துணைக் கண்டத்தினுடைய முதலாவது துணைக் குடியரசுத் தலைவராக பத்து ஆண்டுகள் பணியாற்றி இரண்டாவது குடியரசுத் தலைவராகவும் தமிழகத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவராகவும் நாட்டு மக்களுக்கு நல்ல பல சேவைகளைச் செய்திருக்கிறார்கள்.

அவர்கள் ஆங்கில இலக்கியத்திலே மிகவும் தலைசிறந்தவர். சிறந்த தத்துவங்களை நாட்டுக்குத் தந்திருக்கிறார்கள். நான் கல்லூரியில் என்னுடைய பி. ஏ. வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது அவர்கள் எழுதிய தத்துவம் செறிந்த புத்தகத்தைப் பாடப் புத்தகமாகப் படிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அந்தப் புத்தகத்திலே தத்துவங்கள் மலிந்திருந்தன, அவைகளை ஆங்கிலத்திலே அழகாக எழுதித் தந்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு மிகச் சிறந்த தத்துவமேதையாகவும் அதை வெளிநாட்டு மக்களும் உணரக்கூடிய முறையிலே செய்ய ஆங்கிலத்திலே இலக்கிய அறிவைப் பெற்றவராகவும் அவர்கள் இருந்தார்கள்.

அப்படிப்பட்டவர் மறைந்தது நம்முடைய மாநிலத்திற்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திற்கு மாத்திரமல்ல, உலகத்திற்கே ஒரு பேரிழப்பு என்பதை உலகத்திலே உள்ள அனைவரும் உணரக்கூடிய முறையில் நம்மைவிட்டு அவர்கள் பிரிந்து சென்றுவிட்டார்கள்.

அவருடைய. இழப்பால் ஆழ்ந்த வருத்தத்திற்கு உள்ளாகியிருக்கின்ற அவர்களுடைய குடும்பத்தாருக்கும் அவர்களுடைய நண்பர்களுக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அதை மாண்புமிகு அவைமுன்னவர் அவர்கள் கொண்டுவந்த அனுதாபத் தீர்மானத்தோடு இணைத்து நான் முடித்துக் கொள்கிறேன்.

[1975 ஏப்ரல் 17

திரு. திருப்பூர் ஏ.எம். மொய்தீன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டின் தலைசிறந்த ஒரு தவப் புதல்வனை இன்றைக்கு இந்நாடு இழந்திருக்கிறது. பிறந்த உயிர்கள் எதுவும் உலகத்திலே நிலைத்து நிற்பதில்லை. அதற்கு முடிவுண்டு. அவ்வாறு ஏற்படுகிற முடிவுதான் நமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் அவருடைய பிரிவை நாம் நினைக்கிறபோது புகழ் நினைவுக்கு வருகிறது.

உயிரோடு இருக்கிறபோது ஒரு மனிதனைச் சிந்திப்பதற்கும் அவர் மறைந்ததற்குப் பிறகு அவரைப்பற்றிச் சிந்திப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. உயிரோடு இருக்கிறபோது சிந்திக்கின்ற சிந்தனைக்கும் இறந்த பிறகு சிந்திக்கின்ற சிந்தனைக்கும் என்ன வித்தியாசம் என்றால் அவர் செய்த சாதனைகள், அவர் உலகத்திற்கு முன்பு வைத்திருந்த புதுமைகள் நம்முடைய நினைவிற்கு வருகின்றன. அதற்காகத்தான் அப்படிக் குறிப்பிட்டேன், நான் மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

சமயம் என்ற பொது உணர்ச்சியோடு நான் இங்கே பேச இருக்கிறேன். சுவாமி விவேகானந்தர், இராமகிருஷ்ண பரமஹம்சர் முதலான இந்து சமயப் பெரும்க்கள் ஒரு மகத்தான சீர்திருத்த தத்துவத்தை உலகுக்குப் பரப்பினார்கள் என்ற பெருமை இந்தப் பெருநாட்டிற்கு உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்தப் பெருநிலைக்குப் பின் உலகத்திலே சமயத் தத்துவத்தின் அடிப்படைக் கருத்தை எல்லோருடைய உள்ளத்திலேயும் தொடத்தக்க நிலைமையில், பாராட்டத்தக்க நிலைமையில் நம்முடைய மரியாதைக்குரிய இராதாகிருஷ்ணன் அவர்களுடைய சேவையும், பேச்சும், எழுத்தும், நடைமுறையும், சொல்லும், செயலும் அமைந்திருந்தன என்று நான் கூறுவேன்.

சமயம், சமயம் என்று பேசும்பொழுது, இங்கே இரண்டு பெருமக்கள் பேசும்பொழுது கூறினார்கள், தத்துவம்; தத்துவம் என்று. என்ன அந்தத் தத்துவம்? அதை அப்படியே வைத்து பெரிய தத்துவ மேதை என்று சொல்கிறார்கள். அவர் என்ன தத்துவத்தைச் சொன்னார்? மனிதன் தானாக உலகத்தில் பிறந்துவிடுவதில்லை, பிறப்பிற்கும், அழிவிற்கும் மூலகாரணமான ஒன்றைத் தத்துவ வடிவத்தில் உலகத்திற்கு அறிவித்திருக்கிறார்கள். அவர் ஒரு சமயச் சார்புடைய நிலைமையில் அல்லாமல் பொதுவான நிலையில் எல்லா மதச் சார்புடைய அடிப்படைத் தன்மையையும் கொண்ட முறையில் மிக அழகாகத் தன்னுடைய கருத்துக்களை விளக்கியிருக்கிறார்கள்.

எனக்கு ஒன்று நினைவிற்கு வருகிறது. அதைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக என்னுடைய மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களிடத்தில் வெளியிலே கேட்டுத் தெரிந்து கொண்டு நான் இங்கே



1975 ஏப்ரல் 17] [திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்]

வெளியிட வேண்டுமென்று விரும்பினேன். அவர் ரஷ்யாவிற்குச் சென்றிருந்தார். அந்தச் சமயத்தில் விஞ்ஞானிகளால் ஒரு வரவேற்பு அவருக்குக் கொடுக்கப்பட்டது. அந்த வரவேற்பில் விஞ்ஞான வளர்ச்சிபற்றி மனிதனுடைய பேரறிவைப்பற்றி மிகப் பிரமாதமாகப் புகழ்ந்து பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதைப் பெற்ற இராதாகிருஷ்ணன் அவர்கள் பதில் சொல்லும்பொழுது அழகான கருத்தை உலகத்தின் முன்னால் வைத்திருக்கிறார்கள். அவருடைய உடல் இன்று மாலையில் புதைக்கப்படவோ அல்லது எரிக்கப்படவோ செய்யலாம். ஆனால் அந்தச் சொல்லை, உலகம் உள்ளவரையில் அழியாத அந்த வார்த்தையைச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். அவர் சொன்னார், எனக்கு வாசித்துக் கொடுத்த இந்தத் தாளில் விஞ்ஞானத்தினுடைய வளர்ச்சியையும், பெருமையையும் பற்றி நீங்கள் பேசியிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். மனிதனுக்கு விஞ்ஞானத்தால் பல நன்மைகள் கிடைக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒன்றே ஒன்றையும் நான் கூற விரும்புகிறேன் என்று ரஷ்ய நாட்டில் சொன்னார். என்ன சொன்னார் என்றால், மனிதன் பறவையினத்தைப்போல வானத்தில் பறக்கக் கற்றுக் கொண்டிருக்கிறான். மீன் இனத்தைப்போலக் கடலில் நீந்தக் கற்றுக் கொண்டிருக்கிறான். ஆனால், தரையில் மனிதன் மனிதனாக வாழக் கற்றுக் கொள்ளவில்லை என்ற கருத்தை அந்தப் பெருமகன் சொன்னார். எங்கே சொன்னார்? ரஷ்ய நாட்டில், அதுதான் குறிப்பிடத் தகுந்த ஒன்று.

நான் ஏன் இதைக் குறிப்பிட்டேன் என்றால், சமயம், சமயம் என்று சொல்கிறார்களே, அந்தச் சமயத்தை மூன்றாகப் பிரிக்கலாம். முதலாவதாக, சமயத்தை குறுகிய கண்ணோடு நோக்குவது, இரண்டாவதாக மற்றொரு சமயத்திற்கு எல்லைக்கோடு போடுவது, மூன்றாவதாக, சமயத்தை உலகத்திற்குப் பொதுவாக்குவது. அந்தப் பொதுவாக்கும் தன்மையை இராதாகிருஷ்ணன் அவர்கள் தன் வாழ்நாளில் அதிகமாகச் செய்து காட்டியிருக்கிறார்கள். அது உலகத்திற்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிறது.

அவர் நிரீச்வரவாதி அல்ல, தெய்வ நம்பிக்கை இல்லாதவர் அல்ல. அதே நேரத்தில், நம்முடைய அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல, அவரை புரோகிதராக ஆக்க தந்தை முயற்சித்தார். ஆனால், அவர் தான் புரோகிதர் ஆகாமல் தத்துவ ஞானியாக ஆனார். அந்தத், தத்துவத்தின் அடிப்படையை உலகிற்கு அறிவித்தார், நாட்டுக்கு அறிவித்தார்.

என்னுடைய மரியாதைக்கும், மதிப்பிற்குமுரிய தலைவர் காயிதே மில்லத் அவர்கள் அதிகமாக யாரைப் பற்றியும் குறிப்பிட்டதை நான் கேள்விப்பட்டதில்லை. ஒரு சமயம் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள் இராதாகிருஷ்ணன் அவர்களுடைய நூல்களைப் படிக்கும் போது என்னுடைய சிந்தனை அவருடைய பேரறிவைப்பற்றிச் சிந்திக்கிறது; மனிதனுடைய அறிவு எவ்வளவு தூரம் விரிய முடிகிறது என்பதை அவருடைய பேரறிவு எடுத்துக் காட்டுகிறது என்று கூறியிருக்கிறார்கள்.

அத்தகைய மனிதனுடைய இழப்பு ஈடு செய்ய முடியாதது என்று நாம் பொதுவாகச் சொல்லவில்லை, உண்மையிலேயே ஈடுசெய்ய முடியாததாகும். ஆனால் அவர் இறக்கவில்லை, வாழ்கிறார், செயல் செய்தவர்கள் இறந்துபோவது என்பது இல்லவே இல்லை. எங்களுடைய மார்க்கத்தின் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலேஹி வஸல்லம் அவர்கள் ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். மனித இனத்திற்கு வேண்டிய பொதுப் பாதையை யார் சொல்கிறாரோ அந்த மனிதருக்கு இறப்பு இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அவர் இறக்கவில்லை. அவரது உடல் இல்லை, உயிர் இல்லை, ஆனால் அவர் வகுத்துத் தந்த திட்டங்களும், நூல்களும் நம்முன் இருக்கின்றன. அவர் நம் நாட்டில் பிறந்தார் என்பதில் நமக்குப் பெருமை, அதிலும் தமிழ்நாட்டில் பிறந்தார் என்பதில் நமக்குப் பெருமை.

அந்தப் பெருமகனுடைய மறைவு ஈடு செய்ய முடியாதது என்று சொல்வதா ? இனி அந்த நிலையில் ஒரு மனிதன் சமீப காலத்தில் தோன்ற முடியாத அளவிற்கு இருந்த மனிதர் என்று கருதுவதா என்று தோன்றவில்லை. எப்படியோ இழந்துவிட்டோம், இனி அதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். அந்த இழப்பில், இந்த நாடு, உலகம், அவர்களுடைய குடும்பம், மனித இனம் கொண்டிருக்கிற துக்கத்தில் நானும், என் கட்சியும் கலந்து கொள்கிறோம் என்று கூறி, முன்னவர் அவர்களுடைய தீர்மானத்தை நான் வரவேற்று அமர்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : பேரவைத் தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்திலே எங்கள் கட்சியின் சார்பிலே எங்கள் கட்சியின் இரங்கலையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசியத்தையும், தெய்வீகத்தையும் முதன்மையாகக் கொண்ட எங்கள் கட்சி சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுடைய இழப்பிலே பெரிய துன்பத்தை அடைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள வேண்டும். அவர் இந்த நாட்டிலே ஒரு தத்துவ மேதையாக விளங்கினார் என்பது மட்டுமல்லாமல் அவர் தேசியப்பற்றோடு வாழ்ந்து காட்டினார் என்பதையும் நாம் இங்கே நன்றாக அறிகிறோம்.

எனக்கு முன்னால் பேசியவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நபிகள் நாயகம் அவர்கள் இந்த மனித உலகத்திற்குப் பொதுவான ஒன்றை எவன் சொல்கிறானோ அவன் சாவதில்லை, வாழ்கிறான் என்று கூறியதாக அவர்கள் சொன்னார்கள். நம்முடைய தத்துவ மேதை உலகத்திற்கெல்லாம் பொதுவான ஒன்றை, மனித குலத்திற்கெல்லாம் பொதுவான ஒன்றை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மதத்திலே இருக்கக்கூடிய வேறுபாடான கருத்துக்களையெல்லாம் நாம் எடுத்துச் சொல்வதைவிட எல்லா மதங்களிலும் இருக்கின்ற பொதுவான கருத்துக்களைச் சொல்வதிலேதான் அவர்கள் தங்கள் கவனத்தையும், வாழ்நாளையும், தங்கள் அறிவையும் செலவிட்டார்கள்.





அவருக்கிருந்த இந்த அறிவாற்றல், சொல்லாற்றல், எழுத்தாற்றல் இவை மூன்றும் இந்த மனித குலத்திற்கே பயன்படத்தக்க முறையில் அவர்கள் பயன்படுத்தினார்கள் என்பதை இந்த நேரத்திலே நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். அவர்களுடைய வாழ்க்கையைப் பார்த்தால், நாம் நம்முடைய தேசம் பிற தேசங்களை வெற்றி கொள்வதில் அக்கறை இல்லை என்று எப்போதும் சொல்லி வந்தாலும், நம்முடைய கலாச்சாரத்தின் மூலம், நம்முடைய தத்துவத்தின் மூலம் இந்த உலகத்தையே நாம் வெல்ல முடியும் என்பதை அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

எனவே, அவர்களுடைய இழப்பு நம் நாட்டிற்கு மட்டுமல்லாமல் இந்த உலகத்திற்கே ஏற்பட்ட பெரிய இழப்பாகும். என்று சொல்லிக் கொண்டு எங்கள் கட்சியின் சார்பில் அன்னாரின் குடும்பத்திற்கு இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(முற் பகல் 9-30.)

*திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு இரங்கல் தீர்மானத்தை அவையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை ஆதரித்து ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் சிறந்த தத்துவ மேதை. தன் வாழ்க்கையில் மிகவும் எளிமையாக நடந்து எல்லோருக்கும் வழி காட்டக்கூடிய முறையில் சிறந்து வாழ்ந்த மாமேதை. அறிவாற்றலில் சிறந்து பல நூல்களை எழுதியிருக்கிறார்கள். இந்திய நாட்டுத் தத்துவத்திற்குப் புதிய விளக்கங்களைக் கொடுத்து எல்லா நாட்டினரும் அறிந்து கொள்ளும் வகையில் பல புத்தகங்களை எழுதிப் பாராட்டுப் பெற்றவர்கள். அவர்கள் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவர்கள் மறைவுக்காக நான் சார்ந்திருக்கும் சுதந்திராக் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும், ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சபாநாயகர் அவர்களே, டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் மறைவுக்கான இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து எங்கள் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

நமது சட்டமன்றம் ஐந்தாவது சட்டமன்றமாகும். இந்த மன்றத்திலே பல அருமையான விஷயங்கள் எல்லாம் விவாதிக்கப்பட்டாலும் கூட நாம் வேதனைப் படக்கூடிய சில சம்பவங்கள் நடந்தன என்று என் மனதுக்குப் படுகிறது. தமிழ் நாட்டிலே தோன்றி உலகத்துக்குப் பெருமை தேடித் தந்த பல தலைவர்களை நாம் இழந்து அவர்களைப் பற்றி எல்லாம்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 17

இங்கு பேசியிருக்கிறோம். அதற்கு முதலிடம் பெறக்கூடிய அளவுக்குப் பெரியார் ராமசாமி அவர்களும், அடுத்து ராஜாஜி அவர்களும், அதற்கு அடுத்தாற்போல் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களும், இப்போது டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களும் நம்மை விட்டுப் பிரிந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட வேண்டிய ஒரு நிலையில் நாம் இருக்கிறோம்.

இராதாகிருஷ்ணன் போன்றவர்களைப் பற்றி என்னைப் போன்றவர்கள் என்ன சொல்ல முடியும் என்று எனக்கே தெரியவில்லை. ஏனென்றால் அவரைப் பற்றி அநேகமாக உலகத்திலுள்ள பல தலைவர்களும் பல விஷயங்களைச் சொல்வதற்கு இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் பிறந்து இந்தியாவினுடைய ஜனாதிபதியாகி இந்தியக் கலாச்சாரத்தை உலக மக்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லக்கூடிய பெரிய வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. அநேகமாக அவர் செல்லாத நாடுகளே இல்லை என்று சொல்லலாம்.

அவர் சோவியத் யூனியனில் தூதுவராக இருந்ததைப் பற்றித் தீர்மானத்திலே குறிப்பிட்டார்கள். அடுத்து அவர் சீனாவுக்குச் சென்று சில மாதங்கள் தங்கியிருந்து அந்த நாட்டினுடைய பெருமையை எடுத்துச் சொல்லக்கூடிய அளவுக்கு சிறந்த சொற்பொழிவுகள் எல்லாம் ஆற்றி அவை "இந்தியா-சீனா" என்ற புத்தக ரூபமாகக் கூட வெளி வந்திருக்கின்றன. அதுமாத்திரமல்லாமல் புத்தரைப் பற்றிப் பல சொற்பொழிவுகள் ஆற்றியதெல்லாம் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். "இந்தியன் ஃபிலாசபி" என்ற புத்தகந்தான் அநேகமாக உலகம் பூராவிலும் டாக்டர் இராதாகிருஷ்ணனைப் பற்றி புகழ்ந்து சொல்லக்கூடிய புத்தகமாக இருக்கிறது என்பதைத் தாங்கள் நன்றாக அறிவீர்கள்.

அவர்கள் பெருமளவுக்கு அரசியலில் பங்கெடுத்தார்கள் என்று என்னால் நம்பமுடியவில்லை. அவர் பேராசிரியராக இங்கிலாந்து தேசத்தில் இருந்த காலத்தில் மாணவர்களுக்கெல்லாம் ஒரு உற்ற துணைவராக இருந்தார். அதுவும் குறிப்பாக இந்தியாவில் இருந்து வந்திருக்கக் கூடிய மாணவர்களுக்கு அடிக்கடி விருந்து கொடுத்து மற்றவர்களை அறிமுகப்படுத்துவது போன்ற நல்ல காரியங்களை எல்லாம் செய்து வந்தார்கள். இந்தியாவுக்கு வந்த பிறகு அவருக்குப் புகழ் தேடிக் கொடுக்கக் கூடிய அளவுக்குப் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் பெரும் பதவிகளை எல்லாம் அவர்களுக்குக் கொடுத்தார்கள். அந்தப் பதவிகளை எல்லாம் அவர் நல்ல முறையில் வகித்தார்கள் என்றுதான் சொல்ல முடியும்.

ஒரு சிறு உதாரணம் எனக்கு ஞாபகம் வருகிறது. அவர் ராஜ்ய சபைத் தலைவராக இருக்கிறார். அப்போது புபேஷ் குப்தா அவர்கள் தலைவர் சொல்லுவதைக் கேட்காமல் அமைச்சர்களோடு சாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது அவர் எழுந்து நின்று தான் ஏற்கனவே அவருக்கு ஆசிரியராக இருந்த உரிமையை வைத்து 'நீங்கள் உட்கார



[1975 ஏப்ரல் 17 [திரு. கே. டி. கே. தங்கமணி]

வேண்டும்' என்று சொன்னவுடன் புபேஷ் குப்தா உட்கார்ந்து விட்டார். இதைப் பத்திரிகையில் கூடப் போட்டிருந்தார்கள். எவ்வளவுதான் தீவிர வாதியாக இருந்தாலும் புபேஷ் குப்தா அவர்கள் ஆசிரியருக்கு அடங்கினார் என்று போட்டார்கள். அந்த மாதிரி அன்பால் பலரைக் கட்டுப்படுத்தக் கூடிய சில நிலைமைகள் எல்லாம் அவருக்கு இருந்தது.

இரண்டு விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இந்த மேற்கோள் சில பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. அரசியலில் இருக்கக்கூடியவர்கள் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு பிளாட்டோ தன்னுடைய 'ரிபப்ளிக்" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**"Until philosophers are kings, and kings and princes of the world have the spirit and power of philosophy and all commoners natures are compelled to stand aside, cities will never rest from evil nor the human race."**

அரசியலில் இருப்பவர்களுக்குக்கூட குறிப்பிட்ட தத்துவம் இருக்க வேண்டும். அந்தத் தத்துவத்தின் அஸ்திவாரம் இருந்தால்தான் அவர்கள் நல்ல முறையில் செயல்படுவார்கள் என்று அன்றைக்கு பிளாட்டோ அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர் அரசியலைப் பற்றிப் பேசியது—ஜனாதிபதியாகத் தன்னுடைய பதவி முடிந்த பிறகு 1967-ல் தான் பல இடங்களில் குறிப்பிட்டார். அவருடைய அனுபவத்தை எல்லாம் வைத்து அவர் சொன்னார்—

**"Politicians should have a clear vision of the future of the country and not be content with their own individual comfort and survival"**

தனிப்பட்ட தங்களுடைய வசதியைத்தான் அரசியல்வாதிகள் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர் மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**"Immediate disposal of charges of corruption made against people at all levels of Government was necessary."**

என்றும் அழுத்தமாகச் சொன்னார்.

கடைசியில் மே 12ம் தேதி 1967-ஆம் வருஷம் ரேடியோவில் பேசுகிற போது இவ்வளவெல்லாம் இருந்தாலும் கூட நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலையைக் கண்டு வருந்த வேண்டியதில்லை, மேலும் மேலும் செயல்பட முடியும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள்.

**"Despite occasional forebodings to the contrary the Indian Constitution had worked successfully so far."**

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 17

" We should be the advocates of radical reform."
என்று வருங்காலத்தில் நம்பிக்கை கொள்ளக்கூடிய முறையில் தெரிவித்துச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கனவே வந்திருக்கக்கூடிய தீர்மானத்தை மீண்டும் ஒரு முறை எங்கள் கட்சியின் சார்பாக ஆதரித்து அமர்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, அவையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து எங்களுடைய கட்சியின் சார்பில் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

உலகத்திலே தத்துவப் பேராசிரியர்களாக விளங்கிய பொருளாதாரத் தத்துவத்திலே தலைசிறந்த மார்க்ஸ் போன்றவர்கள், அது போல் சமயத் தத்துவத்திலே தலைசிறந்து விளங்கிய டாக்டர். இராதாகிருஷ்ணன் போன்றவர்கள் இன்றையதினம் உலகத்திலே இருந்து மறைந்திருக்கிறார்கள். அவ்வாறு பார்க்கும்போது தமிழகம் தன்னுடைய தலை சிறந்த புதல்வர்களை ஒவ்வொன்றாக இழந்து கொண்டிருக்கிறது.

தந்தை பெரியார் போன்றவர்களை, ராஜாஜி போன்றவர்களை அறிஞர் அண்ணா போன்றவர்களை எல்லாம் தமிழகம் இழந்திருக்கிறது. அதே போன்று டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களையும் தமிழகம் இழந்திருக்கிறது.

இன்றையதினம் உலகத்திலே இருக்கின்ற ஆசிரியர்களுக் கெல்லாம் எடுத்துக்காட்டாக, வழிகாட்டியாக விளங்கிய திரு. இராதாகிருஷ்ணன் அவர்களுடைய மறைவு நம்முடைய நாட்டுக்கு மட்டுமல்லாமல் நம்முடைய இந்தியாவில் இருக்கின்ற எல்லா மக்களுக்குமே ஒரு பெரிய இழப்பாகும். இந்த இழப்பு தமிழகத்திற்குப் பேரிழப்பாகும் என்பதை நான் தெரிவித்துக் கொண்டு, அவருடைய குடும்பத்தாருக்குத் தமிழ்நாடு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திருமதி சத்தியவாணிமுத்து : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவராக இருந்த ஒரு தமிழர், அரசியல்வாதிகளுக்கு அவர்கள் எப்படி வாழ வேண்டும்மென்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்த ஒருவர் மறைந்து விட்டார் என்கின்ற துக்ககரமான செய்தியில் இந்த அவையில் கொண்டு வந்திருக்கின்ற இரங்கல் தீர்மானத்தோடு எங்கள் கட்சியின் சார்பில் நானும் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மிகப் பெரிய பழுத்த வைதீகர் என்றாலும் இந்து மதத்திற்கு எந்தவித பங்கமும் ஏற்படாமல் அந்தத் தத்துவம் உயர்ந்தோங்க வேண்டுமென்று விரும்பி வாழ்ந்தவர் என்றாலும் ஏழை மக்களின் நலன்களைப்



1975 ஏப்ரல் 17] [திரு. இ. எஸ். தியாகராசன்]

பாதுகாக்க வேண்டும் என்று அவர்கள் கருதி எளிமையாக நாமும் வாழ்ந்து காட்ட வேண்டும் என்று அவ்விதம் வாழ்ந்து காட்டி மறைந்திருக்கிறார்கள்.

மிக உயர்ந்த பதவிக்கு வருகிறவர்கள் தங்களை உயர்த்திக் கொண்டு ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபடுகிற இந்தக் காலத்தில் அவர்கள் அதிகம் கற்றவராக, உலக மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தத்துவ மேதையாக அரசியலில் மிக உயர்ந்த பதவியான குடியரசுத் தலைவர் பதவிக்குப் போய் அமர்ந்திருந்தாலும் அவர்கள் அடக்கமாகவும் எளிமையாகவும் அந்தப் பதவியில் இருந்து நாட்டு மக்களுக்கு என்னென்ன நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமோ அவை அத்தனையும் செய்துவிட்டுத்தான் அவர்கள் மறைந்திருக்கிறார்கள்.

அவர்களது வாழ்க்கை அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற அனைவருக்குமே ஒரு எடுத்துக் காட்டான வாழ்வாகும். தமிழகத்தைச் சார்ந்த ஒருவர் ஒரு பெரிய பதவியில் இருந்து நிர்வாகத்தில் எந்தவிதமான கோளாறும் இல்லாமல் நடத்திக் காட்டினார்கள் என்றால் அது தமிழகத்திற்குப் பெருமைக்குரியதாகும்.

அவரது இழப்பு இந்திய நாட்டுக்கு ஒரு இழப்பாக இருந்தாலும் குறிப்பாக தமிழ் நாட்டுக்கு அவரது இழப்பு ஒரு பேரிழப்பாகும்.

அவர்கள் எழுதி வைத்த புத்தகங்கள் ஏராளம் உண்டு. அரசியல் வாழ்க்கையில் இருப்பவர்கள் மட்டுமல்லாமல் தனிப்பட்ட வாழ்க்கையில் இருப்பவர்களுக்குக் கூட எப்படி எதிர்காலத்தில் வாழ வேண்டும், பிறரை துன்புறுத்தாமல் எப்படி வாழவேண்டும் என்ற கருத்துக்கள் அடங்கிய நல்ல நூல்களை அவர்கள் எழுதியிருக்கிறார்கள். எனவே, அவர்கள் சாதாரண பொது மக்களுக்குக் கூட வள்ளுவரைப் போன்றிருந்து ஒரு பொது நெறியைக் கற்பித்த ஒரு நல்லவர் என்பதற்காக அவர்களது மறைவுக்கு எனது கட்சியின் சார்பில் இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. இ. எஸ். தியாகராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாமேதை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் மறைவு குறித்து அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து தமிழரசுக் கழகத்தின் சார்பாக என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மறைந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் எனது ஊரில், தணிகையில் பிறந்தவர் என்பதற்காக நான் பெருமைப்படுகிறேன். தணிகையில் பிறந்தவர் அவர்கள் பாரதத்தின் துணைத் தலைவராகவும், தலைவராகவும்

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1975 ஏப்ரல் 17

வாழ்ந்து இன்றைய தினம் உலகம் போற்றும் மகா வீரராக வாழ்ந்து மறைந்து விட்டார்கள் என்று அறிகிற போது உண்மையில் நாம் மிகவும் வேதனைப்பட வேண்டியிருக்கிறது.

தணிகையில் பிறந்த அவர்கள் பாரதத்தின் துணைத் தலைவராக இருந்து பிறகு பாரதத்தின் தலைவராக உயர்ந்து இன்று மறைந்து விட்டார்கள்.

அதுமட்டுமல்ல. அவர்கள் இளமையில் இருந்தே தத்துவ மேதையாக வாழ்ந்து தத்துவத்தை இந்த உலகிற்கு எப்படியெல்லாம் எடுத்துச் சொல்லலாம் என்று அவர்கள் நல்ல பல கருத்துக்களை புத்தகங்கள் வாயிலாகவும் நூல்கள் வாயிலாகவும் நல்ல முறையில் உலகிற்கு எடுத்துச் சொல்லி இன்றைய தினம் அகில உலகமும் போற்றுகிற அளவிற்கு உலகத்தின் பெரிய ஒரு பரிசை பெறுகிற அளவிற்கு அவர்கள் நம்மிடையே வாழ்ந்து காட்டினார்கள்.

அவர்கள் தமிழகத்திற்கு ஒரு பெரிய பெருமையைத் தேடித் தந்தார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, காசி சர்வகலாசாலைக்குத் துணைவேந்தராக இருந்து காசி யூனிவர்ஸிட்டியின் பெருமையைப் பல மடங்கு உயர்த்தித் தந்தவர் அவர். இன்று அது உயர்ந்த நிலையில் இருப்பதற்குக் காரணமே அவர்கள்தான் என்பதோடு அதையெல்லாம் ஒரு தமிழ்மகன்தான் நடத்த வாய்ப்புள்ளவன் என்று கூறி, மறைந்த அன்னாரின் குடும்பத்தினருக்கு தமிழரசுக் கழகத்தின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

*திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த இரங்கல் தீர்மானத்தை எங்கள் கட்சி சார்பாக ஆதரித்து, சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

மறைந்த திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் எங்கள் குடும்பத்தைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. என்னுடைய மாமனார் அவர்களும் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களும் ஒன்றாகப் பள்ளிக் கூடத்திலும் கல்லூரியிலும் படித்தவர்கள். அந்தக் காரணத்தால் அவர்கள் ஜனாதிபதியாக இருந்த போதும்கூட ஏர் போர்ட்டில் வந்து இறங்கியவுடன் முதலில் எங்கள் குடும்பத்தைப் பற்றித்தான் விசாரிப்பார். அதன்பிறகுதான் அரசியலைப் பற்றி பேசவேண்டுமென்றால் ராஜ பவனத்திலோ அல்லது அவர்கள்



1975 ஏப்ரல் 17] [டாக்டர் மு. கருணாநிதி]

மாளிகையிலோ சந்தித்துப் பேசவேண்டும் என்று கூறுவார்கள். அவ்வளவு அபிமானமும் அன்பும் அவர்களுக்கு எங்கள் குடும்பத்தினர் மீது இருந்ததுண்டு.

நம்முடைய தமிழ் மாநிலத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் நம்முடைய மாநிலத்தில் பிறந்தார்கள் என்ற பெருமை ஒருபுறமிருக்க இன்று ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இருக்கிற ஆடிட்டோரியம் அவர்களால் ஏற்பட்டது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு பௌண்டேஷன் ஸ்டோன் போடவேண்டும் என்று கூறப்பட்டபோது இங்கு நிதிவசதி இடம் கொடுக்காத ஒரு நிலைமை இருந்தது. நான் தற்செயலாக டெல்லிக்குச் சென்றிருந்தபோது ஒரு கர்டிஸி கால் என்ற முறையில் அவரைச் சந்தித்தேன். அவர்களிடம் அப்போது தற்செயலாக இந்தக் கல் நாட்டு விழாவிற்கு நீங்கள்தான் வந்து கல் நாட்டு விழா நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அன்றிருந்த முதல்வர் அவர்களின் அனுமதி இல்லாமல் கூட நான் கூப்பிட்டபோது, கல்நாட்டு விழாவிற்குக் குறிப்பிட்ட அந்தத் தினத்தில் அவர்களுக்கு ஏழு நிகழ்ச்சிகள் இருந்தன. அகமதாபாத்திலும், போபாலிலும். அவைகளை எல்லாம் அவர்கள் ரத்து செய்துவிட்டு நீங்கள் அழைக்கின்ற காரணத்தால் நான் கண்டிப்பாக வருகிறேன் என்று இங்கு வருவதற்கு ஒப்புக் கொண்டார்கள். அவர்கள் ஒப்புக் கொண்ட காரணத்தால் அன்று நம் அரசும் மறு வார்த்தை சொல்லாமல் நிதி அளித்து அந்த ஆடிட்டோரியம் ஏற்படுத்தப்பட்டது. அது அங்குள்ள மாணவர்களுக்கும் ஒரு பெருமையை அளிக்கிறது.

அவர்களது அறிவாற்றலும், கல்வித் திறமையும் அவர்களது அரசியல் தந்திரமும் இணையற்றவை. அவர்கள் டீச்சராக இருந்து பணியாற்றியவர். அவர்களது பிறந்த தினத்தைத்தான் நாம் "டீச்சர்ஸ் டே" என்று கொண்டாடுகிறோம்.

அவர்கள் ஒரு பெரிய பிலாசபராகவும் ஒரு பெரிய ஸ்டேட்ஸ்மென்னாகவும் இருந்தார்கள். இன்று அவர்கள் மறைந்திருந்தாலும் அதை நாம் மறையும் வரை மறக்க முடியாமல் இருக்கும் விதத்தில் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுவரை non-Christian-க்கும் இந்தியருக்கும் கிடைக்காத Templeton பரிசு இந்த ஆண்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

இப்படி தமிழ் நாட்டுக்கு ஒரு பெரிய பெருமையை ஏற்படுத்தித் தந்த அவர்கள் இன்று மறைந்துவிட்டார்கள். அவர்களது மறைவுக்கு என் சார்பாகவும் எங்கள் கட்சியின் சார்பாகவும் அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவை முன்னவர் நாவலர் அவர்கள் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானத்தில் அவருடைய இரங்கலோடு என்னுடைய நெஞ்சத்தையும் இணைத்துக் கொண்டு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஏறத்தாழ எட்டு மாத காலமாக மரணத்தோடு போராடிய மன வலிமை படைத்த அந்த மாமேதை டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் மறைந்துவிட்டார்கள். கற்றோர்க்குத் தாம்வரம்பு ஆகிய தலைமையர் என்கின்ற பத்துப்பாட்டில் வருவதற்கொப்ப புகழொளி பாய்ச்சி உலகத்திற்கு வழி காட்டியவர் மறைந்து விட்ட தத்துவப் பேராசிரியர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆவார்கள்.

அவை முன்னவர் குறிப்பிட்டதைப் போல் ஆசிரியராக, துணைப் பேராசிரியராக, பிற்கு பேராசிரியராக அதனைத் தொடர்ந்து பல்வேறு பல்கலைக் கழகங்களின் துணைவேந்தராக, அதற்குப் பிறகு உலக நாடுகள் பலவற்றில் உலவி புகழ் மிக்க கருத்தாழம் படைத்த சொற்பொழிவாற்றி யவர் என்ற அளவுக்கு புகழை ஈட்டியவராக அவர்கள் வாழ்ந்தார்கள்.

இந்திய நாட்டின் தூதுவராக அவர்கள் ருஷ்ய நாட்டிற்குச் சென்றபோது, அவர்களை முதன் முதலில் சந்தித்த ருஷ்ய நாட்டின் அன்றைய அதிபர் ஸ்டாலின் அவர்கள், அவரிடம் எவ்வளவு அன்பு காட்டினார் என்பதும், வேறு எந்த நாட்டு தூதுவருக்கும் தரப்படாத மரியாதையை டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்டது என்பதும் உலக வரலாற்றில் மிக முக்கியமான குறிப்புகளாகும்.

1952-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டு வரையில் இந்தியத் திரு நாட்டின் குடியரசுத் துணைத் தலைவராக அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அந்தப் பொறுப்பின் காரணமாக டெல்லி மாநிலங்கள் அவையில் தலைமை வகித்த காலத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த அவையில் உறுப்பினராக இருந்து ஆற்றிய சொற்பொழிவை, அவைத் தலைவராக வீற்று இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் எவ்வளவு பாராட்டினார்கள் என்பதும், அவைத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், அண்ணா அவர் களுக்கும் இடையே சிலதத்துவங்களைப்பற்றி சில தர்க்க வாதங்கள் ஏற்பட்டு, அவைகளை எல்லாம் இன்றைக்கும் படித்துச் சுவைத்து மகிழத் தக்க தாக அமைந்து உள்ளதையும் யாரும் மறந்திருக்க முடியாது.

1962-ம் ஆண்டு இந்தியக் குடியரசுத் தலைவராக அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அவர்கள் இந்தியக் குடி யரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற நேரத்தில், நம்முடைய நண்பர் எட்மண்ட், மாரிமுத்து, திருப்பூர் மொய்தீன், ஜோதி அம்மையார்



எடுத்துக் காட்டியது போல், உலகமே ஒரு தத்துவ ஞானி, இந்தியாவினுடைய குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பது, போற்றுதற்குரியது, பாராட்டுதற்குரியது என்கிற அளவுக்கு வாழ்த்துக்களைக் குவித்தது.

"பாரத ரத்னா" என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது என்பது மாத்திரமல்ல, அவர் நோயோடு போராடிக்கொண்டு இருந்த அண்மைக் காலத்தில் கூட, "டெம்பிள்டன்" பரிசு என்கிற மிக உயர்ந்த பரிசு 96,000 டாலர் மதிப்புடைய அந்தப் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. அதை அவருக்கு உலகம் வழங்கிய பரிசு என்று கூறுவதை விட, அவருக்கு உலகம் வழங்கிய காணிக்கை என்று சொன்னால் அது மிகமிகப் பொருத்தம் உடையதாக இருக்கும்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், அவர் பெரிய "நூல் நிலையம்". இன்று அவர் மறைந்து விட்டார் என்றாலும் கூட, அந்த நூல் நிலையத்தில் பொதிந்து கிடக்கும் கருத்துக் களை நாம் எடுத்து ஆள, அவைகளை இயன்ற அளவுக்குப் பின்பற்ற உரிமை படைத்தவர்களாக இருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு மகத்தான நூல் நிலையமாக அந்த மாமேதை வாழ்ந்தார்கள். அறிவுக் கருவூல மாகவும், அடக்கத்தின் உருவமாகவும் அவர்களின் வாழ்க்கை அமைந்து இருந்தது.

ஜனநாயகத்தைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், "ஜன நாயகம் என்பது ஒரு அரசியல் முறை மாத்திரமல்ல, அது நாகரீகமான வாழ்க்கை நெறியும் கூட" என்று ஜனநாயகத்தைப் போற்றிப் புகழ்ந் தார்கள். அவர்கள் எடுத்துச்சொன்ன பல்வேறு கருத்துக்களில் "பிறரைக் குறை கூறுவதற்கு முன் தன்னையும், தன் பக்கத்தில் இருப்பவர்களையும் ஒரு முறை திரும்பிப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்ற கருத்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்க, எந்தக் காலத்திற்கும் ஏற்ற கருத்தாகும்.

இப்படிப்பட்ட அரிய பொன் மொழிகள் பலவற்றை உலகத்திற்குத் தந்த அந்த உத்தமரை நாம் இழந்து தவிக்கிறோம்.

தமிழ் நாட்டு மக்களின் சார்பாகவும், இந்த அவையின் சார்பாகவும் அவை முன்னவர் கொண்டு வந்த தீர்மானத்தினை வழிமொழி கிற வகையில் என்னுடைய இரங்கலை அவருடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நாட்டிலே வாழ்ந்த மக்களை மதித்துத்தான், ஒரு நாட்டை மதிப்பிடவேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். "எவ்வழி நல்லவர் நாட்டவர் அவ்வழி நெறியில் வாழிய நலனே" என்று சொன்னார்கள். அந்த நிலையில் உலகத்தில்

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] ]1975 ஏப்ரல் 17

இருக்கும் பேராசிரியர்கள் எல்லாம், உலகத்திலே உள்ள பெரிய நிறுவனங்கள் எல்லாம் பாராட்டக்கூடிய அளவுக்கு பெருமையாக வாழ்ந்து, இந்திய நாட்டிற்கும், சிறப்பாக தமிழ் நாட்டிற்கும் பெருமை அளித்த அந்தப் பெருமகனாரை இழந்து வருந்துகிற அவரது குடும்பத்தாருக்கு நம்முடைய மன்றத்தினர் தெரிவித்த இரங்கலோடு, என்னுடைய இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்து இருக்கிற இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றித் தரும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிட நேரம் மவுனமாக நிற்க, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மறைந்த பெரியாருக்கு மரியாதை தெரிவிக்கின்ற வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்தி வைக்கப்படுகின்றன. பேரவை நாளைக் காலை 9 மணிக்கு மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை காலை 9-57 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 2) பேரவை முன்வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

181. Notification issued in G.O.P. No. 554, Commercial Taxes and Religious Endowments, dated the 6th November 1974 in regard to amendment to the Revenue Department Notification No. 407 of 1972, published at page 895 of Part III of the Tamil Nadu Government Gazette, dated the 12th July 1972. [*Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act 1 of* 1959)].



1975 ஏப்ரல் 17]

### B. *Reports, Notification and Other Papers.*

@170. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 2 of 1975).

@171. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 3 of 1975).

@172. The Tamil Nadu Legislature Proceedings (protection of Publication) Bill, 1975 (L.A. Bill No. 4 of 1975).

173. Report of the Committee on Public Accounts on the Excesses over voted grants and charged Appropriations for the year 1970-71.

174. Report of the Committee on Public Accounts on the Accounts of the Government of Tamil Nadu for the year 1971-72.

---

@Despatched to members on 18th March 1975.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

---

### வெள்ளிக்கிழமை, 1975 ஏப்ரல் 18.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) நீத்தார் நினைவுக் குறிப்பு.

**முன்னாள் உறுப்பினர் திரு. என். துரைபாண்டியன் அவர்கள் மறைவு குறித்து.**

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீத்தார் நினைவுக் குறிப்பு. 1963 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை நாங்குனேரி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. என். துரைபாண்டியன் அவர்கள் 15—4—1975 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

### (2) வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Pay of workers of Electricity Board.*

*4 S. N. Q.—<u>THIRU N. K. PALANISAMY :</u> Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state —

(a) whether any negotiation between the workers and the State Electricity Board on the revision of the pay scales of the workers of the Board was held during April, 1975 ; and

(b) if so, the details thereof?

[1975 ஏப்ரல் 18

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> (அ) ஆம்.

(இ) வேலை அளவைகளோடு கூடவே, ஊதிய விதங்களை மாற்றி அமைக்கும் பிரச்சினை குறித்து ஆய்வு செய்வதற்காக, தமிழ் நாடு மின்சார வாரியம் அதிகாரிகள் குழு ஒன்றை அமைத்துள்ளது. 1974 டிசம்பரிலும், 1975 ஜனவரி, மார்ச், ஏப்ரல் திங்கள்களிலும் இக்குழு ஒப்புதல் பெற்ற இரண்டு தொழிலாளர் சங்கங்களுடன் ஏற்கெனவே விவாதங்கள் நடத்தியுள்ளது. மற்ற பதிவான தொழிற் சங்கங்களுடனும் வாரியம் விவாதங்கள் நடத்தக் கருதியுள்ளது.

<u>திரு. என். கே. பழனிசாமி:</u> இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பாக போர்டு சேர்மனுடன் தொழிலாளர்கள் பேச்சு வார்த்தை நடத்தி முடியாமல் கனம் அமைச்சரிடமே அந்த சம்பள விகிதத்தை மாற்றி அமைக்க விடப்பட்டதா? அப்படியானல் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கும், நெய்வேலி தொழிலாளர்களுக்கும் என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறதோ, அந்த அளவிற்கு இவர்களுடைய சம்பள விகிதங்களை மாற்றியமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> பேச்சுவார்த்தை நடந்து கொண்டுதான் இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னது போல் இரண்டு தொழிலாளர் சங்கங்களுடன் அந்தப் பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறது. மற்றச் சங்கங்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தவிருக்கிறோம்.

<u>திரு. நா. வீராசாமி:</u> சில தொழிற்சங்கங்கள் இந்தப் பேச்சு வார்த்தைகள் உடனடியாக தீர்க்கப்படக் கூடாது என்றும், டெல்லியில் இருக்கக் கூடிய கைடு லைன்ஸ் கமிட்டியின் பரிந்துரை வந்த பிறகு இதைத் தேர்தல் நேரத்தில் ஒரு அரசியல் பிரச்சினையாக ஆக்க முயற்சித்து சில சங்கங்கள் காலதாமதம் செய்வது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட சங்கங்களின் போக்கைக் கண்டிக்கக் கூடிய வகையில் அரசாங்கமே இதிலே ஒரு முடிவு எடுத்து உடனடியாக இந்தச் சம்பள விகிதங்களை அறிவிக்க நடவடிக்கை எடுக்குமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> சம்பள விகிதங்களை நிர்ணயிக்க குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவின் மட்டத்தில் இப் பிரச்சினை காலதாமதம் இல்லாமல் முடிக்கப்பட வேண்டும் என்று அரசின் சார்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இன்னொரு பிரச்சினை என்னவென்றால், ஊதிய முடக்கச் சட்டம்



1975 ஏப்ரல் 18]

இப்பொழுது இருக்கிறது. அதையும் கவனத்தில் கொண்டு தொழிலாளர்களுக்குக் கிடைக்கிற இலாபம் நஷ்டமாகிவிடாமல் இருக்க இந்தக் குழுவிற்கு தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலதாமதம் சில சங்கங்கள் வேண்டுமென்றே ஏற்படுத்தி வருகின்றன என்று குறிப்பிட்டாலும் கூட, நம்மைப் பொறுத்தவரையில் இதை சீக்கிரம் முடிக்க முயற்சித்து வருகிறோம்.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி:</u> அகில இந்திய ரீதியிலே ஒரு ரெவியு கமிட்டி போட்டிருக்கிறார்களே, அது சமீபத்திலே கூடியிருக்கிறதா? நம்முடைய மாநிலத்திலே இருக்கக் கூடிய சம்பள விகிதத்திற்கும், மற்ற மாநிலங்களிலே இருக்கக் கூடிய சம்பள விகிதத்திற்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா?

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> சம்பள விகிதம் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டுத்தான் இருக்கிறது. உறுப்பினர் சொல்லிய கைடு லைன்ஸ் கமிட்டி ஒரு தடவை கூடி, மீண்டும் கூடியதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

<u>திரு. கே. எ. வகாப்:</u> இந்தப் பேச்சுவார்த்தைகளில் நீண்ட காலதாமதம் ஏற்பட்டு வருவதால் தொழிலாளர்களிடையே இது சீக்கிரம் தீர்க்கப்பட வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையில் இன்னும் காலதாமதம் ஏற்படுமானல் அவர்களுக்கு அட்ஹாக் அமௌண்டாக ஒரு, அமௌண்டைக் கொடுத்து பிரச்சினையை அந்த முறையில் தீர்க்க அரசுக்கு சிந்தனை உண்டா?

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> ஏற்கெனவே இது போன்ற இன்டரிம் ரிலீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. பேச்சு வார்த்தை நடத்தி இப்பிரச்சினையை முடிக்க வேண்டுமென்று சர்க்கார் தெரிவித்திருக்கிறது. அட்ஹாக்காக குறிப்பிட்ட தொகையும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

<u>திரு. என். கே. பழனிசாமி:</u> கைடு லைன்ஸ் கமிட்டியின் இரண்டு கூட்டங்களுக்கு சர்க்காரின் சார்பிலே அவர்கள் செல்லவில்லை. சர்க்கார் அம்மாதிரி போக வேண்டாமென்று உத்தரவு போட்டார்களா? 1—12—74-லிருந்து புதிய சம்பளவிகிதம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் ஆகியிருக்கிறது. அதன் பிறகு இதிலே இவ்வளவு காலதாமதம் ஆக என்ன காரணம்?

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> ஏற்கெனவே உறுப்பினர்களுக்குப் பதில் சொல்லும்பொழுது நான் இதுபற்றி சொல்லியிருக்கிறேன், அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று

அவர்கள் நியமிக்கப்படவில்லை. கைடு லைன்ஸ் குழுவிற்கு அமைக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்கள் நம்முடைய அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவில்லை. மத்திய சர்க்கார், எலெக்ட்ரிசிட்டி போர்டு நிறுவனம் போன்றவற்றை அடங்கியவர்களாக இருக்கிறார்கள். ஏற்கெனவே நான் சொன்னது போல் 'It is only advisory' அவர்கள் கொடுக்கின்ற ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. எனவே, அதற்குக் காத்திருக்காமல் முடிவு செய்ய வேண்டும் என்றுகூட நாம் சொல்லியிருக்கிறோம்.

### பாதிரிவேடு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்

* 701 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டத்திலுள்ள பாதிரிவேடு—மார்தர்பாக்கம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் மிகப் பழுதுபட்டுள்ளமையால், அதை விரைவில் பழுதுபார்க்கும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். இப் பள்ளிக்கும், இதைப் போன்ற பழுதான செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மற்றும் சில பள்ளிகளுக்கும் பழுதுபார்க்க ஆகும் செலவினத்தை எங்ஙனம் ஏற்பது என்பது குறித்து தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) உடனும், பள்ளிக் கல்வி இயக்குநருடனும் தொடர்பு கொண்டு பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்த உயர்நிலைப் பள்ளியினுடைய கட்டடங்கள் எல்லாம் கூரை உட்பட மிகவும் பழுதுபட்டிருப்பதால் 1973 ஆம் ஆண்டிலே நிவாரண நிதியின் மூலமாக பழுதுபார்க்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டது. இந்த ஆண்டிலே கட்டடம் முழுவதும் பழுதுபார்க்கப்பட்டுவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதிலே தலைமைப் பொறியாளரும், பள்ளிக் கல்வி இயக்குநரும் பரிசீலனை செய்தாக வேண்டும். ஆகவே, இருவரையும் விரைவிலே தங்களுடைய அறிக்கையை அனுப்புமாறு அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.



### கரிசல்பட்டி உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்

* 702 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் தொகுதி, கரிசல்பட்டியிலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தற்போது ஆய்வில் இல்லை.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : ஆத்தூர் தொகுதி, கரிசல்பட்டியிலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் இரண்டு அறையுள்ள கட்டிடம்தான் இருக்கிறது. மீதி வகுப்புகள் தனியார் இடத்திலேயுள்ள கட்டிடங்களிலே இடம் பெற்றிருக்கின்றன. தனியார்கள் இந்தக் கட்டடங்கள் காலி செய்யப்பட வேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறார்கள். இதன் காரணமாக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையூறு இருப்பதால் அங்கே பள்ளிக் கட்டடத்தை உடனடியாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தின் சார்பாக 25,000 ரூபாய் செலவு செய்து கட்டடம் ஒன்று கட்டப்பட்டு அது இரண்டு அறை உள்ளதாக அமைந்துள்ளது. பள்ளிக் குழுவினர் 3 ஏக்கர் 14 சென்ட் நிலத்தைத்தான் கொடுத்திருக்கிறார்கள். மேற்கொண்டு 4 அறைகள் அமைந்த கூரைக் கட்டடத்தை தர உறுதி கூறியிருக்கிறார்கள். அதுபற்றிய விவரம் வரவில்லை. மேற்கொண்டு இரண்டு அறைகள் கொண்ட கட்டடம் கட்ட செயற்குறிப்பு, வரைபடம் ஆகியவற்றை திண்டுக்கல் நிர்வாகப் பதிவாளரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவைகள் கிடைத்ததும் இதிலே ஆவன செய்யப்படும்.

### இடைநிலை ஆசிரியர்களது கோரிக்கை

* 703 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 மார்ச்சு மாதத்தில் இடைநிலை ஆசிரியர் குழு ஒன்று கல்வி அமைச்சர் அவர்களைச் சந்தித்து கோரிக்கை ஏதேனும் தெரிவித்ததா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1974 மார்ச்சு மாதம் அந்தக் குழு கல்வி அமைச்சரைச் சந்திக்காவிட்டாலும், அதற்கு முன்பாவது அல்லது அதற்குப் பிறகாவது சந்தித்திருக்கிறதா? அக்குழு என்னென்ன கோரிக்கைகளை எழுப்பி இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது ஆணையாளரைச் சந்தித்தபொழுது அவர்களுக்கு தேர்வு நிலை தர வேண்டும் என்பதுதான் முக்கியமான கோரிக்கை. 1—4—74 முதல் 10 ஆண்டுகள் பணி புரிந்த இடை நிலை ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை வழங்க அரசு ஆணையிட்டது.

திரு. கோ. இளங்கோவன் : இடை நிலை ஆசிரியர்கள் பட்டம் பெற்ற பிறகும், பயிற்சியும் பெற்று இடைநிலை ஆசிரியர்களாகவே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் அளிக்க அரசு முன்வருமா? ஒன்றிய உயர் நிலைப் பள்ளிகளில் பட்டம் பெற்ற இடை நிலை ஆசிரியர்களை உடனடியாக நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியராக அமர்த்துவதற்கு ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இடைநிலை ஆசிரியர்கள் பட்டம் பெற்றுவிட்ட காரணத்தினாலேயே அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் தர இயலாது. அவர்கள் பெற்றிருக்கிற தகுதிக்கு ஏற்ப பட்டதாரி ஆசிரியர்கள் பதவியில் அவர்களை நியமிக்க முன்னுரிமை தர வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட முன்னுரிமை தொடர்ந்து வழங்கப்பட்டிருக்கிறது.

*New industries in Joint Sector.*

* 704 Q.—THIRU N. K. PALANISAMY :
THIRU B. VENKATASWAMY :
THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that a project to produce high quality grey iron castings used for making engine blocks is to be set up in Tamil Nadu in the joint sector; and

(*b*) if so, the details thereof?





மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஆண்டு ஒன்றுக்கு 20,000 டன்கள் வரை உலைக்கள வார்ப்படங்கள் தயாரிக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு இசைவுக் கடிதம் பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு பெல்கிரேடில் உள்ள "பேப்ரிகா ஓட்லிவாகா" என்ற நிறுவனம் தொழில் நுட்ப உதவி அளிக்கும். இத்தொழிற்சாலை மதிப்பீட்டுச் செலவு ரூ. 11 கோடி. "அமால்கமேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்" என்ற கம்பெனியுடன் சேர்ந்து கூட்டுத் துறையில் தொழிற்சாலை நிறுவப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : இதில் சர்க்காருடைய பங்கென்ன? மற்ற நிறுவனங்களுடைய பங்கென்ன? இது எந்த இடத்தில் லொகேட் செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது அரக்கோணத்தில் அமைக்கப்படும் என்ற குறிப்பு இருக்கிறது. இதிலே total capital outlay Rs. 11 crores, equity capital may be Rs. 4 crores. TIDCO 26%, Amalgamations Private Ltd. 25%, அதிலே tro. public.

திரு. என். கிட்டப்பா : இந்தத் தொழிற்சாலை நீண்டகாலமாக ஆய்வில் உள்ளதாகத் தெரிகிறதே, இது எப்போது செயல்படத் துவங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதல் கட்டம் 1977 இல் முடிந்து செயல்படத் துவங்கும். இதன்மூலம் 500 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : இதற்கு 11 கோடி ரூபாய் மூலதனம் போடப்படும் என்று சொல்லப்படுகிறதே, எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதல் கட்டமாக 500 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று தெரிவித்தேன்.

திரு. கே. எ. வகாப்: அரக்கோணத்தில் இதற்கு முன்பே ஒரு இரும்புத் தொழிற்சாலை இருக்கிறது. இதுவும் அரக்கோணத்தில் அமையும் என்று சொல்லப்படுகிறதே, அதோடு இணைப்பான தொழிற்சாலையாக இது இருக்குமா? தனியாக இயங்கும் என்றால் வேறு ஒரு தொழிற்சாலையையும் அதே ஊரில் வைக்க வேண்டுமா? வட ஆற்காடு மாவட்டத்தில் வேறு பல ஊர்கள் இருக்கின்றனவே, அவற்றில் ஏதாவது ஒன்றில் இதனை நிறுவக் கூடாதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரக்கோணம் வட ஆற்காடு மாவட்டத்தில்தான் இருக்கிறது.

* 705 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether a joint sector project is to be set up in Tamil Nadu for the manufacture of measuring instruments like micrometers, dial guages, etc., and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) கூட்டுறவுத் துறை நிறுவனமாகிய "நுண் அளவைக் கருவிகள் லிமிடெட்" இயந்திரத் தொழிலுக்கு வேண்டிய மைக்ரோ மீட்டர்கள், டையல் காஜ்கள் மற்றும் கருவிகளை அயல்நாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் தயாரிக்கும். அயல்நாட்டு ஒத்துழைப்பிற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் அடிப்படையில் அயல்நாட்டு நிறுவனங்களுடன் கடந்த அக்டோபர் மாதத்தில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. தொழிற்சாலை அடையாரில் அமைக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி: இது எந்த நாட்டினுடைய கொலாபரேஷனுடன் அமைக்கப்பட இருக்கிறது? இதன் முதலீட்டின் ஒவ்வொன்றின் பங்கென்ன? சர்க்காருக்கு டாமினேடிங் பொசிஷன் இருக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதில் capital cost Rs. 80 lakhs. Equity capital Rs. 30% lakhs. இதிலே TIDCO 26% தனியார் 25% and public 49%. Foreign technical know-how is from M/s. C. E. Johnson, Sweden and J. M. Maskines, Stockholm.



* 706 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that a joint sector enterprise is to be set up in Tamil Nadu for the manufacture of electronic items like Capacitors; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) கூட்டுத் துறையில் ஆரம்பிக்கப்பட்ட "தமிழ்நாடு அனைத்து நாடுகள் மின் அணுவியல் நிறுவனம்" கப்பாசிட்டர்கள் மற்றும் மின்சாரக் கருவிகள் பாகங்கள் ஆகியவற்றை சுமார் ரூ. 200 லட்சம் செலவில் உற்பத்தி செய்யும். அன்னிய தொழில்நுட்ப உதவியுடன் இந்தத் தொழிற்சாலை ஹோசூரில் நிறுவப்படும்.

திரு. என். கே. பழனிசாமி: எந்த தேசத்தின் கொலாபரேஷனுடன் ஆரம்பிக்கப்படுகிறது? அது எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பெங்களூரைச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தியோடு ஒரு டீம் யூ.கே., யூரோப், கானடா போன்ற நாடுகளைப் பார்த்து வந்திருக்கிறது.

Plassy Co., Ltd., United Kingdom, Dal Electronics Corporation, U.S.A., Fly-type Ltd., Switzerland, Ceramic Capacitors. ஆகிய இந்த நான்கு நிறுவனங்களுடன் கொலாபரேஷனுக ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில் ஒரு பொதுவான குறை மெட்டீரியல்ஸ் இல்லை என்பது தான். கப்பாஸிடர்கள் இல்லாத காரணத்தினால் பல வேலைகள் தாமதப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஆகவே, சீக்கிரமாக இந்தத் தொழிற்சாலையை நிறுவி கப்பாஸிட்டர்கள் தயாரிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எவ்வளவு சீக்கிரமாக நிறுவினாலும் உடனடியாக கப்பாஸிடர்களைக் கொடுத்துவிட முடியாது.

THIRU K. M. SUBRAMANIAM : From the various answers to previous questions and the answer to the present question, it appears that this Socialist Government seems to be fond of joint sectors. Do they believe that these joint sectors should continue?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. இதை மத்திய சர்க்காரும் வரவேற்று இருக்கிறது. ஜாயின்ட் செக்டாரில் வைப்பதுதான் நமது கொள்கை.

திரு. நா. வீராசாமி : நமது சர்க்கார் கொள்கைப்படி இந்தத் தொழிற்சாலைகளை ஜாயின்ட் செக்டாரில் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஜாயின்ட் செக்டாரில் துவங்கப்படுகிற இந்தத் தொழிற்சாலையில் 90 சத விகிதம் இந்த நாட்டைச் சேர்ந்தவர் களுக்கே வேலை தரப்படவேண்டுமென்று இந்தச் சர்க்கார் ஆணை பிறப்பித்திருக்கிறதா? இல்லையென்றால் அப்படி ஆணை பிறப்பித்து இனிமேலாவது தமிழ்நாட்டில் அமைக்கப்படுகிற தொழிற்சாலை களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கே 90 சதவீதம் வேலை தரப்படவேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே இது போல அரசாங்கத்தின் சார்பாக ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. நம் நாட்டில் ஆரம்பிக்கப்படுகிற தொழிற்சாலைகளில் நம் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கே முக்கிய இடம் தரப்படவேண்டு மென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற ஜாயின்ட் செக்டார் நிறுவனங்களில் இது பின்பற்றப்பட்டு வருகிறது.

*707 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to set up a unit for the manufacture of Seamless Tubes in the joint sector in the State ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆண்டு ஒன்றுக்கு 60,000 டன்கள் பற்ற வைப்பு இல்லாத உருக்குக் குழாய்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுத்துறையில் அமைக்க அனுமதி கேட்டு இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது.



திரு. என். கே. பழனிசாமி : ஜாயின்ட் செக்டார் போய் நாஷனல் செக்டார் என்று வந்துவிட்டது. பொதுஜனங்கள் பணத்தை தனிப்பட்ட சிலர் கையாண்டு டாமினேட் செய்கிற பொஸிஷன் தான். கூட்டுறவு அமைச்சர் வெளிநாடுகளுக்கு எல்லாம் சென்று அந்த டீடைல்சுகளை எல்லாம் அறிந்து வந்திருப்பார் என்று நினைக்கிறேன். இன்னும் பெண்டிங்காக இருக்கிற பல தொழில்களை எல்லாம் எப்போது ஆரம்பிக்க வாய்ப்பிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் தொழிற் சாலையைப் பொறுத்தவரையில் திருச்சி, பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் நிறுவனமே ஆரம்பிக்க இருப்பதாக ஒரு குறிப்பு இருக்கிறது.

As Bharat Heavy Electricals Ltd., Trichy had proposed to set up a seamless steel tubes project in this State, TIDCO was advised not to pursue the question of setting up a similar project in the State. However TIDCO has been requested to ascertain the progress, if any, made by the Bharat Heavy Electricals, Ltd. and send a report.

*708 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state whether there is any proposal under the consideration of the Government to set up a plant either in Public Sector or Joint Sector for producing Polythene Granules?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

*Sugar cane cess fund*

*709 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government receive cess from sugar mills in the State ; and

(b) if so, the amount collected during 1973 and 1974?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) 1973 இல் ரூ. 358.39 லட்சம்.

1974 இல் ரூ. 340.45 லட்சம்.

* 710 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரும்பாலை செஸ் வரியை சம்பந்தப்பட்ட ஆலைச் சுற்றுப்புறச் சாலைகள் செப்பனிடப்படவும், மற்ற செலவுகட்குமே ஒதுக்கும் திட்டம் எது முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கரும்புத் தீர்வை நிதி 1959–60 ஆம் ஆண்டிலிருந்து சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: இந்த செஸ்ஸை சர்க்கார் வசூல் செய்து சர்க்கரை ஆலையினரிடம் கொடுக்கிறது. ஆலைக்குத் தேவையான கரும்பு பூராவும் பக்கத்துக் கிராமங்களிலிருந்து—பதினைந்து இருபது மைல் தூரத்திலிருந்து வருகிறது. இந்த செஸ் பணத்தை மில்காரர்களிடம் கொடுப்பதால் அவர்கள் பக்கத்துச் சாலைகளை மட்டும்தான் ரிப்பேர் செய்கிறார்கள். அதனால், மற்ற விவசாயிகளுக்கு இடைஞ்சலாக இருப்பதால் சர்க்காரே பணத்தை யுடிலைஸ் செய்து சாலைகளைச் சரிப்படுத்தும் முறையிலே ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: உறுப்பினர் அவர்கள் சொல்கிற தகவல் சரியானதல்ல. இந்த வருவாய் இனத்தை சர்க்காரே தான் செலவு செய்கிறதே தவிர, அதை கரும்பு ஆலைக்காரர்களிடம் கொடுப்பதில்லை.

திரு. வா. மை அப்துல் ஜப்பார்: கரும்பாலைகளிலிருந்து எந்த அடிப்படையில்—எந்த விகிதாசாரத்தில்—செஸ் வரி வசூலிக்கப்படுகிறது? நான் அறிந்த வரையில், கரும்பாலைகளிலேயே கோடிக்கணக்கான ரூபாய்கள் செஸ்ஸாக வசூலிக்கப்படாமல் கடனாக அவர்களிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். சுற்றுப்புற கிராமச் சாலைகள் ஒழுங்காகச் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. அதனால், இந்தத் தொகையை அரசாங்கம் வசூல் செய்து, அந்தந்த ஒன்றியங்களிடம் அந்தத் தொகையைக் கொடுத்து போக்குவரத்துச் சாலைகளை அபிவிருத்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் என்று கேட்டார்கள். 1950 ஆம் ஆண்டு இது தொடங்கப்பட்டபோது டன் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் அளவில்



வசூல் செய்யப்பட்டது. பின்னர் அது உயர்த்தப்பட்டு இப்பொழுது ஐந்து ரூபாய் அடிப்படையில் வசூல் செய்யப்பட்டாலும், புது ஆலைகளிடமிருந்து கரும்பு டன் ஒன்றுக்கு இரண்டு ரூபாய்தான் வசூல் செய்யப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைப்பது என்பதற்கு சாத்தியக்கூறு இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அரசாங்கம் சர்க்கரை ஆலைகளிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களை செஸ் வரியாகப் பெறுகிறது. ஆனால், இன்னும் சர்க்கரை ஆலைகளைச் சுற்றிலும் உள்ள பல ஊர்களுக்கு பாதை வசதி இல்லாமலும், இருக்கிற பாதைகள் செப்பனிடப்படாமலும் இருக்கின்றன. அந்த நிலையைப் போக்கி, நல்ல பாதை வசதிகள் செய்து கொடுக்கப்பட அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்தத் தீர்வை நிதி மூலம் கிடைக்கின்ற வருவாய் எல்லாம் இதற்குச் செலவாகவில்லை என்பது உண்மை. அதற்காக 14—3—1975 அன்று அக்கவுண்டென்ட்-ஜெனரலிடமிருந்து ஒரு குறிப்பு வந்துள்ளது. அதில், வருவாய்க்கு ஏற்றவாறு செலவு செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. எம். செல்வராஜ்: தலைவர் அவர்களே, இப்பொழுது வசூலிக்கப்படுகிற கரும்பு செஸ் நிதியிலிருந்து கூடுமானவரையில், உயர்ந்த பட்சமாக சாலைகளுக்காகச் செலவழிக்கப்படுகிறது என்று ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வட்டாரத்தில்—சர்க்கரை ஆலையைச் சுற்றியிருக்கும் பகுதியில் இருக்கும் ஏரி, குளங்கள் முதலியவற்றை மராமத்து செய்வதற்கு இந்த நிதியிலிருந்து ஒரு பகுதியைச் செலவழிக்க அரசு ஆய்வு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: 1950 ஆம் ஆண்டு சர்க்கார் வெளியிட்ட உத்தரவின் அடிப்படையில் நாம் செயல்படுகிறோம். ஷுகர்கேன் ரிசர்ச் ஓர்க், ஷுகர்கேன் டெவலெப்மென்ட் ஓர்க், ஷுகர்கேன் ரோடு டெவலெப்மென்ட் ஓர்க் ஆகிய இந்த மூன்று இனங்களுக்காக செஸ் பண்டு செலவழிக்கப்பட வேண்டுமென்று முன்னால் உத்தரவாகியிருக்கிறது. அந்த அளவுக்குக்கூட செலவாகாமல் இருக்கிறது. அதுதான் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். ரோடு டெவலெப்மென்டுக்கு இந்த நிதியைச் செலவிடுவதைப் போலவே, ஏரிகள், குளங்களை தூர் எடுப்பதும் கரும்பு

உற்பத்திக்கு அனுகூலமாக இருக்குமாதலால் அதற்கும் இந்த நிதி யிலிருந்து செலவிடலாம் என்று உறுப்பினர் சொன்ன யோசனை கவனிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : இந்தக் கரும்பாலைகளிடமிருந்து 1974–75 இல் வரவேண்டிய செஸ் நிதி பாக்கி எவ்வளவு இருக்கிறது? இந்தப் பணத்தைக் கொண்டு சாலைகள் முன்னேற்றமான காரியங் களுக்குச் செலவிடுவது என்று சொல்லும்போது, ஒவ்வொரு ஆலையும் தரும் பணத்தின் அளவுக்கு அங்கு முன்னேற்றமான காரியங்கள் செய்யப்படுகின்றனவா? அல்லது, ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டு, எந்த எந்தப் பகுதியில் என்னென்ன மாதிரியான முன்னேற்றங்கள் செய்யப்படுகின்றன. என்ன, என்ன ஆராய்ச்சி செய்வது என்பதை ஆராய்ந்து செயல்படுகிறதா? அப்படி செய்யப் பட்ட முன்னேற்றத்தினுடைய விவரம் என்ன என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பாக்கி எவ்வளவு இருக் கிறது, எந்த எந்த ஆலைகளிடமிருந்து எவ்வளவு பாக்கி இருக்கிறது என்பதற்கு தனியாக ஒரு கேள்வி கேட்டால், நான் விவரத்தைச் சேகரித்துக் கொடுக்க முடியும்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இதுபோன்று செஸ் நிதி சில ஆலைகளிலிருந்து மட்டும் வசூல் செய்யப்பட்டு, சில ஆலைகளிலிருந்து வசூல் செய்யப்படாமலும், அப்படி வசூல் செய்த தொகையை விடுவிக்காமலும், செலவு செய்யாமலும் இருப்பது உண்மையா? ஒட்டுமொத்தமாக வசூலிக்கப்பட்ட தொகையை அந்த ஆலைகளிடமே இந்த ஆண்டு முதல் ஒப்படைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆலை அதிபர்களிடம் ஒப்படைத்துவிடுவது என்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியாது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : இதைப்போல ஏற்கெனவே கரும்பு செஸ் நிதியிலிருந்து பல ஆலைகள் தங்களுடைய பகுதிகளில் அபிவிருத்தி வேலைகளையெல்லாம் அதிகமாகச் செய்து பயனடைந் திருக்கின்றன. அதிகமாகப் பயனடையாத ஆலைகளுக்கு கரும்பு செஸ் நிதியை ஒதுக்கி அந்தப் பகுதியை வளமடையச் செய்வதற்கும், பாதைகளைச் செப்பனிடுவதற்கும் அரசு உத்தரவிடுமா?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : செஸ் நிதியை ஆலைகளே பயன்படுத்துவது என்பது சரியல்ல. ஆலைகளிடமிருந்து தீர்வை வசூலிக்கப்பட்டு, அரசாங்கம் அதற்காக தனியாக இன்ஜினியர்களை நியமித்து ரோடுகளைப் போட்டுக்கொண்டிருக்கிறோம். உறுப்பினர் சொல்வது—புதிய ஆலைகளுக்குப் போதிய நிதி இல்லை என்பது. அது அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, செஸ் நிதி பாக்கி இருப்பதாகச் சொல்லப்பட்டது. கூட்டுறவுத் துறையில் இயங்கும் சர்க்கரை ஆலைகளெல்லாம் செஸ் நிதி தருகின்றன, ஆனால், தனியார் துறையில் இருக்கும் சர்க்கரை ஆலைகள் ஒழுங்காகத் தருவதில்லை என்று புகார் இருக்கிறதே, அது உண்மையாக இருக்குமானால் அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்துக் கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எந்த எந்த ஆலைகளிட மிருந்து எவ்வளவு பாக்கி இருக்கிறது என்கிற தகவலை சேகரித்துத் தான் நான் சொல்ல முடியும்.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, செஸ் நிதியாக வசூலிக்கும் பணத்தை அரசாங்கத்தின் பொது நிதியில் சேர்த்துக் கொண்டு, அதிலிருந்து செலவழிப்பதாகத் தெரிகிறது. செஸ் நிதி யாக வசூலிக்கும் பணம் அந்தந்த சர்க்கரை ஆலைப் பகுதிக்கே செலவழிக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தை அரசு வகுக்குமா? இதுவரை ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு தொகை வசூலிக்கப் பட்டிருக்கிறது? எவ்வளவு தொகை ஒவ்வொரு ஆலைப் பகுதியிலும் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1973, 1974 ஆகிய இரண்டு ஆண்டுகளில் எவ்வளவு வசூல் செய்யப்பட்டது, எவ்வளவு வருவாய் வந்தது என்று ஏற்கெனவே தகவல் சொன்னேன். ஆனால், வசூல் செய்யப்படுகிற—வருவாயாக வருகிற—எல்லாப் பணமும் இதற்கு என்று செலவழிக்கப்படவில்லை. பொது நிதிக்குப் போகிறது என்பது உண்மை. அக்கவுண்டென்ட்-ஜெனரல் அவர்கள் 14—3—1975 அன்று—அதிக நாள் இல்லை—சொல்லியுள்ளார்.

The expenditure made from the fund was much below the accruals. The Committee on Public Accounts in 1965–66 also observed that the Government's position regarding this fund was

[1975 ஏப்ரல் 18

that of a trustee and it was only just that moneys were spent within a reasonable time on the objectives for which the cess was collected.

அது ஆய்வில் இருக்கிறது.

திரு. ந. நாச்சியப்பன் : தலைவர் அவர்களே, இதுவரை கரும்பு செஸ் நிதி வசூலிக்கப்படுவது, அந்த ஆலை அல்லாத பகுதிகளில் உள்ள சாலைகளைச் செப்பனிடுவதற்கும் பணம் செலவழிக்கப்பட்டு வருகிறது. இனியாவது, அந்தந்த கரும்பு ஆலைப் பகுதியைச் சேர்ந்த அந்த வட்டாரத்தில் இருக்கும் சாலைகளைச் செப்பனிடுவதற்கே அந்த ஆலையிலிருந்து வரும் செஸ் நிதியைச் செலவழிக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கரும்பு விளைகிற அந்தப் பகுதிகளுக்குத்தான் இந்தச் சாலைகள் போடப்பட வேண்டும். உறுப்பினர் அவர்கள், அதிகமாக செஸ் கொடுக்கும் அந்த ஆலைப் பகுதியில் அதிகமாகச் செலவு செய்யக்கூடாதா என்று கேட்கிறார்கள். அப்படிச் செய்ய முடியாது. புதிதாகத் திறக்கப்படும் ஆலைப் பகுதியில் அவ்வளவாகத் தொகை கிடைக்காதாகையால், பொதுவாக செஸ் நிதியை மொத்தமாக வைத்துக்கொண்டு, எங்கே அதிகமாகத் தேவைப்படுகிறதோ அங்கே அதைச் செலவு செய்கிறோம்.

திரு. கே. எ. வகாப் : அமைச்சரவர்கள் இந்த வாதத்தைச் சொல்கிறார்கள். அந்தந்த ஆலைகளிலிருந்து வசூலிக்கும் பணத்தை அங்கிருக்கும் விவசாயிகள் கொடுக்கிறார்கள் என்று கொள்ள வேண்டும். அந்தப் பலனை அந்த அந்தப் பகுதியில் உள்ள, கரும்பு பயிர் செய்யும் விவசாயிகள்தான் அடைய வேண்டும். படாளத்தில் வசூலிக்கும் பணத்தை ஆம்பூருக்கோ, ஆம்பூரில் வசூலிக்கும் பணத்தை படாளத்திற்கோ செலவிடுவது பொருத்தமாகத் தெரியவில்லை; நியாயமாகவும் தெரியவில்லை. ஆகவே, அந்தந்தப் பகுதியில் வசூல் செய்யும் தொகையை அந்தந்தப் பகுதியில் இருக்கும் சாலைகளை அபிவிருத்தி செய்வதற்குச் செலவிடுவதுதான் நலமாக இருக்கும். அந்தந்த விவசாயிகள் கொடுக்கும் பணத்தை அவ்வாறு செலவிடுவதுதான் பொருத்தமாக இருக்கும். சிறப்பாக இருக்கும். அதை அரசாங்கம் ஒரு கொள்கையாக ஏற்று அப்படிச் செய்தால்தான் எங்களுடைய கோரிக்கை நிறைவேறும். படாளம் சர்க்கரை ஆலை.



1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரும்பத் திரும்ப அதையே சொல்கிறீர்களே.

திரு. கே. எ. வகாப் : பல லட்ச ரூபாய் கொடுத்திருந்தாலுங்கூட போதிய விகிதாசாரம் கிடைக்கவில்லை. அப்படிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வேறு ஆலைகளுக்கு மாற்றுவதாகச் சொன்னார்கள். வேறு ஆலைகளுக்கு மாற்றுவது இல்லை. ஆலைப்பகுதிகளுக்குச் செலவழிக்கப்படுகிறது. பொதுவாக எந்த எந்த ஆலைகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறதோ, எந்தப்பகுதியிலிருந்து வருவாய் வருகிறதோ அந்தப் பகுதிக்கு முதல் இடம் கொடுக்கப்படுகிறது. ஒரு புதிய ஆலை தொடங்குகிறபோது, அந்தப் பகுதியில் போதிய அளவு ரோடு வசதி இல்லாமல் இருந்தால், அதற்கும் இந்த நிதியிலிருந்துதான் செலவழிக்கவேண்டும். அதற்கு வேறு நிதி இல்லை.

[முற்பகல் 9-30]

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, இந்த செஸ் நிதியிலிருந்து அந்தந்த ஆலைப் பகுதியிலே ரோடுகள் செப்பனிடவும் புதிய ரோடுகள் போடவும் செலவிடலாம் என்று சொன்னார்கள். இந்த நிதியைத் தவிர, விவசாயிகளிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500, ரூ. 1,000 வசூலிக்கப்படுகிறதே, அது அரசுக்குத் தெரியுமா? அது முறைதானா? உதாரணத்திற்கு சக்தி சர்க்கரை ஆலை நிறுவனத்தினர் அவர்களே தங்களுக்கு சிவில் இன்ஜினீயரிங் டிபார்ட்மென்ட் வைத்திருக்கிறார்கள். இதுபோல், ரோடுகள் போட ஆலையிலேயே ஒரு பிரிவு இருக்கிறது. அவர்கள் இந்த செஸ் தவிர, ரூ. 500 ரூ. 1,000 விவசாயிகளிடமிருந்து வசூல் செய்து, இந்த செஸ் நிதியையும் சேர்த்து, ரோடு வேலை செய்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா? அது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன புகாரை அரசு கவனத்தில் நிச்சயமாக எடுத்துக்கொண்டு நடவடிக்கை தேவையானால் எடுக்கும். ஆனால், இந்தச் சர்க்கரை ஆலை ஏதோ வசூல் செய்து, செஸ் நிதியில் சேர்த்து விடுவதாகச் சொன்னார்கள். அது இருக்க முடியாது. ஏனென்றால், செஸ் நிதி அரசின் கையிலிருக்கிறது. விவசாயிகளிடமிருந்து வசூல் செய்து ரோடு போடுவதாகச் சொன்னார்கள். அப்படிச் செய்வதாக இருந்

தால், கரும்பு விவசாயிகளிடமிருந்து வசூல் செய்வது அதிகாரமற்ற செயலாக இருக்கும். ஆகவே, என்ன செய்யவேண்டுமோ அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கே. பழனிசாமி: சார், திருநெல்வேலியிலிருந்து பக்கத்திலே ஒரு ஷுகர் பாக்டரிக்கு ரோடு இல்லை. செஸ் ஃபண்டை உபயோகித்து ரோடு போடுவது எப்படி என்று தெரியவில்லை. இது முக்கியமான ரோடு நேரடியாக, டவுனிலிருந்து ஷுகர் பாக்டரிக்கு என்ன காரணத்தால் ரோடு போடாமல் விடப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: திருநெல்வேலியில் ஏதாவது செஸ் ஃபண்டிலிருந்து சாலைக்குச் செலவு செய்ததாக என்னிடத்தில் குறிப்பு இல்லை. ஏனென்ருல், நெல்லை மாவட்டத்தில் சர்க்கரை ஆலையே இல்லை. ஆனல், மதுரை மாவட்டத்தில் என்ன நடக்கிறது, எவ்வளவு வசூல் ஆகிறது, என்ன செலவு செய்யப் பட்டது என்பதைப் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால், விடை சேகரித்துத் தரப்படும்.

### *New Cattle feed.*

* 711 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether a new protein rich cattle feed by using urea and molasses has been developed in the Agricultural University at Coimbatore ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

### கம்பம் பகுதியில் உருளைக்கிழங்கு சாகுபடி

* 712 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கம்பம் பகுதியில் உருளைக்கிழங்கு சாகுபடியைப் பரப்பும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?





மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) ஆம்.

(இ) கம்பம் பள்ளத்தாக்கில் சென்ற பருவத்தில், அதாவது ஐப்பசி மாதம்—குளிர் காலம் (அக்டோபரில்)—30 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டது. இந்த வருஷம் ஏறத்தாழ 200 ஏக்கர்கள் பயிர் செய்வதாக செயற் குறிப்பு உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, குளிர் காலத்தில் போட்ட காரணத்தாலோ என்னவோ அந்த உருளைக் கிழங்கு பயிர்கள் சரிவர வரவில்லையென்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அந்தத் திட்டம் பள்ளத்தாக்குப் பகுதியில் தோல்வி அடைந்ததாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: பலவகையான உருளைக் கிழங்குகள் அங்கே சாகுபடி செய்யப்பட்டன. இரண்டு வகைகள் நன்ருக வருகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஒன்றின் பெயர் இன்னென்றின் பெயர் 'President' 'Up to date' இந்த இரண்டு வகைகளையும் பயிர் செய்யலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. குளிர் காலத்தில்தான் பயிர் செய்யப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்திலே, கொடைக்கானல் பகுதியிலே உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டதே, அதை அங்கு வெற்றிகரமாகப் பயிரிட முடி கிறதா? தமிழகத்தில் எங்கெங்கு உருளைக்கிழங்கு வெற்றிகரமாகப் பயிரிடப்படுகிறது என்ற விவரத்தை அமைச்சரவர்கள் தெரிவிப்பார் களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: உருளைக்கிழங்கு பயிரிடு கின்ற பகுதிகளிலே குளிர் தேவை. குளிர் நேரத்தில்தான் மற்ற இடங்களில் பயிர் செய்ய முடியும். நீலகிரி மலையிலும் சரி, கொடைக் கானலிலும் சரி, ஏற்கெனவே பயிராகி வருகிறது. அது தவிர, சமவெளி பகுதியில் பயிரிட முடியுமா என்பது சோதனையில்தான் இருக்கிறது என்று சொன்னேன்.

### திருநெல்வேலியில் வறட்சி நிவாரணப் பணிகள்

* 713 வினு—திரு. எம். முத்தையா. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்திற்கென் அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

[1975 ஏப்ரல் 18

(இ) அதில் ஒட்டப்பிடாரம் துணை வட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்திற்கென அரசு ரூ. 74.50 லட்சம் ஒதுக்கியுள்ளது.

(இ) அதில் ஒட்டப்பிடாரம் துணை வட்டத்திற்கு குடி தண்ணீருக்காக ரூ. 1.25 லட்சமும், சிறு பாசனத்திற்காக ரூ. 2 லட்சமும், சாலை வசதிக்காக ரூ. 80,000-மும் ஆக மொத்தம் ரூ. 4,05,000 மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணி பற்றியது. மற்ற மாவட்டங்களைப் பற்றிக் கேட்டால் விடை வராது.

திரு. எஸ். முகமது கோதர் முகைதீன் : தலைவரவர்களே, இந்த ஒட்டப்பிடாரம் துணை மாவட்டமானது, வறட்சியான பகுதியாகவும் மேலும் அங்கே சாலைப் பராமரிப்புகள் அதிகம் இல்லாத நிலையிலேயும் உள்ள இடமாக இருக்கிறது. ஆகவே, அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல், முன்பு ஒதுக்கியிருந்த பணத்திலிருந்து அதிகப்படியாக வறட்சிக்குப் பணம் ஒதுக்கி, அங்கே சாலையமைக்கவும் மற்றும் சிறு பாசனத் தேவைகளையும் நல்ல முறையிலே கவனிக்கவும் அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஒட்டப்பிடாரம் பகுதிக்கு நானே சென்று, வறட்சி நிவாரண வேலைகள் நடைபெறுகின்ற பகுதிகளைப் பார்வையிட்டேன். தேவை அதிகமானால் அதற்கு வேண்டிய தொகையையும் அளிக்க வேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவரவர்களே, இது 1974–75-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட பணம். 1975–76-ம் ஆண்டு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது? ஒட்டப்பிடாரம் ஒன்றியத்திற்கும் விளாத்திகுளம் ஒன்றியத்திற்கும் எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தனித்தனியாக எவ்வளவு என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால், ஒதுக்கப்படுகிற நிதி இப்பொழுது ரூ. 74.50 லட்சம். எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய வேலைகள் 1½ பங்கு எடுத்துக்



1975 ஏப்ரல் 18]

கொள்ளலாம் என்று பொதுவாகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக, ரூ. 37½ லட்சம் மே மாதம் வரையிலே செலவு செய்ய ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் தேவை என்ன என்பதற்குக் கணக்குக் கொடுக்குமாறு அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, அதிலே, சாலை பணிக்கென்று எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது? குறிப்பாக, அம்பாசமுத்திரம் யூனியன் பகுதியில் சாலைக்கென அதிகமாக ஒதுக்கப்படவில்லையென்று பேசப்படுகிறது. அதைப்பற்றி அமைச்சரவர்கள் ஏதாவது சொல்வார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்திறகுக் குடி நீர்த் திட்டத்திற்கென்று ரூ. 25.50 லட்சம்; சிறு பாசன திட்டத்திற்கென்று ரூ. 23 லட்சம்; நடுத்தர, பெரிய பாசனத்திற்கு ரூ. 15 லட்சம் ; சாலைப் பணிகளுக்கு ரூ. 11 லட்சம், ஆக மொத்தம் ரூ. 74.50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தனித்தனியாக, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் எவ்வளவு என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. அவர்கள் தனியாகக் கேள்வி போடுவார்களானால் பதில் சொல்லலாம்.

திரு. வி. பழனிவேல் : தலைவரவர்களே, இந்த வறட்சி நிவாரணப் பணிகளிலே ரோடு போடுகின்ற பணிக்கு சர்வே நடத்தப்படுகிறது. வறட்சியின்போது சரிவர வேலை செய்ய முடியாமல், ரோடும் நல்ல முறையிலே அமையாமலிருக்கிறது. இந்த வறட்சி முடிந்தபிறகு, போடப்படுகிற ரோடும் நல்ல முறையிலே இருக்க முடியவில்லை. ஆகவே, இந்த வறட்சிப் பணியின்போது, உடனே அங்கங்கே, ரோடு அமைக்க உதவியாக, சிறுசிறு குட்டைகளை ஏற்படுத்தினால், நீர்த் தேக்கங்கள் ஏற்படுத்தினால், வறட்சி முடிந்த பிறகு, நல்ல முறையிலிருக்க வாய்ப்பிருக்கும். ஆகவே, வறட்சியான பகுதிகளில், இந்தக் குட்டை கட்ட அரசு முன்னுரிமை கொடுத்து, பணிகளை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, வறட்சி நிவாரணங்கள் மூலமாக, குடிநீர்த் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அடுத்து, ஏரி, குளங்கள் ; மூன்றாவது சாலை அமைப்புத் திட்டம். இந்தச் சாலை அமைப்புத் திட்டத்திலும், இணைப்புச் சாலைகள்தான் போடப்படுகின்றனவே தவிர, பெரும் சாலை என்ற வகையிலே வரவில்லை.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, இந்த வறட்சி நிவாரண வேலைகள் கான்ட்ராக்டர் மூலமாக விடப்படுகிறதா? அல்லது அரசாங்கமே நடத்துகிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: குளங்கள், ஏரிகள் தூர் வார ஆயக்கட்டுதாரர்கள் முன்வருவார்களானால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அடுத்து, ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் என்ற பொறுப்பிலே அந்த வேலைகளை ஏற்றுக்கொள்வார்களானால், அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இவைகள் இரண்டும் இல்லாவிட்டால், அடுத்து, ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. ஆ. கருப்பையா: தலைவரவர்களே, கங்கைகொண்டான் குளத்திற்கு திருநெல்வேலியிலிருந்து ஒரு கால்வாயைத் துயர் தணிப்புத் திட்டத்தின் கீழ் அமைத்துத் தரும்படி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வந்ததா? ஆமெனில் அதை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, சிரணித் திட்டத்தின் மூலமாக அமைக்கப்படுகிறதா என்பது பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி We are dealing with Ottapidaram. I had been to Vilathi-kulam. விளாத்திகுளத்திலே இது சம்பந்தமாக எல்லா கட்சிகளும் சேர்ந்து வறட்சி நிவாரணத்திற்கு ரோடுகள் போட வேண்டுமென்று கேட்டு, கைது செய்யப்பட்டார்கள். ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம் பகுதிகளுக்கு இந்த நிவாரணப் பணியிலே எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். விளாத்திகுளத்தில் என்ன வேலை நடந்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, விளாத்திகுளம் ஒன்றியத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்று தனியாக என்னிடத்திலே குறிப்பு இல்லை. ஆனால், அங்கேயிருக்கிற பல்வேறு வேலைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்றும், அங்கே பெரிய ஏரி சீராக்கப்படவில்லையென்றும் அங்கே இருப்பவர்கள் குறிப்பிட்டார்கள். மீண்டும் இந்த ஆண்டு சீராக்க முயற்சி எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.



*Memorial arch for Periyar in Salem.*

* 714 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state :—

(a) whether the Government have permitted any arch to be erected on the Salem—Sankari road in Salem district in memory of Periar Thiru E. V. R.; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) சேலம் மாவட்டத்தில், சேலத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் திருச்சி–சேலம் சாலையில் திரு. பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் 95-வது பிறந்த நாள் நினைவு வளைவு எழுப்புவதற்கு கோயம்புத்தூர் மேற்பார்வை பொறியாளர் (நெடுஞ்சாலை) அனுமதி வழங்கி உள்ளார்.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, சேலத்திலிருந்து சங்ககிரி போகும் வழியிலே என்னுடைய தொகுதியிலே உள்ள குண்டலாம்பட்டியிலே காந்தியடிகள் சிலையை என்னுடைய தலைமையிலே பெருந்தலைவர் காமராஜர் வந்து, திறப்பதாக இருந்தது. ஆனால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி பெரியார் நினைவு வளைவு வைக்க அனுமதிப்பது பற்றித்தான்.

திரு. தி. பொன்னுமலை: என்னுடைய தொகுதியிலே காந்தியடிகள் சிலையை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய தொகுதியாக இருந்தாலும் கூட கேள்வி பெரியார் நினைவு வளைவைப்பற்றித்தான், ஆகவே அதைப்பற்றி மட்டும் கேளுங்கள்.

திரு. தி. பொன்னுமலை: அங்கே காந்தியடிகள் சிலையை பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் திறப்பதாக சொல்லியும் அது அனுமதிக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதுமாதிரிச் செயற் குறிப்பு எதுவுமே வரவில்லை.

[1975 ஏப்ரல் 18

புலவர் சி. பழனிச்சாமி: பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு அடிப்படையாக இருந்த தந்தை பெரியார் அவர்கள் பெயராலே அறுதை இல்லங்களைத் தொடங்குவதற்கு யாராவது முன்வந்தால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவெல்லாம் இந்தக் கேள்வியிலே வராது. பெரியார் நினைவு வளைவுக்கு அனுமதிகொடுக்கப்பட்டிருக்கிறதா என்பது பற்றித்தான் கேள்வி.

திரு. எம். சுரேந்திரன்: சேலத்திற்கு அருகாமையிலே பெரியார் நினைவு வளைவு அமைப்பதற்கு அனுமதி வழங்கியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அனுமதியை யார் பெற்றார்கள்? எந்த அமைப்பின் பெயரால் ஏற்படுத்தப்படுகிறது? எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சேலம் நகர திராவிடர் கழகத் தலைவர் அனுமதிகோரியிருந்தார், அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. பிறகு சில நிபந்தனைகளோடு அமைக்கவேண்டுமென்ற காரணத்தினாலே தாமதமாகத் துவக்கினார்கள். இப்போது வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## கிராமக் கணக்குகள்

* 715. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமக் கணக்குகளைக் கவனிக்க இயந்திர முறையை அரசு அமலுக்குக் கொண்டுவந்துள்ளதா?

(இ) இப்பணி தற்பொழுது 25 வட்டங்களில் அமல் நடத்தப்படுகின்றது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) ஆமெனில், இப்பணி எத்தனை இடங்களில் அமல் நடத்தப்படுகின்றது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தப் பணி தஞ்சை மாவட்டத்திலே எந்த எந்த இடங்களில் அமலாக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?



1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தஞ்சை மாவட்டத்தில் தஞ்சாவூர், ஒரத்தநாடு, கும்பகோணம், பாபநாசம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டணம், நன்னிலம், மாயூரம், சீர்காழி, பட்டுக்கோட்டை இப்போது பேராவூரணி ஆகிய 12 இடங்களில் நடைபெற்று வருகிறது.

திரு. எம். சுரேந்திரன்: இந்தக் கணக்குகளைக் கவனிப்பதற்கு இயந்திர முறைகள் இந்த மாநிலத்தில் கையாள்வது இல்லை என்று ஒரு சந்தர்ப்பத்திலே இந்தச் சபையிலே சொல்லப்பட்டது. இப்போது பல இடங்களிலே இந்த முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் சொன்னார். இதன் மூலமாக வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை அதிகமாகும், வேலைவாய்ப்புக் குறையும் என்பதை அரசு அறியுமா? ஆகவே, அங்கே உள்ளவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பைக் கொடுத்தபிறகு இப்படிப்பட்ட முயற்சியை எடுத்துக் கொள்ளலாமல்லவா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போது 25 வட்டங்களில் இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. யாரும் வேலைவாய்ப்பு இல்லை என்ற முறையில் பாதிக்கப்படவில்லை. அப்படி யாரும் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு வேண்டிய மாற்று வேலையும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## மறையூர் சாலை

* 716. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியத்தைச் சேர்ந்த மறையூர் கிராமத்தின் சாலையைச் சீர் செய்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் ஒன்றியத்தைச் சேர்ந்த மறையூர் கிராமத்தின் சாலையைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது சதுப்பு நிலமாக இருப்பதால் சாலை கப்பி போட்டு போட்டால்தான் நல்ல முறையிலே அமையும். அங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்திருந்தபோதுகூட அவர்

களிடத்திலே இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நீண்ட நெடுங்காலமாக இருந்துவருகிற இந்தக் கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய முறையில் நல்ல சாலையாக, கப்பி சாலையாகப் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இப்போது அந்த சாலைக்காக ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் அளவில் எஸ்டிமேட் போடப்பட்டு நாகை கோட்டப் பொறியாளர் டெண்டர் விட்டிருக்கிறார். அதற்காக 6,152 ரூபாய் அளவிலே பார்ட் பேமண்ட் கொடுத்திருக்கிறார்கள். இந்த வேலை ஆகஸ்டு மாதத்திற்குள் முடிந்துவிடும் என்ற தகவல் வந்திருக்கிறது.

## வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

* 717. வினா—திரு. க. சுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், வெம்பக்கோட்டை ஒன்றியத் தலைவர் மீதும், ஆணையாளர் மீதும் கையாடல் குற்றங்கள் அடங்கிய புகார் மனு ஏதேனும் அண்மையில் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) புகார் மனுவின் மீது அறிக்கை அனுப்புமாறு ஊரக வளர்ச்சி இயக்குநரும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரும் கோரப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய இறுதி அறிக்கை அரசுக்கு அனுப்பப்படவில்லை. இறுதி அறிக்கை வரப்பெற்றதும் பரிசீலனைக்குப் பின் தகுந்த ஆணை பிறப்பிக்கப்படும்.

## காரியப்பட்டி ஊராட்சி

* 718. வினா—திரு. க. சுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், காரியப்பட்டி ஊராட்சியில் ஒரு பகுதிக்கு (Ward) பெயர் மாற்றப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு அண்மையில் வந்துள்ளதா?



(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 719, 720 ஒத்திவைக்கப்படுகின்றன.

## *Harijan Welfare Schools.*

* 678 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether the Harijan Welfare Schools in rural areas of the State particularly elementary sections work with slender attendance during the agricultural season?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: ஆம். சில அரிசன நலப் பள்ளிகளில் மட்டும்தான்.

திரு. ஆ. கு. சுப்பையா: சார், அறுவடை வேலை நடைபெறும் காலங்களில் அரிசனப் பள்ளிகளில் அரிசன மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அரசு ஆராய்ந்ததா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: அறுவடைக் காலங்களிலே சிறு குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக அதைக் கவனிக்கக்கூடிய குழந்தைகளை வீட்டிலேயே தாய் தந்தையர்கள் விட்டுவிடுகிறார்கள். ஆதலால் அவர்கள் பள்ளிக்கு வருவதில்லை. சில தாய் தந்தையர்கள் அந்தப் பிள்ளைகளையே அறுவடைக் காலங்களில் அழைத்துச் சென்றுவிடுகிறார்கள், இது வழக்கமாக இருந்துவருகிற ஒன்று. சில மாவட்டங்களிலே சில நேரங்களிலே இப்படிப்பட்ட அறுவடைக் காலங்களிலே இப்படிப்பட்ட நிலை 15 நாட்கள் லீவு விடுகிறார்கள். அதிலே தென் ஆர்க்காடு மாவட்டத்திலே இது அதிகம்.

திரு. எம். சுரேந்திரன்: சார், அறுவடைக் காலங்களிலே இம் மாதிரிக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது குறைகிறது என்பது வெகு நாளாக நடந்துவருகிற ஒன்று என்று அமைச்சர் சொன்னார். அதற்காக அவர் சொன்ன காரணம் வேறு மாதிரியாக இருக்கிறது. உழவடை செய்கின்றவர்களுக்கு அவர்களுக்குக் கிடைக்கின்ற வருவாய்

அதிகப்படுகிற முறையில் அவர்களுடைய குழந்தைகளையும் வருவாய் சம்பாதிப்பதற்காக அழைத்துச் செல்கிறார்கள். ஆகவே அந்தக் குழந்தைகளுக்கு வேறு வருவாய் தரக்கூடிய முறையிலே வழியை அரசாங்கம் செய்தால் அப்படி அவர்கள் போகாமல் பள்ளிக்குச் செல்வார்கள் அல்லவா? ஆகவே அந்த முறையிலே ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது நல்ல யோசனைதான். இப்போது அரசாங்கம் அந்த முடிவிற்கு வரவில்லை. வேண்டுமென்றால் நிதி நிலைகள் நாட்டின் நிலைகள் எல்லாம் ஆராய்ந்து—இது சாதாரணமாக நினைப்பதுதான்—ஆனால் திட்டம் பெரிது, ஆகவே இது அரசாங்கம் கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று.

திரு. ஆ. கு. சுப்பையா: அறுவடைக் காலங்களில் சிறு குழந்தைகளை வைத்துக்கொள்வதற்காகப் பெரிய குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் வைத்துக்கொள்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு பால்வாடிகளை நிறைய அமைத்துப் பாலர் பள்ளிகளை அமைத்துக்கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இப்போதே பால்வாடிகள் என்ற பாலர் பள்ளிகள் நடந்துகொண்டு வருகின்றன. 2, 3 வயது குழந்தைகள் எல்லாம் பராமரிக்கப்படுகிறார்கள். எங்கள் காலனியிலேயே எடுத்துக்கொண்டால் 500 குடும்பங்கள் இருக்கின்றன, அதிலே கிட்டத்தட்ட இருநூற்றுக்கும் அதிகமான குழந்தைகள் இருக்கிறார்கள், அவர்களைக் கொண்டு பால்வாடியில் வைக்க இடம் இல்லை. 30, 40 பேர்கள்தான் வைக்கமுடியும், அதற்கு மேல் முடியவில்லை. அதை அதிகரிக்கும்போது அந்த எண்ணத்தை அரசு பூர்த்தி செய்யும்.

டாக்டர் ச. அ. சின்னராஜ்: தலைவர் அவர்களே, அறுவடைக் காலங்களிலே குழந்தைகளைப் பராமரிப்பதற்குக் குழந்தைகளையே விட்டுவிடுகிறார்கள், அதனால் அவர்கள் பள்ளிகளுக்குச் செல்வதில்லை என்று அமைச்சர் சொன்னார்கள். தொழிற்சாலைகளிலே வேலை செய்கிற பெண்கள் குழந்தைகளை விட்டுச் செல்ல கிரஷே வைத்திருக்கிறார்கள், அதுபோன்று அறுவடைக் காலங்களிலே எல்லா இடங்களிலேயும் குழந்தைகளைப் பாதுகாக்கிற முறையில் கிரஷே வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?





மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவர் அவர்களே, அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. என். கே. பழனிசாமி: சார், அரிசனங்கள் மாத்திரமல்ல, மற்றவர்களும் விவசாயப் பகுதிகளிலே இருக்கிறவர்கள் எல்லாம் பள்ளிகளுக்குச் செல்வதில்லை. அங்கே வாத்தியார்தான் உட்கார்ந்து கொண்டிருப்பார். ஆகவே, அந்த ஸ்கூல் டைமை மாற்றியமைத்து பார்ட் டைம் ஸ்கூலாக மாற்றியமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: ஆண்டிலே இது 15 நாட்களுக்குத்தான் இருக்கிறது. 220 நாட்களிலே ஆண்டிலே 15 நாட்கள் தான் வருகிறது, அந்த நாட்களில் பொதுவாக விடுமுறை வேறு விட்டு விடுகிறார்கள். ஆகவே 15 நாட்களுக்காக ஷிப்ட் சிஸ்டம் என்று வைத்தால் அது பெரிய குழப்பத்தை ஏற்படுத்தும். ஒரு சில மாவட்டங்களில்தான் இப்போது அந்த நிலைமை இருக்கிறது. பிறகு அந்த நிலைமை எல்லா மாவட்டங்களுக்கும் வரவேண்டிய நிலைமை வந்து விடும்.

## அரிசன மாணவர் இல்லங்கள்

* 679. வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், ஊத்துக்கோட்டையிலும், கும்முடிப்பூண்டியிலும் அமைந்துள்ள அரிசன மாணவர் இல்லங்களுக்குச் சொந்தக் கட்டடம் அமைக்கும் செயற்குறிப்பு காலதாமதம் ஆவதேன்?

(இ) இவை எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) & (இ) தற்போது, அரிசன மாணவ மாணவியர் இல்லங்களுக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரிசன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தினால் படிக்கிரமப்படி செயல் படுத்தப்படுகின்றது. இதன்படி 1974–75-ம் ஆண்டில் 100 இடங்களில் அரிசன மாணவ மாணவி இல்லங்களுக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்படி கழகம் எடுத்து வருகின்றது. இதில் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு இல்லங்கள் சேர்க்கப்படவில்லை. ஆகவே, இவ்விரு இல்லங்களை இந்தத் திட்டத்தின் காலக்கிரமத்தில் சேர்த்துக் கொள்ளும்படி கழகம் கேட்டுக் கொள்ளப்படும்.

[1975 ஏப்ரல் 18

* 680. வினா—திரு. ந. முத்துவேல் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதியில் புதுக்குப்பம் கிராமத்திலுள்ள அரசினர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தென்னார்க்காடு மாவட்டம், வானூர் தொகுதியில் புதுக்குப்பம் கிராமத்திலுள்ள, அரசினர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமில்லை.

திரு. செ. அரங்கநாயகம் : ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் முடிந்து விட்டது என்று இன்னும் நான் சொல்லவில்லை. அதற்குள் பாய்ண்ட் ஆப் ஆர்டர் என்றால் எப்படி?

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

திரு. அரங்கநாயகம் அவர்கள் இப்பொழுது பேசலாம்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (3) தகவல் கோரல்

### தாம் பேசிய பேச்சில் சில சொற்றொடர்கள் நடவடிக்கைக் குறிப்பில் காணப்படாதது குறித்து.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் எல்லாம் பதிவு செய்யப்படு கின்றன. பத்திரிகையிலும் போடுகிறார்கள். அப்படி உறுப்பினர்கள் பேசுகின்றபோது தவறான அல்லது அன்பார்லமெண்டரி வார்த்தைகள் வந்திருந்தால் அவைகளை எக்ஸ்பஞ்ச் செய்துவிடுகிற காரணத்தால் அதைப் பத்திரிகைகளில் போடுவது இல்லை. ஆனால் சில சமயங்களில் எக்ஸ்பஞ்ச் செய்யாத வார்த்தைகள் கூட ப்ரொசீடிங்சில் இல்லாமல் இருக்கின்றன. ஆனால் அவைகளைப் பத்திரிகையில் போட்டுவிடு கிறார்கள். அப்படிப் போடுவதால் பத்திரிகைகளுக்குச் சில சமயங் களில் சங்கடங்கள் வருகின்றன. உதாரணத்திற்கு கல்வி மானியத்தில்



1975 ஏப்ரல் 18]

நான் பேசுகின்ற நேரத்தில் அமைச்சர்களுக்கு மட்டும் மானம் ரோஷம் உண்டு மற்றவர்களுக்கு இல்லையா என்று கேட்டிருந்தேன். பத்திரிகையில் அது வெளி வந்திருக்கிறது. ஆனால் அது ப்ரொசீடிங்சில் இல்லை. பேசுகின்ற நேரத்தில் அது எக்ஸ்பஞ்ச் செய்யப்படும் என்று சொல்லியிருந்தால் நான் வருத்தப்படப் போவது இல்லை. அல்லது என்னையே கேட்டிருந்தால் கூடத் திரும்ப பெற்றுக்கொண்டு இருப்பேன். இது பத்திரிகையில் வந்து விட்டது. ப்ரொசீடிங்சில் இல்லை. இது போன்ற சந்தர்ப்பங்களில் பத்திரிகைகளுக்குச் சங்கடங்கள் வந்து விடுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதிவான உங்கள் உரையைத் திருத்த உங்களுக்குக் கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கிற நேரத்தில் ஏதாவது விடுபட்டு இருந்தால் அதை எழுதி அனுப்பலாம். அது தான் முறை.

## (4) நடைமுறைக் கேள்விகள்

### (அ) கவன ஈர்ப்பு அறிவிக்கைகளை எடுத்துக்கொள்வதில் ஏற்படும் காலதாமதம் குறித்து.

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்ற 41-வது விதிமுறையின் கீழ் உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்து வருகிறோம். கவன ஈர்ப்புத் தீர்மானங்களை ஒத்திவைப்பு தீர்மானங்களைப் போன்று அவசர காரியங்களுக்காக உறுப்பினர்கள் கொண்டு வருகிறார்கள். என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் 19—2—75 அன்றைக்கு, அதாவது இரண்டு மாதத்திற்கு முன்னால் கொடுத்தார். 60 நாட்கள் முடிந்து விட்டன. நம்முடைய விவசாய அமைச்சர் மாண்புமிகு திரு. ஆதித்தனார் கவனத் திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கொடுத்து இருந்தார்கள். இன்னும் அவர் தன்னுடைய துறையிலிருந்து பதிலைப் பெற முடிய வில்லை என்றால் அவர் அமைச்சர் வேலை பார்க்கிறாரா அல்லது . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் வேண்டாம். பதில் வரவில்லை என்று சொல்லுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : இரண்டு மாதமாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய துறைக்கு வெளியே உள்ள காரியங்களை எல்லாம் வேகமாகப் பார்க்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வரவில்லை என்று நிறுத்திக் கொள்ளுங்கள். மற்றது எல்லாம் வேண்டாம். அது முறை இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : 19—2—75 அன்று கொடுத்தது. இன்றைக்கு 18—4—75. 60 நாட்கள் முடிந்து விட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன் துறையிலிருந்து என்ன, எது என்று கேட்டு இரண்டு மாதமாகப் பதில் சொல்ல முடியவில்லை. சட்டமன்றம் நாளையோடு முடியப்போகிறது. கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றால் எந்த அளவு முக்கியத்துவம் உள்ளது என்று தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். நான் சொல்லுவது எல்லாம் சட்டமன்ற விதிமுறைகளை ஏற்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கலாம் என்று இருக்கிறதே அதற்கு ஒரு வரம்பு லிமிடேஷன் ஏன் இல்லை. நான் கூட ஒரு ஷார்ட் நோட்டிஸ் கொஸ்டின் கொடுத்து ஒரு மாதமாகிறது. ஒரு வாரத்திற்கு முன்னால் அது அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறது. நாளையோடு சட்டமன்றம் முடியப்போகிறது. அது ஒன்றும் இல்லை. சாதாரண விஷயம். ஒரு பாலம் சம்பந்தமானது. திருநெல்வேலியில் உள்ள பாலம் சம்பந்தமானது. ஊருக்குப் போனால் நாங்கள் பொது மக்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரபாண்டியன் கவன ஈர்ப்புத் தீர்மானம் பற்றி அமைச்சர் அவர்களிடம் நான் பேசினேன். இன்னொரு துறையிடமிருந்து பைல் பெற வேண்டிய நிலை இருக்கிறது. விரைவில் அதைப் பெற்று அமைச்சர் பதில் சொல்ல வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கேட்பதற்கு முன்னால் நீண்ட நாளைக்கு முன்பே அமைச்சரிடம் இது பற்றி கூறியிருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : திரு. எட்மண்ட் அவர்கள் 41-வது விதி முறையைக் குறிப்பிட்டு இப்போது சொல்லியிருக்கிறார்கள். இதைப் போல எல்லா அங்கத்தினர்களும் கொடுத்து இருக்கிறார்கள். சட்ட மன்றம் இன்னும் ஒரு நாளைக்குத்தான் இருக்கிறது. கூடிய வரை 41-வது விதிமுறையின் கீழ் கேட்டு இருக்கிற அத்தனைக்கும் அமைச்சர் அவர்கள் பதில் கூறினால் மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் குறிப்பிட்டது போல நாங்கள் ஊருக்குப் போனால் மக்களுக்குப் பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும். ஆகவே, முடிந்த அளவு நாளைய தினமாவது பெண்டிங்காக இருக்கிற அத்தனைக்கும் பதில் கூற வேண்டும் என்று அமைச்சர்களுக்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூல் 41-ஐப்பற்றிச் சொல்லிவிடுகிறேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது எல்லாம் அமைச்சர்களின் கருத்துக்கு வரும். விரைவில் அறிக்கை வரும்படி மாண்புமிகு அமைச்சர்கள் தங்கள் துறைக்கு ஆணையிட்டால் நலமாக இருக்கும்.

## (5) உரிமைப் பிரச்சினை.

மது உரிமைக் கட்டணத்தைக் குறைத்தது பற்றி பேரவையில் அறிவிக்காது நிர்வாக முறையில் அரசு ஆணையாகப் பிறப்பித்தது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்று காலை ஒரு ப்ரிவிலெஜ் மோஷன் உங்களிடம் கொடுத்து இருக்கிறேன். ஆனால், நீங்கள் அனுமதி மறுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அது அனுமதி மறுப்பதற்குரிய விஷயம் இல்லை. அந்த ப்ரிவிலெஜ் மோஷன் இந்த மாமன்றத்திற்கு முன்னால் சமர்ப்பிக்க வேண்டியது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுத்து விட்ட பிறகு, மறுபடியும், மறுத்து இருக்கிறீர்கள், மறுக்கக் கூடியது இல்லை என்று சொன்னால் இது எப்படி முறை என்று எனக்குத் தெரியவில்லை. இது பற்றி இந்தத் தொடர் கூட்டத்தில் பல முறை பேசி இருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களுக்கும் சில உறுப்பினர்களுக்கும் இதில் ஒரு முக்கியமான முரண்பாடு. இந்த பிரிவிலெஜ் சம்பந்தமாக ஒரு ப்ரைரியர் சாங்கஷன் தேவை இல்லை என்பது நம்முடைய நிலை. விதியில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியில் தெளிவாக இருக்கிறது. இது பற்றி கருத்தரங்கு வேண்டுமென்றாலும் நடத்திவிடலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மற்ற மாமன்றங்களில் டிஸ்அலொ தான் செய்கிறார்கள். கொண்டு வரவே கூடாது என்று சொல்லுவது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ப்ரைமாபேசி கேஸ் இல்லை என்றால் என்ன செய்வது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தாங்கள் ஏதோ உரிமைப் பிரச்சினைமீது தீர்ப்புத் தருகிற நேரத்தில், அவையில் அதை எடுத்துக்கொள்ளவில்லை, அனுமதி மறுக்கப்படுகிறது என்று தீர்ப்பு அளித்து அது பற்றி மீண்டும் இங்கு எழுப்பி " உரிமை எது வரையில்? " என்று உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். அது ஏடுகளில் வெளிவரப்போகிறது. ஏதோ உரிமைப் பிரச்சினைக்கு அனுமதி மறுத்துவிட்டார்கள் என்று ஏடுகளில் செய்திகள் வரும். ஆகவே, அந்த உரிமைப் பிரச்சினை என்ன என்று தெளிவாக்கிவிட்டால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுவிலக்குக் கட்டணம் பற்றி அது. சொல்லுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அந்த உரிமைப் பிரச்சினையை நான் வாசித்து விடுகிறேன்.

During the discussion on the Demands for Grants, several Members including N. K. Palanisamy, K. A. Wahab, K. T. K. Tangamani referring to the High Court's decision slashing Rs. 500 for permits on medical advice for hot drinks, wondered whether the fee is fixed at Rs. 50 and whether it means relaxation of prohibition. Hon. Chief Minister demited both the suggestions. Yesterday an Executive Order fixing Rs. 100 has been published. The Government should have taken the House into confidence since the issue has been raised previously in the House.

The act of the Government (or Member concerned) in issuing the order is gross violation of the hitherto accepted practice of informing the House at the first instance. It is improper and may amount to a contempt of the House.

தலைவரவர்களே, இந்த விஷயம் என்னவென்றால் சாதாரணமாக எக்சிகியூடிவ் ஆர்டராக இருந்தால் அதை இந்தச் சபை முன்னால் வைத்து விடுகிறார்கள்.

இது ஒரு குறிப்பிட்ட ஒரு ஹைக்கோர்ட் தீர்ப்பு வந்ததைச் சில உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியது மாத்திரம் அல்லாமல் அந்தத் தீர்ப்பை ஒட்டி ஒரு செய்தி வந்திருந்தது. 500 ஆக இருந்தது 50



ஆகிவிட்டது என்று. ஏற்கெனவே 250 ஆக இருந்ததை 500 என்று உயர்த்தினபோது ஹைக்கோர்ட்டுக்கு மனு செய்யப்பட்டு இருந்தது. அப்போது நாங்கள் எல்லாம் கேட்டோம். அன்றைக்குப் பல மெம்பர்கள் 50 ரூபாய் இருந்தால் எல்லோருக்கும் ப்ரொஹிபிஷன் இல்லாமல் போய்விடுமே என்று கேட்டார்கள். மாண்புமிகு வகாப் தான் அதிகமாக அதைப் பற்றிச் சொன்னார். நான் ஒரு சிறு கருத்தாக தான் கேட்டேன். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த மாதிரி எங்களுக்குக் கருத்து கிடையாது என்று குறிப்பிட்டு அதற்கு எவ்வளவு கட்டணம் என்பது சம்பந்தமாக பின்பு முறையாக அறிவிக்கப்படும் எக்சிகியூடிவ் ஆர்டர் மூலமாகவோ திருத்தம் மூலமாகவோ என்று சொன்னார்கள். இங்கு அவர் அந்த அளவிற்கு

(முற்பகல் 10-00)

வாக்குறுதி கொடுத்தார். அதற்கு நான் நன்றி உடையவனாக இருக்கின்றேன். இப்பொழுது இருக்கின்ற எக்சிகியூட்டிவ் ஆர்டராக இருந்தால் எங்கள் கையில் கொடுத்திருக்க வேண்டும், வேறு விதிகளாக இருந்தாலும் கொடுத்திருக்க வேண்டும். இது சட்டமன்றத்தில் எழுப்பப்பட்ட முக்கியமான பிரச்சினையாக இருக்கும்பொழுது அரசு 82-வது விதியின் கீழாகவாவது தெரிவித்திருக்க வேண்டும். அதுவுமில்லாமல் குறிப்பிட்ட விஷயம் பற்றிச் சட்டமன்றத்தில் கிளப்பிய காரணத்தினால் சாதாரண நடைமுறைகூட வராமல் போய் விட்டதே, அந்த அளவிற்குச் சபை புறக்கணிக்கப்படுகிறதே என்பதற்காகக் கொண்டு வந்தேனேயொழிய வேறு தப்பான நிலையில் அல்ல.

காரணம் என்னவென்றால், அவையில் அவர்கள் அறிவிப்புக் கொடுத்திருப்பார்களேயானால் நாங்கள் சொல்லியிருப்போம், 100 போதாது என்று சொல்லியிருப்போம், 250 என்று சொல்லியிருப்போம். 500 கூட ஜாஸ்தி என்று சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். ஆனால், இப்பொழுது அந்தச் சந்தர்ப்பம் இல்லை.

ஏற்கெனவே சாதாரணமாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைத்த உரிமைகூட இல்லாமல் சட்டமன்றத்திலே விவாதத்தைக் கிளப்பியதற்குப் பிறகு உரிமை பறிக்கப்பட்டு விட்டதே என்பதற்காகத்தான் சொன்னேன். இது ஓரளவிற்கு உரிமை மீறியதாகக்கூட இருக்கும். சபை நடக்கும்பொழுது சபைக்கு அறிவிப்புக் கொடுப்பது

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 ஏப்ரல் 18

நல்லதாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். Then it will be improper, though it is not contempt என்ற இரண்டு நிலைகளிலும்தான் இந்த விஷயத்தைக் கொண்டு வந்தேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, விதிகள் பிறப்பிக்கப்படும்பொழுது விதிகள் அச்சடித்து வைக்கப்படுகின்றன. அதுதான் முறை. அந்த முறைப்படி செய்யப்படும். ஆனால், கொள்கைப் பிரச்சினையை அறிவிக்கும்பொழுது இந்த மன்றத்தில் தெரிவிக்க வேண்டும். விதிகளைத் திருத்தும்பொழுது மன்றத்திற்கு அறிவிக்க வேண்டும். ஆனால், அரசாங்க உத்தரவுகளை அறிவிக்க வேண்டும் என்றால் அது நடைமுறையில் சிக்கலை உண்டாக்கும். இங்கே கொள்கையளவில் முதலமைச்சரவர்கள் ஏற்கெனவே சொல்லிவிட்டார்கள். உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது, அதன் அடிப்படையில் பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதைத் திருத்தியபிறகு முறைப்படி இந்த மன்றத்தில் வைக்க வேண்டுமென்று இருக்கிறது. அதன்படி வைப்போம். பிறகு டி.எல். கமிட்டிக்குப் போகும், அங்கே பரிசீலிப்பார்கள். எனவே, பின்பற்றக் கூடிய எந்த முறையும் நிறுத்தப்படவில்லை. அங்கத்தினர்களின் உரிமையை எடுத்துவிட்டதாகச் சொல்வது தவறு. இப்பொழுது என்ன முறையைப் பின்பற்றுகிறோமோ அதையேதான் பின்பற்றுகிறோம்.

பத்திரிகையில் வந்த செய்தியைப் பற்றிக் கூறி, விதிமுறைகள் மாற்றப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். அது ஜி.ஓ.வாக வைக்கப்படும், பிறகு அங்கத்தினர்கள் அமைத்திருக்கிற குழுவிற்குப் பரிசீலனைக்குச் செல்லும். அதுதான் முறை. முறையில் கொஞ்சம் கூடத் தவறில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது ஏதோ விதிகளைப் பொறுத்தது மட்டும்தான் என்று சொன்னார்கள். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அப்படித்தான் தெரியும். ஆனால் கட்டணம் எவ்வளவு விதிப்பது என்பதைப் பொறுத்தது. மெய்யாகவே பார்த்தால், நாம் கொண்டு வந்திருக்கும் மதுவிலக்கு ஜெனூயினாக இருக்குமா என்பது தொகையைப் பொறுத்து இருக்கிறது. 500 ரூபாய் என்றால் பல



1975 ஏப்ரல் 18] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

கட்டுப்பாடுகள் இருக்கும். 5 ரூபாய் என்று நிர்ணயித்தால் வெறும் பெயரளவிற்குத்தான் இருக்கும். ஆகவே, தொகை முக்கியமானதாகும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ரூபாயைப் பொறுத்த விஷயம்கூட அல்ல. அவர்களுக்கு பர்மிட் வழங்க வேண்டுமா என்ற டாக்டர் சர்டிபிகேட்டைப் பொறுத்தது, நோயைப் பொறுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி அவர்களுக்கு அனுமதிப்பதற்கில்லை என்று தெரிவித்ததற்கான காரணமே, அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசும்பொழுது, "உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்பை அமல்படுத்த வேண்டிய அவசியத்திலே அரசு இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன். எவ்வளவு தொகை என்பதையெல்லாம் அரசாங்கத்தினுடைய ஆணையாக அல்லது விதிமுறைகள் போடுகிறபோது தொகை நிர்ணயித்து வெளியிடப்படும்." என்று அறிவித்திருக்கிறார்கள். அதன்பிறகு 100 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். ஆகவே, இதில் அவை விதியை மீறவில்லை என்பதால்தான், பிரைமா ஃபேஸி கேஸ் இல்லை என்பதால்தான் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறல்ல.

## 4. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) பொறுக்குக் குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, பேரவையில் விவாதத்திற்கு வந்த ஒரு சட்ட முன்வடிவின் சில பிரிவுகள் மாற்றப்பட்டு இருப்பது குறித்து.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I rise to raise an important point of order, namely, that whenever the House is in possession of Bills, we refer them to Select Committee and once the Select Committee takes a decision that the Bill be modified in a particular manner, that decision of the Select Committee becomes final. The other day as far as the Societies Registration Bill was concerned, during consideration, we raised a point here that the Select Committee gave a particular decision on a particular clause, and that clause was not as per the decision of the

Select Committee. For instance, a Member of the Select Committee recommended that because Gambling Houses also dealt with playing cards—and as far as playing cards are concerned, it has been declared by the Supreme Court that playing cards is only a game of skill and not a game of chance—that also should be included and therefore the Select Committee accepted his suggestion and then they declared that the Member's views are recorded and the provision would be modified on the suggestion of the Member. That was the final decision of the Committee. Ultimately, the Bill was to be modified according to the views of the Members of the Select Committee. They were assured that the Bill would be so modified. But when it came before the House we were surprised that the Bill had been changed beyond the suggestions of the Member. Complete—

ஆக முழுக்க முழுக்க மாற்றி வேறு வகையிலே இங்கே வந்திருக்கிறது.

I was wondering if I may be committing a mistake and so I asked the Secretary also. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பில் டிராஃப்ட் உங்களுக்கு வந்தது அல்லவா? (குறுக்கீடு) நான் கேட்பதற்குச் சொல்லுங்கள், பிறகு நீங்கள் சொல்லுங்கள். இந்த பில்லினுடைய டிராஃப்ட் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த பில்லை இங்கே நேற்ருே அல்லது அதற்கு முந்தியோ இங்கே கன்சிடர் செய்து பாஸ் செய்திருக்கிருேம். பில்லினுடைய டிராஃப்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த பில் இங்கே கன்சிடரேஷனுக்கு வரும் நேரத்தில் இந்த அப்ஜெக்ஷனை எழுப்பியிருக்க வேண்டும். பாஸான பிறகு . . ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : அதற்குப்பிறகு சில சம்பவங்கள் நடந்தன. அப்பொழுதே ரெய்ஸ் பண்ண வேண்டுமென்றுதான் இருந்தேன். உடனடியாக செக்ரட்டரியைக் கேட்டேன். உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். கடைசியிலே செலக்ட் கமிட்டியிலே இந்த பில் ஃபைனலாக வந்ததுமாதிரி, அதேமாதிரி இருக்க வேண்டுமென்று முடிவு செய்துவிட்டார்கள் என்று ஹிண்ட் கொடுத்தார்கள். செலக்ட் கமிட்டி மெம்பர்களுடன் பேசும்பொழுது இங்கே பாஸ் பண்ணுவதற்கு அந்த பில்லை முதலிலே எப்படி மாற்ற வேண்டுமென்று சொன்ஞர்களோ அந்த ஸ்டாண்டிலே நின்ருர்களே தவிர வேறு



வகையிலே மாற்றலாம் என்ற உரிமையைக் கொடுக்கவில்லை என்று அந்த மெம்பர்களிடமிருந்து நேற்றுதான் தகவல் கிடைத்தது. ஆகவே தான் பாயின்ட் ஆப் ஆர்டராக ரெய்ஸ் பண்ணுகிறேன்.

ஆகவே, அதிகாரிகள்கூட மற்ற உறுப்பினர்கள் அத்தனைபேர்களுடைய உரிமைகளையும் பாதிக்கும் அளவில் நடந்து கொள்ளக் கூடாது. செலக்ட் கமிட்டியைப் பொறுத்தவரையில் கட்சிபேதம் இல்லை. ஒன்றுபட்ட வகையில் இருக்கிருர்கள். மெம்பர்ஸ சொன்னதைத் திருத்தி அதிகாரிகள் எழுதி அது மன்றத்திற்கு வந்து பாஸ் செய்வது என்ருல் இந்த 15 உறுப்பினர்கள், செலக்ட் கமிட்டி உறுப்பினர்கள் தேவையா? இத்தனை சட்ட யோசனைகளைச் சொல்வதெல்லாம் தேவையில்லாத நிகழ்ச்சியாக ஆகக்கூடாது. தவருன வகையிலே அதிகாரிகளே திருத்தி, செலக்ட் கமிட்டி உறுப்பினர்களைப் புறக்கணித்து வந்திருக்கும் நிலைமையில் வந்திருக்கிறது. இப்படிப் பட்ட நிலைமை நீடித்தால், இன்றையதினம் பில் வருகிறது என்ருல், நாங்கள் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று ரெகமண்ட் செய்கிருேம். அங்கே செலக்ட் கமிட்டியிலே உறுப்பினர்கள் எவ்வளவு சொன்ஞலும் வேறு வகையிலே பில் வந்துவிட்டால் என்ன செய்வது? ஆகவே, இந்த மன்றத்திற்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

செலக்ட் கமிட்டி என்ன முடிவு செய்கிறதோ அதுதான் முடிவாக இருக்க வேண்டும். இந்த உறுப்பினர்கள் டிசெண்டிங் நோட் கொடுக்கலாம். ஆஞல், இவர்கள் ஒத்துக்கொண்டார்கள் என்பதற்காக டிசெண்டிங் நோட் கொடுக்கவில்லை. செலக்ட் கமிட்டி உறுப்பினர்கள் ஒத்துக்கொண்டார்கள் என்பதால் கொடுக்கவில்லை. ஆஞல் இன்றைக்குக் கொடுப்பதற்கான வாய்ப்பு இல்லை, உறுப்பினர்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கவில்லை. இப்படிப்பட்ட நிலைமை உருவாகக் கூடாது. செலக்ட் கமிட்டி உறுப்பினர்களுக்கு நல்ல மதிப்பைக் கொடுக்க வேண்டும். லோக்சபையாஞலும், சட்டசபையாஞலும் செலக்ட் கமிட்டி உறுப்பினர்களுடைய எண்ணங்களைப் புறக்கணிப்பது கிடையாது. மெஜாரிட்டி உறுப்பினர்கள் சொல்ல வேண்டும். மைஞரிட்டி உறுப்பினர்கள் வேண்டுமாஞல் டிசெண்டிங் நோட் கொடுக்கலாம். இப்படிப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1975 ஏப்ரல் 18

இதை உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வர வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் யார் மேல் கொண்டு வருவது? ஸ்பீக்கர் அதிகாரியின்மேல் கொண்டுவர முடியாது. ஆகவே, பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற முறையிலே எழுப்பியிருக்கிறேன். இதற்குச் சரியான விளக்கத்தைக் கொடுக்க வேண்டும். எந்த அதிகாரி தவறு செய்திருக்கிறார், அவர்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? ஏன் இந்தத் தவறு நடந்திருக்கிறது என்பதைப் பற்றி மதிப்பிற்குரிய சபாநாயகரவர்கள் கூறுவார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இதைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் அன்றைக்கே கேட்டார்கள். நான் விளக்கம் கொடுத்தேன். ஆனால், இன்றைக்குத் திடீரென்று ரொம்ப வருத்தத்தோடு சொன்னார்கள். இவ்வளவு வருத்தப்படுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இது சாதாரண பிரச்சினை. உறுப்பினர்களின் உணர்வு புறக்கணிக்கப்படவில்லை. இரண்டு பக்கமும் திருப்பித் திருப்பிப் படித்தால் அந்த அங்கத்தினரின் எண்ணம் நிறைவேறியிருக்கிறது என்பதை உணர்ந்திருப்பார்கள்.

(Sports including indoor games)

இந்தச் சங்கங்களுக்குக் கட்டாயமாகப் பதிவு செய்யக்கூடிய ஒரு நிலை இந்தச் சட்டத்தில் இருக்கக்கூடாது.

அதுதான் அங்கத்தினர்களுடைய யோசனை. அதை அந்தக் குழு ஏற்றுக் கொண்டது. excluding sports and indoor game ' என்ற அந்த வார்த்தைகளைத்தான் சொல்லுகிறார்கள். அந்தக் கருத்தை ஆய்வுக்குழு ஏற்றுக்கொண்டது. அந்தக் கருத்திலிருந்து இப்போதும் கொஞ்சம்கூட மாறவே இல்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு பகுதியை மட்டும் படிக்கிறார்கள். ' May be registered ' என்பதிலே ' Sports including indoor games என்று போட்டிருக்கிறது. அடுத்த பிரிவில் sɟɹodS including indoor game' விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். அங்கத்தினர்கள் எண்ணம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பது அடுத்த பிரிவைப் பார்த்தால் தெரியும். ' Sports including and indoor games ' ஆப்ஷனைக் கொடுத்திருக்கிறோம். அங்கத்தினர்கள் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதுதான் கவனிக்கப்பட வேண்டியது. அவர்கள் சொன்னமாதிரி பில் டிராப்ட் வரவில்லை என்பதே தவிர excluding



1975 ஏப்ரல் 18] [திரு. செ. மாதவன்]

sports and indoor games. என்ற நோக்கம் மூன்று பிரிவுகளையும் இணைத்துப் பார்த்தால் அங்கத்தினர்கள் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மாற்றப்படவில்லை என்பது புரியும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : That is exactly my point. நோக்கம் ஓரளவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. திட்டவட்டமாக வாக்குறுதி அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது "நீங்கள் சொன்னபடி திருத்தப்படுகிறது" என்று. மாண்புமிகு மாதவன் அவர்கள்தான் அதற்குத் தலைவர். இது சிறு விஷயமாக இருக்கலாம். இப்பேர்ப்பட்ட போக்கை அனுமதித்தால் நாளைக்கு செலக்ட் கமிட்டிக்கு மதிப்பே போய்விடும். எங்கோ ஒரு இடத்தில் யாரோ ஒரு அதிகாரி நோக்கத்தை மட்டும் கொண்டு வருவதாகச் சொல்லி அங்கத்தினர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய குறை எல்லாம் இப்படிக்கூட நடைபெறக் கூடாது என்பதுதான். இப்படித் திருத்தினால் போதுமா என்று குழுக் கூட்டத்திலேயே உறுப்பினர்களைக் கேட்டிருக்க வேண்டும். செலக்ட் கமிட்டியில் அஷ்யூரன்ஸ் கொடுத்துவிட்டு, பின்னாடி அறையில் உட்கார்ந்து மாற்றிவிட்டு அவ்வளவு உறுப்பினர்களும் ஒத்துக் கொண்டார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் உறுப்பினர்கள் அப்படி ஒத்துக் கொள்ளவே இல்லை. ஆகவே, இப்படி ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவது நன்றாக இருக்காது. ஆகவே, செலக்ட் கமிட்டியில் எப்படி முடிவு செய்கிறார்களோ அதை எந்த விதத்திலும் மாற்றக்கூடாது என்பதை எதிர்காலத்திற்கு ஒரு நல்ல எச்சரிக்கையாக இருக்கக்கூடிய அளவு தாங்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆய்வுக் குழு அங்கத்தினர்கள் கருத்தை நாங்கள் மாற்றிவிட்டோம் என்று சொன்ன கருத்தை டாக்டர் ஹாண்டே அவர்கள் மாற்றிக் கொண்டதற்கு நன்றி.

THIRU K. M. SUBRAMANIAM : This is a very small point of order. While I always bow low to the decision of the Chair or the Hon. Speaker we raise certain important matters. I do not go into the subject of any ajdournment motion. Some times a reply is sent to us by letter saying that it is not important. If the Hon. Speaker calls us inside and tells us ' it is not so important according to the Hon. Speaker ' we accept it. We are bringing

such matters because we find that they are very important according to us and many people press us to bring them because we have to satisfy the constituency we represent. I know we may commit mistakes. It may be a matter of routine. The Hon. Speaker could have called me in and told me 'All right this cannot be admitted, after all this is a matter of routine'. Starvation of thousands of inmates of patasalas is not a routine matter. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டரில் செலக்ட் கமிட்டி அங்கத்தினர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி மறுக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் பற்றி நான் பார்த்து என்னுடைய தீர்ப்பைச் சொல்லுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அப்படி மாறுபட்ட கருத்து ஏதாவது இருக்குமானால் அது சம்பந்தமாக செலக்ட் கமிட்டியில் ஒரு உறுப்பினர் என்ற முறையில் நாங்கள் எல்லாம் வருந்துகிறோம். நாங்கள் ஒத்துக் கொண்ட அடிப்படையில் அது அமைந்திருக்க வேண்டும். அதைப் பற்றித் தாங்கள் கொஞ்சம் பைலைப் பார்த்து அமைச்சர் அவர்களையும் கேட்டு, வேண்டுமென்றே செய்திருந்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாற்றப்பட்டிருக்குமோ என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குச் சந்தேகம் வேண்டாம். அவர்கள்தான் மசோதாவை ஆதரித்து பாராட்டிப் பேசினார்கள். மசோதாவைப் பார்த்தால் மாற்றப்படவில்லை என்பது அவர்களுக்கே தெரியும். இதிலே சந்தேகத்தைக் கிளப்ப வேண்டிய தேவையில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: டிராப்டில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறினார்கள். அப்படி இருக்குமானால் அதைத் தாங்கள் பார்க்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.



(6) தனியார் அலுவலை எடுத்துக்கொள்ள நாள் ஒதுக்குவது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, நமது விதி முறைகளில் 23-வது விதியில்—

proviso

"Provided, however, that where a Thursday has been so taken over for the transaction of Government business under the above proviso, the Speaker may, allot in lieu thereof any other day for the Private Members' business"

என்று இருக்கிறது.

இரண்டு மாத காலமாக அரசாங்க அலுவல்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரே ஒரு நாள்தான் "நான்-அபிஷியல் டே" கிடைத்தது. எதிர்பாராத முறையில் அது போய்விட்டது. பிரைவேட் மெம்பர்ஸ் பிசினஸ் நிறைய இருக்கிறது. அஜெண்டாவில் கூட மூன்று, நான்கு முக்கியமான பில்கள் இருக்கின்றன. என்னுடைய தீர்மானம் மிகவும் முக்கியம் வாய்ந்த தீர்மானம் என்பதைத் தாங்களே அறிவீர்கள். "நான்-அபிஷியல் டே" இழந்து விட்ட தினத்திற்கு இன்னொரு தினத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் இந்த மசோதாக்களை இன்று மாலையும் கூட்டத்தை வைத்துக் கொண்டு நாளைக் காலையோடு முடித்து விடலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படித் தனியார் அலுவல்களுக்காக நாள் தேவை என்றால் நாளை மாலைதான் வைத்துக் கொள்ள வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்கள், அவை முன்னர் கலந்து நாளை மாலை தனியார் அலுவல்களை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்வது நலம்.

(7) ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதுரவாயல் காவல் நிலையத்தில் அடைக்கப்பட்டிருந்த ஒரு கைதியின் மரணம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தங்கமணி அவர்கள், காவல் நிலையத்தில் அடைக்கப்பட்ட ஒரு கைதி இறந்து விட்டது பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிப்பதற்கு உரியது என்பதைப் பற்றி சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, [illegible] ஒருவர் சம்பந்தமாக இருந்தாலும் இந்தக் குறிப்பிட்ட ஆள் இறந்ததைப் பொறுத்தவரையில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து விசாரணை எல்லாம் நடந்திருக்கிறது. ஆகவேதான் அதுபற்றிய விவரங்கள் கிடைக்கும் என்பதற்காகக் குறிப்பிட்ட பிரச்சினையை வைத்து, இப்படிச் சந்தேக ரூபமாக போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகிறவர்கள் திடீரென்று சாகக்கூடிய நிலைமை ஏற்படுகிறதே என்ற கருத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் கூட பண்ருட்டியில் ஒரு ஓட்டல் தொழிலாளியை அந்த ஓட்டல் முதலாளியும், ப்ரோபேஷனரி சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் சேர்ந்து அவரை அடித்து கடைசியில் அவர் இறந்து போய்விட்டதாகவும், அதன் காரணமாக இப்போது சப் இன்ஸ்பெக்டர் பேரிலும், ஓட்டல் முதலாளி பேரிலும் கொலை கேஸ் போடப்பட்டு சப் இன்ஸ்பெக்டர் ரிமாண்டில் வைக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன.

ஒரு மாதத்திற்கு முன்னால் மணலியில் ஒரு தொழிலாளி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டு அதை விசாரிக்கச் சென்ற தாயாரை எல்லாம் மிரட்டி அனுப்பினார்கள். கடைசியில் அவருடைய பிரேதந்தான் கிடைத்திருக்கிறது.

சமீப காலத்தில், அதுவும் புதிதாக வந்த போலீஸ் அதிகாரிகள் கொஞ்சம் அத்துமீறி காரியம் செய்யக்கூடிய காரணத்தால் இந்தச் சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த விதத்தில் ஒருவர் லாக்கப்பில் இறந்து போயிருக்கிறார். எப்படி இறந்தார் என்று கேட்டால் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்து விட்டார் என்று சொல்லுகிறார்கள். இப்போது லாக்கப்பில் பூராவும் வலைக் கம்பிகள் போட்டிருக்கிறார்கள். அதனால் தூக்குப் போட்டுக் கொள்ள முடியாத நிலை இருக்கிறது. அதனால் காற்றே வரவில்லை என்றெல்லாம் கூடக் கூறுகிறார்கள். இவ்வளவு பாதுகாப்புப் பண்ணிய பிறகும் தூக்குப் போட்டு இறந்துவிட்டார் என்று சொல்லுவது நம்ப முடியாமல் இருக்கிறது.

குறிப்பிட்ட விஷயத்தைப் பொறுத்தவரை சென்னைக்குப் பிரேதம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதைப் பரிசீலனை செய்து இதையெல்லாம் நிவர்த்திக்கக்கூடிய முறையில் அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். பண்ருட்டியில் எப்படி போலீஸ் அதிகாரி பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதோ அதே மாதிரி தவறு செய்தவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள



வேண்டும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனி ஏற்படாதவண்ணம் இருக்க இது பற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த மதுரவாயல் சம்பவத்தைக் குறித்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எழுப்பிய ஒத்திவைப்புப் பிரேரணையின் தொடர்பாக வேறு பல விவரங்களையும் சொன்னார்கள். பொதுவாகவே லாக்கப்பில் அடைக்கப்படுகிற கைதிகள் இறந்து போவது குறித்து நானும் மிகக் கவலை அடைந்து பலநேரங்களில் காவல் துறை பெரிய அதிகாரிகளுடன் அதுபற்றியெல்லாம் கலந்து பேசியிருக்கிறேன். உள்ளபடியே இப்படிப்பட்ட சம்பவங்கள் மிகவும் துன்பகரமான சம்பவங்களாகும். அவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள், தூக்குமாட்டிக் கொண்டு இறந்துவிடுகிறார்கள் என்றெல்லாம் விசாரணைகளுக்குப் பிறகு தெரிய வருகிறது—என்றாலும் அந்த தற்கொலை முயற்சிகளை தடுக்க இயலாமல் அல்லது தூக்கு மாட்டிக் கொள்கிற நேரத்தில் கூட அதைத் தடுத்து நிறுத்தமுடியாமல் அங்குள்ள காவல் துறையினர் என்ன பணி புரிகிறார்கள் என்பதுபோன்ற கேள்விகள் அதிகாரிகளிடத்தில் கேட்கப்பட்டு அந்தந்த போலிஸ் ஸ்டேஷனிலுள்ள அதிகாரிகள் உஷார்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துக்காட்டியதுபோல் கம்பிகளில் துணிகளைக் கட்டி தூக்கு மாட்டிக் கொள்வதை தடுக்கிற வகையில் அவைகளுக்கு கம்பி வலைகள் எல்லாம் கூட போடப்பட்டிருக்கிறது. அவ்வளவையும் மீறி நடந்துவிட்ட இந்த மதுரவாயல் சம்பவத்தைப் பொறுத்தவரையில் ஒரு ஆர்.டி.ஓ. விசாரணைக்கு இன்றைக்கு உத்தரவிடப்பட்டு அந்த விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பிரேத விசாரணை பற்றி அறிக்கை வருகிற வரையில் ஆர்.டி.ஓ. தன் அறிக்கையை அளிக்க முடியாமல் இருந்தது. பிரேத விசாரணை அறிக்கையில் கூட அவர்கள் தூக்கில் தொங்கியதால் இறந்துவிட்டார் என்ற முடிவுதான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இருந்தபோதிலும் ஆர்.டி.ஓ. அறிக்கை வந்த பிறகு மேலே என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது குறித்தும், இப்படிப்பட்ட சம்பவங்கள் காவல் நிலையங்களில், லாக்கப்புகளில் நடைபெறா வண்ணம் தடுப்பதற்கு மேலும் தீவிரமான முறைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் அதற்கு பொறுப்பாளிகளாக அல்லது அவர்களைக் கவனிக்காமல் அலட்சியமாக இருந்து விடுகிற

அதிகாரிகள் எப்படிப்பட்டவர்களானாலும் அவர்கள் மீதும் இது வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்று தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற உறுதியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் உணர்வோடு நானும் என் உணர்வுகளையும் இணைக்கிறேன் என்று கூறி போலீஸ் துறை இதில் மிகுந்த கவனமாக இருக்கவேண்டும் என்ற வகையில் இந்தத் தீர்மானத்தை நான் பயன் படுத்திக்கொண்டு போலீஸ் துறைக்கும் எடுத்துக் கூறி இதற்கு மேலும் இதைப் பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பக்கத்தில் நடந்ததால் கூறுகிறேன். இதில் சம்பந்தப்பட்ட, இறந்து போனவர் முத்து என்பவர். அவர்களது ப்ரதர் அங்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளராக இருக்கிறார். அவர்களை எல்லாம் போலீசார் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று தகவல் சொன்னார்கள். நான் சொல்வதற்குள் நீங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அவர்களை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள் போலீஸ்காரர்கள். அவர்களின் சொந்தக்காரர்களை எல்லாம் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். நேற்று கூட தகவல் சொன்னார்கள் என்னிடம். ஆகவே தயவுசெய்து முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் யாரையும் மிரட்டக்கூடாது என்று இந்த அவையில் சொல்லிவிட்டால் அது ஓரளவிற்கு சௌகரியமாக இருக்கும்.

அதுமட்டுமல்லாமல், ஆர்.டி.ஓ. விசாரணை இருக்கும்போது—நான் போன் செய்தபோது அஸிஸ்டன்ட் கலெக்டர் கூட இருந்தார்கள்—அங்கு பீதி இருக்கக்கூடிய ஒரு நிலைமை உருவாகி இருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும்படி முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கட்சிசார்பற்ற முறையில் இந்தப் பிரச்சினைகள் அணுகப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களது கட்சியைச் சேர்ந்தவர் என்று சொன்னார்கள். ஆனால் இந்தக் குற்றவாளியைப் பொறுத்தவரையில், லாக்கப்பில் இறந்த குற்றவாளி, இதற்கு முன்பே ஒரு முறை திருடிய குற்றத்திற்காக தண்டனை பெற்றவர். அவர் பெயர் முத்து என்று தெரிவித்தார்கள். கைதியப்பன் அவர் தகப்பனார் பெயர். இவர் பெயர் முத்து, ஏற்கெனவே ஒரு முறை திருடி தண்டனை பெற்றவராவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் அமைச்சர் அவர்களின் வாக்குறுதிக்குப் பிறகு இதைப் பற்றி விவாதிப்பதற்கு பேரவையை ஒத்தி வைக்க வேண்டிய தேவை இல்லையென்று நான் கருதுகிறேன். ஆதலால் இதற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

## (8) அறிவிப்புகள்

(அ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/75) 11—4—1975 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

## (9) அரசினர் தீர்மானம்

### விதி 41(3)ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 41(3)-வது விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற விதியைத் தளர்த்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கந்தசாமி அவர்களின் கவன ஈர்ப்புத் தீர்மானம் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நாளை எடுத்துக் கொள்ளப்படும்.

## (10) கவன ஈர்ப்பு

### (அ) குமரி மாவட்டத்தில் பல முந்திரிப் பருப்பு தொழிற்சாலைகள் மூடப்படுவது குறித்து

THIRU J. JAMES : Sir, I call the attention of the Hon. Minister for Industries and Electricity to a matter of urgent public importance, namely, "closure of several cashew factories in Tamil Nadu especially in Kanyakumari district as the Kerala Government has prevented the movement of raw cashew into Tamil Nadu and consequent unemployment of hundreds of workers".

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தமிழகத்தில் சுமார் 140 முந்திரிப்பருப்பு செய்முறைப்படுத்தும் தொழில் பிரிவுகள் உள்ளன. அவை பெரும்பாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளன. அவற்றில் சுமார் 50,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டியுள்ளது. கேரளாவிலிருந்து வரும் முந்திரிக் கொட்டைகளைப் பெரிதும் நம்பியே இத்தொழில் பிரிவுகள் இயங்குகின்றன. தற்போது, 51 தொழில் பிரிவுகளுக்கு மட்டுமே, மத்திய அரசு நிறுவனமாகிய முந்திரி வர்த்தகக் கழகம் இறக்குமதி செய்த முந்திரிக் கொட்டைகளை அளிக்கிறது. மற்றப் பிரிவுகள் வெளி அங்காடிகளிலிருந்துதான் முந்திரிக் கொட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. முதலில் கூறிய தொழிற் பிரிவுகள் கூட அவற்றின் தேவையில் ஒரு பகுதியைத்தான் பெறுகின்றன. எஞ்சியவற்றுக்கு அவை பெரும்பாலும் கேரளத்திலுள்ள வெளி அங்காடிகளையே பெரிதும் நம்பியிருக்க வேண்டியுள்ளது.

கேரளாவுக்கு வெளியே முந்திரிக் கொட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுவதற்குத் தடை விதிக்கும் அறிவிப்பை இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ்க் கொண்டுவர கேரள அரசு கருதியுள்ளதாகத் தெரிகிறது. இதுபற்றிய வரைவு அறிவிப்பை மத்திய அரசின் ஒப்புதலுக்கு கேரள அரசு அனுப்பியுள்ளது என்றும் தெரிய வருகிறது. அத்தகைய அறிவிப்பை வெளியிட்டு, கேரளாவிலிருந்து முந்திரிக் கொட்டைகள் அனுப்பப்படுவதற்கு தடை விதிக்கப்பட்டால், அது இம்மாநிலத்தில் உள்ள முந்திரிப் பருப்பு செய்முறைப்படுத்தும் தொழிற் பிரிவுகளைப் பெரிதும் பாதிப்பதோடு, பல தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டுள்ள இத்தொழில் ஏராளமான பேர் வேலையிழந்து தவிக்கவும் நேரிடும். அத்தகைய சூழ்நிலை உருவாகாமல் தவிர்ப்பதற்கு





கேரள அரசின் வரைவு அறிவிப்புக்கு ஒப்புதல் அளிக்க வேண்டாமென புதுடில்லி வாணிக அமைச்சகத்தை டெலக்ஸ் மூலம் இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது. இப்போது கேரளத்திலிருந்து முந்திரிக் கொட்டைகள் அனுப்பப்படுவதற்குத் தடை ஏதுமில்லை.

இவ்வரசு எடுத்துள்ள பிற நடவடிக்கைகளாவன :—

(1) திருச்சிராப்பள்ளி, இராமநாத[illegible] ஆற்காடு, புதுக்கோட்டை மாவட்டங்களில் முந்[illegible] தோட்டக் கழகம் ஒன்றை இவ்வரசு அமைத்து[illegible]ளது. இதனால் [illegible]டைவில் தமிழகத்தில் விளையும் முந்திரிக்கொ[illegible]டைகளை வழங்கும் [illegible]மேம்பாடு அடையலாம்.

(2) முந்திரிப் பருப்புகள் செ[illegible]றைப்படுத்தும் தொழிற் [illegible]ரிவுகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட [illegible]ந்திரிக்கொட்டைகளை [illegible]ங்குவது பற்றிய கடிதப் போக்குவரத்து இவ்வரசுக்கும் இந்திய [illegible]சுக்குமிடையே நடைபெற்று வருகிறது. 1-[illegible]-70 முன்பே இ[illegible] வரும் பதிவு செய்யப்பட்ட தொழிற் பிரிவுகளுக்[illegible]ள இந்திய முந்திரிக் கழகத்திற்கு உரிய காலத்தில் விவரங்களை அளித்த தொழிற் பிரிவுகளுக்கும் மட்டும் இறக்குமதி செய்யப்பட்ட முந்திரிக்கொட்டைகளை வழங்கும், நடைமுறையை ஒட்டிய இறக்குமதிக் கொள்கையில் சம்பந்தப்பட்ட பகுதியைக் கேரள உயர்நீதி மன்றம் ரத்து செய்து அளித்த தீர்ப்பின்பேரில் இந்திய அரசு, உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துகொண்டுள்ளதால் இவ்வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது என்பதுதான் இதுபற்றிய கடைசி விவரமாகும்.

இன்றைய தேதியில் கேரளத்திலிருந்து தமிழகத்திற்கு முந்திரிக் கொட்டை அனுப்பப்படுவதற்குத் தடை எதையும் கேரள அரசு விதிக்கவில்லை என்றாலும், பெரும்பகுதி முந்திரிக்கொட்டைகள் இறக்குமதி செய்யப்படுவதாலும், அந்நியச் செலாவணி கட்டுப் பாடுகள் காரணமாக இறக்குமதி செய்யப்படும் முந்திரிக்கொட்டை களின் அளவில் வரம்புகள் விதிக்கப்படுவதாலும் வெளிநாடுகளில் முந்திரிக்கொட்டைகள் கிடைக்காமையாலும் முந்திரிக்கொட்டைகள் கிடைக்கும் நிலை விரைவில் சீரடையும் என்று சொல்வதற்கில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும் போது கேரளாவிலிருந்து இன்றையதினம் இருக்கிற சூழ்நிலையில் தமிழ்நாட்டுக்கு முந்திரிக் கொட்டைகள் வருவதற்கு தடையில்லாது

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 ஏப்ரல் 18

வந்துகொண்டிருக்கிறது என்று கூறினார்கள். ஆனால் இன்று உண்மையில் பல தொழிற்சாலைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் அடைக்கப்பட்டிருக்கின்றன. காரணம், இந்தத் தொழிற்சாலைகளை நடத்துகிறவர்கள் கேரளா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கேரளா மாநிலத்திலிருந்து, மத்திய அரசு அனுமதி பெற்று, முந்திரிக் கொட்டைகளை வரவழைத்து, அங்கிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொண்டு வந்து தொழிற்சாலைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதன் அடிப்படை நோக்கம் என்னவெனில் அவர்கள் கேரளாவில் இந்தத் தொழிற்சாலைகளை நடத்துவதற்கு அங்குள்ள தொழிலாளர்களுக்கு இங்கிருக்கிற தொழிலாளர்களுக்குக் கொடுப்பதை விட அதிகமான ஊதியம் கொடுக்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது கேரளாவில். ஆனால், தமிழகத்தில் குறைந்த கூலியில் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆகவே, கூலியைக் குறைத்துக் கொடுக்கவும், இன்னும் முறைகேடாக கணக்குகள் வைத்துக் கொள்ளவும் இங்கு வழிவகைகள் இருக்கின்றன.

[முற்பகல் 10-30]

கேரளத்தில் இருக்கிறவர்கள் என்று சொல்வதால், கணக்குகளை அந்த அரசாங்கம் செக் செய்வதற்கும், அதன் அடிப்படையில் அங்கே வரிகளை விதிப்பதற்கும் வகை இருக்கிறது. ஆனால் தமிழகத்தில் இருக்கிற அரசாங்கத்திற்கு இங்கே செயல்படுகிற அந்தத் தொழிற்சாலைகள் மீது எந்தவிதமான அதிகாரமும் இல்லாத காரணத்தால் அவர்களிடமிருந்து கணக்கு கேட்க வழி இல்லாமல் இருக்கிறது, அதனால் அவர்கள் கணக்குகள் முறைகேடாக வைத்துக்கொள்ள வழி இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: கேள்வி கேட்கலாமே தவிர, ஒரு பிரசங்கமே செய்வதால் எப்படி?

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u>: ஆகவே, அரசாங்கம் அப்படிப்பட்ட முறைகேடுகளை அந்த நிர்வாகம் செய்யாமல் இருப்பதற்கு ஏற்றமுறையில் மத்திய அரசாங்கத்திடமிருந்து தனியாக முந்திரி கோட்டா வாங்கி, அங்கே இருக்கும் தொழிற்சாலைகளுக்கு முந்திரிக்கொட்டை கொடுத்து, அவைகள் ஒழுங்காக நடப்பதற்கும், அங்கே பாதிக்கப்பட்டு இருக்கும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கும் அரசாங்கம் முன் வருமா?



1975 ஏப்ரல் 18]

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u>: இப்போதுள்ள பிரச்சினை கேரளாவிலிருந்து முந்திரிக்கொட்டைகளை தமிழ் நாட்டிற்கு கொண்டு வருவது தடைபட்டிருக்கிறது என்பதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேரளாவிலிருந்து இங்கே வந்து தொழில் நடத்துபவர்கள் கொடுக்கவேண்டிய கூலியை குறைத்துக்கொடுப்பது போல் சொன்னார்கள். அதுபற்றி எந்தவிதமான தகவலும் இல்லை. கேரளாவைச் சேர்ந்தவர்கள் கன்னியாகுமரியில் இது போன்ற தொழில் நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று எங்களை வந்து கேட்டதால், அங்கேயுள்ளவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைத்து இருக்கிறது.

அவர்கள் இது போன்ற பிரச்சினை இருக்கிறது என்று கூறியதால், மத்திய அரசுக்குத் தெரிவித்தோம். இங்கே வந்த மத்திய அமைச்சர் சர்மா அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறோம். நமக்கு இருக்கும் கோட்டா போதுமானதாக இல்லை, அதிகம் வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். ஒரு கொள்கையை ஒத்துக்கொண்டு, அந்தக் கொள்கையின் அடிப்படையில் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டு இருக்கிறோம். கேரளா அரசாங்கத்திற்கும் கடிதம் எழுதியிருக்கிறோம். இது போன்ற தடை தற்காலிகமானது தான், நிரந்தரமாக இருக்காது என்று சொல்லி இருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் முந்திரிக்கொட்டை உற்பத்தியை எப்படி அதிகரிக்கலாம் என்று முயற்சித்துக்கொண்டு இருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு அதிகமாகக் கோட்டா பெறுவதற்கும் முயற்சி எடுத்து வருகிறோம். கேரளாவிலிருந்து அதிகப்படியாகப் பெற முடியுமா என்றும் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். தமிழ்நாட்டில் முந்திரிக்கொட்டை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு எல்லாவிதமான காரியங்களையும் அரசாங்கம் செய்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) <u>பருத்தி விலை வீழ்ச்சியினால் பருத்தி விற்பனை பாதிப்பும், பருத்தியை நியாய விலையில் அரசே வாங்க வேண்டியதன் அவசியமும் குறித்து</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திரு. கோவை செழியன் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அதை, திரு. எட்மண்ட் அவர்கள்—அவருக்கு பதிலாகக்—கொண்டு வருவார்கள்.

[1975 ஏப்ரல் 18

THIRU G. R. EDMUND: Mr. Speaker, Sir, on behalf of the hon. Member, Thiru Kovai Chezhian, I call the attention of the Hon. Minister for Agriculture to a matter of urgent public importance, namely, the non-sale of cotton due to the sudden fall of its price all over Tamil Nadu, resulting in the sufferings of the agriculturists and the necessity to make immediate measures to purchase the same directly by the Government at a reasonable price.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை பற்றிய விவரங்கள் @ எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அச்சிட்டு வழங்கப்பட்டு இருக்கிறது. அத்துடன் புதிய தகவல் ஒன்றையும் உறுப்பினர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

15—4—1975 அன்று மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஜகஜீவன் ராம் அவர்கள் நாடாளுமன்றத்தில் ஒரு தகவலை வெளியிட்டு இருக்கிறார்கள். நீண்ட இழைப் பஞ்சு இந்த வருடம் ஏற்றுமதி செய்யப்படும் என்றும், எனவே, பருத்தி விவசாயிகள் குறைகளைத் திர்ப்பதற்கு இது உதவும் என்றும் கருதுகிறேன் என்று கூறியுள்ளார்.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையின் சிறு விளக்கம் கேட்க விரும்புகிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த அறிக்கை மீது நீங்கள் கேட்கக்கூடாது.

(இ) நெல்லை மாவட்டத்தில் கங்கைகொண்டான் கல்லூர் முதலிய இடங்களில் ஸ்ரீலங்காவிலிருந்து வந்து குடியேறிய பல அகதிகள் ஏழ்மையாலும் வேலையின்றியும் மரணமுற்றதும் அதனால் ஏற்பட்ட நிலை குறித்தும்.

THIRU J. JAMES: Sir, I call the attention of the Hon. Minister for Harijan Welfare to a matter of urgent public importance, namely,

"The death of several Ceylon repatriates settled at Gangaikondan and Kallor in Tirunelveli district during the last six months due to poverty and unemployment and the grave situation prevailing among them."

@ 376-379-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, கங்கைகொண்டான், மேலக்கல்லூர் நிலக் குடியேற்றத் திட்டத்தில் ஸ்ரீலங்காவிலிருந்து வந்து முறையே 213, 225 மக்கட் தொகை கொண்ட 88, 49 அகதிகள் குடும்பங்கள் 9—2—73 லிருந்து 8—10—74 முடிய உள்ள கால அளவில் குடியமர்த்தப்பட்டுள்ளன. காலனிகள் நன்கு அமைக்கப்பட்டுள்ளன. இந்த காலனிகள் 1973-ல் இருந்து உள்ளன.

ஒவ்வொரு அகதிக் குடும்பத்திற்கும், பயிரிடுவதற்காக 3 ஏக்கர் நிலம் இலவசமாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதைத் தவிர, வீட்டு மனைகளும் இலவசமாக வழங்கப்பட்டன. வரையறுக்கப்பட்ட வீதத்தில் பராமரிப்புச் செலவுகளுக்கான படிகளைப் பெறத் தகுதியுடைய குடும்பங்களுக்கு, வேளாண்மைச் சாகுபடிக் காலங்களின் தொடக்கத்தில் அந்த வீதங்களில் படிகள் உரிய நேரத்தில் வழங்கப்பட்டுள்ளன. பராமரிப்புப்படி, மானியம், வீடுகள் கட்ட கடன், நிலங்களைச் சீரமைப்பதற்கும் வேளாண்மைக் கருவிகள், அதற்குரிய கடன், கிணறுகள் வெட்ட, உழவு மாடுகள் முதலியன வாங்கக் கடன் ஆகியவற்றின் மூலம் இந்த இரண்டு காலனிகளிலும் உள்ள அகதிகளுக்கு அளிக்கப்பட்ட மொத்த நிதியுதவித் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. கங்கைகொண்டான்—ரூ. 4,75,444–50

2. மேலக்கல்லூர்—ரூ. 2,83,243-00.

1975 பிப்ரவரி திங்கள் முடிய அகதிகளின் குடும்பங்களைக் குடியமர்த்துவது தொடர்பான உதவி இனங்களில் பெரும்பாலானவை கொடுக்கப்பட்டுவிட்டன. இத்தகைய ஏற்பாடுகளுக்கான செலவுகள் முழுவதும் இந்திய அரசால் ஏற்கப்படுகிறது.

ஒரு டெபுடி தாசில்தார், இரண்டு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர் அடங்கிய சிறப்புப் பணியாளர் அமைப்பு ஒன்று மேற்சொன்ன காலனிகளின் பொறுப்பில் உள்ளது. இந்தச் சிறப்புப் பணியாளர் அமைப்பு, காலனிகளுக்கு அடிக்கடி சென்று ஆய்வுகளைச் செய்து, செய்யத்தக்க உதவிகள் அனைத்தையும் தாமதமின்றிச் செய்கின்றது.

[திரு. என். இராசாங்கம்] [1975 ஏப்ரல் 18

கடந்த 6 திங்கள் கால அளவில், கங்கைகொண்டான் காலனியில், வயது முதிர்வின் காரணமாக ஒரே ஒரு சாவு மட்டுமே நிகழ்ந்துள்ளது என்றும், மேலக்கல்லூர் காலனியில் வயிற்றுப்போக்கின் காரணமாக 4 பேர்களும், உடம்பில் வீக்கம் ஏற்பட்டதால் இரண்டு பேரும் ஆக 6 பேர் இறந்துள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது. இவைகளில் எதுவும் பட்டினியாலோ அல்லது வேலையின்மையாலோ ஏற்பட்ட சாவுகள் அல்ல என்பது இதிலிருந்து தெரிகிறது.

இந்த இரண்டு காலனிகளிலுமுள்ள அகதிகளுக்கு இன்றியமையாப் பொருள்களை வழங்குவது தொடர்பாக, எல்லாக் குடும்பங்களுக்கும் சர்க்கரை, உண்வு தானியங்கள் வழங்குவதற்காக குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

மானூர் ஊராட்சி ஒன்றியத்தால் மேற்படி காலனிகளுக்கு குடிநீர்க் கிணறுகளும், துளைக் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு நீர் நன்றாகக் கிடைக்கிறது. இந்த ஆண்டு, இந்த இரண்டு காலனிகள் அமைந்துள்ள பகுதிகள், இம்மாவட்டத்தில் உள்ள மற்ற பகுதிகளைப்போல் கடுமையான வறட்சி நிலைமையை அடைந்துள்ளது. வேளாண்மைத் தொழிலாளர்களிடையே வேலை வாய்ப்பின்மை என்பது அகதிகளுக்கு மட்டுமே ஏற்பட்டுள்ள புதிதான ஒன்றல்ல. மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள வேளாண்மைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பகுதியில் வறட்சித் துயர் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளும் வறட்சித் துயர் தணிப்புப் பணிகளில், அகதிகளையும் சேர்த்துக்கொள்ளும்படி ஆணையர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். கங்கைகொண்டான் காலனியிலுள்ள அகதிகள் தற்போது அங்கு அருகாமையில் அமைந்துள்ள இந்தியா சிமிட்டி நிறுவனத்தில் கூலிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர், ஊராட்சி ஒன்றியம் மேற்கொள்ளும் வறட்சித் துயர் தணிப்புப் பணிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலக்கல்லூர் காலனியில், நல்ல உடல் வளம் மிக்க அகதிகள், ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களைக்கொண்டு அவர்களால் மேற்கொள்ளப்படும் கிணறு தோண்டுதல், மற்ற பணிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். சிலர், பக்கத்துக் கிராமங்களில் நடக்கும் வறட்சித் துயர் தணிப்புப் பணிகளில் கூலிகளாகப் பணிபுரியச் செல்கின்றனர்.



1975 ஏப்ரல் 18] [திரு. என். இராசாங்கம்]

திருநெல்வேலி மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி (புதுவாழ்வு)
இந்தக் காலனிகளுக்கு அடிக்கடி சென்று ஆய்வு செய்துள்ளார். இது
வரை கண்டிராத அளவிற்கு ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமையைச்
சமாளிக்கவேண்டிய ஸ்ரீலங்கா அகதிகளின் தனிப் பிரச்சினைகளை
அரசும் அந்த மாவட்டத்தின் வருவாய்த் துறை அதிகாரிகளும் நன்கு
அறிவர். அவர்களுக்கு நிதியுதவி அளிக்கவும், வேலைவாய்ப்பு உதவி
நல்கவும், உணவுப் பொருள்கள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்
பட்டுள்ளன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் விளக்கமாக அறிக்கை கொடுத்தார்கள். ஆனால் அந்த
அறிக்கையில் அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு உள்ள ஏற்பாடுகளை
பற்றித் தெளிவாகக் குறிப்பிடவில்லை. இலங்கையிலிருந்து, இங்கே
வந்து இருக்கிறார்கள் என்றால், அவர்கள் இலங்கையில் செய்த
தொழிலையே இங்கே செய்வதற்கு அவர்களுக்கு வழி வகுத்துக்
கொடுத்தால் தான் முடியும். அந்த கங்கைகொண்டான், மேலக்
கல்லூர் ஆகியவற்றில் அமைக்கப்பட்டிருக்கும் காலனி கிராமத்தி
லிருந்து அகன்று இருக்கிறது; கிராமத்திற்கு அருகாமையில்
இருந்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். தொழில் செய்
வதற்கு வசதி இருக்கும். அப்படி தொழில் செய்ய வாய்ப்பு இல்லாத
தால் அவர்களிடையே பஞ்சம், கஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது போல், வறட்சி ஏற்பட்ட
தால் மட்டும் அங்கே பஞ்சம் இல்லை, வறட்சி இல்லாத நேரத்திலும்
அதற்கு முன்னாலும் அங்கே அப்படிப்பட்ட நிலையேற்பட்டு
இருக்கிறது. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு
அளிக்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, அந்த
அறிக்கையில் நான் அங்கேயுள்ள நிலைமைகளை விரிவாகக் குறிப்பிட்
டேன். அதற்கு மேலும் ஏதாவது செய்ய வேண்டுமென்று சட்டப்
பேரவை உறுப்பினர் விரும்புவாரானால், அங்கே எந்த வழியில் அவர்
களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று எழுதி அனுப்புவாரானால்,
அரசிடம் கலந்து, அதற்கு ஆவன செய்யத் தயாராக இருக்கிறேன்.

(11) அறிக்கைகள் அளித்தல்

(அ) 1970–71-ம் ஆண்டிற்கான அனுமதித்து, சாட்டிய நிதி ஒதுக்கீடுகளுக்கும் மேற்பட்ட தொகை குறித்தும் 1971–72-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் கணக்குகள் மீதான பொதுக் கணக்காய்வுக்குழுவின் அறிக்கைகள்

THIRU M. A. LATHEEF : Mr. Speaker, Sir, I rise to present the Reports of the Committee on Public Accounts on the Excesses over Voted Grants and Charged Appropriations for the year 1970-71 and on the Accounts of the Government of Tamil Nadu for the year 1971–72.

(ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மீதான பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவின் அறிக்கை

THIRU V. ALADI ARUNA : Sir, I rise to present the Report of the Committee on Public Undertakings on the Tamil Nadu Water Supply and Drainage Board.

(இ) பொது நூலகங்கள் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை

THIRU THOPPUR THIRUVENGADAM : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimates on Public Libraries.

(12) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, சீட்டு நிதிகள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, சீட்டு நிதிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இச் சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



(ஆ) 1975-ம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, 1975-ம் ஆண்டு, மதுரை மாநகராட்ட் (திருத்த) சட்ட முன்வடிவை இச் சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே 1975-ம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடியவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இச் செய்யப்பட்டிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/75).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என முன்மொழிகிறேன்.

* 5—4—1975-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] ஏப்ரல் 18

பழத் தோட்டங்கள், தோப்புகள், பாக்கு மரத் தோட்டங்கள், விறகு மரங்கள் வளர்ப்பதற்கென்றே பயன்படுத்தப்படும் நிலங்கள் ஆகியவற்றுக்கு தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) விதித்துறைகளிலிருந்து விலக்களிக்க மேற்படி சட்டத்தின் 73-வது பிரிவைச் சேர்ந்த (Vii) (Viii) பகுதிகள் வகை செய்கின்றன. அந்த நிலங்கள், அந்தந்த நேர்விற்கேற்ப, பழத் தோட்டங்களாகவோ, பாக்கு மரத் தோட்டங்களாகவோ தொடர்ந்து இருக்கும் வரை, அல்லது விறகு மரங்கள் வளர்ப்பதற்கென்றே பயன்படுத்தப்படும் நிலங்களாகத் தொடர்ந்து இருக்கும் வரை மட்டும் தான் அத்தகைய நிலங்களுக்கு விலக்களிக்கப்படலாம் என்று மேற்படி பகுதிகளைச் சேர்ந்த வரம்பு நிபந்தனைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. அத்தகைய நிலங்களை நில உரிமையாளர்கள் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தாதவாறு தடை செய்வதே இந்த வரம்பு நிபந்தனைகளின் நோக்கமாகும்.

ஆனால் மேற்படி 73-வது பிரிவுகள் (VI) பகுதியின் கீழ் விலக்களிக்கப்பட்ட மலைத் தோட்டங்கள் குறித்து இத்தகைய வரையறைகள் எதுவும் இல்லை. மலைத் தோட்டங்களுக்கு முதலில் விலக்கு பெற்று, அவ்வாறு விலக்களிக்கப்பட்ட நிலங்களைப் பின்னர் பிற காரியங்களுக்குப் பயன்படுத்த நில உரிமையாளர்களுக்குள்ள மனப்பான்மையைத் தடுக்க, (Vii) (Viii) பகுதிகளின் கீழ் உள்ளதைப் போன்று வரம்பு நிபந்தனையை மேற்படி சட்டத்தின் 73-வது பிரிவைச் சேர்ந்த (VI) பகுதிகளில் சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்க மேற்படி சட்ட முன்வடிவு விழைகிறது.

[illegible], இப்பிரேரணையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மன்றத்தினை கேட்டுக் கொள்கிறேன்.

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment :—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1975 (L.A. Bill No. 13 of 1975) be referred to a Select Committee of the House consisting of



1975 ஏப்ரல் 18] [திரு. என். கே. பழனிசாமி]

.......................members. (Names of members to be given later)"

The amendment was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, 1961 ஆவது வருடத்திய உச்ச வரம்புச் சட்டத்தை நிறைவேற்றக் கூடிய காலத்தில் நிலப் பிரபுகளுக்குச் சாதகமாக தோப்புகள், பழத் தோட்டங்கள், மேய்ச்சல் நிலங்கள் போன்றவை எல்லாம் இந்த உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து விதி விலக்கு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 1970 ஆம் வருடத்திலே இந்த விதி விலக்கு கொடுத்தது எல்லாம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. 1970 ஆம் வருடத்திலே அந்த ரத்தை எடுத்து கிட்டதட்ட 5 வருடம் ஆயிற்று. அந்த ஐந்து வருட காலத்திலே ரத்து செய்ததை ஏன் சர்க்கார் எடுக்கவில்லை. இங்கே கொண்டு வந்திருக்கக் கூடிய மசோதாவில் கூட தோப்பு அல்லது பழத் தோட்டமோ, ஓரளவிற்கு பாதி பழத் தோட்டம் அல்லது பாதி விறகு காடு என்றிருந்தாலும் கூட அந்தப் பாதியைத் தான் எடுப்பதாக இருக்கிறது. 1970 ஆம் வருடத்திலே இந்த விதி விலக்கு கொடுத்தது பூராவும் சர்ப்ளஸ். இந்த சர்ப்ளஸ் பூராவையும் ரத்து செய்கிறேன் என்று சொல்லி அது பூராவையும் எடுக்க முடியாமல் பகுதி பகுதியாக கொண்டு வருவது தான் ஆச்சரியமாக இருக்கிறது.

உதாரணத்திற்கு மதுரையிலிருக்கக் கூடிய பழமுதிர்ச் சோலை, பழத் தோட்டங்களை பயிரிடுவதற்காக விதி விலக்கு கொடுக்கப் பட்டது. இன்றைக்கு அங்கே பழமும் கிடையாது, தோட்டமும் இல்லை. அதிலே பருத்தி, நெல் போன்ற தானியங்கள் விளைவிக்கப் படுகின்றன. 3,000 ஏக்கர் இருக்கின்றன. இதை ஏன் இந்த சர்க்கார் எடுக்கக் கூடாது? அப்படி எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? அதே மாதிரி நெய்க்காரபட்டி ஜமீன் மதுரை ஜில்லாவில் இருக்கிறது. அங்கே மேய்ச்சல் நிலம் என்று 1,200 ஏக்கர் விதி விலக்கு கொடுத்திருந்தார்கள். 1970-லே இது ரத்து செய்யப் பட்டது. அது மேய்ச்சல் நிலம். அந்த மேய்ச்சல் நிலத்திலே விதி விலக்கு ரத்து செய்த பிறகு, நில உச்ச வரம்பிலேயிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக அங்கே இருக்கக் கூடிய அதிகாரிகளும், நிலப் பிரபுக்களும் சேர்ந்து புதிதாக குத்தகைக்கு எழுதிக் கொடுப்பதாகச் சொல்லி பதிவு செய்திருக்கிறார்கள். அதை சர்க்கார் எடுத்தாலும்

கூட விவசாயிகளாகிய டெனன்ட்ஸுக்கு வரும் என்ற அடிப்படையில் அங்கே கண்ணம்மா டிரஸ்ட் என்று இருக்கிறது. அவர்கள் விவசாயிகளிடம் ஏராளமான பணத்தை வாங்கி இந்த உச்ச வரம்புச் சட்டம் செல்லாத முறையில் இந்த மாதிரி மோசமான காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதே போல் பழயகோட்டை பட்டக்காரர் மேய்ச்சல் நிலம் என்ற வகையில் 1,000 ஏக்கர் வைத்திருக்கிறார். அன்றைக்கு விதி விலக்கை ரத்து செய்தார்கள். அந்த 1,000 ஏக்கராவிலே எல்.பி.பி. பாசன தண்ணீர் பாய்கிறது; அங்கே அருமையான நெல் விளைகிறது. அதை மட்டும் நீக்கிவிட்டு, மேய்ச்சல் நிலத்தை மாத்திரம் எடுப்பது என்பது தான் இந்த மசோதாவின் நோக்கம். அது சரியில்லை. 1970-லே எப்படி ரத்து செய்தீர்களோ அது வரவேற்கத் தக்கது தான். அப்பொழுதே பூராவையும் அது பழத் தோட்டமாக இருந்தாலும், பாதி வெள்ளாமை செய்து பாதி சும்மா கிடந்திருந்தாலும் பூராவையும் எடுத்திருக்க வேண்டும். அதை கோவாப்பரேட்டிவ் முறையிலே எடுக்கலாம் என்றிருக்கிறது. பூமியை எடுத்து அதை என்ன செய்யப் போகிறோம் என்பது இந்தச் சட்டத்திலே இல்லை. அப்படி எடுத்து அதை என்ன செய்யப் போகிறோம் என்று சொல்லியிருந்தால் சரியாக இருந்திருக்கும். பிளான்டேஷனை எடுத்துக் கொள்ளுங்கள். பிர்லாவிற்கு நடுவட்டம் பக்கத்திலே 34,000 ஏக்கரா இருக்கிறது. அதிலே 20,000 ஏக்கர் தான் டீ, காபி தோட்டங்களாக இருக்கிறது. மீதி 14,000 ஏக்கரா தரிசாக இருக்கிறது. தஸ்த்தூர் பாரஸ்ட்லே 2,500 ஏக்கரா தரிசாக கிடக்கிறது. ஏராளமான பிளான்டேஷனிலே தரிசாக போட்டு வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அவை பூராவையும் எடுக்க வேண்டுமென்று சொன்னோம். ஆனால் மத்திய சர்க்கார் தலையிட்டு அபிவிருத்திக்கு வேண்டிய இடத்தை விட்டுவிட்டு மற்றதை எடுக்க வேண்டும் என்றார்கள். இப்பொழுது பூராவையும் எடுத்தால் என்ன என்று கேட்கிறேன். அபிவிருத்தி என்று ஒன்றும் அவர்கள் பண்ணவில்லை. அது மாதிரி அவைகளை எடுத்து கோவாப்பரேட்டிவ் பார்ம் என்ற முறையில் டீ விளைவிப்பதாக இருந்தாலும் சரி, காபி விளைவிப்பதாக இருந்தாலும் சரி அந்த முறையில் செய்யவேண்டும். எனவே, இந்த மசோதாவில் கொண்டு வந்திருப்பதை நான் எதிர்க்கிறேன்.





விதி விலக்கு நிலப்பிரபுக்களுக்கு கொடுத்து, மேலும் நிலம் கொடுக்கப்பட்டது. சர்க்கார் வந்து அதை ரத்து செய்தார்கள். எனவே, அது பூராவையும் எடுக்காமல் ஒரு பகுதியை மாத்திரம் எடுப்பது சரியில்லை. கோவாப்பரேட்டிவ் பார்ம் மாதிரி எடுத்து விளைவிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் ஒரு திருத்தமாக கொண்டு வரக்கூடிய இந்த மசோதாவின் பேரில் சில கருத்துக்களை நான் சொல்ல முன் வந்திருக்கிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டம் ஏற்பட்ட காலத்திலிருந்து அதில் பல ஓட்டைகள் இருக்கின்றன என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்த அவையின் உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த உச்ச வரம்பு மசோதாவில் விலக்கு கொடுத்திருப்பது பல வேறு தவறுகளைச் செய்வதற்கு ஊக்கம் அளிக்கிறது. இப்படி தவறுகள் செய்ய வழி வகை செய்து கொடுத்திருப்பதால் எந்த நிலங்களுக்கும் விதி விலக்கு அளிக்கக் கூடாது என்று வற்புறுத்தி கூறியிருக்கிறார்கள். அப்படிச் சட்டம் ஏற்பட்ட பிறகு பல்வேறு தடங்கல்கள் கூறப்பட்டிருந்தும் கூட அரசு தீவிரமாக இதைப் பற்றி சிந்திக்கவில்லை என்ற குற்றச் சாட்டை நான் கூற விரும்புகிறேன். ஆரம்ப காலத்திலே ஒரு கமிட்டியை போட்டார்கள். எந்தெந்த நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்பதற்காக கமிட்டியை போட்டார்கள். இதுவரையில் அந்த கமிட்டி கூடவே இல்லை. ஆகையால் இதை எத்தனை காலத்திற்கு இப்படியே வைத்துக் கொண்டிருக்கப் போகிறோம் என்பது தான் பிரச்சினை.

இப்பொழுது இதிலே கொண்டு வந்திருப்பது ஒரு சாதாரண விஷயம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது இப்போது இந்த விதி விலக்கு அளிக்கக்கூடிய பழத் தோட்டங்கள், வாழைத் தோட்டங்கள், அல்லது பாக்குத் தோட்டங்கள் சவுக்கு தோப்புகள் அதற்கெல்லாம் விதி விலக்கு அவசியம்தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மாதிரி தோட்டங்கள் எல்லாம் குறைந்த வருவாய் உள்ள அல்ல. தஞ்சை மாவட்டத்தில் உள்ள நஞ்சை நிலங்களுக்கும் இதற்கும் சம்பந்தா சம்பந்தம் இல்லை. பழத் தோட்டங்களில் ஆயிரம்,

இரண்டாயிரம் கிடைக்கிறது ஏக்கருக்கு. எலுமிச்சம் பழத் தோட்ட மாக இருந்தாலும், மற்ற பழத் தோட்டங்களாக இருந்தாலும் அதற்கு அதிக வருவாய் கிடைக்கிறது. இப்படி அதிக வருவாய் தரக் கூடிய நிலங்களுக்கு ஏன் விதிவிலக்கு தரப்பட வேண்டும்? இதில் சிலர் ஆதாயம் பெற அனுமதித்துக்கொண்டு இருக்கிறோம். நஞ்சை உணவு தானியம் மட்டும் சாகுபடி செய்யப்படுகின்ற நிலங்களை மட்டும் எடுத்துக்கொள்வது என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். உழைக்காமல் ஒரு நாலாண்டு, ஐந்தாண்டு வேலை செய்து தயாரித்து விட்டால் 40 ஆண்டு 50 ஆண்டு அதிக வருவாய் தரக்கூடிய இப்படிப் பட்ட பழத் தோட்டங்களுக்கு விதிவிலக்கு ஏன் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னுடைய தொகுதியில் இம்மாதிரி விதிவிலக்கு அளிக்கப்பட்ட தோப்புகள், பழத் தோட்டங்கள் அனைத்தையும் இந்தச் சட்டத்துக்குட்படுத்த அரசு ஆராயவேண்டும், பரிசீலனை செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

(திரு. கு. காமாட்சி தலைமை)

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, உச்ச வரம்பு சட்டத்திலிருந்து பழத் தோட்டங்கள், தோப்புகள், பாக்குத் தோட்டங்கள் ஆகிய நிலங்களுக்கு விதிவில்க்கு அளிப்பது என்பதற் கான மசோதாவை கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன்.

ஆனால், இந்த நேரத்தில் ஒரு கருத்தை அவை முன்னாலே வைக்க விரும்புகிறேன். உச்ச வரம்பு என்பது கிராமங்களிலும் மற்ற பகுதி களிலும் அதிகமான நிலத்தை வைத்திருக்கிறவர்கள் குட்டி ராஜாக் களைப் போல, ஜமீந்தார்களைப் போல ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதற்காக ஏற்படுத்தப்படுவது. உச்சவரம்பு கட்டுவதால் விவசாயிகளின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்ற கருத்தை பரவ லாக கேட்டு வருகிறோம். அத்தோடுகூட இன்றைக்கு மத்திய சர்க்கார் விவசாய வருமான வரி வசூலிப்பது போன்ற நிலைமைகளை எல்லாம் மாநில சர்க்காருக்கே தந்துவிடலாம் என்று யோசனை செய்து வருகிறார்கள். இந்த நேரத்தில் பொருத்தமான நிலங்களில் உச்சவரம்பு என்ற சட்டத்திலிருந்து ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் என்ற அடிப்படையில் விதிவிலக்கு அளித்தால் அப்படிப்பட்ட ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் டயரி பார்ம் போன்று வைத்து



விவசாயம் செய்தால் அதற்கு விதிவிலக்கு அளித்தால் தனியார் துறை செய்கின்ற முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்க முடியும். நாட்டுக்கு பயன்படக்கூடிய விவசாய உற்பத்தியை பெருக்கவும் முடியும். சர்க்காருக்கு வரவேண்டிய வருமான வரியும் கிடைக்கும். வேலையில்லா திண்டாட்டம் ஒழியும். அதே நேரத்தில் தரிசாக கிடக்கிற நிலங்களை விளைச்சலுக்கு கொண்டு வர முடியும். ஆகவே, இப்படிப்பட்ட காரணத்தால் ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளுக்கு விதிவிலக்கு தரக்கூடிய கருத்தை ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு மசோதாவை வரவேற்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த நில உச்சவரம்பு திருத்த மசோதாவில் ஏற்கெனவே விதிவிலக்கு அளிக்கப்பட்ட தோப்புகள், காடுகள் இந்த மாதிரி காடுகளுக்கு அந்த தோப்புகளைத் தவிர வேறு ஏதாவது பயிரிட்டு பயன்படுத்தினால் எடுத்துக்கொள்ளலாம் என்று திருத்தம் வந்திருக்கிறது.

இது சம்பந்தமாக எங்களுடைய கட்சி இந்த விதிவிலக்கு கூடாது என்று தொடர்ந்து சொல்லி வந்திருக்கிறது. நில உச்ச வரம்பு கொண்டு வந்த நேரத்திலே இதிலே இருந்து தப்பிக்க பல பேர் பல விதிவிலக்கு பெற்றார்கள் என்று தெரியும், பலர் பண்ணைக்கு என்றும், கரும்புக்கு என்றும், மேய்ச்சலுக்கு என்றும் விதிவிலக்கு பெற்றிருந்தார்கள். அதற்குப் பின்னால் விதிவிலக்கு ரத்து செய்கிற நேரத்தில் அதற்குப் பின்னால் அந்த விதிவிலக்கு நிலங்கள் பூராவும் அரசாங்கத்திற்கு வந்து அவை நிலமற்ற விவசாயிகளுக்கு பிரித்து கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்றால் அது வேறு பல மாதிரியாக பிரிக்கப்பட்டு அது இப்போது பழைய நிலப்பிரபுக்கள் கையில் தான் அப்படியே இருக்கிறது.

இப்போது இருக்கிற உச்சவரம்பு சட்டத்தின் மூலம் அரைகுறை யாக கிடைத்த மிச்ச நிலத்தை கூட எடுத்து அந்த கிராமத்தில் பரம்பரையாக பாடுபட்டு வந்த விவசாயிகளுக்கு, தொழிலாளி களுக்கு, ஹரிஜனங்களுக்கு அந்த நிலங்களை பிரித்துக் கொடுக்கக் கூடிய நிலையில் இருக்கிறதா என்றால் இல்லை. உச்சவரம்பு சட்டம் வந்த நேரத்தில் மிச்ச நிலங்களில் ஏற்கெனவே உள்ள அதன் சொந்தக்காரர்கள் பண்ணை என்றும், குத்தகை என்றும் சொல்லி அதை அவர்களே இன்னும் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள்.

[திரு. சோ. அழகர்சாமி] [1975 ஏப்ரல் 18

எனக்குத் தெரியும் ஆயிரம், ஐநூறு என்று ஒவ்வொருத்தருக்கு இருக்கிறது. ஆனால், உச்சவரம்பு மூலம் மிச்ச நிலம் இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், அறிவிக்கப்பட்ட மிச்ச நிலங்கள் அவர்களுக்கு வேண்டிய சொந்தக்காரர்கள் பேரில் எழுதப்பட்டு குத்தகை என்றும், நஷ்ட ஈடு அது இது என்று சொல்லி பொய்யாக ஜோடனையாகக் காரியங்கள் நடந்து வருகிறது. அதிகாரிகளுக்கு தெரிந்தே நடந்து வருகிறது. உச்சவரம்பு மசோதாவின் நோக்கம் இதுவரையில் நிறைவேறாத நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து இப்போது வந்திருக்கிற விதிவிலக்கு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

காடுகளுக்கு கூட விதிவிலக்கு. பல இடங்களில் பார்த்தால் நல்ல மகசூல் கிடைக்கக்கூடிய விவசாயத்திற்கு லாயக்கு உள்ள நிலங்கள், அது அரசாங்கத்தின் கையில் போய்விடுமே என்ற காரணத்தால் உடை விறகு, சவுக்கு, வேலிகருவை என்று பயிரிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவை எல்லாம் புஞ்சை தானியம் ராகி, போன்று கூட விளைவிக்க தகுதி உள்ள நிலங்கள். இரண்டு வருஷத்திற்கு ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் என்று வருவாய் வருகின்ற காரணத்தால் நல்ல புஞ்சை தானிய விளைச்சலுக்கு லாயக்கு உள்ள நிலங்களை இப்படி பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். விறகு காடுகளாக இருந்தால் இந்த சட்டம் தொடாது. ஆனால், புஞ்சை நிலமாக்கினால் ஏமாற்றமுடியாது.

என் பகுதியில் எட்டயபுரம் ஜமீந்தாருக்குச் சொந்தமாக எட்டயபுரத்தினை ஒட்டி இரண்டாயிரம் மூன்றாயிரம் ஏக்கர் நிலங்கள் தரிசாக போடப்பட்டு ஆடு மாடு மேய்ச்சலுக்காக என்று வைக்கப்பட்டு இருந்தது. அது மேய்ச்சல் தரையாக இருக்கவேண்டும் என்று அரசாங்கத்திற்கு எதிராக தீர்ப்புகள் கூட வழங்கப்பட்டு இருக்கின்றன. ஹைக்கோர்ட்டில் இந்த நிலங்கள் எல்லாம் பட்டா போட்டு கொடுக்க வேண்டும் என்று சிலர் வாதிட்டார்கள். பக்கத்தில் உள்ள ஊர் மக்கள், குடிமக்கள் எல்லாம் சேர்ந்து இந்த நிலம் பொதுமக்கள் உபயோகத்தில் இருக்கிறது, ஆடு, மாடு மேய்ச்சல் வெளியாக, புல்தரையாக இருக்கிறது. அதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும், பட்டா வழங்கக் கூடாது என்று வாதாடினார்கள். இதுவரையில் இல்லாமல் இருந்தது. அரசாங்கம் எதிர்தரப்பில்



1975 ஏப்ரல் 18] [திரு. சோ. அழகர்சாமி]

(முற்பகல் 11-00)

இருந்து வாதிட்டுக்கொண்டிருந்தது. இப்போது தனக்கே கிடைக்கிறது என்று சொல்லி இதுபோல செய்கிறதோ என்னமோ? ஒரேயிடத்தில் ஆயிரம் ஏக்கரா இருக்கிறது. இன்னொரு இடத்தில் ஆயிரம் ஏக்கரா இருக்கிறது. அங்கே விறகு பயிரிட்டால் விதிவிலக்கு அளிக்கலாம் என்று ஏற்படுத்திவிட்டால் நிலவுடைமைக்காரர்களுக்குத்தான் சாதகமாகிவிடும். நிலமற்ற பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய முயற்சியை கைவிடக் கூடிய நிலைதான் ஏற்படும்.

மதுரை பக்கத்தில் பழமுதிர்ச்சோலைப் பண்ணை என்று இருக்கிறது—நாயுடு பண்ணை—எந்தப் பழமும் அங்கே விளையவில்லை—ராகி, பருத்தி போன்றவைதான் அங்கே போடப்படுகிறது. ஆனால், பழமுதிர்ச்சோலை பழப்பண்ணை என்று சொல்லி விதிவிலக்கு அடிப்படையில் அது இருந்து வருகிறது. நாம் 15 ஏக்கரா உச்சவரம்பு என்று வைத்திருக்கிறோம். இது மிகத் தாராளமாக ஒரு குடும்பத்திற்குப் போதும். தோப்பு என்ற பெயராலோ, பழப்பண்ணை என்ற பெயராலோ விதிவிலக்குக் கொடுக்கவேண்டிய அவசியமே இல்லை—உச்சவரம்புச் சட்டத்திலுள்ள வரையறைக்குமேல் யாரிடம் எந்தப் பெயரில் நிலம் இருந்தாலும் அதை எடுத்து நிலம் இல்லாத கஷ்டப்படுகிற ஏழை எளிய மக்களுக்கு பகிர்ந்து அளிக்கிற முயற்சியினைத்தான் சர்க்கார் மேற்கொள்ள வேண்டுமே தவிர இந்தத் திருத்தத்தின் மூலம் மக்களுக்கு எவ்விதப் பயனும் ஏற்படாது என்ற கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி. இந்தத் தீர்மானத்தின் மூலம் மேலும் பல நிலங்களை எடுத்துக்கொள்ள முடியும் என்ற அமைப்பில் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

1961-லே கொண்டுவந்த சட்டம் வெற்றிபெறாத காரணத்தால்—பல்வேறு பெயர்களில் அளிக்கப்பட்டிருக்கிற விதிவிலக்கை ரத்து செய்யவேண்டுமென்று பலரும் எடுத்துச் சொன்ன கருத்துகள் இன்னும் பிரிதிபலிப்புக்கு வரவில்லை என்பதுதான் இன்று தெரிந்து கொள்ளக்கூடிய பொருள். காரணம் என்னவென்று கேட்டால் நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் உணவு உற்பத்தி பெருகும், நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு பரவலாக நிலம் கிடைக்கவும்,

[திரு. கே. என். குமாரசாமி] [1975 ஏப்ரல் 18

வேலை வாய்ப்புக் கிடைக்கவும் வழியேற்படும் என்று அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தோம். இன்றைக்கு கணக்கிட்டுப் பார்க்கிறபோது நில உச்சவரம்புச் சட்டத்திற்கு முன்னால் ஒருவரிடம் இருந்த நிலங்கள் அனைத்தும்—இன்றைக்கும் பினாமியாக பினாமி பெயர்களில் மாற்றப்பட்டு—பல்வேறு ரூபங்களில் மொத்த நிலம் முழுவதும் அவரிடமே இருந்து வருகிற சூழ்நிலையைத்தான் பார்க்கிறோம். நாம் 1970-லே சட்டம் கொண்டுவந்தோம்.

1971-லே திருத்தம் கொண்டுவந்தோம் என்றாலும்—அதற்கு முன்பாகவே தேதியிட்டு அதிகாரிகளின் துணையோடு ரெக்கார்டு களையே மாற்றி வைத்துக்கொள்கிற தந்திரோபாயங்கள் எல்லாம் அரசுக்கு நன்றாகத் தெரியும். காரணம், நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் நமக்குக் கிடைத்த நிலங்கள் எவ்வளவு என்று தெரியும். அந்த அளவுக்கு நிலைமை மோசமாகியிருக்கிறது.

மலைத் தோட்டங்கள், பாக்குத் தோட்டங்கள் எல்லாம் லட்சக் கணக்கில் வருவாய் வருகிற நிலங்கள்—அவற்றுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிற காரணத்தினால் அதிலே இன்றைய தினம் பெரிய முதலாளிகளே நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். மலைப் பகுதிகளில் வாழ்கிற மக்களுக்கும் பலன் ஏற்படக்கூடிய வகையில் மலைத் தோட்டங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற விதிவிலக்கையும் ரத்து செய்தாகவேண்டும். அத்தகைய தோட்டங்களுக்கு விதிவிலக்குக் கொடுப்பது எந்த அளவிலும் நியாயம் என்று சொல்ல முடியாது. நியாயமில்லாததை நியாயப்படுத்துவது சரியல்ல.

இந்தத் திருத்தத்தின் மூலம் என்ன ஏற்படும்? அதிகாரிகளைக் கொண்டு அது பழத்தோட்டம் தான், விறகுத் தோட்டம் என்று எழுதி அவர்கள் விதிவிலக்கு பெற்றுக்கொண்டிருப்பதற்கே அனுகூலம் ஏற்படும். இது சரியானதல்ல. நாம் விரிவான முறையில் சர்வே பண்ணி—எந்த எந்த பூமிகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை அரசே நிர்ணயம் செய்து எந்த விதிவிலக்கும் கிடையாது என்ற அடிப்படையில் செய்யவேண்டும். பாசன வசதியுள்ள இடங்களிலேயே இதுபோல விதிவிலக்கு இருப்பதைத்தான் இன்றைக்குப் பார்க்கிறோம்—ஆகவே, முழுமையான அளவில் சர்வே செய்து, எந்த எந்த நிலங்கள் எப்படி இருக்கவேண்டும் என்று தீர்மானம் செய்து—இந்தச் சட்டத்தின் அடிப்படையில் எதற்கும் விதிவிலக்குக் கூடாது என்ற முறையில் செய்யவேண்டுமென்று சொல்லி என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 18]

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கிற சட்ட திருத்தத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்தும்கூட—இதில் பல விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் இந்தச் சட்டத்தில் இருந்து பல பேர்கள் தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது நாடறிந்த உண்மையாகும். தோப்பு என்ற அடிப்படையில், பழத்தோட்டம் என்ற அடிப்படையில், கரும்பு சாகுபடி என்ற அடிப்படையில் பல பேர்கள் நிலமோசடி செய்கின்றவர்கள் இன்னமும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே தோட்டம் என்கிற அடிப்படையில் எல்லாம் கொடுக்கப்பட்டுள்ள விதிவிலக்கை ரத்து செய்யவேண்டும் என்பதுதான் என் கருத்தாகும். தோப்புகளையோ, பழத்தோட்டங்களையோ வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தினால் அந்த நிலத்தை அரசாங்கமே எடுத்துக்கொள்ள லாம் என்று இப்போது இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக் கிறது.

நிலமோசடி செய்யக்கூடியவர்கள் எப்படியாவது பத்து மாங்கன்றுகளை நடுவார்கள்—தென்னைக் கன்றை நடுவார்கள்—அதிகாரிகளின் துணையோடு அவற்றைப் பழத்தோட்டம், தோப்பு என்று சொல்லிவிட்டு அந்த நிலத்தை மற்ற காரியங்களுக்குத்தான் பயன்படுத்துவார்கள். ஏமாற்றுகிறவர்களுக்குத்தான் இந்தச் சட்டம் துணையாக அமைந்துவிடும். ஆகவே, எந்த நிலத்திற்கும் விதிவிலக்குக் கொடுக்கக்கூடாது. அப்போதுதான் உழைக்கின்ற உழவர்களுக்கு நிலம் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

இன்றைக்கு ஆயிரம் ஏக்கரா வைத்துக் கொண்டிருக் கிறவர்கள்கூட, 15, 15 ஏக்கராவாகப் பலபேர்களின் மீது எழுதி வைத்துவிட்டு—அவரே எல்லாவற்றையும் அனுபவித்துக்கொண்டிருக் கிறார். அதிகாரிகளும்கூட இந்த ஏமாற்றுதலுக்கு உடந்தையாக இருக் கிறார்கள் என்று சொல்ல முடியும். அந்த முறையில் இல்லாமல் இன்றையதினம் எந்தவிதமான விதிவிலக்கும் இல்லாத நிலைமையில் சட்டத்தை உருவாக்கி—நாட்டிலுள்ள நிலமில்லாத ஏழை எளிய உழவர் பெருமக்களுக்கு எல்லாம் நிலத்தை வழங்க அரசு முன்வர வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்த மசோதாவின்மீது ஒரு கருத்தைச் சொல்வது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

கொள்கை அளவில் நிலத்திற்கு உச்சவரம்பு வேண்டும்—ஒருவர் இவ்வளவுதான் நிலம் வைத்துக்கொள்ளலாம் என்றிருப்பது நல்லது தான். யாவரும் வரவேற்க வேண்டிய ஒன்றுதான். ஆனால் அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதில் நாம் வெற்றி பெறவேண்டுமென்றால்—பழத்தோட்டம் என்றோ, பாக்குத் தோட்டம் என்றோ விதிவிலக்குகள் பலவற்றை அளிப்பது சரியல்ல என்பதுதான் என் கருத்தாகும். அதை ஒருவர் பழத் தோட்டமாக வைத்திருக்கிறாரா அல்லது பாக்குத் தோட்டமாக வைத்திருக்கிறாரா என்பதைக் கண்டு, எந்த காரணத்திற்காக உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டதோ அந்த நோக்கம் சரியாக பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்காக இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், இதை எந்த அளவுக்குச் சரியாக நிர்வகிக்க முடியும், எந்த அளவுக்கு இதை நாம் அமுல்படுத்த முடியும் என்பதில் எனக்கு மிகுந்த சந்தேகம் ஏற்படுகிறது. இதை நாம் நிச்சயமாக அங்கே இருக்கிற கிராம அதிகாரிகள் அல்லது மற்ற அதிகாரிகளின் பொறுப்பிலேதான் விட்டுவிடப் போகிறோம். மேற்கொண்டு அங்கே இருக்கிறவர்கள் ஏற்கெனவே இந்த உச்சவரம்புச் சட்டத்திலே இருக்கிற விதிவிலக்கைப் பயன் படுத்தி, எப்படி யெல்லாம் அனுபவித்து வந்தார்களோ அதைப் போலவே இதிலும் அதிகாரிகளிடம் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, மேலும் தொடர்ந்து அனுபவித்து வரக்கூடிய ஒரு வாய்ப்புத் தான் இந்தத் திருத்தத்தின் மூலம் இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திருத்தத்தினால் ஏதோ ஒரு பெரிய பலனைச் சாதித்துவிட முடியும் என்பது தவறான எண்ணம் என்பதுதான் என் கருத்து.

இந்தச் சட்டத் திருத்தம் வந்ததால் இன்னொரு முக்கிய விஷயத்தையும் நான் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன். நமது உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில், கருத்துச் சொல்லும் போது நாம் உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்ததால் நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய நிலங்கள் எல்லாம் சிறிய சிறிய துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு விட்டதால் நம்முடைய உணவு உற்பத்தி



கூட குறைந்துவிட்டது என்ற கருத்து சொல்லப்பட்டது. எனவே, உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் உற்பத்தியைப் பெருக்க நாம் எந்தக் கொள்கையை அமுல்படுத்த வேண்டுமென்பது ஒருபுறமிருக்க, எந்த நோக்கத்திற்காக நாம் உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்தோமோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை.

உச்சவரம்புச் சட்டத்தை அமுல்படுத்தி, அதிக உற்பத்தியைக் காணவும், நிலம் இல்லாதவர்களுக்கு நிலத்தைக் கொடுத்து அதிக உற்பத்திக் காணவும் வேண்டுமென்று நினைத்தோம். ஆனால் அந்த நோக்கம் பயன்படவில்லை; அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்பது நடைமுறையில் நன்றாகத் தெரிகிறது. எனவே, இந்தத் திருத்தம் ஒருபுறம் இருந்தாலும், உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் உற்பத்திப் பெருக்கத்திற்கு நாம் எந்த கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதற்கு ஒரு கமிட்டி அமைத்து, உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் எவ்வளவு சாதகம் ஏற்பட்டிருக்கிறது, எவ்வளவு பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து, எவ்வாறு அடிப்படையில் மாறுதல் செய்யவேண்டும் என்பது பற்றி சிந்தித்து, அதற்கு ஏற்ற நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஒரு சட்டம் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு, விதிவிலக்களிக்கப் பட்டிருந்த தோட்டம், பழத் தோட்டம், விறகுத் தோட்டம் ஆகியவற்றிற்கு ஏற்கெனவே விதிவிலக்களிக்கப்பட்டு, அப்படி விதிவிலக்கு அளிக்கப்பட்டதில் ஒருசில இடங்களில் தோட்டங்களை அழித்து விட்டு, அதற்குப் பிறகு விவசாயம் செய்து வருவதாக அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு, அப்படி இருந்தால் அவைகளை நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுத்து, ஏழை எளிய மக்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

பொதுவாக, இந்த விவாதத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் கொஞ்சம் தீவிரமாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த அரசு, இந்தத் துறையைப் பொறுத்த வரையில், மிகவும் வேகமாகவும் கொஞ்சம் விரைவாகவும் நடவடிக்கை எடுத்து, எடுக்கப்பட்ட நிலங்களை ஏழை

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1975 ஏப்ரல் 18

விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்பதில் தீவிரமாக இருந்து வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்வார்கள்.

எடுக்கப்பட்ட நிலங்கள் எல்லாம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. அதற்கு மேலே அவர்கள் உயர்நீதி மன்றம் வரையில் சென்று தடை உத்தரவு வாங்கியிருப்பதால் இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் இப்படி எடுக்கப்பட்ட நிலங்கள் தரிசாக, காடாக கிடக்கின்றன.

மேலும், இப்போது மூன்று ஆண்டுகளுக்குமேல் விவசாயம் செய்யாமல் தரிசாகக் கிடக்கும் நிலங்களை, யாருக்கும் விலக்குக் கொடுக்காமல், நிலம் இல்லாத விவசாயிகளுக்கு எடுத்துக் கொடுக்கலாமா என்ற ஒரு யோசனையும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

இன்றையதினம் மேய்ச்சல் நிலம் என்று சொல்லி விலக்களிக்கப்பட்ட நிலங்களையும் நாம் எடுத்துக்கொள்ள வழிவகைச் செய்திருக்கிறோம். திரு. என். கே. பழனிசாமி அவர்கள் மன்றாடியார் நிலத்தைப் பற்றிச் சொன்னார்கள். நெய்க்காரப்பட்டி ஜமீன் மேய்ச்சல் நிலங்களில் ஒரு பகுதியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்து, வழக்குத் தொடரப்பட்டு, எடுத்துக் கொள்வதற்கு கோர்ட்டில் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். இன்னும் ஒரு பகுதி இருக்கிறது. அதையும் எடுத்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது.

மன்றாடியார் மேய்ச்சல் தரை வைத்திருந்தார் என்றும், மாடு தின்ன வைக்கோல் தேவை என்பதால் அதில் விவசாயம் செய்யப்பட்டது என்றும் வைக்கோலுக்காக விவசாயம் செய்யப்பட்டதால் அதுவும் மேய்ச்சல் நிலத்தில் சேரும் என்று சொல்லப்பட்டது. வழக்கு உயர் நீதிமன்றத்தில் இருக்கிறது ; இன்னும் தீர்ப்பு வரவில்லை.

கரும்புத் தோட்டங்களைப் பொறுத்தவரையில் இப்போது ஆரூரான் சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான நிலங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதைப்போல எடுக்கப்பட்ட நிலங்களில் ஆங்காங்கே வேறுசில முறைகளில் சீர்திருத்தங்கள் செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாம் நிறைவேற்றிய சட்டத்தின்படி



1975 ஏப்ரல் 18] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

இன்னும் எடுக்கப்படாமல் இருக்கிற நிலங்களை எடுப்பதற்கு பல இடங்களில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் நடைமுறையில் ஏற்படுகிற சில சிக்கல்களைத் தீர்ப்பதற்காக இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன்பேரில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தக் கருத்துக்களும் பரிசீலனை செய்யப்படும். ஆகவே, இந்தத் திருத்தச் சட்டத்தினை ஏற்று, நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்கள் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

" தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

" தமிழ்நாடு 1975-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 13/75) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## 8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

**(ஆ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/75).**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/75) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுவதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 12. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

**(உ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/75).**

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதியின்றும் பாதுகாப்பதில்) மறு சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 14/1975) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பு அளித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/1961) 1961 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது. அது மூன்றாண்டுக் காலத்திற்குச் செயலில் இருந்தது. பின்னர் இயற்றப்பட்ட சட்டங்களின் வாயிலாக அவ்வப்போது இச் சட்டத்தின் செல்திறன் நீட்டிக்கப்பட்டது. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பு அளித்தல்) சட்டத்தின் மூலம்

* 9—4—1975-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



(தமிழ்நாடு சட்டம் 1/1971) மேற்படி சட்டத்தின் செல்திறன் கால அளவு மூன்றாண்டுக் காலத்திற்குக் கடைசியாக நீட்டிக்கப்பட்டது. மேற்சொன்ன மூன்றாண்டுகள் கால அளவு 1973 நவம்பர் 28 ஆம் நாளன்று முடிவடைந்தது.

குடியிருப்பு ஒன்றை அனுபோகத்தில் வைத்துள்ள ஒருவர் இச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளதைத் தவிர மற்றப்படி, அத்தகைய குடியிருப்பிலிருந்து 1961 ஆம் ஆண்டு 38-வது சட்டத்தின் கீழ் வெளியேற்றப்படுவதினின்றும் அவருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. அத்தகைய குடியிருப்பு குறித்து 1971 ஜூன் 19 ஆம் நாளன்று குத்தகைக்காரராக அல்லது உரிமதாரராக இருந்த உழவர் அல்லது உழவுத் தொழிலாளர் ஒருவருக்கு தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்கல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/1971) உடைமை உரிமை வழங்குகிறது. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு 38-வது சட்டம் 28—11—1973-க்குப் பின்னரும் செல்திறன் பெறும் வகையில் நீட்டிக்கப்பட்டாலொழிய, 1971, ஜூன் 19 ஆம் நாளுக்குப்பிறகு குடியிருப்பு ஒன்றை அனுபோகத்தில் வைத்துள்ள உழவர்களும், உழவுத் தொழிலாளர்களும், தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு 40-வது சட்டம் நீட்டிக்கப்படாத பகுதிகளில் உள்ள குடியிருப்பு அனுபோகதாரர்களும், அத்தகைய குடியிருப்பிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு எதிராகப் பாதுகாப்புப் பெறமாட்டார்கள். எனவே, தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பு அளித்தல்) சட்டத்தை 29—11—1973 நாளிலிருந்தே செயல்படும் வகையில் அதை நிலையான சட்டமாக மீண்டும் இயற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க இச் சட்ட முன்வடிவு விழைகிறது.

இதனை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம் மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: Sir, I move the following amendment—

" That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Re-enacting Bill, 1975 (L.A. Bill No. 14 of 1975) be referred to a Select Committee of the House consisting of.........Members (Names of members will be given later) ".

[1975 ஏப்ரல் 18

திரு. என். கே. பழனிசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். 1961-ம் வருஷத்திலே இந்த மாதிரி சட்டம் வந்து, குடியிருப்பவர்களை வெளியேற்றக் கூடாது என்று ஒவ்வொரு மூன்று வருஷத்திற்கும் அதை நீட்டித்துக் கொண்டே வந்திருக்கிறார்கள். கடைசியாக, 1973-ம் வருஷம் செப்டம்பர் மாதம் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமெண்ட்மெண்ட்டை யாரும் செக்கன்ட் பண்ணவில்லையே . . .

திரு. என். மருதாசலம், திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் திருத்தத்தை வழிமொழிந்தனர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமெண்ட்மெண்ட்டை மூவ் பண்ணிவிட்டு, வெல்கம் தி பில் என்றால், என்னவென்று புரிய வில்லை.

திரு. என். கே. பழனிசாமி : 1973-ம் வருஷம் செப்டம்பர் மாதத் தோடு காலாவதியாகிறது. இப்பொழுது 1975. இந்த 1½ வருஷ காலத்தில் வெளியேற்றப்பட்டவர்களுக்கும் ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து, மறுபடியும் அவர்களை அந்த இடத்திற்குக் கொண்டு வருவதாக இருக்கிறது. இப்படி ஒரு மசோதா கொண்டு வருகிற அதே சமயத்திலே செலக்ட் கமிட்டியிலே வெளியேற்றலாம் என்றிருக்கிறது. இரண்டிற்கும் எப்படி ஒத்து வருகிறது என்று தெரிய வில்லை. நிலப் பிரபுக்களுக்குச் சாதகமாக, நஷ்டஈடோ, வேறு ஏதாவது கொடுத்தோ வெளியேற்றலாம் என்று செலக்ட் கமிட்டி யிலே இருக்கிறது. இரண்டு பில்களும் ஒன்றுக்கொன்று முரண் பாடாக இருக்கிறது. இதைத் தெளிவு பண்ணினால் வசதியாக இருக்கும். 1971-ம் வருஷத்திலே, இந்தச் சட்டசபையிலே சட்டம் நிறைவேற்றியிருக்கிறோம். அதாவது, எந்தக் காரணம் கொண்டும் யாரையும் வெளியேற்றக் கூடாது, அவர்களுக்கு வீட்டு மனை இலவச மாகக் கொடுக்கப்படும். நிலப் பிரபுக்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப் பட வேண்டுமென்றால், சர்க்கார் கன்சாலிடேட் பண்ணி கொடுக்கும், என்று, கிட்டத்தட்ட 3, 4 வருஷம் ஆகிறது. எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? 30 சத விகிதம் ஆட்களுக்குக் கூட கிடைக்கவில்லை. பல சங்கடங்களிருக்கின்றன. சர்வேக்கு அழைத் தால், கணக்குப் பிள்ளை, போதுமான கணக்குக் கொடுப்பதில்லை. ஆகவே, அந்த இடத்தை அளக்க முடியாமலிருக்கிறது. . . . . .



1975 ஏப்ரல் 18] [திரு. என். கே. பழனிசாமி]

அப்படி அவர்கள் அளக்கும்போது, வீட்டை மட்டும் அளக் கிறார்கள். வீட்டைச் சுற்றி அளப்பதில்லை. குறைந்தபட்சம் 10 சென்ட்டாவது கொடுத்தால்தான் பிரயோஜனமாக இருக்கும். காரணம், மாமரம் வைத்திருக்கலாம், அல்லது தென்னந்தோப்பு வைத்திருக்கலாம். இந்த மாதிரி பல வருஷ காலமாக வளர்த்து விட்டு, வீடு மட்டுமிருந்தால் எந்தவிதமான உரிமையுமில்லை. இந்த மசோதா கொண்டு வருகிற காலத்திலே வழியைத் தடங்கல் செய்து அடைத்து விடுவது, அல்லது குடி தண்ணீர் எடுக்கவிடாமல் அதைத் தடுப்பது போன்ற நிர்ப்பந்தங்களின் காரணமாக, ஆயிரக்கணக் கானவர்கள் நிர்ப்பந்தமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். சர்க்கார் சட்டம் போட்டுச் செய்யமுடியாது. காரணம், அவர்கள் குடியிருக்கிற இடங்களுக்குப் போகிற பாதையைச் சர்க்கார் அக்கொயர் செய்யவேண்டும். குடிநீருக்கு வசதி செய்யவேண்டும். இல்லாவிட்டால், நிலப்பிரபுக்களைச் சர்க்கார் ஒன்றும் செய்ய முடியாது. வழித் தடங்களை அடைத்துவிடுகிறார்கள். குடிதண்ணீர் எடுக்க விடாமல் தடுக்கிறார்கள். இந்த மாதிரி நிர்ப்பந்தம் இருக் கிறது. அது மட்டுமல்லாமல், பல கையாட்களை வைத்து, பல பேர்களை வெளியேற்றியாகிவிட்டது. இந்தச் சட்டத்தைக் கொண்டு ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து, மறுபடியும் எப்படி கொண்டு வரப்போகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

அடுத்தபடியாக, போலீஸ் நிர்ப்பந்தம் வேறு. தாசில்தார் இஷ்டப்பட்டால், அவர்களுக்குக் குடியிருப்பு மனை வழங்க எல்லா அதிகாரமுமிருக்கிறது. தாசில்தார்களுக்கு விண்ணப்பம் கொடுத் தாலும் அவர்கள் கவனிப்பதில்லை. ஆகவே, மனிதாபிமானப் போக்கு அதிகாரிகளிடம் இல்லை என்பதையும் கனம் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். ஆகவே, 2 சென்ட் தான் கொடுக்கிறார்கள். இது சரியல்ல, குறைந்தது 10 சென்ட்டாவது கொடுத்தால் சரியாக இருக்கும். நான்கு வருஷமாக 10 சத விகிதம் தான் வந்திருக்கிறது. எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்றால், எவ்வளவு வருஷமாகும். ஆகவே, சர்க்கார் உடனடியாகக் கொடுப் பதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, குடியிருப்பு அனுபவக் காரர்களை வெளியேற்றத்திலிருந்து பாதுகாக்கின்ற இந்தச் சட்டத்தினை நான் வரவேற்று சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தின் நோக்கம் மிகவும் சிறந்த நோக்கம். ஏழைகள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனல், இது மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியது போல், 19—6—1971-ம் தேதிக்கு முன்னல் குடியிருப்பு அனுபவக்காரர்களுக்கு மட்டும்தான் இந்தச் சட்டம் வந்துள்ளதாகத் தெரிகிறது. இந்த நாட்டில் இருக்கிற ஏழை மக்களுக்கு ஒரு வேளை, தனக்கென்றே இந்த நிலங்களை வைத்திருந்தாலும் கூட, இந்தத் தேதிக்கு முன்னலேயே அவர்கள் வைத்திருக்கிருர்கள், அனுபவித்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதைக் காட்டுவதற்கு இப்பொழுதிருக்கிற முறைகளில் அவர்களிடம் எந்தவிதமான ரெக்கார்டுகளோ மற்ற தெளிவுகளோ இருக்க வழியில்லை. ஆகவே, அவர்கள் இந்தக் குறிப்பிட்ட நிலத்தை இந்த நாளைக்கு முன்னலிருந்தே நான் அனுபவிக்கிறேன் என்பதைத் தெளிவுபடுத்த சிரமப்படுகிருர்கள். இந்தக் காரணத்தை வைத்தே பல ஏழைகள் வெளியேற்றப்படுகிற சிரமமும் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆகவே, இந்தச் சட்டத்தை அமுல் நடத்துகிற அதிகாரிகள் மிகவும் கவனமாக அதை நடைமுறைப்படுத்த வேண்டும். ஏழைகளை பாதிக்காத வகையில் அதை நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கு அதிகத் தெளிவு வேண்டியதில்லையென்று அரசாங்கம் நிபந்தனையாக வைக்கவேண்டுமென்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னென்று, இது குத்தகைதாரர்களில் லைசன்ஸ் என்ற முறையில் அனுபவிக்கின்றவர்களுக்கு மட்டும்தான் இந்தச் சட்டம் பயன் தரக் கூடிய வகையில் இருக்கிறது. ஏற்கெனவே, பல ஆண்டுகளாக டெனன்ட்டுகளாகவோ, குத்தகைதாரர்களாகவோ, அல்லது லைசன்ஸியாகவோ இருந்தால்கூட, பலருக்கு நான் ஏற்கெனவே சொன்னதைப் போல் அதையும் நிரூபிக்கின்ற வகையில் அவர்களுக்கு ரெக்கார்ட் இல்லாமல் நிரூபிக்கின்ற சங்கடம் சர்வசாதாரணமாக இருக்கிறது. ரெக்கார்ட் ஆஃப் டெனன்ஸி ஆக்ட்—அச் சட்டத்தை அமுல் நடத்தும்போது கூட இந்தச் சங்கடம் ஏற்படுகிறது. அதற்கு நாம் வைத்திருக்கிற பிரிவு என்னவென்ருல், ரெக்கார்ட் இல்லை யென்ருல்கூட, பக்கத்திலேயிருக்கிற விவசாயிகள் கூறினல் அல்லது வில்லேஜ் ஆபீஸர்கள் கூடத் தெளிவு கொடுக்கலாம் என்ற



முறையைக் கையாண்டு வருகிருேம். அந்த முறை இதற்கும் கையாளப் படுமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தச் சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து அவர்கள் 6 மாதத்திற்குள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற ஒரு விளக்கமும் திருத்தத்தில் இருக்கிறது. ஏழைகளைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கு இந்தச் சட்டம் வருவதே தெரிய வாய்ப்பில்லை. ஆகவே, 6 மாதத்திற்குள் அவர்கள் தேவையான நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விதித்திருப்பது ஏழைகளுக்கு எந்த அளவு நன்மை செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிருேமோ அந்த அளவு நன்மை பயக்காது, அவர்கள் குறித்த காலத்திற்குள் விண்ணப்பிக்க வழிவகை இருக்காது, அதனல் கூட பல ஏழைகள் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, ஏழைகளை பாதிக்காத வகையில் இந்தச் சட்டத்தை அமுல் படுத்துகின்ற அதிகாரிகளுக்கு அரசு ஆலோசனை கூறவேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

* திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) சட்டத்தை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களை இங்கே எடுத்துரைப்பதற்கு எனக்கு வாய்ப்பளித்ததற்காக முதலிலே நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

1961-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் இதுவரை நிரந்தரமாக்கப்படாமல் இப்போதுதான் மறுபரிசிலனை செய்து நிரந்தரமாக்குகின்ற நல்ல முடிவை எடுத்து இந்த மாமன்றத்தில் இன்று நிறைவேற்ற இருக்கிருேம். இந்தச் சட்டத்தில் என்ன என்ன குறைபாடுகள் இருக்கின்றன, இதை நிறைவேற்றுவதில் என்ன என்ன சிக்கல்கள் இருக்கின்றன, அதிகாரிகள் மட்டத்தில் எந்த வகையிலே தீர்ப்பளிக்கிருர்கள் என்பதையெல்லாம் நாம் சற்று அலசி ஆராய்ந்து பார்த்து அதற்குப் பிறகு தகுந்த பரிகாரம் காணவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் ஏராளமான பேர்கள் இப்போது இருந்துகொண்டிருக்கிறார்கள். பலருக்குக் குடியிருக்க வீடு இல்லை, குடியிருக்கின்ற குடிசையும் நிரந்தரமில்லை என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆகவே இதுபோன்ற சட்டத்தை இயற்றி அவர்களுக்கு நிரந்தரப் பரிகாரம் காணவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் 1961 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இடையிடையே தேவைக்கேற்ப புதுப்பிக்கப்பட்டுவந்து நீண்ட பரிசீலனைக்குப் பிறகு ஒரு நிரந்தரப் பரிகாரம் காணவேண்டுமென்ற நல்ல முடிவை எடுத்து இன்று அதை நாம் அலசி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். குடியிருப்புதாரர்கள் யார் என்பதை நிர்ணயிப்பதிலும் விவசாயக் கூலி யார் என்பதை நிர்ணயிப்பதிலும் விவசாயிகள் யார் என்பதை நிர்ணயிப்பதிலும் பல சந்தர்ப்பங்களில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதை கிராமப்புறங்களிலேயிருந்து வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்களும் அறிவோம்.

ஒரு சிலர் விவசாயிகளாக இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் நிரந்தரமாக விவசாயம் செய்வது இல்லை. ஒரு சிலர் விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் விவசாயத்திலேயே கூலிகளாக இருப்பது இல்லை, கடை வைத்துக்கொண்டும் வேறு பல தொழில்களில் ஈடுபட்டுக்கொண்டும் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அவர்கள் இந்தச் சட்டம் நிரந்தரமாக்கப்பட்ட பிறகு இந்த வீட்டில் நான்தான் குடியிருந்தேன், ஆகவே எனக்கு உரிமை வழங்கவேண்டும் என்று சொல்கிற நேரத்தில் உள்ளபடியே அவன் விவசாயிதானா, விவசாயக்கூலிதானா என்பதை அலசி ஆராய்ந்து பார்ப்பதற்கு சில விதிமுறைகளை வகுக்கவேண்டும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் கிராமப்புறங்களிலே இது போன்ற சிக்கல்கள் ஏராளமாக இருக்கின்றன.

உதாரணத்திற்காகக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருக்குக்கூடத் தெரியும், குளித்தலையில் பஸ் நிலையத்திற்கு அருகில் ஒரு நிலம் இருக்கிறது. அது தாயாரம்மாள் என்பவருக்குச் சொந்தமான நிலம். அந்த அம்மையார் சேதுப்பிள்ளை என்பவரிடமிருந்து அந்த நிலத்தை வாங்கினார், அதில் கன்னியப்ப பிள்ளை என்பவர் இரண்டு சென்ட் நிலத்தை ஆக்கிரமித்து குடிசை போட்டு இருந்துவந்தார். கன்னியப்ப பிள்ளை இறந்துவிட்டார், அவருக்கு ஆண் வாரிசு, பெண் வாரிசு இருக்கிறது. அவர்கள் வேறு



ஊருக்குப்போய் குடியேறிவிட்டார்கள். அவர் இறந்தபிறகு அவருடைய மருமகன் முனியப்ப பிள்ளை என்பவர் அதிலே குடி இருந்தார். கன்னியப்ப பிள்ளை இறந்துவிட்ட பிறகு வாரிசு வேறு இடத்திற்குச் சென்றுவிட்ட பிறகு முனியப்ப பிள்ளை எனக்குத்தான் சொந்தம் என்று ஆதரைஸ்டு ஆபீஸரிடம் மனுப்போட்டார். அவர் அந்த மனுவை விசாரித்து அங்கேயுள்ள கணக்குப்பிள்ளையும் மற்றவர்களும் சொல்கிற வாக்குமூலத்தை வைத்துக்கொண்டு முனியப்ப பிள்ளைக்கு சொந்தம் என்று தீர்ப்பளித்துவிட்டார். அந்தத் தீர்ப்பு தவறு என்று சொல்லி மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியிடம் முறையிட்டார்கள். அவரும் முனியப்ப பிள்ளைக்குத்தான் உரிமை என்று தீர்ப்பு அளித்தார். இப்போது உயர் நீதி மன்றத்திலே அந்த வழக்கு இருந்துகொண்டிருக்கிறது. இதை நான் ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் நம்முடைய சிவில் சட்டப்படி, ஒரு இடத்தின் உரிமையை நிர்ணயிக்கின்ற பொறுப்பு, உடைமையை நிர்ணயிக்கின்ற பொறுப்பு சிவில் கோர்ட்டிற்கு இருக்கிறது, அந்த அதிகாரம் சிவில் கோர்ட்டிற்குத்தான் இருக்கிறதே தவிர அரசாங்க நிர்வாக அதிகாரிகளுக்கு இல்லை என்பதை நாம் முதலில் எண்ணிப் பார்க்கவேண்டும்.

வாரிசுகள் இருக்கும்போது மருமகன் எப்படி வாரிசு ஆக முடியும்? நிர்வாக அதிகாரிகள் யார் கீழ் பணியாற்றுகிறார்கள்? அரசாங்கத்தின் கீழ் பணியாற்றுகிறார்கள். ஆங்காங்கேயிருக்கிற அரசியல் தலைவர்கள், செல்வாக்குப் படைத்தவர்களின் குறுக்கீடு இருக்கிற காரணத்தால் சட்டத்தை ஆராயாமல் சட்ட சிக்கலை எண்ணிப் பார்க்காமல் இண்டியன் லிமிடேஷன் ஆக்ட்டில் உள்ளது பற்றி எள்ளளவும் கருதிப் பார்க்காமல் யார் சிபாரிசு செய்கிறார்களோ, யாருடைய செல்வாக்கு எடுபடுகிறதோ அவருக்குத் தான் குடியிருப்பு உரிமை வழங்கப்படுகிற முறையிலே அதிகாரம் இந்த ஆதரைஸ்டு ஆபீஸர்களிடத்திலே இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒருவருக்கு உரிமை இருக்கிறதா அல்லது உடைமை இருக்கிறதா என்பதை நிர்ணயிக்கின்ற முழுப் பொறுப்பும் சிவில் கோர்ட்டிடம் விட்டால்தான் நியாயமான தீர்ப்பாக அது இருக்க முடியும். நம்முடைய இண்டியன் எவிடன்ஸ் ஆக்டை முறையாகப் பல அதிகாரிகள் படித்திருக்கமாட்டார்கள், சிலர் பார்த்திருக்கக்கூட மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு உண்மையான டைட்டில் டீட் யாரிடம் இருக்கிறது. அதிலே உள்ளது உண்மையாக உள்ளது தானா, அதிலே உள்ள ஷரத்துக்கள் சரிதானா என்று படித்துப் பார்த்து மறுபரிசீலனை செய்து அந்த உரிமையை யாருக்கு விடுவது

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்]    [1975 ஏப்ரல் 18

என்பதிலே ஐயப்பாடு இருக்கும். இதுபோன்ற சந்தர்ப்பங்களிலே உரிமை யாருக்கு இருக்கிறது என்பதை பரிசீலிக்கின்ற உரிமையை சிவில் கோர்ட்டிற்கு நாம் விட்டுவிடவேண்டும் . . .

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : ஒரு கிளாரிபிகேஷன், ஏதோ முனியப்ப பிள்ளை விஷயத்திலே ஆர்டர் தவறாக வந்ததாகச் சொல்கிறார்கள். அப்படித் தவறாக இருந்தால் அதனால் எல்லா ஆர்டர்களும் தவறாக இருக்கின்றன என்று சொல்லி கோர்ட்டிற்கு விட வேண்டுமென்று சொல்கிறார்கள், கோர்ட்டிலே தீர்ப்புச் சொன்னால் அந்தத் தீர்ப்பும் தவறு என்று சொல்கிறார்களே அப்படியானால் யாரிடம்தான் விடவேண்டுமென்று சொல்கிறார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நான் ஒரு பானை சோற்றில் ஒரு சோறுதான் பதம்பார்த்துச் சொன்னேன். இப்படிப்பட்ட குறைகள் ஏராளமாக இருக்கின்றன என்பதை என்னுடைய அனுபவத்திலேயே நான் சொல்கிறேன். அந்த வழக்கில் வருவாய்த் துறை அதிகாரியிடம் வழக்கு சென்றபோது நானே வக்காலத்து போட்டு ஆஜரானேன்.

இதில் இருக்கிற தர்ம சங்கடம் என்னவென்றால் நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் என்பதால் நான் வாதிட்ட வழக்கிற்கு சாதகமாகத் தீர்ப்பு இருந்தால் அந்த அதிகாரிகளுக்கு ஆபத்து ஏற்படும் என்ற நிலைமை இருக்கிறது என்று அவர்கள் நினைக்கிறார்கள். அந்த வழக்கில் விசாரணையின்போது நான் ஆஜராகாமல் வேறு ஒரு வக்கீலை அனுப்பினேன். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதிகாரிகள் என்ன மனப்போக்கில் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். சிவில் கோர்ட் என்று ஒன்றை நாம் உருவாக்கிவிட்டு உரிமையை நிர்ணயிக்கின்ற அதிகாரத்தை அதற்குக் கொடுத்துவிட்டு சொத்தின்மீது உடைமைப் பிரச்சினைகள் ஏற்படுகின்றபோது தீர்ப்பை அளிக்கின்ற பொறுப்பை ஏன் நிர்வாக அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : லீகல் இஷ்யூவாகப் பேசுங்கள்

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இதுவும் லீகல் இஷ்யூதான்.



1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நிறைய மெம்பர்கள் பேசவேண்டும். சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இருக்கட்டுமே, நான் சொல்வதைக் கேட்டுவிட்டு முடிவு செய்யுங்கள். ஆதரைஸ்டு ஆபீஸர் ஒருவர் இருக்கிறபோது இருக்கின்ற நிலை வேறு, அவர் போய்விட்ட பிறகு இன்னொருவர் வந்த பிறகு வேறு ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. ஆகவே இதுபோன்ற வழக்குகளை ஆதரைஸ்டு ஆபீஸர்களிடம் விடுவதைவிட ஆங்காங்கே இருக்கின்ற சிவில் கோர்ட்டுகளிடம் ஒப்படைப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். அப்படிச் செய்தால் தீர்ப்பு நியாயமாகவும் நேர்மையாகவும் இருக்கும்.

குடியிருப்புதாரர்களில் பலர் பல இடங்களில் இந்தச் சட்டம் வருவதற்கு முன்பும் வந்த பின்பும் ஆக்கிரமித்துக் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் இந்த மாமன்றத்திலேயே நான் முன்பேகூட எழுப்பியிருக்கிறேன். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். என்னுடைய தொகுதியிலே உள்ள பொய்யப்புத்தூர் கிராமத்தில் இரண்டாவது முறை திருத்தம் கொண்டுவருவதற்கு முன்பு அங்கேயுள்ள தனிப்பட்டவர்கள் நிலத்தை சிலர் ஆக்கிரமித்து குடியிருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தைச் சேர்ந்த இலாகா அங்கேயுள்ளவர்களை வெளியேற்றிவிட்டு இன்னொரு வகுப்பாரை அங்கே குடியேற்ற முயற்சி நடத்திக்கொண்டு இருக்கிறது. இதை நான் இந்த மாமன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். இந்த அரசாங்கம் ஒரு பக்கம் குடியிருப்புதாரர்களுக்கு அந்த நிலத்தை உரிமையாக்குவதற்குச் சட்டம் கொண்டுவந்திருக்கிறது. ஆனால் மறு பக்கம் அரசாங்கத்தின் இலாக்காக்களில் இன்னொன்று அவர்களை அகற்றிவிட்டு வேறு மக்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த அரசு ஒரு பக்கம் உதவியாகவும், மறுபக்கம் உதவியை அபகரிப்பதாகவும் இருக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதியைச் சார்ந்த பொய்யப்புத்தூர் விவகாரத்தில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் தனிக்கவனம் செலுத்தி அந்த இலாகாவின் லேண்ட் அக்விசிஷன் ப்ரபோசலை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[1975 ஏப்ரல் 18

MR. DEPUTY SPEAKER: When an amending Bill is discussed, our debate should be within the scope of the Bill and extraneous matters should not be referred.

இப்படி இதற்கு முன்னால் இருந்த தலைவர்கள் திரு. சிவசண்முகம் பிள்ளை, டாக்டர் கிருஷ்ணாராவ் போன்றவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கொஞ்சம் லேட்டிட்யூட் மெம்பர்களுக்குக் கொடுக்கலாம் என்று பார்த்தால் அமெண்ட்மென்டை விட்டுவிட்டு சம்பந்தமில்லாத விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தால் நல்லதல்ல.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: நான் அமெண்ட்மென்டுக்கு உட்பட்டுத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். குடியிருப்பை நிரந்தரமாக்கும் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதில் ரீ- என்ட்ரிக்கு பவர் கொடுத்திருக்கிறார்கள். அது சரியா இல்லையா என்றுதான் பேச வேண்டுமே தவிர பழைய விவகாரத்தைக் கிளப்புவதில் பிரயோசனம் இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: நான் பழைய விவகாரத்திற்குள் போகவில்லை. சட்டத்திற்கு உட்பட்ட விவகாரந்தான். அதிலுள்ள சிக்கலைக் களைந்து நிறைவேற்றுவதுதான் நல்லதாக இருக்கும். நாளைக்கே இன்னொரு அரசாங்கம் வரலாம். அப்போது மறு பரிசிலனை செய்ய வேண்டி வரலாம். அப்பொழுது நிறைய வழக்கறிஞர்கள் இருந்தார்களே, ஏன் இதுபோன்ற கருத்துக்களை எடுத்து வைக்கவில்லை என்று கருதுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வருங்காலத்தில் வருபவர்கள் நம்முடைய புரொசீடிங்சைப் பார்த்து, வழக்கறிஞர்கள் சபையின் மரபை மீறிப் பேசினார்கள் என்று நினைக்கக்கூடாது அல்லவா? அதையும் பார்க்க வேண்டும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இன்னொன்றையும் பார்க்க வேண்டும். இந்தச் சபையில் சட்டச்சிக்கலை எடுத்து வைக்க பேரவைத் தலைவர் அனுமதி தரவில்லையே என்ற குறைபாடும் இருக்கக்கூடாது என்பதைத்தான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 18] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

ஆகவே, இந்தச் சட்டத்தை ஆராய்ந்து நிறைவேற்றினால்தான் அது பொதுமக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும், சட்டமும் நியாயமான முறையிலே, நேர்மையான முறையிலே அமையும் என்று கூறி, இந்தக் கருத்துக்களையும் சற்று ஆலோசித்து இந்தச் சட்டத்தை அரசாங்கம் ஆராய்ந்து நிறைவேற்ற கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற குடியிருப்பு தாரர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாக்கும் இந்த மசோதாவை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1973-ஆம் வருஷத்திற்குப் பிறகு குடியிருப்பிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களை மீண்டும் குடியமர்த்தும் அதிகாரம் வழங்கக்கூடிய ஒரு மசோதா இது. இது வரவேற்கக் கூடிய ஒன்றாகும். இருந்தாலும் நம்முடைய அரசு 1971 ஆம் வருஷம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும் அளவில் அமைச்சரவர்கள் ஒரு திருத்தத்தை அரசாங்கத்தின் சார்பில் கொடுக்க வேண்டும். இன்றைக்கு இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு ஆயிரக்கணக்கானவர்கள் சொந்தக் குடியிருப்பிலிருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் பல உண்டு. பலபேர் தோப்புகளில் இருந்திருக்கிறார்கள் அல்லது தோட்டங்களில் இருந்திருக்கிறார்கள். அல்லது அதிக பெறுமானம் உள்ள நிலங்களில் இருந்திருக்கிறார்கள். இவையெல்லாம் அவர்களுக்குச் சொந்தமாக்கப் படலாம் என்று சட்டம் வந்ததற்கு பிறகு, பலவந்தமாக அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையாகும். அம்மாதிரி வெளியேற்றப்பட்டவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் அளிக்கப் படவில்லை.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட தென்னந்தோப்புகளில் குடியிருந்தவர்கள் அத்தனை பேரையும், அரசாங்க அதிகாரிகள் போய் சர்வே செய்து, பட்டா கொடுத்து விட்டார்கள். ஆனால் அவர்கள் அந்த இடத்தில் இருக்க முடியவில்லை. சுற்றிலும் வேலி வைத்து வெளியிலே செல்லாமல் அல்லது வீட்டிற்கு வராத அளவிற்குத் தடுத்து விட்டார்கள். அதன் காரணமாக அவர்கள் வீட்டைப் பிரித்து

வெளியேற வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையை நிலச்சொந்தக்காரர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது கூட இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால், வெளியேற்றப்பட்டவர்கள் யார் யார் என்ற கணக்கையெடுத்து அவர்களுக்கெல்லாம் அரசாங்கம் நிலத்தைச் சொந்தமாக ஆக்கி அவர்களைக் குடியமர்த்துவதுதான் நியாயமாக இருக்கும்.

மேலும் இன்றையதினம் இந்தக் குடியிருப்புச் சட்டம் அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்தது மாதிரி இருக்கக்கூடாது. அந்த சர்வேக்களை வைத்துக் கணக்கிட வேண்டுமென்றால், சில நேரங்களில் சர்வே செய்ய வருபவர்களுக்கு கிராம கணக்குப்பிள்ளைகள் சரிவரக் கணக்குக் கொடுப்பதில்லை. அதன் காரணமாக அவர்களுக்குப் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. 100-க்கு 35 அல்லது 40 சதவிகிதம் பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, இம்மாதிரி கிராம அதிகாரிகள் ஒத்துழைப்பு கொடுப்பதில்லை. நத்தம்சாரி இடத்தில் பஞ்சமர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்கவில்லை. சொந்தப் பட்டா நிலத்தில் இருப்பவர்களுக்கு அந்தப் பட்டா வழங்கப்படுகிறதே தவிர இவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. அதைப்பற்றிக் கேட்டால், அவர்கள் பெயரிலே இருக்கிறது, அவர்களுக்கு அனுபவிக்கப் பாத்தியதை இருக்கிறது என்று விவாதிக்கப்படுகிறது. இதை நிறைவேற்ற தாசில்தார் அல்லது ஆர்.டி.ஓ. விற்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில். அவர்களுக்கு அக்கறை கிடையாது. அம்மாதிரி விண்ணப்பங்கள் வந்தால் உடனடியாகக் கவனித்துப் பட்டா வழங்கக் கூடிய நிலை இல்லை.

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். குறைந்தபட்சம் அந்த இடம் அவர்களுக்குச் சொந்தமாக வேண்டும். அதுபோல்தான் வீடு கட்டும் திட்டத்தின் அடிப்படையில் 3 சென்ட் நிலம் இருந்தால் அவர்களுக்கு 4,000 ரூபாய் கடன் கொடுக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது, செயல்பட்டு வருகிறது. அம்மாதிரிகூட அவர்களுக்கு பட்டா வாங்க முடியாமல் இருக்கிறது. ஆகவேதான் இதைத் தீர ஆராயவேண்டும். இதை சம்பந்தப்பட்ட இலாக்கா ஆராய்ந்து, அந்த நிலங்கள் அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக 5 சென்ட் நிலங்களை அவர்களுக்குப் பட்டா கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் அந்த நிலத்திற்கு மட்டும் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். அதில்





மரங்களை வைத்திருந்தால் அந்த அனுபவத்தை விட முடியாது என்று அதற்குமுன்னால் பட்டாதாரர்களாக இருந்தவர்கள் கட்சி பேசுகிறார்கள். ஆகவே, யார் தலையிட்டுத் தீர்த்து வைப்பது, யாரிடம் முறையிடுவது என்ற கேள்வி கிடையாது. அந்த அளவிற்கு இருக்கிறது. அந்த மரங்களைப் பூர்வீகமாக, பாட்டன் காலத்திலிருந்து புளிய மரங்களையும், தென்னை மரங்களையும், மாமரங்களையும் வைத்து ஆளாக்கியிருக்கிறார்கள். அதை அனுபவிக்க முடியாத நிலையில் இந்தப் பட்டா வழங்குவதால் கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பதையும் அரசாங்கம் உணர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அளந்து கொடுக்கும்பொழுது 10 சென்டுக்குக் குறையாமல் கொடுக்க வேண்டும்.

மரவிடை, மாவிடைகளையும் பட்டா செய்து கொடுக்க வேண்டும். அந்த மரங்களுக்குக் கிரயம் கொடுக்க வேண்டுமென்றாலும், நிலத்திற்கு எப்படி நஷ்ட ஈடு கொடுக்கிறோமோ அதைப்போல் மரங்களுக்கு குறிப்பிட்ட தொகையைப் போட்டு அந்த நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுத்துவிடலாம்.

பெரிய வியாஜ்யங்கள் தஞ்சை மாவட்டத்தில் சில கிராமங்களில் நடக்கின்றன. குறைந்தபட்சம் 10 சென்ட் நிலம் கொடுக்க வேண்டும். மாவிடை, மரவிடைகளையெல்லாம் குடியிருப்புதாரர்களின் அனுபவத்திலேயே விட வேண்டும்.

இரண்டாவதாக, இந்தச் சட்டம் 1973-க்குப் பிறகு என்பதற்குப் பதிலாக 1972-க்குப் பிறகு என்று, தமிழக அரசு என்றையதினம் பதவி ஏற்றதோ, அப்பொழுதிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தால் அவர்களுக்கெல்லாம் வழங்குவதற்கான வாய்ப்பு வசதிகளை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய கருத்தாகச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, 1973-லேயே இந்தத் திருத்தம் கொண்டு வந்திருக்கப்பட வேண்டும். ஆனால் அரசு இதற்குமுன்னால் குடியிருப்பு மனை சொந்தமாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்ட காரணத்தினால் இதை நாம் புதுப்பிக்க வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தோடு இருந்திருக்கலாம். ஆனால் நம்முடைய இந்த குடியிருப்புமனை சொந்தமாக்கும் சட்டம் 1971 ஆம் ஆண்டுக்கு முன் குடியிருப்பவர்களுக்குத்தான் அந்தச் சட்டம்

அமலாக்கப்படும். அதற்கு பின்னால் குடியேறிவர்களுக்கு அது சொந்தமாக்கப்பட மாட்டாது என்று இருப்பதால் இவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பதற்காக இந்த மசோதா கொண்டு வரப் பட்டிருக்கிறது. இது வெகு நீண்ட காலமாகவே மனைக்கட்டு சொந்த மாக இல்லாதவர்கள் ஒரு பகுதியினராக இருப்பதைத் தடுக்க, அதை நிவர்த்திக்க, இந்த நாட்டிலேயிருக்கின்ற மக்கள் அனைவருக்குமே சொந்த நிலம், குடியிருப்பு மனையாவது இருக்க வேண்டுமென்ற கருத்தை இந்த அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது என்று நான் கருது கிறேன்.

அப்படி எடுத்துக் கொண்டு குடியிருப்புச் சட்டத்தை அமலாக்கு கின்றபோது இன்னும் பல்லாயிரக்கணக்கான பேர்கள் மனைக்கட்டு இல்லாதவர்கள் இந்த நாட்டிலே இருக்கின்றார்கள் என்பதைக் கருத் தில் கொள்ளவேண்டும். இந்த மசோதா கொண்டு வருவதன் மூலம் அவர்களை வெளியேற்ற முடியாது என்ற அளவுக்குப் பாதுகாப்பு அளிக்கிறோமே தவிர, அவர்களுக்கெல்லாம் சொந்த மனை கொடுக்கும் எந்த முயற்சியும் இந்த மசோதாவில் ஏற்படுத்தப்படவில்லை. இது விவசாயக் கூலிகள், விவசாயிகள் சம்பந்தப்பட்டவரை அவர்களைப் பொறுத்த மசோதா.

விவசாயத்திற்கு அனுசரணையாக எவ்வளவோ வேலைகளைச் செய் கிற தொழிலாளிகள் எல்லாம் கிராமத்திலே இருக்கிறார்கள். கிராமங்களில் கொல்லு வேலை, தச்சு வேலை போன்ற வேலை செய்யக் கூடிய தொழிலாளிகளையும் வெளியேற்றக்கூடாது "ஃபார் தி டைம் பீயிங்" என்ற பாதுகாப்பு அளிக்க வேண்டியது அவசியம். குடியிருப்பு மனையைச் சொந்தமாக்கும் சட்டம் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் கொடுத்த தீர்ப்புக்குப் பிறகு புதிய திருத்த மசோதா கொண்டு வரப் பட்டு செலக்ட் கமிட்டியில் கன்சிடரேஷனில் இருந்து கொண்டிருக் கிறது. அதைக் காலம் கடத்தக்கூடாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கூட்டம் முடிந்து இரண்டொரு வாரத்திற்கு செலக்ட் கமிட்டியைக் கூட்டி திருத்தத் தைப் பற்றி முடிவு செய்துவிட வேண்டும். அப்படிச் செய்துவிட்டால் பல்வேறு சிக்கல்கள் தவிர்க்கப்பட்டு விடும் என்பது என்னுடைய கருத்து. 1973-ம் ஆண்டு சட்டம் அமலுக்கு வரப் போகிறது என்ற உடனேயே பல பேர் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். விவசாயிகள் தாங்கள் குடியிருந்த இடத்திற்கு மனு கொடுக்கலாம்



என்றாலும் அவ்வாறு மனு கொடுக்க அவர்கள் தயாராக இல்லை. அதனால் அவர்களுடைய வாழ்க்கைக்குப் பல சங்கடங்கள் ஏற்பட்டு விடும். நிலச் சொந்தக்காரர்கள் பல்வேறு இன்னல்களை இழைத்து விடுவார்கள் என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கிறது. சட்டத்திலே விண்ணப்பிக்கவில்லை என்றாலும் அவர்களுக்கும் கொடுக்க வேண்டு மென்று சொன்னாலும் பல பேர் வாங்காமலே ஓடிவிடுவார்கள். அரசு அவர்களை எந்த அளவுக்குக் காப்பாற்ற முடியும்? தானே வேண்டாமென்று சொல்பவனைப் பிடித்து இழுத்து வைக்க முடியாது. 1971-ம் ஆண்டுக்குப் பிறகு குடியிருப்பவர்கள் 1973-ம் ஆண்டு காலாவதியானவுடன் வெளியேற்றப்படுகிறவர்களுக்குப் பாது காப்பு என்று மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1971-ம் ஆண்டுக்கு முன்னலிருந்து குடியிருந்தார்கள். அதிலிருந்து அப்புறப் படுத்தப்படுகிறவர்களுக்கும் பாதுகாப்பு இருக்கவேண்டும்.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> அந்தச் சட்டம் காலாவதியாகிவிட்டது.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> வெளியேற்றப்பட்டவர்கள் தைரிய மாக வந்து மனை வேண்டுமென்று கேட்டால் கொடுப்பதற்கு, பாது காப்பதற்கு அரசு தயாராக இருக்கவேண்டும். அதற்கு இந்த மசோதாவில் சிரமங்கள் இருக்கலாம். அந்த வகையில் திருத்தம் செய்யவேண்டும். இந்த நாட்டில் இருக்கும் அனைத்து மக்களுக்கும் தாங்கள் வாழ்கின்ற இடம் தங்களுக்குச் சொந்தம் என்ற உணர்வு ஏற்படக்கூடிய அளவுக்கு அத்தனை முயற்சிகளையும் அரசு செய்ய வேண்டும். மத்திய அரசைப் பொறுத்தவரை இதர மாநிலங்களுக் கெல்லாம் டைரக்ஷன் கொடுத்திருக்கிறார்கள். மனைக்கட்டு இல்லாத வர்களே இந்த நாட்டில் இருக்கக்கூடாது என்ற அளவுக்கு ஸ்டேட் கவர்ன்மெண்ட் பண்டிலிருந்து காரியமாற்ற வேண்டுமென்று கூறி யிருக்கிறார்கள். இதற்காகச் செலவாகிற பணத்திற்கு என்ன செய்வது என்று கருதாமல் பல கோடி ரூபாய் ஆனாலும் ஸ்டேட் கவர்ன்மெண்ட் அதை ஏற்றுக் கொண்டு அத்தனை பேருக்கும் மனைக்கட்டு வழங்கும் முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

<u>திரு. என். மருதாசலம் :</u> தலைவர் அவர்களே, குடியிருப்புதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் மேல் சில வார்த்தைகளைக் கூற விரும்பு கிறேன்.

[திரு. என். மருதாசலம்] [1975 ஏப்ரல் 18

ஒரு பூமியில் குடியிருப்பவரை வெளியேற்றக்கூடாது என்ற சட்டம் நல்ல சட்டந்தான். ஆனால் நிலவுடைமையாளர்கள் தங்களுடைய பலத்தையும், அரசாங்க பலத்தையும், போலீசையும் வைத்துக் கொண்டு அவ்வாறு குடியிருப்பவர்களை வெளியேற்றுகிறார்கள். என்னுடைய சொந்தத் தொகுதியில் அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: நடைமுறையில் இருக்கும் சிக்கல்களைப் பற்றி மானியத்தில்தான் பேசவேண்டும். இதிலே திருத்தத்தைப் பற்றி மட்டும் பேசவேண்டும்.

<u>திரு. என். மருதாசலம்</u>: அவர்களை வெளியேற்றக்கூடாது என்று சட்டத்தைக் கொண்டு வந்திருக்கும்போது அவர்கள் வெளியேற்றப் படுகிற நிலைமை இருக்கிறது என்ற அடிப்படையில் நான் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

போலீசைக் கொண்டு வெளியேற்றி 25,000 ரூபாய் சொத்துக்களை நஷ்டப்படுத்தியிருக்கிறார்கள். வெளியேற்றியதோடு மட்டுமல்லாமல் வாயையும், கையையும் கட்டி சோளக் காட்டில் எறிந்து விட்டார்கள். இது போலீசுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. ஐ.ஜி. வரை ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. வசதி படைத்தவர்களுக்குத்தான் குடியிருப்பு பாதுகாப்புச் சட்டம் உதவியாக இருக்கிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

திருச்சியிலே ஒரு தோட்டத்திலே நெசவாளர்கள் குடியிருக்கிறார்கள். அவர்களை வெளியேற்ற பல நிர்ப்பந்தங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் அங்கேயே தொடர்ந்து குடியிருக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். இந்தச் சட்டத்திலே சில ஓட்டைகள் இருக்கின்றன. அந்த ஓட்டைகளை எல்லாம் அடைத்து சட்டத்தை அரசாங்கம் நல்ல முறையில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* <u>திரு. ச. சங்குமுத்து தேவர்</u>. தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் குடியிருப்புதாரர்கள் வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாப்பளித்தல் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.



1975 ஏப்ரல் 18] [திரு. ச. சங்குமுத்து தேவர்]

திருநெல்வேலி மாவட்டத்திலே எங்கள் பகுதியில் விக்கிரமசிங்க புரம் டவுன் பஞ்சாயத்து பகுதியாகும். அந்தப் பஞ்சாயத்தில் மொத்தம் 15 வார்டுகள் இருக்கின்றன. 1-வது வார்டு மட்டும் மலைப் பிரதேசமாக இருக்கிறது. அதன் காரணமாக விக்கிரமசிங்க புரத்தின் எல்லாப் பகுதிகளும் மலைப் பிரதேசம் என்ற அடிப்படையில் குடியிருப்புதாரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்டம் செயல்பட முடியாத நிலையில் அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, 1-வது வார்டு மட்டும் மலைப் பிரதேசமாக இருப்பதால் அது நீங்கலாக மற்றப் பகுதிகளில் இவர்கள் வெளியேற்றப்படக்கூடாது என்ற வகையில் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் தருவார்கள் என்று நம்பி முடித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

<u>THIRU R. PONNAPPA NADAR</u>: Mr. Deputy Speaker, Sir, I would like to offer one or two comments regarding this Bill.

So far as this Bill is concerned, it gives permanency and also retrospective e[illegible] The Bill as was originally contemplated, is extended from [illegible] time and the lease of life is so slender that there is now a legal complication. That legal complication is sought to be eradicated by the passing of this Bill.

Sir, so far as the present Bill is concerned, it gives retrospective effect. But evictions have taken place and such of those persons who are not in a position to establish their claim would find it difficult to re-enter and so what should be the protection that should be afforded to them, is a matter which will have to be thought of when rules are being framed for the enforcement of this Bill.

Sir, it may be easily said that the rich man would always be against the poor man and the law will invariably come to the aid of the rich man and that is our experience as lawyers because the poor man will not be able to defend his rights and he will not be in a position to get justice as he may not possess sufficient money to pay for legal experts or lawyers. So, some protection should be given and it may be agrued on the side of the landowners that the right of re-entry may create further problems. Sir, what should be the portion which should be re-allotted to them

[Thiru R. Ponnappa Nadar] [1975 ஏப்ரல் 18]

and is it the original portion to which they were entitled to or anything more than that, will have to be considered. Now, the area that is given is only a morsel or piece of land that is mostly inadequate and some more moving space and also some pathways should be provided. All these things will have to be borne in mind when we give certain protection to them. The incidental and ancilliary rights which flow from the main rights will have to be protected and I think the Department will take sufficient care and attention in that regard as well.

Sir, another point which I want to stress is regarding the anomaly that is now prevalent in our district. In our district there is the existing law, Travancore—Cochin Kudikiddupukar Act, which gives only lesser right and it is only a right to occupancy and whether this lesser right could be enhanced to full ownership is a matter which will have to be considered by the Government, and suitable amendments may be brought forward.

Then, Sir, they have got their homesteads. There is also a provision under which the landowner is given power to change the homestead within one furlong from the pla[illegible]re the orginal homestead stood. Supposing if a person [illegible] the midst of a big holding, he can be shifted to a corner and the expenses for shifting can be given by the landlord. Such a provision only helps the landlord and not the poor people. I once again say that the poorer sections of the people who are indigent and who are homeless should be protected. Also the incongruity and the differences existing in the present Acts will have to be made good and the law should be integrated. Sir, legal integration has not taken place even though we formed part of Tamil Nadu from 1st November 1956. There are so many things which will have to be done. I think that the Law Department will take pains to see that the law is made uniform and there is no discrimination in the enforcement of the law in one portion of the territory. Such discrimination may lead on to other kinds of disputes. To resolve the flood-gate of litigation that is likely to crop up, certain directions will have to be given to the Revenue Court or the authority which is enforcing the law.



1975 ஏப்ரல் 18] [Thiru R. Ponnappa Nadar]

Sir, certain census has been taken and there are numerous families huddled together in one hutment and so will it not be proper to give some more land for these poorer sections or the peopel. I think the Department will once again examine all these aspects of the matter. With these observations, I conclude my speech.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நிலங்களில் குடியிருக்கிற குத்தகைதாரர்கள், விவசாயத் தொழிலாளர்கள் அந்தக் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்படாமல் பாதுகாப்பதற்காக நிரந்தரமான அடிப்படையில் இந்த மசோதாவை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இப்படி ஒரு சட்டம் முன்பே அமலில் இருந்து 1973-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் தேதி காலாவதியாகியது. அதிலிருந்து இன்று வரையில் ஏராளமான குடியிருப்புதாரர்கள் வெளியேற்றப்படுகிற நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அத்தகையவர்களை வெளியேற்ற முடியாதபடி நிரந்தரமான அடிப்படையில் வெளியேற்றப்பட்டவர்களுக்கு பரிகாரம் தருகிற வகையிலும் இந்த மசோதாவை இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் 1973-ம் ஆண்டு காலாவதியாகிய அந்தச் சட்டத்தை அதற்கு முன்னாலேயே இப்படிப்பட்ட ஒரு சட்டமாகக் கொண்டு வந்திருப்பார்களேயானால் இப்படி குடியிருப்புதாரர்கள் வெளியேற்றப்படும் துரதிருஷ்டவசமான சம்பவங்கள் நடந்திருக்காது. ஆகவே, இந்தத் துறை ஓரளவிற்கு விழிப்போடு நடந்து கொள்ளவில்லை என்பதை நாம் இப்போது உணர முடிகிறது. ஆகவே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற இந்த நேரத்தில் குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்பட்ட குடியிருப்புதாரர்கள். ஆறுமாத காலத்திற்குள்ளாக அவர்கள் முறையீடு செய்து கொண்டால் அவர்களுக்கு மறுபடியும் அந்தக் குடியிருப்புகள் கிடைக்கும் நிலைமையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், படிப்பு அறிவில்லாத ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களும் மற்றவர்களும் இந்தச் சட்டத்தைப் பற்றித் தெரிந்து கொண்டு ஆறு மாத காலத்தில் அந்த வரம்பிற்குள்ளாக உடனடியாக முறையீடு செய்து கொள்வார்கள் என்று நாம் எதிர் பார்க்க முடியாது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1975 ஏப்ரல் 18

ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் இந்தத் துறையின் கடைநிலையில் உள்ள அல்லது பொது மக்களோடு தொடர்பு கொள்ளக் கூடிய கணக்குப்பிள்ளை, மணியகாரர் போன்றவர்கள் அத்தகைய குடியிருப்புதாரர்களிடம் தொடர்பு கொண்டு இத்தகைய மேல்முறையீடுகள் செய்து கொள்ளலாம் என்று செய்து கொள்ளும்படி வலியுறுத்தலாம் என்று அவர்களுக்கு ஏதாவது ஒரு உத்தரவை, துறை சார்பில் அனுப்பினால் அந்த ஏழை எளிய மக்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு நல்லதொரு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களை குடியிருப்புகளில் இருந்து வெளியேற்ற நிலச்சுவாந்தார்கள் பல்வேறு முறைகளைக் கையாள்கிறார்கள். குறிப்பாக, பலாத்கார நடவடிக்கைகள் கூட எடுக்கிறார்கள். இங்கு பேசிய நண்பர்கள் சிவில் லயபிலிட்டி ரைட் என்று நினைத்து சிவில் கோர்ட்டுக்குக் கொண்டுபோக வேண்டும் என்று கூடச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்வது என்னவென்றால், இந்தச் சட்ட விதிகளை மீறுகிற வகையில் அல்லது மாறுபாடான முறையில் ஏதாவது தவறுகள் செய்தால் அவற்றை எல்லாம் க்ரிமினல் அபன்ஸ் ஆகக் கருதும் வகையில் இந்தச் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வருவார்களேயானால் மிகப் பெரிய பணக்காரர்கள், மிகப் பெரிய நிலச்சுவாந்தார்களாக இருக்கக்கூடியவர்களும் ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களிடத்தில் அவர்கள் மனம் புண்பட நடந்து கொள்ள மாட்டார்கள் என்ற நிலை உருவாகும் என்று கூறி நான் இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவானது குடியிருப்புகளில் இருக்கிறவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அதற்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதில் 1973-க்கு முன்னால் இருந்து 1973–75 வரையில் இருப்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். திரு. அரங்கநாயகம் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க, அவர்கள் முறையீடு செய்து கொள்வார்களேயானால் அதைக் கவனித்து உடனடியாக அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1975 ஏப்ரல் 18] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

இதற்கிடையில் இரண்டு ஆண்டுக் காலத்தில் அப்படிப்பட்ட மனுக்கள் எதுவும் இந்த அரசுக்கு வரவில்லை. பலயிடங்களிலிருந்து "என் இடத்தில் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டார்கள்" என்ற மனுக்கள் தான் நிறைய வந்திருக்கின்றன. "வெளியேற்றப்பட்டு விட்டார்கள், என்னை வெளியேற்றிவிட்டார்கள்" என்பது குறைவாகத் தான் இருக்கிறது. வலிவு உள்ளவர்கள் இளைத்தவர்களை வெளியேற்றி விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். கிராமங்களில் இளைத்தவர்களைக் கண்டு வலுத்தவர்கள் பயப்படும் நிலைதான் இன்றிருக்கிறது.

கிருஷ்ணராயபுரம் தொகுதி உறுப்பினர் அவர்கள் ஒரு பகுதி பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதி எனக்கும் தெரிந்த பகுதி என்று சொன்ன காரணத்தால், அதைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு சிலர் ஒரு இடத்தை வாங்கி அங்கே பலபேருக்கு வீடுகள் கட்டி வாடகைக்கு விட்டு இருக்கிறார்கள். அது எல்லாம் ஏதாவது தீப்பற்றி எரிகிற நேரத்தில் தான் கணக்குக்கு வருகிறது. ஒரு இடத்திற்கு வாடகை ரூ. 80 வருகிறது என்று சொன்னால், ரூ. 20 அவனுக்குக் கொடுத்துவிடு, மீதியை ரூ. 60 எனக்குக் கொடுத்துவிடு என்று சொல்லி இப்படிச்செய்து கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சிக்கல்கள் வருகிறபோது அது யாருக்குச் சொந்தம் என்பதை கோர்ட்டுக்கோ அல்லது வேறு வகையிலோதான் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் சௌந்தரபாண்டியன் அவர்கள் இங்கே "சட்டத்தைப் படிக்காதவர்கள், சட்டத்தின் பிரிவைக்கூடப் பார்க்காதவர்கள் வழக்கை சாதகமானது என்று சொல்லிவிடுகிறார்கள், என் போன்ற வழக்கறிஞர்கள் கூட சொல்வதற்கு கஷ்டமாக இருக்கிறது. நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் என்பதால் அதைச் செய்ய முடியவில்லை" என்று சொன்னார்கள். பலபேர் பல கட்சியில் இருப்பார்கள். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அவர்கள் நியாயத்திற்காகத்தான் வாதாடவேண்டுமே ஒழிய, கட்சிக்காக வாதாடுவது சரியல்ல என்று என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதையெல்லாம் உணர்ந்து தான், பேரறிஞர் அண்ணா அவர்கள் "சட்டம் என்பது ஒரு இருட்டறை" . . .

[1975 ஏப்ரல் 18

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நானே வக்காலத்து போட்டு ஆஜராகியிருக்கிறேன். இன்னும் அந்த வக்காலத்து பைலில் இருக்கிறது. நான் யாருக்கும் சிபாரிசுக்காகப் போகவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நியாயம் இருக்குமானால் வெற்றி கிட்டும், அதிலே யாருக்கும் சந்தேகம் எழவேண்டாம். அதனால் தான் அண்ணா அவர்கள் சொன்னார்கள், சட்டம் என்பது ஒரு இருட்டறை, அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு, ஏழை அந்த வெளிச்சத்தை எளிதில் பெறமுடியாது என்று குறிப்பிட்டார்கள். அதனால்தான் ஏழைகளுக்கும் அந்த வெளிச்சம் எளிதாக கிட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நாம் சட்டதிட்டங்கள் கொண்டு வருகிறோம். அப்படிப்பட்ட சட்டங்கள் மக்களுக்குப் பயன் படும் வகையில் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் தான் சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன.

அந்த வகையில் நண்பர் மாரிமுத்து அவர்கள், இப்போது குடியிருப்பவர்கள் அனைவருக்கும் இடம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்ட உடனே சொன்னார்கள், என்னுடைய ஆட்சி காலத்தில் தமிழ் நாட்டில் ஏழை எளிய பின்தங்கிய மக்கள் ஆகியவர்களுக்கு குடியிருக்க மனைக்கட்டு சொந்தமாக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதன் பயனை இன்று தமிழகத்தில் பலருக்கு குடியிருப்பு மனை வழங்கப்பட்டு இருக்கிறது. அப்படி மனை வழங்கிய பின்பும் அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்ள வழியில்லாததால் முதற் கட்டமாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் வீடுகள் கட்டித் தருவது என்று சொல்லி, அந்தத் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதிலும், திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் இருக்கும் எங்கள் மாவட்டத்தில் மட்டும், இந்த ஆண்டு மட்டும், ஏறத்தாழ 5,000 அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவிருக்கின்றன என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, வேறு சில திருத்தங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் பழனிசாமி, ஏ. கே. சுப்பையா ஆகியோர் கொடுத்திருந்தார்கள். 10 சென்ட் நிலம் இருக்கவேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள்,



1975 ஏப்ரல் 18] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

அவர்கள் பகுதியில் இருக்கும் மக்களுக்கும் அந்த வசதி செய்து தர வேண்டுமென்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதையும் பின்பற்றி, அவர்கள் எப்படி இப்போது அனுபவித்துக்கொண்டு வந்தாலும், சட்டப்படி அவர்களுக்கு அதை உரிமையாக்கவேண்டுமென்று, உரிமை வழங்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களில் உள்ளவர்களை இனி வெளியேற்றும் நிலை நிச்சயம் இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம், இதிலே வேறு ஒன்றையும் சொன்னார்கள், திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள், பொய்யாபுத்தூர் விவகாரம் பற்றிச் சொன்னார்கள். அது ஒரு பாடசாலைக்குச் சொந்தமான இடம். அந்த பாடசாலை வேதமந்திரம் படிப்பதற்கு வைத்து இருந்தார்கள். அந்த இடத்தை அரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்று மனு போட்டு இருந்தார்கள். பக்கத்திலே பிற்பட்ட வகுப்பினர் வீடு கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். நானே சென்று அந்த இடத்தைப் பார்த்தேன். அங்கே யார் வீடு கட்டிக்கொண்டு இருக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி, அங்கே இருக்கும் அரிசனங்கள், பிற்பட்டோரை, ஏழை எளிய மக்கள் இரு தரப்பாரையும் அழைத்துப் பேசி ஒரு முடிவு செய்து, அவர்களுக்குள்ளே யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு வந்து இருக்கிறேன். இன்னும் அது கொடுக்கப்படாமல் இருந்தால், விரைவில் சென்று தீர்த்து வைக்கிறேன், பஞ்சாயத்து என்ற முறையில், என்று சொல்லிக்கொள்கிறேன்.

சில இடங்களில் சாகுபடி செய்து கொண்டு இருக்கிறார்கள். சில இடங்களில் குடியிருக்கிறார்கள். அது அவர்களுக்குச் சொந்தமான நிலமாக இருந்தால், அது தேவை என்று சொல்லி எடுத்துக்கொள்கிற போது, வீடுகட்ட மனை கொடுக்கமுடியாமல் போகிறது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடம் தான் வேண்டும் என்று கேட்கிறார்கள். நாம் ஒரு இடத்தைச் சொல்லி அந்த இடத்தில் வீடுகள் கட்டி ஒரு காலனியாக அமைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால், அதற்கு ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று சொல்கிறார்கள். தாங்கள் குடியிருக்கும் நிலத்திற்குப் பக்கத்திலேயே இடம் வேண்டும் என்று சொல்கிறார்கள். அது நஞ்சை நிலமாக இருந்தால் அதைக் கொடுக்க முடிவதில்லை. பல பேருக்கு பல இடங்களை அரசே வாங்கி கொடுத்து இருக்கிறது. அப்படி அரசாங்கம் வாங்கிக்கொடுத்தாலும், வேறு இடம் வேண்டும்

என்று கேட்கிறார்கள். வேறு இடம் கிடைப்பது இல்லை. இப்படிப் பட்ட சிக்கல்கள் எல்லாம் இருப்பதால், இதைக் கவனித்து அதற்கு ஏற்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்து வருகிறேன்.

இங்கேயிருக்கிற பல சட்டங்களுக்கு நாம் திருத்தங்கள் கொண்டு வருகிறபோது, அவர்களுக்குப் போதிய உரிமை வழங்குகிற அடிப் படையில் தான் நாம் என்னென்ன செய்யலாமோ அதைச் செய்து வருகிறோம். மேலும் என்னென்ன செய்யலாம் என்பதற்கு குறிப்புகள் எல்லாம் இருக்கின்றன. அவைகளையெல்லாம் நிச்சயம் அரசாங்கம் ஆய்ந்து, இருப்பவர்களுக்கு குடி இருக்கும் மனை கொடுக்க ஆவன செய்யும், அதைச் சொந்தமாக்க முயற்சி எடுக்கும் என்ற அளவுக்கு எடுத்துச்சொல்லி, எல்லாவிதமான விதிமுறைகளும் நல்ல வகையில் செயல்படுத்துகிற வகையில் நடவடிக்கை எடுங்கள் என்று சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு யோசனை கூறி, அவைகளையெல்லாம் நிச்சய மாக நல்ல விதத்தில் நிறைவேற்றப்படும் என்று கூறி, என்னுடைய இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, விக்கிரமசிங்கபுரம் பகுதியில் சுமார் 30,000 பேர் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியில் குடியிருப்பவர்களுக்கு இந்தச் சட்டத்தில் பாதுகாப்புத் தரப்பட வில்லை. அந்த கிராமம் விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் கிராமத்தில் 1-வது வார்டு மட்டும் மலைப்பிரதேசமாக இருக்கிறது. அதனால் அந்தக் கிராமத்தையே மலைப் பிரதேசம் எனக் குறிப்பிடாமல் 1-வது வார்டு நீங்கலாக மற்ற பகுதியில் உள்ளவர்களுக்குப் பாது காப்புத் தர வேண்டும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது பற்றிய விவரம் எழுதி அனுப்புவாரானால், உடனடியாக அதைப் பரிசிலனை செய்து, என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதை எடுக்கத் தயார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : அவர்களின் திருத்தத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1975-ம் ஆண்டு குடியிருப்புதாரர்கள் (வெளி யேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1975-ம் ஆண்டு குடியிருப்புதாரர்கள் (வெளி யேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு நிறை வேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஊ) 1974 ஆம் ஆண்டு சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/74)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே,

"1974-ம் ஆண்டு சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாது காப்புத் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

* 14—12—1974-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1975 ஏப்ரல் 18

*1921 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 3/1922), ஏனையவற்றிற்கிடையே தமக்கு குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ள நிலத்தின்மீது கட்டிடம் ஒன்றை கட்டிக் கொண்டுள்ளவரும் தமக்கெதிராக வெளியேற்று நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளவருமான குத்தகைதாரர் ஒருவர் அந்த நிலம் முழுவதும் அல்லது அதில் ஒரு பகுதி தமக்கு விற்பனை செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடுமாறு நீதிமன்றத்திடம் விண்ணப்பித்துக்கொள்ளும் உரிமையை அவருக்கு வழங்குகிறது.*

*இச்சட்டம் தற்போதுள்ள நிலையில் சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்திடம் நிலைபெற்றுள்ள மற்றும் அதனுல் கையகப் படுத்தப்பட்டுள்ள நிலங்களின் குத்தகைகளுக்குப் பொருந்துகிறது. குத்தகைதாரர் ஒருவருக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தை அவருக்கே விற்பனை செய்யுமாறு நிலச் சொந்தக்காரர் ஒருவர் கட்டாயப் படுத்தப்படலாம் என்று கூறுகின்ற மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகள் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் நலன்களுக்கு உகந்ததாயிராது என்று கருதப்படுகிறது.*

*மேலும் சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்திடம் நிலைபெற்றுள்ள, அதனுல் கையகப்படுத்தப்பட்டுள்ள மனைகளும் நிலத் துண்டுகளும் அதனிடமிருந்து வணிக நோக்குடையவர்களால் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு அனுமதிப்பது விரும்பத்தக்கதன்று.*

*எனவே, சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்திடம் நிலைபெற்றுள்ள அல்லது அதனுல் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களின் குத்தகைகளுக்கு அச்சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும் வகையில் அச்சட்டத்தைத் திருத்தக் கருதப்பட்டுள்ளது.*

*1975 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து 1963 ஆம் ஆண்டு பெருந்துறைமுகப் பொறுப்புக் கழகங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 38/1963) விதித்துறைகள் பம்பாய், கல்கத்தா, சென்னைப் பெருந்துறைமுகங்களுக்குப் பொருந்துமாறு, செய்யப்*



1975 ஏப்ரல் 18] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

*பட்டுள்ளன. எனவே, சென்னைப் பெருந்துறை முகத்திற்கு, 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் நாளிலிருந்து 1963 ஆம் ஆண்டு 38 ஆம் எண்ணுள்ள மத்தியச் சட்டத்தின் விதித் துறைகள் பொருந்தும். அதன் விளைவாக, இந்தச் சட்ட முன்வடிவின் 2 ஆவது பகுதியில் 1905 ஆம் ஆண்டு சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகச் சட்டம் பற்றிச் செய்யப்பட்டுள்ள குறிப்பீடு திருத்தியமைக்கப்பட வேண்டியுள்ளது. இச்சட்ட முன்வடிவைப் பகுதி பகுதியாகப் பரிசீலிக்கும் நிலையில் 2- ஆவது பகுதியில் தேவையான திருத்தம் கொண்டுவரப்படும்.*

*இந்தப் பிரேரணையை இம்மாமன்றம் ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.*

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.*

*Clause 2.*

MR. DEPUTY SPEAKER : The question is—

"That Clause 2 do stand part of the Bill.".

THE HON. THIRU A. P. DHARMALINGAM : Sir, I move the following amendment :—

"In the proviso proposed in Clause 2, *for* the words figures and brackets "the Trustees of the Port of Madras under the Madras Port Trust Act, 1905 (Madras Act II of 1905), *substitute* the words, figures and brackets. "the Board of Trustees of the Port of Madras under the Major Port Trusts Act, 1963 (Central Act 38 of 1963)."

The amendment was put and carried.

Clause 2, as amended, was put and carried.

*Enacting Formula.*

MR. DEPUTY SPEAKER : The question is :—

"That the Enacting Formula do stand part of the Bill".

[1975 ஏப்ரல் 18

THE HON. THIRU A. P. DHARMALINGAM: Sir, I move the following amendment:—

'In the enacting formula, *for* the words "Twenty-fifth year" *sustitute* the words "Twenty-sixth year".

The amendment was put and carried.

The Enacting Formula, as amended, was put and carried.

*Clause 1.*

MR. DEPUTY SPEAKER: The question is—

"That Clause 1 do stand part of the Bill"

THE HON. THIRU A. P. DHARMALINGAM: Sir, I move the following amendment:—

In Clause 1, *for* the figures "1974" *substitute* the figures "1975".

The amendment was put and carried.

Clause 1, as amended, was put and carried.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே,

"1974-ம் ஆண்டு சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாது காப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டப்படி, நிறைவேற்றப் படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(எ) தமிழ் நாடு 1975-ம் ஆண்டு மின்சக்தி தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/75).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு மின் சக்தி தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

---

* 11—4—1975-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



1975 ஏப்ரல் 18] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

ஒவ்வொரு உரிமதாரரும் யூனிட் ஒன்றுக்கு 18 பைசாவிற்கு மேற் பட்ட விலையில் விற்கும் மின் சக்திக்கு யூனிட் ஒன்றுக்கு 3 பைசா வீதம் கணக்கிடப்படும் தீர்வையை மாநில அரசுக்கு செலுத்த வேண்டியுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வருவாயை பெருக்கும் நோக்கத்துடன் உரிமதாரர்களுக்கு மொத்தமாக வழங்கப் படும் மின் சக்திக்கான மின் கட்டண வீதங்கள் 1972 நவம்பர் 5 ஆம் நாளிலிருந்து திருத்தியமைக்கப்பட்டு உள்ளன. அதன் விளைவாக தமிழ்நாடு மின் வாரியத்திடம் இருக்கும் சில உரிமதாரர்கள் மின் சக்தியை வாங்குவதற்காக இவ் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கூடுதல் தொகையை ஈடு செய்யும் பொருட்டு அவர்களது பகுதிகளில் மின்சாரத்தை பயன்படுத்தியும் பல்வேறு வகையினருக்கு அதாவது குறை அழுத்த மின் சக்தி, தெரு விளக்கு ஆகியவற்றிற்கான மின் கட்டண வீதங்களை உயர்த்தியுள்ளனர். உரிமதாரர்கள் விதிக்கக் கருதியுள்ள இந்த வீதங்கள் சில வகைப்பாடுகளில் தற்பொழுதுள்ள தீர்வை செலுத்தத்தக்க வரம்புகளைவிட அதிகமாக இருப்பதால் அவ் வீதங்கள் தீர்வை செலுத்தத்தக்க வீதங்கள் ஆகிவிட்டன. மின்சாரத் தீர்வை சட்டத்தின் விதித் துறைகள் இதுகாறும் பொருந் தாமல் இருக்கும் மின் வழங்குகள் இப்பொழுது இச்சட்டத்தின் வரம்புக்குள் வந்துவிட்டன. எனவே, தீர்வை செலுத்தத் தக்க வரம்பை 18 காசிலிருந்து 20 காசாக மேற்சொன்ன தேதியிலிருந்து உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

இத்திருத்தங்கள் மின் வாரியம் மின் கட்டண வீதங்களை திருத்த அமைத்துள்ள தேதியான 5—11—1972-ல் இருந்தே செயலுக்கு வந்து இருப்பதாகச் செய்யவும் கருதப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்ளு கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 ஏப்ரல் 18

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u>: தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/75) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு 1975-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/75)

THE HON. THIRU O. P. RAMAN: Mr. Deputy Speaker Sir, I beg to move—

"That the Tamil Nadu General Sales Tax (Amendment) Bill,* 1975 (L.A. Bill No. 18 of 1975) be taken into consideration"

Under item 3-A in the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959), "Batteries" are liable to a single point tax at the rate of 15 per cent, at the point of first sale in this State. A question arose in Tribunal Appeal No. 986 of 1971, before the Sales Tax Appellate Tribunal, Madras whether the term "Batteries" in the said item 3-A would include parts of batteries such as "battery plates". The Tribunal in the aforesaid Appeal observed that battery plates did not come either under multipoint tax or under the said item 3-A but fell only under item 41 of the First Schedule to the said Act. It was decided that entry 3-A might be amended to include "parts of batteries" also. Accordingly, notification was issued under sub-section (1) of section 59 of the said Act amending entry 3-A in the First Schedule to the said Act.

* Published in the *Tamil Nadu Government Gazette, Extraordinary*, dated 16th April 1975.



1975 ஏப்ரல் 18] [Thiru O. P. Raman]

As a measure of rationalising the rates of tax on certain goods, the Government decided to round-off the fractional rates of tax and slightly increase the rates on certain items in the First Schedule to the said Act and also to make a slight increase in the rate of tax on certain goods used by the affulent section of the society. It has also been decided to withdraw the exemption in respect of prawns, lobsters, crabs, frogs and frog-legs and bring them under the First Schedule to the said Act under single-point levy of tax, with exemption from registration and payment of sales tax to dealers whose turnover in these commodities does not exceed Rs. 5,000 per annum. It was also decided to increase the rate of tax on cotton and cotton yarn specified in the Second Schedule to the Act from 2 per cent to 3 per cent. The above decisions have been given effect to by notification issued under sub-section (1) of section 59 of the said Act. With regard to exemption referred to above, necessary notifications under sub-section (2-AA) of section 20 and sub-section (3) of section 17 of the said Act have been issued. It has now been decided not to increase the rate of tax from $3\frac{1}{2}$ per cent to 4 per cent in regard to oil cake mentioned in item 77 of the First Schedule, though the notification already issued provided for the increase. Suitable provision has been made in the Bill to the effect that the amendment to the said item shall be deemed never to have taken effect.

In the case of coupe contracts given in auction by the Forest Department, the first seller is the Forest Department and that department becomes liable to tax on these auctions of coupes involving timber and bamboo. Consequently, certain difficulties in collecting the tax on the auction sales of fuel coupes and fuel-cum-timber coupes at the stage of auction by the Forest Department were brought to the notice of Government. Decision has, therefore, been taken to levy the tax on forest coupes involving timber and bamboo at the point of first sale by the contractors. To achieve the object in view, entry 84 has been amended by a notification under sub-section (1) section 59.

Under the first proviso to sub-section (2) of section 59 of the said Act, a Bill to replace the notifications issued under sub-section (1) of the said section 59 has to be introduced in the present session of the Legislature.

[Thiru O. P. Raman] [1975 ஏப்ரல் 18

In order to give effect to the above proposals, the Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1975 has been introduced and the Bill is before the House for consideration.

Sir, with these words I commend the motion for the acceptance of the House.

THIRU N. K. PALANISAMI : Sir, I move the following amendment :—

"That the Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 18 of 1975) be referred to a Select Committee of the House consisting of.........Members (Names of members to be given later)."

The amendment was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இந்த விற்பனை வரி லக்சரி ஆர்ட்டிகிள்ஸ் மேலே போட்டிருந்தாலும் கூட அதிலே முக்கியமாக ஏழைகள் உபயோகிக்கக்கூடிய பொருட்கள் மீது போடப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார், ஜனங்கள் உபயோகிக்கக்கூடிய பொருட்கள் மீது வரி போட்டு ஓய்ந்திருக்கிறது.

(திரு. கு. காமாட்சி தலைமை)

(பிற்பகல் 12-30)

மாநில சர்க்கார் மறுபடியும் பிடித்து இருக்கிறது. இப்போது முதலில் ஒரு முனை வரி போடக்கூடிய நேரத்திலும் 31 ஐட்டம்களுக்குத்தான் இந்த வரி கொண்டுவரப்பட்டு இருந்தது. இப்போது 194 ஐட்டம்களுக்கு வரி வந்திருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் சேர்த்துக்கொண்டே இருக்கிற நிலைதான் இருக்கிறது. போன வருஷம் தவளை, நண்டுகள், தவளைக் கால்கள் அவைகளுக்கு வரி போட வேண்டிய அவசியம் இல்லை என்று நீக்கி இருந்தார்கள். ஆனால் இப்போது சேர்க்கப்பட்டு இருக்கிறது. இன்னும் போகப் போக அடுத்த வருஷம் மூச்சு இழுக்கக் கூட வரி போட்டு விடுவார்களோ என்று சந்தேகம் வருகிறது. அதைத்தான் இப்போது விட்டு வைத்திருக்கிறார்கள்.



1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆக்சிஜன் வைத்து மூச்சு வாங்கினால் அதற்கு வரி உண்டு.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மரணத்தருவாயில் இருப்பவர் கூட வரி கொடுக்க வேண்டும் என்றால் அது கஷ்டமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மரணத்திற்கு பிறகு கூட வரி இருக்கிறது, மரண வரி.

திரு. என். கே. பழனிசாமி: பெருவாரியான வரிகள் லக்சரி ஆர்ட்டிகிள்ஸ் மீது போடப்பட்டு இருந்தாலும், காபி, சிக்கரி போன்றவை மீது மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் இரண்டு சர்க்கார்களும் வரி போட்டிருக்கின்றன. இந்த காப்பி, சிக்கரி மீது வரி வேண்டியது இல்லை. போடப்பட்டு இருக்கிறது. போடப்பட்ட காரணம் என்ன என்று சொல்லப்பட்டு இருக்கிறது. வரி மாற்றி அமைக்க வேண்டியிருக்கிறது, ஸ்ட்ரக்சரை மாற்றுவது, ரவுண்ட் ஆப் பண்ணுவது என்று காரணம் சொல்லப்பட்டு இருக்கிறது. ரவுண்ட் ஆப் என்ற பேரில் குறைத்தால் பரவாயில்லை. அந்த காரணத்தை காட்டி அதிகமாக்கப்பட்டு இருக்கிறது.

அது மட்டும் அல்ல. ஐட்டம் 81 பங்களாதேஷ் சர்ச்சார்ஜ் 2½ சத வீதம் இருக்கிறது. அதுவும் இந்த வரியில் சேர்க்கப்பட்டு இருக்கிறது. ஒட்டுமொத்தமாக 194 பொருள்களுக்கு வரி தீட்டப்பட்டு இருக்கிறது. எலக்டிரிகல்ஸை எடுத்துக்கொண்டால்—அதன் பெயர் என்ன என்று தெரியவில்லை—அதற்கு எல்லாம் வரி போடப்பட்டு இருக்கிறது. ஏழைகள் உபயோகிக்கிற டார்ச்சுக்கு எல்லாம் போட வேண்டியதில்லை. ஆனால் வரி போடப்பட்டு இருக்கிறது.

டிரான்சிஸ்டர். அது அத்தியாவசியமான பொருள்தான். என்டர்டெயின்மெண்ட் என்று சொல்ல முடியாது. ஏழைகளுக்கு அவசியம் இருக்க வேண்டியது. அதற்கு எல்லாம் உள்ள வரியை நீக்கிவிடலாம்.

ஏற்கெனவே நான் வற்புறுத்திக்கொண்டு வந்தது இந்த பாரஸ்ட் பாம்பூஸ்க்கு எல்லாம் வரி போடவேண்டும் என்று. காரணம் அது ஒரு ஏக்கர் 300 ரூபாய்க்கு காகித தொழிசாலைக்கு குத்தகைக்கு விட்டு விடுகிறார்கள். வேறு ஒருவருக்கு விட்டால் 3,000 ரூபாய் கிடைக்கும்.

[திரு. என். கே. பழனிசாமி] [1975 ஏப்ரல் 18

வேப்பமரம் முதற்கொண்டு வெட்டி தீர்ந்துபோச்சு. ஏன் என்று சொன்னால் மரத்தை வெட்டுவதோடு சரி. மூங்கிலை வெட்டுவதோடு சரி. மறுபடி விளைந்து வருவது இல்லை. அந்த மாதிரி இந்த மூங்கிலுக்கு அதிகமான வரி போடலாம். செஸ் அதிகம் செய்து அந்த பணத்தை விவசாய டிபார்ட்மெண்டிடம் கொடுத்து மறுபடியும் அந்த மூங்கிலை பயிரிட ஏற்பாடு செய்ய முடியும். ஆகவே அதை கொஞ்சம் அதிகம் செய்தால் பரவாயில்லை.

இன்னும் சொன்னார்கள். பருத்தி, பருத்தி நூல்கள், இம்போர்ட்டட் ஆக இருந்தாலும் இன்டிஜனசாக இருந்தாலும் "ஜின்டு" ஆக இருந்தாலும் அதற்கு 2—3 சத விகிதம் வரி. இம்போர்ட்டட் காட்டனுக்கு போடுங்கள். நம் பருத்தி ஏற்கெனவே விலை குறைந்து இருக்கிறது. ஸ்லம்ப் ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே இன்டிஜினஸ் காட்டனுக்கு போடுகிற வரியை இம்போர்ட்டட் காட்டனுக்கு போடலாம். இந்த மாதிரி மாற்றி அமைக்க திருத்தம் கொடுத்து இருக்கிறேன். அதை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

* THIRU K. M. SUBRAMANIAM : When I read this Bill and also heard the speech of the Hon. Minister I thought that it was a harmless Bill, an amending Bill just brought to round off certain figures for convenience of calculation. But this rounding off has resulted in an increase of taxation to Rs. 6 crores on about 4½ crores of people. Whenever transport charges were rounded off, the rounding was to the higher side. Similarly when sales tax is rounded off, it is mostly from 3½ per cent to 4 per cent, 4 per cent to 4½ per cent and 4½ per cent to 5 per cent. Rounding off never comes, so far as the Government are concerned, to the lower side and the result is Rs. 6 crores of additional income due to sales tax.

Allowing that the Government want money and that there should be additional income, from whom should it be collected? That is the second question. If the Hon. Chairman goes through the list, he will find that most of the items—not all items—like coffee, tea, vegetable oils, pulses, grains, dhall etc.—these are all items that are commonly used by the lower middle class people.



1975 ஏப்ரல் 18] [Thiru K. M. Subramaniam]

So, the Government that claim to protect the lowest class of people are again trying to collect money as tax on most essential commodities used by the lower middle class people. This, I think, is very wrong. The Government will definitely admit that there is inflation and that the prices of commodities are going up. This sort of subtle way of collecting extra tax should be avoided and I strongly oppose this form of rationalisation.

Coming to the most important point, that is, tax on cotton and cotton yarn, already there is difficulty to sell cotton in this country. There are various factors that contribute to this difficulty. The factors are, the purchasing power of the people has gone down, the demand for cotton cloth has gone down and artificial clothing has come. When that is the case, handloom stocks are piling up everywhere and in such circumstances, no civilised Government—I am sorry to use those words—will ever think of increasing sales tax from 2 to 3 per cent, that is, by one per cent on cotton and cotton yarn, whether it is imported or not.

The Hon. Member Thiru Palaniswamy said that we could tax the imported cotton — But the imported cotton is converted into yarn for 80s, 100s and 120s and all those counts are used for sarees. Then, what will happen? The price of imported cotton is already high and if the tax goes up, the price of sarees will go up, the price of dhoties will also go up.

So, during the entire session the one Bill which I strongly oppose with all the might at my command is this amending Bill. The rounding off of sale tax has gone to the higher side.

I think the Government should give relief to the people by reducing the sales tax. Already two forms of taxes are levied in this country. One is excise duty by the Central Government and another is sales tax levied by the local Government. These are the taxes paid not by the rich people, but by everybody who consumes general goods. When these two types of taxes go up, it affects the lower class people.

[Thiru K. M. Subramaniam] *1975 ஏப்ரல் 18]*

I oppose the rounding off. Rounding off should be to the lower level and not to the higher level. The Government should not have chosen these very essential items like dhall, vegetable oil, etc. The only thing that has escaped is, I think rice.

I am very sorry to say that the cost of living in Tamil Nadu has gone up more than in any other State today. Everybody admits that and people who come from outside are surprised. Any addition to these two types of taxes will certainly raise the price.

I hope and trust the Government will consider and withdraw this Bill and bring in a fresh Bill by which the taxes are rounded off to the lower level, so that prices will go down and people can purchase materials cheaper. Thank you.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, விற்பனை வரியில் சில மாறுதல்கள் செய்து, கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக ஆடம்பரப் பொருட்கள் வாழ்க்கையில் வசதியாக இருப்பவர்களால் உபயோகப்படுத்தக் கூடிய பொருட்கள் என்ற முறையில் அந்தப் பொருட்கள்மீது வரிகளைக் கூட்டுவது நல்லதொரு நிலைமைதான். இருந்தபோதிலும் அதுவும் ஒரு வரம்புக்கு மீறி அதிகமாகப் போய்விடக் கூடாது. வரம்பு மீறிப் போனால் ஆடம்பரப் பொருளை வாங்கக்கூடிய மக்கள் குறைந்து விடுவார்கள். அப்படியானால் விற்பனை குறையும். அதனால் நன்மைக்குப் பதிலாகத் தீமைகள் வந்துவிடும். ஆகவே, இந்த விஷயத்தில் அரசாங்கம் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆடம்பரப் பொருட்கள் வசதி படைத்தவர்களால்தான் வாங்கப்படுகின்றன என்ற எண்ணத்தில் அளவுக்குமீறி வரிகளைப் போட்டுவிடக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மின்விசைக் கருவிகளைப் பொறுத்த மட்டில் என்னுடைய கவனத்திற்கு சில பொருட்கள் வந்திருக்கின்றன. குறிப்பாக ஜெனரேட்டருக்கு வரி போடப்பட்டிருக்கிறது. இப்போது மின்வெட்டு ஏற்பட்டிருப்பதால் தனியார்கள் ஜெனரேட்டர்கள் வாங்கி வைத்து மின்வெட்டிலிருந்து தங்களுடைய தொழில்களுக்குப் பாதுகாப்பைத் தேடிக்கொள்கிறார்கள். ஆகவே, மின்வெட்டை



*1975 ஏப்ரல் 18]* [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

அமுலுக்குக் கொண்டுவரும் அரசாங்கம் ஜெனரேட்டர்களுக்கு வரியைக் குறைத்திருக்க வேண்டும். ஒருபுறம் மின்வெட்டு, இன்னொரு புறம் ஜெனரேட்டருக்கு அதிக வரி என்றால் தொழில் பாதிக்கும், அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள்; நாட்டின் உற்பத்தியும் குறைந்துவிடும். மின்வெட்டு அமுல்படுத்தும் போது எந்தவகையிலாவது தொழில் பாதிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமே தவிர, பிற வகைகளில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சாதனங்களுக்கு வரியைக் கூட்டி, அவர்களுடைய ஊக்கத்தைக் குறைத்துவிடக் கூடாது. இப்போதும் ஒன்றும் காலமாகிவிடவில்லை. இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்குள் தொழில் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில் ஜெனரேட்டர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நூல் சம்பந்தமான வரி பற்றி கே.எம்.எஸ். அவர்கள் சொன்ன கருத்தை முழுமையாக நான் வரவேற்கிறேன். ஏற்கெனவே தாறுமாறான நூல் விற்பனையால் கைத்தறி நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் நூல் மீதான வரியைக் கூட்டினால் ஏழை எளிய நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, ஏற்கெனவே இருக்கிற 2 சத விகித வரி மட்டுமே போதும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வெளிநாடுகளுக்கு இறால், தவளைக் கால் போன்ற பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. இந்தப் பொருட்கள் கூட அரசாங்கத்தின் கண்களிலிருந்து தப்பித்துவிடவில்லை என்பதைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. நமக்கு ஏராளமான அளவில் அந்நியச் செலாவணி வேண்டும்; அதற்கு ஊக்கம் தர வேண்டும்; அதற்கு மானியம் தரவேண்டும் என்று மத்திய அரசு கருதிக் கொண்டிருக்கும்போது நம்முடைய மாநில அரசு அதற்கு ஆதரவாக இருப்பதற்குப் பதிலாக ஏற்றுமதியாகும் பொருட்களுக்கு வரியைக் கூட்டி, ஏற்றுமதியாளர்களின் ஊக்கத்தைக் குறைப்பது சரியல்ல.

தவளைக் கால்களை இங்கு யாரும் சாப்பிடுவதில்லை. இறால் வேண்டுமென்றால் வெளிநாடுகளுக்குப் போவதால் இங்கே விலை அதிகமாக இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் இவை நமக்கு

அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றன என்பதைப் பார்க்கும் போது உள்நாட்டில், அதன் விலையைப்பற்றிப் பார்க்கக்கூடாது. இந்தப் பொருள்களுக்குக் கூட வரி போடுவதால் சிறு சிறு மீனவர்கள் கூட பாதிக்கப்படுவார்கள். அவர்கள் கூடக் கணக்குக் காட்ட வேண்டுமென்றிருந்தால் மிகவும் கஷ்டம். 5,000 ரூபாய்க்குமேல் விற்பனை செய்கிறவர் கணக்கு காட்ட வேண்டும்; அதற்கு கணக்கப்பிள்ளை வைத்துக்கொள்ள வேண்டும்; அவர்கள் வரிச் சுமையிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது என்றால் ஏற்றுமதி பாதிக்கப்படும். இந்தத் தொழில் அவ்வளவு லாபகரமான தொழிலும் அல்ல. இவையெல்லாம் அழுகும் பொருட்கள். காலையில் கிடைப்பது மத்தியானம் கெட்டுவிடும்; மத்தியானம் கிடைப்பது மாலையில் கெட்டுவிடும். அப்படிப் பட்டப் பொருட்களுக்கும் வரி விதித்திருக்க வேண்டியதில்லை. அதையும் அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தோல் தொழில் சம்பந்தமாக நிதிநிலை அறிக்கையில் பேசும் போதுகூட ஒரு வேண்டுகோள் விடுத்தேன். அது அமைச்சரவர்களின் கவனத்திலிருந்து எப்படியோ விலகிவிட்டது என்று எண்ணுகிறேன். தோல் தொழிலில் ஒரு அனுமலி இருக்கிறது என்று குறிப்பிட்டேன். நம்முடைய மாநிலத்திற்குள் ஒரு பொருள் கொண்டு வந்து விற்றால் அதற்கு 2 சத விகிதம் வரி. அதே பொருள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும்போது அதற்கு 3 சத விகித வரி. இது எந்த அடிப்படையில் நியாயம் என்று புரியவில்லை. இந்த நாட்டை விட்டு வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடுக்க வேண்டுமென்று, சொன்னால் அதை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

நம்முடைய தேவைகளைக் குறைத்துக்கொண்டாவது, நாம் சில தியாகங்கள் செய்தாவது முடிந்த அளவுக்குச் சில பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அந்நியச் செலாவணி ஈட்டினால்தான் நாம் வாழ முடியும் என்று இந்திய திரு நாடு கருதுகிறது. இப்படிப் பட்ட ஒரு நிலையில் 200 கோடிக்கு மேல் அந்நியச் செலாவணி சம்பாதிக்கும் ஒரு பொருளில் வரி விதிக்க வேண்டுமென்று அல்லது வரி அதிகரிப்புச் செய்ய வேண்டுமென்ற சூழ்நிலை எப்படி ஏற்பட்டது என்பது எனக்குப் புரியவில்லை.

அதிகாரிகளிடமும் அமைச்சர்களிடமும் இந்தக் குறையை எடுத்துச் சொல்லி விட்டோம். உள்நாட்டில் 3 சத விகிதம், வெளிநாட்டுக்கு என்றால் 2 சத விகிதம் என்று போட்டிருந்தால்கூட





நியாயமாக இருந்திருக்கும். நாங்கள் இந்தக் குறையை சுட்டிக்காட்டியும் அதற்கு பரிகாரம் காணப்படவில்லை. அப்படியானால் அரசாங்கத்தின் கொள்கை என்ன? உண்மையில் வெளிநாடுகளுக்கு இந்தப் பொருட்கள் அனுப்பப்பட்டு அந்நியச் செலாவணி ஈட்ட வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இல்லையா? அரசாங்கத்தின் இந்த முடிவினால் தோல் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பல தொந்தரவுகளுக்கு ஆளாவார்கள்.

ஏற்கெனவே மத்திய அரசின் கொள்கை காரணமாக பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதாவது முழுமையாக "ஃபினிஷ்" செய்யப்பட்ட பொருட்கள்தான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென்று மத்திய அரசு சொல்லியிருப்பதால் தோல் பொருட்களுக்கு மிகுந்த சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசின் இந்தக் கொள்கையால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது குறைந்துவிட்டது. பற்றாக்குறைக்கு நாமும் இந்த இடையூறுகளில், இந்த பாதிப்பில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நான் முன்பே இதற்காக ஒருமுறை வாதாடியிருக்கிறேன். நான் இதில் பெரிய மாறுதல் ஒன்றையும் கேட்கவில்லை. மூன்று சத விகிதம் என்பதை ஒன்றில் 2 சதவிகிதமாகக் குறையுங்கள் அல்லது வரியை எடுத்துவிடுங்கள். உள்நாட்டில் இருப்பதைப்போல் வெளிநாட்டுக்கும் 2 சதவிகிதம் என்றால் ஓரளவுக்குப் பாதிப்புக் குறையும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தோல் பொருட்களுக்கு சலுகை அளிக்க வேண்டுமென்று விரும்பினால் இந்த வரியை அறவே எடுத்துவிட வேண்டும். அதுதான் நியாயம் என்று எடுத்துச்சொல்லி, பொதுவாக கூடுதல் வரிச்சுமை வரும்போது நாங்கள் மனக்கசப்பு அடைந்தாலும், மதுவிலக்கு போன்ற நல்ல காரியங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றுகிறார்கள்; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு நல்ல பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது; மனிதாபிமானத்தோடு பல்வேறு விதமான நல்ல காரியங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது; ஆகையால் அத்தகைய காரியங்களுக்கு நிதி வேண்டியிருக்கிறது என்ற காரணத்தால் குறைகளைக் கூறினாலும் ஆதரிக்க வேண்டுமென்ற கட்டாயத்தில் இருக்கிறோம் என்று சொல்லி, அமர்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir, I oppose this Bill tooth and nail because it is a new taxation that is being proposed in this Bill.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 ஏப்ரல் 18

So far as the amendments are concerned, I would like to offer certain remarks. Sir, the sales tax is increasing day by day and the burden that is shifted to the purchaser is on the increase. It is a regressive taxation and the incidence is on the consumer. So far as the sales tax—both Central and State—is concerned, it is increasing in every financial year. In order to bridge the gulf, as it were, they are increasing the tax day in and day out.

Sir, the first objection which I am taking is to the tax on prawns, lobsters, crabs, frogs and frog-legs. All these things are perishable articles. It has been rightly pointed out by some hon. Members that exemption given to them should not be taken away through this Bill. Sir so far as these perishable articles are concerned they are being exported to foreign countries and it is a source of revenue and so they need not be taxed. That is my humble submission.

Another point is that exemption is given for sales of these articles up to Rs. 5,000. Sir, in the practical application of this Bill, there would be serious hardship caused to the coastal people. The fishermen who are the actual persons who deal with some of these articles will sell them in appreciable quantity only during the season and during the lean months, the quantity sold would be at a lower level. The maintenance of accounts by these poor fishermen in the coastal areas will cause serious hardship to them. I do not think at the initial level the accounts could be furnished by the poorer sections of the people. That is the coastal people. They will not be able to maintain accounts.

Regarding these fractional rates being rounded off, why should there be an upward revision? That is the question asked by Thiru K. M. Subramaniam. This is a clever way, a ruse as it were, to increase the tax from 3½ per cent to 4 per cent. Why cannot you round it off as 3 per cent from 3½ per cent. You have not done it. Therefore I say, though in the interest of revenue this may be good, what is the explanation that you can give for this rounding from 3½ per cent to 4 per cent. It is increase



1975 ஏப்ரல் 18] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

in tax done in the pretext of rationalisation. This increase will further push up the price line. That is the argument I am advancing.

Inflationary tendencies have increased. Too much money is brought into circulation. The value of rupee has fallen to 20 or 25 paise. This Act would further push up the price level that is now prevalent. I would once again say that the value of rupee has not gone up appreciably. It may be said that wholesale prices has just fallen but the real trend is not like that. That is why we oppose this increase. I oppose it with all the emphasis at my command.

Next point is regarding cotton and cotton yarn. Why should there be an increase from 2 to 3 per cent, I am at a loss to understand. It is stated that there is slump in the coton market. Will this help us? That is a matter which will have, to be considered by the Hon. Minister. Cotton merchants in Coimbatore, Theni and other places have complained accumulation of stocks. They are not able to market the cotton. At this stage is it right to increase it from 2 to 3 per cent. The weavers also will be adversely affected if there is increase in sales tax. Price of yarn will be pushed up further. Even now the ruling prices are so prohibitive and most of the weavers find it difficult to make their living.

I would of course congratulate the Government on one thing. They have spared oil cakes. They have paid heed to the food of the cattle and spared oil cakes from tax.

Now, I come to fuel coupes, the rates for collecting fuel and timber. I can understand timber. But so far as fuel is concerned, that would create problems. Even in the statement of objects and reasons there is a statement to the effect that in the matter of collection there would be difficulty experienced by department. I would once again say that in certain fuel coupes, there may be one or two timber trees. You could assess sales tax. Pro-rata assessment will have toe be made. I can understand that for timber trees but not fuel. Even now there is shortage of fuel in local areas. If multi point sales-tax is imposed,

[திரு. ஓ. பி. இராமன்] [1975 ஏப்ரல் 18

as per the new amendment, it will create difficulties. At first point, when Government is selling to contractor, sales tax is imposed. At second point, when dealer sells it to the next dealer, again it is taxed. This will infringe upon the price at single point taxation. I hope that considering all these, exemption will be given for fuel. There should be no room for complaints. All doubts should be dispelled and clear instructions should be issued.

Regarding electrical goods, there is an amendment brought forward. Entry 41 is now to be swelled to 41-A, B and C. Several component parts of electrical goods have been included. It may be said that electrical goods are luxury goods. But that cannot be said that electric bulbs are luxury goods. They may be exempted. But everything like electrical wares, holders, etc.—all have been included in Entry 41. Burden is cast on those included in 41-A, B and C.

I would once again say that this would push up prices. It will not only affect the richer sections but the poorer sections also. Already kerosene is costly. I would once again urge reconsideration of these things. Exemption has not been given for Prawns, lobsters, etc. Maintenance of accounts will be a problem. That is a matter which will affect the fishermen community. Government should reconsider it and see that the original *status quo* is restored. With these words, I conclude. I once again oppose this Bill.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரி திருத்தச் சட்டம் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அதன் விவாதத்தில் சிலபல கருத்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். இந்தத் திருத்தச் சட்டம்—ஏற்கெனவே இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வரிவிதிப்புக் கொள்கை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச்சொன்ன அடிப்படையிலேயே அமைந்ததுதான். நிதி நிலை அறிக்கையின் பொது விவாதத்தின்போதே இது விவாதிக்கப்பட்டு, அதற்கு பதில் உரையும் சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு மானியக் கோரிக்கையின்போதும் இங்கு சொல்லப்பட்ட பல கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டு அதற்கான விளக்கமும் அளிக்கப்பட்டிருக்கிறது. எந்த எந்தப்



1975 ஏப்ரல் 18] [திரு. ஓ. பி. இராமன்]

பொருளுக்கு விதிவிலக்கு அளிப்பதாக உத்தரவாதம் அளிக்கப் பட்டதோ அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. அப்போது எந்த எந்தப் பொருள்களுக்கு எந்த அடிப்படையில் வரி விதிக்கப்படும் என்று சொன்னார்களோ—அவற்றுக்கு ஒரு வடிவம் கொடுப்பதற்காகத்தான் இந்தத் திருத்தச் சட்டமே தவிர புதியதாக ஒன்றும் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

Thiru R. PONNAPPA NADAR: No tax shall be imposed save by authority of law. That is what the Constitution says. That is the reason why we oppose this legislation. That is the reason why we legislators are opposing this. Simply because this is announced, that does not mean that *ipso facto* we are bound to accept it *in toto*.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: நான் அதைத்தான் சொன்னேன். இரண்டு கட்டத்திலும் அரசின் தரப்பில் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதும் அதே பதிலைத்தான் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன் என்பதைத்தான் நான் சொல்ல வந்தேன்.

இன்றைக்குக் குறிப்பாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகிற நண்டு, மீன் போன்றவைகளுக்கு வரி விதிப்பதைப் பற்றிச் சொன்னார்கள்.

(பிற்பகல் 1-00)

கடைசி பர்ச்சேசிங் பாய்ன்ட்டிலேதான், வெளிநாட்டுக்கு எக்ஸ்போர்ட் பண்ணுகிற பாய்ன்ட்டிலேதான் அந்த வரி, அண்டை மாநிலங்களிலே பார்த்துத்தான், எந்த அளவு போட வேண்டுமென்று பார்த்துத்தான் போடப்படுகிறதே தவிர, எடுத்த எடுப்பிலேயே மீனைப் பிடித்துச் சில்லறை . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இப்பொழுது கேரளத்திலிருந்து ஒருசில மெர்ச்சன்ட்ஸ்—கம்பெனிகள்—எல்லாம் இங்கு வந்து வாங்குகிறார்களே, அவர்களுக்கு இது பாதகமாக இருக்குமா, அல்லது அவர்களுக்கு விதி விலக்கு ஏற்படுமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அது எங்கிருந்து வந்தாலும் சரி, கடைசிக் கட்டத்திலே வாங்குகிறவர்களுக்கு வரி விதிக்கத்தான் படும்.

[திரு. ஓ. பி. இராமன்] [1975 ஏப்ரல் 18

லக்ஷரி கூட்ஸ் என்று சொல்வதிலே, சிலவற்றிற்கு வரி போடுவதை உறுப்பினர்கள் எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். சிக்கரி, காஃபி போன்றவைகளுக்கு வரி போட வேண்டியதில்லையென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி சொன்னார்கள். அதுபோல் டார்ச், லைட்டிங் பல்ப் போன்றவைகளுக்கு எடுத்து விட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். புதிதாக வரி போடவில்லை. ஏற்கெனவே இருப்பதை, அப்படியே அமுல் நடத்துகிற நிலைமைதான் இருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மொத்தத்திலே நல்ல முறையிலே அரசின் சார்பிலே பரிசீலிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. பல்வேறு புதுக் காரியங்கள், நிர்வாகச் செலவுகள் எல்லாம் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகின்றன. இப்படி அதிகரிக்கும்போது, ஓரளவு புது வரிகள் இல்லாமல், வரிகளை உயர்த்தாமல், செலவை அதிகம் கூட்டுவது இயலாத காரியம். அதோடு, தற்போது நாட்டில் வறட்சி நிலைமை நிலவுகிறது. அதற்கு அரசாங்கத்திற்குப் பணம் தேவைப்படுகிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள். ஆகவே, இதையெல்லாம் கருதி, இந்தத் திருத்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: விறகு, கூப் ஆகியவற்றிற்கு விலக்கு செய்யப்படுமா என்பதற்கு விளக்கம் தந்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: டிம்பர் அன்ட் பாம்பூ என்று போடப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே இருப்பதுதான்—புதிதாக இல்லை. பாட்டரிக்கு ஏற்கெனவே இருக்கிறது. பாட்டரி பார்ட்ஸ்களுக்கு வரி விதிப்பு பற்றி, நீதிமன்றத்திலே தெளிவாகப் போடப் பட்டால்தான் விதிக்கலாம் என கூறியிருப்பதால்தான், பார்ட்ஸ் ஆஃப் பாக்டரி என்ற விளக்கம் கொடுத்திருக்கிறோம்.

அடுத்து, டிம்பர் அன்ட் ஃப்யூயல், ஃபர்ஸ்ட் பாய்ன்ட்டிலே சேல்ஸ் டாக்ஸ் வாங்க வேண்டுமென்றால், கவர்ன்மென்ட்தான் கொடுக்க வேண்டும். ஆகவே, அது முடியாது. சில கட்டைகள் ஃப்யூயல் ஆகின்றன. சில கூப்புகள், பெரிய மரங்கள் காடுகளிலே இருக்கின்றன. மரங்களாகப் பயன்படுத்துகின்ற நிலையுமிருக்கிறது. கான்ட்ராக்ட் விடுவதற்கு முன்னாலே, எத்தனை மரங்கள் என்பதை அதிகாரிகள் அளவெடுத்து, சார்ட் வைக்கிறார்கள். அதையெல்லாம் பார்த்த பிறகு



1975 ஏப்ரல் 18] [திரு. ஓ. பி. இராமன்]

தான் ஏலத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இவ்வளவு எடுத்துச் செல்லலாம் என்று அனுமதி பெற்ற பிறகுதான் வெளியே எடுத்துச் செல்லவேண்டும். ஆகவே, அதிலே ஃப்யூயல்களுக்கு வரி விலக்கு என்றால், தடி மரங்களுக்குத்தான் வரி விலக்கு என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, ஏற்றுமதி செய்கிற தோல்களுக்கு வரியிலே உள்ள அனுமலியைப் பற்றிச் சொன்னேன். அதுபற்றி ஒன்றுமே சொல்லவில்லை. அது கவனிக்கப் படுமா என்றாவது சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அது பொது விவாதப் பிரச்சினை. நம்மிடத்திலே அது இருப்பதாக நான் கருதவில்லை. ஏற்கெனவே முடிந்த பிரச்சினையாக நாங்கள் கருதுகிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: The biggest purchasers of cotton are spinning mills—co-operative spinning mills and others. The Government themselves are going to pay extra tax on purchase of cotton. What is the Hon. Minister's answer to the unholy increase of prices of cloth that will result as a result of huge increase in the sales tax on cotton. It is a very big item of purchase in any mill amounting to crores of rupees. Will the Hon. Minister reconsider the sales tax on cotton and yarn at least which put together is a sales tax on cloth ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தற்போது அரசு நிலைக்கு அது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி அவர்கள் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

" தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

[1975 ஏப்ரல் 18

*Clause 2*

MR. SPEAKER : The question is :

" That Clause 2 do stand part of the Bill "

THIRU N. K. PALANISWAMY : Sir I move that :

1. " In clause 2, in the First Schedule, in sub-clause (b) delete items 31, 32.

2. In clause 2, in sub-clause (c) under item 41-A delete the words " lighting bulbs, torches."

The amendment was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி : சார், இதிலே 71 (a) என்பது என்ன என்று தெரியவில்லை. அதுபற்றி, நான் ஏற்கெனவே கனம் அமைச்சரவர்களிடம் விளக்கம் கேட்டேன். பங்களா தேஷ் விஷயமாக சர்சார்ஜ் 2½ சத விகிதம் எந்த வரியிலே சேர்க்கப் பட்டிருக்கிறது என்பதை விளக்கவேண்டும்.

அடுத்தது, காஃபி சீட்ஸ் அண்ட் காஃபிபவுடர் என்றிருக்கிறது, காஃபிக்கு இல்லை. இந்த காஃபிக்கான வரியை, புரப்பரைட்டர் களிடமே விட்டாற்போலிருக்கிறது. ஏனென்றால், அவர்கள் வரி வாங்காமலிருப்பதில்லை. காஃபிபவுடருக்கும், சீட்ஸுக்கும் போட்டு, காஃபிக்கு அவர்களிடம் போடப்பட்டிருக்கிறது. அதே மாதிரி டீ, சாதாரண ஜனங்கள் உபயோகிப்பது. ஏற்கெனவே கொஞ்சம் மூச்சு விட்டால் விலையை ஏற்றிவிடுகிறார்கள். ஆகவே, அந்த வரியை அவசியம் எடுக்கவேண்டுமென்பது ஒன்று.

இன்னொன்று. லைட்டிங் பல்ப்ஸ், டார்ச்சஸ், டிரான்ஸிஸ்டர்ஸ் இதற்கு வரி. இதற்கு மேலே வரி போட்டால், சர்க்கார் கொஞ்சம் வரி போட்டாலும், அதை உபயோகப்படுத்தி, வியாபாரிகள் பல மடங்கு உயர்த்திவிடுகிறார்கள். வரி என்று சொன்னால், அதிகமாக விலை போடுகிறார்கள். ஆகவே, அதற்கு போடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இந்த மூங்கிலுக்கு வரிபற்றி ஏற்கெனவே சொன்னேன். சர்க்கார் யோசனை பண்ணினால், நல்ல யோசனையாகத் தான் இருக்கும். காரணம், இன்றைக்குப் பல தோப்புகள் அழிந்து



1975 ஏப்ரல் 18] [திரு. என். கே. பழனிசாமி]

போய்விட்டன. சர்க்கார் செஸ் விதித்து, பாம்பூ மேலே, வரியை அதிகமாக்கலாம். சாதாரண ஜனங்கள் உபயோகப்படுத்தினால் பரவாயில்லை. பாக்டரிகளுக்கு சப்ளை பண்ணக்கூடிய மரங்களுக்கும், மற்ற தோப்புகளுக்கும் அவர்கள் எடுக்கக் கூடிய மரங்களுக்கு அதிக மாக வரிகளைப் போட்டு, டிபார்ட்டுமெண்ட் மூலமாக, காட்டு வளர்ப்புத் திட்டத்தைச் செய்யவேண்டும். ஆகவே, இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பதிலில்லை)

திரு. என். கே. பழனிசாமி அவர்கள் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள், 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே,

" தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/75) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (13) அரசினர் தனித் தீர்மானம்

### தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படவிருக்கின்ற வரைவு அறிவிப்பை ஏற்றுக் கொள்வது குறித்து.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, " தமிழ்நாடு, 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்

பிரிவின் (b) பகுதியின்கீழ் வெளியிடப்படவிருக்கிற கீழ்க்காணும் வரைவு அறிவிப்பு, மேற்சொன்ன பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்கப்பட வேண்டும்" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

## வரைவு அறிவிப்பு

தமிழ்நாடு 1966-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் b பகுதியின்கீழ் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு அரசிதழ் 1974-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ஆம் நாளிட்ட சிறப்பு வெளியீட்டைச் சேர்ந்த பகுதி II 2-வது பிரிவின், 1-வது பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறையில் 1974-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ஆம் நாளிட்ட 11 (2)/RUL /523 (n) /74 ஆம் எண் அறிவிப்பில் மதுரை மாநகராட்சியின் அதிகார வரம்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ளதும், மேற்சொன்ன அட்டவணையின் (2) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்களில் உள்ளவையும் கீழே விவர அட்டவணையின் (3) பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில், தமிழ்நாடு அரசிதழில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து மேற்சொன்ன சட்டம் செயலுக்கு வரத் தொடங்குமென இதனால் கட்டளையிடுகிறார்.

### விவர அட்டவணை

| தொடர் எண். (1) | வருவாய் கிராமத்தின் எண்ணும் பெயரும். (2) | | நில அளவை எண். (3) |
|---|---|---|---|
| 1 | 21 | விளாங்குடி | 113 பகுதி, 114 லிருந்து 118 வரை, 123 லிருந்து 145 வரை, 147லிருந்து 152 வரை, 155, 156, 199-லிருந்து 203 வரை, 205, 206, 209, 294. |
| 2 | 52 | தத்தனேரி | 76லிருந்து 125 வரை. |
| 3 | 51 | செல்லூர் | கிராமம் முழுவதும் |



### விவர அட்டவணை—தொடர்ச்சி

| தொடர் எண் (1) | வருவாய் கிராமத்தின் எண்ணும் பெயரும் (2) | | நில அளவை எண் (3) |
|---|---|---|---|
| | 136 | பீபிகுளம் | 11 லிருந்து 39 வரை (மாநகராட்சி எல்லைகளில் தற்போது அமைந்துள்ள பகுதிகள் முழுவதும்) |
| 5 | 50 | தல்லாகுளம் | கிராமம் முழுவதும் |
| 6 | 49 | மானகிரி 1 துண்டு | 1லிருந்து 26 வரை |
| 7 | 39 | சாத்தமங்கலம் | கிராமம் முழுவதும் |
| 8 | 37 | வில்லாபுரம் | 2 லிருந்து 32 வரை |
| 9 | 24 | மாடக்குளம் கிராமம் | தற்போது மாநகராட்சி எல்லைகளுக்கு வெளியே அமைந்துள்ள வருவாய்க் கிராமம் முழுவதும். |
| 10 | 22 | ஆராப்பாளையம் | கிராமம் முழுவதும் |
| 11 | 23 | பொன்மேனி | தற்போது மாநகராட்சி எல்லைக்கு வெளியே அமைந்துள்ள கிராமம் முழுவதும் |
| 12 | 20 | கொக்களப்பி | கிராமம் முழுவதும் |
| 13 | 19 | கோச்சடை | கிராமம் முழுவதும் |

[விளக்கக் குறிப்பு முன்னரே அறிவிக்கப்பட்டது]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-09 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

---

¢ 79 - 8 -ம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## 14. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders*

182. Notification issued in G.O. Ps. No. 230, Commercial Taxes and Religious Endowments, dated the 1st March 1975 in regard to certain amendments to the First and Second Schedules to the Tamil Nadu General Sales Tax Act, 1959. [*Laid on the table of the House under section* 53(5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act I of* 1959).]

183. Notification issued in G.O. Ms. No. 1612, Agriculture, dated the 17th October 1974, in regard to declaration of Thondamuthur regulated market for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959, in respect of arecanut. [*Laid on the table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959)].

184. Notification issued in G.O. Ms. No. 947, Agriculture dated the 7th June 1974, in regard to establishment of markets at Bhavani, Kangeyam and Mulanur in Coimbatore district to provide, facilities for the purchase and sale of cotton, groundnut, tobacco, turmeric, maize, sugar cane, jaggery and arecanut. [*Laid on the table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (Tamil Nadu *Act* 23 *of* 1959)].

185. Notification issued in G.O. Ms. No. 1546, Agriculture dated the 3rd October 1974, in regard to certain amendments relating to inclusion of paddy and gingelly in respect of Uthiramerur and Madurantakam markets. [*Laid on the table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959)].

186. Notification issued in G.O. Ms. No. 1645, Agriculture, dated the 28th October 1974, in regard to declaration of notified market area for Tiruvadanai market in respect of groundnut, chillies, paddy and cashewnut. [*Laid on the table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959)].



187. Notification issued in G.O. Ms. No. 1601, Agriculture, dated the 15th October 1974 in regard to declaration of notified market area for Tirukalukundram market in respect of groundnut paddy and gingelly. [*Laid on the table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959)].

### B. *Reports, Notifications and Other Papers*

175. Report of the Committee on Estimates on Public Libraries.

176. Fourth Report of the Committee on Public Undertakings on the Tamil Nadu Water Supply and Drainage Board.

*** 177. The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Re-enacting Bill, 1975 (L.A. Bill No. 14 of 1975) with annexure.**

---

*** Despatched to Members on 17—4—1975.**

## இணைப்பு

[304-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

திரு. கோவை செழியன், எம்.எல்.ஏ., அவர்கள் கீழ்க்கண்ட அறிக்கை விடுத்துள்ளார் :—

" தமிழ்நாடு முழுவதிலும் பருத்தி விலை திடீரெனச் சரிந்ததன் காரணமாக பருத்தி விற்காததனால் விவசாயிகள் அல்லலுறுகின்றனர். அரசு நியாயமான விலையில் நேரடியாகப் பருத்தி வாங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும் ".

2. உள்ள நிலைமை பின்வருமாறு :—

மாநிலத்தில் பருத்தி உற்பத்தி சுமார் 3.4 லட்சம் பொதிகள் (ஒவ்வொன்றும் 180 கிலோ) ஆகும். ஆனால் ஆண்டொன்றுக்கு மாநிலத்தில் உள்ள ஆலைகளுக்கு 11 லட்சம் பொதிகள் தேவைப்படும் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் கூட்டுறவு நூற்பாலைகள் பஞ்சாலைக் கழக ஆலைகளுக்கு ஆண்டொன்றுக்குத் தேவைப்படும் அளவு 2.05 லட்சம் பொதிகள் (ஒவ்வொன்றும் 180 கிலோ) ஆகும்.

மாநிலத்தில் உள்ள பருத்தி பயிரிடுவோர் அங்காடிகளில் திடீரென விலைச்சரிவு ஏற்பட்டதன் காரணத்தினால் அவர்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதில் இடர்ப்படுகின்றனர். கடன் முடக்கம், பஞ்சாலைகள் பருத்தியைக் குறைவாகப் பயன் படுத்தல், பருத்தி இறக்குமதி ஆகியவையே இதற்குக் காரணமாகும்.

இந்திய அரசு, பம்பாய் பஞ்சாலை ஆணையாளருடன் கலந் தாலோசித்து பருத்திக்கான குறைந்த அளவு ஆதரவு விலையை நிர்ண யிக்கிறது. இந்தியப் பருத்திக் கழகம் 1972 ஆம் ஆண்டு இம்மாநிலத் தில் தனது கொள்முதலைத் தொடங்கியுள்ளது. வணிக நிறுவனமாக இருந்து வரும் இந்தியப் பருத்திக் கழகம் பல்வேறு மண்டிகளில் பருத்தியை வாங்கி வந்துள்ளது என்றும், நியாயமான வகையில் போட்டியாக பகிரங்க ஏல முறையில் பருத்தியை வாங்குவது சிறந்த அனுகூலத்தைக் கொடுக்கிறது என்றும் அதன்மூலம் பருத்தி பயிரிடு வோரது நலன் பாதுகாக்கப்படுகிறது என்றும் இந்திய அரசு கருது கிறது. முன்னரே நிச்சயிக்கப்பட்ட விலையில் பருத்திக் கொள்முதல் செய்யுமாறு இந்தியப் பருத்திக் கழகம் கேட்கப்பட்டால் இத்தகைய போட்டியினால் ஏற்படும் ஆதாயம் கிட்டாது என்றும் முன்னரே நிச்சயிக்கப்பட்ட விலை பருத்திச் சாகுபடியாளர்களுக்கு ஆதாயமாக இருந்தாலன்றி இத்தகைய நடைமுறைச் சாகுபடியாளர்களின் நலனைப்





பாதிக்கும் என்றும் இந்திய அரசு கருதுகிறது. வணிக அடிப்படையில் பருத்தியை வாங்குமாறு பருத்திக் கழகத்திற்கு இந்திய அரசு கட்டளை யிட்டுள்ளது. அதனால் அங்காடிகளில் பருத்திக் கழகம் கொள்முதல் செய்வதால் பருத்தி விலை குறைவதில்லை. இதனால் பருத்தி பயிரிடு வோர் இடர்ப்படுவதில்லை. இந்தியப் பருத்திக் கழகம் மாநிலத்தில் பருத்தியைக் கொள்முதல் செய்வது குறித்து அதனிடம் கேட்கும் பொருட்டு பேச்சு வார்த்தைகள் பலமுறை நடத்தப்பட்டன. இந்தியப் பருத்திக் கழகத்தின் சார்பில் மாநிலத்தில் பருத்தியை வாங்குவதற்கு தனி முகவரமைப்பாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பை அமைப்பது குறித்துப் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. இந்தியப் பருத்திக் கழகத்தின் சார்பில் மாநிலத்தில் பருத்தியை வாங்கும் முகவரமைப்பாக சம்மேளனத்தை அமைப்பதற்காக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைச் சம்மேளனத்திற்கும் இந்தியப் பருத்திக் கழகத் திற்கும் இடையே ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை. ஏனெனில் பருத்தி விலையைத் தாமதமாக செலுத்துதல் சம்மேளனத்திற்கு தரகு வழங்குவதில் தாமதப்படுத்துதல் ஆகியவை குறித்து அபராதம் தொகை குறித்து பகுதி ஒன்றை ஒப்பந்தத்தில் சேர்ப்பதற்கு இந்தியப் பருத்திக் கழகம் ஒப்புக்கொள்ளவில்லை. தொகை செலுத்துவதற்கான ஏற்பாடுகள் பரவலாக்கப்பட்டுள்ளதாலும் தொகைகள் கோயம்புத் தூரிலும் வழங்கப்படுவதாலும் தொகைகள் உரிய சமயத்தில் கூட்டமைப்பிற்கு வழங்குவதில் இடர் எதுவும் இராது என்று இந்தியப் பருத்திக் கழகம் கருதுகிறது. இந்த ஆண்டில் பருத்திக் கழகம் கொள்முதல் செய்வது குறித்து எடுக்கப்படும் முடிவு குறித்து மத்திய அரசின் வணிக அமைச்சகத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்று இந்தியப் பருத்திக் கழகம் தெரிவித்துள்ளது. எனவே இது குறித்து மாநில அரசின் கூட்டுறவுத் துறை இந்திய அரசுக்கு எழுதிக் கேட்டுள்ளது. இந்திய அரசின் பதில் கூட்டுறவுத் துறையில் எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டில் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கருநாடகம் ஆகிய மாநிலங்களில் பருத்தி கொள்முதல் செய்வதற்காக இந்தியப் பருத்திக் கழகம் ரூ. 25 கோடியை ஒதுக்கியுள்ளது என்று தெரியவருகிறது. தேனி, திருப்பூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களி லிருந்து சென்னை தேசியப் பஞ்சாலைக் கழகம் விரைவில் பருத்தியைக் கொள்முதல் செய்யக் கருதியுள்ளது.

பருத்தி உட்பட வேளாண்மைப் பொருட்கள் அனைத்தையும் தங்கள் கிடங்குகளில் சேமித்து வைக்க கிடங்கு வசதிக்கழகம் ஏற்பாடு செய்து தருகிறது. அதற்கு ரசீது ஒன்றையும் கொடுக்கிறது.

[1975 ஏப்ரல் 18

பருத்தி உற்பத்தியாளர்கள், மேற்படி ரசீதைப் பிணையம் வைப்பதன் மூலம் கிடங்கு வசதிக் கழகங்களின் கிடங்குகளில் சேமித்து வைக்கப் பட்ட பருத்தி மதிப்பின் 50 சத விகிதம் வரை நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கி ஒன்றிலிருந்து கடன் பெறலாம். கூட்டுறவு நூற்பாலைகள் பன்னிரண்டு நிறுவப்பட்டதன் காரணமாகவும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் பல நலிந்து நூற்பாலைகளைத் தம் நிர்வாகத்தில் எடுத்துக்கொண்டதாலும், இந்த ஆலைகளுக்குத் தேவைப்படும் பருத்தியைக் கொள்முதல் செய்வதற்கும், மேம்படுத்து வதற்குமான மைய அமைப்பு நடைமுறையைச் சீரமைப்பதன் அவசியம் பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. பருத்தி கொள்முதல் மத்திய நிறுவனமொன்று அமைக்கப்படலாம் என 1968 செப்டம்பரில் அரசு அமைத்த பருத்தி உற்பத்தி குறித்த தனிக்குழு பரிவுரை செய்தது. துணைக்குழு செய்த பரிவுரைகளின் கீழ் அடிப்படையில் கூட்டுறவு நூற்பாலைகளுக்கான பருத்தி கொள்முதல் மையக்குழுவொன்றை ஏற்படுத்துவதற்கான திட்டமொன்றை கைத்தறிக்கு வணிக இயக்குநர் அனுப்பினார். பருத்தி கொள்முதல் செய்வதில் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு ஆலோசனை கூறி உதவுவதே இதன் நோக்கமாகும். அவர் அனுப்பிய திட்டம் குறித்துக் கலந்தாலோசிக்கப்பட்ட தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்தின் தலைவர்—நிர்வாக இயக்குநர் பருத்தி உற்பத்தியாளருக்கு நியாய விலை கிடைக்கும் வகையிலும் இம் மாநிலத் தில் பருத்தியைப் பயன்படுத்துவோர் நலன் கருதி பருத்தி இறக்கு மதியும் வடநாட்டில் கொள்முதல் செய்யும் பருத்தியையும் முறைப் படுத்தும் வகையிலும் இம்மாநிலத்தில் பருத்திச் சாகுபடியை ஊக்கு விக்க தமிழ்நாட்டில் பருத்திக் கழகம் ஒன்றை ஏற்படுத்தலாம் எனக் கருத்துத் தெரிவித்தார். இப்பிரச்சினையை எல்லா கோணங்களி லிருந்து பரிசீலிக்கும் பொருட்டு அதிகாரிகளைக் கொண்ட சிறு குழு ஒன்றையமைக்கலாம் என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். இச்செயற்குறிப்பை அரசு ஏற்றுக்கொண்டு, அமைக்கக் கருதியுள்ள பருத்திக் கழகத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறு குறித்து ஆய்வு செய்து, இச் செயற்குறிப்பைச் செயல்படுத்துவதற்குத் திட்ட வட்டமான நடைமுறைகளைத் தெரிவிப்பதற்குக் கீழ்க்கண்ட அதிகாரி களைக் கொண்ட குழுவொன்றை அமைத்தது :—

1. தலைவர், தமிழ்நாடு பஞ்சாலைக்கழகம்.

2. வேளாண்மைத்துறை இயக்குநர்.

3. கைத்தறி துணி இயக்குநர்.



1975 ஏப்ரல் 18]

நொடித்த ஆலைகளை இந்திய அரசு நாட்டுடைமையாக்கியதின் அடிப் படையில் மேற்சொன்ன குழு அனுப்பிய அறிக்கை அரசு தொழிற் துறையில் பரிசீலனையிலுள்ளது.

3. பருத்தி உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பருத்திக்கு நியாயமான விலையைப் பெற உதவும் நோக்குடன் இம் மாநிலத்தில் பருத்தி விற்பனைக்கு ஏற்பாடு செய்ய அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது என்பது மேற்சொன்ன விவரங்களி லிருந்து தெளிவாகத் தெரியவரும்.

## இணைப்பு II

[373-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### விளக்கக் குறிப்பு

இம்மாநிலத்தில் நிதிவாயில்களைப் பெருக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளின் பகுதியாக, தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம் மேற்சொன்ன சட்டத்தில் 1 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (b) பகுதியின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப் பள்ளி ஆகிய நகராட்சி நகரங்களுக்கும், மதுரை மாநகருக்கும் 1971 ஆம் ஆண்டில் நீட்டிக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் மதுரை மாநகரின் எல்லைப் பகுதிகள் 13 கிராமங்களுக்கு கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 30—1—1974 நாளிட்ட 169 ஆம் எண் அரசு ஆணையின் இணைப்பில் உள்ளதைப்போல நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது மதுரை மாநகராட்சியின் அதிகார வரம்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ள பகுதிக்குத் தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) விதித்துறைகள் நீட்டிக்கப்பட்டு வருகின்றன.

2. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட் பிரிவின் (b) பகுதியின்கீழ் வெளியிடக் கருதியுள்ள வரைவு அறிவிப்பு ஒன்று, மேற்படி சட்டத்தின் 1 ஆவது பிரிவின் (4) உட்பிரிவின்படி சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பட வேண்டும். மாற்றங்கள் அல்லது சேர்க்கைகள் இல்லாமலோ அல்லது மாற்றங்கள் அல்லது சேர்க்கைகளுடனோ சட்டமன்றப் பேரவையால் ஏற்பளிக்கப்பட்டா லன்றி, மற்றபடி இந்த அறிவிப்பு வெளியிடப்படக்கூடாது. அத்தகைய

1975 ஏப்ரல் 18]

ஏற்பளிப்பு வழங்கப்படுவதன்பேரில், ஏற்பளிக்கப்பட்டுள்ள வடிவத்திலேயே அந்த அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும். அவ்வாறு வெளியிடப்படும் அறிவிப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட வேண்டும். பிறகு, அது முழு அளவில் செல்திறன் கொண்டதாக இருக்கும்.

3. எனவே, அரசு இவ்வகையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரக் கருதியுள்ளது.

—

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சனிக்கிழமை, 1975 ஏப்ரல் 19

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

### அம்பத்தூர் இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம்

*5 கு. கா. வினா—

திரு. என். கே. பழனிசாமி

திரு. நா. வீராசாமி

டாக்டர் எச். வி. ஹாண்டே:

திரு. கே. டி. கே. தங்கமணி: மாண்புமிகு தொழில்—மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூரிலுள்ள இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட் நிறுவனம் திறக்கப்படுவது குறித்து, 10-4-1975-ல் அந் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை ஏதேனும் நடத்தப்பட்டதா?

(இ) ஆமெனில், அக்கூட்டத்தில் என்ன முடிவெடுக்கப் பட்டது?

• மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இந்தியா மீட்டர்ஸை இந்த அரசு நடத்தவில்லை என்ற நிலைமை இருந்தாலுங்கூட, மத்திய சர்க்காரையாவது வற்புறுத்தி சர்க்காரே எடுத்து நடத்தக் கூடிய முறையில் ஏற்பாடு செய்யப்படுமா ? ஏனென்றால், மத்திய சர்க்காரும் இதற்குப் பணம் போட்டிருக்கிறது; மாநில சர்க்காரும் பணம் போட்டிருக்கிறது. தனிப்பட்டோரிடம் கொடுத்ததன் காரணமாக இதை மூட வேண்டிய

நிலைமை ஏற்பட்டது. ஆகவே, இந்தச் சர்க்காரோ அல்லது இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தியோ இதை ஏற்று நடத்தும் முறையில் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்மிடத்தில் இருக்கிற விவரங்களின்படி இந்த நிறுவனத்தில் உற்பத்தியாகின்ற பொருள்களுக்கு விலை அதிகம் என்ற அந்த நிலையைச் சொல்கிறார்கள். இதற்கு மார்க்கெட் டிமாண்டைப் பொறுத்து எந்தவிதமானக் குறைபாடும் இல்லை என்ற கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிறுவனத்தின் நிலைமைகளைப் பரிசீலித்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தஸ்தூர் அண்டு கம்பெனி கேட்டுக் கொள்ளப்பட்டது. தஸ்தூர் அண்டு கம்பெனி சார்பாக ஒரு அறிக்கை கொடுத்தார்கள். அந்த அறிக்கையைப் பார்க்கும்போது, ஏற்றுக்கொள்வது அவ்வளவு சிறப்பானதல்ல என்ற கருத்தைத்தான் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கேள்வி கேட்டதையொட்டி, இதுபற்றி மறுபரிசீலனை செய்யவேண்டும் என்ற அந்தக் கருத்தினையொட்டி அதிகாரிகள் அளவுக்கு ஒரு பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தப் பேச்சுவார்த்தையில் பின்வரும் அதிகாரிகள் கலந்துகொண்டார்கள்.—

Secretary, Finance Department; Secretary, Public Works Department; Secretary; Industries Department Chairman as well as some of the officials of the Electricity Board; Managing Director of the Tamil Nadu Industrial Investment Corporation; nominee of the India Meters Ltd.; Joint Secretary, Labour and Employment Department and the representatives of the Central Bank of India also attended the meeting.

இவர்களெல்லாம் சேர்ந்து ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில், இந்த தஸ்தூர் அண்டு கம்பெனி கொடுத்திருக்கும் அறிக்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்ற ஒரு கருத்தும் சொல்லப்பட்டது. அவைகளையெல்லாம் பரிசீலித்து, இப்பொழுது நம்முடைய அரசின் சார்பாக அன்று கலந்துகொண்ட கூட்டத்தில் செய்யப்பட்ட முடிவு என்னவென்றால்—

After discussion, it was decided that the Committee consisting of Secretaries, Industries, Finance and Public Works Departments and the Chairman, Electricity Board, should examine all the relevant aspects and advise the Government as to the action to be taken.

தஸ்தூர் ரிப்போர்ட்டைப் பொறுத்த வரையில், அதை நடத்துவதனால் நஷ்டம் ஏற்படும் என்று பல தடவை சொன்ன காரணத்தாலும், பல்வேறு இடங்களிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையிலும், அந்த தஸ்தூர் ரிப்போர்ட்டையே கூட பரி



சீலனை செய்ய வேண்டும் என்ற நிலை இருப்பதால், நம்முடைய தமிழக அரசின் சார்பில் செயலாளர்களைக் கொண்ட சிறிய குழு அமைக்கப்பட்டு, இது விரிவாகப் பரிசீலிக்கப்பட்டு, அரசாங்கத்திற்கு அவர்கள் ஆலோசனை சொல்ல வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில், மத்திய சர்க்காரிலிருந்து இந்த நிறுவனத்தைப் பற்றி ஒரு அறிக்கை கொடுக்குமாறு அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, மத்திய சர்க்காரை வற்புறுத்துவதற்கு நம்முடைய தமிழக சர்க்கார் எப்போதும் தயாராக இருக்கிறது. இரண்டு முறைகளிலும் இதைப் பற்றி பரிசீலிக்கப்படும். ஒன்று—நம்முடைய அரசின் சார்பாக குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு ஆராய்ந்து எந்த அளவு சாத்தியக் கூறு இருக்கிறது என்பதைத் தெரிவிக்கும். மத்திய சர்க்கார் அறிக்கை கேட்டிருப்பதையொட்டி மத்திய சர்க்காருக்கும் அறிக்கை அனுப்பப்படும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல், மத்திய சர்க்கார் இதை எடுத்துக் கொள்வதைப் பற்றி வற்புறுத்துவதற்கும் அரசு தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தஸ்தூர் கம்பெனியேகூட, பிர்லா கம்பெனி இன்வெஸ்ட்மென்ட் செய்ய அப்படி எழுதப்பட்டது என்றும், இந்த நிறுவனத்தின் பெரிய பங்குதாரர் திரு. கே. கே. வர்மா அவர்கள் பத்து லட்ச ரூபாய் மூலதனம் செய்திருக்கிறார்கள் என்றும், இருந்தாலும், இன்றிருக்கும் சூழ்நிலையில் அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும் என்று நம்முடைய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு, இன்று இந்தியா முழுவதும் மீட்டர் தயாரித்து, அதிலே டாமினேட் செய்வதற்கு முயற்சிகள் நடக்கும்போது நம்முடைய தமிழக அரசும்—உடனடியாக ஒரு கோடி ரூபாய்தான் அதற்கு நஷ்டம், ஆனால், ஒன்றரை கோடி ரூபாய் வட்டி என்று போட்டு கம்பெனியை மூடப் பார்க்கிறார்கள்—எப்படியாவது உடனடியாக இந்தக் கமிட்டியிடம் சொல்லி, தொழிற்சாலையை ஏற்று நடத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கெனவே சொன்னேன்.

The problems faced by India Meters were discussed at the meeting. It was pointed out that the Company's problem was not market. Its real problem was the cost of production which was very heavy, partly because of the heavy interest the Company has to bear and largely because of the problems like expensive design requiring use of imported raw materials at a heavy cost.

நான் சொன்னதைப் போல நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் தஸ்தூர் ரிப்போர்ட்டும் பரிசீலிக்கப்பட வேண்டும். பல்வேறு பிரச்சனைகளும் பரிசீலிக்கப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, பங்குதாரர்களும் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கிறார்கள். தொழிலாளர்களின் சார்பாக திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள்கூட ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் வைத்துத்தான் பரிசீலிக்கவேண்டும். தொழிலாளர் சார்பாகக் கொடுக்கப்பட்ட மனுக்களையெல்லாம் கருத்திற்கொண்டு பரிசீலிப்பதற்கு அரசாங்கத்தின் சார்பாக ஒரு சிறு குழு—நிதிச் செயலாளர், பொதுப் பணித் துறைச் செயலாளர், தொழிற்துறைச் செயலாளர், மின்சார வாரியத் தலைவர் இவர்களைக் கொண்ட குழு—அறிக்கையினைத் தருமாறு கேட்டு கொள்ளப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் மத்திய சர்க்காரை வற்புறுத்தக் கூடாதா என்று கேட்டார்கள். மத்திய சர்க்காரும் அறிக்கை கேட்டிருக்கிறது. இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோள் பேரில் ஒரு அறிக்கையைத் தருமாறு குழுவினரைக் கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு மத்திய சர்க்காரை வற்புறுத்துவதாக இருக்கிறோம். நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராசாராம் அவர்கள் அக்கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாததால், இந்தச் சிறிய குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடன் கலந்து பரிசீலிக்கப் படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த நிறுவனத்தைப் பொறுத்த வரையில், திரு. ஆர். பி. ஐயர் அவர்களும், திரு. வர்மா அவர்களும் ஒன்றரை கோடி ரூபாய்க்கு ஏற்கெனவே ஆர்டர் இருந்தாலுங்கூட உற்பத்தி செய்யாமல் தடை செய்தார்கள் என்று தொழிலாளர்கள் சார்பில் சொல்லப்படுகிறதே அது உண்மையா? 10-ம் தேதி அன்று நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரோடு கலந்து பேசுவதாகச் சொன்னார்கள். 200 பேருக்கு அதிகமான தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் ஏதாவது ஏற்பாடு செய்ய தொழிலாளர் நல அமைச்சரோடு கலந்து ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 10-ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தொழிலாளர் நல அமைச்சர் கலந்துகொள்ள இயலவில்லை. காரணம், டில்லிக்குப் போயிருந்தார். அவரை மீண்டும் சந்தித்து, ஒரு நாள் குறித்து மற்றியும் பரிசீலிக்கலாம்.



திரு. எம். சுரேந்திரன் : சார், இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருப்பது சம்பந்தமாக இதுவரையில் விசாரணை செய்யப் பட்டதிலிருந்து, இத் தொழிற்சாலை மூடப்பட்டிருப்பது நியாயம் இல்லாதது என்று அரசாங்கம் கருதுகிறதா? அப்படிக் கருதுமானால், நியாயமில்லாமல் மூடப்பட்டிருப்பதனால், வேலை இழந்த தொழிலாளர்களுக்கு ஏதாவது புரட்சிகரமான ஒரு உதவி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த நிறுவனத்தை இப்பொழுது இருக்கும் நிலைமையில் தொடர்ந்து நடத்தினால் ஏராளமான நஷ்டம் வரும் என்றும், அரசாங்கம் மானியம் கொடுத்தால் நடைபெறும் என்ற நிலைமை இருக்கிறது என்றும் அரசினருக்கு ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டு, அந்த அடிப்படையில் மேற்கொண்டு எடுத்து நடத்துவது சாத்தியம் இல்லை என்ற கருத்துக்கு வந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு அளித்து, சட்ட மன்றத்தில் சொல்லப்பட்ட கருத்துக்கு மதிப்பு அளித்து, மறு பரிசீலனை செய்யும் முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : மிஸ்டர் ஸ்பீக்கர் சார். இந்த இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்திற்கு சென்ட்ரல் பாங்க் ஆப் இண்டியா மட்டும் ஏறக்குறைய இரண்டு கோடி முப்பது இலட்சம் ரூபாய் வரையில் கடன் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய மாநில மின்சார வாரியத்திலிருந்து அவர்களுக்கு வரவேண்டிய பணம் அரசாங்கம் அல்லது டிட்கோ கொடுத்த பணத்தைப் பிடித்து வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். இப்பொழுது இருக்கிற முறைப்படி, அந்தத் தொழிற்சாலையை எடுத்து நடத்த வேண்டுமென்றால், ஏறக்குறைய இரண்டு அல்லது இரண்டரைக் கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் வரும். ஆகையால் அரசாங்கம் இது பற்றியெல்லாம் பரிசீலனை செய்ததா? அல்லது, அந்தத் தொழிலாளர்களுக்கு வேறு இடங்களில் மாற்று வேலை கொடுத்து பெரிய அளவில் நஷ்டம் ஏற்படாமல் இருக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே 10-ம் தேதி நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் சென்ட்ரல் பாங்க் சார்பில் கலந்து கொண்டார்கள். நம்முடைய டிட்கோ சார்பாகவும் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். உறுப்பினர் சொன்ன கருத்தும் பரிசீலிக்கப்பட்டது. சட்டமன்றத்தில்,

சொல்லப்பட்ட கருத்தும் பரிசீலிக்கப்பட்டது. இந்த நிறு வனத்தை நடத்த விடாமல் சிலபேர் முயற்சிகள் செய்கிருர்கள் என்பது சரியல்ல. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட காரணத்தால், உறுப்பினர்கள் கருத்துக்கு மதிப்பளித்து, மறுபரிசீலனை செய்கிற அளவுக்கு 10-ம் தேதி கூட்டம் நடைபெற்றது. அதில்தான் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட அறிக்கை போதுமானதல்ல, சரியாக இல்லை என்ற கருத்து சொல்லப்பட்டது. அரசாங்கம் ஒரு சிறு குழு அமைத்திருக்கிறது. அந்தக் குழு சீக்கிரமாக ஒரு அறிக்கை அரசுக்குத் தர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தப் பரிசீலனையில் ஏற்கெனவே இருந்த நிலைமைகள் என்ன ? இதனுல் இந்த அளவிற்கு ஆர்டர்கள் நிறைய இருந்தும் வெளிநாடுகளி லிருந்து மொரிஷியஸ் போன்ற நாடுகளிலிருந்து ஆர்டர்கள் நிறைய இருந்தும் கூட நடத்தமுடியாமல் செய்தார்கள். இதை ஐ. டி. ஆர். ஆக்டின்படியோ அல்லது நேஷனலைசேஷன் ஆக் டின்படியோ எடுத்து நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ? இடைக்காலத்திலே தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப் பட வேண்டும். லே ஆஃப் காம்பன்சேஷன் கூட கிடைக்கவில்லை, 6 மாதமாக அவர்கள் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே அவர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா ?

The Hon. THIRU S. J. SADIQ PASHA : Government of India has called for a report on the management of the Company. It is felt that this would be useful for encouraging the Government of India to take over the management of the company, as there is possibility of the company being rehabilitated in the hands of Central Government than the State Government. To regulate that the Government of India should be requested to undertake investigation under Section 15 of the Industrial Development Act of 1951. மத்திய சர்க்காரையும் கேட்டுக் கொள்ளலாம் என்ற ஒரு முடிவும் இருக்கிறது.

### *English Tutors in Colleges*

* 721 *Q*.—THIRU N.K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to replace about 170 teachers appointed this year to handle English classes in the Colleges ; and

(*b*) if so, the reasons therefor ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ)— ஆம். இரண்டு ஆண்டுகளுக்கு குறைவாக தற்காலிகப் பணியில் உள்ள 69 ஆங்கில போதனுசிரியர்கள் (எம்.ஏ.) முதுகலைப் பட்டப்படிப்பில் முதல் அல்லது இரண்டாவது வகுப்பில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறைவில்லாமல் பெற்று தேறி யிருக்க வேண்டும் என்ற கல்வித் தகுதியில்லாத காரணத்தால் 69 பேர்மட்டுமே மாற்றப்பட்டுள்ளார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ? நீக்கப்பட்டவர்களுக்கு மாற்று வேலை ஏதாவது கொடுக்கப்பட்டு இருக்கிறதா ? அல்லது திறமையுள்ளவர்கள் அந்தப் பகுதியில் போடப்பட்டிருக்கிருர்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆங்கிலத் துறையில் ஆசிரியர்களாக உள்ளவர்கள் 50 எண்கள் பெற்றிருக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. 165 பேர்களுக்கு மேல் 50 எண்களுக்குக் குறைவாகப் பெற்றிருந்தவர்கள் இருந்தார்கள். குறைவாகப் பெற்றிருந்தவர்களிலே 2 ஆண்டுக்காலத்திற்குமேலே பணியாற்றியவர்கள் தொடர்ந்து இருந்து வருகிருர்கள். இரண்டு ஆண்டுக்காலத்திற்கு உள்ளாகப் பணியாற்றியவர்கள்தான் முழுத் தகுதிபெற்றவர்கள் கிடைத்த காரணத்தினுல் நீக்கப்பட்டார்கள். அவர்களைத் தேர்வு ஆணைக் குழு எடுத்துக் கொள்வதாக இருந்தால் அவர்களைத் தேர்வு ஆணைக்குழுவிற்கு அனுப்பக்கூடிய வகையில் விதியைத் தளர்த்த ஆயத்தமாக இருக்கிறேம் என்று அறிவித்தோம். இரண்டு முறைகள் அப்படி 1972-லும் 1973-லும் நாம் தெரிவித்திருக்கிறேம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, சி பிளஸ் வாங்கியவர்கள் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கக் கூடிய முறையில் அவர்களுக்கு டியூட்டர்ஸ் வேலை அளிக் கலாம் என்று சொல்லப்பட்டு வேலை பார்த்து வருகிருர்களே, ஆகவே 50 மார்க் என்று வாங்க வேண்டுமென்று, பி. வாங்க வேண்டுமென்று சொல்வது, கட்டாயம் அப்படி இருக்க வேண்டு மென்று சொல்வது நியாயமா ? ஆகவே அப்படியிருந்தால் அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழகத்திலே அப்படிப்பட்ட விதியை வைத்திருக்கிருர்கள். ஒரு பக்கம் நாம் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொல் கிறேம். எ., பி. என்று வாங்கியவர்கள் நல்ல முறையில் மற்ற வர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கும். ஆகவேதான் 2-3-1970-லிருந்து நாம் அப்படிப் பட்ட அறிக்கை விட்டோம். 3-12-1969-க்கு முன்னுலே வந்தவர்களைத் தேர்வு ஆணைக் குழுவிற்குச் சிபாரிசு செய்தோம். 23-8-1972-ல் விழுக்காடு குறைந்திருந்தாலுங்கூட தேர்வு

ஆணைக் குழு அவர்களை எடுத்துக் கொள்வதாக இருந்தால் அதற்காக விதிவிலக்குத் தர ஆயத்தமாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்தோம். 28-7-1973-ல் மறுபடியும் போதுமான ஆசிரியர்கள் இல்லாததன் காரணமாக விழுக்காடு குறைந்திருந்தால் கூட அவர்களைத் தேர்வு ஆணைக்குழு எடுத்துக் கொள்வதாக இருந்தால் அவர்களுக்கு விதியைத் தளர்த்த ஆயத்தமாக இருக்கிறோம் என்று தெரிவித்தோம். இப்போது தாற்காலிகமாக இருக்கிற 165 பேர்களிலே 69 பேர்களை நாம் நீக்கி இருக்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவர்கள் தொடர்ந்து பணிபுரிகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக பணிபுரிந்தவர்கள்தான் நீக்கப்பட்டிருக்கிறார்கள். தகுதிபெற்றவர்கள் இருப்பதால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி : மார்க் அதிகமாக வாங்கியதாலேயே அவர்கள் எல்லாம் மாணவர்களுக்கு நல்லமுறையிலே பாடம் சொல்லிக் கொடுப்பார்கள் என்ற முடிவுக்கு வந்துவிடமுடியாது. சில பேர்கள் ஏதோ எழுதி மார்க்குகளைப் பெற்றுவிடுவார்கள், அவர்களால் திறமையாகப் போதிக்க முடியாது, அதைக் கருத்தில் கொண்டு 50 விழுக்காடு என்ற நிலையை நீக்கிவிட அரசு முன்வருமா? அதோடு கூட வேலையில் ஏற்கனவே அமர்த்தப்பட்டவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது ஒருவருடைய தகுதியை, திறமையை, எண்ணிக்கையை அடிப்படையாக வைத்துத்தான் கணக்கிடுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போன்று குறைவாக எண்கள் வாங்கியவர்கள் எல்லாம் பயிற்றுவிப்பதில் கெட்டிக்காரர்கள் என்று எப்படி முடிவுக்கு வர முடியும்? அதே போல் ஏ வாங்கியவர்கள் எல்லாம் கெட்டிக்காரர்கள் இல்லையென்ற முடிவுக்கு எப்படி வந்துவிட முடியும்? இப்போது எண்ணிக்கை அடிப்படையிலேதான் முடிவு செய்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவர்கள்—தாற்காலிகமாகப் பணியாற்றுகிறவர்கள் பாதிக்கப்படவில்லை. இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாகப் பணியாற்றியவர்கள்தான் நீக்கப்பட்டிருக்கிறார்கள், 165 பேர்களில் 69 பேர்கள்தான் நீக்கப்பட்டிருக்கிறார்கள், மற்றவர்கள் இருந்துவருகிறார்கள்.

## *Ananvilai Primary School*

*722 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

Whether there are proposal under the consideration of the Government to upgrade the 'Ananvilai' Primary School in the Usarathuvilai Village Panchayat in Karungal Range, Kanyakumari district?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, அங்குள்ள பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 500-க்கு அதிகமாக இருக்கிறது. பக்கத்தில் அரசுப் பள்ளிகளும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அதை நடுத்தரப் பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது பற்றிய செயற்குறிப்பு பள்ளிக் கல்வி இயக்குநரிடத்திலோ அரசினிடத்திலோ வரவில்லை. முறைப்படி விண்ணப்பம் செய்து நிபந்தனைகளை நிறைவேற்றக்கூடிய நிலைமை இருந்தால் அரசு ஆராயும்.

## சிற்பக்கலை பயின்றோர்க்கு வேலைவாய்ப்பு

*723 வினு :— திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரத்தில் பயின்று முடித்த சிற்பக்கலை மாணவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் சிறப்புத்திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, பல்லவன் காலத்திலிருந்து இராஜேந்திர சோழன் காலம் வரையில் உயிர் ஓவியமாகத் திகழ்ந்த சிற்பக் கலை இடைக்காலத்திலே உயிர் இழந்து கலைஞர் அவர்கள் ஆட்சியில் மீண்டும் புத்துயிர் பெற்று இருக்கிறது. எதிர்காலத்திலே அது ஜீவன் இழக்காமல் இருக்க அதைக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் கட்டாயப் பாடமாக வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பாடமாக வைக்க வேண்டிய அவசியம் இல்லை. பயிற்சி பெறுகிறவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 95 மாணவர்கள் பயிற்சி பெற்று இதுவரையில் வெளிவந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த மாநிலத்திலேயும் வேறு பல மாநிலங்களிலேயும் பணியாற்றி வருகிறார்கள். இப்போது திருவள்ளுவர் கோட்டம் பணியிலே பலபேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். டிகிரி ஆக்குவதன் மூலமாக அவர்கள் அந்தத் தொழிலை நடத்துவார்கள் என்று சொல்ல முடியாது, மேற்பார்வையாளராகவோ, கடிதம் எழுதுகிறவராகவோ வேறு

வேலையிலோதான் ஈடுபடுவார்கள். கையிலே உளியையும் சுத்தியலையும் வைத்துச் செதுக்குவார்களா என்பது சந்தேகம் தான். சான்றிதழ்கள் வழங்குவதன்மூலமாக அந்தக் கலை வளரும்.

திரு. கோ. இளங்கோவன் : சிற்பக்கலை பயில்கிறவர்கள் எத்தனை ஆண்டுகள் பயில்கிறார்கள்? இதுவரையில் படித்து வெளிவந்த மாணவர்கள் எத்தனை பேர்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்டு தோறும் 10 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பயிற்சி ஒரு ஆண்டா இரண்டு ஆண்டா என்கிற விவரக் குறிப்பில்லை, தனிக்கேள்வி போட்டால் தரலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாணவர்கள் ஆசிரியப் பயிற்சி பெறுகிற நேரத்திலே அவர்களுக்காக ஊதியமோ அல்லது உதவித் தொகையோ அளிக்கிறோம். அதைப் போல சிற்பக் கலை பயில்கிற மாணவர்களுக்கும் உதவித் தொகை அளிக்கப்படுகிறதா? இல்லையென்றால் இனி மேலாவது உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏதோ ஊக்க ஊதியம் இருப்பதாக அறிகிறேன், விவரக் குறிப்பில்லை. தனிக் கேள்வி போட்டால் தருகிறேன்.

திரு. கு. காமாட்சி : இந்தச் சிற்பக் கலைக்குப் பழைய காலத்திலேயுள்ள மாதிரி உளியும் சுத்தியலும்தான் இப்போதும் இருக்கிறது. அதற்கு நவீன கருவிகள் ஏதாவது கொடுக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப் பற்றிய விவரம் இல்லை.

## ரப்பர் சாலைகள்

*724 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் முக்கியமான சாலைகளில் ரப்பர் சாலை அமைப்பது குறித்து ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப் பட்டதா?

(இ) ஆம் எனில், விபரம் என்ன?





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : நெடுஞ் சாலை ஆராய்ச்சி நிலையம் நிலக்கீல் சாலைகளில் ரப்பர் சேர்ப்பது பற்றி ஆய்வு செய்து சோதனை விளைவுகளை ஓர் ஆய்வகக் குறிப்பாக வெளியிட்டுள்ளது. அது "நிலக்கீல் சாலைகளில் ரப்பர்" என்ற தலைப்பில் குறிப்பு எண் 15 ஆக வெளியிடப் பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தச் சாலையை அமைக்க ஒரு கிலோமீட்டருக்கு எவ்வளவு தொகை தேவைப்படுகிறது? குறைந்த பட்சம் முன்மாதிரியாக சென்னை மாநகரத்தில் அண்ணாசாலையையாவது இரப்பர் சாலையாக மாற்றி யமைக்க ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதற்குண்டான செலவு எவ்வளவு என்பதற்கான புள்ளிவிவரம் இப்பொழுது இல்லை. ஆய்வகத்தில்தான் இருக்கிறது. ஆனால் இது உற்சாகமூட்டுவதாக இருக்கிறது. இந்த ஆண்டு பரி சீலிக்கலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, இந்த இரப்பர் சாலைகள் வெளிநாடுகளில் அதிகமாக இருக்கின்றனவா? இதை நம்முடைய நாட்டிலே போடுவதால் செலவு அதிகம் ஆகிறதா? இதைப் போடுவதால் நமக்கு நஷ்டம் ஏற்படுகிறதா? இதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, முழுக்க முழுக்க இரப்பரை வைத்துப் போடும் சாலை அல்ல. நாம் ஏற்கனவே போடும் தார் கீலோடு இரப்பர் தூளையும் கலந்து போடுவதாகும். இதனால் செலவு ஆரம்பத்திலே அதிகமாக இருந்தாலும் அதிக நாட்கள், ஆண்டுகள் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இது பரிசோதனை நிலையில் தான் இருக்கிறது. இருந்தாலும் பரிசோதனை உற்சாகமூட்டு வதாக இருக்கிறது.

## பக்கிங்காம் கால்வாய் கரைகள்

*725 வின—திரு. மா. வெ. நாராயணசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரத்தில் பக்கிங்காம் கால்வாயின் கரைகளைப் பலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

[1975 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : வடக்கு பக்கிங்காம் கால்வாய் மைல் 0/0 முதல் மைல் 10/1 வரையுள்ள பகுதியில் சீர்திருத்தப் பணிகள் முதற்பகுதியில் செய்வதற்காக 65.20 லட்சம் ரூபாய் கொண்ட மதிப்பீட்டிற்கு அரசு ஜனவரி 1974-ல் ஒப்புதல் அளித்தது. ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி மேற்படி கால்வாயானது மைல் 0/0 முதல் 10/1 வரை (திருவொற்றியூர் நகராட்சி எல்லையில் உள்ள பகுதி மைல் 4/3—6—0 மைல் வரை உட்பட) ஆழப்படுத்தவும், அகலப் படுத்தவும் இரு பக்கங்களில் கரைகளை மண்ணால் நிரப்பியும் சரிவுகளில் சிமெண்ட் கல் பொருத்தி பலப்படுத்தப்படும் பணிகள் செயல்படுத்தப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்தப் பக்கிங் காம் கால்வாய் வழியாக பழவேற்காடு, எண்ணூர் போன்ற பகுதிகளிலிருந்து திருவொற்றியூர் வழியாக சென்னைக்குப் படகுகள் மூலம் பொருட்களைக் கொண்டு வருகிறார்கள். கல்கத்தாவில் இருப்பதைப்போன்று இதை நிரந்தரமான போக்கு வரத்திற்கு ஏற்றதாக ஆக்கும் அளவில் பெரிய திட்டத்தைத் தயாரிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நிரந்தரமான போக்குவரத்தாக ஆக்குவதற்குத்தான் அரசு யோசித்தது. மத்திய அரசாங்கம் இதற்கான முழு மானியத்தை யும் கொடுக்கவில்லை. ஆந்திரத்தையும் தமிழ்நாட்டையும் சேர்க்கும் இந்தக் கால்வாயைப் பற்றி ஆந்திர அரசும் தமிழக அரசும் முயற்சி எடுத்திருக்கிறது. மத்திய அரசாங்கமும் பண உதவி செய்திருக்கிறது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, இதைச் சீர்திருத்தி அமைப்பதற்காக ஆகும் மொத்தத் தொகை எவ்வளவு ? மத்திய அரசாங்கம் ஏதாவது மானியம் அல்லது உதவித் தொகை கொடுத்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 600 இலட்சம் ரூபாய்க்கு உண்டான எஸ்டிமேட்டைத் தயாரித்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினோம். ஆனால் 100 இலட்சம் ரூபாய்க்குத்தான் இந்த ஆண்டு, சென்ற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள மத்திய அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவரவர்களே, முக்கியமான இந்தப் பணியை ஆரம்பிக்கும் நேரத்தில் பக்கிங்காம கால்வாயின் ஓரத்தில் சுமார் 3,000 குடிசைகள் இருக்கின்றன, அவைகளையும் சீரமைப்பதற்குத் தேவையான பண உதவியை இந்த இலாக்கா வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது வாய்க்காலைச் சீர்படுத்தும் முயற்சியே தவிர ஓரத்தில் உள்ள குடிசைகளைப் பற்றிய முயற்சி அல்ல. அதைப்பற்றி குடிசை மாற்று வாரியத் தலைவரிடத்தில் கேட்க வேண்டும்.

## கருக்காகண்டியில் பாலம்

*726 வினா— திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், கொள்ளேக்கால்—செல்லம் பாளையம் ரோட்டில் கருக்காகண்டி என்னுமிடத்தில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : மத்திய சாலை நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூபாய் 10.92 லட்சம் செலவில் கொள்ளேக்கால்—செல்லம்பாளையம் சாலையில் ஒரு பாலம் அமைக்கும் செயற்குறிப்பு மத்திய அரசின் ஒப்பளிப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளது.

திரு. கே. ரங்கநாதன் : தலைவரவர்களே, கோவை மாவட் டத்தில் பாப்பநாயக்கன் பாளையம், கணபதி, கிருஷ்ணராயபுரம் ஆகிய இடங்களின் மத்தியில் உள்ள சங்கனூர் பள்ளத்தில் மேம்பாலம் கட்ட வேண்டுமென்று நீண்ட நாள் கோரிக்கை இருக்கிறது. அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று நினைக்கிறேன். தனியாக கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

## பீங்கான் பொருள்கள் தயாரிப்பு

*727 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பீங்கான் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களை ஊக்கப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

[1975 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மண்பாண்ட தொழில்களில் நடவடிக்கைகளை ஒருமுனைப்படுத்த வேண்டும். தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், தொழில் வணிகத்துறை, தமிழ்நாடு சிறு தொழில் கழகம் பொறுப்பிலிருந்த செங்கல், மண்பாண்ட தொழிற்சாலைகளை ஏற்று நடத்த '' தமிழ்நாடு செராமிக்ஸ் லிமிடெட் '' என்ற ஒரு நிறுவனத்தை, தமிழக அரசு அமைத்துள்ளது. இந்நிறுவனம் அத்தொழிற்சாலைகளை ஏற்று 1974-ம் ஆண்டு ஜுலை மாதம் 15-ம் தேதி முதல் இயங்கத் தொடங்கியது. இந்நிறுவனம் தான் ஏற்றுக்கொண்ட தொழிற்சாலைகளில் தேவைக்கேற்ப முடிந்த அளவில் தொழிலை விரிவுப்படுத்தவும், உற்பத்தி திறனைப் பெருக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இந்நிறுவனம் புதிய மண்பாண்ட தொழில்களை ஆரம்பிக்கும் திட்டங்களையும் வகுத்து வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, புதிய மட்பாண்டத் தொழிற்சாலைகளைத் துவங்கும் நேரத்தில் கிராமப் பகுதிகளில் துவக்க அரசாங்கம் ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறதா ? அப்படியென்றால் திருச்சி மாவட்டம் போன்ற பகுதிகளில் ஏதாவது ஒரு கிராமத்தில் பீங்கான் தொழிற்சாலையைத் துவங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, இப்பொழுது இருக்கிற திட்டப்படி ஏற்கனவே இருக்கிற அந்தத் தொழிற்சாலைகளை, விருத்தாசலம் போன்ற இடங்களில் இருக்கிற தொழிற்சாலைகளை விரிவுபடுத்தும். அது போன்ற உதவிகளைச் செய்கிற திட்டத்தைத்தான் போட்டு இருக்கிறது.

THIRU B. VENKATASWAMY : Sir may I know from the Hon. Minister whether the ceramic industries have started production and whether they manufacture export variety of ceramic wares?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, ஏற்கனவே, உற்பத்தி நடந்திருக்கிறது. இப்பொழுது அதிகமாக நடைபெறுகிறது. வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதைப்பற்றியவிவரம் இல்லை.

திரு. எஸ். வடிவேல் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் வாழ்க்கையிலே தொடர்ந்து பாதிக்கப்பட்டுக்கொண்டே வருகிறார்கள்.



1975 ஏப்ரல் 19]

அவர்களுக்கு அரசு ஏதாவது உதவி கொடுத்து அந்தத் தொழிலை ஊக்குவிக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்தச் சிறிய மண்பாண்டத் தொழில் சம்பந்தமான உதவிகள் மற்றைய திட்டங்களின் மூலம் செய்யப்படுகின்றன. ஆனால் இது தமிழ்நாடு செராமிக்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக விருத்தாசலம், பெரம்பூர், ஓமலூர் போன்ற இடங்களில் உள்ள தொழிற்சாலைகளை நிர்வகித்து விரிவுபடுத்தும் திட்டமாகும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தற்பொழுது அரசாங்கத்திடம் பீங்கான் தொழிற்சாலைக்கான திட்டம் இல்லை என்று சொன்னாலும் தனியார் துவக்க முன்வந்தால் உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தனியார் ஆரம்பித்தால் அரசு நிச்சயமாக எல்லா உதவிகளையும் செய்யும்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, தற்பொழுது டால்மியாபுரம் போன்ற இடங்களில் தனியார் இம்மாதிரி தொழிற்சாலைகளை வைத்திருக்கிறார்கள். இப்பொழுது அரியலூருக்குப் பக்கத்தில் ஏற்படும் சிமெண்ட் தொழிற்சாலைக்குப் பக்கத்தில் இந்த செராமிக் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அது போன்ற திட்டம் தற்பொழுது இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : இந்த மண்பாண்டம் செய்பவர்கள் சென்னையிலே சிலயிடங்களில் முக்கியமான வீதிகளின் வழியில் மண்பாண்டம் செய்கிறார்கள். அப்பொழுது போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவும், பொதுமக்களுக்கு இடைஞ்சலாகவும் ஆகிறது. இப்படிப்பட்ட மண்பாண்டம் செய்பவர்கள் போக்குவரத்து உள்ள பகுதியில் செய்யாமலிருக்க தனியிடத்தை ஒதுக்க அரசே ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிற மண்பாண்ட உற்பத்தி என்பது சிறிய தொழில் சம்பந்தப்பட்டது. அதில் கஷ்டமில்லாமல் வேண்டுமானால் பார்த்துக் கொள்ளலாம்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, மண்பாண்டத் தொழிற்சாலை வடார்க்காடு மாவட்டத்திலே காட்பாடி பகுதியில் கருகேரி என்ற கிராமத்தில் இருக்கிறது. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் நீண்ட நாட்களாக அழகான மண்பாண்டங்களைச் செய்து வெளிநாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யும் அளவில் வனப்பு மிகுந்த மண்பாண்டங்களையும், வீட்டிற்கு உபயோகமான பொருள்களையும் உற்பத்தி செய்கிறார்கள். நீண்ட நெடு நாட்களாக அவர்களுக்கு அரசாங்க உதவியோ அல்லது மற்ற எந்த உதவியோ கிடைக்கவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில் சப்சிடி அல்லது அரசாங்க உதவி கொடுத்து அந்தத் தொழிலிலே இருப்பவர்களை உற்சாகப்படுத்தினால் அந்தப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வெளிநாட்டுச் செலாவணியைப் பெற முடியும். அதில் ஈடுபட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்த இடத்திலேயிருந்து, கருகேரியிலிருந்து போதுமான எண்ணிக்கையுள்ளவர்கள் முன்வந்தால் சிராமிக் கார்ப்பரேஷன் மூலமாக தேவையான உதவிகளைச் செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த மண்பாண்டம் செய்யும் தொழிலாளர்களுக்கு காதி போர்டிலிருந்து கூட்டுறவு சங்கம் அமைக்கக் கடன் அளிக்கப்பட்டு வந்தது. அது இப்பொழுது நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மண்பாண்ட கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டுமென்றால், 500 ரூபாய் பங்குத் தொகை கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, எளிய முறையில், கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் விதத்தில் சர்க்கார் கடன் கொடுத்து அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியாக இருக்கும் என்று நினைக்கிறேன். இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிக்கு அரசாங்கம் உதவி செய்கிறது. ஆனால் 100-க்கு 50 இலாபகரமாக நடக்கவில்லை. போதுமான உதவிகளைச் செய்ய வேண்டுமென்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. டைரக்டர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியை விரிவுபடுத்தவும், தேவையான உதவிகளைச் செய்யவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னை தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட் என்று நியமித்து,



Tamil Nadu Small Industries Corporation, Vridhachalam,
Tamil Nadu Stone-ware Pipes;
Industrial Estate Vridhachalam;
Common Facilities and Works Centre, Omalur.

ஆக இவைகளை தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட் மேற்கொண்டு இந்தத் தொழில் சம்பந்தமாக விரிவான திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

*Manufacture of Soda Ash, etc.*

*728 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government for the manufacture of Soda Ash and Ammonium chloride in the State ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) ஆம். தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற கூட்டுத் துறையில் உள்ள நிறுவனம் தூத்துக்குடியில் சோடா ஆஷ், அம்மோனியம் குளோரைடு ஆகியவற்றை தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்தொழிற்சாலை, ஆண்டொன்றுக்கு 66,000 டன் சோடா ஆஷ், 66,000 டன் அம்மோனியம் குளோரைடு, 86,400 டன் டி. ஏ.பி., என்.பி. கே. ஆகியவற்றைத் தயாரிக்கும்.

(முற்பகல் 9-30)

திரு. என். கே. பழனிசாமி : இதற்கு மொத்த எஸ்டிமேட் எவ்வளவு? நம் சர்க்காருடைய பங்கு எவ்வளவு போடப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டோட்டல் எஸ்டிமேட் 28 கோடி ரூபாய். ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் ரிக்வைர்மென்ட்ஸ் 6.5 கோடி ரூபாய். தூத்துக்குடியில் இதை அமைப்பதாகக் குறிப்பு இருக்கிறது. ஏற்கனவே அரசாங்கக் கொள்கையைத் தெரிவித்திருக்கிறோம். அந்தக் கொள்கையின்படி, நேற்றுக்கூட அந்த விவரங்களைச் சொன்னேன்.

### *Family Benefit Scheme for Power Board Staff.*

*729 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Family Benefit Fund Scheme now in force for Government Servants has been extended to Power Board Staff ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : ஆம். குடும்ப நல நிதி திட்டம் 21–6–1974-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் செயல்படுத்தப்படுகின்றது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மாத ஊதியம் பெறும் பணியாளர் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் வருகின்றனர். மாதம் ரூ. 10 சந்தாவாக செலுத்தும் ஓய்வூதியம் வழங்கப்படும் பணியின் கீழ்வராத பணியாளர்கள் அயலிடப்பணியிற் சென்றுள்ள வாரியப் பணியாளர்கள், அல்லது முகமையிற் சென்றுள்ள வாரியத்தின் பணியாளர்கள், வேலை நிதியிலிருந்து ஊதியம் பெறும் முறையான பணியிலுள்ள ஊழியர்கள், தற்காலிகப் பணி அமைப்பிலுள்ள ஊழியர்கள் ஆகியோரும் இத்திட்டத்தின்கீழ் வருகின்றனர்.

திரு. எம். சுரேந்திரன் : இப்படி மின்சார வாரியப் பணியாளர்களுக்கு இருப்பதுபோல் இதர பல வாரியங்களில், டிரான்ஸ்போர்ட் வாரியம் போன்று இருக்கின்ற வாரியங்களில் இருப்பவர்களுக்கும் இது பொருந்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

### திருச்சிராப்பள்ளியில் திராட்சை பயிரிடல்

*730 வினா— திரு. பெ. சௌந்தர பாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், திராட்சை பயிரிடுதலை ஊக்குவிப்பதற்கான திட்டம் ஏதேனும் செயல்படுத்தப்படவிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.





திரு. பெ. சௌந்தரபாண்டியன் : திருச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் தனியார் திராட்சை பயிரிடுகிறார்கள். அரசாங்கம் பல பயிர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் உதவி செய்து வருகிறது. அதே போல் திராட்சைப் பயிரிடுவோருக்கு, உதவி செய்ய அரசாங்கம் இனிமேலாவது பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : திராட்சைப் பயிருக்கு தற்போது திருச்சி மாவட்ட கூட்டுறவு வங்கி கடன் உதவி செய்து வருகிறது. ஏக்கருக்கு 675 ரூபாய் அளவுக்குக் கடன் கொடுக்கிறது. அதைத் தவிர எந்தத் திட்டமும் திருச்சி மாவட்டத்திற்கு இல்லை.

திரு. தி. பொன்னுமலை : திராட்சை ஒரு ஏக்கரில் பயிரிட பத்தாயிரம் ரூபாய் செலவாகிறது. அதிலே பாதி ரூபாய் அரசாங்கம் மானியமாகக் கொடுத்தால் விவசாயிகள் ஊக்கமாக அதைப் பயிரிடுவார்கள். அதைப் பயிரிட்டு இரண்டு மூன்று ஆண்டு காலம் ஆனவுடன் இப்படிப்பட்ட வறட்சி ஏற்பட்டால் பத்தாயிரம் ரூபாயும் நஷ்டமாகிவிடக்கூடிய நிலை ஏற்படுகிறது. அந்தநிலையில் அந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் திராட்சையைப் பொறுத்தவரை இன்னும் அமலுக்கு வரவில்லை. சேலம் மாவட்டத்தில் திராட்சைப் பயிர் செய்கிறவர்களுக்கு 1,750 ரூபாய் வரையில் ஏக்கர் ஒன்றுக்கு மத்திய கூட்டுறவு வங்கி மூலம் பயிர்க் கடன் கொடுக்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேளாண்மைத்துறை பொறுப்பேற்ற பிறகு பல விவசாய பயிர்கள் மீது ஆராய்ச்சியைப் மேற்கொண்டிருக்கிறார்கள். அதே போன்று திராட்சைப் பயிரைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இனிமேலாவது ஆராய்ச்சி செய்ய ஆவன செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது திருச்சி மாவட்டத்தில் திராட்சைப் பயிருக்கான திட்டம். திராட்சைப் பயிரைப் பற்றி ஆராய்ச்சி நடந்து, பலவகையான திராட்சை வகைகளில் தமிழ்நாட்டுக்கு ஏற்ற வகைகள் என்னென்ன என்ற ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் கொடுக்கலாம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தமிழ் மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் திராட்சைப் பயிருக்கு உகந்த பருவ நிலை இருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த மாவட்டத்தில் திராட்சைப் பயிர் செய்தால் மிக நல்லது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. எல்லா மாவட்டங்களிலும் திராட்சைப் பயிரிட நன்றாக இருக்கும் காரணத்தால் நல்ல மகசூல் கிடைக்கிறது. ஊக்கப்படுத்துவதற்கு திட்டம் ஒன்றும் இல்லையென்று சொன்னேன்.

திரு. கோ. இளங்கோவன் : திராட்சைப் பயிரிட ஆகின்ற செலவு ஏக்கருக்கு மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் ; மாவட்டத்திற்கு மாவட்டம் செலவு வேறுபடுகிறது என்ற காரணத்தால்தான் அந்தந்த மாவட்டத்திலுள்ள கூட்டுறவு வங்கிகள் அவர்கள் கொடுக்கின்ற கடன் தொகையை வேறு வேறு விதமாக நிர்ணயித்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாகக் கூட்டுறவு வங்கியில் டெக்னிகல் செல் இருக்கிறது. அவர்கள்தான் திராட்சைப் பயிருக்கு எவ்வளவு கடன் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

## பாதிரிவேடு விவசாய கிடங்குக் கட்டடம்

*731 வினா— திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், பாதிரிவேடு கிராமத்தில் உள்ள விவசாயத் துணைக் கிடங்கிற்குக் கட்டடம் கட்டித் தருவதில் ஏற்படும் காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

(இ) இது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) பாதிரிவேடு கிராமத்தில் உள்ள விவசாயக் கிடங்கிற்கு கட்டிடம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : பாதிரிவேடு வட்டாரத்திலுள்ள விவசாயிகள் 15 மைல் தூரம் சென்று ஒன்றியத்தின் தலைநகரத்தில் தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்தக் கிடங்கினை விரிவான அளவில் விரைவாகக் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?





மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவசாயக் கிடங்கு கட்டுவது என்றால் குறைந்த பட்சம் அதிலே வருஷத்திற்கு 50,000 ரூபாய் அளவுக்கு வரவு-செலவு ஆகவேண்டும் என்ற அளவுகோல் இருக்கிறது. அதனால்தான் இடையில் தடைப்பட்டு 28—2—1975 அன்று மீண்டும் தொடங்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Cultivation of Jute*

*732 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether any study has been conducted on the cultivation of jute in non-paddy areas of Thanjavur district?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : தஞ்சையில் பைலட் ஸ்கீமாக சணல் விளைவிப்பது பரிசீலிக்கப்பட்டதா ? அதிலே என்ன முடிவு ஆயிற்று ? அது சக்ஸஸ்புல்லா இல்லையா ? இது மற்ற ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்கக்கூடிய முறையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வினா ''நான்-பாடி ஏரியாவில் இது பரிசீலிக்கப்பட்டதா ?'' என்பதாகும். நஞ்சை நிலங்களில் சில பகுதிகளில் இரண்டொரு இடங்களில் 1971, 1972, 1973 ஆகிய வருஷங்களில் பரீட்சித்துப் பார்த்ததில் ஜுட் பயிர் செய்வதை விவசாயிகள் விரும்பவில்லை என்று முடிவு செய்து அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் பகுதியில் சணல் பயிரிடப்படுகிறது. அந்த விவசாயிகளை ஊக்குவிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: வினா ஜுட் பற்றியது. அவர்கள் 'ஹெம்ப்' பற்றிக் கேள்வி கேட்கிறார்கள். ஹெம்ப் வேறு. ஜுட் வேறு. தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், நாகப்பட்டினம், மன்னார்குடி, மாயூரம் ஆகிய பகுதிகளில் 10 சென்ட் அளவில் ஜுட் பயிர் செய்து பார்க்கப்பட்டது.

## நகராட்சி உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள்

*733 வினா—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

[1975 ஏப்ரல் 19

தமிழ் நாட்டில் உள்ள நகரசபை உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் நியமனங்களை அந்தந்த நகரசபை ஆணையாளர்களே ஏற்றுவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. என். மருதாசலம் : நகரசபைகளில் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்றால் அப்படி நியமிப்பதற்கு, காலியான இடங்களை நிரப்பும் விஷயத்தில் நகராட்சி ஆணையாளர் சென்னையில் உள்ள முனிசிபல் டைரக்டருக்கு எழுதி இவர்கள் மூலமாகத்தான் தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அப்படி அல்லாமல் தலைமை ஆசிரியர்களை நியமிப்பதற்கு அந்தந்த நகராட்சி ஆணையாளர்களுக்கே அதிகாரம் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலிலேயே இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறேன். ரூ. 300-க்கு மேற்பட்டு சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்களை எல்லாம் மாநிலத்தில் இருக்கிற குழுதான் தெரிவு செய்கிறது.

திரு. க. உரொா. எட்மண்ட் : பொதுவாக, நகராட்சி, ஊராட்சி மன்றங்களில் ஏற்கனவே பணி புரிந்து கொண்டிருக்கிற ஆசிரியர்தான் பதவி உயர்வின் அடிப்படையில் தலைமை ஆசிரியராக நியமிக்கப்படுகிறார். ஆகவே, ஆசிரியர்களை நியமிக்கிற ஆணையாளரே தலைமை ஆசிரியரையும் நியமிப்பதில் என்ன இடையூறு இருக்கிறது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இடையூறு ஒன்றும் வந்து விடாது. ரூ. 300-க்கு மேல் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் என்று வைத்திருக்கிறோம். ஹெட்மாஸ்டர் என்று வரும்போது அதை மாநிலத்தில் இருக்கிற குழு நிர்ணயிப்பதுதான் தகுதி அடிப்படை, உள்ளூரில் இருக்கிற சிக்கல்கள் எல்லாம் தீருகிற அளவில் ஒரு நியாயமான தேர்வு அங்கே நடைபெறும்.

திரு. என். மருதாசலம் : தலைமை ஆசிரியர்களை நியமிப்பதில் அதிகக் காலதாமதமாகிறது. ஆகவே அந்தகால தாமதத்தையாவது குறைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதைப் பற்றிக் குறிப்பிட்டு தனியாக எழுதிக் கொடுத்தால் காலதாமதத்தைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.



1975 ஏப்ரல் 19]

திரு. சு. துரைசாமி : தமிழ்நாடு முழுவதிலுமுள்ள நகரசபை பள்ளிக்கூடங்களில் தலைமை ஆசிரியர்கள் பற்றி அண்மையில் இன்ஸ்பெக்டர் அவர்களால் யார், யார் தலைமை ஆசிரியர்கள் என்று ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. திருப்பூரில் ஒரு உயர்நிலைப் பள்ளிக் கூடத்தில் ஐந்து ஆண்டுகளாக ஒருவர் ஹெட் மாஸ்டராக வேலை பார்த்து வந்தார்கள். இன்று அவர் ஹெட் மாஸ்டர் பதவியிலிருந்து கீழே இறக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே ஐந்து ஆண்டுகள் யாராவது ஒருவர் ஹெட் மாஸ்டராக வேலை பார்த்திருந்தால் அவர்களுக்கு பாதிப்பு இல்லாத அளவிற்கு அமைச்சர் அவர்கள் உத்திரவு பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : இது ஒரு பொதுவான கேள்வி. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு பிரச்னைபற்றிக் கூறுகிறார்கள். ஆகவே அவர்கள் அதுபற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. என். டென்னிஸ் : ஹெட் மாஸ்டரை நியமிப்பது நகரசபை நியமனக் கமிட்டி. ஆகவே அவர்களே ஹெட் மாஸ்டர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஏற்கனவே இல்லை என்று குறிப்பிட்டேன். மாநில அளவில்தான் செய்ய முடியும்.

திரு. கோ. இளங்கோவன் : அரசாங்க ஊழியர்களுக்கு ஆண்டுதோறும் அரசு ஊதியத்தை உயர்த்திக் கொண்டே போகிறது. எனவே இப்போது ரூ. 300 என்று நிர்ணயித்திருப்பதை ரூ. 400 என்று உயர்த்துவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது புதிய யோசனை. பிறகு பார்க்கலாம்.

## மானாமதுரை குடிநீர் வழங்கு திட்டம்

*734 வினா— திரு. த. சோணையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை பேரூராட்சி குடிதண்ணீர் திட்ட வேலை இப்பொழுது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. த. சோனையா : இராமனாதபுரம் மாவட்டத்தில் இருக்கிற மானாமதுரையைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகளாக கேட்டுக் கொண்டு வரப்படுகிற அந்தத் திட்டம் இப்போது நிறைவேறுகிற தருவாயில் இருக்கிறது. அந்தக் குடி நீர் திட்டத்தை இப்போது வறட்சி நிலை இருப்பதால் உடனடியாகச் செயல்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்கான நிர்வாகச் செலவு, மற்றச் செலவுகள் எல்லாம் நகரமன்றம் ஏற்றுக் கொள்வது போன்ற பிரச்னைகள் எல்லாம் இப்போது குடி நீர் வாரியத்திற்கு வந்து மறுபடியும் சர்க்கார் ஆணைக்கு வந்த பிறகு அதைப்பற்றியெல்லாம் பரிசீலித்து எவ்வளவு விரைவில் நடவடிக்கை எடுக்கமுடியுமோ அந்த அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### *Semmarikulam Therikudieruppu road*

*735 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to blacktop the Semmarikulam Therikudieruppu road (*via*) Solaikudieruppu and Kudiraimedu in Tiruchendur taluk ; and

(*b*) if so, when the work will be started?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : இந்தச் சாலை மிகவும் முக்கியமான பல கிராமங்களை தொடர்புபடுத்தக்கூடிய சாலை. ஆகவே, இதை விரைவில் தார் போடுவதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது நாலரை லட்சம் ரூபாய்க்கு மேல் ஆகிற இனமாக இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு இதை எடுப்பதற்கான உத்தேசம் இல்லை. இதை பின்னால்தான் பார்க்கவேண்டும்.



திரு. க. உரோ. எட்மண்ட் : இந்தச் சாலை என் தொகுதி திருச்செந்தூர் தொகுதியில் உள்ள சாலை, இந்த செம்மரிகுளம்—தேரி குடியிருப்பு சாலை, நன்கு காற்று அடிக்கும்போது அந்த ரோடு மண்ணால் மூடி விடுகிறது. ஆகவே அது மக்களுக்குப் பயன்படும் வகையில் இருக்க அந்த ரோடின் உயரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்த யோசனையைப் பரிசீலிக்கலாம்.

### *Houses for Revenue Officials in Salem*

*736 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the State Housing Board to construct houses for the members of the Salem District Revenue Officials Association ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(ஆ) குறைந்த வருமான தொகுதியினருக்காக 103 வீடுகளும் நடுத்தர வருமான தொகுதியினருக்காக 2 வீடுகளும் கட்டும் திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருக்கிறது. மேற்படி வீடுகள் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டு, பல கட்டங்களில் இருக்கிறது.

### தாழம்பேட்டையில் மீனவர்களுக்கு வீடுகள்.

* 737 வினா— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் வட்டம், செம்பனார்கோவில் ஒன்றியம், தாழம்பேட்டையில் மீனவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

### திருப்பத்தூரில் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை

* 738 வினா— திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பீடி தொழிலாளர் அதிகமாய் உள்ள திருப்பத்தூர் வட்டத்தில், தொழிலாளர் நல மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திருப்பத்தூர் வருவாய்க் கோட்டத்தில, கீழ்க்காணும் மூன்று இடங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

1. குடியாத்தம்.

2. வாணியம்பாடி.

3. ஆம்பூர். (இம்மருந்தகம் 22—3—75 ஆம்-நாளன்று தொடங்கிவைக்கப்படும்.)

பீடித் தொழிலைச் சார்ந்த தொழிலாளர்கள் தற்போது தொழிலாளர் நலக் காப்புறுதி திட்டத்தின் கீழ் வரவில்லை.

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் அவர்கள் கொண்டுவரப்படுவாராயின், அந்நாளில் அவர்கள் மேற்சொன்ன விடங்களிலுள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்களுடன் சேர்க்கப்படுவர்.

திரு. அ. ஆறுமுகம் : பீடித் தொழிலாளர்கள் உள்ள பகுதிகளில் எல்லாம் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ? அதேபோல் என் எடப்பாடி தொகுதியில் பீடித் தொழில் நிரம்ப இருக்கிறது. ஆகவே, அங்கும் இதேபோல் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது மருத்துவமனைகள் பற்றிய கேள்வி. வீடுகள் பற்றிய கேள்வி அல்ல. ஆகவே தனிக் கேள்வி வேண்டும்.

திரு. கே. எ. வகாப் : வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிலும் முக்கியமாக இப்படிப்பட்ட பீடித் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றால் அது நிச்சயமாக மிகவும் வருத்தப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். ஆகவே பீடித் தொழிலாளர்களுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் மருத்துவ உதவி அளிப்பதற்கு அரசு இந்த மருத்துவமனைகளை ஈடுபடுத்துமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது சம்பந்தமாக தென் இந்திய தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாடு மைசூரில் நடைபெற்றபோது இதுபற்றி விவாதித்தோம். இந்திய அரசுக்கும் இதுபற்றியெல்லாம் தெரிவித்திருக்கிறோம். ஆனால் இன்னும் இதுபற்றி பாக்டரி ஆக்டின் கீழ் வருமா இல்லையா



என்பது போன்ற விஷயங்களில் முடிவு எடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அந்தப் பிரச்னைகளில் முடிவு எடுக்கப்பட்ட பிறகுதான் இ. எஸ். ஐ.-யில் அவர்களைச் சேர்ப்பதா இல்லையா என்பது பற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்த பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவாகளை காச நோய் விரைவில் பற்றிக் கொள்கிறது. இந்தத் திட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் சேர்க்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆகவே அரசாங்கம் அவர்களையும் இந்தத் திட்டத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா ? அப்படி நடவடிக்கை எடுக்கும் போது நெல்லை மாவட்டத்திலுள்ள மேட்டுப்பாளையம், முக்கூடல் இந்த இரண்டு இடங்களையும் சேர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படி நடவடிக்கைகள் எடுக்கும்போது இந்த ஊர்களை எல்லாம் கவனத்தில் கொண்டு செயலாற்றும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அண்மையில் மத்திய அரசு விதித்த ஒரு வரி காரணமாக இந்தத் தொழிலில் ஒரு மிகுந்த நெருக்கடி ஏற்பட்டு பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஏற்கனவே நோயால் பீடிக்கப்பட்ட இந்த மக்கள் ஆன்றாடம் பிழைப்பையும் இழந்துவிட்டால் மிகுந்த அல்லலுக்கு ஆளாவார்கள். எனவே, இவர்களுக்கு தனியாக ஒரு திட்டத்தை வகுக்க தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது அப்படிப்பட்டதொரு திட்டம் அரசின் ஆய்வில் இல்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் இந்த அரசு அவர்களுக்கு தக்கப் பாதுகாப்பு அளிக்கத் தயங்காது.

டாக்டர் ச. அ. சின்னராசு : பீடித் தொழிலாளர்கள் ஈட்டுறுதி மருத்துவ மனையில் சேர்க்கப்படாத ஒரு சூழ்நிலை இருப்பதாகச் சொன்னார்கள். அந்த பீடித் தொழிலாளர்களுக்கு காச நோய் வருவதற்கு வாய்ப்பிருப்பதால் அவர்கள் குறைந்தது ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது கட்டாயமாக மெடிக்கல் செக் அப் செய்து கொள்ளவேண்டும் என்று ஆணை பிறப்பித்து அவர்களது நலன்கள் அரசால் கவனிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அது நல்ல யோசனை. ஆனால் தற்போது நிலைமை இதற்கு இடம் கொடுக்கவில்லை.

### *Executive Subordinates of Fisheries Department*

*719 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Fisheries Executive Subordinate Association has presented a Memorandum containing their demands on 5th October 1974 ;

(*b*) if so, what those demands are ; and

(*c*) the action taken thereon by the Government?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) இல்லை

(இ) & (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Ferro-Cement boats*

*720 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Government propose to build fishing boats with Ferro-Cement ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) ஆம்.

(இ) மீனளத்துறையின் இரும்பு சிமிட்டிப் படகு ஆராய்ச்சி நிலையம் ஏற்கனவே 38 அடி படகு ஒன்றையும் 15 அடி படகு ஒன்றையும் கட்டி முடித்துள்ளது. 38 அடி நீளமுள்ள இன்னும் 10 படகுகளைக் கட்டும் பணி பல்வேறு நிலையில் நடைபெற்று வருகின்றது. 31, 32 அடி இரும்பு சிமிட்டி படகு கட்டும் திட்டம் அரசின் கருத்தில் உள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, I am given to understand that the best and cheapest boats can be built with Ferro-Cement. So may I know from the Hon. Minister whether more boats will be built with Ferro-Cement?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, நான் சிறிது விளக்கமாக அவர்களுக்குச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த 'பர்ரோ சிமென்ட்' படகு கட்டுவது ஆசியா கண்டத்திலேயே இரண்டாவதாக நாம் தான் கட்ட ஆரம்பித்து இருக்கிறோம். இதைக் கட்டுவதற்கு செலவும் சிக்கனம், அதே நேரத்தில் கடலில் செலுத்துவதற்கு, செலுத்து கிற நேரத்திலே தீப்பிடித்து பாதகம் ஏற்படாத வகையில்



விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படுகிறது. நம்முடைய இந்தியாவிலேயே, தமிழகத்திலேதான் முதன் முதலாக நம்முடைய மீனளத்துறையின் மூலம் கட்டப்படுகிறது. இப்போது 10 படகுகள் கட்டுவதற்கு எடுத்துக் கொண்டு, 31-32 இரண்டு படகுகளைக் கட்டவும் இப்போது ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். அது மட்டுமல்லாமல், கன்னியாகுமரி மாவட்டத்தில் சோஷியல் வெல்பேர் சொசைட்டி மூலமாக கட்டப்பட இருக்கிற 57 அடி நீளமுள்ள படகுகளைக் கட்டவும் ஒப்பந்தம் மேற்கொண்டு இருக்கிறோம். அந்தத் திட்டம் ஒரு முன்மாதிரியான திட்டம் மாத்திரமல்ல. மிகச் சிறந்த திட்டம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Timber Depots*

*739 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state :

(*a*) the number of Government Depots for stocking forest timber in the State as on this date ;

(*b*) whether there is any proposal to open additional depots ; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : (அ), (இ) & (உ)—ஏழு இடங்களில் திறக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் திறக்கும் செயற்குறிப்பு இல்லை.

திரு. என். மருதாசலம் : ஏழு இடங்களில் திறக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள், எந்தெந்த இடங்களில் திறக்கப்பட்டு இருக்கின்றது ? கோவையில் பல மரக்கடைகள் இருக்கின்றன. கோவை மாவட்டத்தில் மரக்கடைகள் மேலும் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : தமிழ்நாட்டில் திறக்கப்பட்டுள்ள ஏழு இடங்களில், கோவை மாவட்டத்தில் மட்டும் மூன்று இடங்களில் திறக்கப்பட்டு இருக்கின்றன. பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், இருட்டுப்பள்ளம்.

### சந்தன மரங்கள்

* 740 வினா—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-74 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிலிருந்து கள்ளக் கடத்தல் செய்யப்பட்ட சந்தன மரங்கள் எவ்வளவு ? அதன் மதிப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 1973-74-ல் சுமார் ஒன்பது டன் சந்தனக் கட்டைகள் கைப்பற்றப்பட்டன. அதனுடைய மதிப்பு சுமார் நாலரை லட்சம் ரூபாய்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, 1973-74-ல் கைப்பற்றியது பற்றிக் குறிப்பிட்டார்கள். எவ்வளவு வழக்குகள் போடப்பட்டன, எவ்வளவு கேஸ்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டன, என்பதைப் பற்றி சொல்ல இயலுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மொத்தம் கண்டு பிடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை 169. அவர்கள் பிரித்து கேட்டதைப் போல், பல வழக்குகள் நீதி மன்றத்தில் இருக்கின்றன. பல வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன. அதனுடைய முழு விவரங்கள் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் அப்படிப்பட்ட விவரங்களைத் தர முடியும். மொத்தம் கேஸ்கள் 169.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இப்போது நம் மாநிலத்தில் விளையும் சந்தன மரங்களில் பெரும் பகுதி ஜவ்வாது மலையில் விளைபவை ஆந்திராவிற்கும், முதுமலையில் விளைபவை கேரளாவிற்கும் கடத்தப்படுவதாக புகார்கள் நீண்டகாலமாக நமக்கு வந்தவண்ணம் இருக்கின்றன. விளையக் கூடியதில் ஏறத்தாழ பெரும்பகுதி இப்படிக் கடத்தப்படுகிறது. இதில் பெரிய, பெரிய கம்பெனிகள் ஈடுபட்டு இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இது சம்பந்தமாகக் கண்டுபிடிக்க தனியாக ஒரு புலனாய்வுத் துறை ஏற்படுத்தி, அந்தக் குற்றவாளிகளை பிடித்து, தண்டனை கொடுப்பதற்கு அரசு முன் வருமா ? இது மிகவும் விலை மதிக்கத்தக்க பொருளாக இருப்பதால், அரசு இதிலே தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இப்போதே ஸ்பெஷல் மொபைல் பார்ட்டி ஆறு இடங்களில் நியமிக்கப்பட்டு உள்ளன. மதுரை, திருச்சி, சேலம், தருமபுரி, கோவை, வேலூர் போன்ற இடங்களில் இருக்கின்றன. இந்த ஆண்டு வடாற்காடு மாவட்டத்தில், திருப்பத்தூரில் ஒரு மொபைல் பார்ட்டி ஏற்படுத்துவதற்கும், இரண்டு ஜீப்புகள் வாங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, இந்த வனத் துறையில் நியமிக்கப்பட்டு இருக்கும் காவலர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கும் ஏரியா அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்த



சந்தன மரம் இருக்கும் பகுதிகளிலாவது அந்த ஏரியாவைக் குறைத்து, சந்தன மரங்கள் வெளியேற்றப் படுவதைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, சில இடங்களில் புதிதாக பீட் போடுவதற்கும், காவலர்களை அதிகமாகப் போடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோவை மாவட்டத்தில் 12 வனக் காவலர்கள் புதிதாக நியமிக்கப்படவிருக்கிறார்கள். மொத்தத்தில் ஏரியாவில் அதிகமாக இருப்பதால் கவனிக்க முடியவில்லை என்று சொன்னால், எங்கெங்கே தேவைப்படுகிறதோ அங்கேயெல்லாம் சீப் கன்சர்வேடர் ஆப் பாரஸ்ட்ஸ் மூலம் அரசுக்கு சிபார்சு வருகிறது. அதை ஏற்றுக் கொள்கிறோம். மேலும் கேட்டு தெரிவிப்பார்களானால், நாம் அது குறித்து பரிசீலிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இது போன்ற கடத்தலில் ஈடுபட்டு இருப்பவர்களை பிடித்து இருப்பதாகச் சொன்னார்கள். இதிலே யார் யார் ஈடுபட்டு இருக்கிறார்கள், எந்தெந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இதில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, முழு விவரம் என்னிடத்தில் இல்லை. பொதுவாக ஆந்திரா, தமிழ் நாடு, கேரளா போன்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இதிலே பிடிபட்டு இருக்கிறார்கள். இதில் தீவிரமாக ஈடுபட்டு அவர்களைக் கண்டு பிடிப்பதற்காக, சில சட்ட உதவிகள் நமக்குத் தேவைப்படுகின்றன. நமது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஒருவர் எவ்வளவு சந்தன மரம் வைத்து இருக்கலாம் என்று வைத்து இருக்கிறோம். அதற்கு மேல் வைத்திருக்க அரசாங்கத்தின் அனுமதி வேண்டும். நமது நாட்டில் இப்படி சட்டம் இருக்கிறது. ஆனால் கேரளாவில் அப்படி இல்லை. மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்று நாம் அப்படிச் செய்து இருக்கிறோம். ஆகவே, இங்கே அளவுக்கு அதிகமாக வைத்து இருந்தால் அதை நாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்து விடலாம். கேரளாவில் இப்படி ஒரு சட்டம் கொண்டு வந்தால் அங்கே நம்முடைய சந்தன மரக்கட்டைகளை வைத்து இருக்கிறார்கள் என்று தெரிந்தால் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும். நாம் கேரளா அரசாங்கத்தையும் இதுபோன்ற ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். அவர்களும் பரிசீலித்து, முடிவு செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்தச் சட்டம் வந்தால் நமக்குச் சுலபமாக இருக்கும். அரசாங்கம் நல்ல முறையில் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதையும் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த சந்தன மரங்கள் வேலூர் தாலுக்காவில் நிறைய திருட்டுப் போகின்றன. இரண்டு மூன்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. அதிலே ஒரே குற்றவாளி மீண்டும் மீண்டும் சிறைக்கு வெளியே வந்து, திருடி, மீண்டும் உள்ளே சென்று வருவதாகத் தெரிகிறது. ஆகவே, இப்படிப்பட்டவர்களை பிடித்து, கடுமையாகத் தண்டிக்கும் வகையில், இவர்களின் பேரில், 'நான்-பெயிலபிள் கேஸ்' போட்டு, அந்த வகையில் தண்டனை கொடுத்தால், இப்படிப்பட்ட திருட்டுகள் தொடர்ந்து நடைபெறுமல் இருக்க உதவிகரமாக இருக்கும். அந்த வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வந்து, சந்தன மரம் திருடுபவர்களை கடுமையாக தண்டிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ? வேலூர் தாலுக்காவில் ஒரு மொபைல் பார்ட்டி போடுவதற்கும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஐ. பி. சி. சட்டத்தின் கீழே வழக்கு போடப்படுகிறது. அதை நாம் திருத்த இயலாது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த சந்தன மரங்கள் கார்கள், பஸ்கள் மூலமாக திருடுபோகின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டு, அதையெல்லாம் சேகரித்து வைத்து சமீபத்தில் போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் வைத்து இருந்தார்கள். இந்த திருட்டுகள் எப்படி நடக்கின்றன என்பதைப் பரிசீலனை செய்து, அதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்படி சந்தன மரங்கள் கார்கள் மூலம், லாரிகள் மூலம் பல இடங்களில் கடத்தப்படுகின்றன. அந்த வகையில் கண்டுபிடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 9 டன் கைப்பற்றப்பட்டு இருக்கின்றது என்று சொன்னேன். இது பரவலாக செய்யப்படுவதற்கான காரணம், இதன் விலை ஒரு டன் 50,000 ரூபாய் என்று இருக்கிறது. தங்கத்தைப் போல் 'பேன்சி' யாக இருப்பதால், அதைப் பலரும் கடத்தல் செய்ய முற்படுகிறார்கள். அரசு போலீஸ் துறை மூலமாகவும் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அவர்களும் கண்காணித்து வருகிறார்கள். எல்லோரும் ஒத்துழைத்தால் இது போன்ற திருட்டுகளை தடுப்பதற்கு நல்ல முயற்சியாக இருக்கும்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : தலைவரவர்களே, இப்படி களவு போகின்ற இடங்களுக்கு அமைச்சர் அவர்கள் திடீர் விஜயம் செய்து, பரிசோதனை நடத்தி, அந்த மொபைல் பார்ட்டிக்கு தகவல் அனுப்பாமல், அவர்கள் பரிசோதனை செய்தால், உண்மையிலேயே நல்ல பலனை அளிக்கும். அப்படி அமைச்சர் அவர்கள் இது வரையில் செய்து இருக்கிறார்களா? இனியாகிலும் செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, ஜாக்கிரதையாக இருந்து நடவடிக்கை எடுத்த காரணத்தால் தான் 169 வழக்குகளைப் போட்டு இருக்கிறார்கள். அவர்கள் மேலும் நல்ல முறையில் பணியாற்ற வேண்டிய வசதிகள் வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அதாவது, ஆயுதங்கள், ஜீப்புகள், சிப்பந்திகள் வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அதை நல்ல முறையில் ஏற்படுத்திக் கொடுக்க இருக்கிறோம். அதை இன்னும் சற்று அதிகப்படுத்த வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, திம்பம் போன்ற காடுகளில் உள்ள நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் காடுகளில் சந்தனமரங்கள் ஏராளமாக இருக்கின்றன. அதனால் அதைத் தடுக்க முடியாமல் இருக்கிறார்கள். அதைப் பயன்படுத்தி தனியார்கள் அடிக்கடி சந்தனமரங்களை கடத்திக் கொண்டு போக வருகிறார்கள். இது சர்க்கார் பாரஸ்ட், இதிலே தனியார் விவசாயத்தை நீக்கி விட்டால், இப்படிப்பட்ட நிலைமையேற்படாது, ஆகவே, அரசாங்கம் இதற்காக என்ன செய்ய இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தனியான ஒரு பிரச்னை குறித்துச் சொல்கிறார்கள். அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு .—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) நடைமுறைக் கேள்விகள்

### (அ) விவசாய அமைச்சர் கவனத்தை ஈர்க்க கொடுக்கப்பட்ட அறிவிப்பு எடுத்துக்கொள்ளப்படாதது குறித்து

திரு. க. உரொ. எட்மண்ட் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நேற்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் ஆதித்தனார் அவர்களின் கவனத்திற்கு எங்கள் கட்சியின் உறுப்பினர் சௌந்தர பாண்டியன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தது குறித்து ஒரு ஒழுங்குப்பிரச்னை எழுப்பினேன். அந்தத் தீர்மானம் கொடுத்து இரண்டு மாதம் ஆகியும் இன்னும் அறிக்கை

[திரு. க. உரா. எட்மண்ட்]

அளிக்கப்படவில்லை. தாங்கள் அதற்குத் தீர்ப்பு அளிக்கிற நேரத்தில், நாளைய தினம் கடைசி நாளாக இருப்பதால், கூடிய மட்டும் பதில் கொடுக்க வேண்டுமென்று தாங்கள் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு இருக்கிறேன் என்று சொன்னீர்கள். இன்றைய தினம் கடைசி நாள். இன்றைய தினம் அஜெண்டாவில் ரூல் 41-ல் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுவது குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் தலைவர் அவர்கள் கொடுத்த தீர்ப்பை மதிக்கிறார்களா, அல்லது..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த மாதிரி கேட்கக் கூடாது. அந்தத் தீர்மானம் என்ன ஆயிற்று என்று கேளுங்கள்.

(முற்பகல் 10-00)

THIRU G. R. EDMUND : Mr. Speaker, you have already given a requisition to the Hon. Minister for answering the Rule 41 motion given notice by our party Member........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன ஆயிற்று என்று கேளுங்கள், நான் அதற்குப் பதில் சொல்லுகிறேன்.

திரு. க. உரா. எட்மண்ட் : ரூல் 41-ன் கீழான அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் அவைக்குமுன் வைக்கப்படவில்லை; அமைச்சர் அவர்கள் அதிலே பதில் தயாராக இல்லை என்று சொல்வதிலிருந்து அது என்ன ஆகியிருக்கிறது என்று எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. பேரவைத் தலைவர் அவர்களை நாங்கள் கேட்பதெல்லாம்,
at least he should bring an amendment to Rule 41, fixing a limitation within which—within the prescribed number of days—Rule 41 motion replies and also short notice questions should be taken up on the floor of the House.

திரு. இராம அரங்கண்ணல்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நானும் எதிர்கட்சியிலே இருந்தபொழுது இப்படி பல தடவை எழுப்பியிருக்கிறேன். கேட்டதற்கெல்லாம் பதில் அளிக்கப்பட்டதில்லை. எனவே, இதிலே அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கத்தான் வேண்டுமா என்ன?

DR. H. V. HANDE : On a point of order, Sir. Our Rule clearly specifies that once the Speaker allows a call attention notice, then the Minister concerned has to reply. Otherwise, at the earlier stage itself, the Minister should have got it disallowed. After the Speaker has



[டாக்டர் எச். வி. ஹண்டே]

allowed it, what is the difficulty of the Hon. Minister, Mr. Adityan? All other Ministers have been answering similar notices, but why should Mr. Adityan alone be refusing to answer? That is the problem raised by the hon. Member Thiru Edmund, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கும் பொழுது மாண்புமிகு அமைச்சருக்கு தெரிவிக்கப்படுகிறது. அமைச்சரின் அறிக்கை அலுவலகத்திற்கு வந்த பிறகு இந்த அவைக்குக் கொண்டு வந்துவிடுகிறோம். சில நேரங்களிலே எத்தனையோ கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு அறிக்கை தயாராகிக் கொண்டிருக்கும்பொழுது சபை முடியும் நிலைமை ஏற்படுமானால் அது உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டும் வந்திருக்கிறது. அது புதுமை இல்லை. அந்த அறிக்கையை தயாரிக்க கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதிலே கனம் உறுப்பினர் திரு. எட்மண்ட் சொன்னது போல், இதிலே ஒன்றும் காலவரையறை வைக்கப்படவில்லை. ஆகவே, அமைச்சரை நாங்களும் வற்புறுத்திதான் வருகிறோம். எவ்வளவு விரைவிலே கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். சில நேரங்களிலே காலதாமதம் தவிர்க்க இயலாது.

திரு. கே. எ. வகாப் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி அனுமதி மறுக்கப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எழுப்புவது முறை இல்லை.

## (ஆ) சைகோன் நாட்டிலே தெற்கு வியட்நாம் போர் காரணமாக தமிழ் நாட்டு வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ள அவதி குறித்து

திரு. கே. எ. வகாப் : நான்கு ஆயிரம் தமிழர்களின் உயிர் உடைமை என்ன ஆவது? அதிலே நமக்கு அக்கறை இல்லையா? இன்றையத் தினம் சைகோன் நாட்டிலே தெற்கு வியட்நாம் போரிலே சிக்கலிலே மாட்டிக் கொண்டிருக்கின்ற தமிழ் நாட்டிலேயிருந்து போன 3ஆயிரம், 4ஆயிரம் வியாபாரிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா போன்ற நாடுகள் அக்கறை கொண்டு அவர்களை கப்பல் மூலமாகவும், விமானம் மூலமாகவும் வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார்லிமெண்டிலே கேட்கப்பட வேண்டிய கேள்வி அது.

திரு. கே. ஏ. வஹாப்: அதைப் பற்றி அவர்கள் அக்கறை இல்லாமல் இருந்தாலும் தமிழக அரசு அக்கறை எடுத்து, பல்லாயிரக்கணக்கான வியாபாரிகளின் உயிர் உடைமை சம்பந்தப் பட்ட இப்பிரச்சினையில்...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி மறுக்கப்பட்ட பிறகு எழுந்து கொண்டு பேசுவது என்ன முறை? நம்முடைய அவையிலே நடந்துகொள்ள வேண்டிய சில முறைகள் இருக்கின்றன. அதற்கு மாறாக எழுந்து பேசினால் என்ன செய்ய முடியும்? உங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்களை விட்டு பார்லிமெண்டிலே எழுப்பச் சொல்ல வேண்டும். அதை விட்டு விட்டு சட்ட மன்றத்திலே எழுப்பினால் என்ன ஆவது? அனுமதி மறுக்கப்பட்ட ஒன்றைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லுவது முறையா?

## (இ) அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் சொத்து விபரக் கணக்குக் குறித்து

திரு. க. உரொ. எட்மண்ட்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இன்றைய தினம் பேரவையின் முன்னால் இங்கே சில தஸ்தாவேஜுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே சில அமைச்சர்களுடைய சொத்து கணக்குகள் இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே நம்முடைய விவசாய அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தன் கணக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது........ (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே தவறு இருக்குமானால், தவறான தகவல் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி இங்கே உரிமைப் பிரச்சினை கொண்டு வாருங்கள். இதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது.

## (3) உரிமைப் பிரச்சினை "மக்கள் குரல்" நாளேட்டில் தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் வீராசாமியும், தோப்பூர் திருவேங்கடமும் "சென்னை 18-4-1975, வெளியூர் 19-4-1975 தேதியிட்ட "மக்கள் குரல்" நாளேட்டில் "வீராணம் திட்டத்தில் ரூ. 3½ கோடி ஊழல்—சட்ட சபைக் கமிட்டி அம்பலப்படுத்தும் தகவல்" என்ற தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள தகவல், இப்பேரவையில் நேற்று அளிக்கப்பட்ட பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கையில் நாளேட்டில் குறிப்பிட்டுள்ளது போல எந்தத் தகவலும் இல்லை. எனவே;



[பேரவைத் தலைவர்]

இது அவை உரிமையை மீறிய செயலாகும். இதை அவையுரிமைக் குழுவிற்கு அனுப்பி ஆய்ந்து அறிக்கை அளிக்க வேண்டும்" என்று பேரவையின் 184-வது விதியின் கீழ் உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவர் அவர்களே, பொது துறை நிறுவனங்களின் குழு அளித்த அறிக்கையில் 3½ கோடி ரூபாய் ஊழல் என்கிறபடி எங்கேயும் அந்த அறிக்கையில் குறிப்பிட படவில்லை. ஆனால். "மக்கள் குரல்" என்ற பத்திரிகையிலே தான் வீராணம் திட்டத்திலே 3½ கோடி ஊழல்—சட்ட சபைக் கமிட்டி அம்பலப்படுத்தும் தகவல்" என்பது போல் வெளியிட்டு பொது மக்கள் தவறாக கருதிக் கொள்ளுகின்ற வகையிலேயும், இந்த அவையின் உரிமையை மீறுகின்ற வகையிலேயும் வெளியிட்டிருக்கிறது. வேறு எந்தப் பத்திரிகையிலேயும் இப்படிப்பட்ட செய்தி வெளியிடப்படவில்லை. அதுவும் அந்தப் பத்திரிகையிலே வெளியிட்டிருப்பது சட்ட மன்ற தணிக்கைக்குழு அறிக்கை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் தவறு. பொதுத்துறை நிறுவனங்களின் குழு என்று வெளியிட்டிருக்க வேண்டும். இதிலே திருவாளர்கள் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களும், கல்யாணசுந்தரம் அவர்களும் கூறியிருப்பது உண்மை என்று நிரூபிப்பதைப் போலவும், பொது மக்களிடத்திலே இது பற்றி தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்துகின்ற வகையிலேயும் தவறான ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது. இந்தக் குழு அளித்த அறிக்கையின் உண்மையான கருத்துக்களை வெளியிடாத நிலைமையினை உருவாக்கியிருக்கிறது. ஆகவே, இதை கமிட்டி ஆப் பிரிவிலேஜுக்கு அனுப்பி, இது பற்றி ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 184-வது விதியின் கீழ் இந்த அவையின் உரிமையை மீறுகின்ற பிரச்சினைக் குறித்து நானும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். நம்முடைய கமிட்டி ஆப் பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் அறிக்கையில் 12-வது பக்கத்திலே

"The Committee understands that the total amount of advances given to the contractor still pending recovery (as on 31st January 1975) is of the order of Rs.3.57 crores, besides a revolving advance of Rs.17 lakhs." என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஊழல் என்றோ அல்லது அரசாங்கம் தவறு செய்துவிட்டது என்றோ அறிக்கையில் இல்லை. ஆனால் அது குறித்து "மக்கள் குரல்" பத்திரிக்கை வேண்டுமென்றே யாரோ, எங்கேயோ கொடுத்த புகாரை வைத்துக் கொண்டு இந்த அறிக்கையில் இல்லாத வார்த்தைகளை எல்லாம் போட்டு மக்கள் மத்தியிலே ஒரு தவறான எண்ணத்தை உண்டாக்க

[திரு. நா. வீராசாமி]

வேண்டுமென்ற அடிப்படையில் இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது. அதுமட்டுமில்லை, இப்பேர்ப்பட்ட அறிக்கையில் வருவது பற்றி '' மேஸ் பார்லிமென்டரி பிராக்டிஸ் '', 10-வது சேப்டரிலே 141-வது பக்கத்திலே கூட.

"Analogous to the publication of libelsupon either House is the publication of false or perverted or of partial and injurious reports of debates or proceedings of either House or proceedings of Committees of either House and misrepresentation of speeches of particular members.'' என்று மேஸ் பார்லிமென்டரி ப்ராக்டிசிலும் இருக்கிறது. ஆகவே, வேண்டும் என்று மக்கள் மத்தியில் இந்த அரசாங்கத்தின் மீது அறிக்கையில் இல்லாத வார்த்தைகளை பத்திரிகையில் வெளியிடுவதன் மூலம் யாரோ எங்கோ கொடுத்த புகார் மனுவோடு சம்பந்தப்படுத்தி இப்படி சொல்லுவது இந்த அவையின் உரிமை மீறியதாகும். இந்த அவை உரிமை மீறிய பிரச்னையை உரிமைக் குழுவுக்கு விட வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தவறான தகவல் வந்திருக்கிறது என்பதற்காக ஒரு விளக்கம். மக்கள் குரல் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது இந்த அறிக்கையின் அடிப்படையில்தான். அதில் ஒரு பாராவை மாத்திரம் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"The Committee understands that the total amount of advances given to the contractor still pending recovery (as on 31st January 1975) is of the order of Rs. 3.57 crores, besides a revolving advance of Rs. 17 lakhs."

" மக்கள் குரல் '' பத்திரிக்கையில் 3.5 கோடி ரூபாய் அட்வான்ஸ் கொடுத்தது வரவில்லை என்பதற்காக . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரவில்லை என்பது ஊழலா, அது ஊழலா என்று கேட்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அது குற்றச்சாட்டாக . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு வராது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : முறைகேடு என்பது ஒரு குற்றச்சாட்டு. அதை அவர்கள் ஊழலாக கருதலாம். (மணி அடிக்கப்பட்டது) இன்னும் ஒன் ஆர் டு மினிட்ஸில் முடித்துவிடுகிறேன். ஒரு பத்திரிக்கை அதை முறைகேடாக, ஊழலாக கருதுகிறது. பொதுமக்கள் வரிப்பணத்தை தவறான முறையில் விரயம் பண்ணுவதாக கருதி, இன்னொரு பத்திரிக்கை அண்டர்ப்லே



[டாக்டர் எச். வி. ஹாண்டே]

செய்யலாம் கிராஸ் இர்ரெகுலாரிட்டி என்று. ஆகவே, 3.57 கோடி ரூபாயைத்தான் அந்தப் பத்திரிக்கை குறிப்பிடுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இங்கே பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டை படிப்பது பொருத்தமாக இருக்கும்.

"The Committee is not happy to note that the execution of the project which commenced in 1968 is yet to be completed. As the completion of this project is most essential for satisfying the minimum needs of water for the City of Madras, the Committee desires that effective steps should be taken to spead up the excecution of the project etc,..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''நாட் அட் ஆல் ஹாப்பி'' என்றால் ஊழல் என்று அர்த்தம் ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : 3.57 கோடி ரூபாய் கண்ட்ராக்டரிடமிருந்து வாங்கவில்லை. என்ன காரணங்கள் என்பதை அறியக் கூடிய நிலையில் இல்லை என்று நாங்கள் குறிப்பிட்டுச் சொல்லலாம். அதை பத்திரிக்கையில் ஊழல், பொதுமக்கள் பணம் விரயம் என்று கருதிப் போட இடமிருக்கிறது.

இன்னும் சம்மிங் அப் பாராகிராப் ஒன்று இருக்கிறது. இடாலிக்சில் போடப்படும் இந்த சம்மிங் அப் பாராகிராப் அதில் கூட சரியான முறையில் நடைபெறவில்லை. முறைகேடாக இருக்கிறது என்று இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்னையில் இன்னும் ஒன்று. பத்திரிக்கையில் நினைவூட்டி இருக்கிறார்கள். ஏற்கெனவே கலியாணசுந்தரமும் எம். ஜி. ஆரும் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள் என்று வேறு வகையில் நினைவூட்டி இருக்கிறார்கள்.

The paper has reminded the public that already a similar complaint on this particular issue has been raised. The paper has brought it to the attention of the public.

ஆகவே, இந்தப் பிரச்னையில் உரிமைப் பிரச்னை எழாது என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம், ஒபினியன். இதை நிச்சயமாக ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். உரிமைக் கமிட்டிக்கு அனுப்புவதாக இருந்தால் பத்திரிக்கை சுதந்திரம் பாதிக்கும் அளவு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பு இப்படி இருந்தால் இப்படி ஆகும் என்று சொல்ல வேண்டாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நிச்சயமாக அதைச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது. உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று ஒரு உறுப்பினர் சொல்லும்போது இந்த பிரச்னையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

எனக்கு முழு உரிமை இருக்கிறது. எதற்காக அனுப்ப வேண்டாம் என்றால் அதற்கு காரணம் பத்திரிக்கையின் சுதந்திரம் பாதிக்கப் படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, பொதுவாக இந்த உரிமைப் பிரச்னையில் இரண்டு மூன்று விஷயங்கள் இருக்கின்றன என்று கருதுகிறேன். பொதுவாக, தவறாக என்று வரும்போது..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் இந்த உரிமைப் பிரச்னை பொதுக் கணக்குக்குழு தந்த அறிக்கை பற்றியது அல்ல. மன்றத்தில் ஒரு கமிட்டி ஒரு அறிக்கையை கொடுத்ததால் மன்றம் கொடுத்ததுபோலத்தான். இந்த மன்றத்தில் கூறி இருக்கிற குற்றச்சாட்டு ஆளும் கட்சியைச் சேர்ந்தது என்று அந்த எண்ணம் கொள்ளாமல் இந்தக் கமிட்டி கொடுத்த அறிக்கை மீது செய்யப்பட்டு இருக்கிற விமரிசனம் முறையான விமரிசனம் தானா என்று அந்த கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக இந்த சபையில் எல்லா ரிப்போர்ட்டுகளையும் சபையின் நிகழ்ச்சியாகவே பத்திரிக்கையில் வெளியிடலாம். அதே மாதிரி பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டை வெளியிடுகிறார்கள். பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் கமிட்டி என்பதற்கு பதில் அக்கவுண்ட்ஸ் கமிட்டி என்று தவறாக போட்டிருக்கிறார்கள்.

ஆனால் வந்திருக்கிற விஷயத்தை பொறுத்தவரை கருத்தை சொன்னால் சாதாரணமாக அந்த பத்திரிக்கையின் நிலையை வைத்துக் கொண்டு விமர்சனம் செய்யலாம். நியாயமான விமர்சனம் அல்லது இல்லை என்பதை முடிவு செய்ய வேண்டியது உங்களுடைய பொறுப்பு. It is now left to you to decide whether it is a fair comment. பத்திரிக்கையில் முழு விவரத்தையும் அட்வான்ஸ், 3.57 கோடி அட்வான்ஸ் பண்ணி அந்த அட்வான்ஸ் திருப்பிவரவில்லை என்று குற்றச்சாட்டாக சொல்லியிருக்கிறார்கள். இதைக் குற்றச்சாட்டாக சொல்லலாம். அது பேர் (Fair) ஆன குற்றச்சாட்டா என்பதை முடிவு செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு. ஒவ்வொரு பத்திரிக்கைக்கும் செய்திகளை வெளியிடுகிற நேரத்தில் தங்களுடைய கருத்துக்களை சொல்ல உரிமை இருக்கிறது. தப்பான முறையில் இல்லாமல் நியாயமான எண்ணத்தில் இருக்கிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : தலைவரவர்களே, பொதுவாக, இந்த மன்றத்தில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளை பத்திரிக்கையில் வெளியிடுகிற சமயத்தில் அவரவர்கள் நிலையிலிருந்தே அவரவர்கள் வெளியிடுவார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதை போல் வீராணம் திட்டத்திற்கு ஏற்கனவே பணம் கொடுத்து இருக்கிறார்கள், அந்தப் பணம் வரவில்லை என்று பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் கமிட்டி சொன்ன நேரத்தில் அந்தப் பத்திரிக்கை அதை ஒரு இர்ரெகுலாரிடி என்று கருதி ஊழல் என்று தவறாகப்புரிந்து கொண்டு இருக்கலாம். ஆகவே, வேண்டுமென்றே மக்கள் குரல் பத்திரிக்கை இப்படி சொல்லியிருக்கிறார்கள் என்று எடுத்துக் கொள்வதை விட அந்த பத்திரிக்கை ஆசிரியரிடமிருந்து விளக்கத்தை கோரலாம். சரியில்லை என்றால் நீங்களாகவே அவருக்கு வார்னிங் கொடுக்கலாமே தவிர இதற்கு எல்லாம் பிரிவிலெஜ் கமிட்டிக்கு போக ஆரம்பித்தால் எந்த பத்திரிக்கையும் தப்பாது. எல்லா பத்திரிக்கைகள் மீதும் இப்படி போய்க்கொண்டே இருக்க வேண்டிய நிலை தான் வரும். ஆகவே இந்த விஷயத்தில் சபாநாயகராகிய நீங்கள் ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, மக்கள் குரல் பத்திரிக்கையில் வந்திருக்கிற செய்தி வாசகங்களில் இருக்கிற ஆட்சேபனைக்குரிய உரிமை பிரச்னைக்குரிய வார்த்தை ஊழல் என்பதாகும். அதைத்தான் இந்த தீர்மானத்தை கொண்டு வந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதைப் பற்றி குறிப்பிட்ட தலைவர் அவர்களும் இந்த பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் அறிக்கை இந்த மாமன்றத்தின் சின்னம் என்று குறிப்பிட்டு இந்த அவையின் மதிப்பை குறைக்கிற வகையில் செய்தி இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

ஆனால், மக்கள் குரல் செய்தியில் நம் சட்டப் பேரவை பற்றியோ பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் கமிட்டி வைத்த அறிக்கை பற்றியோ குழுத் தலைவர் பற்றியோ எந்த தவறான விமர்சனமும் செய்யப்படவில்லை. இந்த பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி கொடுத்திருக்கிற அறிக்கையிலிருந்து செய்தியை வெளியிடுகிற முறையில் தான் இருக்கிறது. அந்த பத்திரிக்கை கூறியிருக்கிற செய்திக்கு பொருத்தமான முறையில்தான் இந்த அறிக்கையில் இருக்கிற சில வாசகங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றன. 3.57 கோடி ரூபாய், 357 லட்சம் ரூபாய் இன்னும் திருப்பித்தராத அட்வான்சாக இருக்கிறது. கொடுத்ததற்கு வேலை முடியவில்லை. எசன்ஷியல் சர்வீசஸ் என்ற முறையில் அந்த கான்ட்ராக்டரிடம் ஒன்றும் செய்யவில்லை என்று அந்த கமிட்டி குறிப்பிட்டு இருக்கிறது. அட்வான்சை வசூலிக்கவில்லை என்றால் 3½ கோடி ரூபாய்க்கு எவ்வளவு வட்டி வரும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது என்று அதுவரை சொல்லுங்கள்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட கம்பெனியிடத்தில் 3½ கோடி ரூபாயை அட்வான்ஸ் என்று கொடுத்துவிட்டு— அந்த வேலையும் முடியாமல் இருக்கையில் —அந்த அட்வான்சை திரும்ப வாங்காமலும் இருக்கிற போது— அது அந்தக் கம்பெனிக்கு அளிக்கப்பட்டிருக்கிற சலுகையே தவிர வேறு இல்லை. அதை ஊழல் என்று சொல்லுவதில் என்ன குறைந்துவிட்டது என்பதுதான் என்னுடைய வாதம்.

திரு. கு. காமாட்சி : இந்த 3½ கோடி ரூபாயை ஒரே கம்பெனிக்குக் கொடுக்கவில்லை.

திரு. பெ. சீனிவாசன் : கொடுத்த அட்வான்சை திரும்ப வாங்கக்கூட இல்லை என்கிறபோது அதை ஊழல் என்று பத்திரிக்கை குறிப்பிட்டிருப்பதில் தவறு என்ன, அதுவும் தொழிலாளர்களாலேயே கூட்டுறவுத்துறையில் நடத்தப்படுகிற பத்திரிகையின் மீது பாய்வது நல்லது அல்ல.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த மன்றத்தின் உரிமை, இந்த மன்றம் நியமிக்கிற குழுக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று தாங்கள் குறிப்பிட்ட கருத்து பற்றி எந்த விதமான வேற்றுமையும் இருக்க முடியாது.

அதே நேரத்தில் பத்திரிக்கைகளுக்குச் சில உரிமைகள் இருக்கின்றன. ஒவ்வொரு பத்திரிகைக்கும்—விஷயத்தை எழுதுகின்ற போது ஒவ்வொரு பாணி இருக்கிறது. அந்த அந்தப் பாணியில்தான் அவை எழுதும். அவை ஒரு விஷயத்தை விமரிசனம் செய்கிற போது இப்படித்தான் விமர்சனம் செய்ய வேண்டுமென்று நாம் சொல்ல முடியாது. அப்படிச் சொல்ல ஆரம்பித்தால் regimented Journalism என்று ஆகிவிடும். அந்த அந்தப் பத்திரிகைகள் அவரவர்களுக்கு ஏற்ற சொற்களைப் பயன்படுத்துகிறார்கள். இதிலே இங்கே—'ஊழல்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஊழல் என்ற வார்த்தைக்கே சரியான இலக்கணம் வகுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இப்போது பலவற்றிற்கும் ஊழல் என்றே சொல்லப்படுகிறது. பொதுவாக irregularity, indiscretion, malfeasance ஆகிய எல்லாவற்றிற்கும் ஊழல் என்றே சொல்லப்படுகிறது. பத்திரிகைகளும் இவற்றைப் பொதுவாக ஊழல் என்றே சொல்லும்.





இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில் ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அறிக்கைகளைப் பொறுத்த வரையில்—எந்த ஒரு விஷயத்தையும் மன்றத்தில் மன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற பாணியில்—பத்திரிக்கைகளில் எழுதப் படுகின்ற பாணியில் கொடுப்பதில்லை. ரொம்ப யோசித்து— வார்த்தைகளை அளந்துதான்—நிதானமான சொற்களிலே எந்த ஒரு விஷயத்தையும் கொடுப்பது வழக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்தகைய விழிப்புணர்ச்சி— பொறுப்புணர்ச்சி மன்ற உறுப்பினர்களுக்குத்தானா ? பத்திரிகைக்களுக்குத் தேவையில்லையா ?

திரு. ஏ. சுப்பிரமணியம் : குழுவானது விழிப்புணர்ச்சியோடு கொடுக்கிறது. ரொம்ப நிதானமாகத்தான் வார்த்தைகளைக் குழுக்கள் உபயோகப்படுத்தும்.

அதே வார்த்தைகளில்தான் மன்ற உறுப்பினர்கள் பேச வேண்டும் என்றோ, பத்திரிகைகளில் வெளியிடப்பட வேண்டுமென்றோ எதிர்பார்க்க முடியாது.

இங்கே ஒரு பெருந்தொகை 3.57 கோடி ரூபாய் அட்வான்சாகக் கொடுத்தது—திரும்பப் பெறவில்லை. வேலையும் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை. இதனை ஒரு பத்திரிகை ஊழல் என்று சொல்லியிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில் இதில் எந்தவிதமான தவறும் இல்லை—தவறு இருப்பதாக நான் கருதவில்லை.

திரு. செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே, குழுவினுடைய அறிக்கை இந்த அவையினுடைய அறிக்கை—அவைக்குச் சொந்தமானது என்ற கருத்தைத் தாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறீர்கள். மிக பொறுப்போடு, நிதானத்தோடு, அளந்துதான் வார்த்தைகளை இந்தக் குழுவினர் பயன்படுத்தியிருக்கிறார்கள். மிக்க விழிப்புணர்ச்சியோடுதான் அறிக்கையை அமைத்திருக்கிறார்கள் என்பதை மெம்பர்களே எடுத்துச் சொன்னார்கள்.

ஆயினும் சொல்லப்பட வேண்டிய சில கருத்துக்கள் சொல்லப்படவில்லை என்று இதைப்பற்றி நான் கருதலாம். ஆனால் அதைப் பிரச்சினையாக்க எனக்கு உரிமையில்லை.

ஒருவேளை இந்தக் குழுவினுடைய அறிக்கை இந்த மன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டால்—அப்படி ஒரு விவாதம் இந்த அவையில் நடைபெறுமானால் இது போன்ற விஷயங்களை எடுத்துப் பேச அப்போது எனக்கு உரிமையுண்டு. இப்போது ஒரு குழுவினர் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்—இந்தக் குழுவின் அறிக்கை உண்மையைப் பிரதி

பலிக்கிறதாகத்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த அறிக்கை மீது கருத்தை வெளியிட்ட ஏடுகள் செயலுக்கு விமர்சனம் என்ற பெயரை இங்கே சொன்னார்கள். அதை எந்தப் பெயரில் எடுத்துக் கொண்டாலும் சரி........

திரு. பெ. சீனிவாசன் : சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு கந்தப்பன் தம் பேச்சை முடிக்கட்டும்.

திரு. பெ. சீனிவாசன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் எப்போது வேண்டுமானாலும் கேட்கலாம்.

The hon. Member is misleading the House. This is my charge. என்னுடைய நடைமுறைக் கேள்வி பேரவையின் நடவடிக்கைகளுக்குத் தவறாக இருந்தால் சுட்டிக்காட்டலாம்.

இந்தக் கமிட்டியின் அறிக்கையைப் பற்றி விவாதித்தால் நான் சொல்லக்கூடியவை ஏராளமாக இருக்கலாம். அதற்கிடையில் இந்தக் கமிட்டியின் அறிக்கையை உண்மை என்றுதான் எடுத்துக் கொள்ளப்படும் என்றால் அவர் இந்தக் கமிட்டியின் அறிக்கை உண்மை அல்ல என்று எடுத்துக் கொள்கிறார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்மை என்று எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்வதில் தவறு என்ன ?

திரு. பெ. சீனிவாசன் : இந்தக் கமிட்டியின் அறிக்கை உண்மையென்று எடுத்துக் கொள்ளப்படும் என்றால் இது உண்மை, அல்ல என்பது போன்ற ஒரு நோக்கத்தைக் கற்பிக்கிறார்களே, இது சரிதானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்மை என்று எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்வதில் எந்த விதமான தப்பும் இல்லை.

திரு. செ. கந்தப்பன் : இதை உரிமைப் பிரச்சினை அல்ல என்று சொன்னால் மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன் —உரிமைப் பிரச்சினை என்று எதைச் சொல்வது என்று புரியவில்லை. அவ்வளவு தெளிவாக அந்தப் பத்திரிகை இதை 'ஊழல்' என்ற தலைப்பில் குறிப்பிட்டிருக்கிறது.



நண்பர் கிருஷ்ணமூர்த்தி கூட கொஞ்சம் அவசரப்பட்டு இது 'இர்ரெகுலாரிட்டி' யாக இருக்கலாம். இதை ஊழல் என்று குறிப்பிட்டது சரியல்ல என்றார்கள். நான் இதைப் பற்றி தெளிவுபடக் கூறிவிடுவது கடமை என்று கருதுகிறேன்.

நேற்றையதினம் தான் இந்த அறிக்கை இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதில் என்ன வார்த்தை கூறப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமல்—இவ்வளவு முக்கியமான பிரச்சினையில் விமர்சனம் செய்வது கூடாதுதான்.

இந்த அறிக்கையில் எந்த இடத்திலும் அட்வான்ஸ் என்ற சொல்லைத் தவிர வேறு எதையும் குறிப்பிடவில்லை. அதைக் கூட எப்படி குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதைப் படிக்க விரும்புகிறேன். இந்த அறிக்கையின் 12-வது பக்கத்தில் 54-வது பாராவில்

"The Committee is unhappy to note that in spite of the substantial assistance given to the contractor, as detailed below, the progress of work is not satisfactory."

என்று போட்டு, 1, 2, 3, 4 என்ற சில பிரிவுகளில் எந்த வகையில் இந்த அட்வான்ஸ் தரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு

Dr. H. V. HANDE : Who is responsible for that ?

திரு. செ. கந்தப்பன் : அதன் கீழே

"The Committee understands that the total amount of advances given to the contractor still pending recovery (as on 31st January 1975) is of the order of Rs. 3.57 crores, besides a revolving advance of Rs.17 lakhs........."

என்று சொல்லியிருக்கிறார்கள். இதைத் தவிர இந்த அறிக்கையில் அதைப்பற்றி ஏதாவது காமெண்ட் செய்யப்பட்டிருக்கிறதா, விமர்சனம் செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. பரிந்துரை ஏதாவது தரப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தவேண்டும் என்பதைத் தவிர வேறு இல்லை. இந்த அட்வான்ஸ் தவறு என்று எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

கமிட்டி உறுப்பினர்களுக்கே தெரியும். பல விஷயங்களுக்கு 'அன் ஹாப்பி' என்று தான் போடப்படும், பிசி

நான் முன்பே அதற்குத்தான் சொன்னேன். இந்த அறிக்கை விவாதத்திற்கு என்று வந்தால் நான் சில பிரச்சினைகளைப் பேச முடியும். இந்த 3½ கோடி அட்வான்ஸ் தொகையைத் திரும்பப் பெறுவது என்றால் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். அதுபற்றி இந்த அறிக்கையில் விவரம் இல்லை. நான் அதைப்பற்றி இங்கே சொல்வது பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டியதில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கந்தப்பன் தம் பேச்சை முடிக்கட்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : என்னுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்கிறேன். அவர் பேச்சில் இருந்து தான் பாயிண்ட் ஆப் ஆர்டர்.

Sir, the Report of the Public Undertakings Committee is not being discussed now in this House. What is now under discussion is the privilege motion and not the report of the Public Undertakings Committee. The hon. Member is going into the report of the committee and he is starting discussion on the subject-matter......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் விவாதத்திற்குப் போகவில்லை.

(முற்பகல் 10-30.)

THIRU S. KANDAPPAN : I am not commenting on the report. I am only commenting on the remarks made by hon. Members, for which I have every right.

இங்கே பணம் தரப்பட்டது. பணம் எங்கோ போய்விடுகிறது என்றார்கள். அதைப்பற்றி என்னுடைய கருத்தை நான் சொல்கிறேன். அந்த கான்ட்ராக்டரோடு செய்திருக்கிற ஒப்பந்தத்தின்படி அவர்களுக்கு அட்வான்ஸ் கொடுக்கவேண்டும். எனவே, அரசு அதைக் கொடுக்க வேண்டும். அதை ரெக்கவர் செய்வதெப்படியென்றால், அவர்கள் பைப் உற்பத்தி செய்து, போடும்போது இத்தனை பர் சென்ட் என்று வைத்து ரெக்கவர் செய்யவேண்டுமென்றிருக்கிறது. அதற்குள்ளே, அவர்கள் ஓடிவிட்டால் என்ன செய்வதென்றால், அவர்களுடைய சாமான்கள் ஹைபாத்திகேஷன்—அடமானம்—செய்யப்பட்டிருக்கிறது. அதனுடைய மதிப்பு ரூ. 4 கோடிக்கு மேலேயிருக்கிறது. எனவே,



அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்கிறது என்கிற இன்ஃபர்மேஷனை, செய்தியை, இங்கே தெரிவிப்பது என்னுடைய கடமை. நான், இங்கே கேட்டுக் கொள்வதெல்லாம் இப்படி ஒரு பொறுப்பான அறிக்கையின் மீது இவ்வாறு கருத்து தெரிவிப்பது, கண்டிப்பாக பிரிவிலெஜ் மோஷனாக வேண்டும், அதைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருமே சேர்ந்து குரல் கொடுங்களேன். (குறுக்கீடு) நீங்கள் கேட்டால்? உங்களை போலத்தான் ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் பேசும்பொழுது இன்னொரு உறுப்பினர் கத்தினால் என்னவாகும்?

திரு. எம். சுரேந்திரன் : அவர் பிரிவிலெஜ் ரெய்ஸ் பண்ணவில்லை, பாய்ன்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சீனிவாசனும் திரு. சுப்பிரமணியமும் டாக்டர் ஹாண்டே அவர்களும் எப்படி கருத்துக்களை வழங்கினார்களோ அப்படித்தான் இவரும் கருத்துக்களை வழங்கிக்கொண்டிருக்கிறார். சுரேந்திரன், நீங்கள் அப்பொழுது எழுந்து கேட்டிருக்க வேண்டும். டாக்டர் ஹாண்டேயும், திரு. சீனிவாசனும் திரு. சுப்பிரமணியமும் பேசிய போது எழுந்திருக்க வேண்டும். அப்பொழுது எழுந்திருக்காமல், கந்தப்பன் பேசும்பொழுது மட்டும் எழுந்திருப்பானேன், நீங்கள் உட்காருங்களேன்.

திரு. வீராசாமி அவர்களும், திரு. தோப்பூர் திருவேங்கடம் அவர்களும் எழுப்பியுள்ளது ஒரு ஏற்றுக் கொள்ளப்படத்தக்க அவையுரிமை பிரச்னை ஆகும். அவர்கள் குறிப்பிட்டது போல ' மக்கள் குரல் ' நாளேட்டில் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு " வீராணம் திட்டத்தில் ரூ. 3½ கோடி ஊழல். சட்டசபைக் கமிட்டி அம்பலப்படுத்தும் தகவல் " என்பதாகும். சட்டப் பேரவையின் பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பகுதி பின்வருமாறு உள்ளது :—

The Commitee understands that the total amount of advance given to the contractor still pending recovery (as on 31st January 1975) is of the order of Rs. 3.57 crores, besides a revolving advance of Rs. 17 lakhs.

The Committee is not happy to note that the execution of the project which commenced in 1968 is yet to be completed. As the completion of this project is most essential for satisfying the minimum needs of water for the City of Madras, the Committee desires that effective steps should be taken to speed up the excution of this project and to bring it to beneficial use at least before the end of 1975.

கொடுக்கப்பட்ட பணம் இன்னமும் பாக்கி நிற்கிறது என்றும், திட்டம் விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்றும்தான் குழு கூறியிருக்கிறது. ஊழல் நடந்திருப்பதாக எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

எனவே, நாளேட்டில் வந்துள்ள செய்தியானது ஆதாரமற்ற ஒரு தவறான பெரும் குற்றச் சாட்டாகும். இல்லாத ஒன்றை, நடந்ததாகக் கூறுவதும், எழுதுவதும் குற்றமாகும் என்பது தெளிவு. எனவே, இது ஒரு அவையுரிமை மீறிய செயலாகும்.

ஆயினும் பத்திரிகைகள் இம்மாதிரி செய்வது கண்டிக்கத் தக்க ஒன்று என்று கூறி, இனி இம்மாதிரி நிகழ்ச்சிகள் திரித்து வெளியிடப்படுமானால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்து, இதை இத்துடன் முடித்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிற நேரத்திலேயே நீங்கள் தீர்ப்பைக் கொண்டு வந்து படிக்கிறீர்கள். இதைப் பார்க்கிறபொழுது, உரிமைப் பிரச்னை கொண்டு வந்த நேரத்திலேயே தீர்ப்பு தயாரிக்கப்பட்டு விட்டதுபோல் தெரிகிறது

மாண்புமிகு போவைத் தலைவர்: இந்தத் தீர்ப்பு என்னுடைய அறையிலேயே தயார் செய்யப்பட்டதுதான். (குறுக்கீடு) என்னுடைய அறையிலேயே தயார் செய்யப்பட்டதுதான். (திரு. ஆலடி அருணா குறுக்கீடு கூச்சல் குழப்பம்).

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர், சார். பேரவைத் தலைவரவர்களே, . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் கேட்பது, பலமுறை நீங்களே கூட இந்தப் பேரவையிலே துணைத் தலைவராக இருந்த நேரத்திலே, பல தீர்ப்புக்களை எழுதிக் கொண்டு வந்து படித்திருக்கிறீர்களா, இல்லையா ? படிக்கக் கூடாதா ? அல்லது படித்தால், தீர்ப்புக் கொடுத்தால் '' ஏற்கனவே நீங்கள் முடிவு செய்து விட்டீர்கள். அவர்கள் செய்த முடிவை நீங்கள் சொன்னீர்கள் '' என்ற முறையிலே நீங்கள் விவாதிப்பதும் முறைதானா ? (கூச்சல்-குழப்பம்).

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நான் இந்தச் சட்டமன்றத்தினுடைய துணைத் தலைவராக இருந்து, நான் கூட சில தீர்ப்புகளை வழங்கியிருப்பேன் என்று இப்பொழுது இந்தப் பிரச்னைகளைக் கிளப்பினார்கள். இரண்டு ஆண்டுக் காலம் இந்த அவையினுடைய துணைத் தலைவராக இருந்தபோது உரிமைப் பிரச்னைகள் மீது நான் தீர்ப்பளித்ததாக நினைவில்லை. அப்படி தீர்ப்பளித்திருந்தாலும், மறுநாள் அல்லது இரண்டு நாள் கழித்துத்தான் நான் தீர்ப்பு அளித்திருப்பேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையிலே எந்த நேரத்திலும் அப்படிப்பட்ட உரிமைப்பிரச்னை வந்தபொழுது, அந்த நேரத்திலேயே தீர்ப்பு அளிக்கப்பட்ட வழக்கமே இல்லையா ?

திரு. க. உரொ. எட்மண்ட் : இப்படி பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. பல உரிமை மீறல் பிரச்னைகளை மன்றத்திலே கொண்டு வந்து, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அதற்குப் பிறகு பேரவைத் தலைவர் அன்றே தீர்ப்பளித்திருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது எங்கள் கட்சியைச் சேர்ந்த அரங்கநாயகம் அவர்கள் ஒரு முக்கியமான ஒழுங்குப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்னை எதன் மீது ?

திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்னை எதன்மீது என்று கேட்கிறீர்கள். அப்படியென்றால், அரங்கநாயகம் அவர்களுடைய ஒழுங்குப் பிரச்னையை நீங்கள் இங்கே அனுமதித்திருக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் எழுப்பிய பிறகு தானே அதைச் சொல்லமுடியும்.

THIRU G. R. EDMUND. Sir, let me tell ......

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Is the hon. Member on apoint of orde ......

THIRU G. R. EDMUND : Yes, let me give an answer.

நீங்கள் விளக்கம் கேட்டீர்கள். அதற்குப் பதில் சொல்கிறேன். என்னைப் பார்த்துக் கேட்ட காரணத்தால் நான் பதில் சொல்கிறேன். உரிமைப் பிரச்னை மீது—சம்பவம் நடந்ததன் மீது—சபாநாயகர் அவர்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள். இப்பொழுது தீர்ப்பு அறையிலே தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. அதிலே ஆட்சேபனையில்லை. ஆனால், இங்கே ஒரு தீர்ப்பை, எழுதியதை வாசித்தீர்கள். அதை அவையிலே தயாரித்திருந்தால் சரி—இங்கே அதைச் சொன்னால் நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்களுடைய தீர்ப்பினுடைய முதல் வரியில் நம்முடைய மன்றத்திலே கந்தப்பன் அவர்களையும் வீராசாமி அவர்களையும் குறிப்பிட்டீர்கள். வீராசாமி அவர்கள், கந்தப்பன் அவர்கள் பேசியதிலிருந்து . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கந்தப்பன் இல்லை, தோப்பூர் திருவேங்கடம் . . . . . . (குறுக்கீடு) தோப்பூர் திருவேங்கடம் அவர்களும் வீராசாமி அவர்களும் . . . . . .

திரு. க. உரொ. எட்மண்ட் : வீராசாமி அவர்கள் இங்கே தானே பேசினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். தோப்பூர் திருவேங்கடம் அவர்களும் வீராசாமி அவர்களும் நோட்டீஸ கொடுத்திருக்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே ; இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்பதற்குத்தான் நான் சொல்கிறேன். பெரிய பிரச்சினையாக நினைக்கவில்லை. உறுப்பினர்களை அழைத்தீர்கள். உங்கள் தீர்ப்பை குவஸ்டியன் பண்ண யாருக்கும் உரிமை கிடையாது. அதிலே திட்டவட்டமாக இருக்கிறேன். ஆனால், நீங்கள் நமக்குப் பேச வாய்ப்பளித்தீர்கள். ஆகவே, எங்களுடைய கருத்துக்களைச் சொன்னோம். நீங்கள் தீர்ப்பைச் சொல்கிற நேரத்திலே, ஹாண்டே சொன்ன பிறகு, சுப்பிரமணியம் சொன்ன பிறகு, வீராசாமி சொன்ன பிறகு, கந்தப்பன் சொன்ன பிறகு என்று சொல்லியிருந்தால், அது சரியாக இருந்திருக்கும். நீங்கள் ஏற்கனவே தயார் செய்த மாதிரியாக, அங்கே தயார் செய்து இங்கே வந்து படிக்கிற மாதிரியாக ஒரு நிலைமையை உருவாக்கக் கூடாது என்பதற்காகத்தான் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்பிலே சொல்லியிருக்கிறேன். இந்த மன்றத்திலே உறுப்பினர்கள் கருத்து சொல்கிற நேரத்திலே, நம்முடைய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பெரிது பண்ணக் கூடாது என்று சொன்னார்கள். கந்தப்பன் அவர்கள் அவ்வளவு லேஸிலே விட்டுவிடக் கூடாது என்று சொன்னார்கள். ஆகவே, அதை ஏற்றுக் கொண்டேன் என்று நினைக்கிறீர்களா ? கந்தப்பன் சொல்லியதை வைத்துத்தான் நான் ஏற்றுக் கொண்டேன் என்று நினைக்கிறீர்களா ?

பேரவைத் தலைவருக்கு ஒருமுடிவெடுக்க உரிமையிருக்கிறது. அவருக்கும் அதைப் பொறுத்த அனுபவம் இருக்கிறது. அதையொட்டி அவர் முடிவெடுத்திருக்கிறார். அந்த முடிவை ஆராய்வதற்கு, நாம் எடுத்த முடிவு சரிதானா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள அவையிலே உறுப்பினர்களது கருத்துக்களைக் கேட்டிருக்கலாம். அவ்வகையில் பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது, தீர்ப்பளித்தால், தீர்ப்புக்கு மோடிவேஷன், உள் நோக்கம், கற்பிப்பது என்பதே முறையல்ல.





## (4) முன்னாள் பேரவைத் தலைவர், முன்னாள் துணைப் பேரவைத் தலைவர் ஆகியோரைப் பற்றி விமர்சனம் செய்யலாமா என்று எழுப்பப்பட்ட பிரச்சினையின் மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 10–4–1975 அன்று மாநில சட்டமன்ற மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. சீனிவாசன் அவர்கள்,

"பேரவைத் தலைவருக்கு எந்த விதமான உரிமையும் இல்லை ; முழுக்க முழுக்க லீடர் ஆப் தி அவுஸ் அவர்கள் செய்கிற முடிவு தான். அவருடைய முடிவுக்கு உட்பட்டுத்தான் பேரவையில் அலுவல்கள் நடைபெற வேண்டிய நிலைமை இருக்கிறது" என்றும்,

" முதல் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதை அன்றைக்கு அங்கேயிருந்த சீனிவாசன் செய்தேன். அன்றைக்கு நீங்கள் சொன்ன கடமையைச் செய்தேன் ",

என்றும் கூறியதையொட்டி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்

" திரு. எட்மண்ட் அவர்கள் துணைத் தலைவராக இருந்தபோது தொலைபேசியில் ஒரு வருடத்திற்கு ரூ. 2,000 ஆகியிருக்கிறது. திரு. மதியழகன் அவர்கள் பேரவைத் தலைவராக இருந்தபோது ரூ. 12,000 ஆகியிருக்கிறது. ஆனால், திரு. சீனிவாசனுக்கு மட்டும் ரூ. 75 ஆயிரத்திலிருந்து ரூ. 80 ஆயிரம் ஆகியிருக்கிறது. இதைக் கேட்டோம் உங்களுக்குக் கோபம் வந்து போய்விட்டீர்கள் "

என்று கூறினார்கள்.

"இதையொட்டி, 16–4–1975 அன்று திரு. சீனிவாசன் அவர்கள் கீழ்க்கண்டவாறு ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியுள்ளார்கள்:—

" திரு. பெ. சீனிவாசன் : எ வேலிட் பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இன்று நான் எழுப்ப விரும்பும் பாயின்ட் ஆப் ஆர்டர், சட்ட மன்ற விதிமுறைப்படி, நம்முடைய சம்பிரதாயங்களின்படி, சட்டப்பேரவைத் தலைவர் அல்லது துணைத் தலைவரைப்பற்றி அவர் பேரில் பதவி நீக்கத் தீர்மானம் வந்தாலொழிய அவரைப் பற்றியோ அல்லது அவருடைய நடவடிக்கையைப் பற்றியோ விமர்சனம் செய்யக்கூடாது என்ற முறையைப் பின்பற்றி வருகிறோம். இந்த முறை இப்போது பதவியில் இருக்கும் பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்கு மட்டுமா, அல்லது முன்னாலே பதவியில் இருந்தவர்களுக்கும் பொருந்துமா ?

இதற்கு முன்னாலே பதவியில் இருந்த தலைவர், துணைத் தலைவர் அவர்களுடைய பொறுப்புகள் பற்றியோ, நடவடிக்கைகள் பற்றியோ, அல்லது அவருடைய அலுவலக நிகழ்ச்சிகள் பற்றியோ,

இங்கே இந்தப் பேரவையில் ஒரு குற்றச் சாட்டாகவோ அல்லது வேறு வகையிலோ இந்தப் பேரவையில் விவாதிக்கலாமா அல்லது விவாதத்திற்கு ஆதாரமாக எடுத்துவைக்கலாமா என்ற ஒழுங்குப் பிரச்னையை இங்கே எழுப்ப விரும்புகிறேன்.''

எழுப்பப்பட்ட இந்தப் பிரச்னை பொதுவானதாக உள்ளது.

பேரவைத் தலைவர் பேரவைத் தலைவர் இருக்கையில் இருக்கும் போது அவருக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. தம்மைப் பற்றிப் பேசுவதற்கு விடையளிக்க முடியாத நிலையிலே அங்கு ஒருவரை இருத்திவிட்டு, அவரைப்பற்றி பேசுவது முறையாகாது. ஆகவே, பேரவைத் தலைவர், பேரவைத் தலைவர் இருக்கையில் இருக்கும் போது அவரைப் பற்றிப் பேசுவது முறையாகாது. அதனால்தான் பேரவைத்தலைவரைப் பற்றி பேசவே கூடாது என்று வரையறுத்துக் கூறிவிடாது பதவி விலகல் தீர்மானம் கொடுத்தாலல்லாது பேசக் கூடாது என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் உணர வேண்டுவது, பிறர் தம்மைப்பற்றி பேசுவதற்கு விடையளிக்க வாய்ப்பு அளித்துவிட்டு பேசலாம் என்பதே.

பேரவைத் துணைத் தலைவருக்கு அவையில் பேசும் உரிமை இருப்பதால் பதவி விலகல் தீர்மானம் கொடுத்தாலல்லாது பேசக் கூடாது எனப் பேரவைத் தலைவருக்கு அளித்திருக்கும் பாதுகாப்பு பேரவைத் துணைத் தலைவருக்கு அளிக்கப்படவில்லை.

முன்னாள் பேரவைத் தலைவருக்கும், முன்னாள் பேரவைத் துணைத் தலைவருக்கும் விடையளிக்க முடியாத ஒரு கட்டுப்பாடு இல்லை. அவர்கள் எப்போது வேண்டுமாயினும், எங்கு வேண்டுமாயினும் விடையளிக்க உரிமை பெற்றவர். ஆகவே, அவர்களைப் பற்றிப் பேசவே கூடாது என்பது, உறுப்பினர் உரிமையைப் பறிப்பதாகும்.

## (5) அரசினர் தீர்மானம் விதி 41-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற விதியைத் தளர்த்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



## (2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (ஈ) மக்கள் குரல் ஆசிரியர், அரகண்டநல்லூர் அப்துல் சலாம் ஆகியோர் மீதான வழக்கு பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. பெ. சௌந்தர பாண்டியன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். சட்டப் பேரவை விதி 191 (எ) (பி) ஆகிய இரண்டு விதிகளின்கீழ் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்புகிறேன். 191 (எ) என்ன சொல்கிறது என்றால் . . . . . .

The report of the Committee of Privileges shall be presented to the Assembly by the Chairman of the Committee or by any member of the Committee so authorised.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் முடிந்து போய் விட்டது.

திரு. பெ. சௌந்தர பாண்டியன் : நான் பாயிண்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணுகிறேன். கேளுங்கள். சட்டப் பேரவை விதி எண் 191 (பி) என்ன சொல்கிறது என்றால் . . . . . . . . .

As soon as may be, after the report has been presented, a motion in the name of the Chairman of the Committee or any member of the Committee may be made that the report be taken into consideration. என்று இருக்கிறது. எங்களுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் கோவை செழியன் அவர்கள் மக்கள் குரல் பத்திரிகை ஆசிரியர் மீதும், அரகண்ட நல்லூரைச் சேர்ந்த அப்துல் சலாம் என்பவர் வக்கீல் நோட்டீசு கொடுத்தது பற்றி ஓர் உரிமைப் பிரச்னை கொண்டுவந்தபோது அதைத் தாங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தீர்கள். உரிமைக் குழு தன்னுடைய அறிக்கையை இந்தப் பேரவையில் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையை [illegible] விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் [illegible] கொடுத்திருக்கிறேன். சட்டமன்ற கூட்டத்தொடர் [illegible] முடிவுகிறது. நம்முடைய விதிமுறைகளின்படி [illegible]

இதுவரை அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதைப்பற்றி எந்தவிதமான அறிவிப்பும் எனக்கு வரவில்லை. நம்முடைய விதிமுறைகளை எந்த அளவிற்குப் பின்பற்றுகிறோம் என்பதற்கும் நடைமுறை விதிகள் பின்பற்றப்படுவதற்கு என்ன உத்திரவாதம் தாங்கள் அளிக்கிறீர்கள் என்பதற்கும் தங்களிடமிருந்து தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன என்ன பேரவையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்கிறது. இந்த அறிக்கை வந்திருக்கிறது. அதைப்பற்றி விவாதிக்க நேரம் ஒதுக்க வேண்டுமென்று அங்கே சொல்லியிருக்க வேண்டும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த ரிப்போர்ட்டைப்பற்றி அங்கே எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடிவு எடுக்கவில்லையென்று தான் நானும் சொல்கிறேன். அந்தக் குழுவிலே கலந்துகொள்கின்ற கட்சித் தலைவர்கள் அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருந்தால். . . . . .

திரு. க. உரொ. எட்மண்ட் : இங்கே என்ன என்ன கன்ஸிடரேஷனுக்கு வரவேண்டுமென்று சொல்லியிருந்தால் அங்கே கேட்டிருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவர்களுக்கே தெரியுமே.

திரு. பெ. சீனிவாசன் : சார், உங்களுடைய தீர்ப்பை நான் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். தீர்ப்பைப்பற்றி விவாதிக்கக்கூடாது. ஆனால் இந்தத் தீர்ப்பின் மூலம் என்னுடைய சந்தேகம் தீரவில்லை என்று நான் சொல்வது எந்த வகையிலும் தங்களுடைய மரியாதையைக் குறைக்கும் என்று நான் கருதவில்லை. நான் பதவியை விட்டு போனேன். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவரைப் பற்றி பேசக்கூடாது. முன்னாள் பேரவைத் தலைவரைப்பற்றி, துணைத்தலைவரைப்பற்றி பேசலாம் என்று தீர்ப்பளித்து இருக்கிறேன். ரிமூவல் மோஷன் கொடுத்தாலன்றி இப்போது இருக்கிற பேரவைத் தலைவரைப்பற்றிப் பேசக்கூடாது. முன்னாள் பேரவைத் தலைவரைப்பற்றி, துணைத்தலைவரைப்பற்றிப் பேசலாம்.





திரு. பெ. சீனிவாசன். நான் பேசியதின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பு இல்லை. நான் பேரவைத் தலைவராக, துணைத் தலைவராக இரண்டும் கெட்டானாக இருந்தேன் அந்த நேரத்திலே. துணைத் தலைவர் பொறுப்பிலே இருந்துகொண்டு தலைவராக பணியாற்றினேன். நான் பணியாற்றிய முறையைப்பற்றி என்னுடைய உரிமையை மீறி ஏதோ அவர்கள் வீட்டிலிருந்து பணத்தைக் கொடுத்தது போல் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்புக் கொடுத்து விட்டேன். நீங்கள் கேட்டது பேசலாமா பேசக் கூடாதா என்பது, பேசலாம் என்று தீர்ப்பளித்திருக்கிறேன்.

அடுத்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. சோ. அழகர்சாமி, திரு. தங்கமணி, திரு. செ. அரங்கநாயகம், டாக்டர் ஹாண்டே ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள். திரு. சோ. அழகர்சாமி. . . . . . . . . . . . . . . . . . . .

THIRU P. SEENIVASAN: I am very sorry, Sir. I stage a walk out.

(The hon. Member then walked out of the House.)

## 6. கவன ஈர்ப்பு.

(அ) புதுமுக தேர்விற்கான பௌதிகம் கணிதம், வினாத்தாள்களின் தலைப்புகள் சரியாக இல்லாததால் ஏற்பட்ட குழப்பமும், மாணவரிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலையும் குறித்து.

THIRU S. ALAGARSWAMY : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, 'confusion in the examination on 27th March 1975 in P.U.C. due to dubious heading in question papers on Physics and Mathematics and consequent unrest among the students'.

DR. H. V. HANDE : Sir, Mr. Aranganayakam and myself, wish to call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance namely, 'confusion in the examination on 27th March 1975 in P.U.C. due to dubious headings in question papers on Physics and Mathematics and consequent unrest among the students'.

[1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, புகுமுக வகுப்புகளுக்கான தேர்வுகள் நடத்துவது பல்கலைக் கழகத்தின் பொறுப்பாகும். பல்கலைக் கழக கல்வி சம்பந்தமான பொருள்களில் அரசு தலையிடுவதில்லை.

இக்கேள்வித்தாள்கள் சம்பந்தமான குழப்பம் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் கல்லூரிகளில் மட்டுமே ஏற்பட்டுள்ளது. மதுரைப் பல்கலைக் கழக எல்லைக்குள் இயங்கும் கல்லூரிகளில் இந்தக் குழப்பம் ஏற்படவில்லை என்று பதிவாளர் தெரிவித்துள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளரிடமிருந்து கிடைத்துள்ள அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு:—

(i) " புகுமுகத் தேர்வு கேள்வித்தாள்கள்—பௌதிகம் ".

பௌதிகத்தில் புகுமுகத் தேர்வுக்காக இரண்டு விதமான கேள்வித்தாள்கள் தயாரிக்கப்பட்டன. ஒன்று 1974-75-லிருந்து அமுலாக்கப்பட்ட புது பாடத்திட்டத்திற்கேற்பவும் (New Syllabus) மற்றொன்று 1971-72-லிருந்து அமுலிலிருந்து வருகின்ற திருத்திய பாடத்திட்டத்திற்கேற்பவும் (Revised Syllabus) தயாரிக்கப்பட்டதாகும். எந்தத் தொகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் எந்தக் கேள்வித் தாளுக்கு விடையளிக்கவேண்டுமென்ற விவரம் கேள்வித்தாள்களில் விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேர்வு நிலையங்களில் கேள்வித்தாள்களை வழங்கும்போது குழப்பம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, பல ஆண்டுகளாக பின்பற்றி வரும் முறைப்படி மேலே கூறப்பட்ட இரண்டு வினாத்தாள்களையும் இணைத்து ஒரே சிற்றேடாக்கி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. சென்னை விவேகானந்தா கல்லூரியில் சில மாணவர்கள் கேள்வித்தாள்களை தவறாகப் புரிந்து கொண்டு தங்களுக்கில்லாத கேள்வித்தாள்களுக்கும் விடையளித்தார்கள் என்ற விவரம் சென்னை பல்கலைக் கழகத்திற்கு கிடைத்தது. ஏனைய கல்லூரிகளில் இது போன்ற குழப்பம் ஏற்படவில்லை. மாணவர்கள் தவறான கேள்வித் தாளுக்கு விடையளித்திருந்த போதிலும் அவர்களது விடைத்தாள்களை ஏற்றுக் கொண்டு அதற்குரிய மதிப்பெண்கள் வழங்கப்படுமென்று பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது.

(ii) " புகுமுகத் தேர்வு கேள்வித்தாள்கள்—கணிதம் ".

இருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி எல்லா மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான கேள்வித்தாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளதால் மாணவர்களிடையே எந்தவிதமான குழப்பமும் ஏற்படவில்லை. இது குறித்து பல்கலைக் கழகத்திற்கு எவ்வித தகவலும் வரவில்லை.



1975 ஏப்ரல் 19]

DR. H. V. HANDE: The whole problem arose because two question papers were bundled together and in the first part of the question paper they wrote 'for old regulation students—new syllabus' and in the second part they wrote 'for new students—revised syllabus'. So, actually new syllabus was written for old students and revised syllabus for new students. So, the new students thought that they have to write the new syllabus. If the question papers had been separated clearly and then presented, it would have been all right. When the boys started writing, certain Principals told them 'you write anyting, it will be O.K.' Certain students had the advantage because the Principals told them 'you answer any question paper'. Whichever was the easier question paper they answered and which ever was difficult, they left out. Because they probably know earlier that the rule will be amended by the Vice-Chancellor or the Government and that answering any question paper will satisfy the Government. So, as a result of the confusion boys who stuck to the rule are unfortunately in a difficult situation. Therefore, the whole thing led to a lot of confusion. How did this confusion arise? How did these question papers got bundled as one question paper and why this 'new syllabus for old students and revised syllabus for new students'? This is the thing that actually brought the whole confusior.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இரண்டையும் தனித்தனியாகக் கொடுத்தால்தான் இந்தத் தகராறு ஏற்படும் என்று பல்கலைக் கழகம் கருதுகிறது. முடிவைப் பல்கலைக் கழகம்தான் எடுக்க வேண்டும். இரண்டையும் சேர்த்துத் தருகிறார்கள். அந்த முறை இப்பொழுது மட்டும் நடைபெறுவதில்லை, பல்லாண்டு காலமாகவே அப்படி நடைபெறுகிறது. விவேகானந்தா கல்லூரி, இப்படி ஓரிரு கல்லூரிகளில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்திருக்கிறதே தவிர மற்றபடி எங்கும் இப்படி ஏற்படவில்லை. மற்றவர்கள் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். மற்றப் பாடங்களில் எழுதியிருக்கிறார்கள். தொடர்ந்து எழுதியிருக்கிறார்கள். சென்ற ஆண்டும் இதேமுறைதான் கையாளப்பட்டது. அப்பொழுது குழப்பம் ஏற்படவில்லை. நான்கூடக் கேட்டேன் தனித் தனியாகக் கொடுத்தால் என்ன என்று. அதிலேதான் குழப்பம் அதிகமாக ஏற்படும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. இன்னும் கொஞ்ச நாட்களுக்கு ரிவைஸ்ட் சிலபஸ் இருக்கும். திருப்பித் திருப்பித் தேர்வு எழுதுபவர்களுக்கு அது வரும். அதன் பிறகு நியூ சிலபஸே இருக்கும்.

ஆகவே இப்பொழுது இரண்டையும் சேர்த்துத் தருகிறார்கள். தலைப்பிலேயே போட்டிருக்கிறார்கள். ஜெயின் கல்லூரி பிரின்சிபால், விவேகானந்தா கல்லூரி பிரின்சிபால்கூட கேள்வித்தாளில் தவறில்லை, தெளிவாகப் போட்டிருக்கிறார்கள்,

ஆனால் மாணவர்களிடம் இத்தகைய குழப்பம் ஏற்பட்டு விட்டது என்று தெரிவித்தார்கள். உடனே இது பல்கலைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மாணவர்கள் பாதிக்கப்படாத அளவிற்கு எந்தக் கேள்வித் தாளுக்கு விடை எழுதியிருந்தாலும் மதிப்பெண்களினால் ஏற்படும் கஷ்டம் நிவர்த்திக்கப்படும் என்று சிண்டிகேட் அவையே முடிவெடுத் திருக்கிறது. ஆகவே, கஷ்டம் எதுவுமில்லாமல் இந்த மாண வர்களைப் பொறுத்த வரையில் பார்த்துக் கொள்ளப்படும் என்ற நிலைமை இருக்கிறது. வேறு எந்தக் கல்லூரியிலும் இப்படிப் பட்ட நிலைமை ஏற்படவில்லை என்று பல்கலைக் கழகப் பதிவாளர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஓல்ட் ஸ்டூடண்ட்ஸ்க்கு ஓல்ட் சிலபஸ், நியூ ஸ்டுடண்ட்ஸ்க்கு நியூ சிலபஸ் என்று இல்லாமல் ரிவைஸ்ட் சிலபஸ், நியூ சிலபஸ் என்று இரண்டும் வந்ததால் குழப்பம் ஏற்பட்டது. At least in the next year these words can be clarified. Old syllabus for old students and new syllabus for new students

என்று போட்டால் இந்தக் குழப்பம் இருக்காது, அதைச் செய்ய முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர வர்களே, இதைப் பல்கலைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். ரிவைஸ்ட் சிலபஸ் என்பது செப்டம்பர், மார்ச் என்று எழுதுபவர்களுக்கு வரும். பிறகு நியூ சிலபஸ் வரும். பல்கலைக் கழகம் இனி இத்தகைய குழப்பங்கள் ஏற் படாத வகையில் செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறோம். பிறகு இதேமாதிரி 3 தேர்வுகள் நடந்தன. அதிலே தெளிவு படுத்தியிருக்கிறார்கள்.

## (ஆ) சென்னை மையப்பல்கலை நுட்பப் பயிலகத்திலுள்ள தோட்டக் கலைப் பிரிவு மாணவர்களின் உண்ணாவிரதமும், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியமும் குறித்து.

DR. H. V. HANDE : Sir, I call the attention of the Hon. Ministcr for Education and Tourism to a matter of urgent public importance, namely, "The serious situation pervailing in the Central Polytechnic Institute, Adyar, Madras, as a result of the hunger strike by the Horticultural course students and the need to take necessary action.'

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவ ரவர்களே, சென்னையிலுள்ள மையப் பல்தொழில் நுட்பப் பயிலகத் தில் கீழ்க்கண்ட தோட்டக்கலை படிப்புகளை 1971-72ஆம் ஆண்டு முதல் துவக்க ஆணையிடப்பட்டது.



1. தோட்டக்காரர்களுக்கு சான்றிதழ் படிப்பு—6 மாதம்.

2. தலைமை தோட்டக்காரர்களுக்கு சான்றிதழ் படிப்பு—1 ஆண்டு.

3. தோட்ட மேற்பார்வையாளர்களுக்கு டிப்ளொமா படிப்பு—2 ஆண்டுகள்.

வரிசை எண் 2 மற்றும் 3-ல் குறிப்பிடப்பட்ட படிப் புகள் மட்டும்தான் 1971-72-ல் துவக்கப்பட்டன. 1974-75ஆம் ஆண்டு முதல் தோட்ட மேற்பார்வையாளருக்குரிய ஓராண்டு சான்றிதழ் படிப்புக்கு மட்டும் மாணவர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இதுவரை சான்றிதழ் படிப்பில் (Certificate Course for Gardners) 59 மாணவர்களும், டிப்ளொமா படிப்பில் (Diploma Course for Garden Supervisors) 9 மாணவர்களும் படித்து வெளிவந்துள்ளனர். தற்போது டிப்ளொமா படிப்பில் 3 மாணவர்களும், சான்றிதழ் படிப்பில் 20 மாணவர்களும் பயிலுகிறார்கள்.

தற்போது தோட்டக்கலை படிப்பு பயிலும் மாணவர்கள் கீழ்க்கண்ட கோரிக்கைகளுக்காக மார்ச் திங்கள் 27-ம் நாளில் உண்ணாவிரதம் துவக்கியுள்ளனர்:

1. பதவி உருவாக்கல்.

2. அரசுத் துறையிலுள்ள அணைக்கட்டுகள், அலுவலக பூங்காக்கள், சுற்றுலா விடுதிகள், கல்லூரிகள் முதலிய இடங் களில் தோட்டக்கலைப் பயிற்சி பெற்ற மாணவர்களை வேலையில் அமர்த்துதல்.

3. பயிற்சி முடித்துச் சென்ற/செல்லும் மாணவர்களை உட னடியாக வேலையில் அமர்த்துதல்.

மாணவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வந் ததால் தோட்டக்கலைப் பள்ளியை மூடும்படி நேரிட்டது. இப் பொழுது மாணவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தி விட்டனர். இதுவரை தோட்டக்கலை பள்ளியில் கற்று வெளிவந்த மாண வர்களிடமிருந்து வேலை வாய்ப்பு வேண்டுமென்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை. தோட்டக்கலை படிப்பிலுள்ள பயிற்சி முறையையும், தோட்டக்கலை பள்ளியில் நடைமுறை யையும் ஆராய தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் ஒரு குழு அமைத்துள்ளார். பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் பயின்று வெளிவரும் மாணவர்களுக்கு அரசுத் துறைகளில் வேலை அளிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. வெளி

வரும் மாணவர்கள் அத்தனைபேருக்கும் வேலை அளிக்கப்படும் என்ற உறுதியை அளிக்க இயலாது என்பதை இப்பேரவை நன்கு உணரும். என்றாலும் வாய்ப்பை ஏற்படுத்துவதில் அரசு கருத்துக் கொண்டிருக்கிறது.

Dr. H. V. HANDE : From the answer furnished by the Hon. Minister, it is not clear as to the number of courses available for the students per year and the number of students turned out of the institution per year. If the gap between the number of students turned out and the number of courses available can be bridged or narrowed, the students will have some satisfaction. May I know whether any steps have been taken to find out or to assess the number of courses available and the number of students turned out and find out how much the gap can be reduced. I would like to have the details from the Hon. Minister.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தத் தோட்டக்கலை வகுப்பு இதுவரையில் இல்லாமலிருந்தது. இப்பொழுதுதான் துவங்கி 3 ஆண்டுகாலமாக இருக்கிறது. இதுவரை வெளிவந்தவர்களில் சர்ட்டிபிகேட் கோர்ஸ் படித்து 59 மாணவர்களும், டிப்ளொமா கோர்ஸ் படித்து 9 மாணவர்களும் வெளிவந்திருக்கிறார்கள். இந்த ஆண்டில் 3 பேர் டிப்ளொமா படிப்பிலும், 20 மாணவர்கள் சான்றிதழ் படிப்பிலும் படிக்கிறார்கள். மற்ற துறைகளிலே உள்ளவர்களைப்போல் 100, 200 என்று ஆகி விடவில்லை. எனவே இவர்களுக்கு வேலை இருக்கிறது. ஆனால் அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், படித்து முடித்தவுடனேயே வேலைக்கு கியாரண்டி வேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படிப்பட்ட கியாரண்டி கொடுக்க முடியாது. ஆனால் வேலை வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுதே 8 பேர், சென்ற ஆண்டு வெளிவந்தவர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அணைக்கட்டு, பூங்காக்கள் ஏற்படும்பொழுது முறையாகப் படித்தவர்களை வைத்துக் கொள்வதால் வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் மற்றத் துறைகளில் பாலிடெக்னிக் படிப்பவர்களுக்கு இல்லாத அளவில் இவர்களுக்குப் பயிலும் பொழுதே உதவியும் தருகிறோம். வேறு எந்தத் துறையிலும் இல்லாத அளவிற்கு இவர்களுக்கு 50 ரூபாய் ஸ்டைபண்ட் தருகிறோம்.

அண்ணா சதுக்கம், மெரினா பீச் போன்ற இடங்களில் காண்ட்ராக்ட்டுக்குக் கொடுக்கும் பொழுது இந்தத் தோட்டக்கலைப் பள்ளிக்குத் தர வேண்டுமென்று பி. டபிள்யூ. டி.-யிடம் கேட்டிருக்கிறோம். பயிலும்பொழுது வேறு எந்த பாலிடெக்னிக் மாணவர்களும் 'ஏர்ன்' பண்ணுவதில்லை, ஆனால் இவர்களுக்கு வருமானம் வருகிறது. ஆனால் அவர்கள் கேட்பது இப்பொழுதே ஜி. ஓ. போட்டுத் தாருங்கள், வேலை கொடுப்போம் என்று போட்டுத் தாருங்கள் என்று கேட்கிறார்கள். அது இயலாது என்று சொல்லிவிட்டோம்.



(இ) நவீன படுத்தப்பட்ட பெரியார்-வைகை வாய்க்காலிலிருந்து கிடைக்கும் உபரித் தண்ணீரை உசிலம்பட்டி, திருமங்கலம் வட்டங்களிலுள்ள விவசாயிகளின் உரிமைகளை புறக்கணித்து வேறு இடங்களுக்கு திருப்பிவிட சிலர் எடுக்கும் முயற்சி குறித்து.

Thiru K. KANDASWAMY : Sir, under rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. Minister for Works to a matter of urgent public importance, namely,

"The attempt of a group of persons to divert surplus water as available due to modernisation of Periyar-Vaigai channels to Ramanathapuram area ignoring the lawful and moral rights of ryots of Usilampatty and Thirumangalam Taluks."

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை]

[முற்பகல் 11-00].

The Hon. Thiru P. U. SHANMUGAM : Sir, The Periyar Improvements Scheme sanctioned in G.O. Ms. No. 50, Public Works Department, dated 7th January 1974 envisages an ayacut of 31,000 acres including stabilisation of Mamool Kodai and Hard cases covering 8,000 acres and new ayacut of 23,000 acres.

Areas which are not eligible for irrigation supply for the second crop that usually falls in Kodai (summer season) but which have been getting the benefit of supply by longdrawn practice (Mamool), are termed as 'Mamool Kodai' lands. These areas in many cases lie interspaced in the ayacut which has been recognised for supply of water for second crop.

'Hard-cases' areas are patches of lands not included in the registered ayacut but now getting irrigated. These lie within the registered single crop ayacut and though were earlier out of command, they have now become commandable after reclamation.

After the sanction of the scheme of "Improvements to Periyar System", with the objective of localising the ayacut in greater detail, and taking into account the slight increase in the scope of the project that has become possible by a rational analysis of the water requirements

of the new ayacut, and the ayacut proposed to be benefited, the following allocation of ayacut bas been found possible:

| | | |
|---|---|---|
| *I. Madurai District—* | | |
| 1. Periyakulam .. .. .. | 980 | acres. |
| 2. Nilakottai .. .. .. .. | 8,544 | " |
| 3. Usilampatti .. .. .. | 1,158 | " |
| 4. Thirumangalam .. .. .. | 1,168 | " |
| 5. Melur .. .. .. .. | 15,652 | " |
| 6. Madurai .. .. .. .. | 10,535 | " |
| *II. Ramanathapuram District—* | | |
| 1. Tirupattur .. .. .. .. | 7,745 | acres. |
| 2. Sivaganga .. .. .. .. | 575 | " |
| Total .. | 46,357 or about 46,000 | acres. |

THIRU K. KANDASWAMY : Sir, I feel highly disappointed and very sorry to hear the statement of the Hon. Minister......

MR. DEPUTY SPEAKER : The hon. Member is entitled to ask a question and not to express his sorrow....

THIRU K. KANDASWAMY : In the form of expressing my feelings, I have to raise my question. I want to raise a legal point and I want a categorical answer from the Hon. Minister. This is not a new proposal to feed the Usilampatti and Thirumangalam area. Formerly, the Thirumangalam taluk consisted of the present Usilampatti taluk where the Piramalaikallars who were suppressed under the Criminal Tribes Act during the British regime are to be fed. Only with the object of feeding these people and giving them permanent occupation by way of reclaiming the lands and providing perrennial water-supply to these people, the Government thought it fit to have the Vaigai Dam constructed. Therefore, I want a relevant answer from the Hon. Minister for the following point :

The proposal to take a canal into Thirumangalam Taluk from the right side of the Vaigai above Peranai regulator was under the consideration in the year 1928 itself......

MR. DEPUTY SPEAKER : Is it a question?

THIRU K. KANDASWAMY : This is the point on which I want a clear clarification from the Hon. Minister.



It has been tentatively taken that the reservoir of 4,000 M.C.FT. capacity can supply water for 20,000 acres of new wet irrigation. As already mentioned, irrigation is to be in *Thirumangalam Taluk only*, i.e., from mile 7/6 of the main canal downwards. The area proposed for irrigation is bounded on the west by the main canal and on the east by the Valley running roughly from Vikkiramangalam Village to Tirumangalam. These are the areas to be covered......

MR. DEPUTY SPEAKER : You are entitled to ask question and you are not entitled to make a speech. Please ask the question....

THIRU K. KANDASWAMY : I quite agree with the observation of the Hon. Deputy Speaker. But this is a very vital issue touching the life of the people and I want to bring this to the notice of the Hon. Minister.

It has been suggested (*Vide* Chief Engineer's Inspection Notes of April 1940) that the irrigation under the Thirumangalam Canal can be for raising dry crops as in the Thungabadra Project. The extent of the ayacut can then be about 3 times the corresponding wet ayacut, i.e., 45,000 acres can be cultivated......

MR. DEPUTY SPEAKER : The hon. Member is making a long speech. Is he going to ask a question ? Please answer......

THIRU K. KANDASWAMY : I come to the point.

This will help Kallar uplift better as the benefit can be extended to a greater number of villages. Sir, the fundamental object of constructing the Vaigai Dam is to feed my people and dispossessing them of the water due to them is not 'Dharma' or 'Justice'. We have got the legal right and that is why I want to raise this point......

MR. DEPUTY SPEAKER: I am sorry, but I want to know whether the Hon. Minister is now making a speech or the Hon. Member is making a statement under rule 41. Please confine yourself to the question. Otherwise, you can raise an one-hour discussion on the matter. Please restrict yourself to the question.

THIRU K. KANDASWAMY : Three times I gave notices which were rejected and only three days ago it was taken up. Being the last day of the Assembly meeting, I have got no other opportunity to bring this matter to the notice of the Hon. Minister. So I may be permitted to read a few lines.

[Thiru K. Kandaswamy]



Inspection notes by Sri Rao Bahadur A. R. Venkata Acharya, Chief Engineer for Irrigation, Madras, dated 29th October 1946 runs as follows :—

MR. DEPUTY SPEAKER : No, No. Now the Hon. Member Thiru Duraiswami will call the attention of the Hon. Minister......

THIRU K. KANDASWAMY : Sir, I want to........

MR. DEPUTY SPEAKER : You do not ask the question. What am I to do?

THIRU K. KANDASWAMY : The points I have mentioned will form the question.

The new Thirumangalam channel will be nearly twenty-one miles long and will carry 300 cusecs for the irrigation of 15,000 acres, but to enable a new branch channel being taken out at 7/6 of the canal at a later date, suitable provision for widening the channel to carry 500 cusecs will be made.

Then in 1947 the then Collector of Madurai has said :

'In connection with the Vaigai Reservoir Scheme, the S.E. has reported that Thirumangalam Taluk is a Kallar area and that the scheme will solve Kallar problem. This will go to a large extent to benefit the backward Kallar community of the area and rehabilitate them to normal life......'

திரு. ஏ. சுப்பிரமணியம் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இன்று கடைசி நாள். ஐந்து மசோதாக்கள் இருக்கின்றன. ஆகையால் நேரம் மிகப் பொன்னானதாக இருக்கிறது. மாண்பு மிகு உறுப்பினர் அவர்களுடைய பிரச்சினையின் பேரில் எனக்கு அனுதாபம் இருக்கிறது. இதிலே இரண்டு விஷயங்கள் இருக் கின்றன. ஒன்று 41-வது விதியின் கீழ் நோட்டீஸ் கொடுத்தவர் விளக்கத்திற்குப் பிறகு ஒன்றிரண்டு கேள்வி கேட்கலாம் என்று இருக்கிறதே தவிர, தாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டது போல் அதன் பேரில் ஒரு பேச்சைப் பேசக் கூடாது. அது விதிமுறைக்கு ஏற்றதா என்பது ஒன்று. இன்று ஐந்து மசோ தாக்கள் நிறைவேற வேண்டியிருக்கிறது. ஆகவே, இனிமேலும் இப்படி நீடிக்க விடுவது எப்படி முறையானது? கேள்வி இருந்தால் அவர்கள் உடனடியாகக் கேட்க வேண்டும். இல்லை யென்றால் விட்டுவிட வேண்டும்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : அவர் பேசுகிறார் என்று சொல்லி இவர் ஒரு பிரசங்கத்தைச் செய்து கொண்டிருக் கிறார். இதையும் அனுமதிக்கிறீர்களா?





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் கந்தசாமி அவர்கள் ஒத்துழைத்தால் மற்ற உறுப்பினர்கள் எழுவதற்கே வாய்ப்பில்லை

திரு. ஏ. சுப்பிரமணியம் : தோழமைக் கட்சி என்ற காரணத்தால் முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் அவருக்குப் பரிந்து கொண்டு வருகிறாரா?

திரு. கே. கந்தசாமி : இது ஒரு பெரிய பிரச்னையாக இருப்பதால் கூறுகிறேன். நான் ஆதாரத்தோடுதான் கூறு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். இல்லாவிட்டால் நான் அடுத்த சப்ஜக்ட்டுக்கு போய்விடுவேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உறுப்பினர் அவர் கள் எதிலிருந்து படிக்கிறார்கள் என்பதற்கான அந்த ஆதாரம் என் கையில் இல்லை. அதை அவர்கள் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தால் அதைப் பற்றி பரிசீலிக்கலாம். அவர்கள் தொகுதியில் அதிக ஏக்கர் பாசனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் அவர்களது மூல எண்ணம் என்று நினைக்கிறேன். இராமநாதபுரத்திலிருந்து அதிகம் கொண்டு போய் விட்டார்கள் என்று சொல்வது சரியாக இருக்க முடி யாது. 46,000 ஏக்கர் பற்றி விளக்கம் சொன்னேன். 38,000 மதுரை ஜில்லா, 8,000 தான் இராமநாதபுரம் ஜில்லாவிற்கு வரக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்று புள்ளி விவரம் இருக்கிறது. ஆகவே, கடத்திக் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்வது சரியல்ல, உசிலம்பட்டி, திருமங்கலத்திற்கு ஏற்கனவே போட்டது. 1,158 ஏக்கர் உசிலம்பட்டிக்கும், திருமங்கலத் திற்கு 168 ஏக்கர் சேர்க்கவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் எதிலிருந்து படித்தாலும் அதற்கு பதில் சொல்ல என்னிடம் அந்த ஆதாரம் இல்லை, ஆகவே அதைப்பற்றிச் சொல்லி பிரயோஜனம் இல்லை.

திரு. கே. கந்தசாமி : நான் படிப்பது அமைச்சர் அவர் களின் மேலான கவனத்திற்கு புத்தக ரூபத்தில் எடுத்துக் கொடுத்திருக்கிறேன். அதிலிருந்துதான் நான் படிக்கிறேன். ஆதாரம் காட்டுகிறேன். 31-3-74 அன்று அதிலிருந்துதான் மதுரையில் நடந்த கருத்தரங்கில் அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கும், சீப் என்ஜினீயர் அவர்கள் உட் பட..................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைகளைப் பற்றியெல்லாம் சொல்வது சரியல்ல. The Hon. Minister has given an assurance that he will look into your grievance. பேப்பர்களை கேட்கிறார்கள், கொடுத்துவிடுங்கள்.

(ஈ) திருப்பூர் சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் மில்லுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதும் தொழிலாளர் வேலை பாதிக்கப்பட்டதும் குறித்து.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, திருப்பூர் சோமசுந்தரம் டெகஸடைல்ஸ் மில்லுக்கு 20-11-74-ம் தேதி முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, அதில் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலை பாதிக்கப்பட்டுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, 1910ஆம் ஆண்டு இந்திய மின்சாரச் சட்டத்தின் 28-வது பிரிவின்படி உரிமைதாரர் அன்றி வேறு எவரும் மாநில அரசின் முன் அனுமதி இன்றியும் மாநில அரசு இது குறித்து முடிவு செய்கின்ற நிபந்தனைகளையொட்டியும் அன்றி மற்றப்படி பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்குவதில் ஈடுபடக் கூடாது. இதற்கு மாறாக, செய்து கொள்ளும் எந்த ஒப்பந்தமும் செல்திறனற்றதாகும். விதி முறைகளையொட்டியன்றி மற்றப்படி ஒதுக்கப்பட்ட மின் இணைப்புக்களையும், மின் ஏற்பாட்டின் மேற்பார்வை பொறியாளர் கருத்துப்படி மின்சாரத்துறையின் நலனுக்குப் பாதகமான முறையில் பயன்படுத்தி இருந்தால் அந்த மின்சாரத்தையும் துண்டித்துவிட மின்வாரியத்திற்கு உரிமை உண்டு.

கோயம்புத்தூர் மின்சார உதவி ஆய்வாளர், திருப்பூர் திருவாளர்கள் சாத்தப்பா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தை 1956 ஆம் ஆண்டு இந்திய மின்சார விதிகளைச் சேர்ந்த 46-விதியின் கீழ், 20-9-74 அன்று பார்வையிட்டபோது, உயர் அழுத்த மின் சக்தியைப் பயன்படுத்தும் மேற்சொன்ன நிறுவனம், திருவாளர்கள் சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் என்னும் மற்றொரு நிறுவனத்திற்கு அனுமதியின்றி மின்சக்தி வழங்கியதாக கண்டுபிடிக்கப்பட்டது. உடனே இது குறித்து மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மேற்சொன்ன ஏற்பாட்டிற்கு அரசிடமிருந்து அனுமதி எதுவும் பெறப்பட்டதா என்று தெரிவிக்குமாறு உயர் அழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் திருவாளர்கள் சாத்தப்பா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனமும் திருவாளர்கள்



சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனமும் கேட்கப்பட்டனர். இதற்கு அவர்கள் இதுவரை பதில் அளிக்கவில்லை. இதற்கிடையில் மேற்சொன்ன ஏற்பாடு இந்திய மின்சாரச் சட்டத்திற்கும், மின்வாரிய நிபந்தனைகளுக்கும், வரையறைகளுக்கும் மீறியதாக இருப்பதால் மேற்சொன்ன அனுமதியற்ற மின்சக்தி இணைப்பை நிறுத்திவிடுமாறு திருவாளர்கள் சாத்தப்பா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு எடுத்துக் கூறப்பட்டது. அவ்வாறே திருவாளர்கள் சாத்தப்பா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம், சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு 20-11-74 லிருந்து மின்சக்தி வழங்குவதை நிறுத்திவிட்டது.

எனினும், தனிப்பட்ட மின் இணைப்பிற்கு கோயம்புத்தூர் பைகாரா மின்சக்தி ஏற்பாடு மேற்பார்வைப் பொறியாளருக்கு, விண்ணப்பிக்குமாறு திருப்பூர் திருவாளர்கள் சோமசுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : இதில் இருக்கிற இரண்டு முதலாளிகளுக்கும் இடையே உள்ள தகராறு காரணமாக ஆறு மாத காலமாக அந்த மில் மூடப்பட்டு அதில் பணியாற்றுகிற தொழிலாளர்களின் வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதை மனதில் கொண்டு விரைவாக அவர்களுக்கு மின்சாரம் கொடுத்தால்தான் அங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். ஆகவே அதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இரண்டு முதலாளிகளும் சேர்ந்து மின்சாரத் துறையை ஏமாற்றி வந்திருக்கிறார்கள் என்பது இந்த விவரத்தில் இருந்து தெரிகிறது. முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு நிறுவனம் இன்னொரு நிறுவனத்திற்குக் கொடுக்க வேண்டாம் என்கிறார்கள். முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது கஷ்டம் இருந்தால் அவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விண்ணப்பித்தால் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(7) அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள்.

THIRU THOPPUR THIRUVENGADAM : Sir, I rise to present the reports of the Committee on Estimates on the Jail Department, Co-operative Sugar Mills and Compensation and assignment to local bodies and Panchayat Raj institutions.

[Thiru Thoppur Thiruvengadam]

As the reports are under print, the copies will be sent to the members later.

Thank you.

MR. DEPUTY SPEAKER : Now we shall take up Government Bills.

(5) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.
(ஆ) அலுவல் வரிசையில் மாற்றம்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN : Sir, I move —

" Under Rule 21 (3) of the Assembly Rules, item (5) under Government Bills be taken up before item (1)"

The motion was put and carried.

திரு. ஏ. சுப்பிரமணியம் : சட்ட மன்றக் குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் பெயர்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. இன்று கடைசி நாள். அது அறிவிக்கப்பட இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது அறிவிக்கப்பட இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வந்து அறிவிப்பார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : நேற்று அஜெண்டாவில் இந்தப் பில்கள் சேர்க்கப்படவில்லை. நேற்று ராத்திரிதான் இந்த ஸிட்டி போலீஸ் ஆக்ட், இது இரண்டும் கிடைத்திருக்கிறது. நேற்று ராத்திரி கொடுத்தால் எப்படி அவற்றைப் படித்துவிட்டு பேசுவது? ஐந்து பில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பில்லையும் ஒவ்வொரு நாளாவது டிஸ்கஸ் செய்ய வேண்டும். பில்களுக்கு கொடுக்கும் மதிப்பை ரொம்பவும் குறைத்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்

இவை சட்டம் ஆக இருக்கின்றன. ஒவ்வொரு பில்-க்கும் டிஸ்கஸ் செய்ய ஒவ்வொரு நாள் வேண்டும். கடைசி ஐட்டத்தை முதலில் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மெம்பர்கள் பேசவேண்டும் என்று நினைக்கிறீர்களா அல்லது மெம்பர்கள் பேசாமலேயே இவைகளை நிறைவேற்றிவிட வேண்டும் என்று நினைக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : நேற்று மூவ் செய்த பில்கள் நேற்று நைட்தான் சர்குலேட் செய்ய முடியும். முதலில் உள்ள பில்லை தள்ளித்தான் எடுத்துக் கொள்ளப் போகிறோம். எனவே உறுப்பினர் அவர்களுக்கு படிக்க போதிய அவகாசம் இருக்கிறது.



(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/75).

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என நான் முன்மொழிகிறேன்.

இந்தத் திருத்த சட்ட முன்வடிவு மூலச் சட்டமான தமிழ்நாடு 1958-ம் ஆண்டு உணவகங்கள் சட்டத்தை விரிவாக்கவும், இன்னும் உணவகங்களிலே பணிபுரியும் ஊழியர்களுக்கு பல நல்ல சலுகைகள் கிடைக்கவும் வழிவகை காணுகிறது. மூலச் சட்டத்தின்படி சிற்றுண்டி சாலைகள், தங்க வசதியுடன் கூடிய ஹோட்டல்கள்தான் சட்ட வரையறைக்குள் வருகின்றன. தற்போது கொண்டுவரப் பட்டிருக்கின்ற திருத்தத்தின்படி எந்த உணவகங்களும், ஹோட்டலும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களினால் நடத்தப்படுகிற அல்லது அச்சங்கங்களின் அதிகாரவரம்பிற்குட்பட்ட அத்தனை உணவகங்களும் மூலச் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதுவரை கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வரும் பல உணவகங்கள் மூலச் சட்டத்தின் கீழ் தற்போது வர இருக்கின்றன.

இன்னும் உணவு விடுதிகளை பதிவு செய்ய இருக்கும் விதிமுறைகள் திருத்தி அமைக்கப்பட்டு உணவகங்கள் பதிவு செய்யாமல் நடத்தப்படுவது குற்றம் என தெளிவாக திருத்தச் சட்டம் வகை செய்கிறது. இன்னும் தொழிலாளர்களின் வேலை நேரங்கள், அவர்களுக்கு சீருடை வழங்குதல், அவர்களுக்கு விடுமுறை வழங்குதல், உணவகங்களிலே பணியாளர்களின் வேலை நேரங்களைக் குறிக்கும் அறிவிப்புகளை விளம்பரம் செய்தல் ஆகியவற்றிற்கான விதிமுறைகள் செய்தல் பற்றியும் திருத்த மசோதா வழிவகை காணுகிறது. இன்னும் ஐ.எல்.ஓ.-ன் பரிந்துரையின்படி உணவகங்களிலே பணிபுரிவோரின் குறைந்த வயது வரம்பை 14-லிருந்து 16 ஆண்டுகளாக உயர்த்தவும் இந்தச் சட்ட முன்வடிவு வகை செய்கிறது. ஆகவே, உணவகங்களிலே பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யும் நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப் பட்ட இந்த மசோதாவை இந்தப் பேரவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

*3-4-1975-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே ..........

திரு. என். கே. பழனிசாமி : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். என்னுடைய திருத்தம்...............

MR. DEPUTY SPEAKER : The hon. Member has not given me any general amendment. I have now called Thiru A. Subramaniam.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த மசோதாவைபொதுவாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும் ஒரு சில விஷயங்களை இது குறித்து சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக இந்த மசோதாவிலே டெபனிஷன் இருக்கிறது. செக்ஷன் 3-ல் 'காட்டரிங் எஸ்டாபிளிஷ்மென்ட்' என்பதற்கு 'ரெஸ்டாரன்ட், ஓட்டல்' எல்லாம் சொல்லி, Attached to or run or managed by any society registered under any any law for the time being in force

என்று போடப்பட்டிருக்கிறது. இப்படி வரும்போது பல்வேறு வகையிலான உணவகங்கள் இருக்கின்றன. இம்மாதிரி ரெஸ்டாரன்ட், கான்டீன் மட்டுமல்ல, சில கிளப்கள், எந்தச் சட்டத்திலும் பதிவு செய்து கொள்ளாத நிறுவனங்கள் இவைகள் எல்லாம் கூட உணவகங்கள் வைத்திருக்கின்றன. அங்கும் ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் எல்லாம் இந்தச் சட்ட வரம்புக்குள் வரவேண்டும். இப்போது இதிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். அது சரியானது அல்ல. ஆகவே, any society registered under any law

என்பது வேண்டாம். ரெஜிஸ்டர் செய்திருந்தாலும், செய்யாமல் இருந்தாலும் எந்த அமைப்பாக இருந்தாலும் இந்தச் சட்ட வரம்புக்குள் வந்துவிட வேண்டும்.

பல்வேறு உணவகங்கள் இருக்கின்றன. எங்கள் கட்சியைச் சேர்ந்த கே.எம்.எஸ். அவர்கள் இதுகுறித்து சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். 'ஐஸ்கிரீம் பார்லர், மில்க் பார்லர், டீ ஷாப் எல்லாம் இருக்கின்றன. அங்கு பல ஊழியர்கள் இருக்கிறார்கள். 4 அல்லது 5 தொழிலாளர்கள் அங்கு வேலை செய்கிறார்கள். அவர்களையும் இந்தச் சட்டத்தின் வரம்புக்குள் கொண்டு வர வேண்டும். அதற்கேற்றவாறு திருத்தத்தை அமைச்சரவர்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வேஜை பொறுத்தவரையில் பிரிவு 13-ஏ-யில் தெரிவித்திருக்கிறார்கள்.



Wages means basic wages, dearness allowance, the cash equivalent of the meals and tiffin supplied to employees, etc., என்று

சொல்லியிருக்கிறார்கள்.

'டெயிலி பாட்டா' கொடுக்கிறார்கள். அநேகமாக இது எல்லா ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. அது உண்மையிலேயே பாட்டா அல்ல ; ஊதியத்தின் ஒரு பகுதி என்று சொல்லக் கூடிய முறையில்தான் இருக்கிறது. டெயிலி பாட்டாவையும் சேர்த்துத்தான் ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது. அதுவும் இந்த வேஜ் டெபனிஷனில் வந்துவிட வேண்டும்.

இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த 1958-ம் ஆண்டுச் சட்டம் பிரிவு 19 (2) (எ)-யில் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டால் அப்பீல் செய்ய உரிமை இருக்கிறது. அப்பலேட் அதாரிட்டி தீர்ப்பு வழங்குகிறார். வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு வழங்குகிறார். அந்த தீர்ப்பை அமுல்படுத்தும்படி செய்வதற்கு அமைப்பு ஒன்றும் இல்லை. இது ஒரு பெரும் குறை. ஷாப்ஸ் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்டில் கூட இந்த குறை இருக்கிறது. அப்பலேட் அதாரிட்டி வழங்கும் தீர்ப்பை அமுல்படுத்தும் முறை இல்லாமல் தொழிலாளர்கள் திண்டாடுகிறார்கள். அதற்கும் ஒரு வகை காணவேண்டும். இந்த அரசு விரைவிலேயே அப்பலேட் அதாரிட்டி வழங்குகின்ற தீர்ப்பை அமுல்படுத்த ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டும். அதற்கு இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டுவர வேண்டும். ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்டில் கூட இந்தத் திருத்தம் தேவை. அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஓட்டல் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று 3, 4 வருஷமாக தொழிலாளர் சங்கமி ட்டியில் விவாதித்து, அந்த மாதிரி ஒரு பாதுகாப்புச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று முடிவு செய்து, அதன் பிறகு இன் றைக்கு இந்த மாதிரியான ஒரு 'பீஸ்மீல்' திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதனால் எந்தவிதமான பிரயோஜனமும் கிடையாது.

ஏற்கெனவே பத்தாயிரக் கணக்கில் ஓட்டல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இது ஒரு பெரிய தொழில். ஜனங்களுக்கு அவசியம் உணவளிக்க வேண்டும். அந்த முறையிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வேண்டும். எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் அவர்களுக்கு செக்யூரிட்டி

கிடையாது; பிராவிடன்ட் பண்டு கிடையாது; கிராச்சுட்டி கிடையாது; இண்டஸ்ட்ரீஸ் தொழிலர்ளர்களுக்கு இருப்பது போன்ற பாதுகாப்பு இவர்களுக்கு இல்லை.

ஓட்டல் நடத்துகிறவர்களுக்கு இண்டஸ்டிரீஸ் தொழிலுக்கு போல் அவ்வளவு மூலதனம் தேவையில்லை. கொஞ்சம் மூலதனம் இருந்தால் போதும். கொஞ்சம் முதலீடு செய்து ஏராளமாக கொள்ளையடிக்கக்கூடிய தொழில் இது. ஓட்டல்களில் பில்ஸ் கொடுக்கிறார்கள். சாயங்காலம் அதை அடுப்பில் போட்டு எரித்து விடுகிறார்கள். இதனால் சர்க்காரை ஏமாற்றுகிறார்கள். சர்க்கார் இதற்காக போட்டிருக்கும் அதிகாரிகள் மிகக் குறைவு. அவர்களையும் ஏமாற்றிவிடுகிறார்கள்.

ஓட்டல்கள் நீட்டாக இருக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. போதுமான ஓய்வு அறைகள் இருக்க வேண்டுமென்று சட்டத்தில் சொல்லியிருக்கிறது. ஆனால் எப்படி இருக்கிறது.? ஓட்டலுக்குள் போனால் யாரும் சாப்பிட முடியாத நிலைதான் இருக்கிறது. அவர்கள் வேலை செய்யக்கூடிய இடத்தில் யாரும் போக முடியாது. இதை எல்லாம் திருத்தக்கூடிய சட்டம் ஒன்றும் இல்லை.

இந்தத் தொழிலுக்கு கொஞ்சம் முதலீடு போட்டால் போதும் என்பதால் ஒவ்வொருவரும் 20, 30 ஓட்டல்கள் கூட வைத்திருக்கிறார்கள். அங்கே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு நிரந்தரமான செக்யூரிட்டி கிடையாது. 6 மாதம் வேலை செய்தால் நிரந்தரமாக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆனால் அவர்கள் 6 மாதம் தொடர்ந்து வைத்துக்கொள்வதில்லை. 6 மாதம் முடிவதற்கு 2, 3 நாட்களுக்கு முன்னால் வேலையிலிருந்து நிறுத்திவிட்டு, அதற்குப் பிறகு ஒரு 10 நாள் கழித்து மீண்டும் வேலைக்கு வைத்துக்கொள்வார்கள்.

ஓட்டல் 40, 50 வருஷம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் கூட அங்கே வேலை செய்யும் தொழிலாளி சாகும்வரை டெம்பரரி தான். 'ட்ரேடு யூனியன்' எல்லோருக்கும் இருக்கிறது. அந்த முறையில் சம்பளம் வேண்டுமென்று கேட்டால் உடனே ஓட்டலை மூடிவிடுகிறார்கள். கொஞ்ச நாள் கழித்து திறக்கிறார்கள். ஓட்டல் பெயர் மட்டும் வேறாக இருக்கும். அதே ஆள் அதே இடத்தில் பெயர் பலகையை மட்டும் மாற்றி வைத்துவிடுவார். இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது.



ஆகவே, இந்தத் திருத்தம் கொண்டு வந்தால் மட்டும் போதாது; தொழிலாளர்களுக்கு செக்யூரிட்டி ஆப் ஜாப் வேண்டும். அதற்கு அவர்களுக்கு முதலில் கார்டு கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்கும்போது சர்வர், மாவு ஆட்டுகிறவர், பால் கொண்டுவந்து கொடுக்கிறவர் போன்றவர்களுக்கு தனித்தனியாக கார்டு கொடுக்க வேண்டும். கார்டு கொடுத்து, பதிவு செய்து கொள்ள வேண்டும். அந்த கார்டில் அவர்களுடைய போட்டோவும் இருக்க வேண்டும். இந்த மாதிரியான முறை இருந்தால் தான் செக்யூரிட்டி ஆப் ஜாப் கிடைக்கும்.

இதை எல்லாம் கவனித்து ஒரு 'காம்பிரிஹென்சிவ்' சட்டமாகக் கொண்டு வராமல் 'பீஸ்மீல்' திருத்தமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு ஒரு சட்டம் தேவையா? இதைக் கொண்டுவருவதால் என்ன பிரயோஜனம்? ஆகவே, இதை மாற்றி, வேறு ஒரு நல்ல மசோதாவாக கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, unfortunately when this Bill was brought forward here, I was not present. I thought it would be taken up later. But the Hon. Leader of the House moved a motion that this Bill be taken up first and so it has come.

I had given an amendment that it be referred to a select Committee. Since I was not present when the Bill was taken up, I could not move it now. I should have done it earlier. What I say is, this Bill has been brought in, in a haphazard manner as was pointed out ably by Thiru N. K. Palanisamy. If we examine this Bill, we will realise that there are nearly 15 clauses in it.

(முற்பகல் 11-30)

A Bill which contains so many clauses is generally referred to a Select Committee. There are a number of lacunae; that is possible also. Therefore, it is better that the Hon. Minister without taking into consideration that the suggestion has come from an opposition member but only taking into account the spirit with which it is brought, agrees to refer this to a Select Committee. I was not here and I could not move my amendment. I am not sorry for it. Let it be moved *suo motu* by the Hon. Minister; especially in the light of what we have suggested here, the Bill can be enlarged and not only catering establishments and canteens but even clubs could be brought within the purview of the Bill.

Recently, we saw the controversy in the Cosmopolitan Club where the employees had to face difficulties. There are a number of things which could be clubbed together. Therefore, it is better that a few lawyer members are drafted into the Select Committee and the whole thing is studied and a comprehensive legislation is brought forward, so that there will be proper protection to the employees and to other persons who are working in non-canteen like establishments.

In the hotels and other such establishments the workers' condition is very pathetic. They do not have even a place to sleep and there is no ventilation and they have to live in dungeons. There is no need to hurry about this Bill. We can consider all connected problems and then bring in a comprehensive legislation. There are precedents for referring Bills to Select Committees even after the third reading when the Hon. Chief Minister concurring with the Opposition has agreed to refer a Bill to a Select Committee. I therefore, request that the Bill may be referred to a Select Committee.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I am not for referring the Bill to a Select Committee because this Bill is needed urgently and people are waiting for this. Of course, there may be difficiencies but they can be rectified later. Until now the hotel workers have not been given proper protection. As a starting point, I welcome this measure. Many other things have not been brought to the attention of the Minister. There are different kinds of licences—there are lodges, restaurants, mere eating houses, Ice-cream parlours and cool drink stalls. All these places are to be classified as establishments and this Bill should apply to all of them and that is one of my amendments.

There are many rules which are more broken than observed. We find 90 per cent of restaurants are badly ventilated and badly managed and they are extremely dirty. They are not regularly washed with warm water. The Sanitary Inspectors when they visit are fed well, kept well and placed well. That is how many people carry on their establishments. Most of the diseases spread from these hotels. There are some eating housing run on the platforms. We do not know if they have a licence or not.

Servers in hotels should all wear aprons. In Karnataka even in small hotels they put on aprons. But here even in big hotels, they are not supplied aprons. It must be made compulsory. I request the Hon. Minister to incorporate this in the Bill. Or at least it may be incorporated in the Rules.

The Railway hotels are in a bad state and the State Governments have no control over them. Government should take power in this Bill for controlling hotels in railway stations also.

With these words, I resume my seat.



திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இன்றைய தினம் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த திருத்த மசோதா வானது, நாட்டிலே இருக்கின்ற உணவகங்கள் நடைமுறை சீர் படுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்கனவே இருக்கும் சட்டத்திற்கு திருத்தம் என்ற வகையில் கொண்டுவரப்பட்டுள்ளது. அன்றைக்கு சமுதாயம் ஏதோ, எப்போதோ ஒரு தடவை ஓட்டலுக்குப் போய்க்கொண்டு இருந்த பழக்கம் போய், இன்று பெரும் பாலான குடும்பங்கள் பல்வேறு பணிகளுக்குச் செல்கிற காரணத் தால் உணவகங்களை நம்பியிருக்கும் நிலையேற்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் அவற்றை முறைப்படுத்தவும், கட்டுப் படுத்தவும், இந்தச் சட்டத்தை தீவிரமாக அமல் நடத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த திருத்த மசோ தாவானது தொழிலாளர்களின் நலனை மட்டும் கருத்தில்கொண்டு பாராது, பல்வேறு நிலைகளில் ஆராய்ந்து அதற்கு ஏற்ற முறையில் கொண்டு வந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சட்டத் திருத்தங் கள் கொண்டு வந்திருக்கிறபோது இந்தச் சட்டத் திருத் தங்கள் கல்விக் கூடங்களில் இருக்கும் ஹாஸ்டல்கள், கேன்டீன்கள் போன்றவற்றிற்குப் பொருந்தாது என்று கொண்டு வந்து இருக் கிறார்கள். கல்விக் கூடங்களில் இருக்கும், ஹாஸ்டல்களையும் இந்தச் சட்டத்தின் வரம்பில் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே பணிபுரியும் தொழிலாளர்களுக் கும், அங்கே சாப்பிடும் மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கு எவ் வளவு அக்கறையோடு இந்தச் சட்டத்தில் சொல்லியிருக்கிறோமோ அந்த வகையில் இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆகவே, கல்விக் கூடங்களில் இருக்கின்ற அந்தப் பணியாளர்களை யும் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல், ஓட்டல்கள் நடத்துவதற்கான விண் ணப்பங்கள் பற்றி தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கான அனுமதியை அந்த இன்ஸ்பெக்டர்கள் தரவேண்டும். இதற்கு முன்னாலே இருந்த சட்டத்திலே சில மாறுதல்களை இப்போது செய்து இருக்கிறார்கள். இந்த மாறுதல்களை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அதிலே குறிப்பாக ஒன்று 'the previous experience of the employer' என்று ஒன்று இருக்கிறது. அதற்கு அடுத்தபடி 'the financial resources of the employer including financial capacity to meet the demands... அதற்கு வரைமுறை கிடையாது. 'Welfare of the labour in the locality and the interest of the public generally' என்று இருக்கிறது. அதையும் வரையறை செய்யப்படவில்லை. அதற்கு மேலும் 'such other matters as may be prescribed' என்று அவர்கள் விட்டு இருக்கிறார்கள்.

இதைப் பார்க்கின்றபொழுது ஒரு இன்ஸ்பெக்டர் யாருக்கு வேண்டுமானாலும் அனுமதியை மறுக்கலாம், யாருக்கு வேண்டுமானாலும் அனுமதி தரலாம் என்கின்ற காரணத்தினால் யார் பணம் தருகிறார்களோ லஞ்சம் தருகிறார்களோ அவரை நாம் கண்டுபிடித்து தண்டிக்கக்கூடிய வகையிலே இந்தச் சட்டம் இல்லை. இன்றைக்கு இலஞ்சம் வாங்குகின்ற அதிகாரிகளுக்கு ஆதரவான விதிகளாக, பிரிவுகளாக இந்தப் பிரிவுகள் இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி குறிப்பாக இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை வரையறை செய்ய இந்த சர்க்கார் முன்வரவேண்டும்.

இன்ஸ்பெக்டர்கள் தங்களுடைய இஷ்டம் போல் அனுமதியை மறுக்கவோ அல்லது அனுமதியை தரவோ முடியும் என்பது எந்தச் சட்டத்திலேயும் இருக்கக் கூடாது, குறிப்பாக இந்தச் சட்டத்திலேயும் இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அப்பீல் செய்யக் கூடிய அதிகாரத்தை அந்த அதிகாரிகளின் மேல் அதிகாரிக்கு தந்திருக்கிறார்கள். ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் கோர்ட்டிற்கு அப்பீல் செய்யும் உரிமை இருக்குமானால் நீதி நியாயம் அவர்களுக்கு நல்லபடியாக கிடைக்கும். எனவே, அந்த உரிமையை சிவில் கோர்ட்டிற்கு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே ஹோட்டல்களிலே தரப்படும் பில்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. என். கே. பழனிச்சாமி சொன்னார்கள். இதிலே நானும் ஒரு கருத்தைச் சொல்லுகிறேன். பல்வேறு பெரிய ஹோட்டல்களிலே பில்களை தருகிறார்கள். அதில் ஒரு விபரமும் இருப்பதில்லை. எட்டணா அல்லது ஒரு ரூபாய் அதிகமாக போட்டு வாங்கினாலும் கூட நம் போன்றவர்கள் இவைகளை கணக்குப் பண்ணி சரியா தவறா என்று சொல்லுகிற நிலைமையிலே இல்லாமல் இதிலே பெரிய மோசடியே பெரிய ஹோட்டல்களிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை எல்லாம் தவிர்க்கின்ற வகையிலே பில்களிலே விவரத்தைச் சொல்லவேண்டும். "பிரைஸ் லிஸ்ட்" என்பது பொது மக்களின் கவனத்திற்கு வரக்கூடியதாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் பொது மக்களுக்கு அது பாதுகாப்பாக இருக்கும்.

அடுத்தாற்போல், 19-வது செக்ஷனிலே ஒரு தொழிலாளரை டிஸ்சார்ஜோ அல்லது டிஸ்மிஸோ செய்ய வேண்டும் என்றால் "One month's notice or wages in lieu of such notice" என்றிருக்கிறது. எவ்வளவு வேஜஸ் என்று குறிப்பிடப்படவில்லை. அப்படி குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருக்கும். ஆகவே, இந்த மசோதாவின் மீது என்னுடைய இக் கருத்துக்களை கூறி, அமைகிறேன்.



THIRU R. PONNAPPA NADAR: I would like to offer a few remarks regarding the provisions of this Bill.

So far as this Bill is concerned, it gives wider powers and the scope of the existing Act is enlarged. So far as the Bill is concerned, it is a welcome measure. But whether adequate protection is given to the workers is a matter which is still in dispute. On the side of the workers they voice several complaints because their amenities are not properly attended to by the employers. There are instances in which the workers are not having a clear deal at the hands of the employers because in many of the institutions their conditions of service and other things are not strictly enforced. I would even venture to suggest that the enforcement of the Catering Establishments Act is not happy. It is far from satisfactory.

Sir, I would also like to say something about the powers conferred for renewal. In this connection I would invite the attention of the Hon. Minister to the following provision:

"An employer who has applied for the grant or renewal of a registration certificate shall, until communication of orders on his application, be entitled to act as if the registration certificate had been granted or renewed".

Sir, for renewal there should not be any delay and renewal should be made at least within a month. Such a thing should have been provided in the new amendment that has been proposed. I would say that renewal should have priority because it is a running institution. It may be said that they are entitled to continue, but renewal should be made then and there and it cannot wait.

Another point which I want to stress is regarding the seizure of documents. That has been provided under Clause 15, amendment to Section 21 of Tamil Nadu Act XIII of 1958. I am just referring to the proviso that is made mention of in this section.

"(bb) seize or take copies of such registers, records or notices or portions thereof as he may consider necessary in respect of an offence under this Act which he has reason to believe has been committed by an employer, and shall give the employer a receipt for the same. The registers, records or notices or portions thereof so seized shall be retained by the Inspector only for so long as may be necessary for their examination and for any inquiry or proceeding under this Act".

The proviso reads thus :

"Provided that such registers, records or notices or portions thereof shall not be retained for more than thirty days at a time except with the permission of the next higher authority...."

That is the Clause. So far as the higher authority is concerned, I would suggest that it may be at the instance of the Court and not at the instance of the higher authority. Because when records are seized, they can retain it and they will have to produce it before the Court, so that the directions of the Court would be much more helpful than the directions of the higher authority. That is the point which may be examined at least at the last moment.

Another point which I want to stress is regarding the maintenance of the premises. Now, Sir, there are various provisions for cleanly maintaining the premises. But are the premises maintained cleanly, is a matter which will have to be decided by the Inspecting Officers. It is true that they do not go to the kitchen or the place where food is actually prepared. The conditions under which the food is prepared are so appalling and so disgusting that many of the employers in the restaurants will have to face the prosecution. But the enforcement is not correctly done. I would in this connection say that at least surprise inspection should be done. Even though some surprise inspection is done, surprise inspection by a squad should also be arranged so that the premises are kept clean.

Another point which I want to stress is that people who are actually engaged in cooking should be given clean clothes. Now the clothes worn by the cooks will not even burn if they are set fire to. They are so dirty or nasty. A look at some of the cooks will itself be revolting and many of us who go to the hotels may not like to take anything there. These are matters which should be enforced very strictly.

Further, wherever it may be, such contravention of the law or the rules should be avoided. These matters should be taken note of and I think in the matter of seizure of records which is an extraordinary power, the directions of the Court should be the best thing instead of the higher authority. That is a matter which the Hon. Minister may kindly consider.

With these observations I welcome the provisions of the Bill generally. But it requires greater scrutiny, as has been pointed out by the other members. With these observations, I conclude, Sir.



திரு. எம். சுரேந்திரன் : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த உணவகங்கள் சட்டத்திலே கொண்டு வந்திருக்கிற திருத்தத்தைப் பார்க்கும் பொழுது, உணவகங்கள், சம்பந்தமாக இந்த அரசுக்கு ஆழமான கண்ணோட்டம் இல்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. என்ன காரணம் என்றால், உணவகங்கள் என்று சொல்லுகின்ற இந்த உணவகங்களிலே பணி செய்கிறவர்களின் எண்ணங்களும் ஏதோ பழைய காலத்தைப் போல் இன்றைக்கு இல்லை. உணவகங்களிலே பணி செய்கிறவர்கள் சமுதாயத்திலே மரியாதைக்குரியவர்களாகக் கருதப்படாத காலம் ஒன்றிருந்தது. ஆனால் இன்றைக்கு மரியாதைக்கு உரியவர்களாக அவர்கள் கருதப்பட்ட சமுதாயத்திலே மற்றவர்களுக்கு இருக்கிற எல்லா விதமான அந்தஸ்துகளும் அவர்களுக்கும் இருக்க வேண்டும் என்பதிலே அபிப்பிராய பேதம் இல்லாத போது அதிலே பணி செய்கிறவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற வகையிலே நிலைமைகள் இன்றைக்கு வளர்ந்திருக்கிறது.

முன்பெல்லாம் அதே போல் உணவகங்களை வைத்துக் கொண்டிருந்தவர்கள் சாதாரணமாகத்தான் வைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது நிலைமை அப்படி இல்லை. ஒரு தொழிற்சாலையிலே மூலதனம் எவ்வளவு முடக்க முடியுமோ அதே போல் மூலதனத்தை முடக்குகின்ற வகையிலேயும் தொழிற்சாலைகளிலே எவ்வளவு இலாபம் வர வேண்டுமோ அதைவிட இலாபம் அதிகமாக வரக்கூடிய நிலைமை இதிலே இருக்கிறது. அதே நேரத்திலே உணவகங்களிலே சாப்பிடுகின்றவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக கூடிக் கொண்டு வருகிறது என்பதையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு அந்தத் தொழிலாளர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு, இந்தத் திருத்தத்தை கொண்டு வந்திருக்க வேண்டும்.

இந்த உணவகங்கள் சம்பந்தமாக இந்த அரசு பார்க்கின்ற பார்வை இன்னும் கொஞ்சம் ஆழமாக இருக்க வேண்டுமே ஒழிய, மேலெழுந்தவாரியாக இருக்கக் கூடாது என்று நான் சொன்னதற்குக் காரணம், இந்தத் திருத்தத்தை நல்ல விதத்திலே கொண்டு வந்திருக்க வேண்டும் என்பதால்தான்.

ஆகவே இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்தத்தில் சிறிதளவு முன்னேற்றம் இருந்தாலும் கூட இந்த முன்னேற்றம் போதாது. மற்றக் கோணங்களில் சிந்தித்து வருகின்ற காலத்தில் அமைச்சர் அவர்கள் ஒரு அழுத்தமான விரிவான சட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நான் கொண்டு வந்திருக்கிற தீர்மானம் ஒரு சட்டத்தின் திருத்தமே தவிர இது புதிய சட்டம் அல்ல. 1958ம் ஆண்டு தமிழ்நாடு காட்டரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டு நாட்டில்

நடைமுறையில் இருந்து கொண்டு வருகிறது. ஆகவே இப்போது இருக்கிற சிக்கல்களை தீர்ப்பதற்காகவும் தொழிலாளர்களுக்கு மேலும் சில நன்மைகளை உருவாக்கவும் நன்மையான சில காரியங்களைக் கொண்டுவரவும் இந்தச் சட்ட திருத்த முன்வடிவு கொண்டு வரப்பட்டு இருக்கிறதே தவிர வேறு அல்ல.

இதில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். உணவகங்கள் மரியாதைக்குரியவையாக இருக்கின்றன, லாபகரமானதாக இருக்கின்றன என்று மாண்புமிகு திரு. சுரேந்திரன் குறிப்பிட்டார்கள். எல்லா உணவகங்களும் லாபகரமானதாக இல்லை. சில நஷ்டத்திலும் நடக்கின்றன.

அருவருக்கத்தக்க முறையில் பண்டங்கள் செய்கின்ற இடங்கள் இருக்கின்றன என்று சிலர் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் கிராமங்களில் டீ கடைகளில் கூட சுத்தத்தை சுகாதாரத்தைக் கடைப்பிடித்து வருகிறார்கள். சின்ன சின்ன டீ கடைகளுக்கு போய் இருக்கிறீர்களோ இல்லையோ, நான் போய் இருக்கிறேன். ஓட்டு வாங்கப் போகிற நேரத்தில் எம். எல். ஏ.-க்கள் போய் இருப்பீர்கள். இப்போது டீ அடிக்கிற இடத்தில் கூட சுத்தமாக திண்ணை கட்டி இந்த வெள்ளைக்கல் எல்லாம் போட்டு சுத்தமாக வைத்து இருப்பார்கள். சாதாரண டீ கடையில்கூட டம்ளரை சுடு தண்ணீரில் தான் கழுவுவார்கள். ஓரளவு பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருக்கிறது.

<u>திரு. ஏ. சுப்பிரமணியம் :</u> தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் அமைச்சரான பிறகு இருப்பதைப்பற்றிச் சொல்ல வேண்டும். சாதாரண நிலையில் பார்த்ததைச் சொல்லக்கூடாது.

<u>மாண்புமிகு திரு. க. இராசாராம் :</u> அமைச்சர் ஆன பிறகும் சின்ன சின்ன டீ கடைகளை கூடக் நான்தான் திறந்து வைக்கிறேன்.

சின்ன சின்ன டீ கடைகளுக்கு மாண்புமிகு உறுப்பினர் போய்ப் பார்த்தால் தெரியும். இன்னும் சில கடைகளில் மாவு ஆட்டக் கூட மெஷின் வாங்கி வைத்திருக்கிறார்கள். தேசிய மயம் ஆன வங்கிகளில் மாவு அரைக்கிற மெஷின் வாங்கித் தரப்பட்டு இருக்கிறது. அது வேறு விவகாரம்.

தமிழ்நாட்டில் நல்லபடி ஒரு சுமுகமான சூழ்நிலை இருக்கிறது. உணவகங்கள் துப்புறவு இல்லாத நிலையில் இருக்கின்றன. அதிகாரிகள் லஞ்சம் வாங்கிக்கொண்டு இதுபற்றிக் கவனிக்காமல் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு திரு. அரங்கநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இது வரை வரவில்லை. அப்படி ஏதாவது உறுப்பினர் கொண்டு வந்தால் அதற்கான நடவடிக்கை எடுக்க எந்த அதிகாரியாக இருந்தாலும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



ஐஸ்கிரீம் பார்லர், மில்க் பார்லர் போன்றவற்றை சேர்க்க வேண்டும் என்று திரு. கே.எம். சுப்பிரமணியம் குறிப்பிட்டார்கள். காட்டரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்ட் 1958-ல் ஐஸ்கிரீம் பார்லர் மில்க் பார்லர், காப்பி அல்லது டீ விற்கிற இடங்கள் என்று எது நடந்தாலும் அது காட்டரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட் என்று சட்டத்தில் இருக்கிறது. ஆகவே இந்தத் திருத்தம் அவசியம் என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ரெஸிடென்ஷியல் ஏரியாவில் லைசென்ஸ் கொடுக்கக் கூடாது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது லோகல் பாடீஸ் ஆக்ட்லேயே நிறைவேற்றப்பட்டு சட்டத்தில் இருக்கிறது. ஆகவே இதில் அதற்கு எதிராக ஒன்றும் இல்லை என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி தொழிலாளர்களுக்கு பாட்ஜ், போட்டோ எல்லாம் தரவேண்டும் என்று சொன்னார்கள். ஆலைத் தொழிலாளர்களுக்கே இவைகளை எல்லாம் தர முடிவதில்லை இப்போது இருக்கிற நிலையில். போகப் போக சாத்தியமாகலாம்.

சீருடை வழங்கப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கப் பட்டது. 14-ஏ விதியின்கீழ் இது கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பொறுக்கு குழுவிற்கு இச்சட்ட முன்வடிவை விடவேண்டும் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். இது விரிவாக விவாதித்து நிறைவேற்றப்படவேண்டிய ஒன்று என்று குறிப்பிட்டார். ஆனால், இந்தப் புதிய சட்ட திருத்தத்தில் பெரிய சிக்கல் ஏதுமில்லை. நிலை விளக்கமான சட்டத் திருத்தம் தான். இது தொழிலாளர் வர்க்கத்திற்கு நல்லது என்று கருதுகிறேன். ஆகவே இந்தத் திருத்தங்களை எல்லாம் திரும்பப் பெற்று இதற்கு ஆதரவு தரவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

• <u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவைமுன்னுள்ள கேள்வி

"தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

•• தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

*Clause* 5.

MR. DEPUTY SPEAKER : The question is—

' That clause 5 do stand part of the Bill. '

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I press my amendment....

MR. DEPUTY SPEAKER : Without moving the amendments the Hon. Member cannot press his amendment.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I am moving only item (*h*) of my amendment, As regards item (*g*), namely, ' No licence should be given in area declared as residential areas in City Corporations' I am not moving it because the Hon. Minister has stated that the Corporation authorities would be strictly asked to follow the rule. Now, I move the following amendment :—

' In the proposed new section 4, in sub-section (2), after item (*f*)' *add* the following as item (*g*) :—

" (*g*) All workers serving the public in these establishments must use aprons to be provided by the owners. "

The amendment was duly seconded.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I want to add the word ' clean ' before the word ' aprons ' in my amendment. I think the Hon. Minister will accept it because it is a good one. Usually the amendments proposed by the Opposition Members are not accepted by the Government but at least in this case, it can be accepted. So far as aprons are concerned, it is a very essential item and it must be provided. So, I press my amendment.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : 142-ஏ விதியின்படி போதிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்று தான் சொல்லப்பட்டு இருக்கிறது. பெரிய உணவகங்களில் இது இருக்கிறது. சிறிய உணவகங்களில் அப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன. ஏப்ரன் என்றால் பிறகு க்ளீன் ஏப்ரன் என்ற நிலைமை வரும். ஆகவே, இந்தப் பிரச்னைகளை எல்லாம் விட்டு விட்டு இந்தத் திருத்தத்தைத் திரும்பப் பெறும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 6 முதல் 12 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.



*Clause* 13.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 13 do stand part of the Bill.'

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment :—

"In the proposed new section 14-A of the Principal Act, after the words "type of dresses" *insert* the words "identity cards affixed with photograph of the employees, like cook, preparation master, grinder, cleaner, etc.".

Thiru S. Vadivelu seconded the amendment.

திரு. என். கே. பழனிசாமி : டிரஸ் எல்லாம் கொடுக்க வேண்டும் என்று மசோதா கொண்டு வந்து இருக்கிறோம். இது ப்ரஸ் ஆகுமா என்பது சந்தேகம். எந்த ஓட்டலில் போனாலும் ஏன் டிரஸ் இல்லை என்றால் இவன் டெம்பரரியாக வந்தவன் என்று சொல்லுவார்கள். எந்தச் சட்டம் போட்டாலும் முதலில் செக்யூரிட்டி வேண்டும். முன்பு இருந்த அமைச்சர் அவர்கள் மூலம் மூன்று வருஷத்திற்கு முன்பு இந்த ஓட்டல் தொழிலாளர்களுக்கு ஐடெண்டி கார்ட் கொடுக்க வேண்டும் என்று முடிவாகி இருக்கிறது. இது வந்தால் தான் டிரஸ் கொடுக்க முடியும் . டிரஸ்ஸை விட செக்யூரிட்டி தான் முக்கியம். ஒருத்தன் வேலை செய்வான். பேர் வேறு ஒன்றாக இருக்கும் ஆகையினால் இந்த ஓட்டல் தொழிலாளர்களுக்கு கார்ட் கொடுக்க வேண்டும். எம்பிளாயர்ஸ் செலவில் போட்டோ கொடுக்க வேண்டும். செக்யூரிட்டி கிடைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(நண்பகல் 12—00)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல சில ஓட்டல்களில் நிரந்தரமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நிரந்தரம் இல்லாத தொழிலாளர்கள் பலர் இருந்தாலும் ஒவ்வொரு இடத்திலும் 4, 5 தொழிலாளர்களாவது நிரந்தரமானவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத் துணி தரவேண்டுமென்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் மூலமாக எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நல்ல காரியத்தை முழுமையாக யாரும் ஏமாற்ற முடியாது. செய்வது நல்லது என்று இந்த அரசு விரும்புகிறது. அதனால் இந்தத் திருத்தத்தைத் திரும்பப் பெற்று நாங்கள் கொண்டுவந்திருக்கிற திருத்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 13, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 14 முதல் 17 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே,

''தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/75) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த நல்லதொரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக நாங்கள் வரவேற்றிருக்கிறோம். அதைப்போல ஜிம்கானு கிளப் போன்றவைகள் எல்லாம் இருக்கின்றன. அங்குள்ள தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பது என்பது நல்லது. அதைப்போல ஐ. எல். ஓ.-வில் செய்த சிபாரிசின்படி 16 வயதுக்கு குறைந்தவர்களிடமிருந்து வேலை வாங்கக்கூடாது என்பது ஒரு நல்ல அம்சம்.

நம்முடைய தமிழ்நாட்டில் பல கல்வி நிறுவனங்களில் ஆஸ்டல்கள் இருக்கின்றன. பல்கலைக்கழக ஆஸ்டல் இருக்கிறது. அங்கு பணியாற்றிக்கொண்டிருப்பவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை அவர்களுக்கு இந்தமாதிரியான ஒரு பாதுகாப்புச் சட்டம் கொண்டு வராவிட்டாலும் அவர்களை இந்தமாதிரி நடத்த வேண்டுமென்று சுற்றறிக்கையாவது அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எதிர்காலத்திலே இதைப்போன்ற ஒரு பாதுகாப்புச் சட்டம் கொண்டுவருவது பற்றி யோசிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திரு. தங்கமணி அவர்கள் வழங்கியிருப்பது ஒரு சிறந்த ஆலோசனை என்று கருதுகிறேன். இப்போதுதான் 'பாக்வெர்டு கிளாஸ் ஆஸ்டல்' என்றும் மற்ற முறைகளிலும் ஆஸ்டல் கட்டிக் கொண்டிருக்கிறோம் எல்லாம் கட்டி முடிந்த பிறகு சட்டம் கொண்டுவருவது பற்றி யோசனை செய்யலாம். ஏற்கெனவே செய்யப்பட்ட பாதுகாப்பு இருக்கிறது. தனியாகச் சட்டம் கொண்டுவர எல்லா



வகையிலும் சிறப்பான முறையில் ஏற்பாடுகள் அமைந்த பிறகு கொண்டுவருவது நல்லது என்று கருதுகிறேன். ஆகையால் இப்போது கொண்டுவந்திருக்கும் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(5) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) விதி 21(3)ஐத் தளர்த்தல்.

THE. HON. DR. V. R. NEDUNCHEZHIAN: Sir, I move the following under Rule 21(3) of the Assembly Rules:—

'Item (4) may be taken up as the next item'

The motion was put and carried.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) 1975 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/75).

THIRU K. M, SUBRAMANIAM: Sir, I have given an amendment.

MR. DEPUTY SPEAKER: First let the Hon. Minister move the Bill.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே

''1975 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இது ஒரு சாதாரண சின்ன மசோதாவாக இருந்தாலும், இதில் பல்வேறு கருத்துக்களை எல்லாம் சொல்லவேண்டிய அவசியம் இருக்கிறது. காரணம், இது ஏற்கெனவே வந்த சட்டத்தின் மூலம் ஆறு மாத காலத்திற்குத் தேர்தல் இல்லாமல் இருக்க வேண்டும் என்று தெரிவித்து, மேற்கொண்டு ஒரு வருஷம் தேர்தல் வராது என்று சொல்லும் போது அதுபற்றி சில அம்சங்களைச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

* 19-4-1975ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

1971-ம் ஆண்டில்தான் மதுரை முனிசிபாலிட்டி கார்ப்பரேஷன் ஆனது. அன்றைக்கு உண்மையிலேயே மதுரையில் இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் அதை வரவேற்றார்கள். இந்த சட்டமன்றத்திலே அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை அறிவித்தபோது இந்தச் சபையில் இருக்கக்கூடிய எல்லாப் பிரிவினரும் வரவேற்றார்கள். கார்ப்பரேஷன் ஆன அந்த விழா கூட சிறப்பாக நடைபெற்றது. கார்ப்பரேஷன் ஆன பிறகு அந்த சமயத்தில் இருந்த மேயர் அவர்கள் மூன்று ஆண்டு காலம் தொடர்ந்து மேயராக இருக்கலாம் என்று சட்டம் போடப்பட்டு, அதற்குப் பிறகு திருத்தம் வந்து, சென்னையில் இருக்கிற கார்ப்பரேஷன் மாதிரி வருடத்திற்கு ஒரு முறை மேயர் மாற்றப்பட வேண்டுமென்று திருத்தம் வந்தது. முதலில் 3 வருஷம் மேயர் என்று சொன்னதற்கு என்ன காரணம்? பின்னர் அது வருஷத்திற்கு ஒரு முறை மாற்றப்பட வேண்டுமென்று சொன்னதற்கு என்ன காரணம் என்பது எனக்குப் புரியவில்லை. If anything, it is only a lame excuse.

மதுரை கார்ப்பரேஷன் என்று ஆனதற்குப் பிறகு இதுவரை தேர்தலே நடக்கவில்லை. கார்ப்பரேஷன் என்று வந்த பிறகு தேர்தல் நடக்காமல் இருப்பது சரியா? சென்னை கார்ப்பரேஷனும் மதுரை கார்ப்பரேஷனும் ஒன்றல்ல. சென்னை கார்ப்பரேஷனில் சில குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டு, கார்ப்பரேஷனைக் கலைப்பது என்று சொல்லி, அரசு கலைக்க முடிவு செய்தது. ஆனால் மதுரை கார்ப்பரேஷன் செம்மையாக நடைபெற்றுக்கொண்டிருந்தது.

நான் தனிப்பட்ட முறையில் அந்த மேயரைப் பெருமைப்படுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. மதுரையைப் பொறுத்தவரையில் சாதாரணமாக குடியிருப்புகளுக்கு வரியில் மாறுதல் செய்தால், அதுபற்றிய குறைபாடுகள் சொல்லப்பட்டால், அதை விசாரிப்பதற்கு ஒருஅப்பலேட் ட்ரிபியூனல் இருந்தது. இப்போது ஒரு ஜட்ஜை வைத்திருக்கிறார்கள். அது பற்றி ரொம்ப காலம் எனக்கு நல்ல அனுபவம் உண்டு. அந்த அப்பலேட் அதாரிட்டி மேயராக இருந்தார். அவர் எல்லோரும் ஒத்துக்கொள்ளும் வகையில் நாணயமாக, நேர்மையாக, ஒழுக்கமாக நடந்து கொண்டார்; எல்லோரும் ஒப்புக் கொள்ளும் வகையில் முடிவு செய்வார். ஏனென்றால் அவருக்கு மதுரையைப் பற்றி நன்றாகத் தெரியும். மதுரை நகர் பற்றிய முழு விபரங்களையும் அவர் நன்றாக அறிந்து வைத்திருந்தார். அதனால் ஏதாவது ஒரு பக்கத்தில் வரியைக் கூட்டினால் அது வேண்டுமென்றே கூட்டப்பட்டதா இல்லையா என்பதை அவர் சரியாக அறிந்து தீர்ப்புச் சொல்வார். அதைப்போல எங்காவது ஒரு பக்கத்தில் வரியைக் குறைத்தாலும் அது எந்த அடிப்படையில் குறைக்கப்பட்டது என்பதைத் தெரிந்து தீர்ப்பு வழங்குவார். அதில் உள்ள கோளாறு என்ன என்பதை அவர் நன்றாக அறிந்து தீர்ப்புச் சொல்வார். கார்ப்பரேஷன் கலைக்கப்பட்டதால் அவர் அப்பலேட் அதாரிட்டியாக இல்லை. அவருக்குப் பதிலாக ஒரு ஜட்ஜைப் போட்டு பெரும் குழப்பமாக இருக்கிறது.





(திரு. துரைமுருகன் தலைமை)

அதுமட்டுமல்ல. மற்ற முனிசிபாலிட்டிகளைக் கலைத்தபோது கவுன்சிலுக்கு லைஃப் இருந்தது. உறுப்பினர்கள் தொடர்ந்து பதவியில் இருந்தார்கள். ஆனால் மதுரை என்ன பாவம் செய்ததோ? கலைத்தது மட்டுமல்ல; உறுப்பினர்களின் பதவியும் போய்விட்டது. இப்போது ஸ்பெஷல் ஆபீசர் போட்டிருக்கிறார்கள். அவருக்குப்; போதுமான அனுபவம் இல்லை. சென்னையில் போட்டிருக்கிற ஸ்பெஷல் ஆபீசர் தன்னுடைய அனுபவத்தின் காரணமாக சிக்கலான பிரச்சனையிலும் சமாளித்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்கிறார்கள். ஆனால் மதுரை ஸ்பெஷல் ஆபீசர் முனிசிபல் தொழிலாளர்களிடம் வறட்சிநிவாரணம் கொடுக்க வேண்டும், இல்லாவிட்டால் உங்களை என்ன செய்வேன் தெரியுமா என்று மிரட்டி, பணம் வசூல் செய்வதில் தீவிரமாக இருக்கிறாரே தவிர மதுரை கார்ப்பரேஷன் நிலைமையைச் சீர்திருத்துவதில் கவனம் செலுத்தவில்லை. ஜனங்கள் அவரிடம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மே மாதம் தேர்தல் நடக்கும் என்று இந்த மன்றத்திலே அறிவித்தார்கள். எந்த அமைச்சர் அறிவித்தார் என்று நான் சொல்ல விரும்பவில்லை. அரசாங்கத்தின் சார்பில் அறிவித்தார்கள். மதுரை மக்கள் அதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் மேலும் ஒரு வருஷத்திற்குத் தேர்தல் இல்லை என்று சொல்கிறார்கள். எந்த நேரத்தில் வரும் என்று தெரியவில்லை. மதுரை கார்ப்பரேஷனில் அது கலைக்கப்படுகின்ற வகையில் சிக்கலான பிரச்சனைகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே, அதைக் கலைப்பதற்கு உண்மையான ஒரு காரணம் இருக்க முடியாது. ஆகையால் மேலும் தேர்தலை ஒத்திப் போட்டுக்கொண்டே போவது நியாயமல்ல. நான் இதில் திருத்தம் ஒன்றும் கொடுக்கவில்லை. ஹாண்டே அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டு 3 மாதம் வரை ஒத்திப் போடுவதாக இருந்தால் கூடப் பரவாயில்லை. ஒரு வருஷம் வரையிலும்—பொதுத் தேர்தல் முடியும் வரையிலும் ஒத்திப்போடுவது என்பது சரியல்ல.

முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். மதுரை மாநகராட்சியைக் கலைத்தது தப்பு—ஒரு வருடத்திற்கு அதன் தேர்தலை ஒத்திப்போடுகிற ஆலோசனை இருப்பது அதைவிடத் தப்பு என்று சொல்லியிருக்கிறார்கள். மதுரை மேயர் எலக்ஷனே நடக்காது என்று சொல்லியிருக்கிறார்.

மதுரை கார்ப்பரேஷனுக்கு ஆன பிறகு முறையான தேர்தல் நடந்து அதற்கு கார்ப்பரேஷன் அந்தஸ்தைக் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும். மே மாதத்திலாவது அதன்

தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்த்தோம். இதை ஓராண்டுக்கு ஒத்திவைப்பது முறை அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு மூன்று மாதங்களுக்கு ஸ்பெஷல் ஆபிசர் இருக்கட்டும். 3 மாதத்திற்குள் அதன் தேர்தலை நடத்திவிடுவதுதான் சரியானதாகும். இப்போது திருவிழா எக்சிபிஷன் நடக்கும். கார்ப்பரேஷன் முறையாக டெண்டர்களைக் கோரி அதை நடத்துகின்ற ஒழுங்கை இப்போதுதான் ஏற்படுத்தினோம். இப்போது ஸ்பெஷல் ஆபீசர் அதை மாற்றி மறுபடியும் அதில் குழப்பத்தை உண்டாக்கி விடுவார்களோ என்று அஞ்சுகிறேன். ஸ்பெஷல் ஆபீசர் கண்காணிக்கப்பட வேண்டும். கண்காணிப்பது என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் கண்காணிக்கப்படுவதைத் தான் சொல்கிறேன். 3 மாத காலத்திற்குள்ளாகவாவது இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதா ill-conceived, very wrong and it is politically motivated and it has got some purpose which is only to spite some individuals. இது கூடவே கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பேரவையின் ஆய்வுக்கு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை யொட்டிச் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய இரண்டாவது தலைநகர் என்று சொல்லத் தக்க அளவுக்கு சீரும் சிறப்புமிக்க ஊர் மதுரை மூதூர் என்பதனை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அங்கே தமிழகத்தின் இரண்டாவது மாநகராட்சி அமைந்திருப்பதற்கு—இன்றைக்கு நீண்ட காலமாக அந்த நகரத்து மக்கள் விரும்பிய சில கோரிக்கைகள் நிறைவேறியதை நிச்சயமாக நான் மறுக்க மாட்டேன். ஆனால், உருவான அந்த மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டது. திரு. கே.டி.கே. சுட்டிக் காட்டியதைப்போல மஸ்டர் ரோல் மோசடி கூட அங்கே நடைபெறவில்லை. நிர்வாகம் சீராக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் அது கலைக்கப்பட்டது. கலைக்கப்பட்டதற்கான காரணங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். "பிட்டுக்கு மண் சுமந்த பெருமான் முதுகில் பாண்டியன் அடித்த அடி உலகத்து ஜீவராசிகள் அனைத்தின் முதுகிலும் விழுந்தது" என்று அந்த ஊர் திருவிளையாடல் புராணம் எடுத்துச் சொல்லும்.

(9) பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து சில பார்வையாளர்கள் துண்டு பிரசுரங்களை கோஷமிட்டுக் கொண்டு அவைக்குள் எறிந்தது குறித்து.

(இத்தருணத்தில் பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து சில பார்வையாளர்கள் பேரவையில் மலர்களையும், சில தாள்களையும் விசிறி எறிந்து கொண்டே குரல் கொடுத்தார்கள்.)





THIRU V. KRISHNAMOORTHY (Nellikkuppam) Sir,: I move that these people be taken into custody and put into jail for thirty days.

திரு. கே. டி. கே. தங்கமணி : உடனடியாக சிறைக்கு அனுப்ப வேண்டுமென்று இல்லை. அவை முன்னவர்தான் இது போன்ற தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும். உடனடியாக அவர்கள் யார், என்ன காரணத்திற்காக இப்படிச் செய்தார்கள் என்பதை எல்லாம் தீர விசாரித்துக் கொண்டு என்ன தண்டனை கொடுக்கலாம் என்பது பற்றி முடிவு செய்து கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, now that a motion has been moved by the Hon. Member, Mr. Krishnamoorthy, in connection with this disturbance, I would like to suggest that we are not prepared to accept the suggestion to put them in jail for thirty days. No doubt, we are prepared to accept that they should be arrested . But to say that they should be jailed for thirty days is rather not good. The whole thing can be analysed and we can find out what exactly is their problem. We do not want this sort of behaviour, but we can find out what has happened to them and what they want. Therefore I suggest that a lenient attitude may be taken, but at the same time justice can be rendered.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : சபை நடக்கக் கூடிய சமயத்தில் பார்வையாளர் காலரியில் இருந்து கோஷங்களை எழுப்பியது மட்டுமல்ல—அங்கே இருந்து சில பொருள்கள் வீசப்பட்டன. அந்தப் பொருள்கள் கீழே உள்ள உறுப்பினர்களின் மேல்படுகிறது. அவை வேறு பொருள்களாக இருந்தால்? அதை யோசிக்க வேண்டும். திட்டமிட்டு — நான்கைந்து பேர்கள் கும்பலாக அமர்ந்து—அவர்கள் யார் என்று தெரியும்—மர்மத் தீவின் மன்னன் என்று தன்னைச் சொல்லிக்கொண்டு டாக்டர் கலைஞர் அவர்களை எதிர்த்து சைதாப்பேட்டைத் தொகுதியில் போட்டியிட்டவர்தான்—அவர்கள் இப்படிச் செய்திருப்பது மிகப் பெரிய குற்றமாகும். one month is also lenient.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : மேலே இருந்து வீசியவர்களை சார்ஜென்ட் கூட்டிக்கொண்டு போய் இருக்கிறார்கள். . . . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இன்று ஒரு அசாதாரண சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி முழுமையாக விசாரித்து முடிவு செய்வதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித் துக்கொள்கிறேன். இந்த மன்றத்தை யாரும் அலட்சியப்படுத்தக் கூடாது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. அவர் நோய்வாய்ப் பட்டவரா? வேறு எந்தவிதமான காரணத்தினால் இது போன்ற காரியத்தைச் செய்தார் என்பதை எல்லாம் ஆராய்ந்தறிந்து—

நமக்கு அவரை ஒரு மாதம் தண்டிப்பதற்கு அதிகாரம் இருந்தாலும்—அதைப் பிரயோகம் செய்கிற நேரத்தில் ஆரஅமர யோசித்துச் செய்ய வேண்டுமென்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : அவர்களை அழைத்துப் போய் இருக்கிறார்கள். விசாரித்து விவரம் தெரிந்தவுடன் நான் அது பற்றித் தெரிவிக்கிறேன். இப்போது திரு. காளிமுத்து தொடர்ந்து பேசுவார்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) 1975ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/75).—தொடர்ச்சி.

திரு. கா. காளிமுத்து : அங்கே தனி ஒருவர் மீது ஏற்பட்ட கோபத்தின் காரணமாக அந்த மாநகராட்சி கலைக்கப்பட்டிருந்தாலும் இன்றைக்கு மதுரை மாநகராட்சி மக்கள் அத்தனை பேர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே தேர்தல் நடைபெற்று மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு மாநகராட்சியாக அது விளங்காத நிலையில் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கக்கூடிய மக்களுடைய பிரதிநிதிகள் செயல்பட முடியாத காரணத்தினால் பல்வேறு நலன்கள் புறக்கணிக்கப்பட வேண்டிய நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சமீபத்தில் கூட மதுரை மாநகராட்சியின் இருதயம் ஆக இருக்கிற ஜான்ஸி ராணி பூங்காவை அழித்து கட்டடங்கள் கட்டப் போவதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்தது. உடனே அங்கே கூட்டம் கூட்டி அதற்கான கண்டனத்தைத் தெரிவித்த பிறகு அதை நிறுத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கூறுவதற்குக் காரணம் மாநகராட்சியின் ஒரு பிரிவாகிய மக்கள் பிரதிநிதிகள் அவை இயங்காத காரணத்தினால் இப்படிப் பட்ட செயல்களில் அந்த நிர்வாகம் ஈடுபடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

திரு. கே.டி.கே. அவர்கள் கோடிட்டுக் காட்டியதைப் போல சித்திரைத் திருவிழாவையொட்டி நடத்தப்படக் கூடிய பொருட்காட்சிக்குக் கடந்த ஆண்டில் கிடைத்ததைவிட இந்த ஆண்டு குறைந்த ஏலத்திற்கு இப்போது கொடுக்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அது உண்மையா என்று சரிவரத் தெரியவில்லை. அந்தப் பிரிவு இயங்கினால் இப்படிப்பட்ட நிலை நிச்சய



மாக ஏற்பட்டிருக்காது. ஆகவே ஓராண்டுக் காலம்—13 கிராமங்களைச் சேர்ப்பதற்கும்—வார்டுகளைச் சீர்படுத்துவதற்கும் தேவை என்பது எந்த விதத்திலும் ஏற்புடையது அல்ல. பந்தயக் குதிரை வேகத்தில் செயல்படுகிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிற அரசு இதில் மட்டும் நத்தை வேகத்தில் செயல்படக் காரணம் என்ன ?

ஆகவே டாக்டர் ஹாண்டே அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தத்தையாவது ஏற்று 3 மாத காலத்தில் நிச்சயமாக இந்த மாநகராட்சியின் தேர்தலை நடத்தித் தரவேண்டும். இல்லாது இப்படித் தேர்தலைத் தள்ளிப்போடுவது அந்த மாநகராட்சி மக்களின் வெறுப்பையும், வேதனையையும்தான் அதிகரிக்கச் செய்யும் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. வா.மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மதுரை மாநகராட்சியில் ஒரு விசேஷ அதிகாரி, பூரண அதிகாரம் பெற்றவராகப் பணிபுரிந்து வருகிறார். தமிழகத்தின் இரண்டு தலைசிறந்த நகரங்களில் ஒன்று மதுரை மாநகர். அந்த மாநகராட்சிக்கு விசேஷ அதிகாரியே தொடர்ந்து அந்தப் பதவியில் இருந்து வருவது விரும்பத்தக்கது அல்ல. உண்மையில் மாநகராட்சி மன்றத்தைக் கலைத்து 6 மாதங்கள் ஆகிவிட்டன. உடனடியாகத் தேர்தலை நடத்தாது மேலும் 6 மாதம் தேர்தலைத் தள்ளிப் போட வேண்டிய அவசியம் விளங்கவில்லை. ஒரு மனிதன் நோய்வாய்ப்பட்டிருக்கிற போது அதற்கு மருந்து தேவை என்று சொன்னால் ஒரு மனிதன் நோய் தீர்ந்த பிறகும் மருந்தையே உட்கொண்டு இருப்பது சரியல்ல. ஒரு சூழ்நிலை காரணமாக விசேஷ அதிகாரியைப்போட்டோம் என்றால் அவரையே தொடர்ந்து இருக்கச் செய்வது மருந்தையே—உணவு உட்கொள்ளாது—குடித்துக் கொண்டிருப்பதைப் போலத்தான் இருக்கும்.

ஆனால், அதையே நீட்டித்துத் தருவது, ஏற்கனவே இருந்த 6 மாதத்திற்குப் பிறகும் நீட்டித்துக் கொண்டே போவது; உண்மையிலேயே அந்த மாநகராட்சியைச் சேர்ந்த மக்களுக்கு நாம் நன்மை செய்வதாக அமையாது. இங்கே பேசிய இரண்டு உறுப்பினர்கள் இதற்கு முன்பிருந்த மாநகராட்சி நிர்வாகத்தைப் பற்றிக் கூறிய பாராட்டுரைகள் உண்மையிலேயே வரவேற்கத் தக்கவை. இப்பொழுதாவது அவர்கள் மதுரை மாநகராட்சியில் முன்னாள் மேயராக இருந்தவருடைய சாதனையைப் புரிந்துகொண்டு பாராட்டுகிறார்களே என்ற அளவுக்கு நான் உண்மையிலேயே வரவேற்கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்களை நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால், இந்த 6 மாத காலம் இருந்த விசேஷ அதிகாரியினுடைய ஆட்சியை மேலும் 1 வருஷம் நீட்டிப்பதால், பொதுத் தேர்தலும் அந்த மாநகராட்சித் தேர்தலும் எங்கே ஒன்றாக

இணைந்துவிடுமோ—அப்பொழுது மாநகராட்சித் தேர்தலை மீண்டும் ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகிறேன். ஆகவே, அப்படி நிர்வாக அதிகாரியினுடைய ஆட்சி நீடிக்க வேண்டுமென்று சொன்னாலும்கூட இரண்டு மூன்று மாதங்களிலே முடிவதுதான் நியாயமாக அமையும். இல்லையென்றால், மீண்டும் நீட்டிப்பது, பொதுத் தேர்தலோடு மோதும்படியான கட்டத்தைக் கொண்டு வந்துவிடும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு, மக்களுக்கு அவ்வப்போது ஏற்படக்கூடிய பிரச்னைகளைத் தனி விசேஷ அதிகாரியிடம் தெரிவித்து, அவ்வப்போது காரியங்களைச் செய்வது முடியாத காரியம். மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தான் ஓரளவுக்கு அங்கே நடைபெறுகின்றவற்றைப் பற்றி எடுத்துக்கூற முடியும். அதிலும் அதிகம் எழுத்தறிவில்லாத மக்கள், கல்வியறிவில்லாத மக்கள் தங்களுக்கு அன்றாடம் ஏற்படும் சிரமங்களை, மாநகராட்சியிலுள்ள சங்கடங்களை, மாநகராட்சி அதிகாரிகளிடத்திலே எடுத்துச் சொல்லி, அதற்குரிய பரிகாரம் தேட விசேஷ அதிகாரி மாத்திரம் நல்லதல்ல. இதனால், பியூராக்ரஸி என்கின்ற அதிகார வர்க்கம்தான் பரவுமே தவிர, மக்களது ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படும் என்ற எண்ணத்தை இங்கே சொல்லித்தானாக வேண்டும். ஆகவே, மிகுந்த அவசியமிருந்தாலன்றி, அம்மாதிரியாக நீட்டித்துத் தருவது கூடவே கூடாது. அதற்கு அந்த மாநகராட்சியைக் கலைத்திருக்க வேண்டியதில்லை. முன்பிருந்த முறையிலேயே, மேயரும், கவுன்சிலர்களும் தொடர்ந்து பணியாற்ற அனுமதித்திருக்கலாம். மற்ற நகராட்சிகள் எந்த முறையிலே இருக்கின்றனவோ, அந்த மாதிரி அதையும் அனுமதித்திருக்கலாம். அந்தப் பொதுமக்களுடைய பிரதிநிதிகளை வீட்டுக்கு அனுப்பிய பிறகு, நியாயமாகச் சீர்திருத்தம் செய்ய, வார்டுகளைப் பிரிக்க, 6 மாதகாலம் விசேஷ அதிகாரியை நியமித்தோம் என்பதிலே முழுக்க முழுக்க நியாயம் உண்டு. ஆனால், அந்த நீட்டிப்பிற்குப் பின்னாலும் நீட்டித்துக்கொண்டு போனால், இனிமேலே மக்களுக்கு ஜனநாயக அடிப்படையிலே கிடைக்கின்ற உரிமை கிடைக்காமலே போய்விடும். ஆகவே, மக்கள்தான் சிரமப்படுவார்கள் என்பதைத் தெளிவுபடுத்தித் தோழமைக் கட்சியின் சார்பிலே 3, 4 மாதங்களுக்கு மேலாக நீட்டிக்காது, அடுத்த தடவையாவது மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்கான திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

(திரு. ஆலடி. அருணா பேச எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இரண்டாவது பில் ; நீங்கள் மதுரை மாவட்டம் கூட அல்ல ; திரு. காளிமுத்து பேசிவிட்டார்.





திரு. ஆலடி. அருணா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற திருத்தத்தின் மீது என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

மதுரை மாநகராட்சியைப் பொறுத்த மட்டில் இந்த அரசாங்கம் ஒவ்வொரு கட்டத்திலும் எடுக்கின்ற நடவடிக்கைகள் அரசியல் உள்நோக்கத்தோடும் அரசியல் ஆதாயத்தோடும் உள்ளன உள்ளது, தன்னுடைய நடவடிக்கைகளை எடுக்கிறது என்ற குற்றச்சாட்டை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இந்த மாநகராட்சியை உருவாக்கிய கட்டத்திலும் சரி, அதற்குப் பிறகு பதவிகளை உருவாக்குகிற கட்டத்திலும் சரி, அதற்குப்பிறகு கலைத்த கட்டத்திலும் சரி, இப்பொழுது தேர்தலை ஒத்திவைக்கிற கட்டத்திலும் சரி, ஒவ்வொரு தடவையும் இந்த அரசாங்கம் தன்னுடைய கட்சியின் இலாப நோக்கோடு நடக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துவது என்னுடைய தலையாய கடமையாகும்.

இந்த மாநகராட்சியைப் பொறுத்த மட்டில்—சென்னையிலும், மதுரையிலும் இரண்டு மாநகராட்சிகள் இருக்கின்றன—இந்த மாநகராட்சிகள் ஜனநாயகத்தின் தொட்டில்களாக விளங்குகின்றன என்பதை நாடு நன்கு தெரிந்து கொண்டிருக்கிறது. ஆனால், அவற்றிற்கான தேர்தலை இன்றைய தினம் அரசாங்கம் சந்திக்கப் பயப்படுகிறது என்பதை நான் நினைவுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்மையிலே, பெருமதிப்பிற்குரிய மொரார்ஜி தேசாய் அவர்கள் குஜராத் மாநிலத்தில் உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டுமென்று உண்ணா நோன்பு மேற்கொண்டார்கள். அது நியாயமான கோரிக்கை, நேர்மையான கோரிக்கை, ஒத்துக் கொள்ளக்கூடிய கோரிக்கை என்பதை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த மாநிலத்தில் தெரிவித்தார்கள். ஆனால், அதே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த மாநகராட்சியிலே தேர்தலை நடத்தப் பயப்படுகிறார்கள். தேர்தலை ஒத்தி போடுகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது, தேர்தலை ஓராண்டுக் காலம் ஒத்தி வைப்பதற்கான காரணங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் காரணங்கள் ஒத்துக் கொள்ளக் கூடாத காரணங்கள் என்பது மட்டுமல்ல, போலிக் காரணங்கள், நம்ப முடியாத காரணங்கள், வேண்டுமென்றே எதையாவது சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லப்பட்ட காரணங்கள். 13 கிராமங்களை இணைக்கின்ற பணியாலே, வார்டுகளைப் பிரிக்கின்ற பணியாலே, தேர்தலை ஒத்தி போடுவதாகச் சொல்வது, ஊரிலேயுள்ள மக்களை ஏமாளிகளாக, இளித்தவாயர்களாகக் கருதுவதாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அகில இந்தியத் தேர்தலைத் திடீரென்று நடத்த வேண்டுமென்று இந்திரா காந்தி அவர்கள் விரும்பிய நேரத்தில், ஒரே மாதத்திற்குள் பணிகளை முடிப்பதற்காக, வேலைகள் துரிதமாக நடந்தன. ஆனால், பரிதாபம் ஒரு மாநகராட்சியில் வார்டுகளைப் பிரிப்பதற்கும் 13 கிராமங்களை இணைக்கவும் ஓராண்டுக் காலம் தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட காரணங்களை இந்த மன்றத்திலே சொல்பவர்கள் வெட்கப்பட வேண்டும். நாணப்பட வேண்டும். ஆகவே, போலிக் காரணங்களைச் சொல்லி, ஜனநாயக உரிமைகளைப் புறக்கணிக்காதீர்கள் என்று சொல்லி அமர்கிறேன்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார் :</u> தலைவரவர்களே, இது ஒரு சிறு திருத்தச் சட்டமாக இருந்தாலும் இந்தத் திருத்தத்தை எதிர்ப்பதற்கு நாங்களெல்லாம் முனைந்திருக்கிறோம்.

மதுரை மாவட்டத்திலே, நகராட்சித் தேர்தலை அரசாங்கம் ஒத்தி வைத்துக் கொண்டே இருக்கிறது. 6 மாதங்களாக ஸ்பெஷல் ஆபீஸர் பராமரிப்பிலே இந்த மாநகராட்சி இருந்து கொண்டிருக்கிறது. ஸ்பெஷல் ஆபீஸரைப் பொறுத்தவரையிலே நாங்கள் குறைபட முடியவில்லை. ஆனால், ஜனநாயக முறைப்படித் தேர்தலை நடத்தாமல், வேண்டுமென்றே இன்னும் ஒரு வருஷக் காலம் நடக்குமோ நடக்காதோ என்று ஐயப்படக் கூடிய விதத்திலே இப்பொழுது சட்டம் வந்திருக்கிறது.

ஏப்ரல் 30-ம் தேதியிலிருந்து இன்னும் ஒரு வருஷக் காலம் இந்தத் தேர்தலை ஒத்தி வைக்க வழிவகை இந்த மசோதாவிலே இடம் பெற்றிருக்கிறது. உண்மையிலே, இதிலே இருக்கிற சிக்கல் என்னவென்றால், இந்தத் தேர்தலைச் சந்திப்பதற்கு ஆளுங்கட்சி கொஞ்சம் தயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் நான் இங்கே கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மக்களுடைய ஆதரவு இன்று ஆளுங்கட்சிக்குக் குறைந்து கொண்டிருக்கிறது. ஆதலால், ஒருவேளை பொதுத் தேர்தலுக்கு முன்பாகத் தேர்தலைச் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டால், பொதுத் தேர்தலிலே அவர்களை வெகுவாகப் பாதிக்கும் என்ற காரணத்தால் இந்த மாதிரி முனிசிபல் தேர்தலானாலும் சரி, மாநகராட்சித் தேர்தலானாலும் சரி, அதைச் சந்திக்க ஆளுங்கட்சி விரும்பவில்லை. அந்தக் காரணத்தினால் இந்த மசோதாவானது இங்கு வந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்தபடியாக, ஏதோ டீலிமிட்டேஷன் உத்தரவெல்லாம் வந்திருக்கிறது என்றார்கள். பொதுத் தேர்தல் அவசர அவசரமாக நடக்க வேண்டுமென்று எல்லா ஏற்பாடுகளையும் மத்தியிலே செய்திருக்கிறார்கள். இங்கும் தேர்தலை நடத்துவதற்கு எந்த



விதமான சட்டச் சிக்கலும், கஷ்டமும் ஏற்படாது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். மத்தியிலே உடனடியாக, அசெம்பிளிக்கும் பாராளுமன்றத்திற்கும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இத்தேர்தலை நடத்த கோளாறு இருக்க முடியாது, சிக்கல் இருக்க முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வார்டு பிரிவினை செய்ய, அதையடுத்து, பிரத்தியேகமாகத் தேர்தலை நடத்த எந்தவிதமான சட்டச் சிக்கலும் கஷ்டமும் இருக்காது. இந்தச் சட்டம் ஜனநாயக உணர்வுகளுக்கு எதிரானது என்ற காரணத்தால், ஜனநாயக உணர்வுகளை மதிக்க இந்த அரசு தவறியிருக்கிறது என்று இந்த அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டைக் கூறி, இந்தத் திருத்தச் சட்டத்தினை நான் எதிர்க்கிறேன்.

(பிற்பகல் 12-30)

<u>மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :</u> தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பற்றிய விளக்கங்களை எல்லா உறுப்பினர்களும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக எல்லோருக்குமே விரைவிலே இந்தத் தேர்தல் வரவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அதிலே ஆளுங்கட்சிக்கு அந்த எண்ணத்தில் குறைவில்லை. இருந்தாலும் ஏற்பட்டிருக்கிற சங்கடங்கள் எல்லாம் இதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. மாநகராட்சியாக்குவதற்கு 13 கிராமங்களை இணைத்திருக்கிறோம். முதலிலே 48 வார்டுகள் இருந்தபோது 3 தொகுதிகள் இருந்தன. மற்ற 13 கிராமங்களையும் சேர்க்கிறபோது அந்தக் கிராமங்கள் இரண்டு தொகுதிகளிலிருந்து இணைக்கப்பட்டிருக்கிறது. திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்து 7 கிராமங்களும், சமயநல்லூர் தொகுதியிலிருந்து 6 கிராமங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த டீலிமிட்டேஷன் கமிட்டி பரிசீலனை செய்து ஜனவரி மாதத்திலே அனுப்பியிருக்கிறார்கள். இனிமேல் ஸ்தல ஸ்தாபனங்களைப் பொறுத்தவரையில் எந்தவிதமான மாற்றமும் செய்யக் கூடாது என்று 'அண்டில் பர்தர் ஆர்டர்ஸ்' என்று உத்திரவைப் போட்டிருக்கிறது மத்திய தேர்தல் ஆணைக்குழு. நகராட்சியாக இருந்தது மாநகராட்சியாவதற்கு 65 வார்டுகளாக நாம் பிரிக்க வேண்டும். அங்கே உள்ளவர்களே அதற்கான தீர்மானத்தைப் போட்டு 65 வார்டுகளாக ஆக்க வேண்டுமென்று அனுப்பியிருக்கிறார்கள். 29-6-1974-ல் முன்பு இருந்த மேயர், உறுப்பினர்கள் சேர்ந்து 65 வார்டுகளாகப் பிரிக்க வேண்டுமென்று போட்டுச் சர்க்காருக்கு அதை அனுப்பினார்கள். நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. அது ஆறாவது மாதத்தில். அதற்குப் பிறகு 1-11-1974-ல் ஸ்பெஷல் ஆபீஸரைப் போட்டு அவர் நடத்திக் கொண்டிருக்கிறார். ஆனால் ஜூன் மாதத்திலே இப்படியொரு உத்திரவு வருகிறது. சாதாரணமாக ஒரு கிராமப் பஞ்சாயத்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1975 ஏப்ரல் 19

திலேகூட உள்ள ஒரு வாக்காளரை ஒரு வார்டிலிருந்து இன்னொரு வார்டிற்குக் கூடப் போடக் கூடாது என்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். திடீரென்று இந்தத் தேர்தலை வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மற்றபடி இங்கே அரசியல் காரணங்களைச் சொல்லி இருக்கிறார்கள். திரு. தங்கமணி பேசியபோது அங்கே மேயர் அப்பீல் கமிட்டியில் நியாயமாகவும் நேர்மையாகவும் நாணயமாகவும் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர் செய்த நியாயம், நாணயம் அத்தனையும் எங்களைச் சேரும். நிர்வாகம் நல்லமுறையிலே நடைபெறுகிறது என்று சொன்னார்கள். அதற்காக நாங்கள் பெருமைப்பட்டு மேலும் செம்மையாக நடைபெறக் கூடிய முறையிலேதான் செய்துவருகிறோம்.

சென்னை மாநகராட்சியிலே அப்பீல் கமிட்டியிலே நீதிபதியை நியமித்திருக்கிறார்கள். வரி அதிகமாக வாங்குகிறார்கள் என்று சொன்னால் அதை அவர் கவனிக்கிறார். திரு. தங்கமணி பேசும்போது தவறு நடக்கிறது, அப்படியிருப்பதால் ஏற்கெனவே தவறு நடந்ததுபோலச் சொன்னார்கள். முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் அப்படிப் பேசுவது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன். மற்றவர்கள் அந்தக் கமிட்டியிலே உட்கார்ந்தால் மாநகராட்சித்தலைவர், ஆணையர், உறுப்பினர் எல்லாம் உட்கார்ந்து —அதிகமாக வரி இருக்கிறது என்று வேண்டுகோள் வந்தால்— அடுத்தபடி தேர்தல் வருகிறது, அதையெல்லாம் யோசித்து உயர்த்திவிடாமல் குறைத்துவிடுவார்கள். இதனால் பொதுவாக நகராட்சிகளுக்கு வருவாய் போய் விடுகிறது. ஆகவே, அதிகாரிகள் செய்தாலும் தவறு இல்லை. இதை இந்தச் சர்க்கார் செய்யவில்லை, நீண்ட நாட்களாக இருந்துவருகிற முறைதான் அது.

மதுரை புதிய மாநகராட்சியைத் தோற்றுவித்த பெருமை நம்முடைய முதலமைச்சர் அவர்களையும் இந்த மந்திரிசபையையும்தான் சாரும். மக்கள் ஆதரவோடு உள்ள அவ்வளவு புகழும் இந்த அமைச்சரவைக்குச் சேர்ந்ததுதான். இத்தனை புகழையும் செய்துவிட்டு அதற்கு வேறு நிலைமைகள் ஏற்படுகிறபடி நிச்சயமாக இந்தச் சர்க்கார் செய்யாது. யாரும் ஓடவில்லை இங்கே. யார் ஓடியவர்கள் புறங்காட்டியவர்கள் என்று தெரியும். ஓடியவர்கள்தான் புறங்காட்டியவர்கள், இருப்பவர்கள் புறங்காட்டியவர்கள் அல்ல. வாழ்நாள் பூராவும் வெற்றியைத்தான் கண்டு வருகிறோம். ஓட வேண்டியவர்கள் ஓடி விட்டார்கள். தோல்வியைக் கண்டவுடனே கார் வேகத்தைவிட அதிகமான வேகத்தில் ஓடிவிட்டார்கள். வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு ஒன்று என்பது பண்டையத் தமிழன் மரபு என்ற முறையிலே எந்தக் காரியமாக இருந்தாலும் அரசியலில் தமிழன் என்ற உணர்வோடு தமிழ்நாட்டிற்கு எந்த எந்த நன்மைகளை செய்ய முடியுமோ எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு மதுரை நகராட்சியை மாநகராட்சியாக ஆக்கிக் குதூகலமாகப்



1975 ஏப்ரல் 19] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

பார்க்கவேண்டும், யாரை மேயராக வைத்துப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டோமோ அதையெல்லாம் ஏற்படுத்திப் பார்த்திருக்கிறோம். ஆகவே யாரையும் விட அந்த எண்ணத்தில் குறைந்தவர்கள் இல்லை.

இந்த ஒரு ஆண்டு நீட்டித்து இருக்கிறோம். குறைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். குறைக்க வேண்டிய நேரம் இருந்தால் குறைத்துக்கொள்வதில் கஷ்டம் இருக்காது. இன்னும் நீட்டவேண்டியதிருந்தால் அதையும் செய்துகொள்ளலாம். தனி அதிகாரி போட்டு இடைக்காலத்தில் வேலைகள் நடந்துவருகின்றன.

சென்னையில் இருக்கிற சிறப்பு அதிகாரி நன்றாகச் செய்துவருகிறார் என்று தங்கமணி அவர்கள் பாராட்டினார்கள். பொன்னப்ப நாடார் அவர்கள் மதுரையில் உள்ள சிறப்பு அதிகாரிபற்றிக் குறை சொல்லவில்லை. எந்த நோக்கத்தோடு மாநகராட்சியாக்கினோமோ அந்த நோக்கங்கள் நிறைவேறக்கூடிய முறையில் இந்த அரசாங்கம் ஆவன செய்யும். 13 கிராமங்களையும் சேர்த்து 65 வார்டுகளாகப் பிரித்து ஏற்பாடு செய்ய வேண்டும். 'அண்டில் பர்தர் ஆர்டர்ஸ்' என்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். வாக்காளர் இன்ஷியல்கூட மாற்றப்படக் கூடாது என்று உத்திரவு அகில இந்திய அளவிலே மத்திய தேர்வாணைக் குழுவிடமிருந்து வந்திருக்கிறது ஆகவேதான் இந்த நிலைமை என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்தத் திருத்தத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: '1975 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

MR. SPEAKER: The question is—

"That clause 2 do stand part of the Bill".

DR. H. V. HANDE: Sir, I move the amendment standing in my name, namely:

"In clause 2, for the words "within a period of one year from 30th day of April 1975", *substitute* the words, "within a period of 3 months from the 30th day of April 1975".

The amendment was duly seconded.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தம்தான் இன்றைய தினம் இந்த மசோதாவினுடைய முக்கியமான திருத்தமாக இருக்கிறது. ஏனென்றால் அடிப்படையான திருத்தம் இந்தத் திருத்தம்தான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவின் பொது விவாதத்திலே எழுப்பிய கருத்துக்களுக்கு விடையளித்ததாக நினைத்துக்கொண்டு சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதால்தான் நான் இந்தத் திருத்தத்தை வலியுறுத்திக்கொண்டு இருக்கிறேன். அவர் கொடுத்த விளக்கங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத விளக்கங்கள் ஆக இருக்கின்றன. ஒரு முக்கியமான விஷயத்திற்கு அவர் விளக்கம் அளிக்கவில்லை. இன்றைய தினம் மீண்டும் தேர்தலை நடத்தாதற்கு என்ன காரணம் என்றால் மத்திய அரசாங்கத்தின் உத்திரவு அடிப்படையிலே வார்டுகளைத் திருத்த முடியாது என்று சொன்னார்கள். எதற்காகக் கலைக்கப்பட்டது என்ற கேள்விக்கு அவர் பதில் அளிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கலைக்கப்பட்டதற்குக் காரணம் எல்லாம் இப்போது கேட்கமுடியாது. அதைப்பற்றிப் பேசினால் தனி விவாதம் ஆரம்பமாகிவிடும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் பேசுவது உங்களுக்குக் கஷ்டமாக இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. நீங்கள் சொல்வது சரியல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே : முன்பு மசோதா வந்தது. அப்போது தேர்ட் ரீடிங்கில்கூடப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தார்கள். இந்த மசோதாவினுடைய முக்கியமான சாராம்சம், பித் என்னவென்றால் சப்ஸ்டன்ஸ் என்னவென்றால், இந்த மசோதா பூராவும் இந்தத் திருத்தத்தின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இந்தத் திருத்தத்திற்கு நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். திரு. ஜப்பார், திரு. தங்கமணி. திரு. காளிமுத்து அவர்கள் எல்லாம் ஓரளவிற்குத் தெரிவித்தார்கள் மற்ற இரண்டு பேரும் ஆதரித்துத் திருத்தத்தை ஏற்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எதற்காகக் கூறுகிறேன் என்றால், மதுரை மாநகராட்சி எதற்காகக் கலைக்கப்பட்டது ? என்ன காரணத்தையொட்டிக் கலைக்கப்பட்டது ? இந்தப் பிரச்னை வந்ததற்குக் காரணம் என்ன ? மாண்புமிகு அமைச்சரவர்களே தெளிவாகக் கூறுகிறார்கள். அங்கேயுள்ள மேயர் நன்றாகப் பணியாற்றினார்கள் என்று சொன்னார்கள். அதைத் தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அதைப் பாராட்டி வரவேற்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படியிருக்க எதற்



காக அது கலைக்கப்பட்டது ? அதன் விளைவுகளைத்தான் இப்பொழுதுஅனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இங்கே நம்முடைய சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் விரைவில் தேர்தல் நடைபெற வேண்டுமென்று பல்வேறு நேரங்களில் சொல்லியிருக்கிறோம். சிறப்பு அதிகாரியின்மேல் குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்று இல்லை. ஆனால் சிறப்பு அதிகாரி நல்ல முறையில் இயங்க வேண்டுமென்றால் நூற்றுக்கணக்கான கண்களைப்போல அங்கேயிருக்கும் உறுப்பினர்கள் பொதுமக்களின் குறைகளைச் சொல்ல வாய்ப்பிருக்கும். ஆகவேதான் நான் திட்டவட்டமாக 3 மாதங்கள் என்று கொடுத்திருக்கிறேன். நான் அப்படிக் கொடுத்ததற்குக் காரணம் திட்டவட்டமாக 3 மாதங்களுக்குள் நடத்திவிட வேண்டுமென்பதற்காகத்தான்.

முன்பே சொன்னோம், முன்பு தள்ளி வைக்கும் நேரத்திலேயே சொன்னோம். மீண்டும் தள்ளி வைக்கும் மசோதாவைக் கொண்டுவரப் போகிறீர்கள் என்று அன்றைய தினமே சொன்னோம். அந்த அடிப்படையில்தான் கொண்டுவந்திருக்கிறீர்கள். இன்றைக்கு வேறு காரணங்களைக் கொடுக்கிறீர்கள். அன்றைக்கு என்ன காரணத்தைச் சொன்னீர்கள் ? சரியான முறையில் டூப்ளிகேட் அட்டைகளைத் தயாரிக்க வேண்டுமென்று சொன்னீர்கள். இன்றைக்கு என்ன காரணத்தைச் சொல்லிக் கேட்கிறீர்கள் ? வேறு காரணத்தைச் சொல்கிறீர்கள். ஆகவே, இதற்குச் சரியான விளக்கத்தைக் கொடுத்தால்தான் பிறகு சிந்தித்து பிரஸ் செய்வதா இல்லையா என்று முடிவெடுக்க முடியும். ஒரே கேள்வியைத்தான் நான் கேட்கிறேன். எதற்காக நீங்கள் கலைத்தீர்கள் ? என்ன தவறு செய்தார்கள் ? மதுரை முத்து பிடிக்கவில்லை என்று கலைத்தீர்களா? அல்லது வேறு எந்தக் காரணத்திற்காகக் கலைத்தீர்கள் என்று திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். அரசியல் காரணத்திற்காகக் கலைத்தீர்களா ? இல்லாவிட்டால் பொது மக்களைச் சந்திப்பதற்குப் பயந்துகொண்டு ஏதாவது சாக்குச் சொல்லி ஏன் தள்ளி வைத்துக்கொண்டே இருக்கிறீர்கள் ? இந்த இரண்டு கேள்விகளுக்கும் மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன். இல்லாவிட்டால் இதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. திருத்தத்தை வலியுறுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறோம் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, ஹாண்டே அவர்கள் காரணம் காட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். காரணத்தை முதலிலேயே காட்டியிருக்கிறோம். இப்பொழுதும் காரணம் காட்டியிருக்கிறோம் என்று சொல்கிறேன். ஒரு சட்டம் கொண்டு வந்தாலும் திருத்தம் கொண்டு வந்தாலும் காரணம் சொல்கிறோம். எந்தெந்த முறையிலே அவசியம் ஏற்படும் என்ற காரணத்தைக் காட்டியிருக்கிறோம். அவர்கள்

பேசும்பொழுது சொன்னார்கள், முத்து நீதியாக நடந்து கொண்டார் என்று நானே ஒத்துக்கொண்டதாக ஆச்சரியப்படுகிறார்கள். (குறுக்கீடு) இப்படி உட்கார்ந்து கொண்டே பேசுவது கூடாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் ரொம்ப 'காமாகப்' பேசுகிறேன். அவர்கள் கோபப்பட வேண்டியதில்லை. நானும் கோபப்படுவதாக இல்லை. என்னைப் பொறுத்தவரையில் இங்கே கிண்டலாகவோ, தவறாகவோ பேசவில்லை. நான் சொன்னது, தங்கமணி அவர்கள் சொன்னார்கள், அதை நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, ஹாண்டே அவர்கள் உட்கார்ந்துகொண்டே பேசுவதும் நான் நின்றுகொண்டு பேசிக்கொண்டிருப்பதும் பழக்கமாகி விட்டது. அவர் படித்தவர், டாக்டர், விஷயம் தெரிந்தவர் என்று கருதிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) தலைவரவர்களே, நான் உங்களிடத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். சபாநாயகரிடத்தில் அனுமதி பெற்றுச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அவர்கள் உட்கார்ந்துகொண்டே பேசுகிறார்கள். மறுபடியும் நான் பேசிக்கொண்டேயிருக்கிறேன். உட்கார்ந்து பேசும் நாகரிகத்தை அவர்கள் செய்யக்கூடாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். நாகரிகம் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். நான் அமைச்சரவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். உட்கார்ந்து கொண்டே நாகரீகமற்ற வார்த்தைகளை இந்த மன்றத்தில் இன்னொரு இடத்தில் உட்கார்ந்து கொண்டு இந்த அமைச்சர் பேசி அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தி எப்படி மாட்டிக் கொண்டார்கள், பிறகு அவற்றை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதையெல்லாம் மறந்து விட்டார்கள் என்று கருதுகிறேன். நாகரிகம் என்ற சர்ச்சையில் இறங்கினால் யாருக்கு இருக்கிறது என்று அது வேறு அடிப்படையில் போய்விடும். சப்ஜெக்ட்டுக்குள் பேசுவதுதான் பொருக்கமாக இருக்கும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு பேரும் கோபத்தோடு பேச வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அமைச்சர் பேசியதைப் பற்றிச் சொன்னார்கள். அதுவும் ஹாண்டேயால் வந்த பிரச்னைதான். ஹாண்டே அவர்கள் சட்டமன்ற முறைகளுக்கு விரோதமாக, சபாநாயகரிடத்தில் அனுமதி கேட்காமல் உட்கார்ந்து கொண்டே பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஒவ்வொரு உறுப்பினரிடத்திலும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். எனவே அதுகூட ஹாண்டே பிரச்னைதான். வேறு யாரிடமும் பேசவில்லை.



டாக்டர் எச். வி. ஹாண்டே : இதைக்கூட அவர் ஒருவர்தான் சொல்கிறார். நான் சொல்வது என்னவென்றால், நீங்கள் உட்கார்ந்து கொண்டே தவறான வார்த்தைகளை........

மாண்புமிகு திரு. ப. மன்னை நாராயணசாமி : ஹாண்டே ஒருவரால்தான் இந்தப் பிரச்னை வருகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : என்னுடைய கேள்வியெல்லாம் அந்த நேரத்தில் எப்படிப்பட்ட தவறான வார்த்தைகளைச் சொன்னீர்கள். அப்படிப்பட்ட வார்த்தைகள் வரக்கூடாது. அதுவும் மாண்புமிகு அமைச்சர் பதவி வகிப்பவரிடத்திலிருந்து அப்படிப்பட்ட வார்த்தைகள் வரக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும், ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்பொழுது இன்னொரு உறுப்பினர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பது முறையே அல்ல. அதை நீங்கள் பேசினீர்கள், நான் பேசினேன் என்று ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வது முறையல்ல. யாருமே அப்படிப் பேசக்கூடாது.

THIRU R. PONNAPPA NADAR: We will just discuss about the Bill rather than discuss about our personal conduct.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசியதால்தான் இந்தப் பிரச்னை வந்தது. இந்தப் பிரச்னையை இத்துடன் விட்டு விடுகிறேன்.

அவர்கள் மறுபடியும் சொல்கிறார்கள். மேயரைப் பற்றி தங்கமணி அவர்கள் சொன்னதற்காக ஒத்துக் கொண்டேன் என்பதாகச் சொன்னார்கள். மறுபடியும் நான் அதற்குத் தான் பதில் சொல்கிறேன். முத்து யார் என்பதில் அவருடைய ஆரம்ப காலத்திலேயிருந்து இன்று வரையில் ஒரே முடிவில்தான் இருக்கிறோம். இடையிலே வேண்டுமானால் மற்றவர்கள் மாறுபாடு செய்து நீங்கள் திருத்தி வைத்துக் கொள்ளலாமே தவிர, எங்களைப் பொறுத்தவரையில் தங்கமணி சொன்னதற்காக முத்து மேல் நம்பிக்கையோ அல்லது நம்பிக்கை இல்லாத நிலைமையோ வைத்துக் கொள்ளவில்லை. எப்பொழுதுமே உள்ள எண்ணம் இருக்கிறது.

மாநகராட்சியைக் கலைத்ததற்கான காரணத்தை இப்பொழுது கேட்கிறார்கள். முன்பே, கலைக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி சட்டமன்றத்திற்கு வந்து ஒப்புக் கொள்ளப் பட்ட விஷயமாகும். பிறகு அதற்கு ஸ்பெஷல் ஆபிசர் போட்டு

இதற்காகச் சட்டமன்றத்திலே அதை நீடித்து, 6 திங்கள் பதவிக் காலம் கொடுத்து, இப்பொழுது மீண்டும் ஒரு ஆண்டு நீடிக்கிற பிரச்னையே தவிர, ஏன் கலைத்தோம் என்ற பிரச்னை முடிந்துவிட்டது. அன்றைக்கே பிரச்னையைப் பேசியாகி விட்டது. பிறகு தனி அதிகாரி என்று வந்து, 3 மாதம் என்று ஆக்கி, பிறகு 6 திங்கள் என்று ஆக்கி, இப்பொழுது ஒரு ஆண்டு என்று மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதுதான் பிரச்னை. ஆகவே, முன்னால் பேசும்பொழுது, திரு. ஜப்பார் அவர்கள் கேட்டபொழுது முன்பே சொல்லியிருக்கிறேன். ஒரு ஆண்டு என்று போட்டிருக்கிறோம். வேண்டுமானால் மேலேயே வைத்துக் கொள்ளலாம், அல்லது அதற்குள்ளேயே மாற்றிக் கொள்ள வேண்டுமானாலும் மாற்றலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

MR. SPEAKER : What about your amendment?

DR. H.V. HANDE : I am pressing my amendment.

MR. SPEAKER : The question is :

'In clause 2, for the words "within a period of one year from 30th day of April 1975", *substitute* the words "within a period of 3 months from the 30th day of April 1975."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

DR. H. V. HANDE : I am pressing for a division. I am demanding a division. The rules are clear.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மறுபடியும் ஓட்டுக்கு விடுகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்து, பிரிவு 2......

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே :</u> ரூல்ஸை எடுத்துப் பாருங்கள். ரூல்சில் தெளிவாக இருக்கிறது. அமெண்ட்மெண்ட் ளுக்கு லோக் சபாவில்கூட டிவிஷன் கேட்கிறார்கள். ரூல்சிலேயே It is clear. I demand a division. யாராவது அங்கத்தினர் வற்புறுத்தினால் உண்டு. தெளிவாக விதி இருப்பதை படித்து விட்டுத்தான் வந்திருக்கிறேன். நீங்கள் ஓட்டுக்கு விட்டுத்தான் ஆக வேண்டும். ரூல்சிலே இடம் இருக்கிறது. உங்களுக்குச் சுதந்திரம் கிடையாது. ரூல்சே தெளிவாக இருக்கிறது.





<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இந்தத் தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்க வேண்டுகிறேன். டாக்டர் ஹாண்டே அவர்களுடைய தீர்மானத்தை மறுப்போர் எல்லா பிளாக்குகளிலும் உள்ளவர்கள் எழுந்து நிற்க வேண்டுகிறேன்.

(மறுப்போர் எழுந்து நின்றார்கள்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இந்தத் தீர்மானத்தை ஆதரிப்போர் எல்லா பிளாக்குகளிலும் உள்ளவர்கள் எழுந்து நிற்க வேண்டுகிறேன்.

(ஆதரிப்போர் எழுந்து நின்றார்கள்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மறுப்போரே அதிகம்; எனவே இந்தத் திருத்தம் தோல்வியுற்றது.

பேரவை முன்னுள்ள கேள்வி —
'' பிரிவு 2, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் படவேணடும். ''

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

<u>மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :</u> தலைவர் அவர்களே, "1975-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/75 சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்'' என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (10) அறிவிப்புகள்.

<u>(அ) பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து திரு. பரசுராம் பிரபு மற்றும் சிலர் கோஷங்கள் போட்டுக் கொண்டு பிரசுரங்களை வீசியெறிந்ததும் அவர்கள் சார்ஜண்ட் காவலில் இருப்பதும் குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று பகல் 12-15 மணிக்கு, பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து திரு. பரசுராம் பிரபு, மற்றும் சிலர் கோஷங்கள் போட்டதுடன், துண்டுப் பிரசுரங்களை அவையில்

வீசியிருக்கிறார்கள். அவர்கள் பேரவை சார்ஜண்ட்டின் காவலில் இருக்கிறார்கள். அவர்களது செய்கை அவையுரிமை மீறிய செய்கையாகும்.

இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : Sir, I would like to have a clarification. இன்று தவறாக நடந்து கொண்டவர்கள் யாருடைய பாசின் பேரில் வந்தார்கள், எந்த மெம்பர் கொண்டு வந்தார் என்ற விவரத்தைக் கொடுத்தால் இது சம்பந்தமாகப் பேசுவதற்குக்கொஞ்சம் வசதியாக இருக்கும். அவர் ஏதாவது நோய் பிடித்திருக்கிறாரா ? இந்த விவரங்கள் எல்லாம் தெரிந்தால் நலமாக இருக்கும். நான் அறிந்த வரையிலே அவர் ஆத்திரத்தில் ஆவேசத்தோடு ஒரு சில வார்த்தைகளைப் பேசினார். அதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால் முடிவுக்கு வருவதற்கு முன்பு இந்த விவரங்கள் எல்லாம் இந்த மன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களுக்குத் தெரிந்தால் நலமாக இருக்கும், முடிவு செய்ய சாதகமாக இருக்குமென்று கருதுகிறேன்.

DR. H. V. HANDE : Sir, I also want to know how he had been able to come here. I also personally feel that the whole matter can be viewed leniently and we may not take a serious note of it and excuse him. Secondly,a similar situation arose some time ago and after that the Hon. Speaker passed an order restricting the issue of passes by the Members. I want that this particular incident should not further restrict our freedom to issue passes.

யாரோ ஒருவர் இப்படிச் செய்தார் என்பதற்காக உறுப்பினர்கள் பாஸ் கொடுக்கிற உரிமையைப் பறிப்பது நன்றாக இருக்காது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், குறிப்பிட்டது போன்று 12-15 மணி அளவில் ஜோரா பரசுராம் பிரபு—பொதுவாக மர்மத் தீவு மன்னன் என்று பத்திரிகைளில் சொல்லப்படுபவர்; அடிக்கடி அவர் பல்வேறு மர்மங்கள் அடங்கிய அந்தத் தீவு தனக்கே சொந்தம் என்று உரிமையோடு வாதாடி வருபவர்—பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து கோஷங்கள் போட்டு துண்டுப் பிரசுரங்களை வீசி இந்த அவையை அவமதித்திருக்கிறார். அவர் மட்டுமல்லாமல் அவருடைய குடும்பத்தையே அழைத்து வந்து அவர்கள் மூலமாகவும் வீசச் செய்திருக்கிறார்.



ஜோரா பரசுராம் பிரபு—வயது 54.

மகள் வள்ளிராணி—வயது 19.

மற்றொரு மகள் உதயராணி—வயது 17.

பையன் பரணி ஹிட்லர்—வயது 14.

மற்றொரு பையன் முராஜ் முசோலினி—வயது 12.

இந்த ஐந்து பேரும் சேர்ந்து இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவையை அவமதிக்கும் செயலுக்கு எடுத்துக் காட்டாக இது அமைந்து விடக்கூடாது. பிறரும் இந்த அவைக்கு மதிப்பளிக்கத் தக்க வகையில் காப்பாற்ற வேண்டியது மிகவும் அவசியம்.

மாண்புமிகு ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொல்லியது போல் உறுப்பினர்கள் பாஸ் கொடுத்து விட்டார்கள் என்பதற்காக அவர்கள் மீது குற்றத்தைச் சாட்ட முடியாது. இதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு உறுப்பினர்கள் பிறருக்கு அளிக்கின்ற பாசில் ரெஸ்ட்ரிக்ஷன் ஏற்படுத்த வழி ஒன்றும் இல்லை.

பெண்கள் இருவரும், பையன்கள் இருவரும் அவர்களாக இந்தக் குற்றத்தைச் செய்தார்கள் என்று ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஜோரா பரசுராம் பிரபு தூண்டுதல் பேரில் அவர்கள் வந்திருக்கிறார்கள். இந்த நான்கு பேரையும், பெண்கள் இருவர், பையன்கள் இருவரையும் அவர்கள் செய்தது தவறுதான் என்றாலும் அவர்கள் நான்குபேரையும் மன்னித்து விட்டு விட்டு ஜோரா பரசுராம் பிரபுக்கு 30 நாள் அளவுக்குத் தண்டனை விதிப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தண்டனையைக் கொஞ்சம் குறைத்து விடலாம்.

திரு. எஸ். வடிவேல் : அவை முன்னவர் அவர்கள் அந்த நான்கு பேரையும் மன்னித்துவிடலாம் என்றும் பரசுராம் என்பவருக்கு 30 நாள் தண்டனை கொடுக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். 30 நாள் தண்டனையை ஒரு வாரம் தண்டனை என்று போடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா : அவை முன்னவரவர்கள் யார் யார் தவறு இழைந்தார்கள் என்பதைப் பட்டியலோடு பூர்வாங்கமாக என்ன குற்றத்தைச் செய்தார்கள் என்று எடுத்து விளக்கினார்கள். அம்மாதிரி எல்லா விவரங்களையும் தந்த அவை முன்னவரவர்கள் மாடத்தில் உட்காரக் கூடிய அளவுக்கு யார் பரிந்துரை செய்தார்கள் என்று பெயரைச் சொல்லவில்லை. அரசியல்

நோக்கத்திற்காகக் கேட்கவில்லை. அந்த விவரங்கள் தேவை. யார் அவர்களுக்குப் பாஸ் கொடுத்தது? எந்தச் சட்டமன்ற உறுப்பினர் கையெழுத்திட்டார்? உறுப்பினர் தெரியாமல் கூட கையெழுத்துப் போட்டிருக்கலாம். தெரிந்து அவர்கள் கையொப்பமிட்டார்கள், இந்தக் குற்றத்திற்கு அவர்கள் உடந்தை என்ற அந்த அடிப்படையில் சொல்லவில்லை. யார் என்று தெரிந்து கொண்டால் அது பிற்காலத்திற்குப் பயன்படும் என்பதால்தான் அந்த விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய மாண்புமிகு எம். கோபால்தான் கையெழுத்திட்டிருக்கிறார். அவர்களைக் கேட்டோம். எவ்வளவோ பேர் என்னிடத்தில் கையெழுத்து வாங்கிச் சென்றிருக்கிறார்கள் என்று கூறினார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஒரு வாரம் தண்டனை கொடுத்தால் போதும் என்று திரு. வடிவேல் அவர்கள் கூறியிருக்கிறார்கள். என்னைக் கேட்டால் நானும் ஒரு வாரம் போதுமென்று கருதுகிறேன். சட்டமன்றத்தில் இன்று கடைசி நாள். அவர் செய்த குற்றம் பெரிய குற்றமல்ல என்று மறுக்கவில்லை. நானும் சற்று தயவோடு ஒருவாரம் தண்டனை என்று கொடுப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். இந்த மாதிரி நிகழ்ச்சி விரும்பத்தக்கது அல்ல என்பதை உணர்ந்தாலும், ஒரு மாதம் தேவையில்லை, ஒரு வாரம் கொடுத்தால் போதும். மற்றவர்களை எல்லாம் விட்டிருக்கிறோம். அவருடைய மனக் கோளாறோ என்னவோ தெரியவில்லை. அந்தக் காரணத்தால்தான் அவர் மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்களை எதிர்த்துப் போட்டியிட்டிருக்கிறார்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எதிர்த்து சைதாப்பேட்டை தொகுதியில் போட்டியிட்டதாகக் கேள்விப்படுகிறேன். அவருடைய மனநிலை எப்படி இருக்குமோ தெரியவில்லை. ஆகவே, தயவாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது காகிதத்தை வீசினார்கள். வேறு ஏதாவது வீசப்பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்பதையும் மனதில் வைத்து முடிவு செய்ய வேண்டும்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, இது எல்லா உறுப்பினர்களும் ஒரே கோணத்தில் பார்க்க வேண்டிய பிரச்சினை. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற நிலை இல்லை. இந்த அவையின்



மரபு, மரியாதை காப்பாற்றப்பட வேண்டும். இன்றைக்கு அவர் துண்டுப் பிரசுரங்களை வீசியிருக்கிறார்: அதுமட்டுமல்லாமல் தன்னுடைய குடும்பத்தையே, ஏதுமறியாத பெண்டு பிள்ளைகளையும் தூண்டிவிட்டு அந்தக் குற்றத்தைச் செய்யச் செய்திருக்கிறார். ஆகவே, ஒரு மாத கால தண்டனை என்பதுதான் பொருத்தமாக இருக்கும். அப்போதுதான் மற்றவர்களும் இம்மாதிரிக் குற்றம் செய்ய எண்ணம் ஏற்பட முடியாத நிலை ஏற்படும். ஆகவே, ஒரு மாதம் என்று தண்டனையை ஊர்ஜிதம் செய்வது நலமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவரை இப்போது பிடித்து வைத்திருந்தாலும் அவர் இன்னும் பேசிக் கொண்டேதான் இருக்கிறார். அதிலிருந்து அவர் தெளிவான மனமுடையவர் அல்ல என்று தெரிகிறது. அந்த வகையில் ஒரு மாதத்திற்குப் போகாமல், ஒரு வாரம் என்றும் இல்லாமல் 15 நாள் தண்டனை என்று கொடுப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

## 5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஈ) பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து கோஷமிட்டுக் கொண்டு துண்டுப் பிரசுரங்களை அவைக்குள் வீசியெறிந்த ஜோரா பரசுராம் பிரபுவுக்கு 15 நாள் சாதாரணக் காவல் தண்டனை அளிப்பது குறித்து

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN: Sir, I move—'This House resolves that the person calling bimself Jora Parasuram Prabhu who shouted slogans and threw some pamphlets from Speaker's Gallery on the floor of the House at 12-15 p.m. today, 19-4-1975 and who was taken into custody immediately thereafter, has committed a grave offence and is guilty of gross contempt of this House.

This House further resolves that he be sentenced to 15 days' simple imprisonment and be sent to the Central Jail, Madras.'

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சிறைக்கு அனுப்பப்படுவார்.

**(உ) பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து கோஷமிட்டுக் கொண்டு துண்டுப் பிரசுரங்களை அவைக்குள் வீசியெறிந்த உதயராணி, வள்ளிராணி, பரணி இட்லர், முரஜ் முசோலினி ஆகியோரை எச்சரித்து விடுவது குறித்து**

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN: Sir, I move— This House resolves that the persons calling themselves Udaya Rani, Valli Rani, Barani Hitler and Muraj Mussolini who shouted slogans and threw some pamphlets from Speaker's Gallery on the floor of the House at 12-15 p.m. today, 19-4-1975 and who are taken into custody immediately thereafter, have committed a grave offence and are guilty of gross contempt of this House.

This House further resolves that these four persons aged 18, 17, 14, and 12 may be left with admonition.'

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவர்களை எச்சரித்து, மன்னித்து விடுதலை செய்யப்படுகிறார்கள்.

(பிற்பகல் 1-00.)

**8. அரசினர் சட்ட முன்வடிவு—தொடர்ச்சி.**

**(இ) 1975ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/75)**

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, " 1975-ம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் " என நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1930 ஆம் ஆண்டு சூதாட்டச் சட்டத்தின் விதித்துறைகள் செயல்படுவதில் குறிப்பாக, பருத்தி விலைகள் மீதான சூதாட்டம் இதைப் போன்ற ஏனைய சூதாட்டங்களையொட்டி அச்சட்டத்தில் காணப்படும் குறைபாட்டை நீக்கும் நோக்கத்துடனும், மேற்படி சட்டத்தின் விதித்துறைகளை கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்காக அவற்றில் தகுந்த திருத்தங்களைக் கூறும் நோக்கத்துடனும், தமிழ்நாடு 1930-ம் ஆண்டு சூதாட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் III of 1930) தற்போதைய விதித்துறைகளை ஆய்வு செய்ய அரசு 1960-ல் குழு ஒன்றை அமைத்தது. பருத்தி விலைகள் முதலியவை மீதான சூதாட்டங்களில் உள்ள தீமைகளை ஒடுக்க, 1888-ம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் III of 1888) விதித்துறைகளும், தமிழ்நாடு 1930-ம் ஆண்டு சூதாட்டங்கள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம்

* 16-4-1975-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



III of 1930) விதித்துறைகளும் போதுமான அளவு கண்டிப்பாக இல்லை என்று, இக்குழு தெரிவித்தது. மேலும், இக்குழு மேற்படி சட்டங்களுக்கு சில திருத்தங்களையும் கருத்தறிவித்தது. குழுவின் கருத்துரைகளை அரசு பரிசீலனை செய்தது. 1888-ம் ஆண்டு சென்னை மாநகரக்காவல் துறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் III of 1888) சில பிரிவுகளை ஏற்றவாறு திருத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டம் செயல்படுவதன் மூலம் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு, இச்சட்டத்தின் ஏனைய சில விதித்துறைகளைத் திருத்துவதற்கும் இந்த வாய்ப்பு பயன்படுத்தப் பட்டுள்ளது.

1973-ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை (மத்தியச் சட்டம் 2/1974) செயலுக்கு வந்ததன் காரணமாக, இச்சட்டத்தில் மேலும் சில மாற்றங்களைச் செய்யவும் இந்த வாய்ப்பு பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறைச் சட்டத்தில், 34-A, 49-B ஆகிய புதிய பிரிவுகளைச் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் கேளிக்கை இடம் எதிலும் நுழைவதற்கான அனுமதிச் சீட்டுக்களை அனுமதியின்றி விற்கக் கூடிய நபர்களுக்கு அபராதம் விதிக்க 34-A புதிய பிரிவு வகை செய்கிறது. இத்தகைய குற்றங்களில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்ய தலைமைக் காவலரின் தரத்திற்கு மேலுள்ள காவல் துறை அதிகாரிகளுக்கு இப்பிரிவு அதிகாரமளிக்கிறது. பருத்தி விலைகள் முதலியவை மீதான சூதாட்டத்தினால் ஏற்படக் கூடிய தீமைகளை ஒடுக்கும் நோக்கத்துடன், 49-B புதிய பிரிவு செயலுக்கு கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது. பொது இடம் ஒன்றில் அவை கூட்டம் அல்லது ஊர்வலம் நடத்த ஏற்பாடு செய்பவர்கள் மின்சார விளக்குகளைத் தவிர போதுமான அளவு பெட்ரோமாக்ஸ் விளக்குகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை அவசியமாக்கும் நோக்கத்துடன் மேற்படி சட்டத்தின் 71-வது பிரிவில் (XX) என்னும் புதிய பகுதி ஒன்றைச் சேர்க்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

மேற்சொன்ன தீர்மானத்தை ஏற்க வேண்டுமென இம்மாமன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment :—

"That the concurrence of the Tamil Nadu Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of.................Members (.............................. Members of the Tamil Nadu Legislative Assembly and...............

[Thiru N. K. Palanisamy] [1975 ஏப்ரல் 19

Members of the Tamil Nadu Legislative Council) to consider the Tamil Nadu City Police (Amendment) Bill, 1975 (L. A. Bill No. 17 of 1975) and that the following members of the Tamil Nadu Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee (Names of members to be given later)".

The amendment was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி : இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இது ஒரு நல்ல மசோதாவாக இருந்தாலும் ஒன்றிரண்டு பிரிவுகளில் குறைபாடுகள் உள்ளன என்பதால் அவற்றைத் திருத்தக் கூடிய முறையில் இதை செலெக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே, இந்தச் சட்டத்தின் பிரகாரம் வெள்ளைக்காரன் காலத்தில் கூட பிரசிடென்ஸி கோர்ட்டில் பெயில் எடுக்கவேண்டுமென்றால் போலீஸ் கமிஷனருடைய சிபார்சு இல்லாமல் முடியாது என்றிருக்கிறது. அந்தக் காலத்தில் அப்படி ஒரு சட்டம் போடக் காரணம் போலீஸ் கமிஷனர் வெள்ளைக்காரராக இருந்தார்கள். அவர் மாஜிஸ்ட்டிரேட் கீழே போய், ஒரு கறுப்பு மனிதனின் கீழ் விசாரணைக்கு போகக் கூடாது என்ற அடிப்படையில் இந்த மாதிரி ஷரத்து வைக்கப்பட்டது. ஆனால் நாம் சுதந்திரம் பெற்று இவ்வளவு வருடங்களாகியும் அந்த மாதிரி ஒரு ப்ரொவிஷன் ஸி. ஆர். பி. ஸி.யில் இருப்பது சரியல்ல. ஆகவே, இதை மாற்றி பிரசிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டே பெயிலில் விடலாம் என்ற முறையில் இந்தச் சட்டத்தை திருத்தவேண்டும்.

அடுத்தபடியாக, any Police Officer may arrest without warrant any person committing in his view any offence made punishable by this Act என்றிருக்கிறது. இது அவசியமா? ஏற்கனவே ஸி. ஆர். பி. ஸி.யில் இது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த முறையில் நடவடிக்கை எடுக்க முடியும்.

கிரிமினல் அபென்ஸ் என்றால், ஒரு போலீஸ்காரர் தன் இஷ்டப்படி யாரை வேண்டுமானாலும் அரெஸ்ட் செய்யலாம். குற்றம் செய்கிறார் என்று நினைத்து அரெஸ்ட் செய்யலாம். குற்றம் செய்ததற்காக அல்ல. உதாரணத்திற்கு, ஒரு வீதியில் பத்து பேர்கள் கூடி ஒருவரையொருவர் அடித்துக் கொள்கிறார்கள். அப்போது போலீஸ் சென்று எல்லோரையும் பிடித்து லாக்கப்பில் போடலாம். அடித்தவனும் லாக்கப்பிற்குப் போகிறான், அடிபட்டவனும் லாக்கப்பிற்குப் போகிறான். இது சரியா? பெட்டி கேஸ்களைக் கூட க்ரிமினல் அபென்ஸ் என்று போலீஸ் ஆக்கலாம். இதனால் அரசியல் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கலாம். எடுத்து இந்தச் சட்டப்படி ஜெயிலில் போடக் கூட அதிகாரம் போலீஸுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இது வேண்டியதில்லை. ஏற்கனவே ஸி. ஆர். பி. ஸி., ஸிட்டி போலீஸ் ஆக்ட் இவற்றில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களே போதுமானது.



1975 ஏப்ரல் 19] [திரு. என். கே. பழனிசாமி]

இன்னொன்று. 34(எ), புதிதாக ஒரு ஷரத்து கொண்டு வரப்பட்டிருக்கிறது. சினிமா டிக்கட்களை ப்ளாக் மார்க்கட் செய்பவர்களுக்கு பைன் போட்டு, மூன்று மாத காலம் வரை தண்டனையும் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இது நல்ல ஷரத்துதான். காரணம், ஒவ்வொருவரும் ஐம்பது டிக்கட்கள் என்று வாங்கி வைத்துக் கொண்டு ரூ. 2.50 டிக்கட்களை ரூ. 10-க்கு விற்கிறார்கள். இதுவரையில் இதைத் தடுப்பதற்கு எந்தவிதமான சட்டமும் இல்லை. ஆகவே இந்த முறையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஓனர்களுக்கும் பொறுப்பு வைத்து அவர்களுக்கும் தண்டனை கொடுக்கவேண்டும்.

*Explanation*—In this section, 'Proprietor' in relation to an entertainment includes any person responsible for conduct and management of such entertainment என்று இருக்கிறது.

சினிமா தியேட்டர்கள் மட்டுமல்ல. பலயிடங்களில் என்டர்டெயின்மென்ட்ஸ் நடக்கின்றன. எக்ஸிபிஷன்கள் நடக்கின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஸ்டெல்லா மேரிஸ் காலேஜில் நடந்தது பத்திரிகைகளில் வந்துள்ளன. பெண்கள் ரேப் செய்யப்பட்டார்கள். டாண்பீ, சர்ச் கேட் ஸ்கூல்களில் எக்ஸிபிஷன் வைப்பது, அங்கு லக்கி டிப், ரிங் த்ரோ என்று என்டெர்டெயின்மெண்ட்ஸ் வைக்கிறார்கள், அங்கு ரௌடிகள் புகுந்து அசம்பாவிதங்கள் நடப்பது என்றிருக்கிறது. இந்த ஷரத்து அவர்களைக் கட்டுப்படுத்தும்.

பின், ப்ரொஸஷன்ஸ். பொலிட்டிகல் பார்டீஸ் ப்ரொஸஷன் போக ஏற்கனவே அது பற்றிய சட்டம் இருக்கிறது. ஆகவே, புதிய சட்டம் அதற்கு அவசியமில்லை. செக்ஷன் 75-ல்

*Penalty for drunkenness or riotous or indecent behaviour in public place*—Whoever in any public place, office, station-house or court or in any place of public amusement or on board any passenger boat or vessel......

என்றிருக்கிறது. போட், வெஸல்ஸ் இந்த இரண்டு இடங்களிலும் குடிக்கக்கூடாது என்றிருக்கிறது. அப்போது பாக்கியிருக்கிற இடங்களில் குடிக்கலாம் என்றாகிறது. ஏற்கனவே மதுவிலக்குச் சட்டம் இருக்கிறது. அது இருக்கும்போது இது அவசியமா? குறைந்த சம்பளம் வாங்குபவர்கள் ஹெல்த் ரீஸன்ஸ்க்காக ரூ. 500 கொடுத்து பெர்மிட் வாங்க முடியாது. ஆகவே, அதைக் குறைக்க வேண்டுமென்று ஹைகோர்ட்டுக்குப் போய் அதை 100 ரூபாயாகக் குறைத்து இருக்கிறார்கள். ரூ. 150 சம்பளம் வாங்குபவர்கள் ரூ. 100 கட்ட முடியாது என்று சொல்லி கோர்ட்டுக்குப் போனால் அது குறையத்தான் செய்யும். ஆகவே, ரூ. 100 என்று வைப்பது சரியல்ல. அதை இன்னும் குறைக்கவேண்டும்.

அடுத்தபடியாக, அரிஷ்டத்தில் 5 சதவீதம் ஆல்கஹால் இருக்கிறது. கள்ளில் ஆல்கஹால் இல்லை. அது உடம்பிற்கு நல்லது என்று முன்பு அமைச்சர் அவர்கள் பேசும்போது சொல்லியிருக்கிறார்கள். போட்டில் குடிக்கக்கூடாது என்று சொன்னால் பஸ்ஸில் குடிக்கலாம், ட்ரெயினில் குடிக்கலாம், என்றாகிறது. பஸ்ஸில் குடித்தாலும் தடை செய்யவேண்டும். ட்ரெயினில் குடித்தாலும் தடை செய்ய வேண்டும். கடைசியாக, Charity begins at home என்று இருக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் எவ்வளவோ சட்டங்களைப் போடுகிறோம். 144 போடப்படுகிறது. ஸிட்டி போலீஸ் ஆக்ட் 42-படி தடை விதிக்கப்படுகிறது. நண்பர் அவர்கள் சொன்னது போல் ஜனங்கள் தங்கள் கோரிக்கைகளை முன் வைக்க வரும்போது இந்தத் தடை உத்தரவுகளைப் போடுவது சரியல்ல என்று கூறி இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி நல்ல முறையில் திருத்தி நிறைவேற்றினால் நன்றாக யிருக்கும் என்று கூறி இதை நான் வரவேற்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற மெட்ராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட் திருத்த மசோதா மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக 34-வது செக்ஷனிலே ஒன்றைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

Places of public resort to be licenced—

No enclosed place or building having an area of 46½ square metres or upward shall be used for public entertainment or resort without a licence from the Commissioner.

Provided that nothing contained in this section shall apply to any church, temple, mosque or other place of worship என்று இருக்கிறது. அதைப் பார்க்கிறபோது, சாதாரணமாக திருமணங்கள் செய்கிறவர்கள் பெரும்பாலும் மாலை நேரங்களில் கச்சேரிகள், நடன நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்கிறார்கள். இதைப் பார்க்கிறபோது, அதற்குக் கூட லைசென்சு வாங்க வேண்டும் என்ற முறையில் அமைந்து இருக்கிறது. அதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக கேமிங் ஆக்ட், காட்டன் பெட்டிங் ஆக்ட் பற்றி சில விதிகள் கொண்டு வந்து இருக்கிறார்கள். இப்போது இரண்டு சட்டம் அமலில் இருக்கப் போகிறது. ஒன்று, கேமிங் ஆக்ட், மற்றொன்று சிடி போலீஸ் ஆக்ட். இரண்டு சட்டங்களின் அடிப்படையிலே குற்றவாளிகளாகக் கருதி, கோர்ட் முன்னால் நிறுத்தினால், இரண்டு சட்டங்களின் அடிப்படையிலேயும் தண்டனை அளிக்கும் வாய்ப்பு இருப்பதால், இரண்டு சட்டங்களிலே ஒன்று தேவையில்லை என்று கருதுகிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



ஊர்வலங்கள் நடத்துகிறவர்கள், அதிலும் இரவு நேரங்களில் ஊர்வலங்கள் நடத்துகிறவர்கள் போதுமான அளவுக்கு பெட்ரோமாக்ஸ் வைத்துக் கொள்ள வேண்டுமென்று விதி போட்டு இருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஊர்வலம் நடத்துகின்ற பொறுப்பில் இருக்கிறார்கள். அந்த ஊர்வலங்கள் எப்படி இருக்கிறது என்றால், நீண்ட நீளமான அளவுக்கு இருக்கிறது. அப்படி இருக்கிறபோது, எத்தனை பெட்ரோமாக்ஸ் அவர்கள் ப்ரொவைட் செய்து கொள்வது, அவையெல்லாம் அனுபவ சாத்தியமானதாகத் தெரியவில்லை. ஒரு குறிப்பிட்ட அளவு 2 அல்லது 4 என்று இருந்தால் நன்றாக இருக்கும். 'சஃபிசியண்ட் நெம்பர்' என்று சொல்லி, முடிவு எடுக்கும் அதிகாரம் போலீஸ்காரர்கள் கையில் இந்தச் சட்டத்தின் மூலம் கொடுத்து இருப்பதால், அவர்கள் பல்வேறு விதங்களில் எதிர்க்கட்சிகளை ஒடுக்க வாய்ப்பாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். 77-வது பிரிவிலே,

Fee for licence—

For every licence or permission granted under this Act, the Commissioner may levy such fees not exceeding twenty rupees.... என்று போடப்பட்டு இருக்கிறது. இனிமேல் கமிஷனரிடம் போய் அந்த அனுமதி வாங்க வேண்டும். அந்த லைசென்சு வாங்குவதற்குக் ரூ.20-க்குக் குறையாத தொகை கட்டணமாக செலுத்தப்படவேண்டுமென்று இருக்கிறது. இதிலே போலீஸ் ஆபீஸில் நாம் ஏதோ பணத்தைச் செலுத்தி அனுமதி வாங்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, நான் இதிலே இருக்கிற 75-வது பிரிவைப் பற்றி ஒரு கருத்தைக் கூறி முடிக்கவேண்டுமென்று கருதுகிறேன்.

சாதாரணமாக penalty for drunkenness or riotous or indecent behaviour in public place என்பதற்கு என்ன தண்டனை என்று சொன்னால் fine not exceeding Rs. 50/ or imprisonment not exceeding one month or both என்று இப்போது இருக்கிற சட்டத்திலே இருக்கிறது. ஆனால் இப்போது கொடுக்கப்பட்டு இருக்கிற திருத்தத்திலே எவ்வாறு கூறப்பட்டிருக்கிறது என்று சொன்னால் imprisonment not exceeding six months or fine not exceeding Rs. 1,000 ஒரு மாதம் என்று இருந்ததை 6 மாதம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி கடுமையாக தண்டிக்கப்பட வேண்டுமா என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரியாக குடித்துவிட்டு, கும்மாளம் போட்டு, வேறுவிதமாக தகாத

முறையில் நடப்பவர்களை நிச்சயமாக கண்காணிப்பது அவசியம் என்று கருதுகிறேன். மேல்நாடுகளில் இது மாதிரி குடித்து விட்டு, தகராறு செய்கிறவர்களை எல்லாம், 'கேர் ஹோம்' என்று ஒரு இடத்தில் வைத்து, அவர்களுடைய குடிபோதை முடிந்த பிறகு எச்சரித்து விட்டு விடுகிறார்கள். ஆனால் இப்போது சமுதாயத்தில் பல்வேறு நபர்களுக்கு பர்மிட்டுகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. குடிப்பதற்கு அனுமதி வழங்கி விட்டபிறகு, குடித்து விட்டு கும்மாளம் போட்டார்கள், தவறாக நடந்தார்கள் என்பதற்காக இவ்வளவு பெரிய தண்டனை, கடுமையான தண்டனை, பைன் தேவைதானா என்பதைப் பற்றி நாம் ஆலோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

'75' என்று சொன்னாலே சாதாரணமாக போலீஸ் காரர்கள், அவர்களுக்கு யார் யாரை எல்லாம் பிடிக்கலாமோ அவர்களைப் பிடித்து உள்ளே தள்ளுவதற்கு வழி இருக்கிறது. பொது வழியிலே, பொது இடங்களிலே, இந்த மாதிரி குற்றங்கள் புரிந்தால் அவர்களைப் பிடிக்கலாம் என்று சொன்னால், சாதாரணமாக பேருந்து நிலையங்களில் மாற்று பேருந்து ஏறிச் செல்வதற்காக நின்று கொண்டு இருக்கக் கூடியவர்களையும் பிடித்து வந்து சார்ஜ்ஷீட் போட்டு விடுகிறார்கள். ஆகவே, இப்படிப் பட்ட குற்றங்களைச் செய்பவர்களுக்கு இத்தகைய கடுமையான தண்டனை தேவையில்லை. அதிலும் குறிப்பாக, இந்த மாதக் கடைசியில் இந்த '75'-வது பிரிவின்கீழ் குற்ற அறிக்கை யானது அதிகமாக வந்து கொண்டிருக்கிறது என்றும் தெரி வித்துக் கொள்கிறேன்.

எனக்குத் தெரியும். பொதுவாக அந்த பஸ் ஸ்டாண்டில் யாராவது தூங்கிக் கொண்டு இருந்தாலும் சரி, அல்லது வேறு பஸ்ஸில் போவதற்காக என்று நின்று கொண்டிருந்தாலும் சரி, அவர்களைப் பிடித்து வந்து '75'-வது பிரிவின் கீழ் வழக்கு போடுவது வழக்கமாக இருக்கிறது. இந்த மாதிரி '75' என்று சொன்னாலே பல்வேறு நபர்கள் பயப்படுகிற அளவுக்கு சூழ்நிலையிருக்கிறபோது, இப்படி கடுமையான தண்டனை என்று இருப்பதைவிட, இம்மாதிரி குற்றம் செய்பவர்களை எச்சரித்து விடுவதற்கு வாய்ப்பு கொடுத்தால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, இவ்வளவு பெரிய கடுமை யான தண்டனை தேவையில்லை என்று கூறி, என் வார்த்தையை முடிக்கிறேன்.

<u>திரு. கே. எ. வகாப் :</u> பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் முன்மொழிந்து இருக்கிற இந்த காவல்துறை திருத்த மசோதாவை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே மதுவிலக்கை அமல் படுத்துகிற நோக்கத்தில், மது குடிப்பவர்களுக்காக எவ்வளவு கடுமையான தண்டனை விதிக்கவேண்டுமென்று நாம் எல்லாம் எதிர்பார்க்கிறோமோ அந்த





அளவுக்கு இங்கே கொஞ்சம் கடுமையாகவே தண்டனை அதிகப் படுத்திவைக்கப்பட்டு இருப்பது வரவேற்கத் தக்கதாகும் என்று நான் எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் தெரிவித்துக் கொள் கிறேன்.

குறிப்பாக, எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், மது குடிப்பவர்களுக்கு லைசென்சு கொடுப்பதற்கான தொகையை இப்போது மிகவும் குறைவாக குறைத்து விட்டார் கள். 100 ரூபாய் முதல் விண்ணப்பத்திற்கும், 50 ரூபாய் ரினியூவலுக்கும் என்று சொல்வது மிகவும் குறைவான தொகை தான். ஆனால் அது ஹைகோர்ட் தீர்ப்பின் காரணமாக மாற்றி அமைக்கப்பட்டு இருக்கிறது. என்றாலும், இதனால் குடிப்பவர்களின் எண்ணிக்கை அதிகப்பட வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இப்படிப்பட்ட நேரங்களில் இந்தக் குற்றங் களைச் செய்பவர்களை, அதிலும் பொது இடங்களில் மட்டுமல்ல, சில பேர் தனிப்பட்ட வீடுகளில் குடித்து விட்டு, அவர்களுடைய குடும்ப பெண்களை எவ்வளவு வேதனைப் படுத்துகிறார்கள் என் பதைப் பார்க்கிறோம். ஆகவே, அவர்களுக்கு இப்படிப்பட்ட தண்டனை விதிக்கப்பட்டால்தான் சமுதாயத்தில் நல்வாழ்வு ஏற்படுத்த முடியும். இவ்வளவு நாள் எச்சரிக்கை செய்து பார்த்தோம். அதனால் பலன் ஒன்றும் ஏற்படவில்லை. ஆகவே, இந்த தண்டனை மூலமாகத்தான் செய்ய முடியும் என்கிற அடிப் படையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது மிகவும் பொருத்தமானது என்று கருதுகிறேன்.

நம்முடைய நாட்டிலே வறட்சி இருக்கிறது. ஆதலால் எல்லா விதமான துன்பங்களும் மக்களுக்கு இருக்கிறது. இருந்தாலும் சினிமாக் கொட்டகைகளில் உள்ள கூட்டம் குறைய வில்லை. ஆதலால், அங்கே பிளாக் மார்க்கெட்டில் டிக்கெட் விற்கும் நிலைமை இருக்கிறது. அண்மையில் ஒரு பிலிம் பெஸ் டிவல் நடந்தது. அது பலபேருக்குத் தெரியும். அங்கே ஒரு டிக்கெட் ரூ. 100 என்ற அளவுக்கு கள்ள மார்க்கட்டில் விற்று இருக்கிறார்கள். தியேட்டர் முதலாளிகளே அதை ஊக்கு விக்கிற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட தவறுகள் இருக்கின்றன. இதிலே சில நேரங்களில் சில அரசியல் கட்சிகளே கூட தங்களுக்கு பிரசாரம் வேண்டும் என்பதற்காக, அதைப் பயன்படுத்திக் கொண்டு, தங்களுடைய கட்சியின் சங்கங்களுக்கு 50 டிக்கெட், 100 டிக்கெட் என்று சேர்த்து வாங்கிக் கொண்டு போகும் நிலைமை இருக்கிறது. அதன்மூலமாக கள்ள மார்க்கெட் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட கள்ள மார்க்கெட் செய்பவர்களை தண்டிப்பதற்காக விதி அமைந்து இருப்பதை நான் வரவேற்கிறேன்.

காட்டன் மார்க்கெட் ஆடுவது நகரத்தைக் காட்டிலும், சாதாரண கிராமத்தில் அதிகமாகப் பரவியிருக்கிறது.

[திரு. கே. எ. வகாப்] [1975 ஏப்ரல் 19

தொழிலாளிக்கு 10 பைசா கட்டினால் 1 ரூபாய் வருகிறது என்ற எண்ணத்தால் ஆடுகிறார்கள். அவர்களுக்கு அது என்ன விஷயம் என்பதே தெரியாது. இதிலே நியூயார்க்கிலே காட்டன் விலையின் ஆரம்ப விலையின் கடைசி எழுத்தையும், முடிவு விலையின் கடைசி எழுத்தையும் இணைத்து ஏதோ அடிப்படையில் அவர்கள் செய்கிறார்கள். அது என்ன அடிப்படையில் நடக்கிறது என்று கூட இங்கே இருப்பவர்களுக்குத் தெரியாது. ஆனால் இவர்கள் ஒரு நாளைக்கு இழப்பது ரூ. 5, 6 என்று இருந்தாலும், இதனால் சிலர் கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள். சில நேரங்களில் இப்படிப்பட்ட தவறுகளுக்காக சில இடங்களில் போலீஸ்காரர்கள் லஞ்சம் அளிக்கும் நிலைமையும் இருக்கிறது. அதை அடியோடு அகற்றுவதற்கு நிச்சயமாக முன்வர வேண்டும். அப்படிச் செய்தால் ஏழை எளிய மக்கள் காப்பாற்றப்படுவார்கள். ஆகவே, இந்தச் சட்டம் நடைமுறையில் சாதாரண தொழிலாளர்களுக்கு, ஏழை மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற முறையில் இதை ஆதரித்து அமர்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்திலே சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. பெரிய மாறுதல் என்று சொல்ல முடியாது. நம்முடைய அனுபவ பூர்வமாகப் பார்க்கும்பொழுது காவல் துறைக்கு சில கடுமையான தண்டனையுள்ள சட்டம் இருக்குமானால் இதுபோன்ற குற்றங்களை தடுக்க முடியும் என்ற நல்ல நோக்கத்தோடு செய்யப்பட்டு வருகிறது. இதிலே தண்டனையைப் பொறுத்தவரையில் அதிகம் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் இதைத் தவறாகப் பயன்படுத்திவிடுவார்களோ என்ற வாதத்தைத்தான் பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். எந்தச் சட்டமானாலும் அப்படிப்பட்டவற்றைத் தடுக்கத்தான் வேண்டும். அதை நிர்வாக முறையில்தான் செய்ய வேண்டும். சட்டத்தைப் பற்றிக் குறை ஏதுமில்லை என்று சொல்லி, இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமியின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி :

"1975 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



*Clause 2.*

MR. SPEAKER : The question is :

"That clause 2 do stand part of the Bill"

THIRU N.K. PALANISAMY : Sir, I move the following amendment :—

"In the proposed sub-section (1) of Section 24 of the principal Act, *delete* item (b)."

The amendment was put and lost.

Clause 2 was put and carried.

Clauses 3 to 11 were put and carried.

*Clause* 12.

MR. SPEAKER : The question is :

"That Clause 12 do stand part of the Bill"

THIRU N.K. PALANISAMY: Sir, I move the following amendment:—

"In the proposed new Section 75 of the principal Act in Sub-section (1), after the words "any passenger boat or vessel" *insert* the words "trains or buses".

The amendment was put and lost. Clause 12 was put and carried. Clause 13 was put and carried.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> தலைவரவர்களே,

"1975 ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/75) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஈ) 1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 21/75)**

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே,

''1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்''

என முன்மொழிகிறேன்.

இம்மாநிலத்தில் எழுதப்படும் பத்திரங்களின் மீது 1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு முத்திரைத்தாள் (அதிகரிக்கப்பட்ட தீர்வை) சட்டத்தால் (தமிழ்நாடு சட்டம் 8/1962) திருத்தியமைக்கப் பட்ட 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் விவர அட்டவணை 1-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு முத்திரைத் தாள் தீர்வை வசூலிக்கப்படுகிறது. 1899 ஆம் ஆண்டு முத்திரைத் தாள் சட்டத்தின் 3-ஏஏ பிரிவில் குறிக்கப்பட்டுள்ளதும், பதிவு செய்யப்பட்டதுமான பத்திரங்களின் மீது முத்திரைத்தாள் தீர்வையில் $2\frac{1}{2}$ சதவீதம் கூடுதல் மேல்வரி விதிக்கப்படுகிறது. மேலும் சில பத்திரங்களின் நேர்வில் ''சொத்து மாற்று தீர்வை'' ஒன்று உள்ளாட்சி மன்ற சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்டு அத்தீர்வை உள்ளாட்சி மன்றங்களுக்கே கொடுக்கப்படுகிறது.

முத்திரைத்தாள் தீர்வையை கணக்கிடும் முறையில் வசதி செய்து சீரமைக்கும் நோக்கத்துடன் $2\frac{1}{2}$ சதவீதம் கூடுதல் மேல் வரியை 1899 ஆம் ஆண்டு முத்திரைத்தாள் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் அடிப்படை முத்திரைத்தாள் தீர்வையுடன் சேர்த்து விடுவது என்றும், சிறிதளவு சரிக்கட்டுதல்கள் செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் ''கப்பல் பிணைபத்திரங்கள்'', ''உடைமை உரிமை பத்திரங்களின்'' மீது விதிக்கப்படும் முத்திரைத்தாள் தீர்வை மற்றும் இவ்விரண்டு பத்திரங்களுக்குச் சமமாக வசூலிக்கப்படும் ஏனைய பத்திரங்களின் மீது விதிக்கப் படும் முத்திரைத்தாள் தீர்வையை சிறிது அதிகப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி சம்பந்தப்பட்ட பத்திரங்களுக்கு, முத்திரைத்தாள் சட்டத்தின் விவர அட்டவணை 1-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள முத்திரைத்தாள் தீர்வைக்குப் பதிலாக மாற்றியமைக்கப்பட்ட புது விகிதங்களை போடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இம்மாதிரி புது விகிதங்கள் போட தற்பொழுது உத்தேசித்து இருப்பதால், 1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு முத்திரைத்தாள் (அதிகரிக்கப்பட்ட தீர்வை) சட்டத்தின் 2ஆம் பிரிவையும்

*18-4-1975ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசதழில் வெளியிடப் பட்டுள்ளது.



1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 3-ஏஏ பிரிவையும் நீக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சில பத்திரங்களின் நேர்வில் உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்களின்படி தற்பொழுது விதிக்கப்படும் ''சொத்து மாற்று தீர்வை'' தொடர்ந்து விதிக்கப் பட்டு முன்புபோல தீர்வை உள்ளாட்சி மன்றங்களுக்கே கொடுக்கப் படும். மேற்சொன்ன நோக்கங்களை எய்த இச் சட்ட முன் வடிவு விழைகிறது.

இச்சட்ட முன்வடிவினை ஏற்று நிறைவேற்றித்தருமாறு இம்மா மன்றத்தை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

''1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/75) சட்டமாக நிறைவேற்றப் படவேண்டும்''

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : இது முக்கியமான தீர்வை. இதை கண்டிப்பாக எதிர்க்கிறேன். காரணம், இதனால் வாங்குப வர்கள், விற்பவர்களை மாத்திரம் இது பாதிப்பதில்லை. கோர்ட், வக்கீல்கள் கூட பாதிக்கப்படுகிறார்கள். இந்த வரியை வேறு வகையிலே போட்டு வசூல் பண்ணிவிடலாம். அதிகமான வரியை கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I also oppose this Bill It exceeds the service charges.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கனவே இது நடைமுறையில் இருந்து வருகிறது. பாதிப்பதற்கு இதிலே ஒன்றுமில்லை பஞ்சாயத்துக்களுக்கு கொஞ்சம் அதிகம் கிடைக்கும் என்ற காரணத்தினால்தான் இது போடப்பட்டு வந்திருக்கிறது. எனவே, இந்தச் சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று எல்லோரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(உ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்டிவவு எண் 19/75

THE HON. THIRU O. P. RAMAN: Mr. Speaker, Sir, I beg to move :—

"That the Tamil Nadu Chit Funds (Amendment) Bill, *(L. A. Bill No. 19 of 1975) be taken into consideration."

According to sub-section (1) of section 12 of the Tamil Nadu Chit Funds Act, 1961 (Tamil Nadu Act 24 of 1961), for the proper conduct of the chit every foreman shall before applying for the certificate of commencement, execute on indenture of mortgage and trust in favour of the Registrar as trustee charging by way of security, property sufficient for the realisation of the chit amount, or deposit in any approved bank an amount of cash not less than half of the Chit amount, or invest in Government Securities the face value or market value of which is not less than half of the chit amount and transfer the amount so deposited or the Government securities in favour of the Registrar to be held in trust by him as security.

At present, the cash deposit is made in the name of the foreman and then transferred in favour of the Registrars. Both the Courts and Banks have held that fixed deposit receipts are not transferable, thereby rendering the security itself ineffective. The quantum of security under the existing provisions of the Act is based on one chit amount. It does not vary according to the number of instalments or duration of a chit. The element of risk is greater in long-term chits and it warrants greater security. In order to remove all these difficulties and to provide adequate safeguard to the subscriber and to guard against defaults, it is proposed to amend section 12 of the Tamil Nadu Chit Funds Act, 1961 so as to provide for the deposit with the Government of cash security instead of the various forms of securities now provided for. The quantum

*Published in the Tamil Nadu Government Gazette Extraordinary, dated 18th April 1975.



of security will be based on the number of instalments of each chit ranging from one chit amount for chits of not more than 20 instalments to four times the chit amount for chits of more than 60 instalments. Interest will be paid on the amount of cash security deposited by the foreman at the rates to be specified in the rules. While making the rules, it will be ensured that the rates are in conformity with the commercial bank rates. Consequential amendments to certain other sections of the Act have also been proposed.

The act as proposed to be amended, will apply only to chits commenced after the date of commencement of the proposed amendment Act.

Sir, I commend the motion for the acceptance of the House.

(பிற்பகல் 1-30)

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move—"That the Tamil Nadu Chit Funds (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 19 of 1975 be referred to a Select Committee of the House consisting of........ members. " (Names of members will be given later).

THIRU SOWDI SUNDARABHARATHI : Sir, I second it.

THIRU N. K. PALANISAMY : Sir I move— "That the Tamil Nadu Chit Funds (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 19 of 1975) be circulated to elicit public opinion."

The amendment was duly seconded.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, the important thing is this. This amendment is absolutely necessary because many of the foremen of chit funds show their houses as security at inflated values. I know of a Chit fund company here which has given a house worth Rs. 60 lakhs for a sum of Rs. 3.5 crores as security. It is a very big house. That is the way chit funds are going now. It is not chit fund, but it is chit fraud that is going on in this country.

If there are 20 members in the chit, at least 8 or 10 are binami names. This is done to convert black money into white money. They write the names in big papers and put them in cigarette box into which only two fingers could enter. Then they pick up the name and the foreman is able to manipulate it in such a way that he gets the chit bearing the name ofthe person whom he wants to get the chit. That is the first offence.

Then, whenever a chit is bid, the bid money is not paid within a month or deposited in a bank. The foreman utilises the money and is rolling the money for his own purposes. Somehow, he is able to influence the Registrar and how Registrars are influenced, you know.

There is a 5 per cent commission to the foreman. Apart from this, there is an entrance fee also and that is Rs. 15. There is no rule to collect this. But they collect entrance fees and that runs to some lakhs. If any subscriber defaults, this money is forfeited. I know a person forfeited like this a sum of Rs. 3 lakhs. And the Chit Fund Foreman has purchased a house out of that.

So far as this amendment that has been brought forward is concerned, it is a welcome one and it is an excellent amendment. But I think there should be a Select Committee to go into all aspects of chit funds and this fooling of people should be put an end to. I am expert in this fooling and I know 50 per cent of the people are being fooled.

I am sure the Government will come forward with a new legislation either to prohibit chit funds or to see that they are run properly. Some of the chit funds are registered in Bombay and run here in Madras. So also, some are registered in Bihar where there is no chit fund legislation. Government should take steps either to abolish chit funds or to see that they are run in a proper way.

திரு. என். கே. பழனிசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சர்க்கார் கொண்டு வந்து இருக்கக் கூடிய மசோதாவை நான் வரவேற்கிறேன். அதை உடனடியாகச் சட்டமாக்க வேண்டும் என்று ஆதரிக்கிறேன். இருந்த போதிலும் இன்றையதினம் ஐந்து பேருக்கு ஒருவர் இந்த பிசினசில் ஈடுபட்டு இருக்கிறார்கள். ரூபாய் 5, ரூ.10 மாதம் கட்டி எப்படியாவது தேவையானபோது மொத்தமாக வரவேண்டும் என்ற முறையில் இந்த வேலையாக இருப்பவர்களும் சரி பொதுமக்களும் சரி நாடு பூராவும் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று பார்க்கும்போது சர்க்கார் கொண்டு வந்திருப்பது மிகச் சரியானதே ஆகும். இதை சிட் பண்ட்ஸ் என்று சொல்லுவதை விட சீட் பண்ட்ஸ் என்று சொல்லலாம். இந்த மெஷினரி சுரண்டக்கூடிய மெஷின்ரி. இந்த சட்டத்தின் மூலம் இதை சரியான முறையில் செய்யவேண்டும். இந்தச் சட்டம் 1957 ஆம் வருஷத்தில் சட்டமாக்கப்பட்டது. ஆனால் 1961 ஆம் வருஷத்தில்தான் இம்பிளிமெண்ட் ஆனது. நாலு வருஷம் இதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்றால் இந்த சீட்டு கம்பெனிகளை நடத்தக் கூடியவர்கள் எவ்வளவு அரசியல் ஆதிக்கம் பண ஆதிக்கம் உள்ளவர்கள் என்று பார்க்கலாம். சாதாரண ஆள் 10ரூபாய், 15 ரூபாய் போட்டு 10 பேர் சேர்ந்து வைத்தால் ஓரிரண்டு வருஷத்தில் 15—20 லட்சம் ரூபாய் சேர்ந்து விடுகிறது. இது சமுதாயத்தில் ஒரு கேடாக இருக்கிறது. சீட்டு 2,000 ரூபாய் என்றால், 40, 50 மாதம் கட்டிவந்தால் 500 ரூபாய் குறைத்து 1,500-க்கு எடுக்கிறார்கள். பாக்கி இருப்பதை டிவிடெண்டாக ஆக்கிவிடுகிறார்கள். சுதர்சன் கம்பெனியில் மட்டும் சீலிங் இருக்கிறது. 1,500-க்கு கீழே யாரும் கேட்கக் கூடாது என்று.



ஆனால் மற்றக் கம்பெனிகளில் எவ்வளவு குறைவாக வேண்டும் என்றாலும் எடுக்கலாம். 40 பேர் இருந்தால் 5 பேர்தான் பிட் எடுக்க போவார்கள். மற்றவர்கள் அந்தக் கம்பெனி ஆட்கள். கடைசியில் பிட்டை தூக்கி விடுவதால் இந்த ஐந்து பேர் பிட்டை எடுக்க முடிவதில்லை. சட்டப்பிரகாரம் ஒரு வருஷம் இரண்டு வருஷம் கட்டி விட்டு அதற்கு பிறகு கட்ட முடியாமல் போனால் அந்தப் பணத்தை உடனடியாகத் திருப்பிக் கொடுப்பதில்லை. 1,000 ரூபாய் கட்டினால் 500 ரூபாய் கொடுப்பது. பெரிய கம்பெனியாக இருந்தாலும் சின்னக் கம்பெனியாக இருந்தாலும் 40 மாதம் கட்ட வேண்டியதில் 4 மாதம் கட்டி அவசரமாக எடுத்துவிட்டால் அதையும் உடனடியாகக் கொடுப்பதில்லை.

இந்த மாதிரி கிராமப்புறங்களிலும் பவுன் சீட்டு, அண்டா சீட்டு, பாத்திரச் சீட்டு என்று சமுதாயத்தில் நடந்து வருகிறது. இதை எல்லாவற்றையும் கண்காணிக்கத் தக்க அளவு காம்பிரஹென்சிவ் ஆக ஒரு பில் கொண்டுவர வேண்டும்.

இன்றைய தினம் பேயிங் கபாசிட்டியை பார்க்க வேண்டும். சுதர்சன் கம்பெனி பெரிய கம்பெனி, பரவாயில்லை. நல்ல முறையில் நடக்கிறது. இப்போது உறுப்பினர் குறிப்பிட்டது போல் 60 லட்சம் பெறுமானமுள்ளதற்கு 3 கோடி க்ரெடிட் வால்யூ. மற்றவர்கள் பணத்தில் க்ரெடிட் கபாசிட்டியை வைத்திருக்கிற கம்பெனிகள் தான் அதிகம். அந்தக் கபாசிட்டியை வைத்துக்கொண்டு புதிதாக வேறு ஒன்று கூட நடத்தலாம். உண்மையில் எந்தவிதமான க்ரெடிட் ஒர்த்தினஸ்ஸும் இருக்காது. அந்த சிட் கம்பெனி டைரக்டர்களுக்கு என்ன வேலை என்று நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு வேலையும் கிடையாது. கம்பெனி பை லாஸ்களைப் பாருங்கள். சுதர்சன் கம்பெனி சட்ட பூர்வமாக சரியான நியாயமான சட்டத்தின்படி நடத்துகிறார்கள். மற்ற கம்பெனிகளில் டைரக்டர்கள் பணம் சேகரிக்கிற போல் கேட்டுகளாகத்தான் செயல்படுகிறார்கள். பணம் கலெக்ட் பண்ணுவதைத் தவிர வேறு வேலை கிடையாது. யாராவது இவர்களுடைய பை லாஸ்களை செக் பண்ணுகிறார்களா. இந்த கம்பெனிகளின் புக் ஆப் அக்கவுண்ட்ஸை பார்க்கக் கூடிய முறையில் இருக்க வேண்டும். எவ்வளவு ஏது என்று பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, பணம் கட்டியவர்களுக்கு ஆதரவாக ரிக்கார்டுகள் இருக்கும் வகையில் திருத்தம் கொண்டு வந்தால் ஊழலைக் குறைக்க முடியும். அந்த முறையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தில் என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அதனால் இதை பொது ஜன அபிப்பிராயத்திற்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்று இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஏனென்றால் இது மிகவும் முக்கியமான ஒரு திருத்தச் சட்டம். இதை மற்றவர்களும் வரவேற்றிருக்கிறார்கள். நானே கூட இதுபற்றி தனியார் தீர்மானம் ஒன்று கொடுத்திருக்கிறேன். சீட்டுக் கம்பெனிகளை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இப்போது சீட்டுக் கம்பெனிகளில் பல சீட்டிங் கம்பெனிகளாகத்தான் இருக்கின்றன. மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசியவர்கள் சில உதாரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

